
காணாமல் போன
கல்யாணப் பெண்
லதா
நாமக்கல் கவிஞர்

காணாமல் போன

# கல்யாணப்பெண்

நாமக்கல் கவிஞர்

திரு. வெ. இராமலிங்கம் பிள்ளை


பழனியப்பா பிரதர்ஸ்

சென்னை - 600 014 திருச்சி - 620 002

சேலம் - 636 001 கோயமுத்தூர் - 641 001

மதுரை - 625 001 ஈரோடு - 638 001

முதற்பதிப்பு—1991

விலை : ரூ. 36-00

ஏஷியன் அச்சகம், சென்னை - 600 014

## பதிப்பரை

"தமிழன் என்று சொல்லடா!
தலைநிமிர்ந்து நில்லடா!"

"தமிழன் என்றொரு இனமுண்டு
தனியே அவற்கொரு குணமுண்டு"

"கத்தி யின்றி ரத்த மின்றி
யுத்த மொன்று வருகுது!"

சந்த நடை துள்ளி வர, சிந்தை அணு ஒவ்வொன்றிலும் மகிழ்ச்சிப் பெருமிதம் பொங்கியெழச் செய்யும்வண்ணம் இப்பாட்டடிகளை உருவாக்கிய பாவலர், நாமக்கல் வெ. இராமலிங்கம் பிள்ளை அவர்கள் ஆவார்.

நாமிருக்கும் நாடு நமதென்பதையும் மறந்து, 'வெந் ததைத் தின்று விதி வந்தால் சாவோம்' என இழிவுற்றுக் கிடந்த இந்திய மக்களைப் பாரதிக்குப் பின் பாட்டால் தட்டி யெழுப்பி, இந்தியன் என்று பெருமை கொள்ளச் செய்தவர், நாமக்கல் கவிஞராவார்.

நாமக்கல்லார், கவிதை என்னும் பூங்காவில் மட்டும் தேன் நுகர்ந்த வண்டல்லர்; இலக்கியம், நாவல், தன் வரலாறு எனப் பன்மலர்ப் பூங்காவிலும் தேன் நுகர்ந்த அரச வண்டாவார்.

கவிஞர் அவர்கள் எதையும் எளிமை துலங்க, சுவைபடச் சொல்வதில் திறம் பெற்றவர். 'என் கதை' என்னும் அவரது தன் வரலாற்று நூலைப் படித்தால் சோர்வு தட்டாது; சுவை,

குன்றாது; நாவலின் ஈர்ப்பும் இன்சுவையும் இணைந்து படிப்பவரைப் பரவசப்படுத்தும்.

இத்தகையவர், நாவலையே படைத்தால் எத்தகைய சுவையுடையதாய் இருக்கும் என்று சொல்லவும் வேண்டுமா?

'மலைக்கள்ளன்' என்னும் அவர் நாவல், திரைப்படமாக உருவாகி, பட்டி தொட்டிகளிலுள்ள பாட்டாளி மக்களின் உள்ளங்களையெல்லாம் கொள்ளை கொண்டதென்றால், அது நாமக்கல் கவிஞரின் நாவல் படைப்புக்குக் கிட்டிய வெற்றி அல்லவா?

அத்தகைய எழுத்தாற்றல் மிக்க நாமக்கல் கவிஞரின் எழுதுகோலிலிருந்து உருவான ஒப்பற்ற மற்றொரு நாவலே, 'காணாமல் போன கல்யாணப் பெண்' ஆகும்.

விரசமின்றித் தமிழர் பண்பாட்டிற்கு ஊறின்றி, குடும்பத்திலுள்ள அனைவரும் படித்துச் சுவைக்கும் வண்ணம் கவிஞர் ஆக்கிய 'காணாமல் போன கல்யாணப்பெண்' என்னும் இந்நாவலைத் தமிழ்கூறு நல்லுலகம் படித்துப் பயன் பெறுவதில் நாங்களும் பங்கு கொண்டதை எண்ணிப் பெருமிதம் கொள்கிறோம்.

**பழனியப்பா பிரதர்ஸ்**

# காணாமல் போன கல்யாணப்பெண்

## அத்தியாயம் 1

கல்யாண வீட்டின் அலங்காரம் ஊரே வியக்கும்படி கண் கொள்ளாக் காட்சியாக அமைந்திருந்தது.

திருமணக் கொட்டகை, பல இடங்களில் வீட்டுக்கு முன்னால் வீதியை அடைத்துக்கொண்டு பொது ஜனங்களுடைய நடமாட்டத்துக்கு இடைஞ்சலாக இருப்பதுண்டு. ஆனால், ஜானகியின் திருமணத்துக்கு நிர்மாணிக்கப்பட்ட கொட்டகை அப்படிப்பட்டதன்று. வீட்டுக்கு அடுத்து, அந்த வீட்டுக்கே சொந்தமான விஸ்தாரமான காலி நிலத்தில் அமைக்கப்பட்ட மிகப்பெரிய கொட்டகை; ஆயிரக்கணக்கான மக்கள் நெருக்கடியின்றி அமர்ந்திருக்க வசதியுள்ளது. நவீன வழக்கப்படி, வந்தவர்கள் அமர நாற்காலிகள் வரிசைப்படுத்தப் பட்டிருந்தன. தாராளமாகப் போகவும் வரவும் நாற்காலிகளின் ஒரு வரிசைக்கும் அடுத்த வரிசைக்கும் இடையில் அகலமான நடைபாதை விடப்பட்டிருந்தது. நாற்காலியில் உட்காரக் கூசுகின்றவர்களோ விரும்பாதவர்களோ வந்தால் அவர்கள் அமர்வதற்காக மணவறைக்கு முன்னால் தரையில் இரத்தினக் கம்பளங்கள் விரிக்கப்பட்டிருந்தன.

கொட்டகையின் மேற்குப்புறத்தில் கிழக்கு முகமாக ஒரு மேடைமீது மணவறை மிகச்சிறந்த முறையில் சிங்காரிக்கப் பட்டிருந்தது.

மணவறைக்கு இருபுறத்திலும் சிறிது தூரத்தில் இரண்டு மேடைகள். ஒவ்வொரு மேடையிலும் ஒரு நாதஸ்வர வித்வான் பக்க மேளங்களுடன் மாற்றி மாற்றி மங்கலநாதம் இசைக்க வென்று அழைக்கப்பட்டிருந்தனர்.

கொட்டகையில் கிழக்குப்புறக் கோடியில் சங்கீதக் கச்சேரி களுக்காகவும் பரதநாட்டியத்துக்காகவும் வெகு அழகான அரங்கம் ஒன்றும் அமைக்கப்பட்டிருந்தது.

கொட்டாரம் முழுவதிலும் பலவிதமான சித்திரக் காட்சி களும் சிற்பங்களும் கண்ணைக் கவர்ந்தன. எண்ணிறந்த மின்சார விளக்குகளும் விசிறிகளும் இணைக்கப்பட்டிருந்தன. திருமணக் கொட்டகையையும் மணவறையையும் அலங்கரிப்ப தற்கு அந்தந்த வேலையில் கைதேர்ந்த கலைஞர்கள் வெளியூர் களிலிருந்து வரவழைக்கப்பட்டிருந்தார்கள்.

சாப்பாட்டுக் கொட்டகையும் சமையல்கட்டும் தனித்தனியே தக்கபடி அமைக்கப்பட்டிருந்தன. அரிசியும் பருப்பும் காய்கறி களும் மற்றும் சமையலுக்கு வேண்டிய எல்லாப் பொருள்களும் மலைமலையாகக் குவிக்கப்பட்டிருந்தன.

திருமணக் கொட்டகையை நிர்மாணிக்கவும் அதை அலங்கரிக்கவும், மணவறையை அழகுபடுத்தவும் சாப்பாட்டுக் கொட்டகையையும் சமையல்கட்டையும் அமைக்கவும், ஒவ்வோர் இடத்துக்கும் அதற்கு வேண்டியபடி மின்சார வசதி களைப் பொருத்தவும்; சமையலுக்குவேண்டிய பொருள்களைச் சேகரிக்கவும் ஏறத்தாழ ஒரு லட்ச ரூபாய் செலவாகி யிருக்கலாம்.

இவை போக, ஆடை ஆபரணங்கள், வெகுமதிகள், ஊர்வலம், சங்கீதக் கச்சேரிகள், நாட்டியக் கச்சேரிகள் முதலிய இனிமேல் நடக்கவேண்டியவற்றிற்குச் செலவு எவ்வளவாகுமோ தெரியாது. ஆனால், இவ்வளவு செலவுகளும் ஜானகியின் பெற்றோரைச் சேர்ந்தவையல்ல. ஜானகியின் தந்தை முருகேசன் பணக்காரர் அல்ல; நடுத்தரக் குடும்பத்தைச்



சேர்ந்தவர்; வாழ்க்கையில் பல கஷ்ட நஷ்டங்களை அடைந்தவர். தம்முடைய மகளின் திருமணம் இவ்வளவு ஆடம்பரங்களுடன் நடத்தலாம் என்பதை அவர் கனவிலுங்கூடக் கருதியிருக்க முடியாது.

பின் இவ்வளவு விமரிசையான ஏற்பாடுகளும் யாருடைய செலவில் என்றால் 'ஜானகியின் அதிசயிக்கத்தக்க அபூர்வமான அழகுக்காக எவ்வளவு விலை கொடுத்தாலும் தகும்' என்று எண்ணும் மணமகனாகிய முத்துவீரப்பனுடைய செலவில் தான்.

முத்துவீரப்பன் அவனுடைய பெற்றோருக்கு ஒரே குழந்தை. அவர்கள் குடும்பம் பரம்பரையாகப் பெரும் பணக்காரக் குடும்பம். முத்துவீரப்பனுடைய தந்தை நீலமேகம் ஓர் ஆண்டுக்கு முன்னால்தான் காலமானார். இப்போது அவருடைய பெருஞ்செல்வத்துக்கு இவன்தான் சர்வாதிகாரி. அவனுடைய தாயார் லக்ஷ்மி அம்மாள் அவன் ஒரே குழந்தை என்ற பாசத்தால் அவனுடைய விருப்பப்படி செலவு செய் வதைத் தடுப்பதில்லை. இருபத்தேழு வயது வரை கல்யாணம் செய்துகொள்ள மறுத்துக்கொண்டிருந்த மகன் இப்போது கல்யாணம் செய்துகொள்ள விரும்பியது மட்டும் அல்லாமல், அழகிலும் படிப்பிலும் அறிவிலும் மிகச்சிறந்த ஜானகியை மணந்துகொள்ளப்போகிற மகிழ்ச்சிக்குரிய காரியத்துக்காகச் செய்யும் செலவுகளைத் தடுக்கத் தாய்க்கு மனம் வருமா?

முகூர்த்த தினத்துக்கு மூன்று நாள்களுக்கு முன்னா லிருந்தே மாப்பிள்ளை வீட்டுக்கும் பெண் வீட்டுக்கும் உறவினர் களும் நண்பர்களும் வந்து குவிந்துவிட்டார்கள். மாப்பிள்ளை வீடும் அதே ஊரில் அடுத்த தெருவில் உள்ளதனால் இரண்டு தெருக்களிலும் திருவிழாக் கூட்டம்போல் நெருக்கடி இருந்து கொண்டேயிருந்தது. அத்துடன் விருந்தினர்கள் வந்த வண்டி களும் 'மோட்டார்'களும் தெருவை அடைத்துக்கொண்டிருந்தன.

திருமணத்துக்கு முதல் நாள் மாலையில் மாப்பிள்ளை அழைப்புக்காக மிகப்பெரிய ஊர்வலமும் வாணவேடிக்கையும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன.

மாப்பிள்ளை வீட்டுக்கும் பெண்வீட்டுக்கும் அரை மைல் தூரந்தான். ஆனால், ஊர்வலத்துக்கென்று வரவழைக்கப் பட்டிருந்த பாண்டுவாத்தியம், பொய்க்கால் குதிரை நடனம், பல இடங்களில் மூங்கில்களை நட்டுக் கட்டியிருந்த 'கமான்' வளைவுகளில் பொருத்தப்பட்டிருந்த வர்ணஜால மத்தாப்பு களோடு கூடிய வாணவேடிக்கை, அங்கங்கே வழியிலுள்ள நண்பர்களின் வீடுகளுக்கு முன்னால் நிறுத்தி மாப்பிள்ளைக்கு மாலை சூட்டி ஆரத்தி சுற்றி வாழ்த்துதல் முதலானவை களைக் கருதி மாப்பிள்ளை அழைப்பு ஊர்வலம் நான்கு வீதிகளையும் சுற்றிக்கொண்டு பெண் வீட்டுக்கு வரவேண்டி யிருந்தது. அதனால் மாலை ஏழு மணிக்குப் புறப்பட்ட ஊர் வலம் பெண் வீட்டுக்கு வரும்போது மணி பத்துக்குமேல் ஆகி விட்டது.

அதற்குமேல் பெண் வீட்டார் குல தெய்வ பூசை நடத்தி மணமகன் மணப்பெண்ணுக்கென்று தயார் செய்த மிக விலை யுயர்ந்த வைர நகைகளையும் பட்டாடைகளையும் அணிவித்து அலங்கரித்தார்கள்.

அதன் பிறகு விருந்து நடந்தது. மணப்பெண் அன்றிரவு விரதம் இருக்கவேண்டியவளானதால், ஜானகி வெறும் பால் மட்டும் கொஞ்சமாகக் குடித்துவிட்டு மாடியிலுள்ள தனி யறைக்குப் போகப் புறப்பட்டாள். அப்பேர்து அவளைப் பல பேர் சுற்றிக்கொண்டு புகழத் தொடங்கினார்கள்.

திருமணம் நிச்சயமாவதற்குமுன் திருமணம் செய்து கொள்வதில் தூளிகூடப் பிரியம் இல்லாதவள்போல் எந்நேரமும் மறுப்புச் சொல்லிக்கொண்டும் அழுதுகொண்டும் இருந்த ஜானகி நிச்சயமான பின் சிறுகச்சிறுக மகிழ்ச்சியடைந்தாள். அந்த மகிழ்ச்சி, நாளுக்கு நாள் அதிகப்பட்டு, திருமணக் கொட்டகை, மணவறை முதலியவை ஏராளமான செலவில் அலங்கரிக்கப்பட்டதைக் கண்டு ஆனந்தப் பரவசமடைந்தவள் போல் எல்லாரோடும் குலவிக்கொண்டிருந்தாள். இன்றைக்கு மணமகன் பரிசளித்த மிக்க அழகான ஆபரணங்களையும்



ஆடைகளையும் அணிந்துகொண்டபின் அவளுடைய மகிழ்ச்சி கரை கடந்துவிட்டதுபோல் காட்சி அளித்தாள். இயல்பாகவே இணையற்ற அழகியான அவள், விலை உயர்ந்த ஆடை ஆபரணங்களை அணிந்திருப்பதுடன் என்றுமில்லாத மகிழ்ச்சி யால் புதுப் பொலிவுடன் விளங்குவதைக் கண்டு எல்லோரும் எல்லையற்ற இன்பமடைந்தார்கள்.

கல்யாணம் செய்துகொள்ள விருப்பம் இல்லாதவள்போல் மறுப்புக் காட்டியதை அடிக்கடி கண்டித்துப் பேசிய அவளுடைய சிற்றன்னை இப்போது அவளை வாரியணைத்து உச்சிமோந்து வாழ்த்திப் பூரித்துப் புகழ்ந்துகொண்டிருந்தாள்.

இந்தச் சமயத்தில் தலைமுதல் பாதம்வரை வெளியில் தெரியாதபடி 'புருதா' அணிந்த ஓர் உருவம் அங்கே வந்தது. அந்த உருவத்தைக் கண்டவுடன் ஜானகி தாவிச் சென்று அதைத் தழுவிக்கொண்டாள். அந்த உருவம் வேறு யாரு மன்று. ஜானகியின் ஆருயிர்த் தோழியான 'பாத்திமா' என்ற மகம்மதியப் பெண். ஜானகியின் வீட்டுக்கு அடுத்த வீடுதான் பாத்திமாவின் வீடு. அவளுடைய தந்தை ஒரு பெரிய வியாபாரி, மிகவும் நல்லவர். ஜானகியின் பெற்றோர்களும் பாத்தியாவின் பெற்றோரும் மிக்க நேசமாகப் பழகி வருகிற வர்கள்.

ஜானகியும் பாத்திமாவும் குழந்தைப் பருவத்திலிருந்து சேர்ந்து விளையாடி, ஐந்து வயதிலிருந்து பி.ஏ. வகுப்பு முடிய ஒரே பள்ளிக்கூடத்தில் ஒரே வகுப்பில் படித்தவர்கள். பள்ளிக்குப் போகும்போதும் வரும்போதும் பாத்திமாவின் தந்தையினுடைய மோட்டாரில்தான் இருவரும் சேர்ந்தே போய் வருவார்கள்.

அவர்களுடைய நட்பு, சாதி, மதம், மொழி, நிறம், இடம், காலம் முதலிய எல்லாத் தடைகளையும் கடந்து தூய அன்பி னால் பிணைக்கப்பட்டது. உயர்நிலைப் பள்ளி இறுதிப் படிப்பு முடியும்வரை பாத்திமா கோஷா இல்லாமல்தான் பள்ளிக்குப் போய்வந்தாள். கல்லூரியில் சேருமுன் அவள் பருவம் அடைந்து

விட்டாள். அதன் பிறகு தாயாருடைய கட்டாயத்துக்காக வெளியே போகும்போது புருதா அணிந்துகொள்ள வேண்டியிருந்தது. பள்ளி இறுதி ஆண்டோடு அவளுடைய படிப்பை நிறுத்திவிட வேண்டுமென்று அவளுடைய தாயார் விரும்பினாள். ஆனால், பாத்திமா பி.ஏ. முடியப் படிக்க வேண்டும் என்று பிடிவாதம் செய்ததை அவளுடைய தந்தை ஆதரித்தார். கல்லூரியில் சேர்ந்தவுடன் அவளைக் கல்லூரி ஹாஸ்டலில் சேர்த்துவிட்டார் அவள் தந்தை. அதைக் கண்ட ஜானகியும் தன் தந்தையிடம் சொல்லி ஹாஸ்டலில் சேர்ந்துகொண்டாள்.

அவர்கள் படித்தது பெண்கள் கல்லூரியில். பாத்திமாவும் ஜானகியும் ஒரே வயதினர். ஏறத்தாழ உயரமும் நிறமும் ஒத்திருக்கும். பாத்திமாவும் நல்ல அழகிதான். பள்ளிக் கூடத்துக்குப் போகும்போது மட்டுமன்றி மற்ற நேரங்களிலும்—இரவில் தவிர—இருவரும் சேர்ந்தே இருப்பார்கள். இருவரும் பி.ஏ. தேர்வு பெற்றார்கள். அதன் பின்னும் தினமும் பல முறை ஒருவரையொருவர் சந்தித்துச் சல்லாபித்துக்கொண்டிருப்பார்கள். கோஷாப் பெண்கள் வீட்டைவிட்டு வெளியே எட்டிக் கூடப் பார்க்கக்கூடாது என்ற சம்பிரதாயத்தில் ஊறிய பாத்திமாவின் தாயார்கூட ஜானகியைக் கருதி, பாத்திமா ஜானகியின் வீட்டுக்குப் புருதாவில் போய் வருவதை அனுமதித்தாள். சுருங்கச் சொன்னால், ஜானகியும் பாத்திமாவும் உண்மையாகவே உயிருக்குயிரான தோழிகள்.

திருமணம் செய்துகொள்ளத் துளிக்கூடப் பிரியமில்லையென்று ஜானகி மறுப்புக் கூறி அழுதுகொண்டிருந்த காலத்தில் பாத்திமாதான் அவளைச் சமாதானப்படுத்திச் சம்மதிக்கச் செய்தவள். அதற்காகப் பெண் வீட்டாரும் பிள்ளை வீட்டாரும் பாத்திமாவுக்கு நன்றி சொல்லிக்கொண்டிருப்பவர்கள்.

இனி, கதையைத் தொடர்வோம்.

இப்போது புருதா அணிந்த பாத்திமா அங்கு வந்த போது ஜானகியின் சிற்றன்னை அவளை வாரியணைத்து வாழ்த்திக் கொண்டிருந்தாள். பாத்திமாவைக் கண்டதும் ஜானகி தாவிச்



சென்று அவளைத் தழுவிக்கொண்டாள் அல்லவா? அதே சமயத்தில் ஜானகியின் சிற்றன்னையும் பாத்திமாவை அணைத்துக்கொண்டு, "பாத்திமா! உன்னை இப்போதுதான் மனதில் நினைத்தேன். நீயும் வந்துவிட்டாய். உனக்கு நூறு ஆயுசு. உன்னுடைய உதவிதானே ஜானகியைத்திருமணத்துக்கு ஒத்துக்கொள்ளச் செய்தது. உன்னைத் தவிர வேறு யார் சொன்னாலும் அவள் அசைந்திருப்பாளா? உனக்கு நாங்கள் எந்த விதத்தில் நன்றி செலுததினாலும் அது நீ செய்த உதவிக்கு ஈடாகாது" என்றாள்.

அங்கே சில ஆடவர்கள் இருந்ததால் பாத்திமா புருதாவை நீக்காமலேயே, "போதும் அம்மா, என்னை அப்படியெல்லாம் புகழ வேண்டாம். அப்படிப்பட்ட பிரமாத உதவி ஒன்றும் நான் உங்களுக்குச் செய்துவிடவில்லை. உயிருக்குயிரான என்னுடைய சகோதரி ஜானகி நல்ல இடத்தில் வாழ்க்கைப்பட்டுச் சுகமாக வாழும்படி யோசனை சொன்னதில் நான் செய்ய வேண்டிய கடமையைத்தான் செய்தேன்" என்று சொல்லிவிட்டு, ஜானகியைப் பிடித்து முன்னால் நிறுத்திக்கொண்டு, "ஜானகி! நீ இன்றைக்கு எவ்வளவு அழகாக இருக்கிறாய்! உன் மகிழ்ச்சிதான் என் மகிழ்ச்சி. அல்லா உனக்குச் சகல நலன்களையும் அருள வேண்டும் என்று பிரார்த்திக்கின்றேன்" என்று சொல்லி ஜானகியின் தோள்களைப் பிடித்துக் குலுக்கினாள்.

இந்தச் சமயத்தில் அங்கு வந்த ஜானகியின் தந்தை பாத்திமாவை வரவேற்று, அவள் செய்த உதவியைப் பாராட்டி நன்றி தெரிவித்துவிட்டு, மகளைப் பார்த்து, "ஜானகி! பாத்திமாவை உன் அறைக்குக் கூட்டிக்கொண்டு போ. அங்கே வேலைக்காரப் பெண்ணைப் பாத்திமாவுக்கு விருந்துச் சாப்பாடு கொண்டுவரச் செய்கிறேன்" என்றார்.

அதைக் கேட்ட பாத்திமா, "இல்லையப்பா! (பாத்திமா அவரை ஜானகியைப் போலவே, 'அப்பா' என்று அழைப்பது வழக்கம்) நான் சாப்பிட்டாகிவிட்டது. சாப்பாடு அனுப்ப வேண்டாம்" என்றாள்.

"சாப்பாடு அனுப்ப வேண்டாம் ; பட்சணங்களும் பழங்களும் பாலும் அனுப்புங்கள்" என்று சொல்லிக்கொண்டே ஜானகி பாத்திமாலை இழுத்துக்கொண்டு மாடிக்குப் போய் விட்டாள்.

மாடியறைக்குள் வந்த பின் பாத்திமா தன்னுடைய புருதாவை நீக்கிவிட்டாள். ஒருயிரும் ஈருடலும் போன்று அவ்விருவரும் அளவிட முடியாத ஆனந்தத்துடன் அநேக விஷயங்களைப்பற்றி அளவளாவிக்கொண்டிருந்தார்கள். வேலைக்காரப் பெண் பட்சணங்களும் பழங்களும் பாலும் கொண்டுவந்தாள். பாத்திமாவுக்கு அவைகளைப் புசிக்க ஆர்வமில்லை; ஆனாலும் ஜானகியின் திருப்திக்காகக் கொஞ்சம் சாப்பிட்டாள்.

சிறிது நேரம் மௌனம் நிலவியது. ஜானகியையே கண் கொட்டாமல் பார்த்துக்கொண்டிருந்த பாத்திமாவின் கண்கள் கலங்கின. அவளையும் மீறி அவளுடைய பட்டுக் கன்னங்களில் கண்ணீர் வடிந்தது. அதைத் துடைத்துக்கொண்டே, "ஜானகி! இனிமேல் நாம் இப்படி தினம் தினம் காலம் நேரம் கருதாமல் சந்தித்துச் சந்தோஷப்பட முடியாதே என்பதை நினைக்க நினைக்க என் நெஞ்சம் என்ன பாடுபடுகிறது தெரியுமா?" என்றாள்.

அதைக் கேட்ட ஜானகியின் கண்களும் கலங்கிவிட்டன. அவளும் கண்ணீரைத் துடைத்துக்கொண்டே, "எனக்கும் அதை நினைத்தால் சொல்ல முடியாத சங்கடந்தான் உண்டாகிறது. என்ன செய்யலாம்? விதி யாரை விட்டது? எந்தெந்தக் காலத்தில் எது எது நடக்க வேண்டுமோ அது நடந்தே தீரும். இதுவும் உன்னுடைய ஆலோசனையால் நடக்கப் போகிறது தானே? நீ எட்டு மணிக்கே வருவதாகச் சொல்லியிருந்தாய். பத்தரை மணிக்கு மேலாகியும் வரவில்லையே என்று தவித்துக் கொண்டிருந்தேன்" என்றாள்.

"ஐயோ, அதையேன் கேட்கிறாய், ஜானகி! என் தாயார் சமாசாரந்தான் உனக்கு நன்றாகத் தெரியுமே. நான் எட்டு மணிக்கேதான் இங்கு வரப் புறப்பட்டேன். இரவு வேளையில்,



அதுவும் கல்யாணக் கூட்டத்தில் போகக்கூடாது, விடிந்தபின் போகலாம் என்று தடுத்துவிட்டாள். எனக்குச் சொல்ல முடியாத துக்கமும் அழுகையும் வந்துவிட்டன. நீ எவ்வளவு ஆவலோடு என்னை எதிர்பார்த்துக்கொண்டிருப்பாய் என்பதை எண்ணி நானும் தவித்துப் போனேன்; சிறிது நேரம் சென்று என் தாயாரிடம் போய், 'அம்மா! நாளைக்குக் கல்யாணக் கூட்டம் இதைவிட அதிகமாயிருக்குமே. பகல் வேளையில் அவ்வளவு பெரிய கூட்டத்தில் நான் போவது உனக்கே பிடிக்காதே. அத்துடன் நாளைக்கு அவளுடன் ஏகாந்தமாகப் பேசவே முடியாமற்போகுமே. இப்போதே போய்க் கொஞ்ச நேரம் பேசிவிட்டு வந்துவிடுகிறேனம்மா' என்று கெஞ்சினேன். அதன் பிறகும் என் தாயார் தயங்கினார். இதைக் கேட்டுக்கொண்டே அங்கு வந்த என் தந்தை என் தாயாரிடம், 'பாத்திமா என்ன கேட்கிறாள்?' என்றார். அம்மா விஷயத்தைச் சொன்னாள். உடனே என் தந்தை, 'இத்தனை நாளும் பாத்திமா ஜானகியைப் பார்க்க ராத்திரியில போக வேண்டுமென்று சொன்னதில்லையே. நாளைக்கு அந்தப் பெண்ணுக்குக் கல்யாணம். கல்யாணத்துக்குப் புருதாவில் போனாலுங்கூட அவளோடு முகங்கொடுத்துப் பேச முடியாது. இப்போதே போய்க் கொஞ்ச நேரம் பேசிவிட்டு வரட்டுமே. ஏன் தடுக்கிறாய்?' என்றார். அதற்குமேல், 'சரி போய்விட்டுச் சீக்கிரம் வந்துவிடு' என்றாள் அம்மா" என்றாள் பாத்திமா.

பிறகு கல்யாணத்தைப்பற்றியும், காதலைப்பற்றியும், எதிர்காலத்தைப்பற்றியும், மறுபடியும் எப்போது சந்திக்க முடியுமோ என்பதைப்பற்றியும் நெடுநேரம் பேசிக்கொண்டிருந்தார்கள்.

கீழே பந்திக்குப் பின் பந்தியாகப் பன்னிரண்டு மணி வரை விருந்துச் சாப்பாடு நடந்துகொண்டிருந்தது. விடிந்தவுடன் ஆறு மணி முதல் ஏழரை மணிக்குள் முகூர்த்த நேரமானதால் திருமணச் சடங்குகளுக்கான காரியங்களைக் கவனிப்பதற்காகப் பெண் வீட்டைச் சேர்ந்தவர்களும் பிள்ளை வீட்டைச் சேர்ந்தவர்

களும் தூங்காமல் அங்குமிங்கும் வீடு முழுவதும் சுற்றிக் கொண்டிருந்தார்கள்.

விடியற்காலம் நான்கு மணிக்கே மேளவாத்தியம் முழங்கத் தொடங்கிவிட்டது.

மணப்பெண்ணை மங்கல நீராட்டுவதற்காக ஜானகியை அழைத்து வரச் சொன்னார்கள். சில இளம்பெண்களும் சுமங்கலிகளும் மாடிக்கு ஓடினார்கள். ஜானகியின் அறை இருண்டு கிடந்தது. தூங்குகிறாளாக்கும் என்று எண்ணி விளக்கைப் போட்டார்கள். ஜானகியை அங்கே காணவில்லை. அங்கிருந்த மேஜையின்மேல் அவள் குல தெய்வ பூஜைக்குப் பின் அணிந்திருந்த, மணமகன் அனுப்பிய பட்டுப் புடைவை மடித்து வைக்கப்பட்டிருந்தது. அந்தப் புடைவையின்மேல் மணமகன் பரிசாக அவள் அணிந்திருந்த எல்லா வைர நகைகளும் காணப்பட்டன. அவற்றைப் பார்த்து எல்லோரும் சிறிது நேரம் திகைத்து நின்றார்கள்.

அவர்களில் வயதில் பெரியவளான ஒருத்தி, "புடைவையையும் நகைகளையும் களைந்து வைத்துவிட்டு அவளே நீராடத் தான் போயிருக்கிறாள்" என்றாள்.

அதைக் கேட்ட இன்னொருத்தி, "ஆமாம், ஆமாம். அப்படித்தான் இருக்கும். ஜானகிக்குக் கல்யாணம் செய்து கொள்ளப் போவதில் கொள்ளை ஆசை!" என்றாள்.

"இருக்காதா பின்னே? இப்படிப் பணக்கார மாப்பிள்ளை கிடைக்கத் தவசு செய்திருக்க வேண்டாமா?" என்றாள் வேறொருத்தி.

அதைக் கேட்ட ஓர் இளம்பெண், "என்னதான் ஆசையிருந்தாலும் ஒரு பெண் தன்னுடைய பருவத்துக்குத் தகுந்த அடக்க ஒடுக்க நாணம் இல்லாமல் இப்படி அவசரம் காட்டக் கூடாது" என்றாள்.

இப்படியாக, ஆளுக்கோர் அபிப்பிராயத்தை வெளியிட்டு, மொத்தத்தில் ஒரு மணப்பெண், சடங்கு முறைப்படி பெரியவர்கள் வந்து அழைத்துப் போவதற்கு முன் தானே மங்கல ஸ்நானம் செய்யப்போனது சரியல்லவென்று பேசிக்கொண்டே மாடியைவிட்டு இறங்கிக் குளியல் அறைக்கு ஓடினார்கள்.



அங்கேயும் ஜானகியைக் காணவில்லை. வீட்டிலுள்ள எல்லா மூலை முடுக்குகளிலும் கொல்லைப்புறத்திலும் தேடினார்கள். எங்கும் காணவில்லை. எதிர்ப்பட்ட ஒவ்வொருவரிடமும், 'ஜானகியைக் கண்டீர்களா?', 'மணப்பெண்ணைப் பார்த்தீர்களா?' என்ற கேள்விகளே எங்கும் எதிரொலித்தன. சிறிது நேரத்திற்குள் கல்யாண வீடு அல்லோலகல்லோலம் அடைந்துவிட்டது. விஷயத்தை அறிந்த ஜானகியின் தந்தை முருகேசனும் அவருடைய மனைவியும் குலைந்து போனார்கள். இருவரும் மாடிக்கு ஓடினார்கள்; மேஜைமீதிருந்த புடைவையையும் நகைகளையும் பார்த்தார்கள். கண்கள் பனித்தன. நெஞ்சம் பதைத்தது.

மாடியில் உள்ளது அந்த ஒரே அறைதான். மொட்டைமாடி கிடையாது. அந்த அறையைவிட்டுப் போக வீட்டுக்குள் இறங்கும் வழியைத் தவிர வேறு வழியில்லை. அந்த அறையைத் தவிர மாடியில் தேடுவதற்கு வேறு இடமும் இல்லை.

முருகேசனும் மனைவியும் புடைவையையும், நகைகளையும் எடுத்துக்கொண்டு கீழே போனார்கள். இதற்குள் முகூர்த்த காரியங்களில் ஈடுபட்டிருந்த எல்லோரும் அங்கே கூடி விட்டார்கள்.

கூட்டத்திலிருந்த வேலைக்காரி, பாத்திமாவுக்காகப் பட்சணங்களும் பழங்களும் பாலும் மாடிக்குக் கொண்டுபோனவள், "ஜானகி, பாத்திமாவோடு அடுத்த வீட்டுக்குப் போயிருக்கும்" என்றாள்.

அதைக் கேட்ட ஜானகியின் சிற்றன்னை பாத்திமா வந்த சமயத்தில் ஜானகியை வாரியணைத்து உச்சிமோந்துகொண்டிருந்தவள், "இல்லையில்லை, பாத்திமா போகும் போது

என்னைக் கண்டு சொல்லிக்கொண்டுதான் போனாள். ஜானகி பாத்திமாவோடு போகவில்லை'' என்றாள்.

வீடு முழுவதிலும் முகூர்த்தத்துக்கான காரியங்களைச் செய்துகொண்டிருந்தவர்களின் கூட்டம்! வீதியிலும் வாசலிலும் நெருக்கடி! எங்கு பார்த்தாலும் மிகப்பெரிய மின்சாரவிளக்குகளின் பட்டப்பகல் போன்ற வெளிச்சம்! யார் கண்ணிலும் படாதபடி ஒருவர் வெளியே போவதோ உள்ளே வருவதோ முடியாது!

அப்படியிருக்க ஜானகி எப்படிப் போயிருக்க முடியும்? மற்றப் பெண்களில் யாராவது போனாலும் பார்த்தவர்கள் பொருட்படுத்தாமல் இருந்திருக்க முடியும். ஆனால், அழகுச் சிலையான ஜானகி வெளியே போனால் பார்ப்பவர்கள் கவனத்தை இழுக்காமல் இருக்குமா? வியப்பும் திகைப்புமாக ஒருவரையொருவர் பார்த்து விழித்துக்கொண்டிருந்தார்கள். மணப்பெண் காணாமற்போன சேதி பலவிடங்களில் அங்கங்கே உறங்கிக்கொண்டிருந்த உறவினர்களையெல்லாம் உலுப்பி எழுப்பிவிட்டது. விருந்துண்பதையும், வேடிக்கை பார்ப்பதையும், சங்கீதம் கேட்பதையும், சதிராட்டம் காண்பதையும் எண்ணி இன்புற்றுக்கொண்டிருந்த விருந்தினரின் மகிழ்ச்சியில் இடி விழுந்துவிட்டது. நாதசுரம் நாவடைத்துக்கொண்டது.

இணையற்ற அழகியை இல்லாளாக அடைந்துவிட்டோம் என்ற மகிழ்ச்சியில் மயங்கியிருந்த மணமகன் முத்து வீரப்பன், மணப்பெண்ணைக் காணவில்லையென்றதைக் கேட்டவுடன் கதிகலங்கித் துடிதுடித்துப் போனான்; உடனே தன்னுடைய மோட்டார்காரை எடுத்துக்கொண்டு அதில் தன் நம்பிக்கைக்குப் பாத்திரமான சிலரை ஏற்றிக்கொண்டு ஜானகி எங்கெல்லாம் போகக்கூடுமென்று அனுமானித்தானோ அங்கெல்லாம் தேடப் போய்விட்டான்.

முகூர்த்த நேரம் தாண்டுகிறவரையில் எப்படியாவது மணப்பெண்ணைக் கண்டுபிடித்துவிட மாட்டார்களா என்ற ஏக்கத்துடன் எல்லோரும் எதிர்பார்த்துக்கொண்டிருந்தார்கள்.



முகூர்த்த நேரம் தாண்டிவிட்டது. புரோகிதர்கள் போய் விட்டார்கள். கூட்டம் கலைந்துவிட்டது.

ஜானகி ஏன் காணாமற்போனாள்; எப்படி யாருக்கும் தெரியாமல் வீட்டிலிருந்து மறைந்தாள், அவளே போனாளா அல்லது பிறரால் கடத்தப்பட்டாளா என்பனவற்றை அறிய இந்தத் திருமண ஏற்பாட்டுக்கு முன்னாலுள்ள அவளுடைய பிறப்பு வளர்ப்புச் சரித்திரத்தை அறிய வேண்டும். அதன் பிறகு அவள் எங்கே போனாள்; என்னவானாள் என்பனவற்றைக் காண்போம்.

## அத்தியாயம் 2

ஜானகியின் தந்தை முருகேசன் சென்னையில் ஒரு நடுத்தரக் குடும்பத்தில் பிறந்தவர்; சிறு வயதிலேயே தந்தையை இழந்தவர். இந்த மச்சு வீடும் பத்து ஏகரா நஞ்சையும் பதினையாயிரம் ரூபாய் ரொக்கமும் அவருக்குத் தந்தை விட்டுப்போன செல்வம். சாந்த குணமும் நல்லொழுக்கமும் உள்ளவர்; படிப்பில் அவ்வளவு கெட்டிக்காரர் அல்லாவிட்டாலும் பள்ளி இறுதி வகுப்பில் தேறினார். அத்துடன் படிப்பு நின்றுவிட்டது. அப்போது வயது பத்தொன்பது.

அவருக்கும் ஜானகியைப் பெற்ற தாமரைக்கண்ணிக்கும் வெகு விசித்திரமான முறையில் திடீரென்று விவாகம் முடிந்தது. எப்படியெனில்:

முருகேசன் பள்ளியிறுதிப் படிப்பை முடித்துவிட்டுச் சும்மா இருந்தபோது அவருடைய தந்தைக்கு ஒன்றுவிட்ட சகோதரியான ஓர் அத்தையின் மகளுக்குத் திருமணம் என்று அழைப்பு வந்தது. அந்த அத்தையும் அவருடைய கணவரும் முருகேசனுடைய பெற்றோரிடம் மிக்க நேசமுள்ளவர்கள். அவர்கள் வசித்தது திருநெல்வேலியில். முருகேசனுடைய தந்தை

உயிரோடிருந்தபோது அடிக்கடி வந்து போனவர்கள். தந்தை இறந்தபோதுதான் அவர்கள் கடைசியாக வந்து போனது. அப்போது முருகேசனுக்குப் பத்து வயது. அதற்குப் பின் அந்த அத்தை வீட்டுக்குப் பல துன்பங்கள் நேர்ந்து மிகவும் நலிந்து போனதால் இங்கே வருவது முடியாமல் போய்விட்டது. முருகேசனுடைய தாயாரும் விதவையாகிவிட்ட கோலத்தில் வெளியே எங்கும் போக விரும்பவில்லை.

இப்படியாக ஒன்பது ஆண்டுகள் சந்திப்பு விட்டுப் போனாலும் கடித மூலமாகத் தொடர்பு இருந்துகொண்டு தானிருந்தது.

இப்போது அந்த அத்தையின் பெண்ணுக்குத் திருமணம் என்று அழைப்பு வந்திருக்கிறது. திருமணப் பத்திரிகை வருவதற்கு முன்னாலேயே இரண்டு கடிதங்களில் திருமணத்துக்கு முருகேசனும் அவன் தாயாரும் கட்டாயம் வரவேணுமென்று வற்புறுத்திக் கேட்டுக்கொண்டிருந்தார்கள். அதனால் கடமையும் பாசமும் அந்தக் கல்யாணத்துக்குப் போய் வரக் கட்டாயப்படுத்தின. முருகேசனும் அவன் தாயாரும் முகூர்த்தத்திற்கு நான்கு நாள்கள் முன்னதாகவே அங்கே போய்ச் சேர்ந்தார்கள். ஒன்பது வருடங்களாகச் சந்திக்காத ஏக்கம் தீர அந்த அத்தையும் அவளுடைய கணவரும் இவர்களை மிக்க மகிழ்ச்சியோடும் அன்போடும் வரவேற்றுக் கொண்டாடினார்கள்.

ஒன்பது ஆண்டுகளுக்கு முன்னால் முருகேசனைப் பத்து வயதுச் சிறுவனாகப் பார்த்திருந்த அந்த அத்தை, இப்போது அவனுடைய அழகையும் வளர்ச்சியையும் உடற்கட்டையும் பார்த்து வியப்பும மகிழ்ச்சியும் பொங்க, "அட! முருகேசனா இது! யாரோ ராஜகுமாரன் என்றல்லவா திகைத்துவிட்டேன்! வாடா சாமி வா'' என்று அவன் கையைப் பிடித்து உள்ளே அழைத்துச் சென்றாள்.

முருகேசனுடைய அன்னையும் அந்த அத்தையும் வெகு நேரம் குசலம் பேசிக்கொண்டிருந்தார்கள். முருகேசனுடைய



தாய், தான் மணப்பெண்ணுக்குப் பரிசாக வாங்கி வந்த விலை உயர்ந்த பட்டுப் புடைவையையும் ரவிக்கைத் துண்டையும் ஒரு தங்கச் சங்கிலியையும் பெண்ணின் தாயிடம் கொடுத்தாள். பொருளாதாரக் குறைவால் மணப்பெண்ணுக்கு விரும்பியபடி விலையுயர்ந்த ஆடை ஆபரணங்களை வழங்க முடியாத நிலையிலிருந்த அந்த அம்மாள்; அந்தப் பரிசுகளை மிக்க நன்றி உணர்ச்சியுடன் வந்தனம் சொல்லி வாங்கிக் கொண்டு; தன் குடும்பத்துக்கு நேர்ந்த துன்பங்களையும் இந்தக் கல்யாணம் நிச்சயமான சூழ்நிலையையும் விவரித்தாள்.

"மணமகனுடைய பெயர் ஜெயவீரன்; எம். ஏ. தேறியவர்; பம்பாயில் உயர்ந்த உத்தியோகத்தில் உள்ளவர். அவருக்குப் பெண் பார்க்க அவருடைய பெற்றோர்கள்தாம் வந்தார்கள். பெண்ணின் அழகைப் பார்த்தவுடன் அவர்களுக்குப் பிடித்து விட்டது. அவர்களும் பணவசதி குறைந்தவர்கள்தாம். மணமகனுடைய சம்பாதனையைத் தவிர வேறு ஆஸ்தியுள்ளவர்களல்ல.

"இப்படி அழகான பெண் கிடைக்காது என்ற காரணத்தால் சீர் வரிசை நகை நட்பு முதலிய எதையும் கருதாமல், 'உங்கள் சக்திக்கானதை நீங்கள் செய்யுங்கள்; எங்களால் முடிந்ததை நாங்கள் செய்கிறோம். ஆடம்பரமில்லாமல் ஒரு நாள் கல்யாணமாக முடித்துவிடலாம். அந்த ஒரு நாள் செலவையும் நாங்களே ஏற்றுக்கொள்கிறோம்' என்று சொன்னார்கள். இவ்வளவு அனுகூலமான சம்பந்தம் வேறு எங்கிருந்து வரப்போகிறது என்று நாங்களும் ஒத்துக் கொண்டோம். உடனே புரோகிதச் சடங்குகளுடன் நிச்சய தாம்பூலம் மாற்றிக்கொண்டோம். மாப்பிள்ளை அப்போது வரவில்லை. அவர் எப்படி இருப்பாரோ, மாப்பிள்ளையைப் பார்க்காமல் ஒப்புக்கொண்டுவிட்டோமே என்ற குறை மனத்தில் இருந்துகொண்டுதான் இருந்தது. அந்த மனக்குறை எங்களுக்கு இருந்ததை அனுமானித்த மாப்பிள்ளையின் தாய், 'என் மகன் லட்சணமான வாலிபன். அதைப்பற்றிச் சந்தேகப்பட வேண்டாம். உடனே ரஜா கிடைக்காததால் அவன்

வர முடியவில்லை. அவனுடைய போட்டோவைக் கொண்டு வர மறந்துவிட்டோம். போய் அனுப்புகிறேன், பாருங்கள்' என்று சொல்லிவிட்டுப் போய் உடனே போட்டோவையும் அனுப்பினார்கள். போட்டோவில் மாப்பிள்ளை வாட்டசாட்டமான வாலிபனாக இருப்பதைப் பார்த்த பின் மனம் நிம்மதியடைந்தது. உங்கள் புண்ணியத்தில் மகளுக்கு நல்ல இடமாகத்தான் அமைந்திருக்கிறது. பெண்ணுக்கு நல்ல புடைவையும் நகையும் வாங்க முடியவில்லையே என்று தவித்துக் கொண்டிருந்த சமயத்தில் நீங்கள் அவளுக்காக வாங்கி வந்திருக்கிற மிக நல்ல புடைவையும் தங்கச் சங்கிலியும் அவளுடைய அதிருஷ்டம்தான்'' என்றாள்.

முகூர்த்தத்திற்கு முதல் நாள் மாப்பிள்ளையும் அவரைச் சேர்ந்த அனைவரும் வந்து சேர்ந்தார்கள். உண்மையாகவே மாப்பிள்ளை மிக்க அழகான வாலிபராகத்தான் இருந்தார்.

சராசரிக்குமேல் சற்று உயரமான உருவம். அதற்கேற்ற பருமன், நல்ல நிறம், செதுக்கிய சிற்பம் போன்ற முகவெட்டு, முறுக்கிவிட்ட சிறு மீசை—மொத்தத்தில் கண்ணைக் கவரும் கட்டழகன். உடை நவநாகரிக ஆங்கில 'சூட்'தான்.

ஆனால், அவருடைய பார்வையில் குளிர்ச்சி இல்லை. முகத்தில் மலர்ச்சியில்லை. உதட்டில் அலர்ச்சி இல்லை. உயர்வு மனப்பான்மையும் அதிகாரத் தோரணையும் காரியங்களில் கண்டிப்பும் உள்ளவர்போல் காணப்பட்டார்.

மாப்பிள்ளை வீட்டார் தங்குவதற்கென்று சுத்தப்படுத்தப் பட்டிருந்த ஒரு தனி வீட்டில் அவர்கள் தங்கினார்கள். பெண் வீட்டார் மாப்பிள்ளை அழைப்புக்காக ஊர்வலம் ஏற்பாடு செய்திருந்தார்கள். ஆனால் மாப்பிள்ளை, ஊர்வலம் அநாகரிகமான வழக்கமென்று அதை ரத்து செய்துவிடச் சொல்லிவிட்டார். அதைக் கேட்டுப் பல பேர் வருத்தப் பட்டார்கள். அதனால் ஊர்வலச் செலவு மிச்சந்தானே என்று சில பேர் பாராட்டவும் செய்தார்கள். அந்த வீட்டுக்குள்



நுழையும்போது பெண்கள் அவருக்கு ஆரத்தி எடுக்க வந்தபோது அதையும் அநாகரிகப் பழக்கம் என்று தடுத்து விட்டார். அதைக் கண்டு அங்கேயிருந்த எல்லோரும் வருத்தப் பட்டார்கள்.

பொழுது விடிந்ததும் முகூர்த்தத்துக்கான காரியங்கள் தொடங்கின.

மாப்பிள்ளை மங்கல நீராடுவதற்காக வழக்கப்படி அவருக்கு நலங்கிடுவதற்கு அழைத்தார்கள். நலங்கிடுவதையும் கொச்சையான வழக்கமென்று நிராகரித்துவிட்டு அவராகவே ஸ்நானம் செய்துவிட்டுத் தம்மை அலங்கரித்துக்கொண்டார்.

முகூர்த்தத்துக்கென்றே வாங்கப்பட்டிருந்த ஜரிகை வேஷ்டியை உடுத்திக்கொள்ளும்படி அவருடைய பெற்றோர்களும் மற்றவர்களும் வேண்டிக்கொண்டும் அது தமக்கு அழகளிக்காது என்றும், கச்சம் வைத்துக் கட்டிக்கொள்ளப் பழக்கமில்லையென்றும் சொல்லிவிட்டுத் தாம் திருமணத்துக்கென்றே பம்பாயிலிருந்து வாங்கி வந்த விலை உயர்ந்த 'சூட்டை' அணிந்து, 'காலர்' 'டை'யுடன் அலங்கரித்துக் கொண்டார். அந்த ஆங்கில உடையில் மாப்பிள்ளை அதிக அழகுடன் விளங்குவதாக மகிழ்ச்சி தெரிவித்தார்கள். மாப்பிள்ளையும் மகிழ்ச்சியால் முகம் மலர்ந்து முறுவலித்தார்.

மூன்று முடிச்சுப் போட்டுத் தாலி கட்ட வேண்டிய முகூர்த்த நேரத்துக்கு முன்னால் நடக்க வேண்டிய சில சடங்குகளுக்காக மாப்பிள்ளையை மணவறைக்கு அழைத்துப் போக வந்தார்கள்.

பெற்றோரும் தம்மைச் சேர்ந்த மற்றோரும் புடை சூழ மாப்பிள்ளை மணவறை அலங்கரிக்கப்பட்டிருந்த பெண் வீட்டுக்கு வந்தார். மாப்பிள்ளையின் அழகைப் பார்க்க ஆசைப் பட்ட கூட்டம் நெருக்கிக்கொண்டு பின்தொடர்ந்தது.

மாப்பிள்ளை மணவறையை நெருங்கினார்.

அங்கே நெற்றியிலும் உடம்பு முழுவதும் பட்டை பட்டையாக விபூதி பூசிக்கொண்டு சற்றே கருத்த உடம்பில் வெள்ளை

வெளேரென்று தடித்த பூணூல் மார்பில் புரள ஒரு பிராமணப் புரோகிதர் திருமணச் சடங்குகளுக்கு வேண்டிய மங்கலப் பொருள்களின் மத்தியில் அமர்ந்திருந்தார்.

அவரைப் பார்த்தவுடனே மாப்பிள்ளை, விரோதியைக் கண்டுவிட்டது போன்ற வெறுப்புடன், "அம்மா!" என்று தம் தாயாரைக் கூப்பிட்டார்.

சற்றுத் தூரத்திலிருந்த அவருடைய தாய் அருகில் வந்து, "ஏம்பா!" என்றாள்.

"பார்ப்பனப் புரோகிதம் வேண்டாமென்று நான் ஒவ்வொரு கடிதத்திலும் எழுதியிருந்தேனே" என்றார் மாப்பிள்ளை.

"ஆமாம்பா! நீ எழுதியிருந்தது மெய்தான். நாங்களும் பெண் வீட்டாரிடம் உன்னுடைய பிரியத்தைச் சொல்லி, பார்ப்பனப் புரோகிதம் இல்லாமல் ஏற்பாடு செய்யும்படிதான் சொன்னோம். அப்படிச் செய்வது நல்லதல்ல; நம் இனத்தாரின் வழக்கம்போல் புரோகிதத்துடன் செய்துவிடலாம் என்று அவர்கள் என்னையும் உங்களப்பாவையும் கெஞ்சிக் கெஞ்சிக் கேட்டுக்கொண்டார்கள். நம் குடும்பத்திலும் இதுவரை நடந்த எல்லாக் கல்யாணங்களும் ஐயரை வைத்துத்தான் நடந்திருக்கின்றன. பரவாயில்லை; அதனாலென்ன கெடுதல்? சுபகாரியம் நடக்கட்டும்; தடங்கல் செய்யாதேப்பா" என்றாள் தாயார். மாப்பிள்ளையின் தந்தையும் அப்படியே சொன்னார்.

"அம்மா! அது கூடவே கூடாது. பார்ப்பனீயத்துக்கு நான் உட்படவே மாட்டேன்" என்று ஆவேசத்தோடு இரைந்தார் மாப்பிள்ளை.

மாப்பிள்ளையின் அழகில் மயங்கிவிட்ட மணப் பெண்ணின் தந்தை, மாப்பிள்ளையைச் சமாதானப்படுத்தும் ஆசையுடன், "மாப்பிள்ளை, கோவித்துக்கொள்ள வேண்டாம். தெய்வத்தை வழிபடுவதற்கான சடங்குகளுக்குத் தடை சொல்ல வேண்டாம். நான் உங்களை ரொம்பக் கேட்டுக்கொள்கிறேன்" என்று கெஞ்சினார்.



"தெய்வ வழிபாடாவது மண்ணாவது? அதெல்லாம் ஒன்று மில்லை. இதெல்லாம் பார்ப்பானை வழிபடச்செய்து பணம் பறிக்கும் பார்ப்பனச் சூழ்ச்சிதான்" என்றார் மாப்பிள்ளை.

"அப்படிச் சொல்லக்கூடாது. நெடுங்காலமாக நமது முன்னோர்கள், வாழையடி வாழையாகப் பின்பற்றி வரும் வழக்கம் இது" என்றார் பெண்ணின் தந்தை.

"நமது முன்னோர்கள் நெடுங்காலமாக இந்த வழக்கத்தை மட்டுந்தானா பின்பற்றி வருகிறார்கள்? இன்னும் எத்தனையோ மூடப் பழக்கங்களையும் மூடநம்பிக்கைகளையுந்தான் பின்பற்றி வருகிறார்கள். அவர்களுடைய மூடத்தனத்தை நானும் பின்பற்ற வேண்டுமென்பது கட்டாயமா? பகுத்தறிவுக்கு ஒவ்வாத இந்த மூடப் பழக்கங்களையெல்லாம் ஒழித்துக்கட்ட வேண்டியதுதான் என் போன்றவர்களுடைய கடமை. எல்லா மூடப் பழக்கங் களுக்கும் காரணம் இந்தப் பார்ப்பனீயந்தான். முதலில் அதை ஒழித்துக் கட்ட வேண்டும்" என்றார் மாப்பிள்ளை.

"வேண்டாம் மாப்பிள்ளை. சுப காரியத்துக்கான தெய்வச் சடங்குகளை ஒழிக்க வேண்டும், அழிக்க வேண்டும் என்றெல்லாம் சொல்லாதீர்கள். நான் உங்களைக் கெஞ்சிக் கேட்டுக்கொள்கிறேன்" என்று கைகூப்பினார், மணப் பெண்ணின் தந்தை.

"நீங்கள் வருத்தப்படுவதில் பயனில்லை. நான் பார்ப்ப னீயச் சடங்குகளுக்குப் பணிய மாட்டேன். அது என் கொள்கை" என்றார் மாப்பிள்ளை.

இந்த வாக்குவாதங்களை வெகு வருத்தத்தோடு கேட்டுக் கொண்டிருந்த மணப்பெண்ணின் தாய், மருமகனாகப் போகிற வாலிபனோடு வாதிக்கத் தடுத்துக்கொண்டிருந்த கூச்சத்தை உதறித் தள்ளிவிட்டு முன்னால் வந்து, "மாப்பிள்ளை, இப்ப என்ன செய்ய வேண்டுமென்கிறார்?" என்று தன் கணவரைப் பார்த்துக் கேட்டாள்.

"நான் வேண்டுமென்பது வேறொன்றுமில்லை. முதலில் இந்தப் பார்ப்பனப் புரோகிதரைப் போகச் சொல்லுங்கள்" என்றார் மாப்பிள்ளை.

"அப்புறம்?"

"அப்புறம் இந்த மணப்பலகையையும் பாயையும் எடுத்து விட்டு இரண்டு நாற்காலிகளைப் போடச் செய்யுங்கள்."

"அதற்கப்புறம்?"

"அதற்கப்புறம் திருமணந்தான். பார்ப்பனப் புரோகிதம் கூடாது என்பதுதான் முக்கியம். முதலில் பார்ப்பனரைப் போகச் சொல்லுங்கள்."

"ஐயர் போய்விடத்தான் வேண்டுமாக்கும்."

"ஆம். ஆனால், நீங்கள் அவரை அவருடைய தொழில் முறையில் அழைத்துவிட்டீர்கள். அதனால் அவர் சும்மா போக வேண்டாம். அவருக்குச் சேர வேண்டிய பணத்தைக் கொடுத்தனுப்பிவிடலாம். அது எவ்வளவானாலும் நானே தந்துவிடுகிறேன். புரோகிதரைப் போகச் சொல்லுங்கள்."

அதைக் கேட்டதும் அதுவரையிலும் வாய் திறக்காமலிருந்த அந்தப் புரோகிதர் பொறுமை இழந்தவராக, "ஓய், மாப்பிள்ளை வாள்! உம்முடைய பணத்தை நீரே வைத்துக்கொள்ளும். இங்கே யாரும் உம்முடைய பணத்துக்காக வீங்கிக் கிடக்க வில்லை. ஏன் தெய்விகச் சடங்குகளைத் தூஷித்து, அபசாரம் செய்கிறீர்? மஹாபாபம்" என்றார்.

"ஆமாம்; பாவந்தான். பாவம் புண்ணியம், நரகம் மோட்சம் என்று சொல்லித்தானே ஊரை ஏமாற்றிப் பிடுங்கித் தின்கிறீர்கள்" என்றார் மாப்பிள்ளை.

"அட! பாபி!" என்று புரோகிதர் தம் வலக்கையால் வாயைப் பொத்திக்கொண்டார்.



'அட! பாபி!' என்று சொன்னதைக் கேட்ட மாப்பிள்ளை கொதிப்புடன் கையை ஓங்கிக்கொண்டு, "ஏய் பார்ப்பான்! என்ன பாபீ கீபி என்று உளறுகிறாய். ஜாக்கிரதை, மரியாதை கெட்டுப் போகும்" என்று புரோகிதரை அடிப்பது போல் பயமுறுத்தினார்.

இதற்குள் மாப்பிள்ளையின் தாயும் தந்தையும் குறுக் கிட்டுச் சமாதானப்படுத்தினார்கள்.

புரோகிதர் தமது மடிசஞ்சியைத் தூக்கிக்கொண்டு அங் கிருந்து போய்விட எழுந்துவிட்டார்.

அதைக் கண்ட மணப்பெண்ணின் தாய் அவரை வணங்கி, "சுவாமி! தயவு செய்து உட்காருங்கள். நடக்க வேண்டிய சடங்குகளுக்கு மாப்பிள்ளை இணங்காவிட்டால் போகட்டும். மணப்பெண்ணுக்கான சடங்குகளை நடத்துவோம்" என்று புரோகிதரிடம் சொல்லி அவரை உட்காரச் சொல்லிவிட்டு, நேரே மாப்பிள்ளையைப் பார்த்து நிதானமாக, "தம்பீ! உங்களுடைய பகுத்தறிவுக்கு இந்தச் சடங்கெல்லாம் மூடப்பழக்கம் என்று தோன்றுவதை நான் குறை கூறவில்லை. நீங்கள் இந்தப் பார்ப்பனச் சடங்குகளுக்கு உட்பட வேண்டாம். ஆனால், எங்களுடைய பகுத்தறிவுக்கோ பகுக்காத அறிவுக்கோ இந்தச் சடங்குகள் தள்ள முடியாத தெய்வ காரியங்களாகத் தெரி கின்றன. ஆகையால், எங்களுடைய நம்பிக்கையின்படி எங்கள் பெண்ணுக்கு நடக்க வேண்டிய சடங்குகளை ஐயரைக்கொண்டு நடத்திக்கொள்வதில் உங்களுக்கு ஆட்சேபணை இருக்கா தென்றே நம்புகிறேன். சரிதானா?" என்று சுமுகமான முறையில் கேட்டாள்.

அந்த அம்மாளின் விநயமான பேச்சில் மெய்ம்மறந்து மகிழ்ச்சியடைந்துவிட்ட மாப்பிள்ளை, "இல்லையில்லை. எனக்கு ஆட்சேபணை இல்லை. பெண்ணுக்கு நடத்த வேண்டு மென்கிற சடங்குகளை உங்கள் விருப்பப்படி நடத்திக்கொள் ளுங்கள்" என்றார்.

"ரொம்ப சந்தோஷம். அந்தச் சடங்குகள் முடிய கொஞ்ச நேரம் ஆகும். அதுவரைக்கும் நீங்கள் போய் உங்கள் ஜாகையில் இருங்கள். சடங்குகள் முடிந்தவுடன் தெரியப்படுத்துகிறோம்'' என்றாள் மணப்பெண்ணின் தாய்.

"சரி, அப்படியே ஆகட்டும். நான் ஜாகைக்குப் போகிறேன். சடங்குகள் முடிந்ததும் தெரியப்படுத்துங்கள்'' என்றார் மாப்பிள்ளை.

பக்கத்தில் நின்ற மாப்பிள்ளையின் தாய் மணப் பெண்ணின் தாயைப் பார்த்து, "முகூர்த்த நேரம் தாண்டி விடாதபடி சடங்குகளைக் கொஞ்சம் வேகமாக நடத்தி முடியுங்கள்'' என்றாள்.

அதைக் கேட்ட மாப்பிள்ளை, "முகூர்த்த நேரம் என்ப தெல்லாம் புரோகிதத்தை விரும்புகிறவர்களுக்குத்தானே? எனக்கு அதைப்பற்றிக் கவலையில்லை. எல்லா நேரமும் நல்ல நேரந்தான்'' என்று சொல்லிக்கொண்டு மணப்பந்தரை விட்டு ஜாகைக்கு நடந்தார்.

அந்தச் சமயத்தில், இதுவரைக்கும் மணவறைக்குப் பக்கத்தில் நடந்த இந்த வாக்குவாதங்களை அறியாமல் வீட்டுக் குள் மணப்பெண்ணைச். சிங்காரித்துக்கொண்டிருந்த பெண்டுகள் மணப்பெண்ணைச் சடங்குகளுக்காக மணவறைக்கு அழைத்துக் கொண்டு வீட்டைவிட்டுப் பந்தருக்குள் வந்தார்கள்.

எதிரில் வந்துகொண்டிருந்த மாப்பிள்ளை முதல் முதலாக மணப்பெண்ணை அப்போதுதான் பார்த்தார். அந்தப் பெண்ணின் அழகு அவருடைய கண்களை மின்னல் ஒளி போல் கூசச் செய்துவிட்டது. அவரையும் அறியாமல் அவருடைய உடம்பு முழுதும் ஓர் இன்பப் புல்லரிப்புப் பரவியது. கண்கொட்டாமல் அந்தப் பெண்ணையே பார்த்துக் கொண்டு மரம்போல் நின்றுவிட்டார் மாப்பிள்ளை.



அதைக் கவனித்துவிட்ட மணப்பெண்ணின் தாய் ஓடி வந்து பெண்ணைத் திருப்பி வீட்டுக்குள் அழைத்துப்போகச் சொல்லிவிட்டாள்.

மணப்பெண் தன் கண்ணுக்கு மறைந்த பிற்பாடுதான் மாப்பிள்ளைக்குச் சுயநினைவு வந்தது. நடையைத் தொடர்ந்து ஜாகைக்குப் போனார். அவரைச் சேர்ந்த மற்றவர்களும் அவரைப் பின்தொடர்ந்தார்கள்.

மாப்பிள்ளை தனியே உட்கார்ந்து கண்களை மூடிக் கொண்டு மனத்திற்பதிந்துவிட்ட மணப்பெண்ணின் அழகிய உருவத்துடன் மனத்துக்குள்ளேயே உறவாடிக் களிப்படையத் தொடங்கிவிட்டார்.

பெண் பார்க்க மாப்பிள்ளை வரவில்லை. பெண் பார்த்து உடனே நிச்சயம் செய்துவிட்ட மாப்பிள்ளையின் பெற்றோர்கள், பெண் மிகவும் அபூர்வமான அழகியென்றும், அப்படிப்பட்ட அழகி கிடைப்பது அரிதென்றும் படிப்படியாகப் பெண்ணை வர்ணித்துப் புகழ்ந்து எழுதிய கடிதங்களைக் கண்டுதான் மாப்பிள்ளை அந்தச் சம்பந்தத்துக்குச் சம்மதித்துத் திருமணச் செலவுக்கு வேண்டிய பணத்துக்குத் தந்தை பேருக்கு 'டிராஃப்ட்' அனுப்பினார்.

இப்போது பெண்ணை நேரில் கண்டபோதுதான் எதிர் பார்த்ததைவிடப் பல மடங்கு அதிக அழகுடையவளாக இருப் பதை அறிந்து பூரித்துப் புளகாங்கிதம் அடைந்துவிட்டார்; 'இப்படிப்பட்ட அழகியை மணக்துகொள்ளப் பேசாமல் பார்ப்பனப் புரோகிதத்தைக்கூட ஒத்துக்கொண்டிருக்கலாமே; அதைவிட்டு என்னென்னவோ பேசிப் பெண் வீட்டாரை வருத்தப்படுத்திவிட்டோமே!' என்று எண்ணிவிட்டார்.

அந்தப் பெண்ணின் அழகு தூண்டிவிட்ட ஆசைகளின் போதையில் தம்முடைய பார்ப்பனீயத்தை ஒழிக்க வேண்டு மென்ற கொள்கையை—பெண்ணையும் பெண் வீட்டாரையும் திருப்தி செய்யவாவது—சிறிது நேரம் ஒதுக்கி வைக்கலாமா என்றுகூட ஓர் எண்ணம் உதித்தது.

உடனே, 'சீ, சீ, கொள்கையை விடுவது கோழைத்தனம். எப்படியும் பெண்ணுக்கு நடத்த வேண்டிய சடங்குகள் முடிந்தவுடன் நமக்கு அழைப்பு அனுப்புவார்கள். நாம் விரும்பியபடி திருமணத்தை முடித்துக்கொண்டு பிறகு அவர்களைச் சமாதானப்படுத்திவிடலாம். வேண்டுமானால் அந்தப் புரோகிதரைக் கடிந்து பேசிவிட்டதற்காக மன்னிப்புக் கேட்டுக் கொள்ளலாம்' என்று தீர்மானித்துக்கொண்டார்.

மணப்பெண்ணைப் பார்த்த சில நிமிஷங்களுக்குள் மாப்பிள்ளைக்கு இவ்வளவு மன மாற்றமும் பண்பும் பணிவும் உண்டாகிவிட்டனவே! பெண்மைக்குச் 'சக்தி' என்ற பெயர் மிகவும் பொருத்தமானதுதான்.

மணப்பெண்ணுக்கான சடங்குகள் முடிந்ததும் அனுப்புவதாகச் சொன்ன அழைப்பை வெகு ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருந்தார் மாப்பிள்ளை, ஜெயவீரன்.

## அத்தியாயம் 3

இங்கே இப்படியிருக்கப் பெண் வீட்டில் நடக்கும் சடங்குகளைப் பார்ப்போம்.

மாப்பிள்ளையை ஜாகைக்கு அனுப்பிவிட்டு மணப்பெண்ணின் தாய் தன் கணவரை அழைத்துக்கொண்டு வீட்டுக்குள் போய் அவரிடத்தில் இரகசியமாகச் சிறிது நேரம் பேசினாள். மனைவி சொன்னதைக் கேட்ட கணவர் முகத்தில் மகிழ்ச்சி பொங்க ஆமோதித்துத் தலையை ஆட்டினார்.

அதன் பிறகு அவர்கள் இருவரும் முக்கியமான உறவுக்காரியான முருகேசனுடைய தாயுடன் சிறிது நேரம் பேசினார்கள். முருகேசனுடைய தாய் சொன்ன யோசனையின் மேல் மணப்பெண்ணின் தமையன் சுந்தரமூர்த்தியைக் கூப்பிட்டு அவனை எங்கோ அவசரமாக அனுப்பினார்கள்.



பிறகு பெண்ணின் பெற்றோர்கள் வீட்டிலிருந்து வேகமாக வெளியில் வந்து மணப்பந்தரில் அமைக்கப்பட்டிருந்த மணப் பலகையையும் மணப்பாயையும் வீட்டுக்குள் கொண்டுபோகச் செய்தார்கள். மணப்பந்தரில் இருந்தவர்கள், மாப்பிள்ளை விரும்பியபடி அங்கே நாற்காலிகள் போடப்போவதாக நினைத் தார்கள்.

வெகு விரைவில் மணவறையிலிருந்த மங்கலப் பொருள்களெல்லாம் வீட்டுக்குள் இடம் மாறின. புரோகிதப் பிராமணரும் வீட்டுக்குள் போனார். மேளக்காரர்களும் வீட்டுக்குள் போனார்கள்.

மணப்பெண்ணைச் சேர்ந்தவர்கள் அங்கும் இங்கும் ஓடி அதையும் இதையும் தூக்கிக்கொண்டு போய் வீட்டுக்குள் சேர்த்தார்கள்.

அலாவுதீன் அற்புத விளக்கினால் உண்டானது போல் அந்த வீட்டுக்குள்ளிருந்த கூடத்தில் ஒரு மணவறை வெகு சீக்கிரத்தில் உருவாயிற்று.

வீட்டின் தலைவாசல் தாழிடப்பட்டது.

நடப்பது என்னவென்று புரியாமல் அதையும் இதையும் வேடிக்கை பார்த்துக்கொண்டு நின்ற முருகேசன் மணமகனாக்கப்பட்டான். முக்கியமான சடங்குகள் மட்டும் வெகு துரித கதியில் நடந்தேறின. முகூர்த்த நேரத்தைக் கருதிச் சில சடங்குகள் தவிர்க்கப்பட்டன.

கெட்டி மேளம் முழங்கக் குறித்த முகூர்த்த நேரத்துக்குள் முருகேசன் தாமரைக்கண்ணியின் கழுத்தில் மூன்று முடிச்சு போட்டுத் தாலியைக் கட்டிவிட்டான்.

தலையைக் கவிழ்த்துக்கொண்டேயிருந்த தாமரைக் கண்ணிக்குத் தன் கழுத்தில் தாலி கட்டியது யாரென்பது தெரியாது. ஏனென்றால், அவள் முன்னே வீட்டுக்கு வெளியில் பந்தரில் அமைக்கப்பட்டிருந்த மணவறைக்கு அழைத்துச் செல்லப்பட்ட போது சந்தோஷமாகத்தான் இருந்தாள்; வீட்டு

வாயிலைத் தாண்டிச் சிறிது தூரம் போவதற்குள் அவளுடைய தாய் எதிரில் வந்து திரும்பி வீட்டுக்குள்ளேயே போய்விடும்படி உத்தரவிட்டதில் சிறிது கலவரம் அடைந்தாள்; வீட்டுக்குள் போய் ஓர் அறையில் அமர்ந்த பின், பக்கத்தில் இருந்தவர்கள் பேசிக்கொண்ட பேச்சுகளிலிருந்து மாப்பிள்ளை புரோகிதரை மிகவும் அவமதித்துப் பேசிப் பாரப்பனச் சடங்குகளுக்கு உட்பட மறுத்ததையும், தன் தந்தை சொன்ன சமாதானத்தை ஏளனம் செய்து முன்னோர்களை மூடப்பழக்கமுள்ளவர்கள் என்றதையும், அதன் பிறகு தன் தாயாருக்கும் மாப்பிள்ளைக்கும் நடந்த பேச்சுகளையும் அறிந்து மாப்பிளளையைப்பற்றி அருவருப்படைந்தாள்.

தன் மண வாழ்க்கையைப்பற்றி அவள் கற்பனை செய்திருந்த இன்பக் கனவுகள் கலைந்தன. இப்படிப்பட்ட முரடரோடு நடத்தும் வாழ்க்கை துன்பமுள்ளதாகத்தானே இருக்கும் என்ற ஏக்கம் உதித்தது.

தன் தாயார், பெண்ணுக்கு மட்டும் புரோகிதரைக் கொண்டு சடங்குகளை முடித்துக்கொள்வதாகவும், அவை முடிகிற வரைக்கும் மாப்பிள்ளை அவருடைய ஜாகையில் போய் இருக்கலாம் என்றும், அதன் பிறகு வரலாம் என்றும் சொன்னதாக அறிந்தவுடன் அந்த மாப்பிள்ளைக்கேதான் தன்னைக் கொடுக்கப்போகிறார்கள் என்ற விசனம் அவளைக் கவ்விக் கொண்டது. அந்த நிமிஷம் முதல் அவள் தன் தாய் தந்தையரைப் பார்க்கக்கூடத் தலை நிமிரவில்லை. கவிழ்ந்த தலையுடன் கண்கலங்கக் கவலையில் ஆழ்ந்துவிட்டாள்.

அதன் பிறகு வீட்டுக்குள் மணவறை தயார் செய்ய, வெளியே பந்தரில் இருந்த மங்கலப் பொருள்களை வீட்டுக்குள் கொண்டுவர ஆள்கள் உள்ளுக்கும் வெளிக்கும் ஓடிக்கொண்டிருந்தார்கள். அதை வேடிக்கை பார்க்க மணப்பெண்ணுடன் இருந்த தோழிப்பெண்கள் வீட்டுக்கு வெளியே போனார்கள். அவர்கள் திரும்பி மணப்பெண்ணிடம் வருவதற்கு முன் வீட்டின் தலைவாயிற்கதவு தாழிடப்பட்டுவிட்டது. அங்கே நடப்பது



என்னவென்று அறியாமல் தனியே அறைக்குள் தலைகுனிந்தபடி குமுறிக்கொண்டிருந்த மணப்பெண்ணை அவளுடைய தாய் முகூர்த்த நேரம் தாண்டிவிடுமே என்று அவசரமாக வந்து மணவறைக்கு இழுத்துக்கொண்டு போனபோது, அவள் தன் நினைவில்லாத எந்திரம் போலத்தான் தரையைப் பார்த்த வண்ணம் நடந்தாள்.

மணவறையில் நடந்த எதிலும் அவள் மனம் செல்லவில்லை. கெட்டி மேளம் முழங்கி அவள் கழுததில் தாலி கட்டிய போது அவள் கவலை நிறைந்த கனவுலகில்தான் இருந்தாள்.

முருகேசனுக்கும் தாமரைக்கண்ணிக்கும் திருமணம் முடிந்துவிட்டதில் மற்றெல்லாரிலும் அதிக மகிழ்ச்சியடைந்தவர் புரோகிதர் தான்.

* * *

மணப்பெண்ணுக்கான புரோகிதச் சடங்குகள் முடிந்தவுடன் தமக்கு அழைப்பு வரும் என்று வெகு ஆவலோடு காத்திருந்த பம்பாய் மாப்பிள்ளை ஜெயவீரன் நேரம் செல்லச் செல்ல இருப்புக்கொள்ளாமல் துடித்துக்கொண்டிருந்தார். அவருக்கு முன்னால் அவசரப்பட்டுக்கொண்டிருந்த அவருடைய தாய், "இன்னுமா பெண்ணுக்கான சடங்குகள் முடியவில்லை?" என்று கேட்டுக்கொண்டே மணவறைப் பந்தருக்கு வந்தாள்.

அவள் வரும்போது வீட்டுக்குள் கெட்டி மேளம் முழங்கிக் கொண்டிருந்தது. அந்த அம்மாள், முன்னே அங்கே பார்த்த மணவறை கலைந்திருந்தது. அதிலிருந்த மணப்பலகை, மணப்பாய் மற்ற மங்கலப் பொருள்களும் காணவில்லை. அந்த அம்மாளுக்கு ஐயமும் அச்சமும் உதித்துவிட்டன. கதவண்டை போனாள். கதவு தாழிடப்பட்டிருந்தது. "கதவை அடைத்துக்கொண்டா சடங்கு செய்கிறார்கள்?" என்று அங்கிருந்தவர்களைக் கேட்டாள்.

"என்ன செய்கிறார்களோ எங்களுக்கும் தெரியவில்லை" என்று பலர் பதில் சொன்னார்கள்.

அந்த அம்மாள் அங்கேயே நின்றுகொண்டிருந்தாள்.

சிறிது நேரத்தில் கதவைத் திறந்துகொண்டு புரோகிதர் வெளியில் வந்தார். அவரைக் கண்டதும் அந்த அம்மாள், "சடங்குகள் முடிந்துவிட்டனவா?" என்றாள்.

அந்த அம்மாள் பம்பாய் மாப்பிள்ளையின் தாய் என்று அடையாளம் தெரியாத புரோகிதர், "சடங்குகளா? மாங்கல்ய தாரணமும் ஆகி முகூர்த்தமே முடிந்துவிட்டது" என்றார்.

"மாங்கல்ய தாரணமா! தாலி கட்டுவதா? மாப்பிள்ளை ஜாகையில் இருக்க இங்கே யார் தாலி கட்டுவது?"

"பெண்ணைப் பெற்றவருக்குப் பம்பாய் மாப்பிள்ளைக்குப் பெண் கொடுக்கப் பிரியமில்லை. அவர்களுடைய சொந்தக்கார பையனுக்கே முகூர்த்தத்தை நடத்திவிட்டார்கள்" என்றார் புரோகிதர்.

"ஐயோ! இதென்ன அநியாயம்!" என்று அலறிப் புடைத்துக்கொண்டு அந்த அம்மாள் ஜாகைக்கு ஓடினாள்; அழுகையும் ஆத்திரமுமாக விஷயத்தை மகனிடம் சொன்னாள்.

கொதித்தெழுந்தான் ஜெயவீரன்.

"எனக்கு நிச்சயம் செய்யப்பட்ட பெண்ணுக்கு எந்த ராஸ்கல் தாலி கட்டுவது? அவனை நொறுக்கி எலும்புகளைக் கூடையில் வாரச் செய்துவிட்டு மறுவேலை பார்க்கிறேன்" என்று கர்ஜித்துக்கொண்டு புறப்பட்டான்.

அருகிலிருந்த அவனுடைய தந்தை அவனை வழிமறித்து, "அப்பா! பொறு. இன்னொருவன் தாலி கட்டிவிட்டான் என்ற பிறகு அந்தப் பெண் நமக்கெதற்கு?..........." என்றார்.

"அந்தத் தாலி திருட்டுத்தாலி. அது செல்லாது. அந்தப் பெண் எனக்கே உரியவள். அவளை விடமாட்டேன். யார்



தடுத்தாலும் சரி, என்ன நேர்ந்தாலும் சரி" என்று தகப்பனாரையும் தள்ளிக்கொண்டு அப்பாற்சென்றான்.

மகனுடைய மூர்க்கத்தனத்தை அறிந்திருந்த அவனுடைய தாய், விபரீதம் விளைந்துவிடுமென அஞ்சி அவன் பின்னால் ஓடி, அவன் கையைப் பிடித்துக்கொண்டு, "வேண்டாமடா சாமி! அந்தப் பெண் இனிமேல் நாய் வாய் வைத்துவிட்ட எச்சிலைக்குச் சமானம். விட்டுத் தள்ளு. இந்தப் பெண்ணில்லாவிட்டால் வேறு பெண்ணா கிடைக்காது? இதைவிட நல்ல பெண்ணை நான் தேடித் தருகிறேன்" என்று கெஞ்சினாள்.

தாயாருடைய பிடியையும் உதறித் தள்ளிவிட்டு அந்த ஜாகையின் முன்னால் வாழைமரம் கட்டுவதற்காகப் போடப்பட்டிருந்த சிறு பந்தரிலிருந்த ஒரு கனத்த கெட்டியான மூங்கிற் கழியை உருவிக்கொண்டு மண வீட்டை நோக்கி விரைந்தான். அவனுடைய பெற்றோர்களும் பின்னால் ஓடினார்கள்.

மண வீட்டுக்கு முன்னாலிருந்த பந்தருக்குள் நுழையும்போதே, "எனக்கு நிச்சயமான என் மணப்பெண்ணின் கழுத்தில் தாலி கட்ட என்னைக் காத்திருக்கச் சொல்லிவிட்டு எனக்கே உரிய அந்தப் பெண்ணின் கழுத்தில் திருட்டுத்தாலி கட்டிய ராஸ்கல் யாரடா? மரியாதையாக அந்தப் பெண்ணை என்னிடம் ஒப்படைத்தால் ஆச்சு. இல்லாவிட்டால் அவனையும் அவனுக்கு உடந்தையாயிருந்தவர்களையும் நான் சும்மா விடப்போவதில்லை. இதனால் என்னவானாலும் சரி" என்று கத்திக்கொண்டே நுழைந்தான்.

அப்போது ஒரு போலீஸ் சப்இன்ஸ்பெக்டர் அவனுக்கு முன்னால் தோன்றி, "என்ன ஸார்? என்ன கோபம்? விஷயத்தைச் சொல்லுங்கள், நான் விசாரிக்கிறேன்" என்றார். சப்இன்ஸ்பெக்டர் இப்படிக் கேட்டுக்கொண்டிருக்கும் போதே நான்கு போலீஸ் ஜவான்கள் சப்இன்ஸ்பெக்டருக்கருகில் வந்து நின்றார்கள். சப்இன்ஸ்பெக்டரையும் நான்கு ஜவான்களையும் கண்டவுடன் ஜெயவீரனுடைய வேகம் குறைந்துவிட்டது.

இந்த சப்இன்ஸ்பெக்டரும் ஜவான்களும் எதற்காக வந்தார்கள், எப்போது வந்தார்கள் என்ற கேள்விகள் வாசகர்களுடைய மனத்தில் எழலாம். அவற்றை இப்போதே விளக்கிவிடுவோம்.

மணப்பெண்ணின் தாய் பம்பாய் மாப்பிள்ளையை ஜாகைக்குப் போய் இருக்கும்படி அனுப்பிவிட்டு, மணவறைக்கு அழைத்துவரப்பட்ட மணப்பெண்ணையும் திருப்பி வீட்டுக்குள் போகச் சொல்லிவிட்டாளல்லவா? அதன் பிறகு தன் கணவரை வீட்டுக்குள் தனியே அழைத்துப் போய் அவருடன் ரகசியமாக, "பம்பாய் மாப்பிளளைக்குப் பெண்ணைக் கொடுத்தால் பின்னால் கசந்து துன்பப்படத்தான் நேரிடும். அதனால் இதே முகூர்த்தத்தில் முருகேசனுக்குக் கொடுத்துவிடலாம்" என்ற கருத்தைச் சொன்னாள். கணவரும் மகிழ்ச்சியுடன் ஆமோதித்துத் தலையை அசைத்தார்.

பிறகு மனைவியும் கணவரும் சேர்ந்து அதே கருத்தை முருகேசனுடைய தாயாரிடம் சொன்னார்கள். அந்த அம்மாளும் அதை மகிழ்ச்சியுடன் வரவேற்றார்கள். ஆனால், பம்பாய் மாப்பிள்ளை மிகவும் மூர்க்கனாகத் தெரிகிறபடியால் அவன் ரகளை செய்தாலும் செய்வான். அதனால் முதலில் பாதுகாப்பாகப் போலீஸ் உதவியைத் தேடிக்கொள்ள வேண்டும் என்று முருகேசனின் தாயும் ஆலோசனை சொன்னாள். அந்த ஆலோசனையின்படிதான் மணப்பெண்ணின் தமையன் சுந்தரமூர்த்தியைப் போலீஸ் கச்சேரிக்கு அனுப்பினது.

அவனுடைய வேண்டுகோளின்மேல் போலீஸ்காரர்கள் முருகேசன் மணப்பெண்ணுக்குத் தாலி கட்டும்போதே அங்கு வந்து மறைவில் இருந்துகொண்டிருந்தார்கள்.

இனிக் கதையைத் தொடர்வோம் :

சப்இன்ஸ்பெக்டர், "என்ன ஸார்? விஷயத்தைச் சொல்லுங்கள்; நான் விசாரிக்கிறேன்" என்று சொன்னதற்கு ஜெயவீரன், "என்ன ஸார், ஒருவனுக்கு நிச்சயம் பண்ணி, அவனுக்காக முகூர்த்தம் ஏற்பாடு செய்து, அந்த மாப்பிள்ளையை



வரவேற்று அவனைக் காத்திருக்கச் சொல்லிவிட்டு, அவனுக்குத் தெரியாமல் அதே முகூர்த்தத்தில் அந்தப் பெண்ணுக்கு வேறொருவன் தாலி கட்டுவதா? தாமரைக்கண்ணி என்ற இந்த வீட்டுப் பெண் அவளுடைய பெற்றோர்களால் எனக்கு மணம் முடிக்க நிச்சயம் செய்யப்பட்டவள். இந்த முகூர்த்தம் எனக்கென்று ஏற்பாடானது. இதற்கான செலவுகள் முழுவதும் என்னுடையது. அப்படியிருக்க, என் மனைவியாக வேண்டிய அந்தப் பெண்ணுக்கு எவனோ ஒருவன் தாலி கட்டினானாமே! ஸார்! எனக்கு சாமி, பூதம், சடங்கு, பாவம், புண்ணியம், மோட்சம், நரகம் என்று சொல்லி ஊரை ஏமாற்றுகின்ற பார்ப்பானுடைய பித்தலாட்டமெல்லாம் பிடிக்காது. பார்ப்பனீயத்தை ஒழிக்கவேண்டுமென்பது என் கொள்கை. அதற்காகப் பார்ப்பனப் புரோகிதம் வேண்டாம் என்றேன். 'உங்களுக்குப் பார்ப்பனச் சடங்குகள் வேண்டாவிட்டால் சரி, அதை நாங்கள் ஒத்துக்கொள்ளுகிறோம். எங்கள் பெண்ணுக்கு நடக்க வேண்டிய சடங்குகளை மட்டும் ஐயரைக்கொண்டு நடத்திவிடுகிறோம். அதுவரைக்கும் ஜாகையில் போய் இருங்கள்' என்று என்னை அனுப்பிவிட்டு இங்கே திருட்டுத்தனமாக வேறொருவனை தாலி கட்டச் செய்திருக்கிறார்களே! இந்த அயோக்கியத்தனமான மோசடியைச் சும்மா விட்டுவிடுவதா? மரியாதையாகப் பெண்ணை என்னிடம் ஒப்படைத்திடச் செய்யுங்கள்—இல்லாவிட்டால்......."

"பொறுங்கள் ஸார், பொறுங்கள், விசாரிப்போம்" என்றார் சப்இன்ஸ்பெக்டர்.

இந்தச் சமயத்தில் இதையெல்லாம் வீட்டுக் கதவுக்குப் பின்னால் நின்று கேட்டுக்கொண்டிருந்த பெண்ணின் தந்தை வெளியே வந்தார்.

அவரைக் கண்ட ஜெயவீரன், "இதோ வருகிறானே பெண்ணைப் பெற்ற யோக்கியன், விசாரியுங்கள். விசாரித்து மரியாதையாகப் பெண்ணை என்னிடம் ஒப்படைத்துவிடச்

சொல்லுங்கள். இல்லாவிட்டால்...." என்று கையிலிருந்த கழியை உயர்த்தினான்.

உடனே சப்இன்ஸ்பெக்டர், "விசாரிக்கலாம், பொறுங்கள் ஸார்" என்று சொல்லிக்கொண்டே அவன் கையிலிருந்த கழியை மெதுவாக வாங்கி ஒரு ஜவானிடம் கொடுத்துவிட்டுப் பெண்ணின் தந்தையைப் பார்த்து, "உங்கள் பெண்ணை இவருக்கு நிச்சயம் செய்துவிட்டு இவர் செலவிலேயே திருமண ஏற்பாடுகளையும் செய்துகொண்டு இவரையும் இங்கு வைத்துக் கொண்டே முகூர்த்த நேரத்தில் வேறொருவருக்குக் கொடுத்து விட்டீர்களாமே, இது சரியா?" என்றார்.

உடனே பெண்ணின் தந்தை, "இவர் சொன்னதை யெல்லாம் கேட்டுக்கொண்டுதானிருந்தேன். என் பெண் இவருக்குத்தான் நிச்சயம் பேசப்பட்டது. இவருடைய செலவில் தான் திருமண ஏற்பாடுகளெல்லாம் செய்யப்பட்டன. இந்த முகூர்த்தம் இவருக்காகத்தான் குறிக்கப்பட்டது அதை யெல்லாம் நாங்கள் மறுக்கவில்லை.

"பெண் பார்க்க இவர் வரவில்லை. இவருடைய தாயும் தந்தையுந்தான் வந்தார்கள். பெண்ணைப் பார்த்தவுடனேயே அவர்களுக்குப் பிடித்துவிட்டது. அவர்களுடைய நல்ல குணமும் இனிய பேச்சும் எங்களுக்கும் பிடித்துவிட்டது. அத்துடன் திருமணச் செலவுகளை அவர்களே ஏற்றுக்கொள்வதாக அவர்கள் சொன்னது ஒரு வரப்பிரசாதம்போல் இருந்தது. உடனே எங்கள் குடும்பப் புரோகிதரைக்கொண்டு நிச்சயதார்த் தம் செய்துகொண்டோம். அந்தப் பெற்றோரின் மகனாகிய இவரும் அவர்களைப்போல் குணவானாக இருப்பார் என்று எண்ணித்தான் பெண் கொடுக்க நிச்சயித்தது.

"நேற்றுதான் இவரும் இவரைச் சேர்ந்தவர்களும் இங்கு வந்தார்கள். மாப்பிள்ளை கண்ணுக்கினிய கட்டழகராக இருக் கிறார் என்று எல்லோரும் மகிழ்ந்தார்கள். ஆனால், வந்ததிலிருந்து இவருடைய போக்கு ஒரு தினுசாகவே இருந்தது. இவரை வரவேற்றவர்களுடன் இவர் சுமுகமாகப்



பேசவில்லை. அதை நாங்கள் குற்றமாகக் கருதவில்லை. வீட்டுக்குள் நுழையுமுன் பெண்கள் இவருக்கு ஆரத்தி யெடுக்க வந்தார்கள். அதைக் கொச்சையான வழக்கமென்று தடுத்துவிட்டார். அதையும் நாங்கள் பொருட்படுத்தவில்லை. பிறகு மாப்பிள்ளை அழைப்பு ஊர்வலம் ஏற்பாடு செய்திருந் தோம். அதை அநாகரிகமென்று தடுத்துவிட்டார். அதற்காகவும் வருத்தப்படவில்லை. இன்று காலையில் மாப்பிள்ளை மங்களஸ்நானம் செய்வதற்காக நலங்கு செய்ய அழைத்ததற்கு அதையும் கொச்சையென்று கூறிவிட்டு அவரே ஸ்நானம் செய்துகொண்டார். அதையும் நாங்கள் பொருட்படுத்தவில்லை. பிறகு முகூர்த்த வேஷ்டியை உடுத்திக்கொள்ள........."

குறுக்கிட்டு ஜெயவீரன், "உடை தரித்துக்கொள்வது என் பிரியப்படியா அல்லது பிறருடைய உத்தரவுப்படியா? மேலும்......."

உடனே சப்இன்ஸ்பெக்டர் அவனைத் தடுத்து, "பொறுங்கள் ஸார், அவர் சொல்லுவதை முழுக்கச் சொல்லி முடிக்கட்டும். அப்புறம் நீங்கள் சொல்ல வேண்டியதைச் சொல்லுங்கள்" என்றார்.

பெண்ணின் தந்தை தொடர்ந்து, "....முகூர்த்த வேஷ்டியை உடுத்திக்கொள்ளாமல் சூட்டும் ஷூவும் போட்டுக்கொண்டார். அதையும் நாங்கள் ஆட்சேபிக்கவில்லை. முகூர்த்தத்துக்கு முன்னால் நடக்க வேண்டிய சடங்குகளுக்காக மாப்பிள்ளை மணவறைக்கு அழைத்து வரப்பட்டார்.

"மாப்பிள்ளை மணவறையை நெருங்கி அங்கே அமர்ந் திருந்த பிராமணப் புரோகிதரைக் கண்டதும், 'பார்ப்பனப் புரோகிதமா?' என்று சீறினார். இவருடைய தாயும் தந்தையும், 'புரோகிதத்துடன் திருமணம் நடத்துவதுதான் நம்முடைய குலவழக்கம், அதனால் பாதகமில்லை. சுபகாரியம் தடங்கல் செய்ய வேண்டாம்' என்றார்கள். பெற்றோர்களையும் மதிக்காமல் இவர், 'பார்ப்பனீயத்துக்கு உட்பட மாட்டேன்' என்று இரைந்தார்.

"பிறகு நான் இவரிடம், 'இது நம்முடைய முன்னோர்கள் நெடுங்காலமாகப் பின்பற்றிவரும் வழக்கம்; தடை சொல்ல வேண்டா' மென்று கெஞ்சினேன். அதற்கு இவர், 'நம்முடைய முன்னோர்கள் எல்லாம் மூடப் பழக்கங்களைப் பின்பற்றிய வர்கள் என்றும், அந்த மூடப் பழக்கங்களுக்கெல்லாம் பார்ப்பான்தான் காரணம் என்றும், புரோகிதருக்குக் கொடுக்க வேண்டிய பணத்தை எவ்வளவானாலும் நானே தந்துவிடு கிறேன். அவரைப் போகச் சொல்லுங்கள்' என்றும் சொன்னார்.

"அதைக் கேட்ட புரோகிதர், 'ஓய் மாப்பிள்ளைவாள், ஏன் தெய்வச் சடங்குகளைத் தூஷித்து அபசாரம் செய்கிறீர். அது மஹா பாபம்' என்று மரியாதையாகச் சொன்னார். அதற்கு இவர் புரோகிதரைப் பார்த்து, 'பாவம் புண்ணியம் என்று சொல்லித்தானே ஊரை ஏமாற்றிப் பிடுங்கித் தின்கிறீர்கள்? ஏய் பாப்பான்! ஜாக்கிரதை. மரியாதை கெட்டுப்போகும்' என்று புரோகிதரை அடிக்கப் போய்விட்டார்.

"இதையெல்லாம் பார்த்தபின் இவருக்குப் பெண்ணைக் கொடுத்தால் எங்கள் பெண் காலமெல்லாம் கண்ணீர் விட்டுக் கொண்டுதான் இருக்க நேரிடும் என்று கண்டுவிட்டோம். இவரே இப்போது உங்களிடம் சொன்னார். சாமி, பூதம், சடங்கு, பாவம், புண்ணியம் என்பவற்றில் இவருக்கு நம்பிக்கை யில்லை என்று. ஆனால், நாங்கள் அவற்றையெல்லாம் நம்புகிறவர்கள்.

"அதனால் இவர் கொள்கைகளுக்கும் முரட்டுத்தனத்துக் கும் எங்களுக்கும் சரிப்பட்டு வராது என்று தீர்மானித்து எங்கள் சொந்தக்காரப் பையனுக்கே எங்கள் பெண்ணை மணமுடித்துவிட்டோம். திருமணச் செலவுக்கு இவர் கொடுத்த பணத்தை ஒரு பைசா குறையாமல் தந்துவிடுகிறோம்......."

"தந்திடுவிங்க .... தந்திடுவிங்க .... நானும் உங்களைச் சும்மா விட்டுட்டுப் போய்விடுவேன்? அட மோசக்காரப் பயலே!...." என்று கத்திக்கொண்டு ஜெயவீரன் பெண்ணின் தந்தைமீது பாய்ந்தான்.



அதற்குள் தயாராக இருந்த சப்இன்ஸ்பெக்டரும் ஜவான்களும் அவனைப் பிடித்துக்கொண்டார்கள்.

அவனுடைய பெற்றோர்களும் போலீஸ்காரர்களும் சேர்ந்து ஜெயவீரனை மெதுவாக ஜாகைக்குத் தள்ளிக்கொண்டு போனார்கள். திமிறிக்கொண்டும் உறுமிக்கொண்டும் திட்டிக் கொண்டும் ஜாகைக்குப் போய்ச்சேர்ந்தான். அவ்வளவு அழகான பெண்ணை மணந்துகொள்ளப் போகிறோம் என்று அவன் மனத்தில் கட்டிய இன்பக்கோட்டை இடிந்துவிட்டதனால் வெடித் தெழுந்த வெறி குறைந்து கொதிப்படங்க வெகு நேரமாயிற்று.

சற்று அமைதி கண்டதும் சப்இன்ஸ்பெக்டர் ஜெய வீரனைப் பார்த்து, "உங்களுக்குத் தெரியாத நியாயமா? பெற்றவர்கள் இஷ்டப்படாத ஒருவருக்குப் பெண்ணைக் கொடுக்கும்படி கட்டாயப்படுத்த நியாயமும் இல்லை, சட்டமும் இல்லை. நிச்சயம் செய்திருந்தாலும் அந்த நிச்சயத்தை மாற்றிக்கொள்ள இரு தரத்தாருக்கும் உரிமையுண்டு. வெறும் வாய்ப்பேச்சாக நிச்சயம் செய்யப்பட்ட மாப்பிள்ளைக்குக் கொடுக்க மறுத்தாலும் வாதாடி நியாயம் பேசிச் சம்மதிக்கச் செய்ய முயலலாம். வேறொருவன் அந்தப் பெண்ணுக்குத் தாலியே கட்டி முடிந்த பிற்பாடு அந்தப் பெண்ணை நினைப்பது உங்களுக்கே நல்லதல்ல" என்றார்.

"ஆமாம் சாமி, அதைச் சொல்லுங்க ஐயா. இந்தப் பெண்ணில்லாவிட்டால் இன்னொரு பெண் கிடைக்காமலா போகும்?" என்றாள் ஜெயவீரனின் தாய்.

ஜெயவீரன் ஓய்ந்துவிட்ட புயல் போல ஊமையாகி விட்டான்.

சப்இன்ஸ்பெக்டர் மணவீட்டுக்குப் போய்ப் பெண்ணின் பெற்றோர்களுடன் கலந்து பேசினார். திருமணச் செலவுக்காக ஜெயவீரன் கொடுத்த தொகையுடன் அவன் பம்பாயிலிருந்து வந்து போகும் பிரயாணச் செலவையும் அவனுடைய பெற்றோர்கள் வந்து போகும் பிரயாணச் செலவையும் சேர்த்துக் கொடுத்துவிடுவது என்று தீர்மானிக்கப்பட்டது.

அப்போதே தாமரைக்கண்ணியின் தந்தையும் முருகேசனுடைய தாயாரும் ஒரு வட்டிக் கடையில் கடன் வாங்கி சப்இன்ஸ்பெக்டர் மூலமாகவே ஜெயவீரனுக்குக் கணக்கு விவரத்துடன் பணம் சேர்ப்பிக்கப்பட்டது.

அன்று இராத்திரி ரயிலிலேயே ஜெயவீரனும் அவனைச் சேர்ந்தவர்களும் போய்விட்டார்கள்.

## அத்தியாயம் 4

இப்படியாக, முதல் அத்தியாயத்தில் கல்யாண வீட்டிலிருந்து காணாமற்போய்விட்ட மணப்பெண்ணாகிய ஜானகியின் தாயாகிய தாமரைக்கண்ணிக்கும் தந்தையாகிய முருகேசனுக்கும் திருமணம் எதிர்பாராத விதத்தில் திடீரென்று நடந்தேறியது.

இனி, முருகேசனும் தாமரைக்கண்ணியும் நடத்திய குடும்ப வாழ்க்கையையும், ஜானகியின் பிறப்பு வளர்ப்பையும், அவள் ஏன் கல்யாண வீட்டிலிருந்து காணாமற்போனாள், எப்படி யாருக்கும் தெரியாமல் போக முடிந்தது என்பனவற்றையும் பார்ப்போம்:

தன் கழுத்தில் தாலி சட்டியது பம்பாய் மாப்பிள்ளைதான் என்றே தலையைக் கவிழ்ந்தபடியே கண்ணீர் விட்டுக்கொண்டிருந்தாள், தாமரைக்கண்ணி.

தாலி கட்டியபின் பெண்ணும் பிள்ளையும் மணவறையைச் சுற்றி வந்து, அம்மி மிதித்து அருந்ததியைப் பார்க்கும் சடங்கு ஒன்று உண்டல்லவா? அப்போது யாரோ உரத்த குரலில், 'முருகேசா, உன் பெண்டாட்டியின் வலப்பாதத்தை உன் வலக் கையால் பிடித்துத் தூக்கி அம்மியின்மேல் வை' என்று கத்தினார்கள். அதைக் கேட்ட தாமரைக்கண்ணி, அதுவரைக்கும் யாருடைய முகத்தையும் பார்க்க விரும்பாமல் தலையைக் குனிந்துகொண்டிருந்தவள், தன் பாதத்தைப் பிடிக்கக் குனிந்த



மணமகனுடைய முகத்தைக் கூர்ந்து பார்த்தாள். ஆம்; அது தன் உறவுக்கார அத்தான் முருகேசன்தான் என்பதை அறிந்தவுடனே அவளுடைய அழுகைக் கண்ணீர் ஆனந்தக் கண்ணீராக மாறிவிட்டது.

அந்த ஆனந்தத்துக்குக் காரணம், பம்பாய் மாப்பிள்ளைக்கு வாழ்க்கைப்பட்டுப் படுகுழியில் விழாமல் தப்பித்துக்கொண்டதற்காக மட்டுமல்ல, முருகேசன் விரும்பத்தக்க அழகும் குணமும் அமைந்தவனாக இருப்பதும் சேர்ந்ததால்தான். முருகேசனும் அவன் தாயும் நான்கு நாள்களுக்கு முன்னாலேயே வந்துவிட்டவர்களானதால் தாமரைக்கண்ணி உறவுக்கார அத்தானுடைய நற்குணத்தை ஓரளவு அறிந்துகொள்ள முடிந்தது. அவனுடைய அழகு அவனைக் கண்ட போதே கண்ணைக் கவர்ந்ததுதான்.

தாலி கட்டும் முகூர்த்தம் முடிந்துவிட்டது. அதன் பின் தம்பதிகள் இல்வாழ்க்கை நடத்துவதற்கான இன்னொரு முகூர்த்தத்தைப்பற்றிப் பெண்ணின் பெற்றோர்களும் முருகேசனுடைய தாயும் கலந்து பேசினார்கள்.

முருகேசனுடைய தாயாருக்கு அந்த முகூர்த்தத்தைக் குறைந்தது ஒரு வருடமாவது செனற பின்தான் நடத்த வேண்டும் என்பது கருத்து.

முருகேசனுடைய வயது பத்தொன்பது. தாமரைக்கண்ணியின் வயதும் அதேதான். மணப்பெண்ணின் வயதைவிடக் குறைந்த பட்சம் ஐந்து வயதாவது மணமகனுடைய வயது அதிகமாக இருக்க வேண்டும் என்பதுதான் விரும்பத்தக்கதென்று சொல்லுவார்கள். சுகாதார நிபுணர்கள் இன்னும் அதிக வித்தியாசம் இருப்பது நல்லதென்பார்கள்.

ஆனால், முருகேசனுக்கும தாமரைக்கண்ணிக்கும் முடிந்த விவாகம் பொருத்தங்களை ஆராய்ந்து நடந்ததன்று. 'திருமணங்கள் தெய்வத்தால் நிச்சயிக்கப்படுகின்றன' என்ற முதுரையை மெய்ப்பித்ததுபோல் திடீரென்று நடந்தேறிவிட்டது.

"பத்தொன்பது வயதில் இல்வாழ்க்கைக்கு வேண்டிய முதிர்ச்சியைப் பெண்மை அடைந்துவிடுகிறது. ஆனால், அதே வயதில் ஆண்மை அவ்வளவு முதிர்ச்சியை அடைவதில்லை. பத்தொன்பது வயது பெண்ணைக் கனி எனலாம். ஆனால் அதே வயதுள்ள ஆணைக் காய் என்றுதான் சொல்ல வேண்டும்" என்றாள் முருகேசனின் தாய். அத்துடன் முருகேசன் அழகும் ஆரோக்கியமும் உள்ளவன்தான் என்றாலும் தாமரைக் கண்ணியைப்போல் திடகாத்திரமுள்ளவனாக அப்போது இருக்கவில்லை. அதனால் சாந்தி முகூர்த்தத்தை ஒரு வருடத்துக்காவது தள்ளி வைக்க வேண்டுமென்று அவனுடைய தாய் தீர்மானித்தாள்.

அந்த ஒரு வருடம் பல்வேறு காரணங்களால் இரண்டு வருடங்களாக நீண்டுவிட்டது. முக்கிய காரணம், திருமணத்துக்கு அடுத்த வருஷம் முருகேசனின் தாயார் மிகவும் அசௌக்கியமடைந்து பல யாதங்கள் படுக்கையில் இருந்துவிட்டதுதான்.

தாமரைக்கண்ணியின் பெற்றோர்கள் வசிக்கும் இடம் திருநெல்வேலி. அங்கேதான் திருமணம் நடந்தது. முருகேசன் வசிப்பது சென்னையில். திருமணத்துக்குப் பின் முருகேசனும் அவனுடைய தாயும் மணப்பெண்ணும் அவளுடைய பெற்றோரும் சென்னைக்கு வந்தார்கள். சில நாள்கள் தங்கிவிட்டுப் பெண்ணை அழைத்துக்கொண்டு பெற்றோர்கள் திருநெல்வேலிக்குப் போய்விட்டார்கள்.

பிறகு முருகேசனுடைய தாய் அசௌக்கியமாக இருந்தபோது தாமரைக்கண்ணியின் பெற்றோர்கள் மட்டும் வந்து போனார்கள்.

இப்போது தாமரைக்கண்ணியைக் கணவன் வீட்டில் கொண்டுவிட அவளுடைய தமயன் சுந்தரமூர்த்தியும் அவனுடைய மனைவி சந்திராவும் அவர்களுடைய மூன்று வயது மகன் நெல்லையப்பனும் தாமரைக்கண்ணியுடன் சென்னைக்கு வந்தார்கள். தாமரைக்கண்ணியின் தந்தைக்கு உடல் நலம்



குறைவாக இருந்ததால் தாயும் வரவில்லை. அத்துடன் சுந்தரமூர்த்தி நாலாவது பாரம் வரையிலுந்தான் படித்தவன். அவனுக்கு ஒரு வேலையும் கிடைக்கவில்லை. சொந்தத் தொழிலோ வியாபாரமோ நடத்தப் பணவசதியில்லை. அதனால் சென்னையில் மைத்துனன் முருகேசனுடன் சேர்ந்து ஏதாவது தொழில் நடத்தலாம் என்று எண்ணியே அவன் சென்னைக்கு வர விரும்பினான். அதனால் அவனையே அவனுடைய குடும்பத்துடன் தாமரைக்கண்ணிக்குத் துணையாக அனுப்பினார்கள்.

சென்னைக்கு வந்த சுந்தரமூர்த்தியும் மனைவியும் மகனும் அங்கேயே தங்கிவிட்டார்கள். அதுவரையிலும் குத்தகைக்கு விடப்பட்டு வந்த முருகேசனுடைய நன்செய் நிலங்களில் சொந்த சாகுபடி செய்யும் தொழிலைச் சுந்தரமூர்த்தி மேற்கொண்டான்.

முருகேசனும் தாமரைக்கண்ணியும் இல்வாழ்க்கை தொடங்கியபோது அவர்கள் இருவருக்கும் வயது இருபத்திரண்டு.

திருமணம் நடந்து இரண்டு ஆண்டுகள் ஆகியும் முருகேசனும் தாமரைக்கண்ணியும் கணவன் மனைவி என்ற முறையில் நெருங்கி நின்று நேருக்கு நேராகப் பேசிக் களிக்கவும் வாய்ப்புக் கிடைக்கவில்லை. மிகவும் பழங்கால மனப்பான்மையுடைய முருகேசனின் தாய் சாந்திக் கல்யாணம் நடக்கிறவரையில் மகனும் மருமகளும் நெருங்கிப் பழக இடமில்லாதபடி அதை வாயால் சொல்லாமலேயே—காரியங்களைக் கண்காணித்துவிட்டாள். கல்யாண வீட்டில் இருந்த கூட்டத்தில் முருகேசனும் தாமரைக்கண்ணியும் ஏகாந்தத்தில் சந்திக்க இடமில்லை. திருமணத்துக்குப் பின் எல்லாரும் சென்னைக்கு வந்தபோது முருகேசனின் தாய் மருமகளைத் தன் அருகிலேயே வைத்துக்கொண்டிருந்து பெற்றோர்களுடன் அனுப்பிவிட்டாள்.

முரட்டுத்தனமுடைய ஜெயவீரனுக்கு வாழ்க்கைப்படாமல் குணமும் அழகுமுள்ள உறவுக்கார அத்தானை மணந்துகொண்ட ஆனந்தத்தில் கணவனோடு கொஞ்சி மகிழத் துடித்துக்கொண்டிருந்தாள் தாமரைக்கண்ணி.

கல்யாணத்துக்கு முன்னால் தாமரைக்கண்ணியைக் கண்ட போதே அவளுடைய அழகு முருகேசனுடைய உள்ளத்தைக் கவர்ந்தது. ஆனால், அவள் வேறொருவனுக்கு மனைவியாகப் போகிறவள் என்ற எண்ணத்தோடுதான் அந்த அழகை மாந்தினான். பிறகு, அவள் தனக்கே மனைவியானதில் பேரானந்தப் பித்தனாகிவிட்ட அவனும் தாமரைக்கண்ணியைப் போலவே கொஞ்சி மகிழத் துடித்துக்கொண்டிருந்தான்.

அவனுடைய தாயாருடைய மதிப்பில் அவன் பத்தொன்பது வயது பாலகனாக இருந்தாலும் அப்போதே அவன் பருவ உணர்ச்சிகள் ஊறிவிட்ட ஆண்பிள்ளைதான். அதனால் எதிர்பாராமல் கிடைத்த அழகு மனைவியுடன் கொஞ்சிக் குலவத் துடித்துக்கொண்டிருந்தான்; ஆனால், எப்போதும் தாய்க்கு அடங்கிய மகனானதால், தன் ஆசையை அடக்கிக் கொண்டிருந்தான்.

அப்படிப்பட்ட தாமரைக்கண்ணியும் முருகேசனும் இல்லறம் நடத்தத் தொடங்கியபோது அடைந்த இன்பத்தை அளவிட முடியுமா?

அவர்களுடைய இல்வாழ்க்கையின் முதல் இரவில் முருகேசன் மஞ்சத்தின்மீது உட்கார்ந்துகொணடிருந்தான். அறைக்குள் வந்த தாமரைக்கண்ணி பெண்மைக்கு இயல்பான அடக்கத்துடன் நாணத்தோடு அருகில் வந்து தலைகுனிந்து நின்றாள்.

அவள் ஜெயவீரனை மணந்துகொள்ளாமல் தன்னை மணந்துகொண்டதில் எவ்வளவு மகிழ்ச்சியடைந்திருக்கிறாள் என்பது முருகேசனுக்கு ஓரளவு தெரிந்ததுதான். ஆனாலும் முழுதும் அவளுடைய வாய்மொழியாக அறிய வேண்டுமென்ற ஆசையால் அவளைக் கேலி செய்வதுபோல, "தாமரை! நீ கை நிறைய சம்பளம் வாங்கக்கூடிய பெரிய உத்தியோகஸ்தரை மணந்துகொண்டு பம்பாயில் சுகமாக இருக்க வேண்டியவள். என்னை மணந்துகொண்டதில்...." என்று சொல்லி முடிக்கு முன், "ஐயோ! அத்தான்! அப்படியெல்லாம் பேச வேண்டாம்" என்று சொல்லித் தன் வலக்கையால் கணவனுடைய வாயைப் பொத்திக்கொண்டே அவனுடைய தோள்மீது சாய்ந்து விட்டாள் தாமரைக்கண்ணி.



உடல் புளகாங்கிதம் அடைந்து உள்ளம் பூரித்து மகிழ்ச்சியால் மயங்கிவிட்டான் முருகேசன். சிறிது நேரம் மௌனம் நிலவியது

கணவன்மீது சாய்ந்திருந்த தாமரைக்கண்ணி விலகி அவனெதிரில் அமர்ந்து, "அத்தான், தயவு செய்து இனியும் அதை நினைப்பூட்ட வேண்டா. அதை நினைத்தாலே என் மனம் நடுங்குகின்றது. எந்தத் தெய்வத்தின் கருணையோ அந்த நரகவேதனைக்குள் சிக்கிக்கொள்ள இருந்த என்னைக் காத்து உங்களை மணந்துகொள்ளும் பெரும்பாக்கியத்தை அடையச் செய்தது. அந்தத் தெய்வத்துக்கு நன்றி செலுத்தி வணங்கிக்கொண்டிருக்கிறேன்" என்றாள்.

"அதென்ன 'நரகவேதனை' என்று சொல்லுகிறாய்?"

"தெய்வ நம்பிக்கையும் பாவ புண்ணியங்களில் பயபக்தியும் துளிகூட இல்லாத ஒருவருக்கு மனைவியாக வாழ்க்கை நடத்துவது நரகவேதனையாக அல்லாமல் வேறு என்னவாக இருக்க முடியும்?" என்றாள் தாமரைக்கண்ணி.

மனைவியின் வாயைக் கிண்டி மேலும் அவளுடைய அந்தரங்கத்தை அறிய வேண்டுமென்ற ஆசை தூண்ட, "அந்தப் பம்பாய் மாப்பிள்ளை பார்ப்பனப் புரோகிதத்தைத்தானே வேண்டாம் என்றார். அதனாலென்ன?"

"ஐயோ, அத்தான்! அதென்ன அப்படிச் சொல்லி விட்டீர்கள்? அவர் பார்ப்பனப் புரோகிதத்தைமட்டுமா வேண்டா மென்றார்? 'சாமி, பூதம், பாவம், புண்ணியம், நரகம், மோட்சம் என்ற பித்தலாட்டங்களைப் பேசித்தானே பார்ப்பனர்கள் ஊரை ஏமாற்றித் தின்கிறார்கள்' என்று சொன்னராமே, அது உங்களுக்குத் தெரியாதா? பார்ப்பானுடைய பித்தலாட்டத்தில்

ஏமாந்து போயா நாம் சாமி கும்பிடுகிறோம்? பாவம் செய்யப் பயப்படுகிறோம்? புண்ணியம் செய்ய விரும்புகிறோம்?''

அதைக் கேட்ட முருகேசன் மகிழ்ச்சிப் பெருக்கால் மனைவியின் கையைப் பிடித்துக் குலுக்கி, ''நீ பத்தாவது வகுப்பு வரையிலுங்கூடப் படிக்கவில்லையே. உனக்கு எப்படித் தெய்வ பக்தியைப்பற்றியும் பாவ புண்ணியத்தைப் பற்றியும் இவ்வளவு அறிவு வந்தது ?'' என்றான் கணவன்.

''பாவ புண்ணியத்தைப்பற்றியும் தெய்வ பக்தியைப் பற்றியும் பள்ளிக்கூடத்துக்குப் போயா படிக்க வேண்டும்? அங்கேயா அதைச் சொல்லிக் கொடுக்கிறார்கள்? நான் அதிகம் படிக்காதவளாக இருப்பதனால்தானோ என்னவோ எனக்குத் தெய்வ பக்தியிலும் பாவபுண்ணியத்திலும் நம்பிக்கை இருக்கிறது. ஏனென்றால், தெய்வ பக்தியை அவமதிக்கிறவர்களும் பாவ புண்ணியப் பேச்சுகளைப் பரிகசிப்பவர்களும் அதிகம் படித்துப் பட்டம் பெற்றவர்களாகத்தான் இருக்கிறார்கள்'' என்றாள் மனைவி.

அதுவரையிலும் தாமரைக்கண்ணியின் அழகைத் தவிர அவளுடைய அறிவை அளக்க வாய்ப்பில்லாதிருந்த முருகேசன், இப்போது அவளுடைய மிக நல்ல அறிவையும் கண்டுவிட்ட ஆனந்தத்தால் அவளை இழுத்துத் தன் மார்போடு அணைத்துக் கொண்டு, ''ஆமாம், தாமரை! நீ சொல்வது மிகவும் உண்மை தான். படிப்பிற்குறைந்த பாமர மக்கள் தாம் படித்தவர்களைக் காட்டிலும் தெய்வ பயமுள்ளவர்களாக இருக்கிறார்கள். அத்துடன் தெய்வ பக்தியும் பாவ புண்ணியப் பாகுபாடும் வெறும் பள்ளிப்படிப்பால் உண்டாகக்கூடியவையல்ல என்று நீ சொன்னதும் சரியே. உன் புத்திக்கூர்மையை மெச்சுகிறேன். என்னை மணந்துகொண்டதை பெரும் பாக்கியம் என்று நீ மகிழ்வதைப் போல நீ எனக்கு மனைவியாகக் கிடைத்ததைப் பெரும் பாக்கியம் என்று நான் மகிழ்ச்சியடைகிறேன்'' என்றான் முருகேசன்.

''இருந்தாலும் எனக்குக் கிடைத்த பாக்கியத்துக்கு ஈடாகாது உங்களுக்குக் கிடைத்தது.''

''ஏன் ?''



''ஏனா ? என் பெற்றோர்கள் என்னைத் துன்பக்கடலில் தள்ளப் போகிறார்களே என்று நான் நடுங்கிக்கொண்டிருந்த சமயத்தில் அந்த நடுக்கம் நீங்கி உங்களை மணந்துகொண்ட பாக்கியம் கிடைத்தது. எனக்குப் பெரிய துன்பம் நீங்கிய பாக்கியம் ஒன்று; அத்துடன் மிகவும் விரும்பத்தகுந்த நீங்கள் எனக்கு மாலை சூட்டிய பாக்கியம் மற்றொன்று. ஆகையால், எனக்குக் கிடைத்த பாக்கியம் உங்களுக்குக் கிடைத்ததைவிட இரட்டிப்பானது இல்லையா ?'' என்றாள் தாமரைக்கண்ணி.

''பலே! பலே! பலே! உனக்குக் கிடைத்த பாக்கியம் மட்டு மல்ல, உன்னுடைய சாதுர்யமான பேச்சுத் திறமையுங்கூட எனக்குள்ளதைவிட அதிகமாகத்தான் இருக்கிறது'' என்று சொல்லிக்கொண்டே அவளுடைய முகத்தை நிமிர்த்தி நெற்றியிலும் கன்னங்களிலும் உதட்டிலும் முத்தங்களை மழையாகப் பொழிந்துவிட்டான்.

இப்படியாக மாற்றுக்குறையாத அன்புடன் தாமரைக் கண்ணியும் முருகேசனும் மனமொத்த தம்பதிகளாக இன்பம் நிறைந்த இல்வாழ்க்கை நடத்தினார்கள்.

இரண்டாவது ஆண்டின் ஆரம்பத்தில் தாமரைக்கண்ணி கருவுற்றாள். அதை அறிந்த அவளுடைய மாமியாரும் கணவனும் அவளை முன்னிலும் அதிகமாகச் சீராட்டினார்கள். சிறிய வேலைகளையுங்கூட அவளைச் செய்யவிடாமல் அவளுடைய மாமியாரும் அண்ணன் மனைவி சந்திராவுமே எல்லா வேலைகளையும் கவனித்துக்கொண்டார்கள்.

பூ முடித்தல், வளைகாப்பு, சீமந்தம் முதலிய எல்லாக் கொண்டாட்டங்களும் சென்னையிலேயே சிறப்பாக நடந்தன. முதல் பிரசவம் தாய் வீட்டில் நிகழ வேண்டும் என்பதுதான் வழக்கம் ஆனால், மருமகளை விட்டுப் பிரிய மனமில்லாத மாமியாரின் விருப்பத்தினால், வைத்திய வசதிகள் சென்னையில் அதிகம் என்ற காரணத்தைச்சொல்லிச் சென்னையிலேயே பிரசவம் பார்த்துக்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டது வெளியில் சொல்லப்பட்ட காரணம் எதுவானாலும் திருநெல்வேலியில்

தாமரைக்கண்ணியின் பெற்றோர்களுடைய பொருளாதார வசதி போதாது என்பதுதான் தாமரைக்கண்ணியின் மாமியி னுடைய கருத்திலுள்ள காரணம்.

ஒரு பெண்ணுக்குப் பிரசவ காலம் என்றால் அது அவளுக்கு ஒரு கண்டம் போன்றது. அதனாலேயே பிரசவிக்கப் போகிற ஒரு பெண்ணைப்பற்றி மற்ற பெண்கள் பேசும் போது, 'அவள் பெற்றுப் பிழைக்க வேண்டும்' என்று சொல்வது வழக்கம்.

தாமரைக்கண்ணியின் மாமியார் தன்னுடைய மரு மகளுக்குச் சுகப்பிரசவம் சித்திக்க வேண்டுமென்று அதற் கான மணிமந்திர, ஔஷத முயற்சிகள் எல்லாவற்றையும் குறைவறச் செய்து வந்தாள்.

பத்தாவது மாதம் வரையிலும் வழக்கமாகக் கர்ப்பிணி களுக்குள்ள மசக்கைகள்கூட மிகக் குறைவாக இருந்த தாமரைக்கண்ணிக்குப் பிரசவ காலம் நெருங்க நெருங்க பலவீனம் அதிகப்பட்டது.

அதனால் எச்சரிக்கையாகப் பிரசவத்திற்குப் பல நாள்கள் முன்னாலேயே பிரசவத்திற்கான மருத்துவமனையில் சேர்க்கப் பட்டாள்.

பிரசவ வேதனை ஆரம்பித்து மூன்று நாள்கள துடியாய்த் துடித்தும் குழந்தை வெளியாகவில்லை. உயிருக்கு அபாயம் உண்டாகிவிடுமெனப் பயந்து டாக்டர்கள் வயிற்றைக் கீறிக் குழந்தையை எடுத்துவிட எண்ணினார்கள். பிறகு ஆயுதத்தைக்கொண்டு குழந்தையை இழுத்துவிடலா மென்றும், இழுத்து உயிரோடு எடுக்க முடியாவிட்டால் துண்டு துண்டாக வெட்டியெடுத்தாவது தாயின் உயிரைக் காப் பாற்ற வேண்டும் என்றும் எண்ணப்பட்டது.

ஐரோப்பாவுக்கும் அமெரிக்காவுக்கும் சென்று மருத்து வத்தில் மிகச்சிறந்த பயிற்சி பெற்று வந்துள்ள கைதேர்ந்த நிபுணராகிய பெரிய லேடி டாக்டர் ஆயுதப் பிரயோகம் செய்யத் தயார் செய்துகொண்டிருக்கையில் விஞ்ஞான அறிவுகளுக்கும்



எட்டாத ஏதோ ஒரு சக்தியினால் திடீரென்று ஒரு திருப்பம் ஏற்பட்டுச் சிசு வெளிவரக்கூடிய சிரோதயக் குறிகள் காணப் பட்டன.

அதைக் கண்ட டாக்டர் அம்மாளின் பொறுமையினாலும் திறமையினாலும் சிசு சேதமில்லாமல் வெளியாக்கப்பட்டது.

அப்படிப் பிறந்த பெண் குழந்தைதான் கலியாண வீட்டிலிருந்து காணாமற்போன மணப்பெண் ஜானகி.

தாமரைக்கண்ணியே ஆசை மூட்டும் மிக நல்ல அழகி. அவளுடைய குழந்தை அவளைவிடப் பலமடங்கு அழகுடைய தாக இருந்தது. குழந்தை ஒரு குறையுமின்றி ஆரோக்கிய முள்ளதாகத்தான் இருந்தது. ஆனால், தாய்க்கு அந்தப் பிரசவத்தால் ஏற்பட்ட அசாதாரண வேதனையால் காய்ச்சல் வந்து ஜன்னி கண்டுவிட்டது. பல நாள்கள் பிரக்ஞை இல்லாமல் கிடந்து பெரிய டாக்டர் அம்மாளின் திறமை மிக்க சிகிச்சையால் தப்பிப் பிழைத்தாள்.

பிரசவத்துக்குப்பின் ஏறத்தாழ இரண்டு மாத காலம் தாமரைக்கண்ணி ஆஸ்பத்திரியிலேயே படுத்திருக்க வேண்டிய தாகிவிட்டது. மருத்துவமனையிலிருந்து வீட்டுக்கு வரும் போது அவள் ஆரோக்கியம் அடைந்தவளாக இருக்கவில்லை. வீட்டுக்கு அனுப்பும்போது லேடி டாக்டர், தாமரைக்கண்ணி மறு படியும் கருவுற்றால் நிச்சயம் உயிருக்கு அபாயம் நேரும் என்று எச்சரித்து அனுப்பினாள்.

வீட்டுக்கு வந்தபின் மேலும் ஆரோக்கியம் குறைந்து நோயாளியாகவே இருக்க நேர்ந்துவிட்டது. ஏராளமான மிகச் சிறந்த நிபுணர்களைக்கொண்டு வைத்தியம் செய்தும் நாளுக்குநாள் மெலிந்து மிக்க பலவீனம் அடைந்துவிட்டாள்.

கைதேர்ந்த கலைஞன் தன்னுடைய திறமையெல்லாம் கூட்டிச் செதுக்கிய சிற்பம்போல் உருண்டு திரண்டிருந்த அவளுடைய உடற்கட்டும் முகப்பொலிவும் உருக்குலைந்து போயின.

முருகேசன் இரவு பகலாக மனைவியின் அருகிலேயே இருந்து வேளாவேளைக்கு மருந்து கொடுப்பதும், கஞ்சி குடிக்கச் செய்வதுமாக எல்லாப் பணிவிடைகளையும் செய்து கண்ணும் கருத்துமாகக் காத்து வந்தான்.

முருகேசனுடைய தாயாருக்கு மருமகளுடைய அசௌக்கியத்தைப்பற்றிய கவலை ஒருபுறம இருந்தாலும் அழகான பேத்தியை வளரப்பதில் தன் கவனத்தையெல்லாம் செலுத்திக் கொண்டிருந்ததால், முருகேசனைப்போல் எந்நேரமும் கவலைப் பட்டுக்கொண்டிருக்கவில்லை.

குழந்தை பிறந்ததிலிருந்து அது தாய்ப்பாலை அருந்தவில்லை. ஆனாலும், பாட்டியினுடைய பராமரிப்பில் மிகவும் செழிப்பாக வளர்ந்து வந்தது. பெரும்பாலும் அது பாட்டியின் மடியில்தான் இருக்கும். சில சமயங்களில் அதைத் தாமரைக் கண்ணியின் அண்ணன் மனைவி சந்திரா எடுத்துக் கொஞ்சித் தாலாட்டித் தூங்க வைப்பாள்.

நோயாளியான தாமரைக்கண்ணியும் தாய்ப்பாசத்தின் ஆசையால் மகளைத் தன் மடியில் விடச்சொல்லிக் கேட்பாள். ஆனால், அவளுடைய மாமியார் குழந்தைக்கும் ஏதாவது நோய் ஒட்டிக்கொள்ளுமென்று, "குழந்தையைத் தூக்கக்கூட உன் உடம்பில் பலமில்லையே! உன் உடம்பு சௌக்கியமடையட்டும். அப்புறம் குழந்தையை எடுத்துக் கொஞ்சிக்கொள்ளலாம்" என்று தட்டிக் கழித்துவிடுவாள். அப்படியிருந்தும் மாமியார் இல்லாத சமயத்தில் கணவனிடமாவது சந்திராவிடமாவது கெஞ்சிக் குழந்தையை வாங்கிச் சிறிது நேரம் வைத்திருந்து மாமியார் வருவதற்குள் தந்துவிடுவாள். தன்னுடைய நோய் குழந்தைக்கு ஒட்டிக்கொள்ளக்கூடாது என்ற எச்சரிக்கை அவளுக்கும் உண்டு. அதனால் முத்தங்கூடக் கொடுக்காமல் சிறிது நேரம் மகளை மார்போடு அணைத்துக்கொண்டிருந்து விட்டுக் கொடுத்துவிடுவாள்.

கணவனுடைய இடையறாத கவனிப்பாலும் சிறந்த வைத்தியத்தாலும் தாமரைக்கண்ணியின் நோய் அதிகப்படாமல்



இருந்ததேயன்றி நீங்கினபாடில்லை. குடும்பக் காரியங்களுக்கு உதவவோ குழந்தையைக் கவனித்துக்கொள்ளவோ முடியாதவளாகவே படுத்துக் கிடந்தாள்.

## அத்தியாயம் 5

சுகவீனமாயிருக்கும் தாமரைக்கண்ணியின் தேவைகளை அவளுடைய கணவன் முருகேசன் கவனித்துக்கொண்டான். குழந்தையைக் கவனித்துக்கொள்வதே முருகேசனுடைய தாயாரின் வேலை. சமையல் முதலிய வீட்டு வேலைகளை யெல்லாம் தாமரைக்கண்ணியின் அண்ணன் மனைவி சந்திரா செய்து வந்தாள். அவளுக்குத் துணையாக வீடு பெருக்கவும் தண்ணீர் கொண்டுவரவும் ஒரு வேலைக்காரப்பெண் இருந்தாள். வெளியே போய்வர வேண்டிய காரியங்களைத் தாமரைக்கண்ணியின் அண்ணன் சுந்தரமூர்த்தி செய்து வந்தான்.

இப்படியாக இரண்டு ஆண்டுகள் சென்றபின் சந்திரா அவளுடைய தாயாருக்கு மிகவும் அசௌக்கியம் என்று தந்தி வந்து மதுரைக்குப் போக நேர்ந்துவிட்டது.

அதனால் அவள் செய்து வந்த சமையல் வேலைக்கு வேறு ஆள் கிடைக்காமல் உடனடியாக அந்த வேலையையும் முருகேசனுடைய தாயார் கவனித்துக்கொள்ள வேண்டியதாகிவிட்டது.

சில நாள்கள் சென்றதும் முருகேசனுடைய தாயாருக்குக் கடுமையான காய்ச்சல் வந்து படுத்துவிட்டாள். மூன்று மாதங்கள் அந்த அம்மாளும் ஒரு காரியமும் செய்ய முடியாமற் போய்விட்டது. அதனால் மனைவியைக் கவனித்துக்கொள்ள வேண்டிய வேலைகளோடு தாயாருக்கு வைத்தியம் செய்ய வேண்டிய வேலையும் குழந்தையைக் கவனித்துக்கொள்ள வேண்டிய பொறுப்பும் முருகேசன் கடமைகளாகிவிட்டன.

நோயாளிகளுக்குக் கஞ்சியும் குழந்தைக்குப் பாலும் காய்ச்சுவதைத் தவிர வீட்டில் சமையல் இல்லை. முருகேசனுக்கும் சுந்தரமூர்த்திக்கும் வேண்டிய காப்பி, இட்லி, சாப்பாடு எல்லாம் ஓட்டலில் இருந்து சுந்தரமூர்த்தியே வாங்கி வருவான்.

மனைவியின்மீது அபரிமிதமான பாசம் உள்ளவன் முருகேசன். மனைவியின் அசௌக்கியத்தைபற்றிய கவலையினால் ஏற்கெனவே மிகவும் இளைத்துப் போயிருந்த அவன் இப்போது மனைவியையும் தாயாரையும் குழந்தையையும் மாற்றி மாற்றிக் கவனித்துக்கொள்ள ஓய்வு ஒழிச்சல் இல்லாமல் செய்து வந்த வேலைகளோடு நல்ல உணவும் இல்லாததால் மேலும் இளைத்துக் கருத்துப் பலவீனமடைந்துவிட்டான்.

கணவனைத் தன் உயிரெனக் காதலிக்கும் தாமரைக் கண்ணி, அவர் கடந்த இருபது மாதங்களாகச் சரியான ஊணுறக்கமில்லாமல் செய்து வரும் சேவைகளின் கஷ்டத்தையும் அதனால் துரும்பென இளைத்து நலம் குறைந்து போனதையும் எண்ணியெண்ணிக் கண் கலங்கத் தொடங்கிவிட்டாள்.

'கணவனும் நோயாளியாகப் படுத்துவிட்டால் தனக்குக் கஞ்சி கொடுக்கக்கூட கதியற்றுப் போகுமே! மாமியாருக்கும் தள்ளாமை மிகுந்துவிட்டதால் குழந்தையைக் கவனிப்பது யார்? வீட்டுக்கு வெளியே போய்க் கவனிக்க வேண்டியகாரியங்களைச் செய்து வரும் அண்ணன் சுந்தரமூர்த்தியினால் நோயாளிகளுக்கு அருகிலிருந்து செய்ய வேண்டிய சேவைகளையும் செய்ய முடியுமா? எவ்வளவுதான் பிரியத்தோடு செய்தாலும் ஓர் ஆண் பிள்ளை குழந்தை வளர்ப்புக்கான காரியங்களைப் பெண்கள் செய்வதைப்போல் செய்ய முடியாதே. தன்னுடைய குடித்தனம் என்ற உரிமையோடு காரியங்களைச் செய்யும் பெண் துணை இல்லாத வீட்டில் என்ன நிம்மதி இருக்க முடியும்?' என்றெல்லாம் எண்ணித் தனக்கு உண்மையாகவே இப்போது இருக்கிற நோயையும் துன்பத்தையும் மறந்துவிட்டுத் தன் கணவனுக்கும் குழந்தைக்கும் இனிமேல் வந்துவிடுமோ என்று



அஞ்சிய நோயையும் துன்பத்தையும் கற்பனை செய்து கவலைப் பட்டுக்கொண்டேயிருந்தாள் தாமரைக்கண்ணி.

அந்தக் கவலையை நீக்க அவள் மனத்தில் ஒரு வழி தோன்றியது; அதைக் கணவரிடம் சொல்லத் தருணம் பார்த்துக் கொண்டிருந்தாள்.

ஒரு நாள் அவளுக்கு ஆகாரமான கஞ்சியைக் கொண்டு வந்த முருகேசன் அவள் படுத்திருந்த கட்டிலுக்கருகில் ஒரு நாற்காலியில் உட்கார்ந்துகொண்டு கஞ்சியுடன் டம்ளரை அவளிடம் நீட்டினான். மெதுவாக எழுந்து உட்கார்ந்த தாமரைக்கண்ணி, கன்னங்கள் வற்றிப்போய்க் கண்கள் ஒளிகுன்றி, வாடி வனப்பிழந்த கணவனுடைய முகத்தையே பார்த்துக்கொண்டிருந்தாள். அவளையும் அறியாமல் அவள் கண்களில் நீர் சுரந்து கன்னங்களில் வழிந்துவிட்டது.

அதைக் கண்ட முருகேசன், "தாமரை! அழாதே. சீக்கிரத்தில் நீ நோய் நீங்கிச் சௌக்கியம் அடைந்துவிடுவாய்" என்று அவளுடைய கண்ணீரைத் துடைத்தான்.

"அத்தான்! நான் பெரும்பாவி. என்னுடைய துரதிருஷ்டத்தால்தானே உங்களுக்கு இவ்வளவு கஷ்டமும்! எப்படியிருந்த உங்கள் உடம்பு இப்படித் துரும்பாக இளைத்துவிட்டதே. பால் வடியும் உங்கள் முகம் வாடி வதங்கிக் கருத்துக் களையிழந்துவிட்டதே. சோறு பொங்கிப் போடக்கூட உதவியில்லாமல் நீங்கள் படும் கஷ்டங்களைப் பார்க்கப் பார்க்க என் மனம் வெடித்துவிடும் போன்ற வேதனை உண்டாகிறது. அத்தான்! நான் என் நோயை நினைத்து அழவில்லை. என்னால் நீங்கள் இவ்வளவு துன்பங்களுக்கு ஆளாகிவிட்டீர்களே என்று என்னுடைய துரதிருஷ்டத்தைப்பற்றித்தான்...." என்று மேலும் அழத் தொடங்கிவிட்டாள்.

முருகேசன் நாற்காலியைவிட்டுக் கட்டிலில் மனைவியின் அருகில் அமர்ந்து அவளைத் தன் தோள்மீது சாய்த்து அணைத்துக்கொண்டு, "தாமரை! உன் உடம்பு கொஞ்சம்

தேறி வருகிறது. இப்போது நீ இப்படி அலட்டிக்கொள்ளக் கூடாது. நமக்கு வந்துள்ள துன்பங்கள் உன்னுடைய துரதிருஷ்டத்தால் மட்டுமல்ல, என்னுடைய துரதிருஷ்டமும் சேர்ந்ததுதான். இரண்டு வருடங்களாக நாம் துரதிருஷ்டத்தை அனுபவித்துவிட்டோம். இனி நல்ல அதிருஷ்டம் வரலாம். நாம் வணங்கிவரும் குலதெய்வமான செந்திலாண்டவன் விரைவில் நம் துன்பங்களை நீக்கியருள்வான். நீ கவலைப் படாமல் தெய்வத்தின்மேல் பாரத்தைப் போட்டுவிட்டு வேளா வேளைக்கு ஆகாரத்தைச் சாப்பிட்டு உடம்பைக் கவனித்துக் கொள். முதலில் இப்போது கஞ்சியைக் குடி'' என்று கஞ்சியைக் கொடுத்தான்.

கணவருடைய பரிவும் பாசமும் அவளைப் பரவசப்படுத்தி விட்டன. கஞ்சியை வாங்கிக் குடிக்கத் தொடங்கினாள். அத்தச் சமயத்தில் அவர்கள் இருந்த அறைக்கு வெளியில் கூடத்தில் ஏணையில் தூங்கிக்கொண்டிருந்த அவர்களுடைய குழந்தை வீறிட்டு அழுதது. கூடத்திலேயே ஒரு கட்டிலில் அசௌக்கியமாகப் படுத்திருந்த முருகேசனுடைய தாயார் குழந்தை அழுவதைக் கேட்டுத் தடுமாறிக்கொண்டு எழுந்தாள். அதற்குள் முருகேசன் ஓடிப் போய்த் தாயாரைப் படுக்கச் செய்துவிட்டு வெகு நேரம் தொட்டிலை ஆட்டிக்கொண்டே யிருந்து, குழந்தையைத் தூங்கச் செய்துவிட்டு மீண்டும் மனைவியிருந்த அறைக்குள் வந்து பெருமூச்சு விட்டுக் கொண்டு நாற்காலியில் உட்கார்ந்தான். அந்தப் பெருமூச்சு அவனுடைய அலுப்பைத் தாமரைக்கண்ணிக்கு உணர்த்தியது.

தன் மனத்தில் இருந்துவரும் யோசனையைச் சொல்லிவிட அதுதான் தக்க தருணமென்று கண்ட தாமரைக்கண்ணி, "அத்தான், நான் ஒன்று சொல்கிறேன், கேட்பீர்களா?'' என்றாள்.

"அதென்ன அப்படிக் கேட்கிறாய்!? நீ சொன்ன எதை நான் கேட்காமல் போனேன்?'' என்றான் முருகேசன்.



"அத்தான்! இப்போது சொல்லப் போகிறது சாதாரண விஷயமல்ல. அதனால் அப்படிக் கேட்டேன்.''

"ஓ! அப்படியா? அது என்ன விஷயம்?''

"அத்தான்! நான் சீக்கிரம் சௌக்கியம் அடைந்துவிடச் செந்திலாண்டவன் அருள் புரிவான் என்று நீங்கள் சொன்னது எனக்கு ரொம்பவும் தெம்பாகத்தான் இருக்கிறது. நானும் என் உடல் நலத்துக்காகச் செந்திலாண்டவனை வணங்கிக்கொண்டு தான் இருக்கிறேன். ஆனாலும் எனக்கு அடிக்கடி நெஞ்சுவலி வருவதையும், சில சமயங்களில் மூச்சு திணறுவதையும் உட்கார்ந்திருக்கக்கூட முடியாத பலவீனத்தையும் நினைக்கிற போது நான் அதிக நாள் பிழைத்திருக்க முடியாது என்றுதான் தெரிகிறது........''

"சேச்சே! அப்படியெல்லாம் பேசாதே, தாமரை. அப்படிப் பட்ட அபாயம் வராது என்று டாக்டர் நிச்சயமாகச் சொல்கிறார். உன் நெஞ்சுவலி இதயத்தைப் பற்றியது அல்லவென்றும், உனக்குச் சில சமயங்களில் மூச்சுத் திணறுவது வெறும் சளித் தொந்தரவுதான் என்றும், இப்போது சாப்பிடும் மருந்துகளால் அதெல்லாம் சரியாகிவிடும் என்றும் டாக்டர் உன்னிடமே சொன்னாரே. நீயாக என்னென்னவோ எண்ணிக்கொண்டு பயப்படுகிறாய். பயப்படாதே, தைரியமாக இரு.''

"அத்தான்! டாக்டர் சொல்வது உண்மையாகவும் இருக்கலாம் அல்லது எனக்கு நம்பிக்கை உண்டாக்கித் தைரியப் படுத்தச் சொன்னதாகவும் இருக்கலாம். இப்போதைக்கு என் உயிருக்கு அபாயம் வராது என்று டாக்டர் நிச்சயமாகச் சொல்வது உண்மையானாலும் உங்களுக்குத் துணையாக உதவவோ, தள்ளாமை மிகுந்துவிட்ட அத்தைக்குப் பணிவிடை செய்யவோ, குழந்தையை வளர்க்கவோ சக்தியற்ற நோயாளியாகத்தான் படுத்துக் கிடப்பேன் என்று நிச்சயமாக நம்புகிறேன். இரண்டு ஆண்டுகளாக நீங்கள் அடைந்துள்ள துன்பங்களால் உருத்தெரியாதபடி இளைத்துக் களைத்துப் போய்விட்டீர்கள்.

நீங்களும் நோயாளியாகப் படுத்துவிடுவீர்களோ என்று என் நெஞ்சம் பதைக்கிறது........''

முருகேசன் குறுக்கிட்டு, ''தாமரை, ஏன் இப்படியெல்லாம்.......''

''அத்தான்; குறுக்கிட வேண்டா. நான் சொல்வதை முழுதும் கேளுங்கள்.''

''சரி, சொல்லு.''

''அத்தான்! உங்கள் உடம்பு மிகவும் மெலிந்து நலிந்துவிட்டது. உங்களுக்குப் பூரண ஓய்வு கொடுத்து நீங்கள் இப்போது எங்களுக்குச் செய்து வரும் சேவைகளையெல்லாம் உங்கள் மேற்பார்வையில் செய்துவர ஒரு பொறுப்பாளி வேண்டும். எத்தனை நாளைக்கு நீங்கள் ஓட்டல் சாப்பாட்டை உண்பது? உங்களுடைய ஆரோக்கியத்துக்குப் பொருத்தமான உணவைச் சுவையுள்ளதாகச் சமைக்க அக்கறையுள்ள ஓர் உறவாளி வேண்டும். அந்த உறவாளி முடியாமை வந்துவிட்ட அத்தையவர்களையும் நம் குழந்தையையும் கவனித்துக் கொள்ளக் கடமை பூண்டவராக இருக்க வேண்டும். சுருங்கச் சொன்னால், தன்னுடைய குடும்பம் என்று உரிமையோடு கவனித்துக்கொள்ள ஒரு பெண் துணை நமக்கு இப்போது அவசியமும் அவசரமுமான தேவை........''

''அப்படிப்பட்ட பெண் துணைக்கு நாம் எங்கே போவது? வேண்டுமானால் .ஒரு சமையற்காரியை வைத்துக்கொள்ளலாம்.''

''அத்தான்! சமையற்காரி கூலிக்கு வேலை செய்கிறவள் தானே? அதுவும் அவள் சமையல் வேலையை மட்டுந்தானே செய்வாள்? குடும்பம் தன்னுடையது என்ற உரிமை தரும் உறவோடு மற்றக் காரியங்களையும் செய்யும் பொறுப்பாளி ஆக முடியுமா?''

''முடியாதுதான். அதற்கென்ன செய்வது?''



''அதற்குத்தான் அத்தான் நான் ஆரம்பத்திலேயே 'நான் ஒன்று சொல்லுகிறேன் கேட்பீர்களா'? என்று சொன்னேன்.''

''ஓ! ஆமாம். 'சொல்லப் போவது சாதாரண விஷயம் அல்ல' என்று சொன்னாயே அதுவா?''

''ஆமாம்.''

''அது சாதாரண விஷயம் அல்லவென்று நீயே சொல்லுவதால் நான் செய்கிறேன் என்று உறுதி கூறத் தயங்குகிறேன். செய்ய முடிந்தால் செய்கிறேன். சொல்லு; அந்த விஷயம் என்ன?''

''அத்தான்! ஆரோக்கியமுள்ள ஒரு பெண்ணைப் பார்த்து நீங்கள் இன்னொரு கல்யாணம் செய்துகொள்ள வேண்டும்.''

''அட! பைத்தியமே! இதைச் சொல்லவா அவ்வளவு பீடிகை? போதும் போதும், இருக்கிற துன்பம் போதாதா? இன்னும் அந்தத் துன்பத்தைத் தேடிப் பிடிக்கச் சொல்லுகிறாயா?''

''அத்தான்! அதனால் ஒரு துன்பமும் வராது. நான் அந்தப் பெண்ணைச் சக்களத்தியாக நினைத்தால்தானே ஏதாவது துன்பம் வரலாம்? நான் அவளை, உங்களுக்கு ஓய்வு கொடுத்து உடல் நலத்தைக் காத்து என் கவலையை நீக்க வந்த தெய்வமாகக் கொண்டாடுவேன்.''

''கண்ணே! உன்னால் ஒரு துன்பமும் வராது. அதை நான் அறிவேன். ஆனால், வேறு பல வழிகளில் அது துன்பமுண்டாக்கும். இன்னொரு கல்யாணம் செய்துகொள்வதில் எனக்குத் துளிகூடப் பிரியமில்லை. இந்த விசாரங்கள் உனக்கு வேண்டா. வேளாவேளைக்கு மருந்தையும் ஆகாரத்தையும் உட்கொண்டு நிம்மதியாகப் படுத்திரு. நீ சீக்கிரம் சுகமடைந்து விடுவாய். அதுதான் என் பிரார்த்தனையெல்லாம்.''

''அத்தான்! நீங்கள் பிரார்த்தனை செய்கிறபடி நான் சௌக்கியம் அடைவது செந்திலாண்டவன் அருளால்

கூடுமென்றாலும் நீங்கள் சொல்லுகிறபடி சீக்கிரத்தில் நான் சௌக்கியம் அடைந்துவிடுவேன் என்ற நம்பிக்கை எனக் கில்லை. நான் சௌக்கியமடைவதற்குள் உங்களுடைய ஆரோக்கியத்திற்கு அபாயம் வந்துவிடுமோ என்ற அஞ்சு கிறேன். உங்களுக்கு ஓய்வே இல்லை; நல்ல உணவும் இல்லை; சரியான உறக்கமும் இல்லை. நீங்களும் படுத்துவிட்டால் எங்கள் கதி என்னவாகும்? குழந்தையைக் கவனிப்பது யார்? குடும்பத்தை நடத்துவது யார்? நோயாளிகளுக்கு மருந்து வாங்கி வரக்கூட ஒருவருமில்லையே! அதனால்தான் அத்தான் நான் சொல்லுவது ........"

"தாமரை! வீணாக உன் உடம்பை அலட்டிக்கொள்ளாதே. நீ சொல்லும் யோசனை எனக்குத் துளிக்கூடப் பிடிக்கவில்லை. பேசாமல் படுத்துக்கொள்" என்று சொல்லிவிட்டு முருகேசன் அறையைவிட்டுப் போய்விட்டான்.

மகனுக்கும் மருமகளுக்கும் அறைக்குள் நடந்த இந்த வாக்கு வாதத்தைக் கேட்டுக்கொண்டே கூடத்தில் படுத்திருந்த முருகேச னுடைய தாய் சிந்திக்கலானாள். லேடி டாக்டர், தாமரைக் கண்ணி மறுபடியும் கருவுற்றால் உயிருக்கு அபாயம் நேரும் என்று சொன்னது நினைவுக்கு வந்தது.

அந்த அம்மாளுக்கு மருமகள் தாமரைக்கண்ணியிடத்திலும் அவள் பெற்ற பெண் குழந்தையிடத்திலும் மாசற்ற பாசமும் ஆசையும் நிரம்ப உண்டு. ஆனாலும் தாமரைக்கண்ணி நோயாளியாகி மறுபடியும் குழந்தைப் பெறத் தகுதியற்றவள் என்பதைக் கண்டபின் குடும்பத்தின் வாரிசாக ஓர் ஆண் பேரக் குழந்தை இல்லையே என்ற ஏக்கம் சிற்சில சமயங்களில் உதிப்பதுண்டு.

என்றாலும் தாமரைக்கண்ணியின்மேல் அந்த அம்மாள் கொண்டிருந்த அளவற்ற பிரியத்தாலும் நன்மதிப்பாலும் ஆண் சந்ததிக்கென்று மகனுக்கு இன்னொரு மனைவியைக் கட்டி வைக்கலாம் என்ற எண்ணம் உதித்ததில்லை.



ஆனால், இப்போது தாமரைக்கண்ணியே தன் கணவன் இன்னொரு கல்யாணம் செய்துகொள்ள வேண்டுமென்று வற்புறுத்தியதையும், அதற்குத் தாமரைக்கண்ணி சொன்ன வெகு நியாயமான காரணங்களையும் காதாரக் கேட்டபின், வம்சத்தின் தொடர்ச்சி அற்றுப் போகாதிருக்க ஆண் சந்ததி உண்டாக வழி பிறந்துவிட்டதில் ஆனந்தமடைந்தாள். மருமகள் சொன்ன காரணங்களையே மீண்டும் சொல்லி இன்னொரு கல்யாணம் செய்துகொள்ளத்தான் வேண்டும் என்று மகனை வற்புறுத்திக் கல்யாணத்தையும் எப்படியாவது நடத்திவிட வேண்டும் என்றும் தீர்மானித்தாள், முருகேசனின் தாய்.

அதைப்பற்றி மகனிடம் பேசுவதற்கு முன்னால் மரு மகளுடைய விருப்பம் உறுதியானதுதானா என்று அறிந்து கொள்ள விரும்பினாள். மறுநாள் அந்த அம்மாள் தன்னுடைய தள்ளாமையையும் பொருட்படுத்தாமல் மருமகள் படுத்திருந்த அறைக்குள் சென்று வழக்கம்போல் அவளுடைய உடல் நலத்தைப்பற்றிப் பரிவோடு விசாரித்துவிட்டுக் கடைசியில், "ஏண்டியம்மா தாமரைக்கண்ணி! நீ இருக்கும்போது என்னத் துக்கு உன் புருஷனை இன்னொருத்தியைக் கட்டிக்கொள்ளச் சொல்லுகிறாய் ?" என்றாள்.

"அத்தை, நான் இருக்கிறேன்; உண்மைதான். நான் இருந்து என்ன பிரயோசனம்? உட்கார்ந்திருக்கக்கூட முடியாத வளாய்ப் படுத்துக் கிடக்கிறேன். உங்களுக்குத் தள்ளாத வயது. அத்துடன் உடம்பும் சுகமில்லை. சோறு பொங்கக்கூட ஆளில்லை. என்னையும் உங்களையும் குழந்தையையும் கவனித்துக்கொள்ள ஓய்வில்லாமல் காரியங்களைச் செய்து அத்தான் ஓடாக இளைத்து உருத் தெரியாமல் கருத்தும் போனார். வெகு சீக்கிரம் அவரும் நோயாளி ஆகிவிடுவார். அப்புறம் குடும்பம் என்ன கதியாவது? அத்தை! உங்களைக் கெஞ்சிக் கேட்டுக்கொள்ளுகிறேன். நீங்கள் அவருக்குச் சொல்ல வேண்டியபடி சொல்லி எப்படியாவது இன்னொரு கல்யாணம் செய்து வைத்துவிடுங்கள். இல்லாவிட்டால் நமக்கு மருந்து

கொடுக்கவும் குழந்தைக்குப் பாலூட்டிப் பராமரிக்கவுங்கூட முடியாதபடி அத்தானும் நோயாளியாகப் படுத்துவிடுவார் என்று எனக்குப் பயமாகவே இருக்கிறது'' என்று படுத்தபடியே மூச்சுத் திணறச் சொல்லி முடித்துவிட்டு அழத் தொடங்கி விட்டாள் தாமரைக்கண்ணி.

''தாமரை! அழாதேம்மா, அழாதே. நீ சொல்லுவது சரிய ன யோசனைதான். ஆனாலும் உன்னுடைய இடத்தில் இன்னொருத்தியைக் கொண்டுவந்து வைப்பது உனக்கு அநியாயம் செய்வதுபோல் ஆகுமே என்றுதான் அவன் நினைக்கிறான். எனக்கும் அப்படித்தான் தோன்றுகிறது.''

''அத்தை, அவரா என்னுடைய இடத்திற்கு இன்னொருத்தியைக் கொண்டுவர ஆசைப்படுகிறார்? நான்தானே அதைச் செய்ய வேண்டும் என்கிறேன். பின் அது எப்படி எனக்கு அநியாயம் செய்வதாகும்? அத்தை! நம் குல தெய்வமாகிய செந்திலாண்டவன் சாட்சியாகச் சொல்லுகிறேன். அத்தானுக்கு ஓய்வு கொடுத்து அவருடைய உடல் நலத்துக்குக் கெடுதி வராதபடி குடும்பத்தை நடத்த அவருக்கு இன்னொரு கல்யாணம் செய்து வைத்தால்தான் நான் நிம்மதியடைவேன். அதைச் செய்யாவிட்டால்தான் எனக்கு அநீதி செய்வதாகும்.''

''சரியம்மா, உன் இஷ்டப்படியே செய்துவிடுவோம். நீ வருத்தப்படாதே'' என்று சொல்லிவிட்டு அன்று மத்தியானம் சுந்தரமூர்த்தியைத் திருவொற்றியூருக்கு அனுப்பி, ஏதோ ஒரு பெண்ணுக்குத் திருமணம் நடந்துவிட்டதா இல்லையா என்பதை அறிந்துவரச் செய்தாள்.

மறுநாள் காலையில் முருகேசன், குழந்தைக்குப் பால் புகட்டிவிட்டு மனைவிக்கும் தாயாருக்கும் மருந்தும் காலை ஆகாரமும் கொடுத்துவிட்டு, சுந்தரமூர்த்தி ஓட்டலில் இருந்து வாங்கி வந்த இட்டிலி காப்பியைச் சாப்பிட்ட பின் தன் தாயாருக்கருகில் அமர்ந்து, ''அம்மா! உடம்பு எப்படியிருக்கிறது?'' என்றான்.



''என் உடம்புக்கு என்னடா சாமி? உன் உடம்பைப் பற்றித்தான் எங்களுக்குக் கவலையாக இருக்கிறது. என் உடம்பு முக்கால்வாசிக்குமேல் சௌக்கியமாகிவிட்டது. ஓய்வில்லாது எங்களுக்கு உழைக்கிறதனால் உன் உடம்புதான் ஓடாக இளைத்துவிட்டது. நீயும் நோயாளியாகப் படுத்துவிடுவாயோ என்ற பயந்தான் எங்களை வாட்டுகிறது. தாமரைக்கண்ணி விரும்புகிறபடி நீ இன்னொரு கல்யாணம் செய்துகொண்டால்தான் நல்லது; இல்லாவிட்டால்.......'' என்று அன்னை சொல்லி முடிக்குமுன்—

''அம்மா! அம்மா! தாமரைக்கண்ணிக்குப் பிடித்த பைத்தியம் உங்களையும்பிடித்துக்கொண்டதா? வேண்டாமம்மா. இன்னொரு கல்யாணம் நமக்குள்ள துன்பங்களை அதிகப்படுத்துமேயல்லாமல் குறைத்துவிடாது. வேண்டாம்; அந்த எண்ணத்தை விட்டுவிடுங்கள்'' என்று சொல்லிக்கொண்டே முருகேசன் எழுந்து போய்விட்டான்.

குடும்பக் காரியங்கள் வழக்கம்போல் நடந்து வந்தன. வீட்டுக்கு வெளியே போய் கவனிக்க வேண்டிய காரியங்களையெல்லாம் மைத்துனன் சுந்தரமூர்த்தி செய்து வந்தான். வீட்டுக்குள் நடக்க வேண்டிய எல்லா வேலைகளையும் முருகேசனே செய்து வந்தான். வீட்டைப் பெருக்குதல், தண்ணீர் கொண்டுவருதல், பாத்திரங்களை விளக்குதல் முதலிய காரியங்களை வேலைக்காரச் சிறுமி செய்து வந்தாள். முருகேசனுடைய தாயாருக்கு நோய் நீங்கிவிட்டாலும் சமையல் செய்யக்கூடியபடி சுகமடையவில்லை. சமையலுக்குச் சம்பளக்காரியை அமர்த்திக்கொள்ள முயன்றும் ஆள் கிடைக்கவில்லை, ஓட்டல் சாப்பாடுதான்.

மதுரைக்குப் போன சுந்தரமூர்த்தியின் மனைவி சந்திரா, அவளுடைய தாயாரின் நிலைமையைக் கருதி அங்கேயே இன்னும் இருக்க வேண்டியதாகிவிட்டது.

அதனால் முருகேசனுக்கு ஓய்வே இல்லாமலும் நல்ல உணவில்லாமலும் மேலும் மெலிந்து நலிந்து போனான். தேக

பலம் மிகவும் குறைந்துவிட்டது. வெறும் மனோபலத்தால் தான் காரியங்களைச் செய்து வந்தான். ஆனாலும் தேகபலம் இல்லாமல் வெறும் மனோபலம் எத்தனை நாளைக்கு உதவும்?

மனோபலமும் தேகபலமும் ஒன்றுக்கொன்று துணையாய் நிற்பவை; ஒரு காகிதத் தாளின் இரண்டு பக்கங்களைப் போல ஒன்றோடொன்று பிரிக்க முடியாதபடி ஒட்டியிருப்பவை. மனோபலம் இல்லாமல் தேகபலம் நீடிக்காது. அதே போல் தேகபலம் இல்லாமல் மனோபலமும் நீடிக்காது.

ஒரு நாள் காலையில் முருகேசன், தாயாருக்கும் மனைவிக்கும் குழந்தைக்கும் ஆகாரம் தயார் செய்பச் சமையல் அறையில் பால் காய்ச்சிக்கொண்டிருந்தான். தாயார் கூடத்தில் கட்டிலில் உட்கார்ந்துகொண்டிருந்தாள். மனைவி தாமரைக் கண்ணி அறையில் கட்டிலில படுத்திருந்தாள். குழந்தை தூளியில் தூங்கிக்கொண்டிருந்தது. மைத்துனன் சுந்தரமூர்த்தி இட்டிலி காபி வாங்கி வர ஓட்டலுக்குப் போயிருந்தான். வேலைக்காரச் சிறுமி முருகேசனுக்கு ஒத்தாசையாகச் சமையல் அறையில் அடுப்பைக் கவனித்துக்கொண்டிருந்தாள்.

சமையல் அறையில் ஏதோ ஒரு பாத்திரம் தடால் என்று விழுந்துவிட்ட ஓசை கேட்டுத் திடுக்கிட்டாள் முருகேசனுடைய அன்னை. அடுத்த நிமிஷம், 'ஐயோ' அம்மா!' என்று வேலைக்காரச் சிறுமி அலறியது காதில் விழுந்தது.

உடனே முருகேசனின் தாய், சமையல் அறைக்கு ஓடினாள். அங்கே முருகேசன் தரையில் சுருண்டு கிடந்தான்.

"ஐயோ! மகனே!" என்று அலறிப் புடைத்துக்கொண்டு முருகேசனுக்கு அருகில் அமர்ந்து அவனுடைய தலையைத் தன் மடிமீது தூக்கி வைத்துக்கொண்டு, "என்னடா சாமி! என்ன?" என்று கேட்டாள் அன்னை.

முருகேசனுக்குப் பிரக்ஞை இல்லை. அவன் பதில் பேசாததைக் கண்டு, "ஐயோ மகனே! ஐயோ! ஐயோ!" என்று பலத்த குரலில் ஓலமிடத் தொடங்கிவிட்டாள் அன்னை.



இந்த அழுகுரலைக் கேட்ட தாமரைக்கண்ணி, 'ஐயோ மகனே' என்று மாமியார் அலறியதால் தன் கணவனுக்குத் தான் ஏதோ அபாயம் நேர்ந்திருக்கிறது' என்று ஊகித்தாள். உடனே எழுந்தோடிப் பார்க்க மனம் துடித்தது. ஆனால், துணையில்லாமல் அவளால் எழுந்து நடந்து போக முடியாதே. என்ன செய்வது? ஆனாலும் போகாமலிருக்க மனம் பொறுக்கவில்லை.

அதனால் தன்னுடைய பலவீனத்தை முற்றிலும் மறந்தவளாய், கைகளை ஊன்றிக்கொண்டு மெதுவாகக் கட்டிலிலிருந்து தரையில் உட்கார்ந்து குழந்தைகள் தவழ்வது போல் கொஞ்சம் கொஞ்சமாக நகர்ந்து சமையல் அறைக்கு வந்துவிட்டாள்.

கணவன் கண்திறக்காமல் தன்னினைவின்றிக் கிடப்பதைப் பார்த்தவுடன் பேசக்கூடச் சக்தி இல்லாமல் படுத்துக் கிடந்த அவளுக்கு எங்கிருந்துதான் சக்தி வந்ததோ! பலத்த குரலில், "ஐயோ! அத்தான்! நான் பயந்துகொண்டிருந்தபடியே உங்கள் ஆரோக்கியத்துக்கு அபாயம் வந்துவிட்டதே! இனி எங்கள் கதி என்னவாகுமோ, தெய்வமே" என்று ஓலமிடத் தொடங்கிவிட்டாள். இவர்களுடன் சேர்ந்து அந்த வேலைக்காரப் பெண்ணும் கத்திக் கதறினாள்.

இந்த அழுகுரலைக் கேட்ட அக்கம்பக்கத்தார் வந்து கூடிவிட்டார்கள். அங்கு வந்த அடுத்த வீட்டு மகமதிய கனவான் முருகேசனைத் தொட்டுப் பரிசோதித்துவிட்டு, "என்னம்மா, முருகேசு பசிக்களைப்பு வந்தாப்பலே மயக்கமாயிருக்குது. அதுக்கு இப்படி அழுவுறிங்களே! நீங்கள் அல்லாரும் தூரப் போங்க" என்று சொல்லிக்கொண்டே அவரும் இன்னும் சிலருமாக முருகேசனை அலுங்காமல் தூக்கிப்போய்க் கட்டிலில் படுக்க வைத்தார்கள்.

இதற்குள் ஓட்டலுக்குப் போயிருந்த சுந்தரமூர்த்தி வந்து சேர்ந்தான்; விஷயத்தை அறிந்ததும் ஓடிப் போய் டாக்டரை அழைத்து வந்தான்.

டாக்டர் நன்றாகப் பரிசோதித்துவிட்டு ஒர் ஊசி மருந்தை உடலில் செலுத்தினார். சிறிது நேரத்தில் முருகேசன் கண்ணைத் திறந்து மருள மருள விழித்தான். ஆனால் டாக்டர் கேட்ட கேள்விகளுக்குப் பதில் சொல்லக்கூடிய சுயநினைவு வரவில்லை.

டாக்டர், "இரத்தக் குறைவினால் இருதயம் மிகவும் பலவீனமாக இருக்கிறது.. சில நாள்களுக்கு ரொம்பவும் ஜாக்கிரதையாகக் கவனித்துக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் அபாயம் நேரலாம். இப்போதைக்குப் பயப்பட வேண்டியதில்லை" என்று சொல்லிவிட்டு மூன்று மணிக்கு ஒரு முறை கொடுக்கும்படி ஒரு மருந்தை எழுதிக் கொடுத்துவிட்டு மறுபடியும் மாலையில் வருவதாகப் போய்விட்டார்.

தாமரைக்கண்ணியைச் சுந்தரமூர்த்தி மெதுவாக நடத்திப் போய் அறையில் படுக்க வைத்தான்.

மூன்று நாள்கள் முருகேசன் சுயநினைவு இல்லாமல் பிதற்றிக்கொண்டிருந்தான். பத்து நாள்கள் சென்ற பிறகுதான் டாக்டர் இனிப் பயமில்லை என்று சொன்னார். ஒரு மாதம் முருகேசன் படுக்கையில் இருந்தான். பூரண நலமடைய ஆறு மாதங்களுக்குமேல் ஆகிவிட்டது.

அதுவரையிலும் குடும்பக் காரியங்கள் நடப்பதற்கு முருகேசனுடைய தாயாரும் மைத்துனன் சுந்தரமூர்த்தியும் வெகு கஷ்டப்பட்டுவிட்டார்கள். தாமரைக்கண்ணியைக் கவனித்துக்கொள்ளவே ஒரு தனி ஆள் வேண்டும். முருகேசனும் அபாய நோயில் படுத்துவிட்டான். தாமரைக்கண்ணியை விட அதிகக் கருத்தோடு கவனிக்கப்பட வேண்டியவன் முருகேசன். குழந்தையைப் பார்த்துக்கொள்ள வேண்டும். ஓட்டலுக்குப் போய் இட்டிலி காப்பி சாப்பாடு வாஙகிவர வேண்டும். அப்பப்பா! இத்தனை வேலைகளையும் இரண்டே பேர்கள் செய்வது இலேசான காரியமா?

எப்படியோ முருகேசனுக்கு அபாயம் நேர்ந்துவிடக்கூடாதே என்ற ஒரே ஏக்கத்தால் பலவிதத் துன்பங்களையும் சகித்துக்



கொண்டார்கள். முருகேசனும் தப்பிப் பிழைத்து எழுந்துவிட்டான்.

அதன் பிறகுதான் முருகேசனுடைய தாயாருக்கு ஆறு மாதங்களாகப் பட்ட கஷ்டங்களின் அலுப்பு வந்துவிட்டது. குழந்தையைக் கவனித்துக்கொள்வதுகூட அந்த அம்மாளுக்குச் சிரமமாகத் தோன்றியது.

சுந்தரமூர்த்தியும் அலுப்புடன்தான் காரியங்களைச் செய்ய முடிந்தது.

இந்தச் சமயத்தில் மதுரையில் சந்திராவின் தாயார்—சுந்தரமூர்த்தியின் மாமியார் சாகக் கிடப்பதாகத் தந்தி வந்தது. மாமியார் இறந்து போவதற்கு முன்னால் போய்ச் சேரவேண்டுமென்று சுந்தரமூர்த்தி உடனே மதுரைக்குப் புறப்பட வேண்டியதாகிவிட்டது.

குடும்பம் நடக்க வேண்டிய காரியங்களில் பெரும்பகுதியையும் சுந்தரமூர்த்திதான் செய்து வந்தான். இப்போது அவனும் இல்லாமல் காரியங்கள் நடப்பது எப்படி?

முருகேசன் அபாயமான நோயிலிருந்து தப்பிப் பிழைத்துவிட்டான் என்றாலும் காரியம் எதையும் செய்யக்கூடிய தேக பலமும் தென்பும் அவனுக்கு இன்னும் வரவில்லை. அப்படியிருந்தும் அவன் தன் மனைவி தாமரைக்கண்ணிக்கு மருந்தும் ஆகாரமும் கொடுத்து வந்த சுந்தரமூர்த்தி இல்லாததால் (சுந்தரமூர்த்தி மதுரைக்குப் போன அன்று மாலையில்) தாமரைக்கண்ணிக்கு மருந்து கொடுக்க அவள் படுத்திருந்த அறைக்குப் போனான்.

அதைக் கண்ட அவனுடைய தாயார், "அட சாமி, நீ ஏன் படுக்கையைவிட்டு எழுந்தாய்? இன்னும் குறைந்தது ஒரு மாதமாவது நீ அலுங்காமல் ஓய்வாக இருக்க வேண்டும் என்று டாக்டர் கண்டிப்பாகச் சொன்னாரே! எந்த சாமி புண்ணியமோ அபாயம் நீங்கித் தப்பிப் பிழைத்து எங்கள் வயிற்றில் பாலை வார்த்தாய். மறுபடியும் நீ படுத்துவிட்டால் எங்கள் கதி

என்னாவது? நீ போய் உட்கார். தாமரைக்கண்ணிக்குச் செய்ய வேண்டியதை நான் செய்கிறேன்'' என்றாள்.

அதைக் கேட்ட தாமரைக்கண்ணி, ''அத்தை, இதற்காகத் தான் அத்தான் இன்னொரு கல்யாணம் செய்துகொள்ள வேண்டும் என்று நான் கட்டாயப்படுத்துவது'' என்றாள்.

''ஆமாண்டியம்மா, இன்னொரு கல்யாணம் செய்துவிடத் தான் வேணும்'' என்றாள் மாமியார்.

அதைக் கேட்டுக்கொண்ட முருகேசன் தாய் சொன்னபடி திரும்பிப் போய்ப் படுக்கையில் உட்கார்ந்துகொண்டான்.

இன்னொரு கல்யாணம் செய்துகொள்ளும்படி முருகேசனை வற்புறுத்த இதுதான் தக்க தருணமென்று கண்ட அவனுடைய தாயார், தாமரைக்கண்ணிக்கு மருந்து கொடுத்துவிட்டுப் போய் மகனுக்கு அருகில் அமர்ந்து, ''சாமி, நான் சொல்லு வதை என்னவோ என்று அலட்சியம் செய்துவிடாதே. நீ இன்னொரு கல்யாணம் செய்துகொள்ளத்தான் வேண்டும். இல்லாவிட்டால் குடும்பம் சீரழிந்து போகும். என்னால் ஒரு வேலையும் செய்ய முடியவில்லை. சுந்தரமூர்த்தியும் சந்திரா வும் வந்தாலுங்கூட அவர்கள் எப்போதும் நம்முடன்தான் இருக்க வேண்டும் என்று எதிர்பார்க்க முடியாது. அவர்கள் தனிக் குடித்தனம் நடத்தி முன்னுக்கு வரவேண்டிய சிறுசுகள். நம்முடைய நிலபுலன்களின் சாகுபடியை சுந்தரமூர்த்தி கவனித்துக்கொள்வதானாலும் அவனுக்கென்று தக்க ஊதியம் கொடுத்து அவனும் மனைவியும் வயலில் உள்ள பண்ணை வீட்டிலேயே குடியிருந்து விவசாயத்தைக் கவனிக்கச் செய்ய வேண்டுமேயல்லாமல் இங்கேயே நம்முடன் இருந்துகொண்டு நமக்குப் பணிவிடை செய்துகொண்டு விவசாயத்தையும் நடத்த முடியாது. தாமரைக்கண்ணி பிரசவித்த நாளிலிருந்து சுந்தர மூர்த்தி வயலுக்குச் சரியாகப் போக முடியாமல் நமக்குப் பணி விடை செய்வதிலேயே இருந்துவிட நேர்ந்துவிட்டது. அதனால் இந்த இரண்டு வருஷங்களாக விளைச்சல் பாதிக்கும் குறை வாகத்தான் வந்திருக்கிறது. அதனால் இனிமேல் வயல்களின் மத்தியிலுள்ள பண்ணை வீட்டிலேயே சுந்தரமூர்த்தியும் சந்திராவும் (அவர்கள் குழந்தை நெல்லையப்பனுடன்) குடியிருந்துகொண்டுதான் விவசாயத்தைக் கவனிக்க வேண்டும். ஆதலால், இந்தக் குடும்பம் தன்னுடையது என்ற உரிமையோடு பொறுப்பேற்றுக்கொண்டு எனக்கும் உனக்கும் ஓய்வு கொடுக்க நீ இன்னொரு பெண்ணை மணந்துகொள்ளத் தான் வேண்டும் என்று தாமரைக்கண்ணி சொல்வது மிகவும் நல்ல யோசனை. எனக்கும் அதுதான் விருப்பம்'' என்றாள்.



முருகேசன் பதில் சொல்லாமல் நெடுநேரம் மௌனமாகத் தலையைக் கவிழ்த்துக்கொண்டிருந்தான்.

மறுபடியும் தாயார், ''என்னாப்பா சொல்கிறாய்?'' என்றாள்.

முருகேசன் புன்சிரிப்போடு தலைநிமிர்ந்து தாயாரை உற்றுப் பார்த்துவிட்டு மீண்டும் தலையைக் கவிழ்த்துக் கொண்டான்.

''என்னடா சாமி? உன் மனத்திலிருப்பதைக் கூசாமல் சொல்லேன்'' என்றாள்.

''அம்மா, தாமரைக்கண்ணியைப்போல் நல்ல பெண் கிடைக்குமா?''

''தாமரைக்கண்ணியைப் போலவே நல்ல பெண் எங்கிருந்து கிடைக்கும்? தாமரைக்கண்ணி போல் தாமரைக் கண்ணிதான் இருக்க முடியும். இன்னொரு பெண் அவளைப் போலவே எப்படி இருக்க முடியும்? கூடுமானவரையில் லக்ஷண முள்ளவளாகவும் குடும்பக் காரியங்களுக்குத் தகுதியான உடல் நலமும் பலமும் உள்ள பெண்ணாகப் பார்க்கலாம்'' என்றாள் அன்னை.

''அப்படிப்பட்ட பெண்தான் எங்கே இருக்கிறது?''

''அப்படிப்பட்ட பெண் ஒருத்தி இருக்கிறாள். அவளை மனத்தில் வைத்துக்கொண்டுதான் நான் உன்னைக் கேட் கிறேன்.''

"என் உடம்பு தேறட்டும்; அதைப்பற்றி யோசிப்போம்" என்றான் முருகேசன்.

"உன் உடம்பு தேறட்டும். தேறின பிறகே திருமணத்தை நடத்துவோம். ஆனால், உன் சம்மதத்தை இப்போதே உறுதியாகச் சொல்லிவிடு. ஏனென்றால், அந்தப் பெண்ணை வேறு யாரும் பேசி முடித்துக்கொள்ளுமுன் நாம் பேசி நிச்சயம் செய்துகொள்ள வேண்டும்."

"அம்மா! தாமரைக்கண்ணியும் நீங்களும் சொல்லுகின்ற காரணங்களெல்லாம் நியாயமானவைதாம். எனக்கும் உங்களுக்கும் ஓய்வு கொடுத்துத் தாமரைக்கண்ணியையும் குழந்தையையும் குடும்பக் காரியங்களையும் உரிமையோடு கவனித்துக்கொள்ள ஒரு பொறுப்பாளி வேண்டியதுதான் என்பதை நானும் உணர்கிறேன். ஆனால் எனக்கென்னவோ அம்மா! நான் இன்னொரு கல்யாணம் செய்துகொண்டால், இரண்டு பெண்டாட்டிக்காரனுடைய திண்டாட்டங்களுக்கு ஆளாகிவிட நேர்ந்துவிடுமே என்ற பயம் உண்டாகிறது."

"அதெல்லாம் ஒரு திண்டாட்டமும் இல்லாமல் பார்த்துக் கொள்ளலாம்; நீ கவலைப்படாதே. நீ மட்டும் உன் சம்மதத்தைச் சொல்லு."

மறுபடியும் முருகேசன் பதில் சொல்லாமல் தலையைக் கவிழ்த்துக்கொண்டு ஆலோசனையில் ஆழ்ந்துவிட்டான்.

நெடுநேரம் கழித்து அவனுடைய அன்னை, "ஏண்டாப்பா, இதற்கென்ன இவ்வளவு தயக்கம்? நன்றாக நான் சொன்னதையெல்லாம் எண்ணிப் பார். நீ இதற்குச் சம்மதிக்காவிட்டால் நம் குடும்பம் நிச்சயமாகச் சீரழிந்து போகும்" என்றாள்.

முருகேசன் சட்டென்று தலை நிமிர்ந்து, "சரியம்மா; என்னுடைய சந்தேகம் என்னவானாலும் சரி, தாமரைக் கண்ணியையும் உங்களையும் திருப்தி செய்வதற்காக அதற்குச் சம்மதிக்கிறேன். சரிதானே?" என்றான்.

"அப்படி சொல்லடா என் சாமி. என் வயிற்றில் பால் வார்த்தாய்" என்று சொல்லிக்கொண்டே எழுந்து போய்த் தன்



பலவீனமெல்லாம் நீங்கிவிட்டது போன்ற தென்புடன் வீட்டுக் காரியங்களைக் கவனிக்கலானாள் அன்னை.

இந்தச் சம்பாஷணையைக் கேட்டுக்கொண்டே அறைக்குள் படுத்திருந்த தாமரைக்கண்ணி மிகப்பெரிய வெற்றி பெற்றுவிட்டது போன்ற விம்மிதமடைந்தாள்.

## அத்தியாயம் 6

முருகேசனுடைய தந்தைக்கு ஒன்றுவிட்ட சகோதரி யோகாம்பாள். அவள் திருவொற்றியூரில் நாராயணசாமி என்பவருக்கு வாழ்க்கைப்பட்டவள். முருகேசனுடைய தந்தை உயிரோடிருந்தபோது யோகாம்பாளும் நாராயணசாமியும் அடிக்கடி வந்து போய்க்கொண்டிருந்தவர்கள்; பெரும் பணக்காரர் அல்லவென்றாலும் சொந்த வீடு நிலபுலன்களுடன் சௌகரியமாக வாழ்ந்தவர்கள். நாராயணசாமி அவருக்கு அனுபவமில்லாத ஒரு வியாபாரத்தில் இறங்கிக் கடன்பட்டு நஷ்டமடைந்துவிட்டார்.

அந்தக் கடனைத் தீர்க்க முடியாமல் அவருடைய வீடு ஏலத்துக்கு வந்துவிட்டது. அந்த ஏலத்தை ரத்து செய்வதற்காக நாராயணசாமி, முருகேசனுடைய தந்தையிடம் உதவி பெற எண்ணினார்; ஆனால், அவரே போகாமல் யோகாம்பாளை அனுப்பினார். யோகாம்பாள் முருகேசனுடைய தந்தையிடம் வந்து, "அண்ணா! எங்களுடைய வீடு ஏலத்துக்கு வந்துவிட்டது. எங்களுடைய நிலபுலன்களை ஏலத்துக்குக் கொண்டுவந்திருந்தாலும் போனாற்போகிறது என்றிருந்துவிடலாம். வீடு போய்விட்டால் தெருவில்தான் நிற்க வேண்டும். கடன்காரன் வேண்டுமென்றே நிலபுலன்களை ஏலத்துக்குக் கொண்டுவராமல் வீட்டையே கொண்டுவந்துவிட்டான். வீடு பத்தாயிரம் பெறும். நாங்கள் கொடுக்க வேண்டிய கடன் கோர்ட்டு செலவுகள் உட்பட நாலாயிரந்தான். இதைக்

கொடுத்து வீடு ஏலம் போகாமல் காப்பாற்றுங்கள். எங்கள் தோட்டமும் வயலும் பதினையாயிரத்துக்குமேல் விலை போகும். மூன்று மாதங்களுக்குள் தோட்டத்தையாவது வயலையாவது விற்று உங்கள் பணத்தை வட்டியுடன் திருப்பித் தந்து விடுகிறோம். பல தலைமுறைகளாக அவருடைய முன்னோர்கள் வாழ்ந்த அந்த வீடு ஏலம் போய்விடாமல் எப்படியாவது காப்பாற்றுங்கள் அண்ணா! உங்களைவிட எங்களுக்கு உதவி செய்யக்கூடியவர்கள் யாரண்ணா?'' என்று தேம்பித் தேம்பி அழுதுகொண்டே அண்ணனின் காலடியில் விழுந்துவிட்டாள்.

முருகேசனுடைய தந்தை மிகவும் இளகிய மனமுடையவர். சிறு வயதுமுதல் யோகாம்பாளைச் சொந்தத் தங்கையாகவே நேசித்து வந்தவர். அப்படிப்பட்ட பெண் கதறிக்கொண்டு தன் காலில் விழுந்தது அவருடைய உள்ளத்தை உருக்கிவிட்டது.

உடனே நாராயணசாமி பேருக்கு நாலாயிரம் ரூபாய்க்கு ஒரு செக் எழுதிக் கொடுத்துவிட்டார். வீடு ஏலம் போவது தவிர்க்கப்பட்டு நாராயணசாமியும் யோகாம்பாளும் சேர்ந்து வந்து முருகேசனுடைய தந்தைக்கும் தாய்க்கும் நன்றி செலுத்திவிட்டுப் போனார்கள்.

இது நடந்தது பத்து ஆண்டுகளுக்கு முன்னால். நாராயணசாமி தம்முடைய தோட்டத்தையாவது; வயலையாவது விற்றுக் கடனைத் திருப்பித் தந்துவிட எவ்வளவோ முயற்சி செய்தார். ஆனால் தோட்டத்தையோ, வயலையோ விலைக்கு வாங்குவார் யாரும் கிடைக்கவில்லை. ஆனால், அடைமானமாக ஆயிரம் ஐந்நூறு கொடுக்க ஆசாமிகள் இருந்தார்கள். அப்படி வாங்கின சிறு சிறு தொகைகளும் குடும்பச் செலவுக்ுத்தான் பயன்பட்டன. விற்று வரும் பெரிய தொகையில் முருகேசன் தந்தையிடம் வாங்கிய கடனைக் கட்டிவிடலாம் என்று எண்ணிக்கொண்டே சிறு சிறு கடன்கள் வாங்கிச் செலவழித்துவிட்டார் நாராயணசாமி.

இப்படியாக முருகேசனுடைய தந்தையிடம் வாங்கின கடன் தீர்க்கப்படாமலேயே இருந்துவிட்டது. அதனால்



யோகாம்பாளும் நாராயணசாமியும் மிக்க வெட்கமும் வேதனையும் அடைந்தவர்களாக முருகேசனுடைய பெற்றோர்களின் முகத்தில் விழிக்க அஞ்சி உறவு முறையில் வந்து போவதும் சிறுகச் சிறுக நின்றுவிட்டது.

ஒரு நாள் முருகேசனுடைய தாயார் அம்மணியம்மாள் தன் கணவரைப் பார்த்து, "ஒரு பாண்டு பத்திரங்கூட இல்லாமல் நாலாயிரம் ரூபாயைக் கொடுத்துவிட்டீர்களே, இனி அந்தப் பணம் வரப்போகிறதா?'' என்றாள்.

அதைக் கேட்ட முருகேசனின் தந்தை, "அடி பைத்தியமே! பாண்டு பத்திரம் வாங்கிக்கொண்டு கொடுத்திருந்தால் இப்போது நாமும் பிராது போட்டு அதே வீட்டையோ காட்டையோ ஏலத்துக்குத்தானே கொண்டுவர வேண்டும்? நம் கடனைத் தீர்க்க அவர்கள் எவ்வளவோ முயன்றும் முடியவில்லை என்றுதான் எனக்குக் கிடைத்த தகவல்களிலிருந்து தெரிகிறது. அத்துடன் நான் பணம் கொடுத்தபோது உடன்பிறந்த ஒரு தங்கையின் துன்பத்தைத் துடைக்க உதவி செய்வதாக எண்ணித்தான் கொடுத்தேனே ஒழிய, வசூலிக்க வேண்டிய கடனாகவல்ல. அவர்கள் திருப்பித் தந்துவிடுவதாகச் சொன்னது உண்மைதான். அவர்களால் தர முடியவில்லை. அவர்களுக்கு நாம் செய்த உதவி உன்னுடைய புண்ணியமாக இருக்கட்டுமே!'' என்றார்.

அதை அந்த அம்மாள் மகிழ்ச்சியுடன் ஒத்துக்கொண்டு மௌனமாகிவிட்டாள்.

அதற்குச் சில ஆண்டுகளுக்குப்பின் முருகேசனுடைய தந்தை இறந்து போனார். அந்த இழவுக்கு மட்டும் யோகாம்பாளும் அவள் கணவரும் வந்து போனார்கள்.

அதற்குப் பின் நெடுநாள் சந்திப்பே இல்லை. முருகேசனுக்கும் தாமரைக்கண்ணிக்கும் திருமணம் ஆனதற்கு ஒரு மாதத்துக்கு முன்னால் சென்னையில் ஒரு நண்பர் வீட்டில் நடந்த ஒரு திருமணத்துக்கு அம்மணியம்மாள் போயிருந்தாள். அங்கே யோகாம்பாளும் அவளுடைய மகளும் வந்திருந்தார்கள்.

அம்மணியம்மாளைக் கண்ட யோகாம்பாள் திடுக்கிட்டுக் கூசிக் குறுகிவிட்டாள்.

ஆனால், அம்மணியம்மாள் முகமலர்ச்சியுடன் யோகாம்பாளை அணுகி அவளுடைய கையைப் பிடித்துக்கொண்டு, "யோகாம்பா! உன்னைப் பார்த்து எவ்வளவு காலமாச்சு! ஏன் என் வீட்டுக்கு வருவதையே நிறுத்திவிட்டாய்?" என்றாள்.

"அண்ணி! உங்கள் முகத்தில் விழிக்கவே யோக்கியதை இல்லாதவளாகிவிட்டேனே! நான் என்ன செய்யட்டும்? உங்கள் பணத்தை...."

"சேச்சே! அப்படியெல்லாம் பேசாதே. உனக்குப் பணம் கொடுத்தபோதே அவர் தங்கைக்கு வெகுமதி போலத்தான் கொடுத்தாராம்; கடனாக அல்ல. நீதான் திருப்பித் தந்து விடுவதாகச் சொன்னாய். அந்தப் பணத்தைத் திருப்பி வாங்க வேணுமென்று அவரோ நானோ எண்ணவே இல்லையே! நீயே என்னென்னவோ எண்ணிக்கொண்டு எங்களைப் பார்க்க வருவதைக்கூட நிறுத்திவிட்டாயே! இனி அந்தக் கவலையை விட்டுவிடு" என்று சொல்லிவிட்டு யோகாம்பாளுக்கு அருகிலிருந்த பதினேழு வயது மதிக்கக்கூடிய ஓர் அழகான பெண்ணைப் பார்த்து, "இந்தப் பெண் யார்?" என்று கேட்டாள்.

"இவள் என்னுடைய மூத்த பெண் சுந்தரி; பத்தாவது வகுப்பில் படித்துக்கொண்டிருக்கிறாள். இந்த வீட்டில் இன்று நடந்த கல்யாணத்தின் மணப்பெண் திருவொற்றியூர்ப்பெண்; என் மகளுடன் படிக்கிறவள். அதனால் இந்தக் கல்யாணத்துக்கு வர ஆசைப்பட்ட என் மகளுக்காக நானும் இங்கு வர நேரிட்டது. இல்லாவிட்டால், நாம் சந்திக்க வாய்ப்பில்லாமல் போயிருக்கும்" என்றாள் யோகாம்பாள்.

"ஓ! அப்படிச் சொல்லு. உன் பெண்ணுக்குத் துணையாக நீ வந்திருக்கிறாய்! உன்னை இங்குக் கண்டபோதே 'யோகாம்பாளுக்கும் இந்த வீட்டுக் கல்யாணத்துக்கும் என்ன உறவு?' என்று எண்ணினேன்" என்றாள் அம்மணியம்மாள்.



இப்படி இவர்கள் பேசிக்கொண்டிருந்தபோது கல்யாணச் சாப்பாட்டுக்கு அழைப்பு வந்தது. விருந்துண்ட பின்னும் முருகேசன் தாயாரும் யோகாம்பாளும் வெகுநேரம் பேசிக்கொண்டிருந்துவிட்டு மீண்டும் விரைவில் சந்திப்பதாகப் பிரிந்தார்கள்.

இது நடந்தது நான்கு ஆண்டுகளுக்கு முன்னால். மறுபடியும் இவர்கள் சந்திக்கவில்லை. ஏனெனில், யோகாம்பாள் குடும்பம் மீண்டும் கடன் தொல்லைகளுக்கு ஆளாகித் துன்பப்பட்டுக்கொண்டிருக்க நேர்ந்துவிட்டது.

தாமரைக்கண்ணி தன் கணவன் முருகேசன் ஓய்வே இல்லாமல் இளைத்துப் பலவீனமடைந்துவிட்டதைக் கண்டு அஞ்சி, அவனை இன்னொரு கல்யாணம் செய்துகொள்ளும்படி முதன்முதல் வற்புறுத்தினாள் அல்லவா?

அதைக் கேட்டுக்கொண்டிருந்த முருகேசனின் தாயார் தன் வம்சத்துக்கு ஓர் ஆண் சந்ததி உண்டாக வேண்டுமென்ற ஆசையினால் தாமரைக்கண்ணியின் கருத்தை வரவேற்று இருவரும் கலந்து பேசி முருகேசனுக்கு இன்னொரு கல்யாணம் செய்துவிட வேண்டியதுதான் என்று தீர்மானித்தார்களல்லவா?

அன்று மத்தியானமே சுந்தரமூர்த்தியைத் திருவொற்றியூருக்கு அம்மணியம்மாள் அனுப்பியது, அந்த யோகாம்பாளின் மூத்த பெண் சுந்தரிக்குக் கல்யாணம் ஆகிவிட்டதா இல்லையா என்பதை அறிந்து வரத்தான்.

போய் வந்த சுந்தரமூர்த்தி, அந்தப் பெண்ணுக்கு இன்னும் திருமணம் ஆகவில்லையென்று சொன்னான். அதன் பிறகுதான் அம்மணியம்மாள் அவனிடம் இன்னொரு கல்யாணம் அவன் செய்துகொள்ளத்தான் வேண்டுமென்பதைச் சொன்னாள்.

அதற்கு முருகேசன், 'தாமரைக்கண்ணிக்குப் பிடித்த பைத்தியம் உங்களையும் பிடித்துக்கொண்டதா?' என்று சொல்லி மறுத்துவிட்டான்.

பிறகு முருகேசன் அபாயமான நோயுற்றுத் தப்பிப் பிழைத்துத் தேகபலமும் மனோபலமும் குன்றியிருந்த சமயத்தில் அவன் இன்னொரு கல்யாணம் செய்துகொள்ளாவிட்டால் குடும்பம் சீரழிந்து போகும் என்று மீண்டும் தாயார் வற்புறுத்தியபோது சம்மதித்துவிட்டான்.

'சரியம்மா, என் சந்தேகம் என்னவானாலும் சரி, தாமரைக் கண்ணியையும் உங்களையும் திருப்தி செய்வதற்காக அதற்குச் சம்மதிக்கிறேன். சரிதானே' என்று முருகேசன் சொன்ன நிமிஷத்திலிருந்து அவனுடைய தாயார் உடனே திருவொற்றியூருக்குப் பறந்து போய் அந்தப் பெண்ணை நிச்சயம் செய்துவிடத் துடித்தாள். ஏனென்றால், அந்தப் பெண்ணுக்குத் திருமணம் ஆகவில்லையென்ற சேதி வந்து மூன்று மாதங்களுக்குமேல் ஆகிவிட்டது. இப்போது எப்படியோ என்ற ஏக்கம் உண்டாகிவிட்டது.

முருகேசனுடைய தாயார் உடனே திருவொற்றியூருக்குப் போகத் துடித்தாலும் வீட்டிலுள்ள சூழ்நிலை அதற்கு இடங்கொடுப்பதாக இல்லை. மாமியார் சாகக் கிடப்பதாக மதுரைக்குப் போன சுந்தரமூர்த்தி இன்னும் திரும்பி வரவில்லை. அவன் மனைவி சந்திராவும் மதுரையில்தான் இருக்கிறாள். அப்படியிருக்கத் தாமரைக்கண்ணியையும் குழந்தையையும் முருகேசனையும் கவனித்துக்கொள்ள வேறு உதவியில்லாதபோது அந்த அம்மாள் எப்படித் திருவொற்றியூருக்குப் போக முடியும்?

அதனால் மிகவும் பழக்கமான வாலிபன் ஒருவனுக்குப் பணம் கொடுத்து அவனிடம் திருவொற்றியூர் யோகாம்பாளுக்கு ஒரு கடிதம் கொடுத்தனுப்பி அதற்குப் பதில் வாங்கிவரச் செய்தாள்.

அந்தக் கடிதத்தில், யோகாம்பாளின் மூத்த பெண் சுந்தரியைப் பெண் கேட்கத் தான் விரைவில் வரப்போவதாகவும், அதற்குமுன் அந்தப் பெண்ணை வேறு யாருக்கும் கொடுக்க



நிச்சயம் செய்துவிட வேண்டாம் என்றும், உடனே பதில் அனுப்ப வேண்டும் என்றும் எழுதப்பட்டிருந்தது.

திருவொற்றியூருக்குச் சென்ற வாலிபன் யோகாம்பாளின் பதில் கடிதத்துடன் திரும்பி வந்தான். அந்தப் பதிலில்;

"அன்பு மிக்க அண்ணியவர்களுக்கு, வணக்கம். உங்கள் கடிதம் வந்தது. என் மூத்த பெண் சுந்தரியைப் பல இடங்களில் பெண் கேட்டார்கள். ஆனால், கடந்த மூன்று ஆண்டுகளில் எங்களுக்கு நேர்ந்துவிட்ட பணக்கஷ்டத்தாலும் வேறு பல துன்பங்களாலும் அவளுடைய திருமணத்தை நடத்திவிட முடியாமற்போய்விட்டது.

"இப்போது அவளை ஒரு நல்ல இடத்தில் பெண் கேட்டுப் பேச்சு வார்த்தைகளும் அநேகமாக முடிந்துவிட்டன. ஆனால், நிச்சயதார்த்தம் ஆகவில்லை. ஏனென்றால், வந்திருந்த மாப்பிள்ளை அழகனாக இல்லையென்று என் மகள் முணுமுணுத்தாள். அதனால் உடனே நிச்சயிக்க முடியாமல் நிச்சயிப்பதைப் பின்னால் வைத்துக்கொள்ளலாமென்று அவர்களை அனுப்பிவிட்டோம். அவர்கள் போனபின் சுந்தரிக்குச் சமாதானம் சொல்லி அவளும் இப்போது சம்மதித்துவிட்டாள்.

"மாப்பிள்ளை வீட்டார் பணக்காரர்கள். கல்யாணத்துக்காகும் இருவீட்டுச் செலவுகளையும் அவர்களே ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றும், எங்கள் கடன் தொல்லைகளைத் தீர்க்க எங்களுடைய தோட்டத்தையாவது வயல்களையாவது அவர்கள் விலைக்கு வாங்கிக்கொள்ளும் உதவியை உடனடியாகச் செய்ய வேண்டுமென்றும் .கேட்டுக்கொண்டோம். அதற்கும் அவர்கள் சம்மதித்து அடுத்த மாதம் முதல் வாரத்தில் வந்து நிச்சயதார்த்தம் செய்துகொள்வதாகப் போயிருக்கிறார்கள். அவர்கள் வர இன்னும் பதினைந்து நாள்கள் இருக்கின்றன.

"நீங்கள் யாருக்குப் பெண் கேட்க வருகிறீர்கள் என்பது தெரியவில்லை. நீங்கள் கேட்கும் மாப்பிள்ளை செங்கற்பட்டு மாப்பிள்ளையைவிட அழகனாகவும் படித்தவனாகவும் பணக்

காரனாகவும், நல்ல இடமாகவும் இருந்தால் இப்போது பேசி இருக்கிற இடத்தை விட்டுவிடுவோம். ஆனால், நீங்கள் இந்தப் பதினைந்து நாள்களுக்கு முன்னால் வரவேண்டும். என் வீட்டுக்காரர் வெளியூருக்குப் போய் இருக்கிறார். எதற்கும் நீங்கள் வந்துபோகும் வரை நிச்சயதார்த்தச் சடங்கை ஒத்தி வைக்க முயல்வேன். நீங்கள் சீக்கிரம் வர வேண்டும். வணக்கம்.

—அன்புள்ள **யோகாம்பாள்**''

என்று எழுதப்பட்டிருந்தது.

கடிதத்தில் குறிப்பிட்டுள்ள பதினைந்து நாட்களுக்குள் திருவொற்றியூருக்குப்போக வேண்டும். இல்லாவிட்டால் அந்தப் பெண் வேறு ஒருவருக்கு நிச்சயம் ஆகிவிடும். அந்தப் பெண்ணை விட்டால் அப்படி அழகான பெண் கிடைப்பது கடினம். கிடைத்தாலும் அப்பெண்ணின் பெற்றோர்கள் யோகாம்பாளையும் நாராயணசாமியையும் போல் நமக்குப் பரிவு காட்டக் கடமைப்பட்டவர்களாக இருக்க முடியாது. மனைவி உயிருடன் இருக்கும் ஒருவனுக்கு இரண்டாந்தாரமாகப் பெண் கொடுக்கத் தயங்குவார்கள் ஆகையால், உடனே போய் யோகாம்பாள் பெண்ணை நிச்சயம் செய்துவிட வேண்டும்.

ஆனால் உடனே போக முடியவில்லையே! 'வீட்டில் யாரைத் துணை வைத்துவிட்டுப் போவது?' என்று முருகேசனுடைய தாயார் தவித்துக்கொண்டிருந்தாள்.

உலகத்தில் ஒரு காரியம் நடக்க வேண்டுமென்று ஒருவர் தவித்துக்கொண்டிருப்பதால் மட்டும் அந்தக் காரியம் நடந்துவிடுவதில்லை. தவிக்காமல் சும்மா இருந்துவிடுவதாலோ அல்லது அக்காரியம் நடக்க வேண்டாமென்று விரும்புவதாலோ அது நடக்காமல் நின்றுவிடுவதில்லை.

ஒரு காரியம் நடக்க வேண்டும் என்றோ, நடக்க வேண்டாம் என்றோ விரும்புவதும் அதற்கான முயற்சிகளைச் செய்வதும் மட்டுந்தான் மனிதனுடைய அதிகாரத்துக்கு உட்பட்டவை. அந்தக் காரியம் நடப்பதோ நடக்காமற்போவதோ மனிதனுடைய அதிகாரத்துக்கு உட்பட்டதாக இருப்பதில்லை.



பின் அவற்றிற்கு அதிகாரி யார்? அந்த அதிகாரியைத்தான் 'விதி' என்றும், 'இயற்கை' என்றும், 'தெய்வம்' என்றும் பல பெயர்களால் குறிப்பிடுகின்றோம். பெரும்பாலும் மக்கள் அந்த அதிகாரியைத் 'தெய்வம்' என்றே நம்புகிறார்கள்.

சிறப்பாகத் தமிழர்கள் எந்தச் செயலையும் தெய்வச் செயலாகவே மதித்து வந்திருக்கிறார்கள். அந்த நம்பிக்கையின் வடிவேதான்,

> **ஒன்றை நினைக்கின் அதுஒழிந்திட் டொன்றாகும்**
> **அன்றி அதுவரினும் வந்தெய்தும்—ஒன்றை**
> **நினையாத முன்வந்து நிற்பினும் நிற்கும்**
> **எனையாளும் ஈசன் செயல்**

என்ற வெண்பா.

'ஒன்றை நினையாத முன் வந்து நிற்பினும் நிற்கும் என்றபடி முருகேசனுடைய தாயார் நினையாத ஓர் உதவி அவள் முன் வந்து நின்றது. அதை 'ஈசன் செயல்' என்றுதானே சொல்லத் தோன்றுகிறது.

அந்த அம்மாள் உடனே திருவொற்றியூருக்குப் போய் யோகாம்பாளின் மகள் சுந்தரியை முருகேசனுக்கு இரண்டாந்தாரமாக நிச்சயம் செய்துவிடத் துடித்துக்கொண்டிருந்தாள்; அப்படிப் போவதற்கு வீட்டில் துணை வைத்துவிட்டுப் போக யாரும் இல்லையே என்று தவித்துக்கொண்டிருந்தாள்.

மதுரைக்குப் போன சுந்தரமூர்த்தி திடீரென்று திரும்பி வந்து அவள் முன் நின்றான். அவன் அவ்வளவு சீக்கிரம் திரும்பி வருவான் என்று நினைத்திருக்கவே முடியாது. ஏனென்றால் சாகக் கிடக்கும் மாமியாரைப் பார்க்கப் போனவன் செத்துப்போன மாமியாரின் கருமங்களெல்லாம் முடிந்த பிறகு தான் வர முடியும். அதற்கு ஒரு மாதமாவது ஆகும் என்றுதான் அம்மணியம்மாள் எண்ணியிருந்தாள்.

சுந்தரமூர்த்தியைக் கண்டு வியப்படைந்த அவள், "என்னாப்பா, இவ்வளவு சீக்கிரம் திரும்பி வந்துவிட்டாய்? உன் மாமியாருக்கு எப்படி இருக்கிறது?'' என்றாள்.

"என் மாமியாருக்கு ஒன்றுமில்லை, அத்தை. ஏதோ மயக்கம்போல் தலையைப் புரட்டிக்கொண்டிருந்தார்களாம். அதைக் கண்ட சந்திரா நோயாளிகள் அப்படித் தலையைப் புரட்டுவது மரணம் நெருங்கிவிட்டதற்கு அறிகுறி என்று கேள்விப்பட்டதை எண்ணிக்கொண்டு யாரையும் கேட்காமல் தந்தியை எழுதி வேலைக்காரனிடம் கொடுத்து அனுப்பச் செய்துவிட்டாளாம். நான் அங்கே போனபோது என் மாமியார் படுக்கையில் உட்கார்ந்து நன்றாகப் பேசிக்கொண்டிருந்தார்கள்; என்னைக் கண்டதும் மகிழ்ச்சியுடன் வரவேற்றார்கள். அவர்களுக்கு அபாயமான நிலைமை ஒன்றும் இல்லையென்று டாக்டர் சொல்லுகிறார். பூரண நலமடையக் கொஞ்ச காலமாகலாம். போனதற்கு மூன்று நாள் விருந்தாளியாக இருந்துவிட்டு இங்கே உங்களுக்குத் துணை இல்லையே என்பதை எண்ணித் திரும்பிவிட்டேன்" என்றான் சுந்தரமூர்த்தி.

அதைக் கேட்டு அந்த அம்மாள் தெய்வமே தனக்குத் துணை வந்துவிட்டதாகப் பூரித்துப் போனாள்.

வீட்டைக் கவனித்துக்கொள்ளச் சுந்தரமூர்த்தி வந்துவிட்டதால் அம்மணியம்மாள் மறுநாளே திருவொற்றியூருக்குப் பயணமானாள்; புறப்படுமுன் ஒரு சுருக்குப் பையில் பத்து நூறு ரூபாய் நோட்டுகளையும் உபயோகிக்காமல் பெட்டியிற்கிடந்த தாமரைக்கண்ணியின் நெக்லசையும் போட்டு இடுப்பில் பத்திரப்படுத்திக்கொண்டு ஒரு டாக்சியில் திருவொற்றியூருக்குப் போய்ச் சேர்ந்தாள்.

யோகாம்பாளும் அவளுடைய கணவர் நாராயணசாமியும் மட்டமற்ற அன்புடன் வரவேற்றார்கள். அவர்களுக்கு நான்கு பெண் குழந்தைகளும், மூன்று ஆண் குழந்தைகளும் உண்டு. மூத்த பெண் சுந்தரி பள்ளி இறுதிப் பரீட்சை தேறினவள். அதற்குமேல் படிக்கப் பிரியமிருந்தும் வசதியில்லாமல் போய்விட்டது. அவளுக்கு அடுத்த இரண்டு பெண்களும் ஏழாவது வகுப்போடு படிப்பை நிறுத்திவிட நேர்ந்துவிட்டது. அவர்களுக்கு அடுத்த ஒரு பெண்ணும் மூன்று பையன்களும் பத்து வயதுக்



கும் குறைவானவர்கள். அவர்கள் மட்டும் ஆரம்பப் பள்ளியில் படித்துக்கொண்டிருந்தார்கள்.

அம்மணியம்மாள் அங்கே போன நேரத்தில் மூத்த பெண் சுந்தரியும் அவளுக்கு அடுத்த இரு தங்கைகளும் தையல் வேலை கற்றுக்கொள்ள ஒரு சிநேகிதியின் வீட்டுக்குப் போயிருந்தார்கள். மற்றக் குழந்தைகள் பள்ளிக்கூடத்துக்குப் போயிருந்தார்கள்.

மூத்த பெண் சுந்தரியை நினைத்துக்கொண்டே போன முருகேசனின் தாயார் வீட்டில் குழந்தைகள் இல்லாதிருப்பதைக் கண்டு, "எங்கே உங்கள் குழந்தைகளெல்லாம்?" என்றாள்.

"குழந்தைகள் எல்லாம் பள்ளிக்கூடத்துக்குப் போயிருக்கிறார்கள்."

"மூத்த பெண் சுந்தரிகூடவா பள்ளிக்கூடம் போயிருக்கிறாள்?"

"இல்லையில்லை. அவளுடைய படிப்பு நின்று வெகு நாள் ஆச்சு. அவளும் அவளுக்கடுத்த இரண்டு பெண்களும் தையல் வேலை கற்றுக்கொள்ள அடுத்த தெருவிலுள்ள ஒரு வாத்தியாரம்மாள் வீட்டுக்குப் போயிருக்கிறார்கள்" என்றார் நாராயணசாமி.

உடனே யோகாம்பாள், "அண்ணி! நீங்கள் சுந்தரியைப் பெண் கேட்க வருவதாக எழுதியிருந்தீர்களே, யாருக்காக?" என்று கேட்டாள்.

"யாருக்காக நான் கேட்க வருவேன்? என் மகனுக்காகத்தான்."

"உங்கள் மகனுக்கா? முருகேசுக்கா?" என்று ஏக காலத்தில் யோகாம்பாளும் நாராயணசாமியும் வியப்புடன் கேட்டார்கள்.

"ஆமாம். முருகேசனுக்குத்தான்! வேறு யார் என் மகன்?"

"முருகேசுக்குத்தான் நாலைந்து வருஷத்துக்கு முன்னாலேயே கல்யாணமாகி ஒரு குழந்தைகூடப் பிறந்ததாகக் கேள்விப்பட்டோமே!'

"ஆமாம்; நீங்கள் கேள்விப்பட்டதெல்லாம் உண்மைதான். நானும் முருகேசனும் திருநெல்வேலியிலுள்ள என் நாத்தியின் மகளுக்குக் கல்யாணம் என்று அங்கே விருந்தாளிகளாகப் போயிருந்தோம். முகூர்த்த நேரத்துக்கு முன்னால் அந்தக் கல்யாண மாப்பிள்ளை பிராமணப் புரோகிதச் சடங்குகளுக்கு உடன்பட மாட்டேன் என்று புரோகிதரை அவமதித்து முரட்டுத்தனமாகப் பேசினான், அதனால் பெண்வீட்டார் அந்த மாப்பிள்ளைக்குப் பெண் கொடுக்கப் பிரியப்படாமல் திடீரென என் மகன் முருகேசனை மாப்பிள்ளையாக்கி அதே முகூர்த்தத்தில் மணப்பெண்ணின் கழுத்தில் தாலி கட்டச் செய்துவிட்டார்கள். அதனால்தான் என் மகனுடைய திருமணத்துக்கு என்று யாருக்கும் அழைப்புகூட அனுப்ப முடியாமற்போய்விட்டது.

"அந்தப் பெண் தாமரைக்கண்ணி தங்கமான பெண்; குணத்திலும் தங்கம்; அழகிலும் தங்கச் சிலைதான்; இரண்டு ஆண்டுகளுக்கு முன்னால் அவளைவிட அழகான ஒரு பெண் குழந்தையைப் பெற்றாள். பிரசவம் வெகு கஷ்டப் பிரசவம். பிரசவித்த நாளிலிருந்து நோயாளியாகவே படுத்திருக்கிறாள். அவளுடைய அழகான குழந்தை ஒருதுளிகூடத் தாய்ப்பால் குடித்ததில்லை. குழந்தையைக் கவனிக்கவோ, கணவனுக்குப் பணிவிடை செய்யவோ சக்தியற்றவளாகப் படுத்தே கிடப்பதை எண்ணியெண்ணிக் கண் கலங்குகிறாள்.

"அவள் நோய் நீங்கிச் சௌக்கியமடைந்தாலும் குடும்பப் பாரத்தைத் தாங்கக்கூடிய சக்தி பெறுவது சந்தேகந்தான். அதனால் கடந்த பல நாள்களாகத் தன் கணவன் இன்னொரு கல்யாணம் செய்துகொள்ளத்தான் வேண்டுமென்று அவளே கட்டாயப்படுத்திக்கொண்டிருக்கிறாள்.



"என் மகனுக்கு இன்னொரு கல்யாணம் செய்துவைக்க வேண்டும் என்பதற்குக் காரணம் அவள் நோயாளியாக இருப்பது மட்டுமல்ல. வெகு முக்கியமான இன்னொரு காரணம் என்னவென்றால், அவளுக்குப் பிரசவம் பார்த்தபெரிய டாக்டரம்மாள் தாமரைக்கண்ணி மறுபடியும் கருத்தரித்தால் நிச்சயமாக உயிருக்கு அபாயம் உண்டாகுமென்று கண்டிப்பாகச் சொல்லியிருக்கிறாள். அதனால் தாமரைக்கண்ணி உடல்நலம் அடைந்தாலும் கருத்தரிக்கக்கூடாது. இதனால் என் மகனுக்கு ஆண் சந்ததி இல்லாமற்போய்விட்டதே என்று ஏக்கமடைந்திருந்த நான், தாமரைக்கண்ணி தன் கணவன் இன்னொரு கல்யாணம் செய்துகொள்ள வேண்டும் என்று வற்புறுத்தியதை ஆமோதித்து நானும் என் மகனை வற்புறுத்தினேன். அவனும் எங்கள் விருப்பத்தை ஏற்றுக்கொண்டான். என் மகனுக்கு இன்னொரு கல்யாணம் என்ற எண்ணம் உண்டானபோதே உங்களுடைய மூத்த பெண் சுந்தரியைத்தான் மருமகளாக்கிக் கொள்ள வேண்டுமென்று தீர்மானித்தேன், நல்ல வேளையாக என் வீட்டு மருமகள் ஆவதற்கே அவளுக்கு இதுவரையிலும் கல்யாணம் ஆகாமலேயே இருந்திருக்கிறது. இரண்டாந்தாரமாகக் கொடுக்கலாமா என்று எண்ணிவிட வேண்டாம். முருகேசனுக்கு இருபத்தேழு வயதுதான் ஆகிறது. நல்ல அழகன்; தங்கமான குணமுள்ளவன். ஒன்றும் யோசனை பண்ணாமல் அவனுக்கே சுந்தரியைக் கொடுக்க இப்போதே நிச்சயம் சொல்லிவிடுங்கள். பரிசம் போட்டு நிச்சயம் செய்துகொண்டு போகத்தான் வந்திருக்கிறேன். உங்கள் பெண்ணின் வயிற்றிலாவது எனக்கு ஒரு பேரன் பிறக்கட்டும்" என்றாள் அம்மணியம்மாள்.

எல்லாவற்றையும் அனுதாபத்தோடு கேட்டுக்கொண்டிருந்த யோகாம்பாளும் நாராயணசாமியும் ஒருவரையொருவர் பார்த்துக்கொண்டார்கள், சிறிது நேர மௌனத்துக்குப்பின் யோகாம்பாள், "அண்ணி, உங்களுக்கு இல்லாத உரிமையா இன்னொருத்தருக்கு" என்று சொல்லி முடிக்குமுன் அவளுடைய கணவர், "செங்கற்பட்டிலிருந்து ஒரு பெரிய

இடத்துக்காரர்கள் வந்து பெண் கேட்டுப் போயிருக்கிறார்கள். நிச்சயதார்த்தம் இன்னும் நடக்கவில்லையென்றாலும் பேச்செல்லாம் முடிந்து நிச்சயம் ஆகிவிட்ட மாதிரிதான். இரு வீட்டுச் செலவுகளையும் அவர்களே ஏற்றுக்கொண்டிருப்பது மல்லாமல் எங்களுடைய கடன்களையெல்லாம் தீர்க்க எங்கள் நிலங்களை விலைக்கு வாங்கிக்கொள்ளவும் ஒப்புக்கொண்டும் போயிருக்கிறார்கள்; இன்னும் பத்து நாளில் வந்து எங்கள் கடனைத் தீர்த்து நிச்சயதார்த்தச் சடங்குகளை நடத்தி முகூர்த்த நாளையும் தீர்மானிக்கப் போகிறார்கள். இந்த நிலைமையில் உங்களுக்கு எப்படி நாங்கள் நிச்சயம் சொல்வது?" என்றார்.

"அதென்ன தம்பி அப்படிச் சொல்லுகிறாய்? நிச்சயதார்த்தச் சடங்குகளைச் சாஸ்திரப்படி புரோகிதரைக் கொண்டு நடத்தி, முகூர்த்தம் வைத்துப் பெரிய திருமணக் கொட்டகை அலங்கரித்து, மணவறையும் சிங்காரித்து, பந்துக்களெல்லாம் கூடிச் சடங்குகள் நடத்தித் தாலி கட்டப்போகிற சமயத்தில், நிச்சயிக்கப்பட்ட மாப்பிள்ளைக்குப் பெண்ணைக் கொடுக்க மனமில்லாமல் என் மகனைத் திடீரென்று மாப்பிள்ளையாக்கித் தாலி கட்டச் செய்தார்களே! அப்படியெல்லாமிருக்க, இன்னும் நிச்சயதார்த்தம் ஆகாத மாப்பிள்ளைக்குப் பெண் கொடுக்கப் பிரியமில்லையென்று சொல்லிவிடுவதில் என்ன குற்றம்?" என்றாள் முருகேசனின் தாயார்.

அப்படியே செங்கற்பட்டு மாப்பிள்ளையை விட்டுவிட்டு முருகேசனுக்கே மகளைக் கொடுத்துவிடலாம் என்றுதான் யோகாம்பாள் நினைத்தாள். ஆனால், செங்கற்பட்டு மாப்பிள்ளை வீட்டார் 'கல்யாணத்துக்கு முன் எங்கள் கடன்களையெல்லாம் தீர்க்க ஒப்புக்கொண்டிருக்கிறார்களே' என்ற நினைப்பு வந்து சும்மா இருந்துவிட்டாள்.

யோகாம்பாள் மட்டுமல்ல, அவளுடைய கணவர் நாராயணசாமியும் முருகேசன் தாயாரிடத்தில் மிக்க நன்றி விசுவாசம்



உள்ளவர். அதனால் செங்கற்பட்டு மாப்பிள்ளை வீட்டாருடன் பேசி முடித்திருக்கிற ஒப்பந்தத்தை முறித்துவிட முடியாது என்ற தம்முடைய தீர்மானத்தை வாய்விட்டுச் சொல்லிவிடத் துணிவு வராமல் குழம்பிக்கொண்டிருந்தார்.

இந்தச் சமயத்தில், 'ஒன்றை நினையாதமுன் வந்து நிற்பினும் நிற்கும். எனையாளும் ஈசன் செயல்' என்றபடி ஒரு நிகழ்ச்சி நடந்தது. தபால்காரன் நாராயணசாமிக்கு வந்த ஒரு கடிதத்தைக் கொண்டுவந்து கொடுத்தான்.

அதை நாராயணசாமி பிரித்துப் பார்த்தார். அதில்; "அன்புள்ள நாராயணசாமி அவர்களுக்கு, வணக்கம். நாங்கள் அடுத்த வியாழக்கிழமை மாலைக்குள் அங்கு வந்து சேருவோம். மறுநாள் வெள்ளிக்கிழமை காலை ஆறு மணி முதல் ஒன்பது மணிவரை நல்ல நேரம். அதற்குள் நிச்சயதார்த்தச் சடங்குகளை நடத்திவிட எல்லா ஏற்பாடுகளையும் செய்து வைக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறேன். நீங்கள் கேட்டுக்கொண்டபடி உங்கள் கடன் தொல்லைகளைத் தீர்த்து வைக்க எனக்கு மிகுந்த ஆர்வம் உண்டு. ஆனால், அதை உடனடியாகச் செய்து வைக்க முடியவில்லை. திருமணத்துக்குப் பின் அதற்கான முயற்சிகளைச் செய்கிறேன். பேசினபடி திருமணத்துக்கும் இரு வீட்டுச் செலவுகளையும் நான் மேற்கொள்கிறேன். அத்துடன் உங்கள் பிரயாணச் செலவுகளையும் நான் ஏற்றுக்கொள்ளுகிறேன்—அன்புள்ள வேணுகோபால்" என்று எழுதப்பட்டிருந்தது.

வேணுகோபால் என்பவர் செங்கற்பட்டு மாப்பிள்ளையின் தந்தை. கடிதத்தைப் படித்தவுடனே நாராயணசாமிக்கு ஏமாற்றமும் எரிச்சலும் வந்துவிட்டன. முகம் சுண்டிக் கடிதத்தை விரித்தபடியே யோசனையில் ஆழ்ந்துவிட்டார்.

கணவனுடைய முக வாட்டத்தைக் கவனித்த யோகாம்பாள், "கடிதம் யார் எழுதினது? என்ன எழுதியிருக்கிறது?" என்றாள்.

"இந்தா, நீயே படித்துப் பார்" என்று நாராயணசாமி கடிதத்தை மனைவியிடம் கொடுத்தார்.

யோகாம்பாள் கடிதத்தைப் படித்துவிட்டு, "பின்னென்ன? ரொம்ப நல்லதாய்ப் போச்சு. நிலங்களை விலைக்கு வாங்கிக் கொண்டு கடன் தொல்லையைத் தீர்ப்பதாக ஒப்புக்கொண்டதால்தானே அவர்களுக்குப் பெண் கொடுக்கச் சம்மதித்தோம். அவர்களே சொன்ன சொல்லை அழித்துவிட்டபோது நமக்கென்ன? முன்பின் அறியாத புது இடத்தில் பெண்ணைக் கொடுக்கப் போகிறோமே என்று எனக்கு மனச்சமாதானமே இல்லாமலிருந்தது. பேசாமல் நம்ம முருகேசுக்கே கொடுத்துவிடலாம்" என்று கணவனிடம் சொல்லிவிட்டு, முருகேசனுடைய தாயார் பக்கம் திரும்பி, "அண்ணீ! எங்களுக்கு இப்போது பணக்கஷ்டம் மிகுந்த காலம். இரு வீட்டுச் செலவுகளையும் நீங்களே செய்து பெண்ணைக் கட்டிக்கொள்ளுங்கள். கடன் தொல்லையைப்பற்றிப் பின்னால் யோசித்துக்கொள்வோம்" என்றாள்.

"நீங்கள் கொடுக்க வேண்டிய கடன் எவ்வளவு?" என்றாள் முருகேசன் தாயார்.

"கிட்டத்தட்ட ஐயாயிரம் ரூபாய்" என்றார் நாராயணசாமி.

உடனே அம்மணியம்மாள் தன் இடுப்பிலிருந்த பையை இழுத்து, அதிலிருந்த பத்து நூறு ரூபாய் நோட்டுகளையும் எடுத்து, "இந்தா தம்பீ! இதில் ஆயிரம் ரூபாய் இருக்குது. இன்னும் நாலாயிரம் ரூபாய் நான் ஊருக்குப் போய் ஏற்பாடு செய்து கல்யாணத்துக்கு முன்னால் தருகிறேன். முதலில் உங்கள் கடன் தொல்லை தீரட்டும்" என்று பணத்தை நீட்டினாள்.

எல்லையற்ற மகிழ்ச்சியுடன் அதை வாங்கிக்கொண்ட நாராயணசாமி வந்தனம் சொல்லவோ நன்றி கூறவோ வார்த்தை வராமல் தடுமாறிப் புன்சிரிப்போடு தலைவணங்கிக் கை கூப்பினார்.

அடுத்தபடி அம்மணியம்மாள் பையிலிருந்த நெக்லசை எடுத்து, "இந்தா யோகாம்பா, இது ரங்கூன் கமலம் நெக்லஸ். ஆயிரத்து ஐந்நூறு ரூபாய்க்கு வாங்கினது. இது உன் பெண்ணுக்குப் பரிசம்" என்று அதை அவளிடம் கொடுத்தாள்.



ஒளி வீசிய அந்த நெக்லசை வாங்கிக் கண்ணில் ஒற்றிக் கொண்டு, "அண்ணீ! எங்கள் குடும்பத்தைக் காக்க வந்த தெய்வம் நீங்கள். முன்னே எங்கள் வீடு ஏலம் போகாமல் காப்பாற்றினீர்கள். அதற்கே நாங்கள் ஏழேழு ஜென்மத்துக்கும் நன்றி செலுத்த வேண்டும். இப்போது எங்கள் கடன்களைத் தீர்த்துச் சொத்துகளைக் காப்பாற்றியதோடு எங்கள் பெண்ணுக்கும் நல்வாழ்வு கொடுத்தீர்கள். இந்த நன்றிக் கடனை நாங்கள் எத்தனை ஜென்மம் எடுத்தாலும் செலுத்த முடியாது. இருந்தாலும் இப்போது நீங்கள் கொடுக்கிற ஐயாயிரத்துக்கு எங்கள் தோட்டத்தையாவது வயல்களையாவது உங்களுக்கு இஷ்டமானபடி கிரையமாக்கிவிடுகிறோம்" என்றாள் யோகாம்பாள்.

"அதெல்லாம் அப்புறம் பார்த்துக்கொள்ளலாம். கல்யாணத்தை நிச்சயப்படுத்து" என்றாள் அவள்.

"இன்னுமென்ன நிச்சயப்படுத்துவது? நாளைக்கே முகூர்த்தம் இருந்தால் திருமணத்தை நடத்திக்கொள்ளுங்கள்" என்றார் நாராயணசாமி.

அவர் இதைச் சொல்லிக்கொண்டிருக்கும்போதே சுந்தரியும் அவளுக்கடுத்த இரண்டு தங்கைகளும் வந்துவிட்டார்கள்.

உடனே யோகாம்பாள் அம்மணியம்மாளைப் பார்த்து, "அண்ணீ! உங்கள் கையாலேயே நெக்லசைச் சுந்தரிக்கு அணிந்துவிடுங்கள்" என்றாள்.

"வேண்டாம் வேண்டாம். கட்டுக்கழுத்தி உன் கையாலேயே அணிந்துவிடு. குத்து விளக்கை ஏற்றிக் குலதெய்வத்தைக் கும்பிட்டு நீயே போட்டுவிடு" என்றாள் அம்மணியம்மாள்.

அதன்படியே யோகாம்பாள் எழுந்து போய்க் குத்துவிளக்கேற்றி வைத்தாள். நாராயணசாமி விரைந்து சென்று

தேங்காய், பழம், புஷ்பம், வெற்றிலை பாக்கு, கற்பூரம், சாம்பிராணி முதலியவற்றை வாங்கி வந்து நெக்லசைப் படையலில் வைத்து வழக்கப்படி பூசை செய்தார். பிறகு ஜொலித்துக்கொண்டிருந்த நெக்லசை எடுத்து யோகாம்பாள் சுந்தரியின் கழுத்தில் அணிந்துவிட்டு, "சுந்தரீ! அத்தைக்கு நமஸ்காரம் பண்ணு" என்றாள்.

இந்தச் சடங்கெல்லாம் எதற்காக என்று தெரியாமல் திகைத்துக்கொண்டிருந்த சுந்தரி, பளபளக்கும் நெக்லஸ் தன் மார்பை அலங்கரிக்கிற மகிழ்ச்சி மயக்கத்துடன் மண்டியிட்டு அத்தையை வணங்கினாள்.

அத்தை அவளை வாரி அணைத்துக்கொண்டாள். நான்கு வருடங்களுக்கு முன்னால் ஒரு கல்யாண வீட்டில் பதினேழு வயதுப் பெண்ணாகச் சுந்தரியைப் பார்த்தபோதே அவளுடைய அழகு அம்மணியம்மாளைக் கவர்ந்தது. இப்போது இருபத்தொரு வயதுப் பருவப் பெண்ணான சுந்தரியின் உடற்கட்டும் முகப்பொலிவும் அம்மணியம்மாளுக்குக் கண்கொள்ளாக் காட்சியாகப் பூரித்துப் புளகாங்கிதம் அடையச் செய்து விட்டது.

யோகாம்பாளின் விருப்பப்படி சுந்தரிக்கு இளைய இரு பெண்களும் அத்தையை வணங்கினார்கள். அவர்களையும் அணைத்து ஆசீர்வதித்தாள் அத்தை.

அவசரம் அவசரமாகச் சம்பந்தியம்மாளுக்கு விருந்து சமைக்கப்பட்டது. பள்ளிக்குப் போயிருந்த மற்றக் குழந்தைகளும் வந்தார்கள். அவர்களுடன் அத்தை சல்லாபித்துக் கொண்டிருப்பதற்குள் சாப்பாடு தயாராகிவிட்டது.

சாப்பாட்டுக்குப் பின் மாலை ஐந்து மணி வரையிலும் ஓய்வாக இருந்துவிட்டு முருகேசன் தாயார் விடை பெற்றுக் கொண்டாள்.

புறப்படும்போது, "இன்றைக்கே செங்கற்பட்டுக்காரருக்கு 'சுந்தரிக்கு வேறு இடத்தில் நிச்சயமாகிவிட்டது' என்று எழுதி விடுங்கள்" என்று நாராயணசாமியிடம் சொன்னாள். அவளும், "உடனே இப்போதே எழுதிவிடுகிறேன்" என்றார்.



## அத்தியாயம் 7

தன் திட்டத்தை நிறைவேற்றிவிட்ட வெற்றிப் பெருமிதத்துடன் வீட்டுக்குத் திரும்பி வந்த அம்மணியம்மாள் முருகேசனிடமும் தாமரைக்கண்ணியிடமும் சுந்தரமூர்த்தியிடமும் சுந்தரியின் அழகைப்பற்றியும் அவளுடைய பெற்றோர்களின் அன்பைப்பற்றியும் வாய் ஓயாமல் சொல்லி மகிழ்ந்தாள்.

முருகேசன் விருப்பு வெறுப்புக் காட்டாமல் மௌனமாகக் கேட்டுக்கொண்டான்.

தாமரைக்கண்ணி, தன் கணவருக்கு ஓய்வு கிடைத்து உடல் நலம் கெடாமல் இருக்க வேண்டும் என்றே அவர் இன்னொரு கல்யாணம் செய்துகொள்ள வேண்டுமென்று அவள் வெளியிட்ட விருப்பம் கைகூடிவிட்டதைக் கண்டு களிப்படைந்தாள்.

சுந்தரமூர்த்தியோ, தன்னுடைய தங்கை உயிரோடு இருக்கும்போது அவளுடைய இடத்தை இன்னொரு பெண்ணுக்கு விட்டுவிட நேர்ந்துவிட்டதே என்ற வருத்தத்தைக் காட்டிக்கொள்ளாமல் அம்மணியம்மாள் சொன்னதையெல்லாம் கேட்டுக்கொண்டான்.

இரவு நெடுநேரம் வரையிலும் அம்மணியம்மாள் தான் திருவொற்றியூர் சென்று சாதித்துவிட்டதைப்பற்றியே பேசிக் கொண்டிருந்துவிட்டுக் கண்ணயர்ந்தாள்.

பொழுது விடிந்தது. ஆசாபாசங்களை ஒதுக்கிவிட்டு நடக்கவேண்டிய காரியங்களைப்பற்றித் தனக்குள்ள பொறுப்புகளை ஆர அமர எண்ணிப் பார்க்கவேண்டிய நேரம் வந்தது.

விரும்பிய பெண் நிச்சயமாகிவிட்டது. இனி கல்யாணம் நடக்கப் பணம் வேண்டுமே.

மகனுக்கு ஆண் குழந்தை பிறக்க வேண்டும் என்ற ஆசையினாலும் அதற்குத் திருவொற்றியூர் பெண்ணையே கட்டி வைக்க வேண்டுமென்ற தீவிரத்தாலும், திருமணத்துக்கு முன்னால் பெண் வீட்டாருடைய கடன்களைத் தீர்த்து வைப்பதாகவும், இருவீட்டுச் செலவுகளையும் ஏற்றுக்கொள்வதாகவும் வாக்களித்தாகிவிட்டது.

கடன்களைத் தீர்த்து வைக்கவே இன்னும் நாலாயிரம் ரூபாய் வேண்டும். இருவீட்டுச் செலவுகளுக்கும் பணம் வேண்டும். ஆடம்பரமில்லாமல் ஒரு நாள் கல்யாணமாகச் செய்தாலும் இருவீட்டுச் செலவுகளுக்கும் குறைந்தது நாலாயிரம் ரூபாயாவது வேண்டும். ஆக இன்னும் எட்டாயிரம் ரூபாய் வேண்டுமே! அதற்கு என்ன வழி?

முருகேசனுடைய தந்தை விட்டுப் போனது பதினையாயிரம் ரொக்கப் பணமும், குடியிருக்கும் வீடும், பத்து ஏக்கர் நஞ்சை நிலங்களுமே. நஞ்சை நிலங்கள் என்று சொல்லப் பட்டாலும் அவைகளுக்குப் பாசனம் கிணற்று நீர்தான். கிணறுகளில் தண்ணீர் இருக்கும் காலங்களில்தான் வெள்ளாமை. ஆனாலும் மொத்தத்தில் நிலங்களின் வருமானம் குடும்பச் செலவுகளுக்குப் போதியதாக இருக்கும்.

முருகேசனுக்கும் தாமரைக்கண்ணிக்கும் திருமணம் நடப்பதற்கு முன் ரொக்கப் பணம் பதினையாயிரம் அப்படியே பாங்கியில் இருந்தது. திருமணம் எதிர்பாராத விதமாகத் திடீரென்று திருநெல்வேலியில் நடந்தபோது தாமரைக் கண்ணிக்கு நிச்சயமாகியிருந்த பம்பாய் மாப்பிள்ளை ஜெயவீரனுக்கு, அவன் கல்யாணச் செலவுக்கென்று கொடுத்திருந்த பணத்தையும் பிரயாணச் செலவுகளையும் கொடுக்க வேண்டி நேர்ந்தது. அதற்காகத் திருநெல்வேலியில் வாங்கியிருந்த கடனைத் தீர்க்கப் பாங்கியிலிருந்த பணத்தில் ஒன்பதாயிரம் எடுக்க நேர்ந்தது. அதன் பிறகு, தாமரைக்கண்ணியைப்



பிரசவத்துக்காக மருத்துவ மனையில் சேர்த்த நாளிலிருந்து இன்றளவும் வைத்தியச் செலவுகளுக்காகச் சிறுகச் சிறுகப் பாங்கியிலிருந்து பணம் எடுத்துக் கடைசியாக ஆயிரத்து நானூறு ரூபாய் மிச்சம் பாங்கியில் இருந்தது. அதிலிருந்து எடுத்த ஆயிரம் ரூபாயைத்தான் திருவொற்றியூருக்குப் பரிசம் போட எடுத்துச் சென்றது. அந்த ஆயிரந்தான் கடன்களைத் தீர்க்க முன்பணமாகக் கொடுக்கப்பட்டு நெக்லஸ் பட்டும் பரிசமானது.

இந்த நிலைமையில் எட்டாயிரம் ரூபாயை எப்படிச் சரிக்கட்டுவது? அம்மணியம்மாள் எண்ணியெண்ணிப் பார்த்தாள். வீட்டிலுள்ள நகைகளையெல்லாம் கணக்குப் போட்டு, 'என்னுடைய பழைய நகைகள் ஐயாயிரம் அல்லது ஆறாயிரம் பெறும். அவசரத்துக்கு விற்கப்போனால் அதற்கும் குறைவாகத்தான் போகும். தாமரைக்கண்ணியின் காதுகளில் உள்ள வைரத் தோடுகளும் கைகளிலிருக்கிற வளையல்களும் மூவாயிரம் நாலாயிரம் பெறும். ஆனால் ஐயோ! பாவம்! நொந்து போய்க் கிடக்கிற அவளுடைய காதையும் கைகளையுமா மூளி பண்ணுவது? அவளுடைய நெக்லஸ்தான் சும்மா கிடந்தது. அதைப் பரிசம் போட்டுவிட்டோம். கேட்டால் தோடுகளையும் வளையல்களையுங்கூட அவள் மகிழ்ச்சியுடன் தந்துவிடுவாள். ஆனாலும் அவைகளைக் கழற்றச் சொல்வது மகாபாவம்' என்றெல்லாம் எண்ணிப் பார்த்து நகைகளை விற்பதைப் பற்றிய எண்ணத்தை விட்டுவிட்டாள்.

வெவ்வேறு இடங்களில் 'பாண்டு' எழுதிக் கொடுத்து எட்டாயிரம் சேகரம் செய்ய முயன்றாள். அது பலிக்கவில்லை. இருபது நாள்கள் எங்கெங்கோ கேட்டுப் பார்த்துவிட்டு அடுத்த தெருவில் ஒரு பணக்கார விதவையம்மாளுக்கு வீட்டைக் கொதுவை வைத்து நூற்றுக்கு மாதம் ஒரு ரூபாய் வட்டிக்குப் பத்திரம் ரிஜிஸ்டர் செய்து கொடுத்து எட்டாயிரம் ரூபாய் வாங்கினாள்.

அந்த வீடு இந்த அம்மாளுக்கே சொந்தமானது. எப்படியென்றால், இந்த அம்மாளை முருகேசனுடைய தந்தைக்குப்

பெண் கேட்டபோது இவளுடைய பெற்றோர்கள் வீட்டைப் பெண்ணுக்கு எழுதி வைத்தால்தான் பெண் கொடுப்போம் என்றார்கள். முருகேசனுடைய தந்தையின் பெற்றோர்கள் பெண் நல்ல பெண் என்பதனால் அப்படியே வீட்டை இந்த அம்மாளுக்கு எழுதி வைத்தார்கள். அதனால் வேறு யாருடைய தயவும் இல்லாமல் அடகு வைத்துப் பணம் வாங்க முடிந்தது.

இதுவரைக்கும் கடன் வாங்கவேண்டிய அவசியம் ஏற்பட வில்லை. ஆனால், மகனுக்கு ஆண் குழந்தை பிறக்க வேண்டும் என்ற ஆசையினாலும், நோயாளியான தாமரைக்கண்ணியையும் குழந்தையையும் கவனித்துக்கொண்டு தனக்கும் மகனுக்கும் ஓய்வு கொடுக்க ஒரு பொறுப்பாளி வேண்டும் என்ற காரணத் தாலும், அதற்குத் திருவொற்றியூரப் பெண்ணை விட்டுவிடாமல் கட்டிவைக்க வேண்டுமென்ற அவசரத்தாலும் இருபதினாயிரத் துக்கு மேலும் விலை பெறக்கூடிய வீட்டை எட்டாயிரம் ரூபாய்க்கு, அதிக வட்டிக்கு அடகு வைத்துவிட்டாள் அம்மணியம்மாள்.

அதன் பிறகுதான் அந்த அம்மாளுக்குப் பணத்தின் அருமையும் கடன் வாங்குவதால் வரும் மனக்கவலையும் இன்னவெனத் தெரிய நேர்ந்தது. அதனால் அவள் திரு வொற்றியூர்ச் சம்பந்தியின் கடன்களைத் தீர்ப்பதற்காகக் கொடுக்கிற ஐயாயிரம் ரூபாய்க்குத் தங்களுடைய நிலங்களில் எதையாவது கிரயம் செய்து கொடுப்பதாக யோகாம்பாள் சொன்னபோது, 'அதெல்லாம் அப்புறம் பார்த்துக்கொள்ளலாம்' என்று தான் சொன்னது சரியல்லவென்றும், மறுபடியும் போகும் போது எந்த நிலத்தையாவது ஈடுகொள்ள வேண்டும் என்றும் முருகேசன் தாயார் எண்ணினாள்.

ஏறத்தாழ ஒரு மாதத்துக்குப் பிறகு பணத்துடன் திரு வொற்றியூருக்குப் புறப்பட்டாள். புறப்படும்போது கனத்த மழை பெய்யத் தொடங்கியது. மழை ஓயட்டும் என்று உட் கார்ந்தாள். உடனே சில யோசனைகள் தோன்றின.



பெண் வீட்டாருக்குக் கடன்களைத் தீர்க்க நாலாயிரம் கொடுத்துவிட்டு மீதியுள்ள நாலாயிரத்தையும் கல்யாணத் துக்குச் செலவு செய்துவிட்டால் தாமரைக்கண்ணிக்கு மருந்துகள் வாங்கவும் முருகேசனுடைய உடம்புதேறப் போஷாக்கு டானிக்குகள் வாங்கவும், தை மாதத்தில் நிலங்களில் மகசூல் வருகிற வரையிலும் வீட்டுச் செலவுகளுக்கும் கையில் பணம் வேண்டுமே! டாக்டருக்குக் கொடுக்கவேண்டிய 'பீஸ்' பாக்கியும் இருக்கிறதே. அதனால் கல்யாணச் செலவுகளைச் சுருக்கமாகச் செய்ய அவர்களைச் சம்மதிக்கச் செய்யவேண்டும். அதன் பிறகு கடனைத் தீர்க்கக் கொடுக்கிற ஐயாயிரம் ரூபாய்க்கு ஈடாக நிலம் வாங்கிக்கொள்ள வேண்டும் என்று தீர்மானித்துக்கொண்டாள்.

மழை நின்றபின் ஒரு டாக்சியில் திருவொற்றியூருக்குப் போய்ச் சேர்ந்தாள். சம்பந்தியம்மாளுடைய வருகையைத் தினந்தினம் வெகு ஆவலோடு எதிர்பார்த்துக்கொண்டிருந்த யோகாம்பாளும் அவள் கணவரும் உரிய மகிழ்ச்சியுடனும் மரியாதையுடனும் வரவேற்றார்கள்.

சந்திப்பின் சல்லாபங்கள் முடிந்தபின், முருகேசன் தாயார் நாராயணசாமியைப் பார்த்து, "தம்பீ! உங்கள் கடன்களைத் தீர்க்கப் பணம் கொண்டுவந்திருக்கிறேன். யாராருக்குக் கொடுக்க வேண்டுமோ அவர்களைப் பார்த்துக் கொடுக்க வேண்டியதைக் கொடுத்துப் பத்திரங்களைத் தீர்த்து வாங்கிவிட வேண்டும். முதலில் அதைக்கவனியுங்கள். எத்தனை பேருக்குக் கொடுக்க வேண்டும்?" என்றாள்.

"கடனெல்லாம் ஒரே இடத்தில்தான் வெவ்வேறு பத்திரங் களின்மேல் வாங்கினது" என்றார் நாராயணசாமி.

"அவரைப் பத்திரங்களுடன் இங்கே அழைத்து வர முடியுமா?"

"அவர் கண்ணப்பர் என்கிற என்னுடைய நண்பர்தான்; அழைத்தால் மறுக்கமாட்டார். போய்ப் பார்க்கட்டுமா?" என்றார் நாராயணசாமி.

உடனே யோகாம்பாள் குறுக்கிட்டு, "வேண்டாம், வேண்டாம். நமக்குப் பணம் வேண்டியபோதெல்லாம் அவரிடம் போய்க் கெஞ்சினோம். அவரும் அன்போடு பேசி அவசரங் களுக்குப் பணம் கொடுத்தார். இப்போது கடனைத் தீர்க்க இங்கே பத்திரங்களுடன் வரச்சொல்வது மரியாதையல்ல. நாமே அவரிடம் போவதுதான் ஒழுங்கு" என்றாள்.

"ஆமாம் தம்பீ. யோகாம்பாள் சொல்லுவது நியாயந்தான். நீங்கள் போய் அவர் வீட்டில் இருக்கிறாரா, கணக்குத் தீர்க்க வரலாமா என்று அறிந்துகொண்டு வருவது நல்லது" என்றாள் முருகேசன் தாயார்.

நாராயணசாமி உடனே எழுந்து போய்விட்டார். பிறகு யோகாம்பாளுடன் பேசிக்கொண்டிருந்த பல பேச்சுகளுக் கிடையில் அம்மணியம்மாள், "யோகாம்பா! நீ என்னவோ முன்னே நான் இங்கே வந்திருந்தபோது சொன்னாயே, நான் உங்கள் கடன்களைத் தீர்க்கக் கொடுக்கிற பணத்துக்கு ஈடாக ஏதோ நிலத்தைக் கிரயம் செய்து கொடுப்பதாக...."

"ஆமாம்; இப்பவும் நான் அதை மறந்துவிடவில்லை. உங்களுக்குப் பிரியமானபடி தோட்டத்திலோ வயல்களிலோ அந்தப் பணத்துக்குச் சரியாக விலைபெறக்கூடிய அளவு கிரயம் செய்துகொள்ளுங்கள்" என்றாள் யோகாம்பாள்.

"எனக்கு அப்படிக் கிரயம் செய்துகொள்ள வேணுமென்ற ஆசையில்லை. உதவி செய்வது போல் நிலத்தைப பிடுங்கிக் கொண்டதாக இருக்க வேண்டாம். நீ சொல்லுகின்ற தோட்டத்தையோ வயலையோ உன் மகள் பேருக்கே, சீதனமாக எழுதிவிடு" என்றாள் அம்மணியம்மாள்.

"அப்படியே செய்துவிடுவோம்" என்று யோகாம்பாள் சொல்லிக்கொண்டிருக்கும்போது நாராயணசாமி திரும்பி வந்தார். கடன் கொடுத்த கண்ணப்பர், வீட்டில் இருப்பதாகவும் வரச்சொன்னதாகவும் சொன்னார். யோகாம்பாள், அம்மணியம்மாளுடன் பேசினதைக் கணவரிடம் சொன்னாள். அவரும் அதை மகிழ்ச்சியுடன் வரவேற்றார்.



மூவரும் கண்ணப்பர் வீட்டுக்குப் போனார்கள். அவர் இவர்களை அன்புடன் வரவேற்றார். கணக்குப் பார்த்ததில் நாராயணசாமி கட்டவேண்டிய கடன் நாலாயிரத்து எண்ணூற்று ஐம்பத்தேழு ரூபாய் என்று ஏற்பட்டது. அதை நாராயணசாமி ஒத்துக்கொண்டார்.

"கொஞ்சம் வட்டியில் குறைத்துக்கொள்ளுங்கள்" என்று அம்மணியம்மாளே கண்ணப்பரைக் கேட்டுக்கொண்டாள்.

அதற்குக் கண்ணப்பர், "நாராயணசாமி எனக்கு நெடு நாளைய நண்பர். அவருக்காக நீங்கள் சிபார்சு செய்வதில் மகிழ்ச்சிதான். அவருக்காக நானே மற்றவர்களுக்குக் கொடுப்பதைவிடக் குறைந்த வட்டிக்குத்தான் கொடுத்தேன். நீங்கள் அவருக்குச் சம்பந்தி. அதனால் எனக்கும் சம்பந்தி போலத்தான். நீங்கள் கேட்கிறபோது நான் எப்படி இல்லை யென்பது? கொஞ்சம் குறைத்துக்கொண்டே கொடுங்கள்" என்றார்.

முருகேசன் தாயார், தான் கொண்டுவந்திருந்த நாலாயிரத் தோடு முன்னே நாராயணசாமியிடம் கொடுத்திருந்த ஆயிரத்தையும் வாங்கிக்கொண்டு அந்த ஐயாயிரத்தில் நாலாயிரத்து இருநூற்றைம்பது ரூபாயைக் கண்ணப்பரிடம் கொடுத்தாள்.

அவர் அதை எண்ணிப் பார்த்துவிட்டு, "ரொம்பவும் குறைத்துவிட்டீர்களே!" என்றார்.

"பரவாயில்லை, கல்யாண காரியம்; தயவு பண்ணுங்கள்" என்றாள் அம்மணியம்மாள்.

கண்ணப்பர் பதில் பேசாமல் பத்திரங்களைத் தீர்த்துக் கொடுத்துவிட்டார்.

யோகாம்பாள் விருப்பத்தின்படி நாராயணசாமியின் நிலங் களில் ஒரு பகுதியைச் சுந்தரிக்குச் சீதனமாகக் கொடுத்து விட்டதாக ஒரு பத்திரம் கண்ணப்பரைக்கொண்டே எழுதப்

பட்டது. அதை ரிஜிஸ்டர் செய்து கொடுப்பதற்காக நாராயண சாமியிடம் கொடுத்தார்

கண்ணப்பர் வீட்டிலிருந்து திரும்பி வந்து சாப்பாடு முடிந்த பின் திருமணத்துக்கு முகூர்த்த நாள் குறிக்கப் புரோகிதரை அழைத்து வர நாராயணசாமியை அனுப்பிவிட்டு அம்மணியம்மாளும் யோகாம்பாளும் ஏகாந்தமாகப் பேசிக் கொண்டிருந்தார்கள்.

அப்போது அம்மணியம்மாள், "யோகாம்பா! உங்கள் கடன் தொல்லை தீர்ந்து கவலை விட்டது. இருந்தாலும் உன் கையில் பணம் இல்லையே!" என்றாள்.

"ஐயோ அண்ணி! எங்கள் பணக்கஷ்டத்தை என்ன வென்று சொல்லுவேன்? அதனால்தானே இரு வீட்டுச் செலவு களையும் நீங்களே போட்டுக்கொள்ள வேணுமென்று கேட்டுக் கொண்டது."

"உன் கையிலும் கொஞ்சம் பணம் இருக்கும்படி செய்ய எனக்கு ஒரு யோசனை தோன்றுகிறது."

"என்ன யோசனை, அண்ணி?"

"இரு வீட்டுச் செலவுகளையும் சிக்கனமாகச் செய்து உன் பங்குச் செலவுப் பணத்தைப் பணமாகவே உன்னிடம் தந்து விடலாம் என்று எண்ணுகிறேன்" என்றாள் அம்மணியம்மாள்.

"எப்படி?" என்று ஆவல் காட்டினாள் யோகாம்பாள்.

"எப்படியா? நீ வாங்க வேண்டிய புடைவை முதலியவற்றை விலை கொடுத்துப் புதிதாக வாங்க வேண்டாம். இருநூறு முந்நூறு கொடுத்துத் தாமரைக்கண்ணிக்கு வாங்கின புத்தம் புதுப் புடைவைகள் மடிப்புக் கலையாமல் இருக்கின்றன. அவற்றில் சுந்தரிக்குப் பிரியமானதை எடுத்துக்கொள்ளலாம், நீ பெண்ணுக்குப் போட வேண்டிய நகைக்காக என் தங்கச் சங்கிலி இருக்கிறது. அதைத் தருகிறேன். இதெல்லாம் உங்கள் செலவில்வாங்கினதாக வைத்துக்கொண்டு அவைகளின்



விலையைப் பணமாக உன்னிடம் தந்துவிடுகிறேன்., நீ வைத்துக்கொள்."

"ஆமாம் அண்ணி, அப்படிச் செய்துவிடுங்கள். உங்கள் புண்ணியமாக என் கையில் கொஞ்சம் பணம் இருக்கட்டும்" என்று கை கூப்பினாள் யோகாம்பாள்.

"இன்னொரு யோசனை" என்றாள் அம்மணி அம்மாள்.

"என்ன?"

"கல்யாணத்தையும் வீண் ஆடம்பரச்செலவுகள் இல்லாமல் சுருக்கமாக ஒரு நாள் காரியமாக நடத்திவிடலாம் என்று நினைக்கிறேன்."

"அப்படியே செய்யுங்கள். ஒரு கோயிலில் வைத்துத் தாலி கட்டினாலும் எனக்குச் சம்மதம். ஆடம்பரம் வேண்டும் என்று எங்களுக்கும் ஆசையில்லை" என்றாள் யோகாம்பாள்.

"கோயிலில் எதற்கு? வழக்கப்படி வீட்டிலேயே நிரக்க நடத்தி நல்ல விருந்தும் வைப்போம். நான் சொல்வ தெல்லாம் ஆடம்பரச் செலவுகள் இல்லாமல் பணத்தை மிச்சப் படுத்தவேணும் என்றுதான்" என்றாள் அம்மணியம்மாள்.

"ஆமாம் அண்ணி, இப்படி உங்களைப்போல் புத்தி சொல்வார் இல்லாமல்தான் என் வீட்டுக்காரர் பழக்கமில்லாத வியாபாரத்திலெல்லாம் பணத்தை ஆடம்பரமாகச் செல வழித்துக் கடன்காரராகிவிட்டோம்" என்று யோகாம்பாள் சொல்லிக்கொணடிருக்கும் போது நாராயணசாமி புரோகித ருடன் வந்தார்.

நெடுநேரம் பஞ்சாங்கம் பார்த்துத் தை மாதம் இருபத்தைந் தாம் தேதி நல்ல முகூர்த்தம் என்று நிச்சயிக்கப்பட்டது.

தட்சணை தாம்பூலத்துடன் புரோகிதரை அனுப்பிய பின் திருமணச் செலவுகளைப்பற்றி அம்மணியம்மாள் சொன்ன யோசனைகளை யோகாம்பாள் கணவனிடம் சொன்னாள். நாராயணசாமி அதைக் கேட்டு மகிழ்ச்சியுடன் அம்மணியம் மாளுக்கு நன்றி கூறினார். பெண்ணுக்கு அவர் செய்ய

வேண்டிய செலவுகளைச் சம்பந்தியம்மாளே செய்வதுமல்லா மல் அவற்றிற்காகும் பணத்தைத் தங்களுக்கு ரொக்கமாகத் தருகிறார்கள் என்றால், அது பெரும் பாக்கியமல்லவா?

"அக்கா! உங்கள் பெருங்குணத்தை என்னென்று பாராட்டுவது? தெய்வந்தான் உங்களை எங்களுக்குத் துணை கூட்டி வைத்தது" என்று கரங்குவித்தார்.

உடனே அம்மணியம்மாள், கடன்தீர்க்க இருந்த ஐயா யிரம் ரூபாயில் கண்ணப்பருக்குத் தந்து கணக்குத் தீர்த்த நாலாயிரத்து இருநூற்று ஐம்பது ரூபாய் போக மீதி இருந்த எழுநூற்று ஐம்பது ரூபாயையும் எடுத்து, "தம்பீ! இதை வைத்துக்கொள்ளுங்கள். இன்னும் இருநூற்று ஐம்பது அனுப்பு கிறேன்" என்று பணத்தைக் கொடுத்தாள்.

வணக்கத்துடன் நாராயணசாமி அதை வாங்கி யோகாம் பாளிடம் கொடுத்தார்.

## அத்தியாயம் 8

குறித்த முகூர்த்தத்தில் செல்வன் முருகேசனுக்கும் செல்வி சுந்தரிக்கும் திருமணம் சிறப்புற நடந்தேறியது. ஆடம்பரமும் ஆரவாரமும் இல்லையென்றாலும் விருந்தினர்களுக்கு மகிழ்ச்சி நிரம்பிய விழாவாக இருந்தது. தெய்விகச் சடங்குகள் குறை வற நடத்தப்பட்டன. விருந்தும் சாப்பாடும் விரும்பத்தக்கன வாய் இருந்தன.

நெருங்கிய உறவினர்களும் நண்பர்களுமே அழைக்கப் பட்டிருந்ததால் கும்பலுக்குரிய குழப்பங்கள் இல்லாமல் சடங்கு களும் சாப்பாட்டுப் பந்திகளும் அமைதியாக நடந்தேறின.

தாமரைக்கண்ணியின் பெற்றோர்கள் வேண்டா விருப்புடன் வந்திருந்தார்கள். தங்கள் மகளுக்கு ஒரு சக்களத்தி வருவதை அவர்கள் விரும்புவார்களா? இந்தக் கல்யாணத்துக்கு வர முடியாது என்று அவர்கள் எழுதிவிட்டார்கள். அதன் பிறகு



தாமரைக்கண்ணியே அவர்களுக்கு எழுதிய ஒரு கடிதத்தில் இந்தக் கல்யாணம் தனக்கு உதவியாக இருக்கும்படி தன்னுடைய கட்டாயத்தினால்தான் நடக்கிறது என்று எழுதி அத்துடன் அவர்களுடைய வழிச்செலவுக்குப் பணமும் அனுப்பி யிருந்தாள். அதனால் அவர்கள், மகள் தாமரைக்கண்ணியையும், மகன் சுந்தரமூர்த்தியையும், பேரன் நெல்லையப்பனையும், பேத்தி ஜானகியையும் பார்த்துப் போகவாவது வாய்ப்பு வந்த தாக எண்ணியே வந்திருந்தார்கள்; மகள் சொன்ன சமாதானத் தையும் மனமார ஒப்புக்கொள்ளாமல் ஒரு வாரம் இருந்துவிட்டுப் போய்விட்டார்கள்.

சுந்தரமூர்த்தியின் மனைவி சந்திரா திருமணத்துக்குப் பதினைந்து நாள்களுக்கு முன்னாலேயே மகன் நெல்லையப் பனுடன் வந்துவிட்டாள். அவளுடைய தாயார் மிகவும் நல மடைந்துவிட்டதனால் உடனே மறுபடியும் போக வேண்டிய அவசியம் இல்லாததால் தங்கிவிட்டாள்.

இனி, புதுமணத் தம்பதிகளைப் பார்ப்போம். முருகேசன் நோயுற்றது ஏழு மாதங்களுக்கு முன்னால். அவன் நோய் நீங்கி நலமடைந்த பின் இன்னொரு கல்யாணம் செய்துகொள்ள இசைந்தது ஐந்து மாதங்களுக்கு முன்னால். இந்த ஐந்த மாத ஓய்வினாலும் சத்துள்ள ஆகாரம் டானிக்குகளாலும் அவன் முன்னிலும் பல மடங்கு அழகும் ஆற்றலும் பெற்று விளங்கி னான்.

இயல்பாகவே அவன் நல்ல நிறமுடையவன். அந்த நிறம் நோயால் மங்கியிருந்தது; இப்போது பளிச்சிட்டுப் புது மெரு கடைந்திருந்தது. முன்னே அவனுடைய அங்கம் மெலிந்திருந் தது; இப்போது பருத்துவிடவில்லையென்றாலும் மெலிவு நீங்கிச் சற்றே திரட்சியடைந்திருந்தது. மொத்தத்தில் அவனுடைய உண்மையான வயதைவிடக் குறைந்த வயதுடைய வாலிப னாகக் காட்சியளித்தான்.

அவனை இன்னொரு கல்யாணம் செய்துகொள்ளும்படி முதன்முதல் அவன் மனைவி தாமரைக்கண்ணியே சொன்ன

போது அதை வெறுத்துப் பேசினான். சில நாள்கள்•சென்று அவனுடைய தாயாரும் அதையே சொன்னபோது 'தாமரைக் கண்ணியைப் பிடித்த பயித்தியம் உங்களையும் பிடித்துக் கொண்டதா?'' என்று ஏளனம் செய்தான்.

உண்மையில் இன்னொரு கல்யாணத்தில் இச்சையே இல்லாமல் தாமரைக்கண்ணி நோய் நீங்கிச் சுகமடைய வேண்டுமென்ற ஒரே ஆசையுடன் அவளுக்கு வேளா வேளைக்குத் தன் கையாலேயே மருந்தும் ஆகாரமும் கொடுத்து அவளைக் கண்ணும் கருத்துமாகக் கவனித்து வந்தான்.

அதன் பிறகு அவன் கடுமையான நோயடைந்து தப்பிப் பிழைத்துத் தேக பலமும் மனோபலமும் குறைந்திருந்த சமயத்தில் குடும்பத்துக்கு மிகவும் உதவியாக இருந்த மைத்துனன் சுந்தரமூர்த்தி அவனுடைய மாமியார் சாகக் கிடப்பதாகத் தந்தி வந்து மதுரைக்குப் போய்விட நேர்ந்தது. அதற்கு முன்னால் மதுரைக்குப்போன சந்திராவும் மதுரையிலேயே தங்கிவிட்டாள். அப்போது தன்னையும் தாமரைக்கண்ணியையும் குழந்தையையும் கவனித்துக்கொள்ள உதவியில்லாமல் தன் தாயார் தனியே கஷ்டப்படுவதைக் கண்டான்.

அந்தத் தருணம் பார்த்து அவன் தாயாரும் தாமரைக் கண்ணியும் அவன் இன்னொரு கல்யாணம் செய்துகொள்ளா விட்டால் குடும்பம் சீரழிந்து போகும் என்று கட்டாயப்படுத்தினார்கள்.

அவர்கள் சொன்ன காரணங்களை அவன் ஒத்துக்கொண்டாலும் இரண்டு பெண்டாட்டிக்காரனுக்குத் திண்டாட்டந்தான் உண்டாகும் என்று சொல்லி அதை விலக்கிவிடப் பார்த்தான். அப்படியெல்லாம் ஒன்றும் திண்டாட்டம் வராமல் பார்த்துக் கொள்ளலாம் என்று அவனுடைய தாயார் மீண்டும் மீண்டும் கேட்டுக்கொண்டதன் மேல், 'என் சந்தேகம் எப்படியிருந்தாலும் உங்களையும் தாமரைக்கண்ணியையும் திருப்தி பண்ணுவதற்காக அதற்குச் சம்மதிக்கிறேன்' என்று சொல்லிவிட்டான்.



அதன் பிறகு பெண்ணை நிச்சயம் செய்ய அவன் தாயார் மேற்கொண்ட எந்த முயற்சியிலும் அவன் கலந்துகொள்ளவும் இல்லை ; ஆர்வம் காட்டவும் இல்லை.

திருமணச் சடங்குகள் நடந்து மணவறையில் தலைகுனிந்து உட்கார்ந்திருந்த மணப்பெண் சுந்தரியின் கழுத்தில் தாலி கட்டும் போதுகூட அதைத் தாமரைக்கண்ணியின் விருப்பத்தையும் தன் தாயாரின் வேண்டுகோளையும் மதித்துத் தன்மீது சுமத்திக்கொள்ளும் தொல்லையென்றே கருதினான்.

அப்படிப்பட்ட முருகேசன் முதலிரவில் பள்ளியறைக்குள் வந்த புது மனைவி சுந்தரியைப் பார்த்தவுடன் தன்னையும் மறந்து முற்றிலும் புது மனிதனாக மாறிவிட்டான்.

சுந்தரியின் அழகும் உடற்கட்டும் எடுப்பான அங்க அமைப்புகளும் நாணுதல் கோணுதல் இல்லாமல் மலர்ந்த முகத்துடன் நேராகப் பாய்ச்சிய கூரிய பார்வையும் முருகேசனைப் பித்தனாக்கிவிட்டன.

நான்கு ஆண்டுகளுக்கு அதிகமாக அவன் கல்யாணமான பிரமசாரியாகவே பெண்ணின்பத்தை அனுபவிக்க முடியாத நிலையில் இருப்பவன். தாமரைக்கண்ணியின் நோய் நீங்க வேண்டுமென்ற ஆர்வத்தோடு அவளுக்கான பணிகளைச் செய்ததிலும் அவள் பெற்ற அழகான குழந்தை ஜானகிக்குப் பால் புகட்டிக் கொஞ்சிக்கொண்டிருப்பதிலும் தன் பருவத்துக்குரிய ஆசைகளை மறந்திருக்கவும் நினைப்பெடுத்தால் அடக்கி வைக்கவுமே பழகினவன்.

இப்போது புது மனைவி சுந்தரியைக் கண்டவுடன் இதுவரையிலும் அடக்கப்பட்டுக் கிடந்த காமப்பசி மடை திறந்த வெள்ளம் போல் அவனைச் சுந்தரியின் பெண்மைக்கு அடிமையாக்கிவிட்டதில் ஆச்சரியமில்லை.

தாமரைக்கண்ணி நோயாளியாவதற்கு முன்னால் அவளுக்கிருந்த அழகுக்கு ஈடாகாது சுந்தரியின் அழகு. என்றாலும் சராசரிப் பெண்களுக்குள் சுந்தரி நல்ல அழகிதான். தாமரைக்

கண்ணிக்குத் தான் அபூர்வமான அழகி என்ற நினைப்பே இருந்ததில்லை; தன் அழகைப் பிறர் ரசிக்க வேண்டும் என்ற எண்ணத்துடன் அலங்காரம் செய்துகொண்டதுமில்லை.

ஆனால் சுந்தரியோ தான் மிக நல்ல அழகி என்ற உயர்வு மனப்பான்மையோடு தன்னுடைய அழகைப் பிறர் மெச்ச வேண்டும் என்றே அடிக்கடி தன்னை அலங்கரித்துக்கொள்வாள். அவளுக்கு விருப்பமான அழகுச் சாதனங்களை வாங்க அவளுடைய பெற்றோருக்கு ஏற்பட்ட செலவும் அதிகம்.

தன்னுடைய அழகை அனுபவிப்பதைப் போலவே பிறருடைய அழகையும் அளக்க ஆசையுள்ளவள்; அந்த முறையில்தான் தன்னைப் பெண் பார்க்க வந்த செங்கற்பட்டு மாப்பிள்ளை அழகனாக இல்லையென்றும், அவனை மணந்து கொள்ளப் பிரியமில்லையென்றும் தன் தாயாரிடம் ரகசியமாகச் சொல்லிவிட்டாள். அதனால்தான் நிச்சயதார்த்தச் சடங்கு ஒத்திவைக்கப்பட்டு, முருகேசன் தாயார் அவளைப் பெண் கேட்க முடிந்தது. முருகேசனுக்குச் சுந்தரியைக் கொடுப்பது நிச்சயமான அன்றிரவு யோகாம்பாள் மகளைத் தனியாக தன்னருகில் அமர்த்திக்கொண்டு, "சுந்தரி ! நீ நல்ல அதிருஷ்டக்காரி ! உன் பிரியப்படியே அழகில்லாத செங்கற்பட்டு மாப்பிள்ளையை விட்டுவிட்டு உன்னுடைய அழகுக்கேற்றவாறு வெகு அழகான மாப்பிள்ளையைப் பகவான் உனக்கு நிச்சயித்திருக்கிறார். அத்தையின் ஒரே பிள்ளையான முருகேசன் மிக நல்ல அழகும் குணமும் அமைந்தவன். அது மட்டுமல்லாமல் நம்முடைய கடன்களையெல்லாம் தீர்த்து வைக்கிறதாக அத்தையே ஒத்துக் கொண்டு அதற்கு முன்பணமாக ஆயிரம் ரூபாய் கொடுத்திருக்கிறார்" என்று சொன்னதைக் கேட்டு சுந்தரி பூரித்துப்போனாள்.

அந்த நிமிஷம் முதல் தனக்குக் கணவராகப் போகிற அத்தானுடைய அழகைப்பற்றியே கற்பனை செய்துகொண்டிருந்தாள். அவள் முருகேசனைப் பார்த்ததில்லை.

திருமணத்துக்கு மூன்று நாள்கள் முன்னதாகவே பெண்ணும் பெண் வீட்டாரும் முருகேசன் வீட்டுக்கு வந்து



விட்டார்கள். பெண் அழைப்பு என்ற சடங்கு இல்லாததால், பெண்ணை வேறு இடத்தில் இறக்காமல் மாப்பிள்ளை வீட்டுக்கே கொண்டுவந்துவிட்டார்கள். மாப்பிள்ளை வீட்டிலேயே பெண்ணும் திருமணத்துக்கு முன்னால் மூன்று நாள் தங்கினதால் சுந்தரி, தான் மணந்துகொள்ளப்போகிற அத்தானுடைய அழகைப் பார்த்துவிட வேண்டுமென்று துடித்தாள். அதற்காக அவள் முருகேசனுடைய அறைக்கு எதிரிலிருந்த அறையில் இருந்துகொண்டு ஜன்னல் கதவைச் சிறுதளவே திறந்து, அதன் பின்னால் நின்று, முருகேசன் அவனுடைய அறையைவிட்டு வெளியே வரும்போதும் போகும் போதும் பார்த்துத் திருப்தியடையும்படியான ஓர் ஏற்பாட்டை அவளுடைய தாயார் யோகாம்பாளும் முருகேசனுடைய தாயார் அம்மணியம்மாளும் சேர்ந்தே செய்து வைத்தார்கள்.

அப்படி முருகேசனைப் பார்த்துவிட்ட சுந்தரி, தன் கணவராகப்போகிறவர் தான் கற்பனை செய்து வைத்திருந்ததைவிடப் பல மடங்கு அழகனாக இருப்பதையெண்ணி ஆனந்தப் பரவசம் அடைந்திருந்தாள்.

அதனால் இப்போது முதலிரவு பள்ளியறைக்கு அவள் புகுந்தபோது வழக்கமாகப் புதுமணப் பெண்களுக்குள்ள கூச்சமோ நாணமோ கோணலோ இல்லாமல் கணவனை நேராக நிமிர்ந்து பார்த்துப் புன்முறுவல் செய்து தன் அழகையும் காட்டிக்கொண்டாள். அதைக் கண்டு அவனும் சொக்கிப் போனான்.

இப்படியாக முருகேசனும் சுந்தரியும் முதல் சந்திப்பிலேயே ஒருவர் உள்ளத்தை ஒருவர் கவர்ந்துவிட்ட தம்பதிகளாகி விட்டார்கள்.

சுந்தரியின் மண வாழ்க்கை தொடங்கிய ஆறு மாதத்துக்குள் அவள் தன்னை அந்த வீட்டின் ராணியாக்கிக் கொண்டாள்.

'நாயகன் பட்சமடி, அது எனக்கு ஆயிரம் லட்சமடி' என்றபடி முருகேசன் அவளிடம் கொண்டுள்ள அளவற்ற மையலி

னால், அவள் தன்னைச் சிங்காரித்துக்கொள்வதிலும், கணவனுக்கு வேண்டியதைச் செய்து அவனுடன் சல்லாபித்துக் கொண்டிருப்பதிலும், கதைப்புத்தகங்கள் படிப்பதிலுமே பொழுது போக்குவதன்றிக் குடும்பக் காரியம் ஏதும் அவளுக் கில்லை.

சில சமயங்களில் மாமியார் மடியிலிருக்கும் குழந்தை ஜானகியை எடுத்துக் கொஞ்சுவாள்; அப்போது மாமியார் பேச்சுக் கொடுத்தால் சிறிது நேரம் பேசிவிட்டு, கணவனுடைய அறைக்குப் போய்விடுவாள்.

தாமரைக்கண்ணியின் நலத்தை விசாரிக்க அவள் படுத் திருக்கும் அறைக்கு முருகேசன் போகும்போது சுந்தரியும் அவனுடன் போவாள். அப்போது, "அக்கா, உடம்பு எப்படி யிருக்கிறது?" என்பாள். அதற்குத் தாமரைக்கண்ணி நோயாளியின் புன்முறுவலுடன், "என் உடம்பு எப்போதும் போலத்தான்" என்பாள்.

அவ்வளவுதான். சுந்தரி தனியே போய்த் தாமரைக் கண்ணியின் நலத்தை நாடி எதையும் செய்வதில்லை. அதற் குத்தான் சந்திராவும் சுந்தரமூர்த்தியும், போதாவிட்டால் மாமியாரும் இருக்கிறார்களே! சுந்தரி ஏன் அதற்காகத் தன் அலங்காரம் கலையும்படி அலட்டிக்கொள்ள வேண்டும்? இது தான் அவளுடைய எண்ணமோ அல்லது நோயாளிக்குச் சேவை செய்யும் மனப்பான்மை அவளுக்கு இல்லையோ என்பது அறிய முடியவில்லை.

உண்மையில் சுந்தரியின் சேவை இப்போது தாமரைக் கண்ணிக்குத் தேவையில்லை. அவளைக் கண்ணும் கருத்து மாகக் கவனித்துக்கொள்ள சுந்தரமூர்த்தியும் சந்திராவும் இருக்கிறார்கள். அதற்குமேலும் முருகேசனின் தாயார் இருக் கிறாள். அதனால் முருகேசனோ அவன் தாயாரோ அல்லது தாமரைக்கண்ணியோ மற்றவர்களோ சுந்தரி நோயாளியைக் கவனிப்பதில்லையே என்று நினைக்கவே காரணமில்லை. அதனால் அதற்காக யாரும் அவள்மீது குறை கூறவில்லை.



மாலை நேரங்களில் சுந்தரி தன்னை அலங்கரித்துக் கொண்டு, கணவனையும் அலங்கரித்துக்கொள்ளச் செய்து, இருவரும் சினிமாவுக்கோ நாடகத்துக்கோ கடற்கரைக்கோ அல்லது வேறு எந்த வேடிக்கைக்கோ போய் வருவது நித்தமும் நடக்க வேண்டிய நிகழ்ச்சியாகிவிட்டது.

தாமரைக்கண்ணி நோயாளியாவதற்கு முன்னால் அவளும் முருகேசனும் சினிமா முதலிய பொழுது போக்குகளுக்குப் போவதுண்டு. ஆனால் தினமும் அல்ல. மாதத்தில் இரண்டு மூன்று நாள்கள்தாம். அப்படிப் போகும்போதும் அவர்கள் இருவர் மட்டுமே ஜோடியாகப் போக வேண்டுமென்று விரும்பிய தில்லை. சுந்தரமூர்த்தி, சந்திரா, அவர்களுடைய குழந்தை நெல்லையப்பனையும் கூட்டிக்கொண்டுதான் போவார்கள்.

ஆனால் சுந்தரி, தன்னுடன் தன் கணவனைத் தவிர வேறு யாரும் இருக்க விரும்புவதில்லை. எட்டு வயதுச் சிறுவன் நெல்லையப்பன் அவர்களுடன் போகத் துடித்தாலும் கழித்துக் கட்டிவிடுவாள். சுந்தரியின் இந்தச் சுபாவம் மற்ற யாருக்கும் விகற்பமாகப் படாவிட்டாலும் நெல்லையப்பனுடைய தாய் சந்திராவை உறுத்தியது. ஆனால், அவள் அதைக் காட்டிக் கொள்ளவில்லை.

சுந்தரியுடன் முருகேசன் நடத்தும் உல்லாச வாழ்க்கையைக் கண்டு மட்டற்ற மகிழ்ச்சியடைந்தவர்கள் தாமரைக்கண்ணியும் முருகேசனுடைய தாயாருமே. தன்னுடைய கட்டாயத்தினால் தன் கணவர் இன்னொரு கல்யாணம் செய்துகொண்டதாலே தான் இப்போது அவர் முன்னிருந்ததைவிடப் பல மடங்கு அழகாகவும் ஆரோக்கியமாகவும் சந்தோஷமாகவும் இருக்கிறார் என்பது தாமரைக்கண்ணியின் பூரிப்பு. முருகேசனுடைய தாயாரின் பூரிப்பு தாமரைக்கண்ணியின் பூரிப்பைவிடச் சற்று அதிகம்.

எப்படியென்றால், மகன் இன்னொரு பெண்ணை மணந்து கொள்ளவேண்டும் என்று தான் வற்புறுத்தியது வெற்றிபெற்ற தோடு, அவனை மகிழ்வோடு இருக்கச் செய்துவிட்ட ஓர் அழகி

யைக் கட்டிவைத்துவிட்ட பெருமிதமும் சேர்ந்தது. குடும்பத் தலைவியான மாமியாரின் இந்தப் பூரிப்பு, சுந்தரி தன்னை அந்த வீட்டின் ராணியாக மமதை கொள்வதற்கு மேலும் உதவியாக இருந்தது.

சுந்தரி, குடும்பக் காரியமாக ஒரு துரும்பைக்கூட எடுத்துப் போட மாட்டாள். சமையல் வேலை முழுதும் சந்திராவின் பொறுப்பு. தண்ணீர் கொண்டுவருவது,' குளிக்க வெந்நீர் போடுவது, வீட்டைச் சுத்தப்படுத்துவது முதலியவை வேலைக்காரப் பெண்ணைச் சேர்ந்தவை. சாப்பிடும் சமயம் தவிர, மற்ற நேரங்களில் சுந்தரி சமையற்கட்டை எட்டிக்கூடப் பார்க்க மாட்டாள்.

காரியம் எதையும் தான் செய்யாவிட்டாலும் பிறர் செய்யும் காரியங்களுக்கு நோட்டம் பேசுவாள்; சாப்பிடும்போது, 'குழம்பில் உப்பேயில்லை', 'ரசம் வாயில் வைக்க முடியவில்லை', 'மோர் வெறும் பச்சைத் தண்ணி' என்பன போன்று எதையாவது சொல்லுவாள். அது சந்திராவுக்கு எரிச்சலாக இருக்கும். ஆனாலும் முருகேசனைக் கருதி ஒன்றும் பேச மாட்டாள்.

சுந்தரமூர்த்தி வாங்கி வரும் காய்கறி, மளிகைச் சாமான்களிலுங்கூடச் சுந்தரி நோட்டம் சொல்லுவாள். அவன் அதைப் பொருட்படுத்துவதுமில்லை; வருத்தப்படுவதுமில்லை. சிரித்துக்கொண்டு போய்விடுவான்.

முருகேசன் அடிக்கடி தன் குழந்தை ஜானகியைத் தூக்கி வைத்துக்கொண்டு சீராட்டி மகிழ்வான். அதனாலும் ஜானகி கண்ணைக் கவரும் அழகுடைய குழந்தையாக இருந்ததனாலும் சுந்தரியும் அக்குழந்தையைத் தூக்கி வைத்துக்கொண்டு கொஞ்சுவாள்.

இப்போது ஜானகி ஓடியாடி விளையாடும் ஐந்து வயதுக் குழந்தை; தன்னுடைய தாய் யாரென்பதை நன்றாக அறிந்தவள்; அடிக்கடி தாமரைக்கண்ணியின் அறைக்குப் போய்



விடுவாள். தாமரைக்கண்ணி, மகள் வந்தால் அவளை அணைத்துக்கொள்ளச் சிரமப்பட்டாவது படுக்கையில் எழுந்து உட்கார்ந்துகொள்வாள். தாயின் அன்புக்கு ஈடான அன்பும் உண்டா? சுந்தரி ஜானகியைத் தூக்கிக் கொஞ்சுவது சணவன் மெச்சத்தான். சுந்தரியின் அன்பு, போலி அன்பு. தாமரைக் கண்ணி, மகளைத் தூக்க முடியாமல் அணைததுக்கொண்டாலும் அது இயல்பான அன்பு. இந்த வேறுபாட்டைக் குழந்தைகள் எளிதில் உணர்ந்துவிடுகின்றன. அதனால் சுந்தரி கட்டாயமாக இழுத்துத் தூக்கினால்தான் ஜானகி அவளிடம் போவாள்; விட்டவுடன் தாமரைக்கண்ணியிடம் ஓடிவிடுவாள்.

சுந்தரியோடு நடத்தும் உல்லாச வாழ்க்கையினால் முருகேசனுக்குத் தாமரைக்கண்ணியின் மீதுள்ள பாசம் குறைந்துவிடவில்லை. அதற்கு மாறாக, இந்த உல்லாச வாழ்க்கை தனக்குத் தாமரைக்கண்ணியினால் கிடைத்த இன்பம் என்றே நன்றியுடன் கருதினான். அவன் சுந்தரியோடு நடத்தும் இன்ப வாழ்க்கை கண்டு அவனுடைய தாயாரும் தாமரைக்கண்ணியும் அடைந்த மகிழ்ச்சியை அவர்கள் இருவரும் அவனிடமே வாயாரச் சொல்லிவிட்டார்கள்.

அதனால் சுந்தரி, அவளுடைய உயர்வு மனப்பான்மையினாலும் அலட்சிய புத்தியினாலும் தாமரைக்கண்ணி, சுந்தரமூர்த்தி, சந்திரா, நெல்லையப்பன் முதலானவர்களிடத்தில் ஒட்டுதல் இல்லாமல் நடந்துகொள்வது முருகேசனுடைய கவனத்தைக் கவரவில்லை. சுநதரி அப்படி ஒட்டுதல் இல்லாமல் நடந்துகொள்வது சந்திராவைத் தவிர மற்ற யாரையும் உறுத்தவும் இல்லை. ஏனெனில், சந்திராவின் மகன் நெல்லையப்பனைச் சுந்தரி கழித்துக் கட்டிவிட்டுத் தினமும் சினிமாவுக்குப் போவதும் சமையலைக் குறை சொல்லுவதும் சந்திராவுக்கு வருத்தம் உண்டாக்கியிருந்தன. அதனால் சுந்தரியின் போக்கு சந்திராவுக்குப் பிடிப்பதில்லை.

இப்படியாகப் பதினெட்டு மாதங்கள் கழிந்தன. ஒரு நாள் சுந்தரமூர்த்தியும் முருகேசனும் நெல் அறுவடைக்காக வயல்

களுக்குப் போயிருந்தார்கள். முருகேசனுடைய தாயாரும் குழந்தை ஜானகியைத் தூக்கிக்கொண்டு அடுத்த வீட்டுக்குப் போயிருந்தாள். அந்த அடுத்த வீடு அப்துல் சுபான் என்ற மகம்மதிய கனவான் வீடு. முருகேசனுடைய தந்தை அப்துல் சுபானுக்கு நெருங்கிய நண்பராக இருந்தவர். இரண்டு குடும்பங் களும் நெருங்கிப் பழகுபவர்கள். அதனால் முருகேசனின் தாயார் ஒழிந்த நேரங்களில் சாயபு வீட்டுக்குச் சென்று கோஷாப் பெண்களுடன் பேசிக்கொண்டிருப்பது வழக்கம். சாயபுவுக்கும் ஜானகியின் வயதுள்ள பாத்திமா என்ற பெண் குழந்தை உண்டு. அந்தக் குழந்தையும் ஜானகியும் அந்த வயதிலேயே ஒருவரையொருவர் நேசித்து விளையாடுவார்கள். அப்படி அவர்கள் விளையாடுவதைப் பார்த்து முருகேசன் தாயாரும் பாத்திமாவின் தாயும் பெருமகிழ்ச்சியடைவார்கள். அந்த வழக்கப்படிதான் இன்றும் அம்மணியம்மாள் ஜானகியுடன் சாயபு வீட்டுக்குப் போயிருந்தாள்; போகுமுன் ஜானகிக்கு ஆகாரம் 'ஊட்டி'விட்டுத் தானும் சாப்பிட்டுவிட்டுத்தான் போனாள்; அதனால் சாவதானமாகத்தான் திரும்பி வருவாள்.

அப்போது வீட்டில் சுந்தரியும் சந்திராவும் தாமரைக் கண்ணியுமே இருந்தார்கள். சந்திராவின் மகன் நெல்லையப் பனும் தந்தையுடன் வயலுக்குப் போயிருந்தான்.

சந்திரா, தாமரைக்கண்ணிக்குச் செய்ய வேண்டிய சேவை களையெல்லாம் செய்துவிட்டு அவளுக்கான பத்திய ஆகாரம் கொடுத்துத் தானும் சாப்பிட்டுச் சுந்தரியைச் சாப்பிடக் கூப்பிட் டாள். முருகேசனுடைய அறையில் நாவல் படித்துக்கொண் டிருந்த சுந்தரி அப்போதுதான் தன்னுடைய தோழி கனக வல்லிக்குக் கடிதம் எழுத ஆரம்பித்திருந்தாள்; (அந்தக் கனக வல்லியின் கல்யாணத்துக்குப் போனபோதுதான் அம்மணியம் மாள் சுந்தரியைப் பதினேழு வயதுப் பெண்ணாக யோகாம் பாளுடன் இருந்ததை முதன் முதல் பார்த்தது.) அதை எழுதி முடித்துவிட்டுச் சாப்பிட வந்தாள். சுந்தரி அந்த வீட்டுக்கு வந்த பின் அன்றுதான் கணவனை விட்டுத் தனியாகச் சாப்பிட நேர்ந்தது.



காலை பத்து மணிக்கு வடிக்கப்பட்ட சாதம், சுந்தரி சாப்பிட உட்கார்ந்தபோது ஒரு மணிக்குமேல் ஆகிவிட்டதால் வரண்டிருந்தது.

சோற்றைப் பிசைந்த சுந்தரி, "என்ன, சோறு அவலாட்டம் இருக்கிறதே! இதை எப்படித் தின்கிறது? கொஞ்சம் குழைய வடிக்கிறதுக்கென்ன?" என்றாள்.

சந்திராவுக்குக் கோபம் வந்துவிட்டது. "ஏன், நீ வந்து வடிக்கிறதுதானே?" என்றாள்.

"நான் வந்து வடிக்கிறதுக்கு நீங்களெல்லாம் எதுக்கு இங்கே?" என்று கேட்டுவிட்டாள் சுந்தரி.

சந்திராவுக்கு கடுங்கோபம் வந்துவிட்டது. சுந்தரியின் துடுக்கை அடக்க அவளுக்குச் சுடச்சுடப் பதில் சொல்ல நினைத்த சந்திரா கோபத்தை அடக்கிக்கொண்டு, "என்ன சுந்தரி, ஒரேயடியாகத் தலைகீழே நிற்கிறாய்?" என்று, மேலும் பேசுவதற்கு முன்னால், 'சந்திரா!' என்று முருகேசன் தாயார் கூப்பிட்ட குரல் கேட்டுப் பேச நினைத்ததை அடக்கிக்கொண்டு அம்மணியம்மாளைச் சந்திக்கப் போய் விட்டாள். அந்த அம்மாள் குடிக்க வெந்நீர் கேட்டாள். சந்திரா வெந்நீர் கொடுத்துவிட்டுத் தாமரைக்கண்ணியைக் கவனிக்கப் போய்விட்டாள்.

சந்திராவுக்கு முருகேசன் தாயாரிடம் அன்பும் மரியாதை யும் உண்டு. அந்த அம்மாளும் சந்திராவிடம் அளவற்ற அன்பு கொண்டிருந்தாள். ஏனெனில், சந்திராவும் அவளுடைய கணவன் சுந்தரமூர்த்தியும் அந்தக் குடும்பத்துக்காக அவ்வளவு உதவியிருக்கிறார்கள். அதனால் சந்திரா அந்த அம்மாளுக்கு வருத்தம் உண்டாக்கக்கூடாதென்றே சுந்தரியின்மீது வந்த கோபத்தை அடக்கிக்கொண்டாள் சந்திரா. ஆனாலும் வீட்டில் ஒரு வேலையும் கவனிக்காமல் தன்னுடைய உழைப்பில் உல்லாசமாகத் திரிந்துகொண்டிருக்கிற சுந்தரி தன்னை அவளுடைய அடிமை போலப் பேசிவிட்டாளே என்ற வருத்தம் இருந்துகொண்டேயிருந்தது.

அன்று மாலை வயலுக்குப் போயிருந்த சுந்தரமூர்த்தி, முருகேசன், நெல்லையப்பன் எல்லோரும் திரும்பி வந்த பின், இரவுச் சாப்பாட்டுக்குப் பின் அவரவர்கள் படுக்கையறைக்குப் போனார்கள்.

அந்த வீட்டில் ஐந்து அறைகள் உண்டு. ஓர் அறை தாமரைக்கண்ணி படுத்திருப்பது. ஓர் அறை முருகேசனின் தாயாருடையது. இன்னொன்று முருகேசன் படுக்கையறை. மற்றொன்று சுந்தரமூர்த்தியின் படுக்கையறை. வேறொன்று சாமான்கள் இருப்பது.

முருகேசன் தாயார் தன் அறைக்குள் படுப்பதில்லை. தாமரைக்கண்ணியைக் கவனித்துக்கொள்ளவென்றே அவள் படுத்திருக்கும் அறைக்குப் பக்கத்தில் கூடத்தில் கட்டிலில் அந்த அம்மாள் படுத்துக்கொள்வாள்.

படுக்கையறையில் சந்திரா தன் கணவன் சுந்தரமூர்த்தியிடம் சுந்தரி தன்னைப் புழுக்கை வேலைக்காரியாக அவமதித்து விட்டாள் என்று நடந்த பேச்சுகளை உள்ளபடியே சொல்லிக் கண் கலங்கினாள்.

அதைக் கேட்ட சுந்தரமூர்த்தி, "ஓஹோ! சரி சரி; சற்று முன் நீ எங்களுக்குச் சாப்பாடு பரிமாறினபோதே உன் முகம் வழக்கத்துக்கு விரோதமாக வாடியிருப்பதைக் கவனித்தேன். இதனால்தானா? சந்திரா! நான் சொல்லுவதைக் கேள். சுந்தரி அகந்தை மிக்க அதிகப்பிரசங்கிதான். இருந்தாலும் அவள் சிறு பெண்; உல்லாச வாழ்க்கை கிடைத்துவிட்ட போதையில் மிகவும் அலட்சியப் புத்தியுடன் நடந்துகொள்ளுகிறாள். உன்னைப்பற்றியும் என்னைப்பற்றியும் அவளுக்கு என்ன தெரியும்? அவள் நமக்குச் சரி மனுஷியா? அவளுடைய தயவிலா நாம் இங்கேயிருக்கிறோம்? இதைப் பெரிதாக்கினால் இந்த வீட்டில் இப்போதுள்ள அமைதி கெட்டுவிடும். முதலில் அது தாமரைக்கண்ணிக்குத்தான் வேதனை உண்டாக்கும். நொந்து கிடக்கும் அவள், தன் கணவன் சந்தோஷமாக இருப்பதைக் கண்டு நிம்மதியடைந்து சற்றே உடல் நலம் அடைந்தவள் போல் இருக்கிறாள். அதைக் கெடுத்துவிடக்கூடாது. சுந்தரி சொன்னது குற்றந்தான். இருந்தாலும் தாமரைக்கண்ணிக்காகவும் முருகேசனுக்காகவும் அத்தைக்காகவும் சுந்தரியை மன்னித்து, அவள் செய்த குற்றத்தை மறந்துவிடு" என்றான்.



சந்திரா வெகு ரோஷமுள்ளவளானாலும் பண்புள்ளவள்; கணவன் சொல்லை வேத வாக்காக மதிப்பவள்; உடனே, "அத்தான்! நீங்கள் சொன்னதெல்லாம் மிகவும் நியாயமானது. உங்கள் கட்டளைப்படியே சுந்தரியை மன்னித்துவிட்டேன். ஆனால், மறந்துவிடுவதுதான் கஷ்டம்" என்றாள்.

"கஷ்டந்தான். இருந்தாலும் மறந்துவிட முயல்வது நல்லது. இப்போதைக்கு மன்னித்துவிட்டதே போதும். இதைப்பற்றி யாரிடமும் சொல்லாதே. இனிமேலும் அவள் என்ன பேசினாலும் அதைக் காதில் போட்டுக்கொள்ளாதே" என்றான்.

"அப்படியே ஆகட்டும்" என்றாள் சந்திரா.

சுந்தரமூர்த்தியின் படுக்கையறையில் நடந்தது இப்படியிருக்க, முருகேசனுடைய படுக்கையறையில் இந்த நேரத்தில் நடந்ததைப் பார்ப்போம்:

'என்ன சுந்தரி! ஒரேயடியாகத் தலை கீழே நிற்கிறாய்?' என்று சந்திரா கேட்டதும், அதே சமயத்தில் மாமியார் வந்து சந்திராவைக் கூப்பிட அவள் போய்விட்டதும் சுந்தரியை வாய் திறக்க முடியாமல் செய்துவிட்டன. கோபமும் வருத்தமும் குமுறிச் சரியாகச் சாப்பிடாமல் எழுந்து போய்விட்டாள். அதட்டும் தொனியுடன் சொன்னது சுந்தரியின் தற்பெருமையைப் பலமாகத் தாக்கிவிட்டது. படுக்கையறையில் கணவனிடம் சொல்லத்தான் துடித்துக்கொண்டிருந்தாள், சுந்தரி. ஆனால், சந்திரா அவளுடைய கணவனிடத்தில் சொன்னது போலச் சுந்தரி தன் கணவனிடம் தானாகவே சொல்லவில்லை. படுக்கையறைக்குள் வந்தவுடன் கணவனிடம் கொஞ்சிக்குலவிக் குதூகலிக்கும்வழக்கமுள்ள சுந்தரி, வருத்தம் தோய்ந்தவளாய்த்

தலையைக் கவிழ்த்துக்கொண்டு மஞ்சத்தின் ஓர் ஓரத்தில் உட்கார்ந்து ஊடல் செய்தாள்.

அதைக் கண்ட முருகேசன் திடுக்கிட்டவனாகத் தன் இடக் கையைச் சுந்தரியின் வலத்தோளின்மேல் வைத்துக்கொண்டு வலக்கையால் அவளுடைய வதனத்தை நிமிர்த்தினான். சுந்தரியின் கண்களில் நீர் சுரந்திருந்தது.

"சுந்தரீ ! ஏன் அழுகிறாய்?" என்றான்.

"எனக்கு இன்று நேர்ந்த அவமதிப்புக்காக நான் அழாமல் என்ன செய்வது?"

"யார் உன்னை அவமதித்தது?"

"சந்திராதான்."

"சந்திராவா! அவள் மிக நல்ல பெண்ணாயிற்றே! அவள் யாரையும் அவமதிக்க மாட்டாளே ! எதற்காக உன்னை அவமதித்தாள்? என்ன அவமதிப்புச் செய்தாள்?"

"நான் ஒரேயடியாகத் தலைகீழே நிற்கிறேனாம்" என்று தேம்பினாள் சுந்தரி.

"அவள் அப்படிச் சொல்லும்படி நீ என்ன செய்தாய்?" என்றான் முருகேசன்.

"நான் ஒன்றும் செய்துவிடவில்லை."

"நீ ஒன்றும் செய்யாமல் சும்மா இருக்கும்போதா சந்திரா உன்னை அப்படிச் சொல்லிவிட்டாள்?" என்றான் முருகேசன்.

இந்தக் கேள்விக்குச் சுந்தரி உடனே பதில் சொல்லிவிட முடியவில்லை. ஏனென்றால், நடந்ததை நடந்தபடியே சொன்னால் இவளே குற்றவாளி என்பது ருசுவாகிவிடும். அதனால் கொஞ்சம் திரித்துக் கூறச் சிறிது யோசனை செய்ய வேண்டியிருந்தது. மேலும் தன்மீது அளவற்ற மோகம் கொண்டிருக்கும் தன் கணவன் இவ்வளவு குறுக்கு விசாரணை செய்வானென்று அவள் எதிர்பார்க்கவில்லை. சற்று யோசனை செய்துவிட்டு, "நான் ஒன்றும் செய்துவிடவில்லை. மத்தியானம்



சாப்பிடப் போய் உட்கார்ந்தேன். சந்திரா பரிமாறினாள். சோறு மெல்ல முடியாதபடி விறைத்துக் கிடந்தது. 'சோற்றைக் கொஞ்சம் குழைய வடிக்கக்கூடாதா?' என்றேன். அதற்கு அந்த அம்மாள், 'ஏன் நீ வந்து வடிக்கிறதுதானே?' என்று கேட்டாள். நான், 'என்னால் முடியாது' என்றேன். அதற்குத் தான், 'என்ன சுந்தரி! ஒரேயடியாகத் தலைகீழே நிற்கிறாய்?' என்று என்னை ஏசத் தொடங்கிய சமயத்தில் அத்தை அவளைக் கூப்பிட்டதைக்கேட்டு அத்தையிடம் போய்விட்டாள். அத்தை கூப்பிடாதிருந்தால் இன்னும் என்னென்ன ஏச்சுகள் வந்திருக்குமோ" என்றாள் சுந்தரி.

"நீதான் வெகு நன்றாகச் சமைப்பாயே, ஏன் 'என்னால் முடியாது' என்று சொன்னாய்? அப்படிச் சொன்னதற்காகச் சந்திரா உன்னைத் 'தலைகீழே நிற்கிறாய்' என்று சொன்னது தப்புதான். ஆனாலும் சந்திரா மிக நல்ல குணமுடைய பெண். அவள் ஏன் இப்படிச் சொன்னாள் என்பது எனக்குப் புரிய வில்லை. இருந்தாலும், சந்திரா நமக்கு மிகப்பெரிய உபகாரி. எனக்கும் தாமரைக்கண்ணிக்கும் திருமணமான நாளிலிருந்து இன்றளவும் அவள் இந்தக் குடும்பத்துக்குச் செய்திருக்கிற சேவைகள் கொஞ்சநஞ்சமல்ல. நானும் என் தாயாரும் தாமரைக்கண்ணியும், ஏன் குழந்தை ஜானகியுங்கூட, அவளுக்கு மிகவும் நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறோம். அதனால் நீ எனக்காகவேனும் சந்திராவிடம் மனத்தாபம் வைக்காதே. சந்திரா உன்னைவிடப் பெரியவள். பொறுத்துக்கொள். இல்லாவிட்டால் இப்போது நீயும் நானும் நடத்திவரும் இன்பமான வாழ்க்கை துன்பம் அடைந்துவிடும்" என்றான் முருகேசன். இதற்குச் சுந்தரி பதில் ஒன்றும் பேசவில்லை. ஆனாலும் கணவன் சொன்னதில் அவள் திருப்தியடைந்து ஒத்துக்கொண்டதாகத் தெரிவிக்கவில்லை.

## அத்தியாயம் 9

இதன் பிறகு சந்திரா படுக்கையறையில் தன் கணவனுக்கு வாக்களித்தபடியே சுந்தரியை மனப்பூர்வமாக மன்னித்து விட்டு அவளுடன் சுமுகமாகவே பழகினாள். ஆனால், சுந்தரி அப்படிச் சுமுகமாக இல்லை. எனினும், சந்திராவுடன் வேறு தகராறு ஒன்றும் சுந்தரி வைத்துக்கொள்ளவில்லை. முன் போல் சமையலைப்பற்றிக் குறை கூறுவதையும் விட்டு விட்டாள். ஆனாலும், அவளுக்குச் சந்திராவைப்பற்றிய தாழ்வு மனப்பான்மையும் தன்னைப்பற்றிய உயர்வு மனப்பான்மையும் மாறவில்லை.

கணவனுடைய அன்பாலும் மாமியாரின் நன்மதிப்பாலும் சுந்தரி அந்த வீட்டுக்கு ராணியாகவே இருந்து வந்தாள். வீட்டுச் செலவுக்குப் பணம் வேண்டியபோதும் தன்னுடைய உல்லாசச் செலவுகளுக்குப் பணம் வேண்டியபோதும் மாமியாருடைய பணப்பெட்டியைத் திறக்கும் உரிமை சுந்தரியின் ஏகபோகமாக இருந்தது. அதற்காகவே சுந்தரி மாமியாரிடத்தில் மரியாதை காட்டுவது.

சுந்தரி புக்ககம் வந்தபின் இரண்டு ஆண்டுகள் நஞ்சை நிலங்களிலிருந்து வந்த வருமானம் குடும்பச் செலவுகளுக்கு மட்டுந்தான் போதுமானதாக இருந்தது. அதிலும் ஒரு பகுதி சுந்தரியின் உல்லாசச் செலவுகளுக்குப் போய்விட்டது. அதனால் அம்மணியம்மாள் வீட்டின்மேல் வாங்கியிருந்த எண்ணாயிரம் ரூபாய்க் கடனுக்கு வருஷா வருஷம் வட்டி கட்டுவதாக ஒப்புக்கொண்டிருந்தபடி வட்டி கட்ட முடியவில்லை.

நிலங்களில் நல்ல விளைச்சல் இருந்தால் அதனால் வரக் கூடிய வருமானம் வீட்டுச் செலவுகளுக்குமேல் இரண்டாயிரம் ரூபாய்க்குக் குறையாமல் கிடைக்கும். அப்படி மிச்சமாகும் பணத்தால் சிறுகச் சிறுகக் கடனைத் தீர்த்துவிடலாம் என்ற தைரியத்தில்தான் அம்மணியம்மாள் கடன் வாங்கியது இரண்டு ஆண்டுகளாக வட்டி கட்ட முடியவில்லை.



மூன்றாவது ஆண்டில் நஞ்சை நிலங்களில் மிக நல்ல விளைச்சல் கண்டு, வீட்டுச் செலவுக்கு வேண்டியது போக மூவாயிரத்து ஐந்நூறு ரூபாய் மிச்சமாயிற்று. அந்த விளைச்சலுக்காக இரவு பகலாகப் பாடுபட்டவன் சுந்தரமூர்த்தி.

விளைச்சலைப் பெருக்கக்கூடிய முயற்சிகளில் பாடுபட்டது மன்றி விளைந்த நெல்லையும் மற்ற தானியங்களையும் சேதமில்லாமல் சேர்த்ததும், அவற்றைக் கிராக்கியுள்ள இடங்களை அறிந்து அங்கே கொண்டுபோய் விற்று ரொக்கப் பணம் கொண்டுவந்ததும் சுந்தரமூர்த்திதான்.

முருகேசனுக்கும் தாமரைக்கண்ணிக்கும் திருமணம் நடந்த பின் சுந்தரமூர்த்திதான் நிலங்களைக் கவனித்து வருகிறான். அவனுடைய மனைவி சந்திராதான் சமையலைக் கவனித்து வருகிறாள். அத்துடன் அவர்கள் இருவருந்தான் நோயாளியாகப் படுத்திருக்கும் தாமரைக்கண்ணிக்கான எல்லாச் சேவைகளையும் செய்து வருகிறார்கள்.

அதனால் அவ்விருவரிடத்திலும் முருகேசன் தாயார் அம்மணியம்மாள் அளவற்ற அன்பு கொண்டிருந்தாள். இப்போது சுந்தரமூர்த்தியின் உழைப்பாலும் திறமையினாலும் நிலங்களின் வருமானத்தில் குடும்பச் செலவுகளுக்கு வேண்டியதுக்குமேல் மூவாயிரத்து ஐந்நூறு மிச்சமாகித் தன் கைக்கு வந்துவிட்ட மட்டற்ற மகிழ்ச்சியினால் அம்மணியம்மாளுக்குச் சுந்தரமூர்த்தியிடம் உள்ள அன்பும் பல மடங்கு அதிகமாகிவிட்டது. அதனால் சுந்தரமூர்த்திக்கு ஒரு பரிசு கொடுக்க ஆசைப்பட்டாள். அந்த மூவாயிரத்து ஐந்நூறு ரூபாயில் ஐந்நூறு ரூபாயை அவனுக்கு இஷ்டமானதைச்செய்து கொள்ளக் கொடுத்துவிட்டு, மீதி மூவாயிரம் ரூபாயை வீட்டு மேலுள்ள கடனுக்கு வட்டியும் அசலில் ஒரு பகுதியுமாகக் கொடுத்துவிடலாம் என்று நினைத்தாள்.

உடனே, சுந்தரமூர்த்திக்கு மட்டும் பரிசு கொடுப்பது போதாது, அவன் மனைவி சந்திராவுக்கும் ஏதாவது செய்யத் தான் வேண்டும் என்று எண்ணினாள். ஆனால், ஆளுக்கு

ஐநூறு கொடுக்க முடியாதே! அப்படிக் கொடுத்தால் கடனுக்கு இரண்டு வருட வட்டியுடன் அசலுக்காக ஒன்றும் கொடுக்க முடியாதே! அசலையும் குறைத்துக்கொண்டே வந்தால்தானே கடன் தீரும் என்று தயங்கினாள்.

வெகு நேரம் எண்ணிப் பார்த்துக் கடைசியில் ஒரு தீர்மானம் செய்தாள். தாமரைக்கண்ணிக்கு வைத்தியம் நடக்கக் கையில் பணம் இருக்க வேண்டுமே என்று கல்யாணச் செலவுகளைச் சுருக்கி மிச்சப்படுத்தின இரண்டாயிரம் ரூபாயும் அதற்குமுன் பாங்கியில் மிச்சமிருந்த நானூறு ரூபாயும் அப்படியே பாங்கியில் இருந்தது. அதில் ஓர் ஐநூறு ரூபாய் எடுத்து இந்த ஐநூறோடு சேர்த்துக்கொண்டு சுந்தரமூர்த்திக்கும் அவன் மனைவி சந்திராவுக்கும் ஆளுக்கு ஐநூறாகவே கொடுத்துவிடுவது என்று முடிவு செய்தாள்.

அதன்படி மறுநாள் காலை ஆகாரத்துக்குப் பின் சுந்தரமூர்த்தி வெளியே போய்விடுமுன் அவனைத் தன் அருகில் அமரச்செய்து, அவன் விவசாயத்தைத் திறமையுடன் கண்காணித்து நல்ல விளைச்சல் உண்டாக்கினதையும் தானியங்களை நல்ல விலைக்கு விற்றுப் பெருந்தொகை மிச்சப்படுத்தினதையும் பாராட்டினாள். அவன் பதில் பேசாமல் கேட்டுக்கொண்டான்.

அதன் பிறகு அந்த அம்மாள் தன் இளைய மருமகள் சுந்தரியைக் கூப்பிட்டாள். சுந்தரி அப்போது தன் பள்ளித் தோழி கனகவல்லியைப் பார்த்துவரத் தியாகராயநகருக்குப் போகத் தன்னை அலங்கரித்துக்கொண்டு முகத்துக்குப் பவுடர் பூசிக்கொண்டிருந்தாள். உடனே வர முடியவில்லை. அப்போது முருகேசன் வீட்டில் இல்லை. கூப்பிட்டது சுந்தரிக்குக் கேட்கவில்லையோ என்று அம்மணியம்மாள் சந்திராவைக் கூப்பிட்டுச் சுந்தரியை அழைத்து வரச் சொன்னாள். சந்திரா, முருகேசனுடைய அறைக்கு அருகிற்சென்று, வெளியே நின்றபடியே உள்ளே எட்டிப் பார்த்து, "சுந்தரி! உன்னைப் பெரியம்மா கூப்பிடுறாங்க" என்றாள்.



"கூப்பிட்டது எனக்கும் கேட்டுது" என்றாள் சுந்தரி; திரும்பிக்கூடப் பார்க்காமல்.

சந்திரா உடனே திரும்பிப் போய், "நீங்கள் கூப்பிட்டது கேட்டுதாம்; வருகிறேன் என்கிறாள்" என்று மட்டும் சொன்னாள்.

சிறிது நேரத்துக்குப் பின் அலங்காரத்தோடு வந்த சுந்தரியைப் பார்த்து மாமியார், "வெளியே போகப் போகிறாயா?" என்றாள்.

"ஆமாம் அத்தை. கனகவல்லி வரச் சொன்னாள்" என்றாள் சுந்தரி.

"சரி, போயிட்டு வா. அதற்கு முன் நேற்று இரும்புப் பெட்டியில் வைக்கச் சொல்லி உன்னிடம் கொடுத்தேனே பணப்பை, அதை எடுத்து வா" என்று பெட்டிச்சாவியைச் சுந்தரியிடம் கொடுத்தாள் மாமியார்.

சுந்தரி அதை எடுத்துவரப் போனாள்.

முருகேசன் தாயார், நின்றுகொண்டிருந்த சந்திராவைத் தன்னருகில் அமரச் செய்தாள்.

சுந்தரி பணப்பையைக் கொண்டுவந்து மாமியாரிடம் கொடுத்தாள். அந்த அம்மாள் பணப்பையைத் திறந்து அதிலிருந்து ஆயிரம் ரூபாயை எடுத்து அதில் ஐநூறு ரூபாயைச் சுந்தரமூர்த்தியிடம் நீட்டி, "சுந்தரம், இதில் ஐநூறு ரூபாய் இருக்கிறது. உனக்குப் பிரியமானபடி, கைக்குத் தங்கச் சங்கிலியோ அல்லது வேறு எதுவோ செய்துகொள். அது உனக்கு என் பரிசாக இருக்கட்டும்" என்றாள்.

"எனக்கென்னத்துக்குச் சங்கிலி? எனக்குப் பரிசு ஒன்றும் வேண்டாம். சந்திராவுக்கு வேணுமானால் கொடுங்கள்" என்றான் சுந்தரமூர்த்தி.

"அவளுக்கும் ஐநூறு ரூபாய் தனியாகத் தருகிறேன். நீ இதை வாங்கிக்கொள்" என்றாள் அம்மணியம்மாள்.

"எனக்கு ஒன்றும் வேண்டாம்; இதையும் அவளுக்கே தந்துவிடுங்கள்" என்றான் சுந்தரமூர்த்தி.

"அதுவும் நல்லதுதான்" என்று சொல்லிக்கொண்டே அந்த அம்மாள் மற்றொரு ஐநூறு ரூபாயையும் அதனோடு சேர்த்து ஆயிரம் ரூபாயையும் சந்திராவிடம் நீட்டி, "இந்தா சந்திரா, இதில் உனக்குப் பிரியமானபடி கழுத்துக்குச் சங்கிலியோ கைக்கு வளையல்களோ செய்துகொள்" என்றாள்.

சந்திரா அந்தப் பணத்தை வாங்கிக்கொண்டு, "இந்தப் பணத்தை நான் எங்கே கொண்டுபோய் வைக்கிறது? உங்களையறியாமல் நானே போய் நகை செய்துகொள்ளப் போகிறேனோ? இதை நீங்களே வைத்திருந்து உங்களுக்குப் பிரியமான நகையை வாங்கிக் கொடுங்கள்" என்று பணத்தைத் திருப்பி நீட்டினாள்.

அந்தச் சமயத்தில் வெளியே போயிருந்த முருகேசன் அங்கு வந்தான். அவனுடைய தாயார், சந்திரா நீட்டிய பணத்தை வாங்கிக்கொள்ளாமல் நடந்ததையெல்லாம் அவனிடம் சொன்னாள். உடனே முருகேசன் சந்திராவைப் பார்த்து, "சந்திரா! வாங்கிய பணத்தைத் திருப்பித் தர வேண்டாம். அதைக் கொஞ்ச நேரம் நீயே வைத்திரு மாலையில் நீயும் நானுமே போய் உனக்குப் பிடித்தமான நகையை வாங்கிவிடலாம்" என்றான்.

சந்திரா ஒத்துக்கொண்டாள்.

இதையெல்லாம் பார்த்துக்கொண்டே நின்ற சுந்தரிக்கு அவள் தன் பள்ளித் தோழியைப் பார்க்கப்போவதில் இருந்த மகிழ்ச்சி மறைந்துவிட்டது. சந்திராவுக்குத் தன் மாமியாரும் கணவனும் காட்டிய பரிவு அவளுக்குச் சந்திராமீது இருந்த குரோதத்தைக் கிண்டிவிட்டது. 'தன் கணவனுடைய நிலங்களிலிருந்து வந்த வருமானத்தில் தனக்கு ஒன்றுமில்லாமல் சந்திராவுக்குப் பரிசா!' என்று மனத்துக்குள்ளேயே புகைந்துவிட்டு ஒரு விதமாகச் சமாதானமடைந்தாள். அவள்தான் அந்த வீட்டுக்கு ராணியாச்சே! அவளுக்கில்லாமலா மற்றவர்களுக்கு?



ஆயிரம் ரூபாய் போக மீதி இரண்டாயிரத்து ஐநூறு ரூபாயோடு பணப்பையைச் சுந்தரியிடமே கொடுத்துப் பெட்டியில் வைக்கச் சொன்னாள், மாமியார். பையைப் பெட்டியில் வைத்துவிட்டுச் சுந்தரி கனகவல்லியைப் பார்க்கத் தியாகராய நகருக்குப் போய்விட்டாள்.

வீட்டின்மேல் வாங்கியிருக்கிற எண்ணாயிரம் ரூபாய் கடனுக்கு இரண்டு வருட வட்டியும் மீதியை அசலில் ஒரு பகுதியுமாக மூவாயிரம் உடனே கொடுத்துப் பத்திரத்தில் வரவு வைத்துவிட வேண்டுமென்று தீர்மானித்தாள் அம்மணியம்மாள். பணப்பையில் இருப்பது இரண்டாயிரத்து ஐநூறுதான். அதற்காக முன் எண்ணியபடி, சுந்தரமூர்த்தியை அனுப்பிப் பாங்கியிலிருந்து ஐநூறு ரூபாய் எடுத்து வரச்செய்து அதையும் அந்தப் பையில் போட்டுக்கொண்டு கடன் கொடுத்த அம்மாளுக்கு வட்டி கட்ட வருவதாகச் சுந்தரமூர்த்தியிடம் சொல்லியனுப்பினாள். சுந்தரமூர்த்தி, அந்த அம்மாள் வெளியூருக்குப் போயிருப்பதாகவும் வர ஒரு வாரம் ஆகும் என்றும் வந்து சொன்னான்.

அடுத்த வாரம் கடன் கொடுத்த அம்மாள் வந்துவிட்டாள் என்பதை அறிந்துகொண்டு முருகேசன் தாயார் பணப்பையை மடியில் பத்திரப்படுத்திக்கொண்டு புறப்பட ஆயத்தமானாள்; உடனே ஒரு நினைப்பு வந்து மூவாயிரத்தையும் கொ[illegible]த்தால் அசலில் எவ்வளவு கழியும் என்று கணக்குப் பார்த்தாள்; இரண்டு வருஷ வட்டி ஆயிரத்துத் தொள்ளாயிரத்துயிருபது ரூபாய் ஆகிறது. மூவாயிரத்தில் அந்த வட்டி போக மீதி ஆயிரத்து எண்பது. அசலுக்குக் கொடுப்பது ஆயிரமாக இருக்கட்டும் என்று, பையை எடுத்து அதிலிருந்து எண்பது ரூபாயை எடுத்துக்கொண்டு போய்ப் பெட்டியில் வைத்துப் பூட்டிவிட்டுப் பணப்பையை மீண்டும் மடியில் பத்திரப்படுத்திக்கொண்டு கடன் கொடுத்த அம்மாள் வீட்டுக்குப் புறப்பட்டாள். அப்போது மாலை நான்கு மணி. சுந்தரமூர்த்தி வயலுக்குப் போயிருந்தான். சுந்தரியும் முருகேசனும் 'மாட்டினி' சினிமா

வுக்குப் போயிருந்தார்கள். சந்திரா தாமரைக்கண்ணியைக் கவனித்துக்கொண்டிருந்தாள். துணைக்கு யாரையும் கூட்டிப் போக முடியவில்லை.

கடன் கொடுத்த அம்மாள் அம்மணியம்மாளை அன்புடன் வரவேற்று உபசரித்தாள். சிறிது நேரம் சேம சமாச்சாரங்களைப் பேசிவிட்டு, ''இரண்டு வருஷமாக நிலங்களில் நல்ல விளைச்சலில்லாமல் வட்டி கட்ட முடியாமற்போய்விட்டது. இந்த வருஷந்தான் கொஞ்சம் நல்ல விளைச்சல். இரண்டு வருஷ வட்டியும் அசலுக்கு ஆயிரம் ரூபாயும் கொண்டு வந்திருக்கிறேன். வட்டிக்காகக் கணக்குப்படி ஆயிரத்துத் தொளாயிரத்து இருபது ரூபாய் இருக்கிறது. எடுத்துக்கொண்டு பத்திரத்தில் வரவு வைத்துவிடுங்கள்'' என்று சொல்லிக்கொண்டே இடுப்பிலிருந்த பணப்பையை எடுத்து, அதிலிருந்த நோட்டுக் கற்றையை அந்த அம்மாளிடம் கொடுத்தாள், அம்மணியம்மாள்.

அதை வாங்கிய அந்த அம்மாள் நோட்டுகளை எண்ணிப் பார்த்துவிட்டு, ''இதில் எவ்வளவு இருப்பதாகச் சொன்னீர்கள்?'' என்றாள்.

''ஏன்? ரெண்டாயிரத்துத் தொளாயிரத்து இருபது இருக்குமே? சரியாக எண்ணிப் பாருங்கள்'' என்றாள் அம்மணியம்மாள்.

''சரியாகத்தான் எண்ணினேன். இந்தாங்க, நீங்களே எண்ணிப் பாருங்கள்'' என்று நோட்டுகளையெல்லாம் அம்மணியம்மாள் பக்கம் தள்ளினாள், அந்த அம்மாள்.

அவற்றை எண்ணிப் பார்த்த அம்மணியம்மாள் பேரதிர்ச்சியடைந்தவளாக ''ஐயோ!'' என்று அலறிவிட்டாள். அதில் ஆயிரத்துத் தொளாயிரத்து இருபது ரூபாய்தான் இருந்தது. 'ஆயிரம் ரூபாய் குறைகிறதே! எப்படிக் குறைந்தது? யார் எடுத்திருக்க முடியும்? சந்திராவுக்கு ஆயிரம் ரூபாய் கொடுத்தபின் மிச்சமிருந்த இரண்டாயிரத்து ஐநூறு ரூபாயுடன்



பையைப் பெட்டியில் வைக்கும்படி சுந்தரியிடந்தான் தந்தேன். அவள் பையைப் பெட்டியில் வைத்துப் பூட்டிச் சாவியை என்னிடம் கொடுத்துவிட்டுத் தியாகராய நகருக்குப் போய் விட்டாள். அதன் பிறகு இந்த எட்டு நாளாக அவளிடம்கூடச் சாவியைத் தரவில்லையே! பாங்கியிலிருந்து சுந்தரமூர்த்தி எடுத்து வந்து ஐநூறு ரூபாயையும் பையில் போட நானேதான் பெட்டியைத் திறந்தேன். வேறு யாரிடத்திலும் சாவியைக் கொடுக்கவில்லையே! அப்படியிருக்க ஆயிரம் ரூபாய் எப்படிக் குறைகிறது?' என்றெல்லாம் வெகு நேரம் மூளையைக் குழப்பிக்கொண்டிருந்துவிட்டுக் கடன் கொடுத்த அம்மாளைப் பார்த்து, ''அம்மா! நான் இந்தப் பையில் இரண்டாயிரத்துத் தொளாயிரத்து இருபது ரூபாய் போட்டு உங்களுக்கென்று பெட்டியில் வைத்திருந்தேன்; இங்கே வரும்போது எண்ணிப் பார்க்காமல் எடுத்துக்கொண்டு வந்துவிட்டேன். வீட்டில் யாரோ ஆயிரம் ரூபாய் எடுத்திருக்கிறார்கள். போய்த்தான் விசாரிக்க வேணும். நான் எண்ணிப் பார்க்காமல் சொல்லி விட்டதைப் பொறுத்துக்கொள்ளுங்கள். இப்போதைக்கு இரண்டு வருஷ வட்டியை மட்டும் வரவு வைத்துக் கொள்ளுங்கள்'' என்றாள்.

அப்படியே வட்டி மட்டும் வரவு வைக்கச் செய்துவிட்டு அம்மணியம்மாள் வெகு விசனத்தோடு வீட்டுக்கு வந்தாள். முருகேசன், சுந்தரி, சுந்தரமூர்த்தி ஆகிய யாரும் இன்னும் வீட்டுக்கு வரவில்லை. அம்மணியம்மாள் தனியே உட்கார்ந்து எண்ணியெண்ணிப் பார்த்தாள். ஐந்தோ, பத்தோ, ஐம்பதோ, நூறோ அல்ல; ஆயிரம் ரூபாய்! யார் எடுத்திருக்கக்கூடும்? முருகேசன், தாயாருக்குத் தெரியாமல் ஒரு பைசாகூட எடுத்ததில்லை. சுந்தரமூர்த்தியோ அல்லது சந்திராவோ பெட்டியைத் தொட்டுக்கூடப் பார்க்கமாட்டார்கள். சுந்தரமூர்த்தி பணம் திருட எண்ணினால் அவன் பெட்டியிலிருந்து திருட வேண்டியதில்லை. நிலத்தின் விளைச்சல் கணக்கையும் தானியங்களை விற்று வந்த பணக்கணக்கையும் திரித்துக் கூறி எவ்வளவு வேண்டுமானாலும் எடுத்துக்கொள்ள முடியும். ஆனால்,

சுந்தரமூர்த்தி மிக்க உண்மையாளன். சந்திராவோ உண்மைத் தன்மையிலும் உழைப்பிலும் சுந்தரமூர்த்திக்குச் சரியான மனைவி. ஆகையால், அவர்கள் இருவரும் பெட்டியிலிருந்து பணம் எடுத்திருக்க மாட்டார்கள்.

பெட்டிச் சாவியை இரவில் படுக்கும்போது தலையணைக்கு அடியில் வைத்துவிட்டுத் தூங்குவது வழக்கம். விடிந்தபின் அதை உடனே எடுத்துக்கொள்ளாமல் குளிக்கப் போவதுண்டு. அப்போது சாவியை எடுத்துச் சுந்தரிதான் பெட்டியைத் திறந்து பணம் எடுத்திருக்கலாம். அவளைத்தான் கேட்க வேண்டும் என்றெல்லாம் எண்ணிக்கொண்டு அம்மணியம்மாள் சுந்தரியின் வரவை எதிர்பார்த்துக்கொண்டிருந்தாள்.

சுந்தரியும் முருகேசனும் சினிமா விட்டபின் எங்கெங்கோ போய்விட்டு இரவு பத்தரை மணிக்கு வந்தார்கள். அவர்கள் கடற்கரையிலுள்ள ஓட்டலிலேயே சாப்பிட்டதால் வீட்டுக்கு வந்தவுடன் படுக்கப் போய்விட்டார்கள். அதனால் அம்மணியம்மாள் அன்று சுந்தரியைக் கேட்க முடியவில்லை; மறுநாள் சுந்தரியைத் தனியே அழைத்துப் பேசத் தருணம் பார்த்துக்கொண்டிருந்தாள்.

காலை ஆகாரம் உண்டபின் சுந்தரமூர்த்தி வெளியே போய்விட்டான். சந்திரா தாமரைக்கண்ணியைக் கவனிக்கப் போய்விட்டாள். முருகேசனும் சுந்தரியும் அறைக்குள் பேசிக்கொண்டிருந்தார்கள். பேச்சு முடிந்தபின் சுந்தரி வெளியே வருவாளென்று மாமியார் காத்துக்கொண்டிருந்தாள். பேச்சு முடிந்த பின் முதல் நாள் புதிதாக வாங்கி வந்த நாவலைப் படிக்க உட்கார்ந்துவிட்டாள் சுந்தரி. அவள் ஏதாவது வீட்டுக் காரியம் செய்பவளாக இருந்தால்தானே அறையை விட்டு வெளியே வரவேண்டியிருக்கும்?

சுந்தரி அறையிலிருந்து வெளியே வரட்டும் என்று எதிர்பார்த்துக்கொண்டு அம்மணியம்மாள், அந்த அறைக்குச் சிறிது தூரத்தில் தரையில் சுவரின்மீது சாய்ந்துகொண்டு உட்கார்ந்த



படியே ஆயிரம் ரூபாய் காணாமற்போனதைப்பற்றி விசனப் பட்டுக்கொண்டிருந்தாள்.

வெகு நேரம் காத்திருந்தும் சுந்தரி வரவில்லை. தானே போய்ச் சுந்தரியைக் கூப்பிடலாமா என்று எண்ணினாள், அம்மணியம்மாள். 'அப்படிச் செய்தால் அது முருகேசனுடைய கவனத்தைக் கவரும். சுந்தரியைத் தனியாகக் கூட்டிக்கொண்டு போய்க் கேட்டாலும் பின்னால், 'எதற்காக அம்மா உன்னைத் தனியே கூட்டிக்கொண்டு போனார்கள்?' என்று அவன் சுந்தரியைக் கேட்க நேரும். சுந்தரி பணத்தை எடுத்திருந்தால் அம்மாளுக்குத் தெரியாமல் அவ்வளவு பெரிய தொகையை ஏன் எடுத்தாள் என்று அவள்மீது அவன் கோபப்பட நேரும். அதனால் அவர்களுக்குள் இருந்து வரும் மகிழ்ச்சி கெட்டுவிடும். சுந்தரி பணம் எடுக்கவில்லை என்று சொன்னாலும் ஆயிரம் ரூபாய் காணாமற்போய்விட்டது அவனுக்குத் தெரிய வந்து அவனுடைய நிம்மதியைக் கெடுத்துவிடும்' என்றெல்லாம் எண்ணிப் பார்த்துத் தானே போய்ச் சுந்தரியைத் தனியே வரும்படி கூப்பிட நினைத்ததைத் தள்ளிவிட்டாள்.

அப்போது முருகேசன் எங்கோ போவதற்கு உடைகளை அணிந்துகொண்டு அறையைவிட்டு வெளியே வந்தான். தாயார் சற்றுத் தூரத்தில் சோர்ந்த முகத்துடன் உட்கார்ந்திருப்பதைக் கண்டு அருகில் வந்து; "ஏனம்மா எப்படியோ போல் உட்கார்ந்திருக்கிறீங்க ?" என்றான்.

"ஒன்றுமில்லேடா சாமி, என்னமோ ரொம்பக் களைப்பாயிருந்தது. சும்மா இப்படி உட்கார்ந்தேன். நீ வெளியே போகிறாயா?" என்றாள் அன்னை.

"ஆமாம்மா, நேற்று மெரினா ஓட்டலிலே என்னோடு படித்த ராமச்சந்திரனைச் சந்தித்தேன். அவன் டில்லியில் பெரிய உத்தியோகத்தில் இருக்கிறான்; இன்றைக்கு டில்லிக்குப் புறப்படுகிறான். அவனை வழியனுப்பிவிட்டு வரப் போகிறேன்!" என்றான்.

"மகராஜனாப் போயிட்டு வா."

முருகேசன் போய்விட்டான். அவனுடைய தாயார் உடனே எழுந்து போய்ச் சுந்தரி இருந்த அறைக்குள் புகுந்தாள். முகத்துக்கு நேராகப் புத்தகத்தைப் பிடித்துக்கொண்டிருந்த சுந்தரி, மாமியார் உள்ளே வந்ததைப் பார்க்கவில்லை.

"படிக்கிறாயாம்மா?" என்றாள் மாமியார்.

திடுக்கிட்டுத் திரும்பிய சுந்தரி, அபூர்வமாக அந்த அறைக்குள் வந்த மாமியாரைக் கண்டு உடனே எழுந்து, "என்ன அத்தை?" என்றாள்.

உடனே அம்மணியம்மாள் தானே போய்க் கதவைத் தாழிட்டுவிட்டு வந்து, ஒரு நாற்காலியில் உட்கார்ந்துகொண்டு மருமகளையும் இன்னொரு நாற்காலியில் இருக்கச் செய்து, "சுந்தரீ! அன்றைக்குப் பெட்டியில் வைக்கும்படி இரண்டாயிரத்து ஐநூறு ரூபாயுடன் பணப்பையை உன்னிடம் கொடுத்தேன் பாரு ..."

"ஆமாம்."

"அதிலே ஆயிரம் ரூபாய் குறையுதே!"

"ஆமாம் அத்தை, அதில் ஆயிரம் ரூபாய் நான் எடுத்துக்கொண்டேன்" என்றாள் சுந்தரி.

"எதற்காக?"

"என் பள்ளித் தோழி கனகவல்லி ரொம்ப அழகான கல்லிழைத்த வளையல்கள் போட்டுக்கொண்டிருக்கிறாள். அதைப் போல் அணிந்துகொள்ள ஆசைப்பட்டேன்; அது எவ்வளவு விலையென்று கேட்டேன். அது அவர்கள் வீட்டுக்கு நகை செய்யும் ஆசாரியைக்கொண்டு செய்யப்பட்டதென்றும்; ஆயிரம் ரூபாய் ஆகும் என்றும் சொல்லியிருந்தாள். அதனால் அந்தப் பையிலிருந்து ஆயிரம் ரூபாய் எடுத்துக்கொண்டு போய் அவள் மூலமாகவே ஆசாரியிடம் கொடுத்து வேலை நடந்துகொண்டிருக்கிறது" என்றாள் சுந்தரி.



"பையிலிருந்து பணம் எப்போது எடுத்தாய்?"

"நீங்கள் பையைப் பெட்டியில் வைக்கச் சொல்லிய அப்போதே ஆயிரம் ரூபாயை எடுத்துக்கொண்டுதான் பையைப் பெட்டியில் வைத்துப் பூட்டிச் சாவியை உங்களிடம் தந்துவிட்டுக் கனகவல்லியைப் பார்க்கத் தியாகராய நகருக்குப் போனேன். அப்போதே ஆசாரியை அழைத்து வளையல் செய்யப் பணம் கொடுக்கப்பட்டது."

"அடியம்மா! என்ன இப்படிச் செய்துவிட்டாய்? அந்தப் பணம் உன் கல்யாணத்துக்காக வாங்கின கடனுக்கு வட்டி கட்டி அசலையும் கொஞ்சம் கழிக்கலாம் என்பதற்காக அல்லவா வைத்திருந்தேன்."

"அது எனக்கு எப்படித் தெரியும், அத்தை? பின் எதற்கு அதிலிருந்து ஆயிரம் ரூபாயைத் தூக்கிச் சந்திராவுக்கு நகை செய்துகொள்ளக் கொடுத்தீர்கள்?"

இந்தக் கேள்வி அம்மணியம்மாளைப் புண்படுத்திவிட்டது. 'குடும்பத்துக்காக இவ்வளவு அன்போடும் பொறுப்போடும் உழைக்கிற சந்திராவுக்கு ஒரு நகை செய்துகொள்ளப் பணம் பரிசளித்தது சுந்தரிக்குப் பொறுக்கவில்லையே' என்று வருத்தப்படச் செய்துவிட்டது. 'சந்திரா இல்லாவிட்டால் சுந்தரியின் உல்லாச வாழ்க்கைக்கு வழியே இல்லாமற் போகுமே! அவளிடத்திலா இவள் பொறாமைப்படுகிறாள்?' என்றெல்லாம் எண்ணச் செய்துவிட்டது. ஆனாலும் மகன் முருகேசனுடைய இன்ப வாழ்க்கை கெட்டுவிடக்கூடாதே என்பதற்காக அம்மணியம்மாள் சுந்தரி சொன்னதைப் பொருட்படுத்தவில்லை; ஆனால், அதையெண்ணிச் சிறிது நேரம் வருத்தக் குறியோடு மௌனமாகச் சுந்தரியைப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

சுந்தரி அகந்தையுள்ளவளானாலும் கூரிய அறிவுடையவள்; தான் சந்திராவைப்பற்றிச் சொல்லிவிட்டது மாமியாரை உறுத்திவிட்டது என்பதை உடனே ஊகித்துவிட்டாள்.

அதனால் அவளே பேச்சைத் தொடர்ந்து, "அத்தை! நீங்கள் சந்திராவுக்கு நகை செய்துகொள்ளப் பணம் கொடுத்தது தப்பு என்று நான் சொல்லவில்லை. அந்தப் பையிலிருந்து சந்திராவுக்கு நகை செய்துகொள்ளப் பணம் கொடுத்ததனால், அதிலிருந்து நானும் ஒரு நகை செய்துகொள்ள எடுத்துக் கொள்ளலாம் என்று எண்ணிவிட்டேன். மன்னித்துவிடுங்கள். அதை நீங்கள் கடனுக்கு வட்டி கட்டத்தான் ஒதுக்கியிருந்தீர்கள் என்பதை அறியாமல் எடுத்துவிட்டேன்" என்றாள்.

'மன்னித்துவிடுங்கள்' என்று சுந்தரி சொல்லிவிட்டது மாமியாரின் வருத்தத்தை மாற்றிவிட்டது. 'சந்திராவுக்கு ஏன் ஆயிரம் ரூபாயைத் தூக்கிக் கொடுத்தீர்கள்?' என்று சுந்தரி சொன்னதில் உண்டான வருத்தமும் மறைந்துவிட்டது. மகனை மகிழ்விக்கத் தான் பெருமுயற்சி செய்து கொண்டுவந்த மருமகள் அல்லவா?

வழக்கமான பரிவுடன் மருமகளைப் பார்த்து, "சுந்தரி! நீ கல்லிழைத்த வளையல்கள் செய்துகொள்ளப் பணம் எடுத்துக்கொண்டதில் குற்றமில்லை. ஆனால், நீ பணத்தை எடுத்துக்கொண்டதை அறியாமல், நான் பையோடு கொடுத்த தொகை அதில் அப்படியே இருப்பதாக நினைத்து, நானும் எண்ணிப் பார்க்காமல் எடுத்துக்கொண்டு போய்க் கடன் கொடுத்த அம்மாளிடம் வட்டிக்குமேல் அசலுக்கும் ஆயிரம் ரூபாய் இருப்பதாகச் சொல்லிப் பையிலிருந்த நோட்டுகளை யெல்லாம் அவளிடம் கொடுத்தேன். அந்த அம்மாள் எண்ணிப் பார்த்தபோது ஆயிரம் ரூபாய் குறைவாக இருந்தது தெரிந்தது. எனக்குப் பெரிய ஏமாற்றமும் மூக்கறுப்பும் உண்டாகிவிட்டன. நீ பணம் எடுத்துப் பத்து நாள் ஆகிறதே! பணம் எடுத்துக் கொண்டதை ஏன் என்னிடம் சொல்லவில்லை?" என்றாள் மாமியார்.

"என்ன அத்தை அப்படிச் சொல்லுகிறீர்கள்? எனக்குப் பணம் தேவையானபோதெல்லாம் நானே உங்களிடம் சாவியை வாங்கி வேண்டிய பணத்தை எடுத்துக்கொள்வதுதானே



வழக்கம். எதற்காக, எவ்வளவு எடுத்துக்கொண்டேன் என்பதை நானும் சொன்னதில்லை, நீங்களும் கேட்டதில்லையே! இந்தப் பணம் எடுத்துப் பத்து நாளாச்சே. நீங்கள் ஒன்றும் அதைப்பற்றிக் கேட்காததால் நான் எடுத்துக் கொண்டதை நீங்கள் அறிந்து அங்கீகரித்துவிட்டதாகத்தான் நான் எண்ணிக்கொண்டிருந்தேன். வளையல்கள் கைக்கு வந்த பிற்பாடு எதற்காகப் பணம் எடுத்தேன் என்று காட்டலாம் என்று நினைத்தேன்" என்றாள் சுந்தரி.

இதைக் கேட்ட மாமியார் கலகலவென்று சிரித்துவிட்டு மருமகளைக் கட்டிப் பிடித்து, "அடி என் கட்டிக் கரும்பே! உன் சமத்தே சமத்து! இவ்வளவு புத்திசாலித்தனமாக ஜோடிச்சுப் பேசின இதுக்கே உனக்கு வைரம் இழைத்த வளையல்கள் பரிசு கொடுக்க வேணுமடியம்மா! நீ உங்கள் உல்லாசச் செலவுகளுக்காக நாற்பது ஐம்பது சொல்லாமல் எடுத்துக்கொள்வதும் ஆயிரம் ரூபாயைச் சொல்லாமல் எடுத்துக்கொள்வதும் ஒன்று தானா?" என்றாள்.

அதை ஒத்துக்கொண்டதுபோல் குபுக்கென்று சிரித்து விட்டாள், சுந்தரி.

"போனாற்போகட்டும். நீ பணம் எடுத்து வளையல் செய்யக் கொடுத்திருப்பது உன் புருஷனுக்குத் தெரியுமா?" என்றாள் மாமியார்.

"இன்னும் சொல்லவில்லை. வளையல்கள் வந்த பிறகு தான் உங்களுக்கும் அத்தானுக்கும் சொல்லலாம் என்று இருந்தேன்" என்றாள் மருமகள்.

"வளையல்கள் என்றைக்கு வரும்?"

"வெள்ளிக்கிழமை வரும்."

"நல்ல நாள்தான். வந்தவுடன் பூஜையில் வைத்துச் சாமி கும்பிட்டு அணிந்துகொள்" என்று ஆசீர்வதித்தாள் மாமியார்.

## அத்தியாயம் 10

கணவனைத் தவிர மற்றவர்களையெல்லாம் துச்சமாக மதிக்கும் சுந்தரி, தன் மாமியாரிடத்தில் மட்டும் மரியாதை யுடன் நடந்துகொள்வாள். அந்த மரியாதைகூட சுயநலம் கருதிய செயற்கை மரியாதைதான்.

குடும்பத் தலைவியும் பணப்பெட்டிக்கு உடையவளும் ஆகிய மாமியாரை வசப்படுத்திக்கொள்ளாவிட்டால் தன்னுடைய உல்லாச வாழ்க்கைக்கான வசதிகள் இல்லாமற் போய்விடும் என்பதை நன்றாக அறிந்தவள்; அத்துடன் மாமியாருக்கு வருத்தம் உண்டாகும்படி நடந்துகொண்டால் அது தன் கணவனுக்கு வருத்தமுண்டாக்கும் என்பதையும் அறிந்தவள்.

சந்திராவுக்கு ஆயிரம் ரூபாய் கொடுத்ததைப் பொறுக் காமல்தான் சுந்தரி ஆயிரம் ரூபாய் எடுத்துக்கொண்டது. மாமியார் சந்திராவுக்குப் பணம் கொடுக்காதிருந்தால் கல்லிழைத்த வளையல்களைப்பற்றிச் சுந்தரி அவ்வளவு அவசரப்பட்டிருக்க மாட்டாள். 'வீட்டுக்கு வேலை செய்து அண்டிப் பிழைக்க வந்திருக்கும் சந்திராவுக்கு ஆயிரம் ரூபாய் தந்தால் அந்த வீட்டுக்கே ராணியான தனக்கு ஆயிரம் ரூபாயாவது வேண்டாவா' என்ற உயர்வு மனப்பான்மையினால் தான் மாமியாரைக் கேட்காமலேயே பணம் எடுத்துக்கொண்டது.

முன்பு ஒரு நாள் சுந்தரி தனியாகச் சாப்பிட வந்த போது சுந்தரிக்கும் சந்திராவுக்கும் நடந்த பேச்சில் சந்திரா சுந்தரியை, 'என்ன சுந்தரி! ஒரேயடியாகத் தலை கீழே நிற்கிறாய்?' என்று கேட்டது முதல் சுந்தரியின் மனத்தில் சந்திராவைப்பற்றிய குரோதம் இருந்துகொண்டேதான் இருந்தது. கணவனும் மாமியாரும் சந்திராமீது மட்டற்ற மதிப்பும் அன்பும் உள்ளவர்களாக இருப்பதால், சந்திராவின்மீது தனக்குள்ள தாபத்தைச் சுந்தரி அடக்கிக்கொள்ள வேண்டியிருந்தது. ஆனாலும் அது அவளையும் மீறிச் சில சமயங்களில் வெளிப்



பட்டுவிடும். பெரும்பாலும் அது சந்திரா இல்லாத இடங்களில் தான் வெளிப்படும்

ஒரு நாள் சந்திரா அங்கில்லையென்று எண்ணிக்கொண்டு சுந்தரி சொன்ன சொல் சந்திராவின் காதில் விழுந்து மீண்டும் அவர்களுக்குள் மோதல் உண்டாகிவிட்டது. என்னவென்றால்:

தமரைக்கண்ணியின் மகள் ஜானகியும் சந்திராவின் மகன் நெல்லையப்பனும் வெவ்வேறு பள்ளிக்கூடங்களில் படிக்கிற வர்கள். ஜானகிக்கு ஏழு வயது. நெல்லையப்பனுக்குப் பதினொரு வயது. ஜானகியும் நெல்லையப்பனும் அத்தை மகள் அம்மான் மகன் என்ற முறையில் ஒருவரையொருவர் கேலி செய்துகொண்டு மிக்க நேசமாக விளையாடுவார்கள்; சேர்ந்தே பள்ளிக்கூடத்துக்குப் புறப்படுவார்கள். வரும்போதும் நெல்லையப்பன் ஜானகியின் பள்ளிக்கூடத்துக்குப் போய் அவளையும் கூட்டிக்கொண்டு இருவரும் சேர்ந்தே வீட்டுக்கு வருவார்கள்.

அவர்கள் இருவரும் சேர்ந்து போகும்போதாவது வரும் போதாவது அவர்களைச் சந்திக்கிற சுந்தரி, ஜானகியைத் தூக்கிக் கொஞ்சுவாள்; நெல்லையப்பனிடம் ஓர் அன்பான வார்த்தைகூடப் பேச மாட்டாள்; ஜானகிக்குப் பிஸ்கட் கொடுப்பாள்; நெல்லையப்பனுக்குக் கொடுக்க மாட்டாள். இப்படியாகச் சுந்தரிக்குச் சந்திராவின்மீதுள்ள வன்மத்தின் சாயல் நெல்லையப்பன்மீது விழுந்தது.

ஜானகி இரண்டாம் வகுப்பில் படித்துக்கொண்டிருந்தாள். நெல்லையப்பன் நான்காம் வகுப்பில் படித்துக்கொண்டிருந்தான். அந்த வருஷம் தேர்வின் முடிவுகளை இரண்டு பள்ளிக்கூடங் களிலும் ஒரே நாளில் வெளியிட நேர்ந்தது. நெல்லைப்பன் தேற வில்லை. ஜானகி தேறிவிட்டாள். நெல்லையப்பன் தேறாமற் போனது அவனுடைய குற்றமல்ல. அவன் புத்திக்கூர்மையும் படிப்பில்கவனமும் உள்ளவன்தான். ஆனால், அவன் தாயார் சந்திரா மதுரைக்குப் போகும்போதெல்லாம் அவனையும் கூட்டிக்

கொண்டு போனதனால் அங்கேயும் படிப்புக் கெட்டு இங்கேயும் கெட்டுவிட்டது.

தேர்வு கிடைக்காத வருத்தத்தோடு ஜானகியை வீட்டுக்குக் கூட்டிப் போகும் வழக்கப்படி நெல்லையப்பன் ஜானகியின் பள்ளிக்கூடத்துக்குப் போனான். தினந்தினம் ஜானகியைக் கூப்பிட அவளுடைய பள்ளிக்கூடத்துக்குப் போவதில் நெல்லையப்பனுக்கு ஒரு நன்மையும் உண்டு. என்னவென்றால், ஜானகியுடன் ஒரே வகுப்பில் அடுத்த வீட்டுச் சாயபுவின் மகள் பாத்திமாவும் படித்துக்கொண்டிருந்தாள். பாத்திமாவைக் கூட்டிக்கொண்டு போகச் சாயபுவின் 'கார்' வரும். அதிலேயே ஜானகியும் நெல்லையப்பனும் வீட்டுக்கு வந்துவிடுவார்கள்.

அன்று நெல்லையப்பன் ஜானகியின் பள்ளிக்கூடத்துக்குப் போனபோது ஜானகியும் பாத்திமாவும் மோட்டாருக்காகக் காத்துக்கொண்டு வெளியே நின்றார்கள்.

நெல்லையப்பனைக் கண்டவுடன் ஜானகி துள்ளிக் குதித்துக் கொண்டு முன்னால் வந்து, "அத்தான்! பாத்திமாவும் நானும் பாஸ்'' என்று களிப்போடு கத்தினாள். நெல்லையப்பன் முகம் சுண்டிவிட்டது. ஆனாலும் கூச்சமில்லாமல், "நான் பெயில்'' என்றான்.

"போங்க அத்தான், பொய் சொல்றிங்க'' என்றாள் ஜானகி.

"பொய்யல்ல ஜானகி, மெய்தான், நான் பெயில்'' என்று வருத்தத்தோடு சொன்னான். ஜானகியும் பாத்திமாவும் அனுதாபப்பட்டார்கள்.

மோட்டார் வந்தது. வீட்டுக்கு வந்தார்கள். ஜானகியும் நெல்லையப்பனும் வந்தபோது வீட்டில் சுந்தரியும் சந்திராவுந்தான் இருந்தார்கள். முருகேசனும் அவன் தாயாரும் சுந்தரமூர்த்தியும் வெவ்வேறு காரியமாக வெளியே போயிருந்தார்கள். தாமரைக்கண்ணி அவளுடைய அறையில் படுத்துக் கிடந்தாள்.



சந்திரா மளிகைச் சாமான்கள் இருக்கிற அறைக்குள் எதையோ தேடிக்கொண்டிருந்தாள். ஜானகியும் நெல்லையப்பனும் அந்த அறைக்கு நேராக வரும்போது சுந்தரி எதிர்ப்பட்டாள். சுந்தரியைக் கண்டதும் ஜானகி, "சித்தி! நான் பாஸாயிட்டேன், அத்தான் பெயிலாயிடிச்சி'' என்றாள்.

அதைக் கேட்ட சுந்தரி, சந்திரா அறைக்குள் இருப்பது தெரியாததால், அங்கே யாரும் இல்லையென்ற நினைப்பில் ஜானகியை அணைத்துக்கொண்டு, "நீ பாஸாயிடுவாய் என்று எனக்குத் தெரியும். இவன் 'ஒரு தண்டச்சோற்று ராமன். அவன் படிக்கவும் மாட்டான், பாஸாகவும் மாட்டான்'' என்று சொல்லிவிட்டாள்.

அறைக்குள்ளிருந்த சந்திரா இதைக் கேட்டுக் கொதிப்படைந்துவிட்டாள்; உடனே அறையிலிருந்து வெளியே வந்து சுந்தரியைப் பார்த்து, "ஏண்டியம்மா, உங்கப்பன் வீட்டிலிருந்தா கொண்டுவந்து இவனுக்குத் தண்டச்சோறு போடுகிறாய்?'' என்று கேட்டுவிட்டாள்.

சந்திரா திடீரென்று அறையிலிருந்து வெளியே வந்ததைக் கண்ட சுந்தரி அதிர்ச்சியடைந்துவிட்டாள். ஆனாலும் சமாளித்துக்கொண்டு தனக்குள்ள சிறப்பை விட்டுக்கொடுக்கக்கூடாதென்ற உறுதியுடன், "எங்கப்பன் வீட்டிலிருந்து நான் எதற்காகக் கொண்டுவர வேணும்? இங்கே இருக்கிறதும் என்னுடையதுதானே'' என்று சொல்லிக்கொண்டே போய்த் தன் அறைக்குள் புகுந்து கதவைச் சார்த்திக்கொண்டாள்.

சந்திராவுக்கு அடக்க முடியாத ஆத்திரம் வந்து சிறிது நேரம் கதிகலங்கிச் சுந்தரி போன திக்கையே வெறித்துப் பார்த்துக்கொண்டே மரம் போல் நின்றுவிட்டாள். சுந்தரி சொன்னதில் தனக்கும் தன் மகனுக்கும் தன் கணவருக்கும் உள்ள அவமதிப்பை எண்ணினாள். கணவன் நினைப்பு வந்ததும், அவன் முன்னே, 'சுந்தரி மறுபடியும் என்ன சொன்னாலும் காதில் போட்டுக்கொள்ளாதே' என்று சொன்னதும் அதை

அவள் ஒப்புக்கொண்டதும் நினைவுக்கு வந்து அமைதியடைந் தாள்.

அன்றிரவு சந்திரா, தன் கணவன் சுந்தரமூர்த்தியிடம் நடந்ததை அப்படியே சொல்லிக் கண் கலங்கினாள். சுந்தர மூர்த்தி மனைவியைச் சமாதானப்படுத்தி, "சந்திரா! சுந்தரி அகந்தையுள்ளவள் என்பதும் அதிகப்பிரசங்கி என்பதும் தெரிந்ததுதானே? அவள் சொன்ன தண்டச்சோற்றை அவள் தான் ஒரு வேலையும் செய்யாமல் தின்கிறாள். நீயும் நானும் உழைத்துச் சாப்பிடுகிறோம். அந்த உழைப்பும் நமக்காக மட்டும் அல்லாமல் சுந்தரி உட்படப் பிறருடைய நலத்துக்காகவும் உழைக்கிறோம். அதனால் நாம் வருத்தப்படவோ வெட்கப் படவோ வேண்டியதில்லை. சுந்தரி என்ன சொன்னாலும் காதில் போட்டுக்கொள்ள வேண்டாமென்று நான் சொல்லியிருந் தேனே? நீ ஏன் அவளோடு பேச்சு வைத்துக்கொண்டாய்?" என்றான்.

"நீங்கள் சொன்னது நினைவுக்கு வந்துதான் எனக்கு வந்த கோபத்தை அடக்கிக்கொண்டு வந்துவிட்டேன்" என்றாள்.

"அப்படியே கோபம் வரும்போதெல்லாம் அடக்கிக்கொள். நாம் இங்கிருப்பது அவளுடைய தயவினால் அல்லவென்பதை மறந்துவிடாதே. நம்முடைய தயவினால்தான் அவள் உல்லாச மாய் இருக்கிறாள். இருக்கட்டும்; அதை நாமே கெடுக்க வேண்டாம். நாம் பொறுத்துக்கொள்வது சுந்தரியைக் கருதி யல்ல. முருகேசனையும் அத்தையையும் என் தங்கை தாமரைக் கண்ணியையும் கருதித்தான்" என்றான் சுந்தரமூர்த்தி.

சந்திரா அதை ஏற்றுக்கொண்டு சமாதானமடைந் தாள். சுந்தரமூர்த்தியும் சந்திராவும் பொறுத்துக்கொண்ட தனால், சுந்தரி செய்த இப்பெரும்பிழைகளையும் அவள் சந்திராவிடத்தில் கொண்டுள்ள குரோதத்தையும் முருகேசனோ அம்மணியம்மாளோ அறிந்துகொள்ள முடியாமற்போயிற்று. அதனால் சுந்தரி அந்த வீட்டின் ராணியாகவே இருக்க முடிந்தது.



மாமியாரின் பொக்கிஷப் பெட்டியைத் திறக்கும் உரிமையும் அவளுடையதே.

இப்படியிருக்கையில், சுந்தரியின் தங்கைகளுள் மூத்தவ ளுக்குத் திருமணம் நிச்சயமாயிற்று. சுந்தரியின் பெற்றோர்கள் நேரில் வந்து அழைத்துப் போனார்கள். சுந்தரமூர்த்திக்கு வயல் களில் வேலை அதிகம். சந்திரா தாமரைக்கண்ணியைக் கவனித்துக்கொள்ள வேண்டும். அதனால் முருகேசனும் அவன் தாயாரும் சுந்தரியும் திருவொற்றியூரில் நடந்த அந்தத் திருமணத் துக்குப் போயிருந்தார்கள். சம்பந்தி என்ற முறையில், அம்மணியம்மாள் மணவிழாவில் மணப்பெண்ணுக்குப் பரிசாக ஓதியிட என்ன செய்யலாம் என்று எண்ணிப் பார்த்து, ரொக்கப் பணமாகத் தருவது நல்லது என்று தீர்மானித்து, நூற்று ஐம்பத்தொரு ரூபாய் கொண்டுபோயிருந்தாள்.

திருமணச் சடங்குகள் முடிந்து பரிசுகள் ஓதியிடலாம் என்ற அழைப்பு அறிவிக்கப்பட்டது. உடனே சுந்தரி எல்லாரையும் முந்திக்கொண்டு தன்னுடைய டம்பப் பையிலிருந்து ஒரு காகிதப் பொட்டலத்தை எடுத்து, அதிலிருந்தவற்றைப் புரோகிதரிடம் தந்து அவர் காதோடு என்னவோ சொன்னாள்.

தூரத்தில் உட்கார்ந்திருந்த அவளுடைய மாமியார் அம்மணி யம்மாள், தான் கொண்டுவந்திருந்த நூற்று ஐம்பத்தொரு ரூபாயை ஓதியிடப் பையிலிருந்து எடுத்துக்கொண்டே சுந்தரி புரோகிதரிடம் கொடுத்துக் காதோடு பேசினதைக் கவனித்தாள்.

சுந்தரி கொடுத்த பரிசைப் புரோகிதர் சபையோர் பார்க்கும்படி தூக்கிப் பிடித்துக்கொண்டு, "சம்பந்தி அம்மணி யம்மாள் பெண்ணை ஆசீர்வதித்து ஆறு தங்க வளையல்கள் ஆயிரம் கட்டி வராகன்" என்று சொல்லி வளையல்களை மணப்பெண்ணிடம் கொடுத்தார்.

அதைக் கேட்ட அம்மணியம்மாள் திடுக்கிட்டுத் திகைத்துத் திணறிவிட்டாள். 'ஆறு தங்க வளையல்களா! என்னிடத்திலும் சொல்லாமல் என் பேரால் ஓதியிட்டிருக்கிறாளே! ஆறு தங்க

அவள் ஒப்புக்கொண்டதும் நினைவுக்கு வந்து அமைதியடைந்தாள்.

அன்றிரவு சந்திரா, தன் கணவன் சுந்தரமூர்த்தியிடம் நடந்ததை அப்படியே சொல்லிக் கண் கலங்கினாள். சுந்தரமூர்த்தி மனைவியைச் சமாதானப்படுத்தி, "சந்திரா! சுந்தரி அகந்தையுள்ளவள் என்பதும் அதிகப்பிரசங்கி என்பதும் தெரிந்ததுதானே? அவள் சொன்ன தண்டச்சோற்றை அவள் தான் ஒரு வேலையும் செய்யாமல் தின்கிறாள். நீயும் நானும் உழைத்துச் சாப்பிடுகிறோம். அந்த உழைப்பும் நமக்காக மட்டும் அல்லாமல் சுந்தரி உட்படப் பிறருடைய நலத்துக்காகவும் உழைக்கிறோம். அதனால் நாம் வருத்தப்படவோ வெட்கப்படவோ வேண்டியதில்லை. சுந்தரி என்ன சொன்னாலும் காதில் போட்டுக்கொள்ள வேண்டாமென்று நான் சொல்லியிருந்தேனே? நீ ஏன் அவளோடு பேச்சு வைத்துக்கொண்டாய்?" என்றான்.

"நீங்கள் சொன்னது நினைவுக்கு வந்துதான் எனக்கு வந்த கோபத்தை அடக்கிக்கொண்டு வந்துவிட்டேன்" என்றாள்.

"அப்படியே கோபம் வரும்போதெல்லாம் அடக்கிக்கொள். நாம் இங்கிருப்பது அவளுடைய தயவினால் அல்லவென்பதை மறந்துவிடாதே. நம்முடைய தயவினால்தான் அவள் உல்லாசமாய் இருக்கிறாள். இருக்கட்டும்; அதை நாமே கெடுக்க வேண்டாம். நாம் பொறுத்துக்கொள்வது சுந்தரியைக் கருதியல்ல. முருகேசனையும் அத்தையையும் என் தங்கை தாமரைக் கண்ணியையும் கருதித்தான்" என்றான் சுந்தரமூர்த்தி.

சந்திரா அதை ஏற்றுக்கொண்டு சமாதானமடைந்தாள். சுந்தரமூர்த்தியும் சந்திராவும் பொறுத்துக்கொண்டதனால், சுந்தரி செய்த இப்பெரும்பிழைகளையும் அவள் சந்திராவிடத்தில் கொண்டுள்ள குரோதத்தையும் முருகேசனோ அம்மணியம்மாளோ அறிந்துகொள்ள முடியாமற்போயிற்று. அதனால் சுந்தரி அந்த வீட்டின் ராணியாகவே இருக்க முடிந்தது.



மாமியாரின் பொக்கிஷப் பெட்டியைத் திறக்கும் உரிமையும் அவளுடையதே.

இப்படியிருக்கையில், சுந்தரியின் தங்கைகளுள் மூத்தவளுக்குத் திருமணம் நிச்சயமாயிற்று. சுந்தரியின் பெற்றோர்கள் நேரில் வந்து அழைத்துப் போனார்கள். சுந்தரமூர்த்திக்கு வயல்களில் வேலை அதிகம். சந்திரா தாமரைக்கண்ணியைக் கவனித்துக்கொள்ள வேண்டும். அதனால் முருகேசனும் அவன் தாயாரும் சுந்தரியும் திருவொற்றியூரில் நடந்த அந்தத் திருமணத்துக்குப் போயிருந்தார்கள். சம்பந்தி என்ற முறையில், அம்மணியம்மாள் மணவிழாவில் மணப்பெண்ணுக்குப் பரிசாக ஓதியிட என்ன செய்யலாம் என்று எண்ணிப் பார்த்து, ரொக்கப் பணமாகத் தருவது நல்லது என்று தீர்மானித்து, நூற்று ஐம்பத்தொரு ரூபாய் கொண்டுபோயிருந்தாள்.

திருமணச் சடங்குகள் முடிந்து பரிசுகள் ஓதியிடலாம் என்ற அழைப்பு அறிவிக்கப்பட்டது. உடனே சுந்தரி எல்லாரையும் முந்திக்கொண்டு தன்னுடைய டம்பப் பையிலிருந்து ஒரு காகிதப் பொட்டலத்தை எடுத்து, அதிலிருந்தவற்றைப் புரோகிதரிடம் தந்து அவர் காதோடு என்னவோ சொன்னாள்.

தூரத்தில் உட்கார்ந்திருந்த அவளுடைய மாமியார் அம்மணியம்மாள், தான் கொண்டுவந்திருந்த நூற்று ஐம்பத்தொரு ரூபாயை ஓதியிடப் பையிலிருந்து எடுத்துக்கொண்டே சுந்தரி புரோகிதரிடம் கொடுத்துக் காதோடு பேசினதைக் கவனித்தாள்.

சுந்தரி கொடுத்த பரிசைப் புரோகிதர் சபையோர் பார்க்கும்படி தூக்கிப் பிடித்துக்கொண்டு, "சம்பந்தி அம்மணியம்மாள் பெண்ணை ஆசீர்வதித்து ஆறு தங்க வளையல்கள் ஆயிரம் கட்டி வராகன்" என்று சொல்லி வளையல்களை மணப்பெண்ணிடம் கொடுத்தார்.

அதைக் கேட்ட அம்மணியம்மாள் திடுக்கிட்டுத் திகைத்துத் திணறிவிட்டாள். 'ஆறு தங்க வளையல்களா! என்னிடத்திலும் சொல்லாமல் என் பேரால் ஓதியிட்டிருக்கிறாளே! ஆறு தங்க

வளையல்களுக்கு எட்டு அல்லது பத்துப் பவுன் தங்கம் வேணுமே! சுந்தரி எந்தப் பணத்திலிருந்து தங்கம் வாங்கியிருப்பாள்! என் பெட்டியிலும் அவ்வளவு பணம் இப்போது இல்லையே! என் பெட்டியில் இருந்திருந்தாலும் மூன் கல் வளையல்கள் செய்துகொள்ள எடுத்ததுபோல் எடுத்திருக்கிறாள் என்று எண்ணலாம்!

'அப்படி நினைக்க இடமில்லையே! இவளுக்கு எங்கிருந்து இதற்குப் பணம் கிடைத்தது? நூறு ஐம்பது இவளிடத்தில் இருந்திருக்கலாம். பத்துப் பவுன் தங்கம் வாங்க இவளிடம் பணம் ஏது? முருகேசனை எங்காவது கடன் வாங்கச் செய்திருப்பாளோ! முருகேசன் என்னிடம் சொல்லாமல் எதையும் செய்ய மாட்டானே! இவளே பெரியத்தனமாக யாரிடமாவது கடன் வாங்கியிருக்கிறாளோ என்னவோ! எதுவானாலும் என்னிடம் சொல்ல வேண்டாமா?' என்று என்னென்னவோ எண்ணிக்கொண்டு பிரமை பிடித்ததுபோல் சிறிது நேரம் இருந்துவிட்டு, ஒதியிடப் பையிலிருந்து எடுத்த பணத்தை மீண்டும் பைக்குள் போட்டு இடுப்பில் செருகிக்கொண்டாள்.

சுந்தரியை உடனே கேட்டுவிட மனம் துடித்தாலும் இடமும் காலமும் சரியல்லவென்பதை உணர்ந்து மனத்தை அடக்கிக் கொண்டாள்.

மாலை மூன்று மணிக்குள் திருமணமும் விருந்தும் முடிந்துவிட்டன. அன்றைக்கே மணமக்களை மாப்பிள்ளையின் ஊராகிய பல்லாவரத்துக்கு அழைத்துப் போவதாக ஏற்பாடாகியிருந்தது. சுந்தரியின் பெற்றோர்கள், மணமக்களுடன் முருகேசனும் சுந்தரியும் போய்வர அனுமதிக்க வேணும் என்று அம்மணியம்மாளைக் கேட்டுக்கொண்டார்கள். தட்ட முடியாமல் மகனையும் மருமகளையும் மணமக்களுடன் அனுப்பிவிட்டு அம்மணியம்மாள் மட்டும் சென்னைக்கு வந்துவிட்டாள்.

வீட்டுக்குள் நுழைந்தவுடனே முதற்காரியமாகத் தன் அறைக்குட்புகுந்து தாழிட்டுக்கொண்டு இரும்புப்பெட்டியைத் திறந்து ஆராய்ந்தாள். வீட்டுச் செலவுக்கென்று ஒரு சிறு



பெட்டியில் வைக்கப்பட்டிருந்த முந்நூற்று ஐம்பத்தொன்பது ரூபாய் அப்படியே இருந்தது. அதிலிருந்து வளையல்கள் செய்ய எடுக்கவில்லை. அந்தப் பீரோவின் இன்னோர் அறையில் அம்மணியம்மாளின் பழைய நகைகள் இருந்தன. அந்த அறையைத் திறந்து, அதிலிருந்த தங்க நகைகளை மட்டும் கீழே எடுத்து வைத்து ஆராய்ந்தாள். கல்லிழைத்த நகைகளை எடுக்கவில்லை.

அந்த அம்மாள் சுமங்கலியாக இருந்தபோது ஆபரணங்களின்மேல் மிகுந்த ஆசையுள்ளவள். அவளுடைய திருமணக் காலத்தில் அவள் அணிந்திருந்த நகைகளெல்லாம் பழங்காலப் பாணியில் செய்யப்பட்ட ஜடை பில்லை, ஜடை சிங்காரம், ராக்கடி, சிவப்புக்கல் கம்மல்கள், ஜிமிக்கிகள், மயிர்மாட்டி, மூக்குத்தி, புல்லாக்கு, அட்டிகை, காசு மாலை; கைகளுக்குக் காப்புகள், கொலுசு, வங்கி, கடயம்; கால்களுக்கு வெள்ளிக் காப்பு, விரல்களுக்கு மெட்டிகள் முதலியன. கல்லிழைத்த ஜடைபில்லை மட்டுமே பாதித் தலையை மறைக்கும்படி நான்கு அங்குலக் குறுக்களவுள்ளது. அவள் பிறந்ததும் வளர்ந்ததும் கிராமத்தில்; வாழ்க்கைப்பட்டது சென்னைப் பட்டினத்தில். சென்னைக்கு வந்த சில நாள்களுக்குள் தான் அணிந்திருக்கும் ஆபரணங்கள் மிகவும் அநாகரிகமானவை என்று அறிந்துகொண்டாள்; உடனே தன் நகைகளில் கல்லிழைத்த நகைகளைத் தவிர மற்றவைகளை அழித்து நவீன மாதிரியான வளையல்களும் சங்கிலிகளும் செய்து கொண்டாள்; கல்லிழைத்த ஜடை பில்லை, ஜிமிக்கி, மயிர் மாட்டி, ராக்கடி முதலியவற்றைப் பெட்டிக்குள் வைத்துவிட்டாள்.

தன் கணவர் இறந்த பின் தாலியோடு தான் அணிந்திருந்த எல்லா நகைகளையும் அதே பெட்டியில் வைத்துவிட்டாள். அப்படிக் கழற்றி வைக்கப்பட்டிருந்த நகைகளில் பன்னிரண்டு பவுனில் செய்யப்பட்ட ஆறு வளையல்களும் எட்டுப் பவுனில் செய்யப்பட்ட இரண்டு கெட்டிக் கொலுசுகளும் பத்துப் பவுனில் செய்யப்பட்ட கழுத்துச் சங்கிலியும் இருந்தன. இந்த

மூன்றுந்தாம் கனமான தங்க நகைகள். இவற்றில் எதையாவது எடுத்துத்தான் சுந்தரி தன் தங்கைக்கு ஓதியிட்ட வளையல்களைச் செய்திருக்க வேண்டும் என்ற எண்ணத்தில்தான் அம்மணியம்மாள் அந்த நகைகளை ஆராய்ந்தாள்.

அந்த அம்மாள் எண்ணியதற்கு முற்றிலும் மாறாக அந்த ஆறு வளையல்களும் இரண்டு கொலுசுகளும் கழுத்துச் சங்கிலியும் அலுங்காமல் அங்கே இருந்தன. அவற்றைத் தனித் தனியே எடுத்துப் பார்த்துத் திருப்தியடைந்து, மறுபடியும் அவைகளைப் பெட்டிக்குள் போட்டுப் பூட்டிவிட்டாள்.

ஆனாலும் ஆறு தங்க வளையல்கள் செய்யச் சுந்தரிக்குப் பணம் எங்கிருந்து கிடைத்தது என்ற புதிர் அம்மணியம்மாளுடைய மனத்தைக் குழப்பிக்கொண்டேயிருந்தது. சுந்தரி கடன் வாங்கித்தான் வளையல் செய்திருக்க வேண்டும் அல்லது முருகேசனைக் கடன் வாங்கித் தரச் செய்திருக்க வேண்டும். 'இப்படி எனக்குத் தெரியாமல் ஆளாளுக்குக் கடன் வாங்கினால் குடும்பம் என்ன கதியாவது? வரட்டும், கேட்டுவிடுகிறேன்' என்று மருமகளைப்பற்றி வழக்கத்துக்கு மாறாகச் சற்று அருவருப்போடு எண்ணினாள்.

நான்கு நாள்கள் சென்று மகனும் மருமகளும் வந்தார்கள். வந்தவர்களுடன் சுமுகமாகப் பேசிவிட்டுச் சுந்தரியுடன் தனியாகப் பேசச் சமயம் பார்த்துக்கொண்டிருந்தாள், அம்மணியம்மாள்.

சமயம் வாய்த்தது. ஆனால், சுந்தரி இல்லாதபோது அவளைபபற்றி அருவருப்போடு நினைத்துக் கண்டித்துக் கேட்க வேண்டுமென்று எண்ணியிருந்த மனப்பான்மை, அவளை நேரிற்கண்டபோது மாறிவிட்டது. மகனை மகிழ்ச்சியோடிருக்கச் செய்யத் தான் தேடிக் கொண்டுவந்த மருமகள் அல்லவா? அதனால் சுந்தரியின்மீது அம்மணியம்மாளுக்கு ஓர் அலாதியான பிரேமை இருந்து வந்தது.

சிறிது நேரம் சுந்தரியும் முருகேசனும் மணமக்களோடு பல்லாவரத்துக்குப் போய் வந்த விவரங்களைப்பற்றிப் பேசி



விட்டுக் கடைசியாக, "ஏம்மா, சுந்தரி! நீ மணப்பெண்ணுக்குப் பரிசளித்த வளையல்கள் எத்தனை பவுன்?" என்றாள் மாமியார்.

"அத்தை! அந்த ஆறு வளையல்களும் ஒன்பது பவுன். ஒவ்வொன்றும் சரியாக ஒன்றரைப் பவுன்" என்று பளிச் சென்று சொல்லி நிறுத்தினாள்.

அவளுடைய பதிலில், மாமியாருக்குச் சொல்லாமல் வளையல்களைச் செய்ததும் ஓதியிட்டதும் சரியல்ல என்ற எண்ணமோ, அப்படிச் செய்துவிட்டதற்குச் சமாதானம் சொல்லிக்கொள்ள வேண்டுமென்ற ஆர்வமோ காணப்படவில்லை. ஏனென்றால், அவள் தன்னை அந்த வீட்டு ராணியென்று எண்ணிக்கொண்டிருக்கும் உயர்வு மனப்பான்மையாலும் மாமியார் தனக்களிக்கும் சலுகைகளாலும் தான் செய்யும் எந்தக் காரியத்துக்கும் ஆட்சேபணை இருக்காது என்ற துணிச்சல் வந்துவிட்டவள். அதனால் அச்சமோ கூச்சமோ ஐயமோ இல்லாமல்தான் பதில் சொன்னாள். அச்சமில்லாததால் பொய் சொல்ல வேண்டிய அவசியமும் இல்லை.

பேச்சைத் தொடர்ந்த மாமியார், "ஒன்பது பவுனா! பவுன் வாங்கப் பணம் ஏது? கடன் கிடன் வாங்கினாயா?" என்றாள்.

"கடனா! நானெங்கே போய்க் கடன் வாங்குவேன்? எதுக்கு அத்தை கடன் வாங்க வேணும்?" என்றாள்.

"பின் பவுன் வாங்கப் பணம் ஏது?"

"உங்கள் இரும்புப்பெட்டியில் உபயோகமற்றுக் கிடக்கிற பழைய நகைகளில் ஒன்றை எடுத்து...."

"என்னுடைய இரும்புப் பெட்டியிலிருந்தா! எந்த நகையை எடுத்தாய்?" என்று பதறினாள் மாமியார்.

"அத்தை! நான் எடுத்தது, இந்தக் காலத்துப் பட்டிக் காட்டுப் பெண்கள்கூட அணிந்துகொள்ள விரும்பாத பழங்

காலத்துப் பச்சைக்கல் ஜடை பில்லைதான், வேறொன்று மல்ல.''

"ஐயோ! ஐயோ! அதையா அழித்துவிட்டாய்? அது தலைமுறை தலைமுறையாக எங்கள் அம்மா வீட்டு நகை யாச்சே! என் அம்மாளைப் பார்ப்பதுபோல் அதைப் பார்த்துக் கொண்டிருந்தேனே! ஐயோ! அதையா அழித்துவிட்டாய்?'' என்று அலறிவிட்டாள் மாமியார்.

"என்ன அத்தை, இதற்கென்னவோ இவ்வளவு வருத்தப் படுகிறீர்களே! உங்கள் அம்மாவே இல்லாதபோது இந்தச் சடை பில்லைதானா பிரமாதம்?''

"உனக்கு எதுதான் பிரமாதம்? அந்தச் சடை பில்லையை என்ன செய்தாய்? அதில் விலையுயர்ந்த பெரிய பச்சைக் கல்லும் இரண்டு நல்ல நீலக் கற்களும் ஆறு வயிரங்களும் கிட்டத்தட்ட ஐம்பது நல்ல சிவப்புக் கற்களும் இருந்தனவே....?''

"அத்தை, வருத்தப்படவேண்டாம். அதிலிருந்த பச்சை, நீலம், வயிரம் எல்லாம் உயர்ந்த ஜாதிக் கற்கள் என்று தெரிந்து தான் அவைகளையெல்லாம் விற்றுவிடாமல் நானே வைத்துக் கொண்டேன். அதிலிருந்த தங்கம் மூன்று பவுனுக்கு மேல் இருந்தது. சிவப்புக் கற்களைத்தான் விற்றேன். அது நாலு பவுனுக்காச்சு. மீதி இரண்டு பவுனுக்கும் கூலிக்கும் நான் வைத் திருந்த பணத்தைப் போட்டு வளையல்களைச் செய்து உங்களுக்குப் பெருமை வர வேண்டுமென்றுதான் உங்கள் பெயரால் பரிசளித்தது'' என்று முறுவலித்தாள் சுந்தரி.

"போகட்டும் போ. அந்தக் கல்லுகளையாவது எடுத்து வைத்துக்கொண்டாயே. ஆனாலும் இந்தப் பெரியத்தனம் உனக்குக் கூடாது'' என்று வருத்தத்தைக் காட்டிவிட்டாள் மாமியார்.

மாமியாருக்குத் தன்மீது வருத்தம் வந்துவிட்டதைக் கண்டு விட்ட சுந்தரி, "அத்தை! உங்களுக்குப் பெருமை வர வேணு



மென்றுதான், நீங்களும் அதை ஒத்துக்கொள்வீர்கள் என்று எண்ணிச் செய்துவிட்டேன். மன்னித்துவிடுங்கள்'' என்றாள்.

'மன்னித்துவிடுங்கள்' என்று சொன்னவுடனே மாமியாரின் தொனி மாறிவிட்டது. "என்ன பெருமையோ, பெருமை. சரி போனாற்போகட்டும். நீ சடைப்பில்லையை அழித்து வளையல்கள் செய்தது முருகேசனுக்குத் தெரியுமா?'' என்றாள் மாமியார்.

"தெரியாது; நான் என் தோழி கனகவல்லி மூலமாக எனக்குக் கல் வளையல்கள் செய்த ஆசாரியைக் கொண்டு தான் எல்லாம் செய்தேன். அத்தான் அந்த வளையல்கள் நீங்களே செய்து பரிசளித்ததாகத்தான் எண்ணிக்கொண் டிருக்கிறார்'' என்றாள் சுந்தரி.

"சரி, அப்படியே எண்ணிக்கொண்டிருக்கட்டும். நீ சடைப் பில்லையை அழித்து வளையல்கள் செய்தது அவனுக்குத் தெரிய வேண்டாம். தெரிந்தால் ரொம்ப வருத்தப்படுவான்.''

"ஆமாம், அத்தை; நீங்களும் அவருக்குச் சொல்ல வேண்டாம்.''

"நானா? நான் சொல்வேனா என்ன? அவனுக்குச் சொல்லி விட வேண்டாமென்று நான்தானே உனக்குச் சொல்லுகிறேன்.''

"ஆமாம் அத்தை.''

"சரி, போ'' என்று சொல்லிவிட்டு மாமியார் எழுந்து விட்டாள்.

சுந்தரி, மாமியாரைச் சரிப்படுத்திவிட்ட மகிழ்ச்சியுடன் அறைக்குப் போய்விட்டாள்.

அம்மணியம்மாள் சுந்தரியை மன்னித்துவிட்டு, மகனுடைய நிம்மதி குலைந்துவிடக்கூடாதென்பதற்காகச் சுந்தரி செய்த குற்றத்தை அமுக்கிவிட்டாள். என்றாலும், அவளுக்குச் சுந்தரிமீதிருந்த மதிப்புச் சற்றுக் குறைந்துவிட்டது.

## அத்தியாயம் 11

முன்னே கடனைக் கட்ட வைத்திருந்த மூவாயிரம் ரூபாயில் ஆயிரம் ரூபாயைச் சொல்லாமல் எடுத்துக் கல் வளையல்கள் செய்துகொண்டாள், சுந்தரி. இப்போது அம்மணியம்மாள் தன் தாயாரின் நினைவாக வைத்திருந்த பூர்விக நகையான சடைப்பில்லையைக் கேட்காமல் எடுத்து அழித்துத் தங்கைக்கு வளையல்கள் செய்துவிட்டாள். அது மட்டுமா? ஆயிரம் ரூபாய் எடுத்துக்கொண்டதையும் சடைப்பில்லையை எடுத்து அழித்துவிட்டதையும் அம்மணியம்மாள் கேட்கிற வரையிலும் தெரியப்படுத்தவில்லை. மேலும், மாமியாரே கேட்ட போதும் பணத்தை எடுத்துக்கொள்ளவும் நகையை எடுத்து அழிக்கவும் உரிமையும் அதிகாரமும் தனக்கும் உண்டு என்ற தோரணையில் சுந்தரி பேசியது, குடும்பத தலைவியும் பணத்துக்கும் உடைமைகளுக்கும் சொந்தக்காரியுமான அம்மணி யம்மாளுக்கு வருத்தமுண்டாக்கியது.

சுந்தரியின் அகந்தை மிகவும் கண்டிக்கத்தக்கது தான். ஆனால், கண்டிக்க மனம் வரவில்லை. தன் ஒரே குழந்தையான மகன் முருகேசனுடைய வாழ்வுக்கு மறுமலர்ச்சி உண்டாக்கி அவனை மகிழ்ச்சியோடிருக்கச் செய்துவரும மருமகள் சுந்தரி. அத்துடன் சுந்தரியே மகனுக்கு இரண்டாந்தாரமாகக் கிடைக்க வேண்டும் என்றும் பெருமுயற்சி செய்து வீட்டை அடகு வைத்து அம்மணியம்மாளே கொண்டுவந்த மருமகள் 'சுந்தரி. மேலும் மூத்த மருமகள் தாமரைக்கண்ணி மீண்டும் கருத்தரிக்க முடியாத நோயாளியாகிவிட்டதால் சுந்தரியின் வயிற்றில்தான் வம்ச விருத்திக்கான பேரன் பிறக்கப்போகிறான் என்று ஆவலோடு எதிர்பார்த்துக்கொண்டிருப்பவள் அம்மணியம்மாள்.

அப்படியிருக்க, சுந்தரியைக் கடிந்துகொள்ள அம்மணி யம்மாளுக்கு எப்படி மனம் வரும்? தப்பித் தவறிக் கடிந்து பேசிவிட்டால் சுந்தரியின் குற்றங்களைப்பற்றி மகனுக்குச் சொல்ல வேண்டி நேரிடும். அப்படியானால் சுந்தரியைக்



கண்டிப்பது மகனுடைய இன்ப வாழ்க்கையைக் கெடுத்து மனத்தாபத்தைத்தான் உண்டாக்கும்.

இந்தக் காரணங்களால்தான் சுந்தரி சடைப்பில்லையை எடுத்து அழித்து வளையல்களைச் செய்ததை முருகேசனிடம் சொல்லிவிடக்கூடாதென்று அம்மணியம்மாளே சுந்தரிக்கு வற்புறுத்திச் சொன்னது.

மாமியாரின் சிந்தனைகள் இப்படியிருக்க, மாமியாரைச் சரிப்படுத்திவிட்ட மகிழ்ச்சியுடன் அறைக்குட்சென்ற சுந்தரியும் சிந்தனையில் ஆழ்ந்துவிட்டாள். மாமியாரிடம் சொல்லாமல் அவர்தம் தாயாரின் நினைவுச் சின்னமாக வைத்திருந்த சடைப் பில்லையை எடுத்து அழித்துவிட்டது மாமியாருக்கு மிகுந்த வருத்தம் உண்டாக்கிவிட்டதைச் சுந்தரி உணர்ந்தாள். மாமியார் கடிந்து அன்புறப் பேசிவிடவில்லையென்றாலும் அந்த அம்மாள், 'ஐயோ! ஐயோ! அதையா அழித்துவிட்டாய்! என் அம்மாளைப் பார்ப்பது போல் அதைப் பார்த்துக்கொண்டிருந் தேனே! அதையா அழித்துவிட்டாய்?' என்று அலறியதும் பிறகு, 'ஆனாலும் உனக்கு இவ்வளவு பெரியத்தனம் ஆகாது' என்று சொன்னதும் சுந்தரியின் அறிவைக் கிளறிச் சற்றே அச்சமூட்டிவிட்டது.

அந்த அச்சம் வேறொன்றுமில்லை; இனிமேல் மாமியார் பணப்பெட்டிச் சாவியைக் கூசாமல் தன்னிடம் கொடுக்க மாட்டாரே என்பதுதான். அப்படியானால், உல்லாசச் செலவு களுக்குத் தன் விருப்பப்படி பணம் எடுத்துக்கொள்ள முடியாதே.

வெகு நேரம் ஆலோசித்து ஒரு முடிவு செய்தாள். அதாவது; சடைப்பில்லையை எடுத்து அழித்துவிட்டதில் மாமியாருக்குத் தன்மீது உண்டாகியிருக்கிற வருத்தம் நீங்கும் படி செய்யச் சில நாள்களுக்காவது தன் செயல் முறையை மாற்றித் தனக்குப் பணம் வேண்டியபோது முன்போல் மாமியாரிடம் பெட்டிச்சாவியைக் கேட்காமல் தேவையானதைச்

சொல்லி, மாமியாரே பெட்டியைத் திறந்து எடுத்துக் கொடுக்கும்படி செய்வது என்று.

இந்தத் தந்திரம் உடனே பலனளித்தது. சில நாள்கள் சென்று சுந்தரி மாமியாரை அணுகி, "அத்தை! ஒரு முப்பது ரூபாய் வேணும். அத்தானும் நானும் மகாபலிபுரம் போய் வருகிறோம். என் தோழி கனகவல்லியும் அவளுடைய கணவரும் இன்னும் சில நண்பர்களும் உல்லாசப் பயணம் போய் வரத் திட்டமிட்டிருக்கிறோம்" என்று வெகு பணிவாகக் கேட்டாள்.

"தங்கமாப் போய் வாங்க. முப்பது ரூபாய் போதுமா?" என்றாள் மாமியார்.

"போதும்."

"இந்தா, நீயே போய் எடுத்துக்கொள்" என்று வழக்கம் போல் பெட்டிச்சாவியை நீட்டினாள், மாமியார்.

"வேண்டாம் அத்தை, நீங்களே வந்து எடுத்துக் கொடுங்கள். நான் பெட்டியைத் திறந்தால் என் கை சும்மா இருக்காது; அதையும் இதையும் எடுக்கச் செய்யும்" என்றாள்.

சுந்தரியின் பேச்சில் அடங்கியுள்ள சூழ்ச்சியை அறியாத அம்மணியம்மாள், மருமகள் மிகவும் திருந்திவிட்டாள் என்ற மகிழ்ச்சியுடன் எழுந்து போய்ப் பெட்டியைத் திறந்து முப்பது ரூபாய் கேட்டதற்கு, ஐம்பது ரூபாயாகக் கொடுத்தனுப்பினாள்.

பின்னும் சில சமயங்களில் அவள் சிறுசிறு தொகைகள் பணம் கேட்டபோதும் பெட்டிச்சாவியை மாமியார் நீட்டியும் வாங்கிக்கொள்ளாமல் மாமியாரே எடுத்துத் தரச் செய்தாள். மருமகளுக்குப் பொறுப்பு வந்துவிட்டதாக அம்மணியம்மாள் அளவற்ற மகிழ்ச்சியடைந்துவிட்டாள்.

ஒரு மாதத்துக்குப் பின், தோழி கனகவல்லியைப் பார்க்கப் போய் வந்த சுந்தரி, மாமியாருடன் வெகு பணிவாகப் பேசிக் கொண்டிருந்தபோது தன் கையில் கட்டியிருந்த 'ரிஸ்ட் வாட்சை'



மாமியாரிடம் காட்டி, "அத்தை! இந்தக் கடிகாரத்தைப் பாருங்கள்" என்றாள்.

அது வைரங்கள் பதித்த தங்கக் கடிகாரம்; வெகு அழகாக இருந்தது.

"ரொம்ப அழகாக இருக்கிறதே! ஏது இந்தக் கடிகாரம்?" என்று வியப்புடன் கேட்டாள், மாமியார்.

"இது கனகவல்லிக்கு அவளுடைய மாமியார் கனகவல்லியின் பிறந்த நாள் பரிசாக வாங்கிக் கொடுத்ததாம். உங்களிடத்தில் காட்டலாம் என்றே வாங்கிக்கொண்டு வந்தேன்."

"அப்படியா! சரி, உன்னுடைய பிறந்த நாளையும் கொண்டாடி உனக்கும் இதே மாதிரி ஒன்று வாங்கிவிட்டால் போகுது. இது என்ன விலையாம்?" என்றாள் மாமியார்.

"விலை ஐந்நூறு ரூபாயாம்."

"உன் பிறந்த நாள் எப்போ?"

"நான் மாசி மாதம் இருபத்தேழாம் தேதி பிறந்தவள் என்று அப்பாவும் அம்மாவும் அடிக்கடி சொல்லுவார்கள்" என்றாள் சுந்தரி.

"பின்னென்ன, நல்லதாய்ப் போச்சு. இது கார்த்திகை மாதம். தை மாதம் நிலங்களில் அறுவடை ஆகிவிடும். மாசி மாதம் பத்துத் தேதிக்குள் மகசூலை விற்றுப் பணமாக்கி விடுவான் சுந்தரம். கடிகாரத்தை வாங்கிப் பிறந்த நாளையும் கொண்டாடிவிடுவோம்" என்றாள் மாமியார்.

சுந்தரி, கடந்த நான்கு மாதங்களாகப் பணப்பெட்டியைத் திறக்கவும் மறுத்துத் தனக்கு வேண்டியதை மாமியாரே எடுத்துக் கொடுக்கச் செய்த சூழ்ச்சியின் பயனாக மாமியாருக்கு அவள் மீது முன்னிலும் அதிகமான மதிப்பு உண்டாகியிருந்தது. அதனால் கனகவல்லிக்கு அவளுடைய மாமியார் வாங்கிக் கொடுத்த பிறந்த நாள் பரிசு என்று சுந்தரி சொன்ன

வுடனே தானும் தன் மருமகளுக்குப் பிறந்த நாள் பரிசு கொடுத்ததாக இருக்க வேண்டும் என்று ஆசைப்பட்டு வாக்களித்துவிட்டாள். கனகவல்லிக்கு அந்தக் கடிகாரம் மாமியார் வாங்கித் தந்த பரிசோ அல்லவோ என்பது தெய்வத்துக்குத்தான் தெரியும். ஆனால், சுந்தரிக்கு அப்படிப் பட்ட ஒரு பரிசு அவளுடைய மாமியார் வாங்கித் தருவதாக வாக்களித்துவிட்டது நமக்குத் தெரிகிறது.

அன்றிரவு படுக்கையிற்கிடந்தபடியே அம்மணியம்மாள், சுந்தரிக்குச் சொல்லிவிட்ட வாக்குறுதியை நிறைவேற்றக் கைக் கடிகாரம் வாங்க ஐநூறு ரூபாயும் பிறந்த நாள் கொண்டாடப் பணமும் வேண்டுமே என்பதைப்பற்றிச் சிந்திக்கலானாள். போன வருஷந்தான் முட்டுவழிச் செலவும் வீட்டுக்கு வேண்டியதும் போக மூவாயிரத்து ஐநூறு ரூபாய் மிச்சம் கிடைத்தது. அதில் சந்திராவுக்கு ஆயிரம் தரவும் சுந்தரி ஆயிரம் எடுத்துக்கொள்ளவும் முடிந்தது. அதற்கு மேலும் இரண்டு வருஷ வட்டி கொடுக்க முடிந்தது.

ஆனால், இந்த வருஷம் அவ்வளவு மிச்சம் எதிர்பார்க்க முடியாது. போன வருஷம் கிடைத்ததில் பாதியாவது இந்த வருஷம் கிடைத்தால் சுந்தரிக்குப் பிறந்த நாள் கொண்டாடிப் பரிசும் தந்துவிட்டுக் கடனுக்கு ஒரு வருஷ வட்டியாவது கட்டி விடலாம் என்று கணக்குப் போட்டுக்கொண்டே கண்ணயர்ந்து விட்டாள்.

சுந்தரிக்கோ பூரிப்பும் பெருமிதமும் பொங்கிப் பொங்கி அவளை நிலைகொள்ள முடியாதபடி செய்துவிட்டன. தான் குறி வைத்த கடிகாரம் கிடைக்கப் போகிறது மட்டுமன்றித் தனக்குப் பிறந்த நாள் கொண்டாட்டமும் நடக்கப்போகிற மகிழ்ச்சியில் முழுகிக் கிடந்தாள்.

பிறந்த நாள் கொண்டாட்டம் என்றால் அதற்கென்று புது ஆடைகள் வாங்கி அவளை அலங்கரித்து, மேளதாளத்துடன் விழாவும் விருந்தும் நடக்குமல்லவா? அதற்குத் தன் தோழி கனகவல்லியிடம் இருப்பது போன்ற ஜரிகை நிறைந்த பச்சை



நிறப் பட்டுப்புடைவையும் அதற்குப் பொருத்தமான சோளியும் வாங்கும்படி அத்தையைக் கேட்டுக்கொள்ள வேணும் என்றெல்லாம் எண்ணிக்கொண்டே தூக்கம் வராமல் படுக்கையிற் புரண்டுகொண்டிருந்தாள்.

விடிந்ததும் அத்தையின் நினைப்பாகவே எழுந்து நீராடி அலங்கரித்துக்கொண்டு ஒரு நாளுமில்லாத திருநாளாக அத்தை செய்யும் காரியங்களுக்கு ஒத்தாசையாக ஓடியாடி ஈடுபட்டாள். அதைக் கண்ட மாமியார், மருமகளுக்குப் பணவிஷயங்களில் மட்டுமல்லாமல் குடும்பக் காரியங்களிலும் பொறுப்புணர்ச்சி வந்துவிட்டதாக எண்ணிப் பூரித்துப் போனாள். மாமியார் மெச்சும்படி அந்த அம்மாள் செய்யும் இலேசான காரியங்களில் ஒத்தாசை செய்தாளேயன்றி, அடுப்படியில் வியர்வை சொட்டச் சமையல் செய்யும் சந்திராவுக்கு ஒத்தாசையாகவோ அல்லது அந்தச் சந்திரா நோயாளியான தாமரைக்கண்ணிக்குச் செய்யும் சேவைகளுக்கு உதவியாகவோ ஒன்றும் செய்துவிடவில்லை. சுந்தரியின் தந்திரத்தை அறியாத மாமியார், சுந்தரிக்குப் பொறுப்புணர்ச்சி வந்துவிட்டதாக எண்ணிவிட்டதில் வியப்பில்லை.

இதற்குமுன் மாமியார் கூப்பிட்டாலன்றி மாமியாரைத் தேடி வரமாட்டாள் சுந்தரி. அறைக்குள்ளேயே கணவனோடு பேசிக்கொண்டிருப்பதும் கதைப்புத்தகம் படித்துக்கொண் டிருப்பதுமே சுந்தரியின் வழக்கம். இப்போது, இன்னும் மூன்று மாதங்களுக்குப் பின்னால் வரப்போகிற தன் பிறந்த நாள் கொண்டாட்டத்தையும் வயிரம் பதித்த 'ரிஸ்ட் வாட்சை'யும் கருதி, மாமியார் கூப்பிடாமலேயே அவளைத் தேடி அடிக்கடி வந்து, வேலைகளில் ஒத்தாசை செய்வதும மாமியாரோடு தனியே அமர்ந்து பேசிக்கொண்டிருப்பதும் சுந்தரிக்குத் தினசரி அலுவல்களாகிவிட்டன.

பத்து நாள்களுக்குப்பின் மாமியாரும் மருமகளும் தனியே பேசிக்கொண்டிருக்கையில், "அத்தை, பிறந்த நாள்

கொண்டாட்டத்துக்கு எனக்குப் புது ஆடைகள் வாங்கு வீர்களல்லவா?'' என்றாள் சுந்தரி.

''பின்னே? புதுப்புடைவை ரவிக்கை வாங்காமலா பிறந்த நாள் கொண்டாடுவது?''

''ஆமாம் அத்தை, புடைவை ரவிக்கைகூட கனகவல்லிக்கு அவளுடைய மாமியார் வாங்கியிருக்கிறது போலவே நீங்களும் வாங்குங்கள், அத்தை.''

''கனகவல்லிக்கு வாங்கிய புடைவை ரவிக்கை என்ன விலையாம்?'' என்றாள் மாமியார்.

''புடைவை இருநூற்று ஐம்பது ரூபாய். ரவிக்கை இருபத்தைந்து ரூபாய்.''

அதைக் கேட்டுத் திடுக்கிட்டதுபோல் சிறிது நேரம் யோசித்துவிட்டு, ''பார்ப்போம். போதிய பணம் மிச்சமானால் அப்படியே வாங்கிவிடுவோம்; இல்லாவிட்டால் கெடியாரத்தை மட்டும் அதே போல் வாங்கிவிட்டு மீதி உள்ள பணத்துக்குத் தக்கபடி பிறந்த நாள் கொண்டாடிவிடுவோம்'' என்றாள் மாமியார்.

''சரி, அத்தை. உங்கள் இஷ்டப்படி செய்யுங்கள்'' என்று வெகு பணிவுடன் சொன்னாள் சுந்தரி.

மார்கழி மாதக் கடைசியில் ஒருநாள் பகல் உணவுக்குப் பின் சுந்தரியும் மாமியாரும் கூடத்தில் உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தார்கள். பல பேச்சுகளுக்கிடையில் சுந்தரி, சுற்றி வளைத்துத் தன் பிறந்த நாள் கொண்டாட்டத்தை நினைப்பூட்டி, ''அத்தை! பிறந்த நாள் கொண்டாட்டத்துக்கு அழைப்புகள் அச்சடிக்க வேணுமல்லவா?'' என்றாள்.

அதைக் கேட்ட மாமியார் கலகலவென்று சிரித்துவிட்டு, ''அடி என் கண்ணே! உன் பிறந்த நாளை ஒரு கல்யாணம்போல் சிறப்பாக நடத்தவேணும் என்றுதான் எனக்கும் ஆசை. எதற்கும் பணம் கைக்கு வரட்டும். முடிந்தால் அழைப்பும் அச்சடிக்கலாம்; பத்திரிகைகளில் விளம்பரங்கூட வெளியிடலாம்....'' என்று சொல்லி முடிக்கு முன் வயலுக்குப் போயிருந்த சுந்தரமூர்த்தி சாப்பிட வந்தான். அவனைக் கண்டதும் வயல்களில் வெள்ளாமை எப்படி இருக்கிறது, அறுவடை எப்போது, எவ்வளவு பணம் கிடைக்கலாம், செலவுகள் போக எவ்வளவு மிச்சமாகலாம் என்பதையெல்லாம் கேட்க வேணும் என்ற எண்ணம் உதித்தது, அம்மணியம்மாளுக்கு.



உடனே சுந்தரமூர்த்தி இன்னும் சாப்பிடவில்லை, பசியோடு இருக்கும்போது கேட்கவேண்டாம் என்ற நினைப்பு வந்து, ''சுந்தரம், போய்ச் சாப்பிட்டுவிட்டு வா. உன்னோடு கொஞ்சம் பேச வேணும்'' என்றாள் அவள்.

சுந்தரமூர்த்தி எப்போதும் அம்மணியம்மாள் எதைச் சொன்னாலும் பதில் பேசாமல் சொன்னதைச் செய்கிறவன். புன்சிரிப்போடு, 'ஆகட்டும்' என்று சொல்லிவிட்டுச் சாப்பிடப் போய்விட்டான். புத்திக் கூர்மையுள்ள சுந்தரி, தன் மாமியார் நிலங்களில் எவ்வளவு வருமானம் வரலாம் என்பதைக் கேட்கத்தான் சுந்தரமூர்த்தியை வரச்சொல்லியிருக்கிறாள் என்பதை ஊகித்து, சுந்தரமூர்த்தியின் வரவை ஆவலோடு எதிர்பார்த்துக் காத்திருந்தாள்.

உள்ளே போன சுந்தரமூர்த்தி உடனே சாப்பிடச் சமையல் கட்டுக்குப் போகாமல் வழக்கம் போல் தங்கை தாமரைக் கண்ணியின் நலத்தை அறிய அவள் படுத்திருக்கும் அறைக்குப் போனான். தங்கையின் நிலைமையைப்பற்றி அவனுக்கு அவ்வளவு விசாரம். தாமரைக்கண்ணியின் கணவன் முருகேசன் அவளைப் பார்க்க ஒரு நாளில் மூன்று தரம் போவான். ஆனால், சுந்தரமூர்த்தி வயலுக்குப் போகாமல் வீட்டிலிருக்கும் போது தங்கையைக் கவனிக்க ஒரு நாளில் முப்பதுதரங்கூடப் போவான்.

இப்போது சுந்தரமூர்த்தி தாமரைக்கண்ணியின் அறைக்குப் போனபோது அங்கே அவனுடைய மனைவி சந்திரா

தாமரைக்குப் பத்திய ஆகாரம் கொடுத்துக்கொண்டிருந்தாள். அண்ணனைக் கண்டதும் தாமரைக்கண்ணி நோயாளியின் வரட்டுப் புன்முறுவலோடு தலையை அசைத்து வரவேற்றாள். சுந்தரமூர்த்தி தங்கையின் அருகில் அமர்ந்து, "உடம்பு எப்படியம்மா இருக்கிறது? முன்னைவிடக் கொஞ்சம் தேறியிருக்கிற மாதிரி தெரிகிறது. தைரியமாக இரு. செந்தில் ஆண்டவன் நம்மைக் காத்தருளுவான்" என்றான்.

தாமரைக்கண்ணி பதில் சொல்லுவதற்குள் சந்திரா, "ஆமாம், அத்தான். முன்னைக்கு இப்போது எவ்வளவோ தேவலை. ஆகாரங்கூட முன்னே சரியாகச் சாப்பிடுவதில்லை. இப்போது பரவாயில்லை. சீக்கிரம் பூரா சௌக்கியமாகி விடும்" என்றாள்.

உடனே தாமரைக்கண்ணி, "அண்ணா! நீங்களும் அண்ணியும் எனக்கு நம்பிக்கையூட்ட இப்படித்தான் சொல்லுவீர்கள். ஆனால், எனக்கென்னவோ நம்பிக்கையில்லை. முன்னேயிருந்த வயிற்றுவலி மறுபடியும் வந்துவிட்டது. சில சமயங்களில் ஊசியால் குத்துவது போல் வலிக்கிறது; பொறுக்க முடியவில்லை. கொஞ்ச நேரத்தில் நின்று விடுகிறது. சில நாள்கள் வலியே இல்லாமலிருக்கிறது. திடீரென்று மறுபடியும் முன்னிலும் கடுமையாக வந்துவிடுகிறது. அண்ணா! இப்படித் துன்பப்பட்டுக்கொண்டு இந்த உயிரை வைத்துக்கொண்டிருப்பதைவிட சீக்கிரம்...."

"ஐயோ! அப்படியெல்லாம் சொல்ல வேண்டாம், மச்சி" என்று சந்திரா தாமரைக்கண்ணியின் வாயைப் பொத்தினாள்.

சுந்தரமூர்த்திக்குக் கண் கலங்கிவிட்டது. மனத்தைச் சாந்தப்படுத்திக்கொண்டு, "தாமரை! அப்படியெல்லாம் சொல்லாதேயம்மா. சீக்கிரம் பெரிய லேடி டாக்டரிடம் காண்பித்து அந்த வலிக்குத் தக்க வைத்தியம் பார்க்க அத்தையுடன் பேசி ஏற்பாடு செய்கிறேன்" என்றான்.



சந்திரா அதை ஆமோதித்துப் பேசித் தாமரைக்கண்ணியின் கன்னங்களில் வடிந்த கண்ணீரைத் துடைத்து அவளை அணைத்துக்கொண்டாள். தாமரைக்கண்ணி அதை ஒத்துக்கொண்டதுபோல் மௌனமாகிவிட்டாள். அவளைப் படுக்கச் செய்துவிட்டு, சந்திராவும் கணவனும் சாப்பிடப் போனார்கள்.

சாப்பிடப் போன சுந்தரமூர்த்தி வெகு நேரமாகியும் இன்னும் வரவில்லையே என்று அம்மணியம்மாளும் சுந்தரியும் ஏக்கத்தோடு எதிர்பார்த்துக்கொண்டிருந்தார்கள்.

## அத்தியாயம் 12

'சுந்தரம்! போய், சாப்பிட்டுவிட்டு வா, உன்னோடு கொஞ்சம் பேச வேண்டும்' என்று அம்மணியம்மாள் சொல்லியிருந்ததைச் சுந்தரமூர்த்தி, தாமரைக்கண்ணியைப் பார்த்து அவளுக்குள்ள துன்பங்களில் மனம் செலுத்தியதில் மறந்து போனான்; சாப்பிடும்போது நினைத்துக்கொண்டான்; வேகமாகச் சாப்பிட்டுவிட்டு அம்மணியம்மாளும் சுந்தரியும இருந்த முன்கட்டுக் கூடத்துக்கு வந்தான்.

அவன் வந்துகொண்டிருக்கும்போதே, "அண்ணா! நீங்கள் எப்போதும் சாப்பிட உட்கார்ந்தால் பத்து நிமிஷத்திற்குள் சாப்பிட்டு எழுந்துவிடுவீர்களே! இன்றைக்கு ஏன் இவ்வளவு நேரம்?" என்று பணிவான குரலில் புன்சிரிப்போடு கேட்டாள், சுந்தரி.

"தாமரைக்கண்ணியைப் பார்க்கப் போனேன். நேரமாகி விட்டது" என்று சொல்லிக்கொண்டே அம்மணியம்மாளுக்கு அருகில் அமர்ந்தான், சுந்தரமூர்த்தி.

"தாமரைக்கு ஆகாரம் கொடுத்தாச்சா?" என்றாள் அத்தை.

"ஆச்சு. என்னுடன் கொஞ்சம் பேசவேணும் என்றீர்களே, அது என்ன, அத்தை?" என்றான் சுந்தரமூர்த்தி.

"ஆமாப்பா, போன வருஷம் உன்னுடைய உழைப்பாலும் சாமர்த்தியத்தாலும் நம் வயல்களில் நல்ல விளைச்சல் கண்டு அதையும் எங்கெங்கோ அலைந்து நல்ல விலைக்கு விற்று வந்தாய்; அதனாலே மூவாயிரத்து ஐநூறு ரூபாய் மிச்சம் செய்து கொடுத்தாய். இந்த வருஷம் எவ்வளவு மிச்சமாகலாம் என்பதை ஓர் உத்தேசமாக அறியத்தான் உன்னைக் கேட்கலாமென்று வரச்சொன்னேன்."

"அத்தை! அதுதான் எனக்கும் பெரிய கவலையாக இருக்கிறது. இந்த வருஷம் முட்டுவழிச் செலவுகள் போக வீட்டுச் செலவுக்கே பற்றாக்குறை வந்துவிடும்போல் இருக்கிறது. அப்படியிருக்க, மிச்சம் எங்கே இருக்கப் போகிறது?" என்றான் சுந்தரமூர்த்தி.

"ஏன்?" என்று இரைந்தாள் சுந்தரி, ஏக்கத்துடன்.

"ஏனா? மழையில்லை. இறைப்புக்குத் தண்ணீர் போதவில்லை. போன வருஷந்தான் அதற்கு முன் என்றும் இல்லாத மாதிரிப் பருவ மழை காலாகாலத்தில் பெய்து கிணறுகளெல்லாம் நிரம்பி வழிந்தன. விளைச்சல் அமோகமாக இருந்தது. போன வருஷத்துக்கு முந்தின வருஷங்களில் பெய்த மழைகூட இந்த வருஷம் பெய்யவில்லையே."

"ஏன், இந்த வருஷங்கூட மழை கொட்டுக் கொட்டென்று கொட்டிச்சே?" என்றாள் சுந்தரி.

"எப்போ கொட்டிச்சு?"

"ஏன், மூன்று மாதங்களுக்கு முன்னால்தான், ஒரு நாள் விடிய விடிய விடாமற் பெய்யவில்லையா?" என்றாள் சுந்தரி.

"ஆமாம் சுந்தரி. அது நீ நினைக்கிற மாதிரி மூன்று மாதங்களுக்கு முன்னால் அல்ல; சரியாக ஐந்து மாதங்



களுக்கு முன்னால். அந்த மழையால் கிணறுகளில் ஊறிய தண்ணீரின் தைரியத்தில்தான் இந்த வருஷமும் நல்ல விளைச்சல் காணும் என்று ஆசைப்பட்டு, எல்லா வயல்களிலும் நடவு நட்டது. பயிர்கள் செழித்துத்தான் வளர்ந்தன. கதிர் விட்டுப் பால் பிடிக்கவேண்டிய பருவத்தில் கிணறுகள் வறண்டு விட்டன. நான்கு கிணறுகளை ஆழப்படுத்தினேன். கிணறு வெட்டுக்கு ஐநூறு ரூபாய் கடனாகிவிட்டது. அந்தக் கடனையும் வருகிற மகசூலை விற்றுத்தான் கட்ட வேண்டும். ஆழப்படுத்தின கிணறுகளைச் சேர்ந்த நிலங்களில்தான் சுமாரான விளைச்சல். மற்ற இடங்களில் சாவிப் பயிர்தான் அதிகம்...."

"அப்படியானால் மிச்சம் ஒன்றும் கிடைக்காதா?" என்று ஆத்திரத்தோடு கேட்டாள் சுந்தரி.

"மிச்சம் கிடைக்காது. அதுமட்டுமல்ல; வீட்டுச் செலவுக்கு வேண்டியதுகூடக் குறைவாகத்தான் இருக்குமென்று அஞ்சுகிறேன்" என்றான் சுந்தரமூர்த்தி.

இதைக் கேட்டவுடனே சுந்தரி, கடுத்த முகத்துடன் விருட்டென்று எழுந்து போய்த் தன் அறைக்குள் புகுந்து கொண்டாள்.

அதுவரையிலும் பேசாமல் சுந்தரிக்கும் சுந்தரமூர்த்திக்கும் நடந்த பேச்சுகளைக் கேட்டுக்கொண்டிருந்த அம்மணியம்மாள் சுந்தரமூர்த்தியிடம், "ஏம்பா, வீட்டுச் செலவுக்குக்கூட வேணுமான பணம் கிடைக்காதுன்னு நீ சொன்னது நெசந்தானா?" என்று ரகசியம் போல் கேட்டாள்.

"அத்தை! அதென்ன அப்படிக் கேட்கிறீர்கள்? உங்களிடம் நான் எப்போதாவது பொய் பேசியிருக்கிறேனா? நான் யாரோடும் விளையாட்டுக்குக்கூட உள்ளத்தை மறைத்துப் பேசுவதில்லையே. உங்களிடத்தில்தானா அப்படிச் செய்வேன்?" என்று வருத்தம் தோய்ந்த குரலில் சொன்னான்.

"இல்லேடா சாமி, கோவிச்சுக்காதே. நான் என்னவோ வீட்டுச் செலவுக்கும் கஷ்டப்பட வேண்டியிருக்குமே என்று

அப்படிக் கேட்டுவிட்டேன். வருத்தப்படாதேயப்பா'' என்றாள் அத்தை.

சுந்தரமூர்த்தியின் வருத்தம் நீங்கி முகம் மலர்ந்தது. உடனே அவன், "சுந்தரி, ஏன் அப்படி விலுக்கென்று எழுந்து கோபத்தோடு போய்விட்டாள்?'' என்றான்.

"அவளுக்காகத்தான் இந்த வருஷம் எவ்வளவு மிச்சம் ஆகும் என்று கேட்டது. என்னவோ அவளுடைய சிநேகிதிக் காரி கனகவல்லி, கையில் கட்டிக்கொண்டிருக்கிற மாதிரி வைரம் பதித்த கைக்கடிகாரம் ஒன்று தனக்கும் வேணுமென்று ஆசைப்பட்டாள். போன வருஷம் மாதிரி இந்த வருஷமும் மிச்சம் கிடைக்கும், வாங்கித் தருகிறேன் என்று சொல்லி விட்டேன். ஒன்றும் மிச்சமாகாது, வீட்டுச் செலவுக்கே கஷ்டம் வரும் என்று நீ சொன்னதைக் கேட்டு வருத்தத்தோடு போய் விட்டாள். அவ்வளவுதான்'' என்று மட்டும் சொல்லிப் பிறந்த நாள் கொண்டாட்டத்தைப்பற்றிப் பேசாமல் விட்டுவிட்டாள் அம்மணியம்மாள்.

"ஏன், விளைச்சலில் மிச்சமானால்தானா அந்தக் கடிகாரம் வாங்க முடியும்? வேறு பணம் இருந்தால் அதை வாங்கிக் கொடுத்து அவளுடைய ஆசையைத் தீர்த்துவிடுங்கள்.... அத்தை'' என்று சிபார்சு பேசினான் சுந்தரமூர்த்தி.

"பார்ப்போம்'' என்று பெருமூச்சு விட்டாள் அத்தை.

அத்தை விட்ட பெருமூச்சிலுள்ள ஏக்கத்தை உணர்ந்த சுந்தரமூர்த்தி அந்த ஏக்கத்துக்கு ஆறுதலாக, "அத்தை! இடைக்கிற மகசூலை நல்ல விலைக்கு விற்க என்னால் கூடிய வரையில் பாடுபட்டு வீட்டுச்செலவுக்கு அதிகக் கஷ்டம் வராதபடி முயல்கிறேன்'' என்றான்.

"ஆமாப்பா, அப்படியாவது செய்'' என்று சற்றே முகம் மலர்ந்தாள் அத்தை.



அதன் பிறகு, சுந்தரமூர்த்தி தாமரைக்கண்ணிக்கு மறுபடியும் வயிற்றில் வலி கண்டிருப்பதைப்பற்றிச் சொன்னான்.

"ஐயோ! போன வலி மறுபடியும் வந்துவிட்டதா? அடடா! இந்தப் பாழாய்ப்போன நோவு அவளைத்தான் என்ன பாடு படுத்துகிறது! அவள் சிறுகச் சிறுகத் தேறி வருகிறாள் என்று சந்தோஷப்பட்டுக்கொண்டிருக்கையில் மறுபடியும் அந்த வலி வந்துவிட்டதா? அட தெய்வமே!'' என்று அத்தை வருத்தப்பட்டாள்.

பிறகு அத்தையும் சுந்தரமூர்த்தியும் சேர்ந்து ஆலோசித்துத் தாமரைக்கண்ணிக்குப் பெரியலேடி டாக்டரைக்கொண்டு வைத்தியம் பார்க்க வேண்டும் என்று தீர்மானித்தார்கள்.

அந்தச் சமயத்தில் வெளியே போயிருந்த முருகேசன் வீட்டுக்கு வந்து தாயாரும் மைத்துனரும் பேசிக்கொண்டிருப்பதைக் கண்டு அருகில் வந்தான். தாமரைக்கண்ணிக்கு மீண்டும் வயிற்றில் வலி கண்டிருப்பதையும், பெரிய டாக்டரிடம் காட்ட வேண்டும் என்பதைப்பற்றியும் அவனிடம் சொன்னார்கள். அவனும் உடனே பெரிய டாக்டரை அழைத்து வர வேண்டுமென்று சொல்லிச் சிறிது நேரம் அதைப்பற்றிப் பேசிவிட்டுச் சுந்தரி இருக்கும் அறைக்குப் போய்விட்டான்.

சுந்தரமூர்த்தியும் அத்தையுடன் பேச்சை முடித்துக் கொண்டு மறுபடியும் வயலுக்குப் போகச் சட்டை போட்டுக் கொள்ள உள்ளே போனான். அவனுடைய அறை முருகேசனும் சுந்தரியும் இருக்கிற அறைக்கு அடுத்தது. முருகேசனும் சுந்தரியும் இருந்த அறைக்கு அருகில் போகும்போது கதவு மூடப்பட்டிருந்த அறைக்குள் சுந்தரி இரைந்து பேசும் குரல் காதில் விழுந்தது. உடனே நடையை நிறுத்திக் காது கொடுத்தான். "நம் வயல்களின் மகசூலில் இந்த வருஷம் வீட்டுச் செலவுக்குக்கூட ஒன்றும் மிஞ்சாதாமே?'' என்று சுந்தரி உரக்கச் சொன்னது சுந்தரமூர்த்தியின் காதில் விழுந்தது.

சுந்தரி கேட்டதற்குப் பதிலாக முருகேசன், "வீட்டுச் செலவுக்கு ஒன்றும் மிஞ்சாது என்று யார் சொன்னது?" என்றான்.

"உங்கள் மைத்துனர் சுந்தரமூர்த்தி அவர்கள்தான் சொல்லுகிறார்"

"ஏன்?" என்றான் முருகேசன்.

"நடவு நட்ட பிறகு மழையே இல்லையாம். கிணறுகளில் தண்ணீர் வரண்டுவிட்டதாம். ஐநூறு ரூபாய்ச் செலவில் சில கிணறுகளை ஆழப்படுத்தினாராம்! அதனால் சில வயல்களில் தான் கொஞ்சம் விளைச்சலாம். மற்ற வயல்களில் பயிர்கள் சாவியாம். கிணறுகளை ஆழப்படுத்தின செலவுகூடக் கிடைக்கிற மகசூலை விற்கிற பணத்திலிருந்துதான் கொடுக்க வேணுமாம்; அதனால் வீட்டுச் செலவுக்கும் மிஞ்சாதாம். என்ன அநியாயம்?" என்றாள் சுந்தரி.

"அநியாயம் என்ன இதிலே? மழையில்லாமல் கிணறுகள் வரண்டு போனால் யார் என்ன செய்வது? பத்துப்பன்னிரண்டு ஆண்டுகளாக அவர்தானே வயல்களைப் பொறுப்புடன் கவனித்து வெள்ளாமை செய்து வருகிறார்? அவர் உள்ள நிலைமையைச் சொல்லியிருக்கிறார். அதனாலென்ன?" என்றான் முருகேசன்.

"ஆமாம், அவர்தான் வயல்களைப் பொறுப்புடன் கவனித்து வெள்ளாமை செய்கிறார்; அவர்தான் அறுவடை செய்கிறார்; அவர்தான் விற்கிறார்; அவர்தான் நமக்குப் பணம் கொடுக்கிறார். அவர் கொடுத்ததைத்தான் நாம் வாங்கிக் கொள்ள வேணும். அதற்குமேல் அவர் எவ்வளவு கொள்ளை யடிக்கிறாரோ, அதை யார் கண்டது?..."

"சே! சே! சுந்தரீ! என்ன இப்படிக் கண்டபடி உளறுகிறாய்? அவரைத் திருடர் என்றோ பொய்யர் என்றோ சந்தேகிப்பது மகாபாதகம். அவர் நமக்காக எவ்வளவு பாடுபடுகிறார். அவரைப்பற்றி இப்படியெல்லாம்...."



"சும்மாவா பாடுபடுகிறார்? சோழியன் குடுமி சும்மா ஆடாது. ஆதாயமில்லாமல் செட்டியார் ஆற்றோடு போக மாட்டார்" என்றாள் சுந்தரி.

முருகேசனுக்குக் கோபம் வந்தது. ஆனாலும் காமக் கிழத்தியைக் கடிந்து வசை கூற மனம் வராமல், "சுந்தரீ போதும் நிறுத்து. நீ நேற்று வந்தவள். அவரைப்பற்றி உனக்கு ஒன்றும் தெரியாது. நீ அவரைப்பற்றி இப்படிப் பேசினது அம்மாவுக்குத் தெரிந்தால் ரொம்ப வருத்தப்படுவார்கள். நீ திடீரென்று அவரைப்பற்றி இப்படிப் பேசினது என்னாலேயே சகிக்க முடியவில்லை. அம்மாவுக்குத் தெரிந்தால் அவர்கள் உன்னிடத்தில் வைத்திருக்கிற மதிப்பே போய்விடும்" என்றான் முருகேசன்.

சுந்தரி பதில் பேசவில்லை. வெகு நேரம் மௌனம் நிலவியது. மூடியிருந்த அறைக்கு வெளியில் நின்று அந்தப் பேச்சுகளைக் கேட்டுக்கொண்டிருந்த சுந்தரமூர்த்தி பேச்சு நின்றுவிட்டது கண்டு அவ்விடத்தை விட்டுப் போய்விட்டான்.

கடைசியாக முருகேசன், 'சுந்தரீ! திடீரென்று அவரைப் பற்றி இப்படிப் பேசினது எனக்கே சகிக்க முடியவில்லை. அம்மாவுக்குத் தெரிந்தால் அம்மா உன்னிடம் வைத்திருக்கிற மதிப்பே போய்விடும்' என்று சொன்னது சுந்தரியின் ஆவேசத்தை அடக்கிவிட்டது.

ஆடம்பரத்தையே விரும்பும் சுந்தரி தனக்குப் பிறந்த நாள் கொண்டாடி வைரம் பதித்த தங்கக் கடிகாரம் பரிசளிப்பதாகவும், கூடுமானால் விலையுயர்ந்த பட்டாடைகள் வாங்குவதாகவும் மாமியார் கொடுத்த வாக்குறுதியினால் உண்டான மகிழ்ச்சியில் மயங்கி அதைப்பற்றியே கற்பனைகள் செய்துகொண்டிருந்தவள். அந்தச் சமயத்திலே சுந்தரமூர்த்தி 'பணம் ஒன்றும் மிச்சமாகாது' என்று சொன்னது அவளைப் பேரிடியாகத் தாக்கிவிட்டது. அதனால் உண்டான கொதிப்பில்

நிதானம் கெட்டுக் கணவனிடத்தில் சுந்தரமூர்த்தியைப்பற்றி அப்படிப் பேசிவிட்டாள்.

அவள் அப்படிப் பேசினது தனக்கே சகிக்க முடியவில்லை யென்றும் கணவன் சொன்னதும் மாமியாருக்குத் தெரிந்தால் தனக்குள்ள மதிப்பே போய்விடுமென்று கணவன் நினைப் பூட்டியதும் அவளுக்கு அச்சமூட்டிவிட்டன.

அவளுடைய உல்லாசவாழ்க்கையும் கவலையற்ற பொழுது போக்கும் கணவனுடைய அன்பினாலும் மாமியார் அவளிடத்தில் வைத்துள்ள மதிப்பினாலுந்தான் நடந்து வருகின்றன அவர்கள் இருவருக்குமே வருத்தமுண்டாக்கும் வகையில் பேசிவிட்டதை உணர்ந்துவிட்டாள்.

உடனே, "அத்தான்! என்னை மன்னித்துவிடுங்கள். நான் எதையோ நினைத்துக்கொண்டு யோசனையில்லாமல் அந்த அண்ணனைப்பற்றி தவறாகப் பேசிவிட்டேன். கோபித்துக் கொள்ளாதீர்கள்; அத்தையிடமும் சொல்லிவிடாதீர்கள்" என்று புன்சிரிப்போடு கணவனுடைய தோளைத் தொட்டுக் கெஞ்சினாள்.

முதல் தடவையாகத் தன் காதல் மனைவியிடம் அப்போது தான் சற்று அதிருப்தி அடைந்திருந்த முருகேசன், "ஆம், அப்படிச் சொல்லடி என் கண்ணே! அதுதான் புத்தி சாலித்தனம்" என்று சொல்லிக்கொண்டே சுந்தரியைத் தன் மார்போடு அணைத்துக்கொண்டான்.

இங்கே நடந்தது இப்படியிருக்க, சுந்தரி தன்னைப்பற்றி பேசிய நிந்தனையைக் கேட்டுக்கொண்டு போன சுந்தரமூர்த்தி ஓரிடத்தில் உட்கார்ந்து சிந்திக்கலானான். சுந்தரி, பல தடவை களில் அவனிடத்தில் நேராகவே துடுக்குத்தனமாக அவன் செய்யும் காரியங்களுக்கு நோட்டம் பேசிப் பரிகசித்திருக்கிறாள். அப்போதெல்லாம் சுந்தரமூர்த்தி வருத்தப்பட்டதில்லை. கணவனுடைய மோகத்தாலும் மாமியாருடைய சலுகைகளாலும் மமதை கொண்டிருக்கும் சிறு பெண் என்று அவளுடைய



துடுக்குப் பேச்சுகளைப் பொருட்படுத்தாமல் சிரித்துக் கொண்டே போய்விடுவான்.

அவனுடைய மனைவி சந்திராவைச் சுந்தரி அவமதித்துப் பேசிவிட்டதைச் சந்திரா அவனிடம் சொன்னபோதுங்கூட அவன், 'சுந்தரி அகந்தைக்காரிதான்; ஆனால், அவள் சிறு பெண்; தேன்நிலவு இன்பத்தில் யாரையும் மதிக்காமல் நடந்து கொள்ளுகிறாள். அத்தையையும் முருகேசனையும் தாமரைக் கண்ணியையும் கருதி அவளை மன்னித்துவிடு. அவள் என்ன சொன்னாலும் நீ காதில் போட்டுக்கொள்ளாதே' என்று சந்திராவைச் சமாதானப்படுத்தினான்.

அப்படிப்பட்ட அவனை, நிலங்களின் வருமானத்தில் பொய்க் கணக்குகள் காட்டிக் கொள்ளையடிக்கிறவன் என்றும், 'சும்மா ஆடுமா சோழியன் குடுமி' என்றும், 'ஆதாயம் இல்லாமல் செட்டி ஆற்றோடு போவானா' என்றும் சுந்தரி சொன்னது அவனுடைய உள்ளத்தை வாள்கொண்டு வெட்டியது போல் வருத்திவிட்டது.

சுந்தரியின்மீது முருகேசனுக்குள்ள மோகத்தாலும் மாமி யார் அவளிடம் வைத்துள்ள மதிப்பாலும் அவள் சொல்லு வதை நம்பி அவர்கள் தன்னைச் சந்தேகிக்கக்கூடிய நிலைமை வந்தாலும் வந்துவிடலாம். அப்படி நேரிடுவதற்கு முன்னால் வயல்களைப்பற்றிய கணக்கு வழக்குகளை முருகேசனிடம் ஒப்படைத்துவிட்டு வேறு ஏதாவது தொழில் நாடி உடனே இங்கிருந்து போய்விடுவதே நல்லது என்று எண்ணினான்.

அப்படி எண்ணிய அடுத்த கணமே, அப்படிப் போவ தானால் மனைவி சந்திராவையும் மகன் நெல்லையப்பனையும் கூடத்தான் கூட்டிக்கொண்டு போய்விட வேண்டும். அப்படிப் போய்விட்டால், படுக்கையாய்க் கிடக்கிற தங்கை தாமரைக் கண்ணியின் கதி என்னாவது? அவளை இப்போது கண்ணுங் கருத்துமாகக் கவனித்து வருவது சந்திராதான். அவளுக்கு வேண்டிய மருந்துகளையும் பத்தியப் பொருள்களையும் வாங்கி

வருவது நானேதான். இருவரும் போய்விட்டால் தாமரைக் கண்ணி அநாதையாகக் கிடந்து சாக வேண்டியதுதான்.

சுந்தரி, தாமரைக்கண்ணியைக் கவனித்துச் சேவை செய்ய மாட்டாள். அத்தை தாமரைக்கண்ணிமீது அப்பழுக்கற்ற பாசம் உள்ளவர்தான். ஆனால், அவரால் தாமரைக் கண்ணியைத் தூக்கி உட்கார வைக்கவோ, நீராட்டவோ, துடைத்துவிடவோ, அறையை அடிக்கடி சுத்தப்படுத்தவோ முடியாமல் தவிக்க வேண்டியிருக்கும்.

முருகேசன் சுந்தரியின் மோகத்தில் முழுகியிருந்தாலும் தாமரைக்கண்ணியின் நலத்தில் அக்கறையுள்ளவன்தான். ஆனாலும், ஒரு பெண் துணை செய்யக்கூடிய சேவைகளை அவன் செய்ய முடியாது. அத்துடன் தாமரைக்கண்ணிக்கு வயிற்று வலி அதிகப்பட்டிருப்பதால், அவளை உடனே பெரிய டாக்டரிடம் காண்பித்து வைத்தியம் பார்க்க வேண்டிய அவசியமும் இருக்கிறது. அதனால் இப்போது இவ்விடத்தை விட்டுப் போவது தாமரைக்கு அபாயத்தைக் கூவி அழைப்பது போல் ஆகிவிடும் என்றெல்லாம் எண்ணிப் பார்த்து மனத்தைச் சாந்தப்படுத்திக்கொண்டு வயலுக்குப் போய்விட்டான்.

## அத்தியாயம் 13

அன்று இரவு முழுதும் சுந்தரிக்குத் தூக்கமே வரவில்லை. அவள் ஆடையாபரண அலங்காரத்தில் அளவு கடந்த ஆசையுள்ளவள். உணவில் சுவையில்லாவிட்டாலும் உடையில் சொகுசு குறையக்கூடாது. தங்கம் மட்டமானாலும் தளுக்குள்ள ஆபரணங்களையே அணிய வேண்டும். டால் வீசக் கூடிய வைரம் பதித்த கடிகாரமும், முடிந்தால் பகட்டான பட்டாடையும் வாங்கித் தந்து மேள வாத்திய முழக்கத்தோடு தன்னுடைய பிறந்த நாள் விழாவையும் நடத்துவதாக மாமியார் மனமுவந்து சொன்ன வாக்குறுதி நிறைவேற வழியில்லாமற்



போய்விட்டதே என்ற ஏக்கம் அவளைத் தூங்கவிடவில்லை. கைக்கு எட்டியது வாய்க்கு எட்டாமற்போய்விட்டது போலவும், சாமி கொடுத்த வரத்தைப் பூசாரி கெடுத்துவிட்டது போலவும் எண்ணியெண்ணி ஏங்கினாள்.

பிறந்த நாள் விழா இல்லாவிட்டாலும் பட்டாடை வாங்கா விட்டாலும் அந்தக் கைக்கடிகாரத்தை மட்டுமாவது வாங்க அத்தையிடம் பணம் இல்லாமலா போய்விட்டது? நிலங்களின் வருமானத்தில் மிச்சமாகித்தானா வாங்கவேணும்? அத்தைக்குப் பாங்கியில் பணம் இருக்குமே! இல்லாவிட்டால் அவருடைய இரும்புப்பெட்டியில் துருப்பிடித்துக் கிடக்கிற நகைகளில் ஏதாவது ஒன்றை விற்றாலும் போதுமே! கடிகாரமும் வாங்கலாம், விழாவைக்கூட நடத்திவிடலாமே! என்றெல்லாம் எண்ணி அந்த வழியில் ஒரு முயற்சி செய்யத் தீர்மானித்தாள்.

மறுநாள் அதிகாலையில் எழுந்து நீராடி அலங்கரித்துக் கொண்டு அத்தையின் அலுவல்களில் ஒத்தாசை செய்வதில் ஈடுபட்டாள்.

சுந்தரியைப் போலவே அவளுடைய மாமியாரும் முந்தின இரவில் மருமகளுக்குக் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்ற முடியாமலிருக்கிறதே என்பதைப்பற்றி வருத்தத்தோடு சிந்தனை செய்தவள்தான். அந்தச் சிந்தனையின் முடிவாக முன் தினம் சுந்தரமூர்த்தி, 'ஏன் விளைச்சலில் மிச்சமானால்தானா அந்தக் கடிகாரம் வாங்க முடியும்? வேறு பணமிருந்தால் அதை வாங்கிக் கொடுத்து, அவளுடைய ஆசையைத் தீர்த்து விடுங்கள்' என்று சிபார்சு செய்தபடி எப்படியாவது அந்தக் கடிகாரத்தை மட்டுமாவது வாங்கித் தந்துவிட வேண்டுமென்று தீர்மானித்திருந்தாள்.

காலையில் முதற்காரியமாக அம்மணியம்மாள் மூத்த மருமகள் தாமரைக்கண்ணியைப் பார்த்துவிட்டுத்தான் மற்ற வேலைகளைச் செய்வது வழக்கம். அதன்படி தாமரைக் கண்ணியைப் பார்க்கப் போன மாமியாருடன் சுந்தரியும் போனாள். இதற்குமுன் சுந்தரி அப்படிப் போனதில்லை.

தாமரைக்கண்ணியின் வயிற்று வலியைப்பற்றி விசாரித்து, உடனே பெரிய லேடி டாக்டரை அழைத்து வந்து அந்த வலியை நீக்க வைத்தியம் செய்வதாக வெகு நேரம் தாமரைக்கண்ணிக்கு ஆறுதல் சொல்லித் தைரியப்படுத்திவிட்டு அம்மணியம்மாள் காலை ஆகாரம் சாப்பிடப் போனாள். சுந்தரியும் கூடவே போனாள். சாப்பிட்டபின் இளைப்பாற உட்கார்ந்த மாமியாரோடு சுந்தரியும் உட்கார்ந்தாள்.

சிறிது நேரம் சென்றபின் சுந்தரி மாமியாரை நெருங்கி, "அத்தை, நான் போய் இந்தக் கடிகாரத்தைக் கனகவல்லியிடம் திருப்பிக் கொடுத்துவிட்டு வரட்டுமா?" என்று குழைந்தாள்.

இதுவரையிலும் கனகவல்லியின் வீட்டுக்குப் போவதற்கோ அல்லது வேறு எங்கும் போவதற்கோ சுந்தரி மாமியாரின் அனுமதியைக் கேட்டதில்லை. விநயமான இந்தக் கேள்வியிலுள்ள சூதறியாத மாமியார், வெளியே போக மருமகள் அனுமதி கேட்டதில் மகிழ்ச்சியடைந்து, சுந்தரி சொன்னதில் கைக்கடிகாரப் பிரச்சினை நினைவுக்கு வந்து, "ஆமாண்டியம்மா, சொல்ல வேணுமென்று நினைத்துக்கொண்டேயிருந்தேன்; மறந்து போனேன். நீ ஒன்றும் கவலைப்படாதே. எப்படியாவது இந்த மாதிரிக் கடிகாரம் ஒன்று உனக்கு வாங்கித் தருகிறேன். சுந்தரமூர்த்தியே நேற்று, வயல்களின் வருமானத்தில் மிச்சமாகாவிட்டாலும் வேறு எந்தப் பணத்திலாவது உனக்குக் கடிகாரம் வாங்கித் தர வேணுமென்று என்னிடம் சிபார்சு செய்திருக்கிறான். வாங்கித் தந்துவிடுகிறேன். வருத்தப்படாதே" என்றாள்.

சுந்தரமூர்த்தி தனக்காகச் சிபார்சு பேசியிருக்கிறார் என்பதைக் கேட்டுச் சுந்தரி, முன் தினம் அவரை நிந்தித்துப் பேசி விட்டதை நினைத்து வருந்தினாள்.

மீண்டும் அம்மணியம்மாள் சுந்தரியிடம், "உன் பிறந்த நாள் கொண்டாட்டத்தையும் எவ்வளவோ சிறப்பாக நடத்தத்தான் ஆசைப்பட்டேன். என்ன செய்வது?" என்றாள்.



"ஆமாம் அத்தை, நிலங்களில் விளைச்சல் சரியாக இல்லையென்றால் அதற்கு நீங்கள் என்ன செய்வீர்கள்? கிணறுகளில் தண்ணீர் வறண்டுவிட்டால் அதற்காகச் சுந்தரமூர்த்தி அண்ணாதான் என்ன செய்ய முடியும்?" என்று ஒத்துப் பாடினாள் சுந்தரி.

"சரி; நீ போய்க் கடிகாரத்தைத் திருப்பிக் கொடுத்துவிட்டு, இதே மாதிரிக் கடிகாரம் எங்கே கிடைக்கும் என்பதையும் தெரிந்துகொண்டு வந்துவிடு. எப்படியாவது சீக்கிரம் கடிகாரத்தை வாங்கிவிடலாம்" என்றாள் மாமியார்.

சுந்தரிக்கு வயிரம் பதித்த கைக்கடிகாரந்தான் முக்கியமான ஆசை. அதனால்தான் கனகவல்லியின் கடிகாரத்தை மாமியாருக்குக் காட்டுவதற்காகவே வாங்கிக்கொண்டு வந்தாள். அதை மாமியாருக்குக் காட்டியபோது, "இது ஏது ரொம்ப நல்லாயிருக்கே" என்றாள் மாமியார். 'கனகவல்லியின் மாமியார் அவளுக்குப் பிறந்த நாள் பரிசாகக் கொடுத்தது' என்று மட்டுந்தான் சுந்தரி சொன்னாள். அதைச் சொன்னபோது அவள் தனக்குப் பிறந்த நாள் கொண்டாட வேண்டும் என்ற எண்ணத்தோடு சொன்னதல்ல. மாமியார்தான் அவராகவே 'சரி, உன்னுடைய பிறந்த நாளையும் கொண்டாடி உனக்கும் இதே மாதிரி ஒன்று வாங்கித் தருகிறேன்" என்று சொன்னது. அதன் பிறகுதான் சுந்தரிக்கும் தன் பிறந்த நாள் கொண்டாடப்படவேண்டும் என்ற ஆசை உண்டாயிற்று. அதைத் தொடர்ந்து பட்டுப் புடைவை ஆசையும், விழாவுக்கு அழைப்புகள் அச்சடிக்க வேண்டுமென்ற ஆசையும் உதித்தன.

இப்போது, தன் முக்கிய ஆசையான வைரம் பதித்த கடிகாரத்தை எப்படியாவது வாங்கித் தந்துவிடுவதாக மாமியார் சொல்லிவிட்டதில் பரம திருப்தியடைந்தவளாகக் கனகவல்லியைப் பார்க்கப் போய்விட்டாள்.

மத்தியான்ன உணவைக் கனகவல்லியுடன் சாப்பிட்டுவிட்டுச் சுந்தரி சாயுங்காலம் திரும்பி வந்து கணவனுடன் சினிமாவுக்குப் போய்விட்டாள்.

மறுநாள் காலை ஆகாரத்துக்குப் பின் வழக்கம்போல் மாமியாருக்கு அருகில் அமர்ந்து பேசிக்கொண்டிருந்தாள் சுந்தரி. அப்போது கனகவல்லியின் வீட்டுக்கு முன் தினம் போய் வந்ததைப்பற்றிச் சொல்லிவிட்டுக் கடைசியாக, "அத்தை! நான் கனகவல்லியின் வீட்டுக்குத் தனியாகவும் அத்தானுடனும் பல சமயங்களில் ஜானகியையும் கூட்டிக்கொண்டு போயிருக் கிறேன். ஒவ்வொரு தடவையும் அவள் எவ்வளவு அன்பாக எங்களுக்கு விதம் விதமான விருந்துடன் உபசரிக்கிறாள் தெரியுமா?" என்றாள்.

"அதற்கென்னடியம்மா, அவள் பெரும்பணக்காரி. எது வேணுமானாலும் செய்யலாம். ஆனாலும் அவள் உன் னிடத்தில் வைத்திருக்கிற பாசம் அலாதியானதுதான்."

"ஆமாம் அத்தை. அவளை ஒரு நாளைக்கு அழைத்து வந்து உபசரிக்க வேணுமென்ற ஆசையால் ஞாயிற்றுக்கிழமை மாலையில் கனகவல்லியை இங்கே வரும்படி கேட்டுக் கொண்டிருக்கிறேன்" என்றாள் சுந்தரி.

"மகராசியா வரட்டும். நம்மால் முடிந்தமட்டும் மனமார உபசரிப்போம். இதுக்கென்ன யோசனை?"

"நல்ல மாதிரியான ஓர் இனிப்பு, ஒரு காரம் ஆக இரண்டு பட்சணங்கள், பழங்கள், நல்ல காப்பி இவைகளைக் கொஞ்ச மாகத் தயார் செய்தாலே போதும். கனகவல்லி மிகவும் கொஞ்சமாகத்தான் எதையும் சாப்பிடுவாள். சந்திராவிடம் சொல்லித் தயார் செய்யச் சொல்லுங்கள், அத்தை" என்றாள் சுந்தரி.

"அதற்கென்ன, இது ஒரு பெரிசா? சந்திரா எந்தப் பட்சணமும் வாய்க்கு ருசியாகச் செய்வாள். இன்றைக்கு வியாழக்கிழமைதானே! ஞாயிற்றுக்கிழமை இன்னும் இரண்டு நாள் போய்த்தானே. ஆகட்டும். சந்திராவிடம் சொல்லி நல்ல சிற்றுண்டிகளும் காப்பியும் தயார் செய்யச் சொல்லுகிறேன்" என்றாள் மாமியார்.



அந்தப் பொறுப்பை மாமியார் ஏற்றுக்கொண்டதில் மகிழ்ச்சியடைந்த சுந்தரி நிம்மதியாக வெள்ளி, சனி இரண்டு நாளும் கணவனுடன் உல்லாசமாக ஊரைச் சுற்றிக்கொண்டு இருந்துவிட்டாள்.

ஞாயிற்றுக்கிழமை விடியுமுன் கனகவல்லி விருந்தாளியாக வரப்போவதை நினைத்துக்கொண்டாள்; அதிசீக்கிரம் எழுந்து அலங்கரித்துக்கொண்டு மாமியாரை நாடினாள். அந்த அம்மாள் இவளுக்கு முன்னால் எழுந்து நீராடிவிட்டுக் கோயிலுக்குப் போயிருந்தாள். சுந்தரி, மாமியாரை எதிர் பார்த்துக்கொண்டு வீதி வாசலுக்கும் கூடத்துக்கும் நடந்து கொண்டிருந்தாள்.

சுந்தரமூர்த்தி, வயலில் ஏதோ அவசர வேலைக்குத் துணை வேண்டுமென்று முருகேசனையும் கூட்டிக்கொண்டு போய் விட்டான். அதனால் கணவன் மூலமாகச் சந்திராவிடம் பட்சணங்கள் செய்ய வேண்டியதைப்பற்றிச் சொல்லலாம் என்பதற்கும் வழியில்லை. சுந்தரி வெகு நேரம் காத்திருந்தும் மாமியார் வரவில்லை. அவளுக்குப் பசி வந்துவிட்டது. அவள் கணவனோடாவது அல்லது மாமியாரோடாவது சேர்ந்துதான் ஆகாரம் கொள்ளச் சமையல் அறைக்குப் போவாள். சந்திரா வுடன் அவள் சுமுகமாகப் பழகுவதில்லை. அதனால் தனியே போய் அவளிடம் ஆகாரம் கொள்ளக் கூசும். ஆனால், இப்போது பசி அதிகரித்துவிட்டது. மாமியார் வரவில்லை. 'பசி வந்திடப் பத்தும் பறந்துபோம்' என்பதற்கிணங்க வெட்கத்தை விட்டுச் சமையலறைக்குப் போனாள்.

அங்கே சந்திரா இல்லை. அவள் தாமரைக்கண்ணியைக் கவனிக்கப் போயிருந்தாள். ஆனால், காலை ஆகாரமெல்லாம் தயாராகியிருந்தது. சந்திரா அங்கே இல்லாதிருந்ததும் நல்லது தான் என்று, சுந்தரி தானாகவே தனக்கு வேண்டியதை எடுத்துப் போட்டு உண்டு பசியாற்றிக்கொண்டு மாமியாரின் வரவை எதிர்பார்த்து மீண்டும் வாசலுக்குப் போனாள்.

வெகு நேரம் கழித்து அம்மணியம்மாள் வீட்டுக்கு வந்தாள். வாசலிலேயே நின்றுகொண்டிருந்த சுந்தரியைப் பார்த்து, "ஏம்மா சுந்தரி! ஏன் இங்கே நிற்கிறாய்? காலை ஆகாரம் சாப்பிட்டாயா?'' என்றாள்.

"அதெல்லாம் ஆச்சு அத்தை. நீங்கள் இவ்வளவு நேரம் எங்கே போய்விட்டீர்கள்?'' என்று சிணுங்கினாள்.

"கோயிலுக்குப் போனேன். வழியில் சில பழைய சிநேகிதிகளைக் கண்டு பேசிக்கொண்டிருந்துவிட்டேன். நேரமாகிவிட்டது. ஏன் அதனாலென்ன?''

"என்ன அத்தை அப்படிக் கேட்கிறீர்கள்? இன்றைக்கு கனகவல்லி வரப்போகிறதை மறந்துவிட்டீர்களா?''

"ஓ! ஆமாம். அதற்குப் பட்சணங்கள் தயாராக வேணுமே என்பதுதானே உன் கவலை? அதற்கென்ன, இரண்டு பட்சணங்கள் தயார் செய்ய எவ்வளவு நேரமாகும்? நாலு மணிக்கு மேலேதானே கனகவல்லி வரப்போகிறாள். அதற்குள் ஒரு கல்யாண விருந்தே சமைத்துவிடலாமே! வருத்தப்படாதே. சந்திராவிடம் சொல்லி வேண்டியதைச் செய்வோம்'' என்று சொல்லிக்கொண்டே கோயில் குங்குமத்தை மாமியார் சுந்தரிக்கு நீட்டினாள்.

சுந்தரி அதை நெற்றியில் இட்டுக்கொண்டாள். இருவரும் உள்ளே போனார்கள். அம்மணியம்மாள் நேரே தாமரைக் கண்ணியிடம் சென்று குங்குமத்தை அவள் நெற்றியில் இட்டு, "தாமரை! அம்பாளை வேண்டிக்கொண்டு வந்திருக்கிறேன். உன் வயிற்று வலியை நீக்கி சுகமுண்டாக்குவாள் அம்பிகை. பயப்படாதே. உடனே பெரிய லேடி டாக்டரிடம் காட்டி அந்த வலி போக வைத்தியம் செய்வோம்'' என்றாள்.

தாமரைக்கண்ணி மாமியாரின் கையைப் பிடித்துக் கொண்டு, "அத்தை, நாலுநாள் குறைவாக இருந்த அந்தக் குத்தல் வலி நேற்றும் இன்றைக்கும் வெகு பாடுபடுத்துகிறது...'' என்று அழத் தொடங்கினாள்.



அம்மணியம்மாள் பல விதமாக ஆறுதல் சொல்லி உடனே பெரிய டாக்டரை அழைத்து வர ஏற்பாடு செய்வதாக உறுதி கூறிவிட்டு ஆகாரம் சாப்பிடப் போனாள்.

சுந்தரியும் கூடவே போனாள். சுந்தரி முன்னாலேயே வந்து சாப்பிட்டுவிட்டது சந்திராவுக்குத் தெரியாது. அதனால் அவளுக்கும் சேர்த்துச் சந்திரா இரண்டு இலைகள் போட்டாள். உடனே சுந்தரி, "அண்ணீ! நான் முன்னேயே வந்து சாப்பிட்டு விட்டேன். நீங்களும் அத்தையும் சாப்பிடுங்கள்'' என்று பணிவோடு சொன்னாள்.

அம்மணியம்மாள் சாப்பிட்டுக்கொண்டே சந்திராவைப் பார்த்து, "சந்திரா! சுந்தரியோடு படித்த கனகவல்லி இன்று மாலை நம் வீட்டுக்கு வருகிறாளாம். அவளை உபசரிக்க ஓர் இனிப்பு ஒரு காரம் இரண்டு பட்சணமும் காப்பி எல்லாம்....'' என்று சொல்லி முடிக்குமுன் சுந்தரி குறுக்கிட்டு, "ரொம்ப வேண்டாம்; இரண்டு பேருக்குப் போதுமானபடி கொஞ்சமாகச் செய்தால் போதும்'' என்றாள்.

"சரி, அப்படியே இரண்டு பேருக்கு வேண்டிய அளவு கொஞ்சமாகவே தயார் செய்துவிடம்மா'' என்று அம்மணியம்மாளும் ஆமோதித்தாள்.

சந்திராவுக்குச் சிரிப்பு வந்ததை அடக்கிக்கொண்டு, "என்ன பெரியம்மா! நீங்களும் அப்படியே சொல்லுகிறீர்களே! இன்றைக்கு ஞாயிற்றுக்கிழமை. குழந்தைகள் ஜானகியும் நெல்லையப்பனும் பள்ளிக்கூடம் போகாமல் வீட்டில் இருக்கிறார்கள். பெரியவர்களுக்கு இல்லாவிட்டாலும் அவர்களுக்காவது வீட்டில் செய்கிற பலகாரத்தில் கொஞ்சம் கொடுக்க வேண்டாமா? வீட்டில் பட்சணம் செய்தால் வீட்டிலுள்ள எல்லோருக்கும் வேண்டிய அளவு செய்தால்தான் நல்லது. இரண்டு பேருக்கு மட்டும் போதுமானதைச் செய்தால் நல்லாயிருக்குமா?'' என்றாள்.

"ஆமாண்டியம்மா, நானும் யோசனையில்லாமல் சொல்லி விட்டேன். எல்லாருக்குமே சேர்த்து நிறையச் செய்துவிடு" என்றாள் அம்மணியம்மாள்.

"எல்லாருக்கும் சேர்த்துச் செய்ய அதற்கு வேண்டிய அளவு நெய், சர்க்கரை, மற்ற பதார்த்தங்களும் வீட்டில் இல்லையே. அவைகளையெல்லாம் வாங்கி வந்தாலும் பட்சணங்கள் செய்துகொண்டிருக்க இன்றைக்கு ஒழியாதே. தாமரைக்கண்ணி வயிற்று வலியால் அவதிப்பட்டுக்கொண்டிருக்கிறாள். நான் அடிக்கடி போய் வென்நீர் ஒத்தடம் கொடுக்க வேண்டியிருக்கிறது. அவள் துடித்துக்கொண்டிருக்கும்போது நான் எப்படி பட்சணங்கள் செய்துகொண்டிருப்பது? சோறு சமைப்பதே கஷ்டம்" என்றாள் சந்திரா.

"முடியாதா?" என்று கத்தினாள் சுந்தரி.

"எப்படி சுந்தரி முடியும்? அடிக்கடி நான் போய்க் கால்மணி அல்லது அரை மணிநேரம் அவளோடு தங்கவேண்டி இருக்கிறது. நோயாளியுடன் அவ்வளவு நேரம் சும்மா உட்கார்ந்திருக்கக்கூட உன்னால் முடியாது. பெரியம்மாளுக்கு அந்தச் சிரமம் வைக்கக் கூடாது. நான்தான் அதைக் கவனிக்க வேணும். என்ன செய்யட்டும்?" என்றாள் சந்திரா.

"ஆமாண்டியம்மா, அதுவும் நெசந்தான்" என்றாள் அம்மணியம்மாள்.

"இத்தனை பாடு எதற்கு? இரண்டு மூன்று பேருக்கு வேண்டிய பட்சணங்கள்தான் வேண்டும் என்றால், பேசாமல் அவற்றைப் பட்சணக் கடையிலேயே வாங்கி வந்து விருந்தாளிக்கு உபசரிக்கலாமே! நாம் செய்யக்கூடியதைக்காட்டிலும் நல்ல நல்ல தினுசான பட்சணங்கள் கடையில் கிடைக்குமே. காப்பி வேணுமானால் மிக நல்ல 'பில்டர்' காப்பி நான் போட்டுத் தருகிறேன்" என்றாள் சந்திரா.

சந்திரா சொன்னதெல்லாம் மிகவும் நியாயமானதுதான். ஆனால், தான் விரும்பியபடி நடக்கவில்லையே என்ற கோபமும்



ஏற்கெனவே சுந்தரிக்குச் சந்திராவிடத்திலுள்ள மனத்தாபமும் சேர்ந்து, "சரி, சரி; யாருடைய தயவும் வேண்டியதில்லை. காப்பிகூடக் கடையிலேயே வாங்கிக்கொள்ளுகிறேன்" என்று சொல்லிக்கொண்டே சுந்தரி எழுந்து போய்விட்டாள்.

## அத்தியாயம் 14

அம்மணியம்மாள் ஆகாரத்தை முடித்துக்கொண்டு சந்திராவிடத்தில், "சந்திரா, நீ சொன்னதெல்லாம் ரொம்பச் சரி. தாமரைக்கண்ணியைக் கவனித்துக்கொள்ள வேண்டியதுதான் முக்கியம். கனகவல்லிக்கு விருந்து செய்ய வேண்டிய பட்சணங்களைக் கடையிலேயே வாங்கிக்கொள்ளலாம். நீ சொன்னபடி நல்ல காப்பி மட்டும் நீயே தயார் செய்துவிடு" என்றாள்.

"ஆகட்டும், பெரியம்மா" என்றாள் சந்திரா.

கோபித்துக்கொண்டு போன மருமகளை நாடி அம்மணியம்மாள் சுந்தரியின் அறைக்குப் போனாள். சுந்தரிக்குச் சந்திராவின்மீது கடுப்பு என்றாலும் அதை மாமியாரிடம் காட்ட முடியுமா? காட்டினால் வைரம் பதித்த கைக்கடிகாரம் கிடைக்குமா?

மாமியாரைக் கண்டதும் சுந்தரி எழுந்து வந்து, "எல்லாம் கடையிலேயே வாங்கிக்கொள்ளலாம், அத்தை" என்றாள்.

"ஆமாம்மா, சந்திரா சொல்லுவதும் நியாயமாகத்தான் இருக்கிறது. நீ ஒன்றும் வருத்தப்படாதே" என்றாள் மாமியார்.

"வருத்தம் ஒன்றுமில்லை, அத்தை. இருந்தாலும் சந்திராவுக்கு அடுப்பூதுகிற சமையற்காரி புத்திதானே இருக்கிறது. படித்து நாகரிகமாக வெளியே போய் நாலு பேரோடு பழகியிருந்தால்தானே கனகவல்லியைப் போன்றவர்களின் சிறப்புத் தெரியும்? அடுப்பூத மட்டும் தெரிந்தவளுக்கு அது எங்கே தெரியப் போகிறது என்ற பரிதாபந்தான் எனக்கு.

வேறொன்றுமில்லை'' என்று சுந்தரி நாசூக்காகச் சந்திராவை இகழ்ந்தாள்.

சுந்தரி சொன்னதிலுள்ள இகழ்ச்சியும் ஏளனமும் அம்மணியம்மாளின் உள்ளத்தை உறுத்தின. ஆனாலும் அதை உடனே கண்டிக்கத் துணிவு வரவில்லை. மகனை மகிழ்ச்சியோடிருக்கச் செய்கிறவள் என்றும் வம்சத்துக்கு ஆண் சந்ததியைப் பெற்றுத் தரப்போகிறவள் என்றும் மதிப்பிற் சிறந்த மருமகளைக் கடிந்துகொள்ள மனம் வராமல், "உன்னை போல் சந்திரா படித்துப் பட்டம் பெற்றவள் அல்லதான். அவளுக்குக் கனகவல்லி போன்ற பள்ளித் தோழிகள் இல்லையென்பதும் உண்மைதான். ஆனாலும் அவள் மிக நல்ல பெண். நமக்காக எவ்வளவு உழைக்கிறாள் பார். அவள் இல்லாவிட்டால் தாமரைக்கண்ணி இந்த நேரம் என்ன கதியா யிருப்பாளோ சொல்ல முடியாது. சரி, பட்சணங்களும் பழங் களும் வாங்க எவ்வளவு பணம் வேணும்?'' என்று பேச்சை மாற்றினாள் மாமியார்.

"நீங்கள் எவ்வளவு கொடுத்தாலும் அதற்குள் வாங்கு கிறேன். நீங்களே வந்து எடுத்துக் கொடுங்கள்'' என்றாள் சுந்தரி, பெட்டிச்சாவியை வாங்கித் தானே பணம் எடுக்கக் கூடாது என்ற ஏற்பாட்டை மனத்திற்கொண்டு.

"இருபது ரூபாய் தருகிறேன். உயர்ந்த தினுசான பட்சணங்கள், பழங்கள், புஷ்பம், வெற்றிலை பாக்கு, மற்றும் வேணுமானதை வாங்கு. காப்பி மட்டும் சந்திராவையே போடச் சொல்லியிருக்கிறேன்'' என்றாள் மாமியார்.

"ஏன்? காப்பி மட்டும் என்னத்துக்குச் சந்திரா போடணும்? அதையும் காப்பிக் கடையிலேயே வாங்கிவிடலாம், அத்தை.''

"வேண்டாம். நான் சொல்லுவதைக் கேள். என்னவானா லும் கடைக் காப்பி சந்திரா வைக்கிற காப்பியைப் போல் இருந்ததில்லை'' என்றாள் மாமியார்.

மறுத்துப் பேச அஞ்சி ஒத்துக்கொண்டாள், சுந்தரி.



காப்பியைத் தவிரப் பட்சணங்களும் பழவகைகளும் என்னென்ன வாங்குவது என்று ஒரு ஜாபிதா தயார் செய்து கொண்டாள் சுந்தரி. மத்தியான்ன சாப்பாட்டுக்கு மேல் கடை களுக்குப் போய் வாங்கி வர வேண்டும்.

சென்னையில் உயர்ந்த ரகமான பட்சணங்களில் எது எது எங்கெங்கே கிடைக்கும் என்பதைச் சுந்தரி நன்றாக அறிந்தவள். எப்படியென்றால், அவளும் அவளுடைய கணவன் முருகேசனும் சேர்ந்து சென்னையிலுள்ள சிறந்த ஓட்டல்கள் எல்லாவற்றிலும் அருந்தியிருக்கிறார்கள். நல்ல பட்சணங்கள் வேண்டுமானால் வெகு தூரம் போக வேண்டும். மாலை நான்கு மணிக்கு விருந்து தயாராகப் பகல் இரண்டு மணிக்கே வீட்டைவிட்டுப் போனால் தான் வேண்டியவற்றை வாங்கிக்கொண்டு நான்கு மணிக்குள் வந்துவிடலாம்.

சுந்தரி இரண்டு மணிக்கே புறப்பட்டாள். அன்றைக்குக் கடுமையான வெயில். அந்த வெயிலில் தான் மட்டும் தனியே போய் அங்குமிங்கும் அலைந்து பட்சணங்களையும் பழங்களை யும் வாங்கிச் சுமந்துகொண்டு வர வேண்டியிருப்பதை நினைத்த போது அவளுக்கு அழுகையும் ஆத்திரமும் வந்துவிட்டன. அன்றைக்கென்று தன் கணவனையும் சுந்தரமூர்த்தி வயலுக்குக் கூட்டிக்கொண்டு போய்விட்டது சந்திராவுடன் சுந்தரமூர்த்தியும் சேர்ந்து சதி செய்துவிட்டதுபோல் இருந்தது. வெளியில் காய்ந்த வெயிலைப் போலவே சுந்தரியின் உள்ளமும் கொதிப் படைந்தது. அந்தக் கொதிப்பு, பட்சணங்கள் செய்யத் தனக்கு நேரமில்லையென்று சொல்லிவிட்ட சந்திராவின்மேல் ஏற் கெனவே சுந்தரிக்கு இருந்துவரும் குரோதத்தை அதிகப்படுத்தி விட்டது. வேகின்ற வெயிலில் தனியே போய் வரவேண்டிய சங்கடத்தை உண்டாக்கிவிட்டவள் சந்திராதான் என்று அவளை மனத்துக்குள் நிந்தித்துக்கொண்டே புறப்பட்டாள்..

ஒரு டாக்சி மோட்டாரில் வெவ்வேறு இடங்களுக்குச் சென்று வேண்டியவற்றை வாங்கிக்கொண்டு மூன்றரை மணிக்கு முன் வந்துவிட்டாள்

சுந்தரி, தன்னை அலங்கரித்துக்கொள்வது போலவே தன்னுடைய அறையையும் அலங்கரித்து வைப்பவள்; அறையிலுள்ள பொருள்களை மேலும் ஒழுங்குபடுத்தி, மேஜையின் மீது தட்டங்களில் சிற்றுண்டிகளை அழகாகப் பரப்பி வைத்துவிட்டுத் தன் திருமணத்தில் வெகுமதிகளாக வந்த வெள்ளிக் கோப்பைகளைக் காப்பிக்காகத் துடைத்து வைத்தாள். குடும்பத்துக்கான வீட்டு வேலைகளில் ஒன்றையாவது செய்ய இடுப்பு வளையாத அவள், தானே போய்க் குழாயில் தண்ணீர் பிடித்து வந்து அறைக்குள்ளேயே கையலம்புவதற்காகத் தண்ணீரும் தொட்டியும் கொண்டுவந்து அறையில் வைத்தாள்; பிறகு வெளியே போய் வந்ததால் கசங்கிவிட்ட உடைகளை மாற்றி அலங்கரித்துக்கொண்டு கனகவல்லியின் வரவுககாகக் காத்திருந்தாள்.

மத்தியான்ன சாப்பாட்டுக்குப் பின் சிறிது நேரம் படுத்து எழுந்திருக்கும் வழக்கத்தால் அதுவரையிலும் படுத்திருந்த மாமியார் அப்போதுதான் எழுந்து சுந்தரியின் அறையை நாடி வந்தாள். மாமியாரைக் கண்டதும் சுந்தரி, "அத்தை! வந்து பாருங்கள்" என்று மாமியாரை அறைக்குள் அழைத்து மேஜையின்மீது அழகாகப் பரப்பப்பட்டிருந்த பட்சணங்களையும் பழங்களையும் காட்டினாள்.

அவைகளையெல்லாம் கூர்ந்து பார்த்துவிட்டு, "இரண்டு பேருக்குப் போதுமானது மட்டும் செய்தால் போதும் என்று சொன்னாயே, நீ வாங்கி வந்திருப்பது பத்துப் பேருக்கு மேலும் தாலாம் போல் இருக்கிறதே!" என்றாள் மாமியார்.

"இங்கே செய்வதானால் செய்கிறவருக்கு அதிகச் சிரமம் இருக்கக்கூடாது என்பதற்காக அப்படிச் சொன்னேன். கடையில் வாங்கும்போது அத்தானுக்கும் உங்களுக்குங்கூட உதவட்டும் என்று சேர்த்து வாங்கினேன்" என்றாள் சுந்தரி.

"எனக்கென்னத்துக்கம்மா இதெல்லாம். சந்திராவுக்கும் குழந்தைகளுக்கும் மற்றவர்களுக்கும் கொடு" என்று சொல்லிக்கொண்டே அறையைவிட்டு வெளியே போய்விட்டாள் அம்மணியம்மாள்.



'சந்திராவுக்கும் கொடு' என்றது சுந்தரியின் காதில் நாராசம் போல் பாய்ந்து சந்திராவின்மீதிருந்த எரிச்சலைக் கிளறிவிட்டது.

சிறிது நேரத்தில் கனகவல்லியின் மோட்டார் கார் வாசலில் வந்து நின்ற ஓசை கேட்டுச் சுந்தரி தோழியை எதிர்கொள்ள ஓடினாள். மாமியாரும் பின்னால் சென்றாள்.

கனகவல்லி, செல்வச் செழிப்புக்குரிய அலங்காரங்களுடன் வயிரத் தோடுகளும் நெக்லெசும் வானவில்லின் வர்ண ஜாலங்களுடன் ஒளி வீசப் பட்டாடை பளபளக்க, வைரங்கள் பதித்த 'ரிஸ்ட் வாட்ச்' கட்டிய இடக்கையில் வெகு நூதனமான டம்பப் பையுடன் வண்டியைவிட்டு இறங்கினாள். அவளைச் சுந்தரியும் மாமியாரும் மிக்க மகிழ்ச்சியுடன் வரவேற்றார்கள். சுந்தரி, கனகவல்லியைக் கட்டியணைத்துக் கையைப் பிடித்து, அழைத்துக் கொண்டு வீட்டுக்குள் போனாள். மாமியார் பின்தொடர்ந்தாள். அந்த அம்மாளுக்குப் பின்னால் கனகவல்லியின் கார் டிரைவர், சுந்தரிக்கு வெகுமதியாகக் கொண்டுவந்த ஒரு பெரிய பழக் கூடையுடன் உள்ளே போனான்.

கனகவல்லி பணக்காரியானாலும் அகங்காரியல்ல; யாரோடும் அன்பாகப் பழகக்கூடியவள்; அப்போதுதான் முதல் தடவையாகச் சந்தித்த அம்மணியம்மாளோடு பரிவோடு பேசி, சேமலாபங்களை விசாரித்தாள். சுந்தரி அவள் கணவனுக்கு இரண்டாந்தாரம் என்பதும் முதல் தாரமாகிய தாமரைக்கண்ணி நோயாளியாக இருப்பதும் கனகவல்லிக்குத் தெரியும். சுந்தரி, பல தடவைகளில் கணவன் முருகேசனுடன் கனகவல்லியின் வீட்டுக்குப் போனபோது தாமரைக்கண்ணி பெற்ற ஜானகியையும் கூட்டிக்கொண்டு போயிருக்கிறாள்.

அதனால் கனகவல்லி தாமரைக்கண்ணியின் உடல்நலத்தைப்பற்றி வெகு அநுதாபத்தோடு விசாரித்து, "ஜானகியின் தாயாரை நான் பார்க்க வேண்டும்" என்றாள்.

உடனே சுந்தரி, "பார்க்கலாம். நானே கூட்டிக்கொண்டு போய் அக்காளை உனக்கு அறிமுகப்படுத்துகிறேன். முதலில் நீ கொஞ்சம் சிற்றுண்டியும் காப்பியும் சாப்பிட்டுவிடு. அப்புறம் அக்காளைப் போய்ப் பார்ப்போம்'' என்று கனகவல்லியின் கையைப் பிடித்து, பட்சணங்கள் உள்ள தன் அறைக்குப் போக இழுத்தாள்.

அம்மணியம்மாளும், "ஆமாம்மா, பட்சணங்கள் எல்லாம் வெகு நேரமாக ஆறிக் கிடக்குது. முதலில் நீங்கள் சாப்பிட்டு விடுங்கள்; பிறகு தாமரையைப் பார்க்கலாம்'' என்று ஆமோதித்தாள்.

அதுவரையும் அவர்கள் மூவரும் சுந்தரியின் அறைக்கு வெளியே நின்றுகொண்டுதான் பேசினார்கள். சுந்தரி கனகவல்லியை அறைக்குள் அழைத்துச் சென்றாள். கனகவல்லி அம்மணியம்மாளையும் அறைக்குள் வர அழைத்தாள்.

அம்மணியம்மாள், "நீங்கள், போய்ச் சாப்பிடுங்கள். நான் போய்க் காப்பி தயாராகிவிட்டதா என்று பார்க்கிறேன்'' என்று சொல்லிவிட்டுச் சமையலறைக்குப் போனாள்.

கனகவல்லியும் சுந்தரியும் அறைக்கதவைத் தாழிடாமல் மூடிவிட்டுச் சிற்றுண்டிகளைச் சாப்பிட்டுக்கொண்டிருந்தார்கள்.

காப்பி தயாராகிவிட்டதா என்று பார்க்கப் போன அம்மணியம்மாள், சமையலறையில் சந்திரா காப்பியைத் தயார் செய்து வெள்ளிக் கூஜாவில் ஊற்றிக்கொண்டிருப்பதைப் பார்த்துத் திருப்தியடைந்தாள். பிறகு, தாமரைக் கண்ணியைப் பார்க்கக் கனகவல்லி வரப்போகிறாள் என்பதைத் தாமரைக்கண்ணிக்குத் தெரியப்படுத்த அம்மணியம்மாள் அவள் படுத்திருக்கும் அறைக்குப் போனாள்.

அங்கே தாமரையின் மகள் ஜானகியும் சந்திராவின் மகன் நெல்லையப்பனும் இருந்தார்கள். தாமரைக்கண்ணி தன் வயிற்று வலியையும் மறந்தவளாய் மகளை அணைத்துக் கொண்டு ஒரு கையால் நெல்லையப்பனையும் பிடித்துக் கொண்டு படுத்திருந்தாள்.



குழந்தைகளை அங்கே கண்ட அம்மணியம்மாள், "ஜானகி, உன் சித்தி உங்களுக்கெல்லாம் நல்ல நல்ல பட்சணங்களும் பழங்களும் வாங்கி வந்திருக்கிறாள், போய்த் தின்னுங்கள். நெல்லையப்பா! உனக்குந்தான். நீயும் போ'' என்றாள்.

தின்பண்டங்கள் கிடைக்கும் என்றதைக் கேட்டவுடனே குழந்தைகள் இருவரும் சுந்தரியின் அறைக்கு ஓடினார்கள், ஜானகி முன்னும் நெல்லையப்பன் பின்னுமாக. முன்னால் போன ஜானகி சுந்தரியின் அறைக்கதவைத் தள்ளித் திறந்து கொண்டு புகுந்தாள். பின்னால் வேகமாக நுழைந்த நெல்லையப்பன் ஜானகியின்மீது மோதிவிட்டான். ஜானகி சாய்ந்து விழப்போனவள், எதிரில் இருந்த நாற்காலியைப் பிடித்துக் கீழே விழாமல் சமாளித்துக்கொண்டாள்.

அதைக் கண்ட சுந்தரி கடுங்கோபத்துடன், "டேய், நெல்லையப்பா! அட சனியனே! ஏண்டா அவளைத் துரத்திக் கொண்டு ஓடியாரே? பீடை! போ வெளியிலே'' என்று கத்தினாள்.

காப்பியைக் கொடுத்துவிட்டுப் போகக் கூஜாவோடு சுந்தரியின் அறைக்கு அருகில் வந்துகொண்டிருந்த சந்திராவின் காதில் 'டேய்! நெல்லையப்பா! அட சனியனே!' என்ற சொற்கள் விழுந்தன. உடனே நின்று காது கொடுத்தாள். 'ஏண்டா அவளைத் துரத்திக்கொண்டு ஓடியாரே? பீடை' போ வெளியிலே' என்றதும் காதில் விழுந்தது.

சுந்தரி அவ்வளவு கோபத்துடன் அந்தச் சிறுவனைக் கடிந்து வெளியே போகச் சொன்னதைக் கண்டு வியப்படைந்த கனகவல்லி, சுந்தரியைப் பார்த்து, "இந்தப் பையன் யார்?'' என்று கேட்டாள்.

"அவனா? அவன் இந்த வீட்டுச் சமையற்காரியின் மகன்'' என்றாள்.

இந்தச் சொற்கள் காதில் விழுந்தவுடனே, சந்திரா அவள் நின்ற இடத்திலேயே காப்பிக் கூஜாவை வைத்துவிட்டுத் திரும்பிப் போகப் புறப்பட்டாள். அதே சமயத்தில் நெல்லையப்பன் அழுதுகொண்டு அறையிலிருந்து வெளியே வந்தான். ஓசை செய்யாமல் மகனுடைய கையைப் பிடித்துக் கூட்டிக்கொண்டு சமையல் அறைக்குப் போய்விட்டாள், சந்திரா.

தன் மகனை, 'சனியனே! பீடை!' என்று இகழ்ந்து வெளியே போகச் சொன்னதும் அல்லாமல், தன்னை அந்த வீட்டுச் சமையற்காரி என்றும் சுந்தரி சொன்னதில் சந்திராவுக்கு அடக்க முடியாத அழுகையும் ஆத்திரமும் வந்துவிட்டது.

அப்படியெல்லாம் தன் மகனையும் தன்னையும் சுந்தரி இகழ்ந்துவிட்டதற்குச் சரியானபடி உடனே திருப்பித் திட்டியிருந்தாலாவது சற்று ஆத்திரம் தணிந்திருக்கும். ஆனால், 'சுந்தரி என்ன சொன்னாலும் நீ அதைக் காதிற்போட்டுக் கொள்ளாதே' என்று தன் கணவர் சுந்தரமூர்த்தி சொல்லியிருந்ததை மனத்திற்கொண்டு பேசாமல் வந்துவிட்டதால் வெகுரோஷக்காரியான சந்திராவுக்கு அந்த அவமதிப்புப் பொறுக்க முடியவில்லை.

சிறிது நேரம் அழுதுகொண்டிருந்துவிட்டுத் தான் அழுவதை அம்மணியம்மாள் பார்த்துவிட்டால் ஏன், எதற்காக அழுகிறாய் என்று கேட்டுவிடுவார்கள். காரணத்தைச் சொல்லிவிடவேண்டி வரும். அல்லது வேறு காரணம் காட்டிப் பொய் சொல்ல வேண்டும். உண்மையான காரணத்தைச் சொல்லிவிட்டால் அதனால் அம்மணியம்மாளுக்கும் முருகேசனுக்கும் நிம்மதி கெட்டுக் குடும்பத்தில் குழப்பமுண்டாகும். தாமரைக்கண்ணியின் காதிலும் விழுந்து, அவளுக்கு இருக்கிற உடல் வேதனையோடு மன வேதனையும் சேர்ந்துவிடும் என்றெல்லாம் எண்ணிப் பார்த்துக் கண்ணீரைத் துடைத்துக்கொண்டு நெல்லையப்பனைத் தேற்றி, அவனும் சுந்தரி சொன்னதை யாரிடமும் சொல்லக்கூடாதென்று புத்தி சொன்னாள். நெல்லையப்பன் சிறுவன் என்றாலும் புத்திசாலி. தாய் தகப்பன் சொன்னபடி



நடக்கும் குணமுள்ளவன். இனிமேல் அவன் சுந்தரியின் அறைக்குள் நுழையக்கூடாதென்றும் புத்தி சொன்னாள். அவனும் அதை ஏற்றுக்கொண்டான்.

தான் அழுதிருப்பதன் அறிகுறிகள் யாருக்கும் தெரியாதபடி முகத்தைக் கழுவிப் புதிதாகக் குங்குமப் பொட்டு இட்டுக்கொண்டு வெளித்தோற்றத்தைச் சரி செய்துகொண்டாள். ஆனாலும் மனக் கொதிப்பை அவளால் அடக்க முடியவில்லை.

இனி ஒரு நிமிஷங்கூட அந்த வீட்டில் இருக்கக்கூடாதென்று நினைத்தாள்; உடனே போய்விட முடியாவிட்டாலும் இனிமேல் தன்னால் சமையல் வேலை செய்ய முடியாதென்று சொல்லிவிட வேண்டுமென்று தீர்மானித்தாள்.

மனத்துக்குள் தீர்மானித்து என்ன செய்வது? அதைச் செயல்படுத்துவது எப்படி? வீட்டைவிட்டுப் போய்விடுவதென்றால் கணவனுக்கும் சொல்லாமல் ஓடிவிட முடியுமா?

'சமையல் செய்ய மாட்டேன் என்று சொல்லிவிட்டால் உடனே சுந்தரி வந்து சமைத்து, தனக்கும் தன் கணவருக்கும் மகனுக்தும் பரிமாறப் போகிறளா? தாமரைக்கண்ணிக்குப் பத்திய உணவைப் பக்குவம் செய்து கொடுத்துவிடுவாளா? தான் சமைக்க முடியாது என்று சொல்லிவிட்டால் அம்மணியம்மாள்தான் சமைக்க வேணும். ஐயோ பாவம், சுந்தரியின் குற்றத்துக்காக அந்தப் பெரியம்மாளையா தண்டிப்பது? தான் வீட்டைவிட்டுப் போய்விட்டால் தாமரைக்கண்ணி அநாதைபோல் கிடந்து சாகவேண்டியதுதான். அவள் வயிற்று வலியால் துடித்துக்கொண்டிருக்கிற இந்தச் சமயத்தில் தான் போய்விட்டால் அவள் வயிற்று வலிக்கு வெந்நீர் ஒத்தடம் கொடுப்பது யார்?' என்ற பல நினைவுகள் தோன்றிச் சந்திராவைச் சாந்தப்படுத்தின.

இதே மாதிரிதான் அவளுடைய கணவன் சுந்தரமூர்த்தியும் அந்த வீட்டைவிட்டுப் போய்விட எண்ணிப் பின் தாமரைக்கண்ணியைக் கருதிச் சமாதானமடைந்தான் என்பது வாசகர்களின் நினைவுக்கு வரும். அது எப்போது

என்றால்: சுந்தரிக்குப் பிறந்த நாள் கொண்டாடி வைரம் பதித்த கைக்கடிகாரம் வாங்கித் தர எண்ணி வயல்களின் வருமானத்தில் எவ்வளவு மிச்சமாகும் என்று அம்மணியம்மாள் கேட்டதற்குச் சுந்தரமூர்த்தி, வீட்டுச் செலவுக்கே பற்றாக்குறை ஏற்படும், மிச்சம் ஆகாது என்று சொன்னான். அதைக் கேட்டுக் கொதிப்படைந்த சுந்தரி தன் அறைக்குள் கணவனிடம், சுந்தரமூர்த்தி வயல்களின் வருமானத்தில் கொள்ளையடிப்பவன் என்றும், 'சும்மா ஆடுமோ சோழியன் குடுமி' என்றும், 'ஆதாயமில்லாமல் செட்டி ஆற்றோடு போவானா' என்றும் சொல்லிக்கொண்டிருந்ததைச் சுந்தரமூர்த்தி கேட்டுவிட்டான். அதனால் அவனும் அந்த வீட்டை விட்டுப் போய்விட எண்ணிப் பின் தாமரைக்கண்ணியைக் கருதியே அந்த எண்ணத்தை அடக்கிவிட்டான்.

சுந்தரி, சுந்தரமூர்த்தி கொள்ளையடிப்பவன் என்று கணவனிடம் சொல்லிக்கொண்டிருந்ததைக் கேட்டுக் கொண்டிருந்த சுந்தரமூர்த்தி அதைப்பற்றித் தன் மனைவி சந்திராவிடம் சொல்லவில்லை; ஏனென்றால், ஏற்கெனவே சுந்தரியால் புண்படுத்தப்பட்டிருந்த சந்திரா இதையும் அறிந்தால் உடனே அந்த வீட்டைவிட்டுப் போய்விடத் துடிப்பாள் என்று அஞ்சினான்.

## அத்தியாயம் 15

அன்றிரவு சந்திரா தன் கணவன் சுந்தரமூர்த்தியிடம், சுந்தரி நெல்லையப்பனைச் 'சனியனே', 'பீடை' என்று ஏசி, 'போடா வெளியே' என்றதையும், தன்னை அந்த வீட்டுச் சமையற்காரி என்றதையும் சொல்லிவிட்டு, "அத்தான், எனக்கு இங்கே இருக்கவே பிடிக்கவில்லை" என்றாள்.

"அதற்கு நீ என்ன சொன்னாய்?" என்றான்.

"நான் அறைக்கு வெளியே நின்றபடியேதான் அவள் சொன்னதையெல்லாம் காதால் கேட்டேன்; உடனே திரும்பிச் சமையலறைக்குப் போய்விட்டேன். சுந்தரியை நான் பார்க்கவில்லை. அவளும் என்னைப் பார்க்கவில்லை" என்றாள் சந்திரா.



"ரொம்பச் சந்தோஷம். நீ அப்படிச் செய்ததுதான் சரி. பொறுத்தது பொறுத்தாய், தாமரைக்கண்ணியின் வயிற்றுவலிக்கு வைத்தியம் செய்கிற வரையில் பொறுத்துக்கொள்" என்று மனைவியின் முதுகைத் தட்டிக் கொடுத்தான்.

"தாமரைக்கண்ணிக்கு வைத்தியம் செய்ய வேண்டியதை எண்ணித்தான் நானும் பொறுத்துக்கொண்டேன். அவளுக்கு வைத்தியம் நடந்த பிறகு என்ன செய்வது?"

"அதற்குப் பிறகு நமக்கு ஒரு வழி பிறக்கும். அதைப் பற்றிப் பின்னால் யோசிக்கலாம். இப்போதைக்கு நீ சுந்தரி சொன்னதைப் பொறுத்துக்கொண்டு எப்போதும் போல் காரியங்களைச் செய். இதை அத்தையிடம் சொன்னாயா?"

"இல்லை. யாரிடமும் சொல்லவில்லை. நெல்லையப்பனைக்கூட இதை யாரிடமும் சொல்லக்கூடாதென்று திட்டம் செய்துவிட்டேன்."

"நெல்லையப்பனையும் கட்டுப்படுத்திவிட்டது மிகவும் புத்திசாலித்தனமான காரியம். இப்போது நாம் கவனிக்க வேண்டியதெல்லாம் தாமரைக்கண்ணிக்கு வைத்தியம் நடக்க வேண்டிய ஒன்றுதான். அதுவரையிலும் சுந்தரி என்ன செய்தாலும் பொறுத்துக்கொள்."

"ஆமாம் அத்தான், நேற்றே பெரிய டாக்டர் அம்மாளை அழைத்து வருவதாகச் சொன்னீர்களே?"

"ஆம்; நேற்றே அந்த டாக்டரம்மாளைக் கண்டு பேசினேன். அவர் நாளைக்கு வருவதாகச் சொல்லியிருக்கிறார். நான் அழைத்து வருகிறேன்."

"மறக்காமல் டாக்டரைக் கூட்டிக்கொண்டு வாருங்கள்" என்று சொல்லிவிட்டுத் தாமரைக்கண்ணிக்கு வெந்நீர் ஒத்தடம் கொடுக்கப் போய்விட்டாள், சந்திரா.

மறுநாள் காலை பத்து மணிக்குச் சுந்தரமூர்த்தியும் முருகேசனும் போய் டாக்டரம்மாளைக் கூட்டிக்கொண்டு வந்தார்கள். அந்த டாக்டருக்குக் கொடுக்க வேண்டிய கட்டண விகிதம்: நோயாளியை அந்த அம்மாள் இருக்குமிடத்துக்குக் கொண்டுபோனால் இருபத்தைந்து ரூபாய்; நோயாளி இருக்குமிடத்திற்கு அந்த அம்மாள் வருவதானால் பரிசோதனைக் கட்டணம் முப்பத்தைந்து ரூபாய். அந்த முப்பத்தைந்து ரூபாயை அம்மணியம்மாளிடம் வாங்கிக்கொண்டு போய்க் கொடுத்துத்தான் கூட்டிக்கொண்டு வந்தார்கள்.

அந்த டாக்டரம்மாள் தாமரைக்கண்ணியின் உடல் நிலையைப் பல விதமாகப் பரிசோதித்துவிட்டு, வயிற்றில் ஒரு கட்டியிருப்பதாகவும் அதற்கு அறுவைச் சிகிச்சைதான் (ஆபரேஷன்) செய்ய வேண்டும் என்றும் சொன்னாள். பிறகு தனியே சுந்தரமூர்த்தியிடம், நோய் கடினமானது என்றும், ஆபரேஷன் செய்தால்தான் ஒருகால் குணமாகலாம் என்றும், இல்லாவிட்டால் அது புற்றுநோயாக விரைவில் அபாயமுண்டாக்கிவிடும் என்றும் சொன்னாள். அந்த ஆபரேஷன் செய்யப் பெரிய ஆஸ்பத்திரியிலாவது அல்லது பூந்தமல்லி நெடுஞ்சாலையிலுள்ள டாக்டர் மோகன்ராவ் அவர்களுடைய 'சர்ஜிகல் கிளினிக்' என்ற ஆஸ்பத்திரியிலாவது சேர்க்க வேண்டும் என்று சொல்லிவிட்டுக் கடைசியாக, "என்னைக் கேட்டால் மோகன்ராவ் கிளினிக்கில் சேர்ப்பதுதான் மேல்" என்று சொன்னாள்.

அம்மணியம்மாள் விரும்பியபடி நல்ல நாள், நல்ல நேரம் பார்த்துத் தாமரைக்கண்ணியை மோகன்ராவ் ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போனார்கள். டாக்டர் மோகன்ராவ் பரிசோதனை செய்துவிட்டு, வயிற்றில் கட்டியிருப்பதாகவும், அதை ஆபரேஷன் செய்துதான் அகற்ற வேண்டும் என்றும், ஆனால் நோயாளி மிகவும் பலவீனமாக இருப்பதால் உடனே ஆபரேஷன் செய்யத் தகுதியில்லையென்றும், வீட்டுக்குக் கொண்டுபோய் அவர் எழுதிக்கொடுக்கும் மருந்துகளையும் டானிக்கையும்



ஆகார நியதியையும் இரண்டு வாரம் கொடுத்து, அதனால் அறுவைக்குத் தகுதியடைந்தால் ஆபரேஷன் செய்ய முடியும் என்று சொல்லிவிட்டார்.

"திருப்பி வீட்டுக்குக் கொண்டுபோகச் சொல்லாமல் இங்கேயே அந்த மருந்துகளையும் டானிக்கையும் ஆகாரத்தையும் தங்களுடைய மேற்பார்வையுடன் கொடுத்துவரத் தயவு செய்யுங்கள்" என்று சுந்தரமூர்த்தி இருகரங்களையும் கூப்பி வணங்கிக் கேட்டுக்கொண்டான்.

டாக்டர் உடனே சம்மதித்துவிடவில்லை. நிச்சயமாகச் சௌக்கியப்படுத்த முடியும் என்று நம்பக்கூடிய நிலையிலுள்ள நோயாளிகளைத்தான் அவர் ஏற்றுக்கொள்வது வழக்கம். தாமரைக்கணணி நிலைமையில் அந்த நம்பிக்கை அவருக்கு உண்டாகவில்லை. அதனால் தயங்கினார்.

ஆனால், சுந்தரமூர்த்தி மீண்டும் மீண்டும் கெஞ்சிக் கேட்டுக்கொண்டதனால் கடைசியாக, "சரி; உங்கள் விருப்பப்படியே நோயாளியை இங்கேயே வைத்துப் பதினைந்து நாள்கள் அந்த மருந்தையும் டானிக்கையும் ஆகாரத்தையும் கொடுப்போம். ஆபரேஷன் செய்யத் தகுதியான குறிகள் ஏற்பட்டால் ஆபரேஷன் செய்வேன். பதினைந்து நாள்களுக்கு முன்னால் எனக்குச் சந்தேகம் ஏற்பட்டாலும் நீங்கள் நோயாளியை வீட்டுக்குக் கொண்டுபோய் விடவேண்டும்" என்றார்.

அதற்குச் சுந்தரமூர்த்தி ஒத்துக்கொண்டான். அந்த ஆஸ்பத்திரியின் மேலமாடியில் நாள் ஒன்றுக்குப் பத்து ரூபாய் வாடகையில் ஒரு பெரிய அறையில் தாமரைக்கண்ணியைப் படுக்க வைத்தார்கள். நோயாளிக்கு வேண்டிய எல்லா வசதிகளும் உள்ளது அந்த அறை.

தாமரைக்கண்ணிக்குத் துணையாகச் சந்திரா அந்த அறையிலேயே இருக்க அனுமதிக்கப்பட்டாள். அவள் உண்பதும் உறங்குவதும் அங்கேயேதான். அவளுக்கு ஆகாரமும் தாமரைக்கண்ணிக்கு வேண்டியவற்றையும் கொண்டுவந்து

மறுநாள் காலை பத்து மணிக்குச் சுந்தரமூர்த்தியும் முருகேசனும் போய் டாக்டரம்மாளைக் கூட்டிக்கொண்டு வந்தார்கள். அந்த டாக்டருக்குக் கொடுக்க வேண்டிய கட்டண விகிதம்: நோயாளியை அந்த அம்மாள் இருக்குமிடத்துக்குக் கொண்டுபோனால், இருபத்தைந்து ரூபாய்; நோயாளி இருக்குமிடத்திற்கு அந்த அம்மாள் வருவதானால் பரிசோதனைக் கட்டணம் முப்பத்தைந்து ரூபாய். அந்த முப்பத்தைந்து ரூபாயை அம்மணியம்மாளிடம் வாங்கிக்கொண்டு போய்க் கொடுத்துத்தான் கூட்டிக்கொண்டு வந்தார்கள்.

அந்த டாக்டரம்மாள் தாமரைக்கண்ணியின் உடல் நிலையைப் பல விதமாகப் பரிசோதித்துவிட்டு, வயிற்றில் ஒரு கட்டியிருப்பதாகவும் அதற்கு அறுவைச் சிகிச்சைதான் (ஆபரேஷன்) செய்ய வேண்டும் என்றும் சொன்னாள். பிறகு தனியே சுந்தரமூர்த்தியிடம், நோய் கடினமானது என்றும், ஆபரேஷன் செய்தால்தான் ஒருகால் குணமாகலாம் என்றும், இல்லாவிட்டால் அது புற்றுநோயாக விரைவில் அபாயமுண்டாக்கிவிடும் என்றும் சொன்னாள். அந்த ஆபரேஷன் செய்யப் பெரிய ஆஸ்பத்திரியிலாவது அல்லது பூந்தமல்லி நெடுஞ்சாலையிலுள்ள டாக்டர் மோகன்ராவ் அவர்களுடைய 'சர்ஜிகல் கிளினிக்' என்ற ஆஸ்பத்திரியிலாவது சேர்க்க வேண்டும் என்று சொல்லிவிட்டுக் கடைசியாக, "என்னைக் கேட்டால் மோகன்ராவ் கிளினிக்கில் சேர்ப்பதுதான் மேல்" என்று சொன்னாள்.

அம்மணியம்மாள் விரும்பியபடி நல்ல நாள், நல்ல நேரம் பார்த்துத் தாமரைக்கண்ணியை மோகன்ராவ் ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போனார்கள். டாக்டர் மோகன்ராவ் பரிசோதனை செய்துவிட்டு, வயிற்றில் கட்டியிருப்பதாகவும், அதை ஆபரேஷன் செய்துதான் அகற்ற வேண்டும் என்றும், ஆனால் நோயாளி மிகவும் பலவீனமாக இருப்பதால் உடனே ஆபரேஷன் செய்யத் தகுதியில்லையென்றும், வீட்டுக்குக் கொண்டுபோய் அவர் எழுதிக்கொடுக்கும் மருந்துகளையும் டானிக்கையும்



ஆகார நியதியையும் இரண்டு வாரம் கொடுத்து, அதனால் அறுவைக்குத் தகுதியடைந்தால் ஆபரேஷன் செய்ய முடியும் என்று சொல்லிவிட்டார்.

"திருப்பி வீட்டுக்குக் கொண்டுபோகச் சொல்லாமல் இங்கேயே அந்த மருந்துகளையும் டானிக்கையும் ஆகாரத்தையும் தங்களுடைய மேற்பார்வையுடன் கொடுத்துவரத் தயவு செய்யுங்கள்" என்று சுந்தரமூர்த்தி இருகரங்களையும் கூப்பி வணங்கிக் கேட்டுக்கொண்டான்.

டாக்டர் உடனே சம்மதித்துவிடவில்லை. நிச்சயமாகச் சௌக்கியப்படுத்த முடியும் என்று நம்பக்கூடிய நிலையிலுள்ள நோயாளிகளைத்தான் அவர் ஏற்றுக்கொள்வது வழக்கம். தாமரைக்கணணி நிலைமையில் அந்த நம்பிக்கை அவருக்கு உண்டாகவில்லை. அதனால் தயங்கினார்.

ஆனால், சுந்தரமூர்த்தி மீண்டும் மீண்டும் கெஞ்சிக் கேட்டுக் கொண்டதனால் கடைசியாக, "சரி; உங்கள் விருப்பப்படியே நோயாளியை இங்கேயே வைத்துப் பதினைந்து நாள்கள் அந்த மருந்தையும் டானிக்கையும் ஆகாரத்தையும் கொடுப்போம். ஆபரேஷன் செய்யத் தகுதியான குறிகள் ஏற்பட்டால் ஆபரேஷன் செய்வேன். பதினைந்து நாள்களுக்கு முன்னால் எனக்குச் சந்தேகம் ஏற்பட்டாலும் நீங்கள் நோயாளியை வீட்டுக்குக் கொண்டுபோய் விடவேண்டும்" என்றார்.

அதற்குச் சுந்தரமூர்த்தி ஒத்துக்கொண்டான். அந்த ஆஸ்பத்திரியின் மேல்மாடியில் நாள் ஒன்றுக்குப் பத்து ரூபாய் வாடகையில் ஒரு பெரிய அறையில் தாமரைக்கண்ணியைப் படுக்க வைத்தார்கள். நோயாளிக்கு வேண்டிய எல்லா வசதிகளும் உள்ளது அந்த அறை.

தாமரைக்கண்ணிக்குத் துணையாகச் சந்திரா அந்த அறையிலேயே இருக்க அனுமதிக்கப்பட்டாள். அவள் உண்பதும் உறங்குவதும் அங்கேயேதான். அவளுக்கு ஆகாரமும் தாமரைக்கண்ணிக்கு வேண்டியவற்றையும் கொண்டுவந்து

கொடுப்பதும் அடிக்கடி வந்து தேவைகளைக் கவனித்துக் கொள்வதுமாகிய வேலைகளைச் சுந்தரமூர்த்தியே மேற் கொண்டான்.

தாமரைக்கண்ணியை ஆஸ்பத்திரிக்குக் கொண்டுவந்த போது அம்மணியம்மாள், சந்திரா, நெல்லையப்பன், முருகேசன், சுந்தரி, ஜானகி ஆகிய எல்லோருமே சுந்தரமூர்த்தியுடன் வந்தார்கள். நோயாளியை ஆஸ்பத்திரியில் சேர்த்தபின் சந்திராவும் சுந்தரமூர்த்தியும் ஆஸ்பத்திரியில் தங்கிவிட வேண்டியதாகி விட்டது. மற்றவர்கள் வீட்டுக்குத் திரும்பினார்கள். சந்திரா நெல்லையப்பனைத் தன்னோடு நிறுத்திக்கொண்டாள். அவனுக்கும் தன் தாயும் தந்தையும் இல்லாத அந்த வீட்டுக்குப் போகப் பிரியமில்லை.

சந்திராவுக்கு, அவள் தாமரைக்கண்ணிக்குத் துணையாக ஆஸ்பத்திரியில் இருக்கக் கிடைத்ததில் பெருமகிழ்ச்சி. அந்த மகிழ்ச்சியோடு ஆஸ்பத்திரியில் இருக்கும் வரையிலாவது சுந்தரிக்குச் சமையற்காரியாக இல்லாமலிருக்க வாய்ப்புக் கிடைத்ததே என்ற பூரிப்பும் சேர்ந்தது. கடவுள் கிருபையால் தாமரைக்கண்ணி சௌக்கியமடைந்துவிட்டால், சுந்தரிக்குச் சமையற்காரியாக அந்த வீட்டுக்கு மறுபடியும் போகாமல் ஆஸ்பத்திரியிலிருந்தபடியே வேறு எங்காவது போய்விடத் தன் கணவரிடம் வற்புறுத்திக் கேட்டுக்கொள்ள வேண்டும் என்று தீர்மானித்தாள்.

அதே மாதிரியான ஓர் எண்ணம் அவளுடைய கணவன் சுந்தரமூர்த்தியின் மனத்திலும் இருந்துவருவது இவளுக்குத் தெரியாது.

சுந்தரமூர்த்தியே தினந்தினம் வீட்டிலிருந்து சந்திராவுக்கும் நெல்லையப்பனுக்கும் சாப்பாடும் தாமரைக்கண்ணிக்கு வேண்டிய பத்திய உணவும் கொண்டுவந்து கொடுப்பது. வீட்டுக்கும் ஆஸ்பத்திரிக்கும் வெகுதூரம். மூன்று வேளையும் போய் வருவது சிரமமாக இருந்தது. அந்த ஆஸ்பத்திரியிலேயே பின் பகுதியில் நோயாளிகளைச் சேர்ந்தவர்கள் சமைத்துக்கொள்ள



வசதியான சமையலறைகளும் இருந்தன. 'ஆனால் யார் சமைப்பது? சந்திரா எப்போதும் தாமரைக்கண்ணியின் அருகிலேயே இருக்க வேண்டியவள். சுந்தரி இப்படிப்பட்ட சேவைகள் செய்யக்கூடியவளல்ல. ஒருகால் அவள் தன் கணவனையும் மாமியாரையும் கருதி அதற்கு இணங்கினாலும் சந்திராவிடமும் நெல்லையப்பனிடமும் அவள் சுமுகமாக நடந்து கொள்ளமாட்டாள். அம்மணியம்மாள விருப்பத்தோடு செய்யலாம். ஆனால், வயதான அந்த அம்மாளை வீட்டைவிட்டு ஆஸ்பத்திரியில் தங்கிச் சமைக்கும்படி செய்வது சரியல்ல' என்றெல்லாம் எண்ணிச் சிரமப்பட்டுக்கொண்டிருந்தான் சுந்தரமூர்த்தி.

நான்காவது நாள் மத்தியான்னச் சாப்பாடு கொண்டுவர ஆஸ்பத்திரியிலிருந்து வீட்டுக்குப் போகப் பஸ் நிலையத்துக்கு நடந்துகொண்டிருந்தான். அப்பொழுது எதிரில் வந்த ஒரு மோட்டார் கார் அவனைத் தாண்டிச் சிறிது தூரத்தில் நின்றது. அதிலிருந்து இறங்கிய ஒருவன் சுந்தரமூர்த்தியைப் பெயர் சொல்லிக் கூப்பிட்டான். சுந்தரமூர்த்தி திரும்பிப் பார்த்துக் காருக்கருகில் சென்றான். அவனைக் கூப்பிட்டவன், "சுந்தரமூர்த்தி! இங்கெப்படி வந்தாய்?" என்று கேட்டுக்கொண்டே சுந்தரமூர்த்தியைக் கட்டித் தழுவிக்கொண்டான். அவன் சுந்தரமூர்த்தியின் பள்ளித் தோழனாகிய இராமநாதன். அவனும் சுந்தரமூர்த்தியும் மிகவும் நெருங்கிய நண்பர்களாக இருந்தவர்கள்.

இராமநாதன் விழுப்புரத்தில் ஒரு பெரும் பணக்காரருடைய ஒரே பெண்ணை மணந்துகொண்டு விழுப்புரத்துக்கே வந்துவிட்டவன்; சென்னையில் ஒரு பெரிய வியாபாரியாக இருக்கிறான்.

மெய்யன்புடைய நண்பர்கள் நெடுநாள் ஒருவரையொருவர் காணாதிருந்து திடீரென்று சந்தித்துக்கொண்டதனால் உண்டான மகிழ்ச்சியை விவரிக்கவும் முடியுமா? ஒருவருக்கொருவர் தங்கள் தற்கால நிலைமையைப்பற்றிச் சொல்லிக்

கொண்ட பின், இராமநாதன் சுந்தரமூர்த்தி போக வேண்டிய இடத்தைக் கேட்டு அவனைக் காரில் ஏற்றிக்கொண்டு அம்மணியம்மாள் வீட்டுக்கு ஓட்டினான். சுந்தரமூர்த்தி இறங்கிப் போய்ச் சாப்பாடுகளை வாங்கிக்கொண்டு வந்து காரில் ஏறிக் கொள்ளக் கார் ஆஸ்பத்திரிக்கு ஓட்டப்பட்டது. வழி நெடுகப் பல பேச்சுகளுக்கிடையில் சுந்தரமூர்த்தி, தன் தங்கை ஆஸ்பத்திரியில் படுத்திருப்பதை விவரித்துவிட்டுத் தினமும் மூன்று முறை வீட்டுக்குப் போய் உணவு கொண்டு வருவதிலுள்ள கஷ்டத்தையும், ஆஸ்பத்திரியிலேயே சமைத்துக் கொள்ள வசதியிருந்தும் சமைக்க ஆள் இல்லாத குறையையும் சொன்னான்.

உடனே இராமநாதன், "என்னிடம் இரண்டு சமையற்காரர்கள் இருக்கிறார்கள், ஒருத்தனை அனுப்புகிறேன்" என்றான்.

சுந்தரமூர்த்தி பெருமகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொண்டான். இராமநாதன் அடிக்கடி சுந்தரமூர்த்தியின் வீட்டுக்கு வந்து கொண்டிருந்தவன்; அதனால் தாமரைக்கண்ணியை நன்றாக அறிந்தவன்.

கார் ஆஸ்பத்திரிக்கு வந்து நின்றது. இருவரும் இறங்கித் தாமரைக்கண்ணி படுத்திருந்த அறைக்குப் போனார்கள்.

தாமரைக்கண்ணி இராமநாதனைப் பார்த்தவுடனே அடையாளம் கண்டுகொண்டு சிரமத்துடன் ஒரு புன்முறுவலை வருவித்துக்கொண்டு கைகூப்பி வரவேற்றாள். தாமரைக் கண்ணியின் நோயைப்பற்றி வருத்தம் தெரிவித்துவிட்டுப் பழைய நிகழ்ச்சிகளைப்பற்றிச் சிறிது நேரம் பேசிக்கொண்டிருந்துவிட்டு இராமநாதன் விடை பெற்றுக்கொள்ளும்போது தாமரைக்கண்ணியிடம், "உங்களுக்குப் பூரண செளக்கியம் அருளும்படி ஆண்டவனை வேண்டிக்கொள்ளுகிறேன்' என்று சொல்லிவிட்டுச் சுந்தரமூர்த்தியைப் பார்த்து, "சுந்தரம்! உங்களுக்கு எந்தச் சமயத்தில் என்ன உதவி வேணுமானாலும் கூசாமல் எனக்குப் 'போன்' செய்யுங்கள். என்னிடம் மூன்று



கார்கள் இருக்கின்றன. எப்போது வேணுமானாலும் ஒன்றை உங்கள் உபயோகத்துக்கு அனுப்புகிறேன். இன்று சாயந்திரமே என்னுடைய சமையற்காரனை இங்கே அனுப்புகிறேன்" என்று சொல்லித் தன் சட்டைப் பையிலிருந்து அவன் விலாசமும் போன் நம்பரும் அச்சடித்த ஒரு கார்டைக் கொடுத்துவிட்டு, "மறுபடியும் நாளைக்கு வருகிறேன்" என்று விடைபெற்றுக் கொண்டான்.

எதிர்பாராமல் இராமநாதனைச் சந்திக்க நேர்ந்ததைத் தெய்வமே தனக்குத் துணை வந்ததுபோல் சுந்தரமூர்த்தி மகிழ்ச்சியடைந்தான். இராமநாதன் எத்தகைய உதவியும் செய்யக்கூடிய உண்மையான நண்பன். அவன் இப்போது பெரும் பணக்காரனாக இருந்தாலும் பணக்காரக் குடும்பத்தில் பிறந்தவனன்று; பள்ளித் தோழனாக இருந்தபோதே தன் சக்திக்கு மீறிய உதவிகளைச் சுந்தரமூர்த்திக்குச் செய்தவன்.

அன்று மாலையிலேயே ஒரு மோட்டார் காரில் சமையற்காரனையும், சமையலுக்கு வேண்டிய பாத்திரங்களையும், உடனே சமைக்க அரிசி, பருப்பு, புளி முதலியவற்றையும் இராமநாதன் அனுப்பியிருந்தான்; அத்துடன் அந்தக் காரையும் சுந்தரமூர்த்தியின் உபயோகத்துக்கு வைத்துக்கொள்ளும்படிச் சொல்லியனுப்பியிருந்தான்.

அன்று முதல் ஆஸ்பத்திரியிலேயே தாமரைக்கண்ணிக்கு வேண்டிய பத்திய உணவும் சமைத்துக்கொள்ளப்பட்டது. அந்தக் காரிலேயே சுந்தரமூர்த்தி வீட்டுக்குப் போய் அம்மணியம்மாளிடம் அந்த ஏற்பாட்டைச் சொன்னான். அதைக் கேட்டு அந்த அம்மாள் ஆனந்தமடைந்தாள். சுந்தரமூர்த்தி திரும்பி ஆஸ்பத்திரிக்கு வரும்போது அந்தக் காரில் தாமரைக் கண்ணியைப் பார்க்க அம்மணியம்மாள் குழந்தை ஜானகியுடன் புறப்பட்டாள். அதையறிந்து முருகேசனும் புறப்படச் சுந்தரியும் சேர்ந்துகொண்டாள். இப்படி அடிக்கடி அவரகள் ஆஸ்பத்திரிக்கு வந்து போக இராமநாதனுடைய கார் மிக்க உதவியாக இருந்தது.

டாக்டர் எழுதிக் கொடுத்தபடி தாமரைக்கண்ணிக்கு மருந்தும் டானிக்கும் ஆகாரமும் காலம் தவறாமல் சந்திரா கொடுத்து வந்தாள். பத்து நாட்களுக்குப்பின் டாக்டர் தாமரையின் உடல்நிலையைப் பரிசோதித்தார்; இருதயத் துடிப்பும் சுவாசவேகமும் சிறிது சீரடைந்திருப்பதாகச் சொல்லி நம்பிக்கை தெரிவித்தார்.

மேலும் பத்து நாட்கள் சென்று மீண்டும் டாக்டர் பரிசோதித்தபோது தாமரைக்கண்ணி ஆபரேஷனுக்குத் தகுதி பெற்றுவிட்டதாகச் சொல்லி ஆபரேஷன் செய்ய நாளும் குறிப்பிட்டார்.

தாமரைக்கண்ணி ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்ட இருபத்தியேழாம் நாள் காலை பத்து மணிக்குமுன் ஆபரேஷன் முடிந்துவிட்டது. குளோரபாம் கொடுத்த மயக்க நிலையில் அவளை ஆபரேஷன் அறையிலிருந்து அவள் படுத்திருந்த அறைக்குக் கொண்டு வந்து படுக்கையில் கிடத்தினார்கள். அப்போது அவள் உயிரற்ற உடல்போல் கிடந்ததைக் கண்டு அம்மணியம்மாளும் மற்றவர்களும் அலறித் துடித்து விட்டார்கள். அதைக் கண்டு சிறுமி ஜானகி வீறிட்டு அழத் தொடங்கிவிட்டாள்.

சிறிது நேரத்தில் அங்கு வந்த டாக்டர் மோகன்ராவ் தாமரைக்கண்ணியின் நாடித்துடிப்பை ஆராய்ந்துவிட்டுக் கண் கலங்கி நின்ற அம்மணியம்மாளைப் பார்த்து, "நீங்கள் கொஞ்சங்கூடப் பயப்படவேண்டாம். ஆபரேஷன் வெற்றிகரமாக நடந்திருக்கிறது. இந்த நோயாளியின் துன்பங்களுக்கெல்லாம் காரணமாக இருந்தது அந்தக் கட்டிதான். அதை முற்றிலும் அகற்றிவிட்டதால் வயிற்றிலிருந்தவலியும் அதனுடன் சம்பந்தப் பட்ட மற்ற துன்பங்களும் நீங்கி உடம்பு நலமும் பலமும் அடையும். ஆனால், கொஞ்ச காலத்துக்கு ஜாக்கிரதையாகக் கவனித்துக்கொள்ள வேண்டும். குளோரபாம் மயக்கம் நீங்க நேரமாகும். அதைக் கண்டு பயந்து விட வேண்டாம்'' என்று சொல்லிவிட்டு அங்கிருந்த எல்லாரையும் தம்முடன் கூட்டிக் கொண்டு போய்த் தாமரைக்கண்ணியின் குடலில் இருந்து



அறுத்து எடுக்கப்பட்டு ஒரு பீங்கான் தட்டத்தில் வைக்கப் பட்டிருந்த அந்தக் கட்டியைக் காட்டினார்.

செக்கச் சிவந்து இரத்தக் கோளத்தைப் போலிருந்த அதைப் பார்த்து எல்லாரும் அவ்வளவு மெலிந்து போயிருக்கும் அவளுடைய குடலில் இவ்வளவு பெரிய கட்டியா என்று வியந்து, பிரமை பிடித்து நின்றனர். அதை அகற்றிவிட்ட டாக்டரைத் தன் மருமகளைக் காப்பாற்ற வந்த தெய்வம் என்று சொல்லி வணங்கினாள் அம்மணியம்மாள்.

ஆபரேஷன் செய்த புண் ஆறி நாளுக்குநாள் தாமரைக் கண்ணி நலமடைந்தாள். மருந்துகளைக் கொடுப்பதிலும் ஆகார நியதியிலும் வெகு திறமையுடன் சந்திரா பணி புரிவதைக் கண்டு டாக்டரும் நர்ஸுகளும் அவளைப் பாராட்டினார்கள்.

இந்தச் சமயத்தில் முருகேசனுடைய வயல்களில் அறுவடைக் காலம் வந்துவிட்டது. வழக்கமாக அறுவடையைக் கவனிப்பது சுந்தரமூர்த்திதான். ஆனால் சுந்தரமூர்த்தி, தாமரைக் கண்ணியை ஆஸ்பத்திரியில் சேர்க்கு முன்பே அவளுக்கு உடல் நலம் கிடைத்துவிட்டால் தானும் மனைவியும் மகனும் வேறு எங்கேயாவது ஒரு வேலை தேடிக்கொண்டு சென்னையை விட்டுப் போய்விட வேண்டுமென்று தீர்மானித்திருந்தான்; அதனால் இனி வயல்களைப்பற்றிய பொறுப்பையெல்லாம் முருகேசனும் சுந்தரியுமே கவனித்துக்கொள்ள விட்டுவிட வேண்டுமென்று தீர்மானித்திருந்தான். அவன் ஒரு நாள் முருகேசனை வற்புறுத்தி வயல்களுக்குக் கூட்டிக்கொண்டு போனதும் அந்த நோக்கத்துடன்தான். அதனால் இப்போது அறுவடையைப்பற்றி அவன் கவலைப்படவில்லை.

ஆனால், சுந்தரமூர்த்தி வயல்களின் வருமானத்தில் கொள்ளையடிப்பவன் என்று சுந்தரி சொன்னதைச் சுந்தர மூர்த்தியே கேட்டுக்கொண்டிருந்து அதனால் அவனுடைய மனம் மாறிவிட்டிருப்பதைக் கனவிலும் அறியாத முருகேசனும் அம்மணியம்மாளும் அறுவடையையும் விற்பனையையும்

வழக்கம்போல் சுந்தரமூர்த்தியே கவனிப்பான் என்றுதான் எதிர்ப்பார்த்தார்கள்.

அறுவடையைப்பற்றி அவசரப்படுத்த வயல்களின் உழவர்கள் அடிக்கடி அம்மணியம்மாளிடம் வந்து போனார்கள். அதனால் ஒருநாள் அந்த அம்மாள் முருகேசனை ஆஸ்பத்திரிக்கு அனுப்பிச் சுந்தரமூர்த்திக்கு அறுவடையைப்பற்றி நினைப்பூட்டச் செய்தாள்.

முருகேசன் வந்து சுந்தரமூர்த்தியிடம் சொன்னபோது சுந்தரமூர்த்தி, "என்ன அத்தான், அறுவடைக் காலங்களில் நீங்களும் என்னோடு வயல்களுக்கு வந்து கவனித்திருக்கிறீர்களே! இந்தத் தடவை நீங்களே அதைக் கவனிக்கக்கூடாதா? அறுவடையையும் விற்பனையையும் நீங்களே கவனித்துக் கொள்ளப் பழகிக்கொள்ள வேண்டாமா?'' என்றான்.

சுந்தரமூர்த்தி இப்படிச் சொல்லுவான் என்பதை எதிர்பாராத முருகேசன் "பழகிக்கொள்ள வேண்டியதுதான். ஆனாலும்....'' என்று நிறுத்தி மேற்கொண்டு என்ன சொல்வதென்று யோசிப்பவன்போல் மௌனமானான்.

"இதிலென்ன யோசனை? இந்தச் சமயத்தில் நான் ஆஸ்பத்திரியில் இருக்க வேண்டியிருப்பதை முன்னிட்டு நீங்களே போய் அறுவடையை ஆரம்பித்தால் பழக்கம் ஆகிவிடும். பிறகு யாரையும் எதிர்பார்க்காமல் நீங்களே வயல்களைக் கவனித்துக் கொள்ளக்கூடிய அனுபவம் வந்துவிடும். தயங்க வேண்டாம்; நாளைக்கே போய் அறுவடையை ஆரம்பியுங்கள்'' என்றான் அவன்.

தாமரைக்கண்ணியைக் கவனித்துக்கொள்ள ஆஸ்பத்திரியிலேயே இருக்க வேண்டிய அவசியத்தைக் கருதித்தான் சுந்தரமூர்த்தி அப்படிச் சொல்லுவதாக எண்ணி, முருகேசன் அதை ஒத்துக்கொண்டவன்போல் போய்விட்டான்.

தாயாரிடம் சுந்தரமூர்த்தி சொன்னதைத் தெரிவித்தான். அந்த அம்மாளும் தாமரைக்கண்ணியைக் கவனித்துக்கொள்ள



வேண்டிய அவசியத்தைக் கருதித்தான் சுந்தரமூர்த்தி அப்படிச் சொல்லியிருக்கிறான் என்று எண்ணினாள். ஆனாலும், முருகேசன் அறுவடையைச் சரியாகக் கவனித்து விடுவான் என்ற நம்பிக்கை அவளுக்கு உண்டாகவில்லை. ஒருக்கால் அறுவடையைக் கவனித்துக்கொள்ள முடிந்தாலும் கண்டு முதலைக் கட்டிக்காத்து நல்ல விலைக்கு விற்றுப் பணமாக்க முருகேசனால் முடியவே முடியாது என்பது அம்மணியம்மாளுக்குத் தெரியும்.

தாமரைக்கண்ணியை ஆஸ்பத்திரியில் சேர்த்தபின் இது வரை சில்லறைச் செலவுகளே ரூபாய் முந்நூறுக்குப் பக்கமாகி விட்டது. இன்னும் எத்தனை நாட்கள் அவள் ஆஸ்பத்திரியில் இருக்க வேணுமோ! அத்தனை நாட்களுக்கும் அவள் படுத்திருக்கும் அறைக்கு வாடகை தர வேணும். ஆபரேஷன் செய்வதற்கும் அதை ஒட்டிய செலவுகளுக்கும் எவ்வளவு தர வேண்டியிருக்குமோ! இந்த வருஷம் விளைச்சலிலிருந்து மிச்சம் ஒன்றும இருக்காது. வீட்டுச் செலவுக்கே பற்றாக்குறை ஏற்படலாம் என்று சுந்தரமூர்த்தியே சொல்லியிருக்கிறான். அப்படியிருக்க, அனுபவமில்லாத முருகேசன் அறுவடை செய்து அவனே விற்பதென்றால் வீட்டுச் செலவுக்கும் மிஞ்சாமற்போய் விடலாம்-என்றெல்லாம் எண்ணிப் பார்த்து அம்மணியம்மாள், தானே சுந்தரமூர்த்தியைக் கண்டு பேச ஆஸ்பத்திரிக்கு வந்தாள்.

முருகேசன் வந்து போனவுடனே அம்மணியம்மாள் வந்திருப்பதைக் கண்ட சுந்தரமூர்த்தி அத்தை வந்திருக்கும் காரணத்தை அனுமானித்துக்கொண்டே அந்த அம்மாளை வரவேற்றான். அம்மணியம்மாள், உடனே வந்த காரியத்தைச் சொல்லாமல் தாமரைக்கண்ணியின் அருகிற்சென்று அவள் நலத்தை விசாரித்தாள். பலவீனம் தவிர வேறு துன்பமில்லையென்று தாமரை தன் நிலைமையைச் சொன்னாள்.

அம்மணியம்மாள் சுந்தரமூர்த்தியைப் பார்த்து, "இன்னும் எத்தனை நாள் தாமரை ஆஸ்பத்திரியில் இருக்க வேணும் என்று டாக்டர் சொல்லுகிறார்?'' என்றாள்.

"அதைப்பற்றி டாக்டர் ஒன்றும் சொல்லவில்லை. ஆபரேஷன் புண் அநேகமாக ஆறிவிட்டது; உடம்புக்குக் கொஞ்சம் பலம் வருகிறவரை இங்குதான் இருக்க வேண்டியிருக்கும்" என்றான் மூர்த்தி.

"பலவீனம் தவிர மற்றபடி பயப்பட வேண்டியது ஒன்றுமில்லையே?" என்றாள் அத்தை.

"துளிகூடப் பயப்பட வேண்டியதில்லை."

"போகட்டுமப்பா, உன் புண்ணியத்தில் தாமரை தப்பிப் பிழைத்தாள். அது போதும். அவளைத் திருப்பி வீட்டுக்குக் கொண்டு போகச் சொன்ன டாக்டர், உன்னுடைய கெஞ்சலுக்கு மனமிரங்கித்தான் இங்கேயே இருக்கச் செய்து கவனித்தார். அதனால்தான் இவ்வளவு நன்மை உண்டானது. எல்லாம் உன்னுடைய புண்ணியம்தான். புண்ணியத்தோடு புண்ணியமாக நீயே வயல்களின் அறுவடையை நடத்தி, தானியத்தை விற்றுக் கொடுத்தால் ஆஸ்பத்திரி செலவுகளுக்காவது கஷ்டமில்லாமல் இருக்கும்" என்றாள் அத்தை.

அதைக் கேட்ட சுந்தரமூர்த்தி தவிர்க்க முடியாத தர்ம சங்கடத்தில் சிக்கிக்கொண்டதை உணர்ந்து மறுத்துச் சொல்ல முடியாமல் மலைத்துவிட்டான்.

அம்மணியம்மாள் சொன்னது, தந்திரமாகப் பேச வேண்டுமென்று தயார் செய்துகொண்டு வந்த பேச்சல்ல. மனமாரச் சுந்தரமூர்த்தியின் முயற்சியாலும் திறமையாலுந்தான் தாமரைக்கண்ணி தப்பிப் பிழைத்தாள் என்ற மகிழ்ச்சியில் பாராட்டியதுதான். உண்மையில் அம்மணியம்மாளுக்குத் தந்திரமாகப் பேசத் தெரியாது. அத்தையம்மாள் தன்னிடத்திலும் தன் தங்கையிடத்திலும் தன் மனைவி சந்திராவிடத்திலும் வைத்துள்ள அபார அன்பையும் நம்பிக்கையையும் கருதி அந்த அம்மாளுக்குத் தான் எவ்வளவு கடமைப்பட்டிருக்கிறதை உணர்ந்து தன் எண்ணத்தை மாற்றிக்கொண்டான் சுந்தரமூர்த்தி.



"அத்தை! தாமரையைக் கவனித்துக்கொள்ள நான் ஆஸ்பத்திரியிலேயே இருப்பது நல்லது என்று எண்ணி அறுவடையை முருகேச அத்தானே கவனிக்க வேணும் என்று சொல்லியனுப்பினேன். இப்போது உங்கள் விருப்பத்தின்படி நானே அறுவடையை நடத்தி மாசூலைக் கூடுமான நல்ல விலைக்கு விற்றுத் தருகிறேன். கவலைப்பட வேண்டாம்" என்றான்.

அதன்படியே அடுத்த நாள் முதல் தினந்தினம் காலை எட்டு மணிக்குள் தாமரைக்கண்ணிக்குச் செய்ய வேண்டிய காரியம் இருந்தால் செய்துவிட்டு, இராமநாதன் உதவிய காரிலேயே வயல்களுக்குப் போய் அறுவடை வேலையைக் கவனித்துவிட்டு மாலை ஆறுமணிக்குள் ஆஸ்பத்திரிக்குத் திரும்பிவிடுவான், சுந்தரமூர்த்தி; இப்படியாகப் பத்து நாட்களில் அறுவடையை முடித்துவிட்டான். அந்த வருஷம் சுற்று வட்டாரத்தில் எங்குமே மழையில்லாததால் நெல்லுக்கு நல்ல கிராக்கியிருந்தது. தன் வசம் மோட்டார் இருந்ததால் விரைவில் பல இடங்களுக்குப் போய் முன்னே பழக்கமான தரகர்களின் உதவியால் மாசூலான குறைந்த நெல்லையும் உயர்ந்த விலைக்கு விற்றுப் பணமாக்கினான். வீட்டுச் சாப்பாட்டுக்கு வேண்டிய நெல்லை நீக்கிவிட்டு, மிச்சத்தை விற்றதில் எல்லாச் செலவுகளும் போக ஆயிரத்து எண்ணூற்று ஐம்பது ரூபாய் கிடைத்தது. வீட்டுக்கு நெல்லைத் தவிர மற்றச் செலவுகளுக்குச் சராசரி மாதம் ஒன்றுக்கு நூற்றைம்பது ரூபாய் போதும். அதனால் முன்னே அஞ்சினதுபோல் வீட்டுக்குப் பற்றாக் குறை ஏற்படவில்லை. சுந்தரியின் ஆடம்பரத்துக்கும் உல்லாசச் செலவுகளுக்கும்தான் பற்றாக்குறை இருக்கும். அத்துடன் கடனுக்கு வட்டி கட்ட முடியாது. ஆஸ்பத்திரிச் செலவுகளோடு வீட்டுச் செலவுக்கும் கஷ்டப்பட வேண்டியிருக்கும் என்று கவலைப்பட்டுக்கொண்டிருந்த அம்மணியம்மாளின் கவலை நீங்கிச் சுந்தரமூர்த்தியைப் புகழ்ந்து, "அட என் சாமி! நீ வராமல் முருகேசன் அறுவடை நடத்தியிருந்தால் இந்தப் பணம் கிடைத்திருக்குமா? அவன் சந்தோஷ

மாக இருப்பதே உன் புண்ணியத்தால்தான். நீ இல்லாவிட்டால் எனக்கு இவ்வளவு நிம்மதி இருக்குமா ? உன் பெண் சாதி சந்திரா இல்லாதிருந்தால் தாமரைக்கண்ணி என்ன வாயிருப்பாளோ ! நான் கவலையற்று இருக்க முடிந்ததும் முருகேசன் சந்தோஷமாக இருப்பதும் தாமரைக்கண்ணி பிழைப்பாளா என்றிருந்த கவலை நீங்கி அவளுடைய நெடுநாளையத் துன்பங்கள் நீங்கிச் சுகமடைந்து வருவதும் நீயும் சந்திராவும் ஓயாது சலிப்பில்லாமல் செய்து வரும் சேவைகளால்தான். உங்களுக்கு எவ்வளவு நன்றி செலுத்தினாலும் போதாது" என்றாள்.

## அத்தியாயம் 16

சுந்தரி முருகேசனுக்கு இளைய தாரமாக வந்த இரண்டாவது மாதத்திலேயே சுந்தரமூர்த்தியின் மனைவி சந்திராவுடன் மனத்தாபங்கொண்டுவிட்டாள் ; அது முதற்கொண்டு சந்திராவையும் அவளுடைய மகன் நெல்லையப்பனையும் துச்சமாக மதிக்கலானாள் ; கடைசியாக நெல்லையப்பனை 'சனியன்' என்றும், 'பீடை' என்றும் திட்டி வெளியே போகச் சொன்னதுமல்லாமல் அவனைத் தன் வீட்டுச் சமையற்காரியின் மகன் என்றும் சந்திராவை இகழ்ந்து பேசிவிட்டாள்.

அதையெல்லாம் அறிந்தும் பொறுத்துக்கொள்ளும்படிச் சுந்தரமூர்த்தி தன் மனைவியைச் சமாதானப்படுத்தினான்.

அப்படிப்பட்ட அவனையும் வயல்களின் வருமானத்தில் கொள்ளையடிப்பவன் என்று கூசாமல் சொல்லிவிட்டாள், சுந்தரி ; அப்படிச் சொல்லுவது அநியாயம் என்று அவள் கணவன் முருகேசன் மறுப்புச் சொன்ன பின்னும், 'சும்மா ஆடுமா சோழியன் குடுமி' என்றும், 'ஆதாயம் இல்லாமல் செட்டி ஆற்றோடு போவானா?' என்றும் சொன்னாள்.

அதைக் கேட்டுக்கொண்டிருந்த சுந்தரமூர்த்திக்கு அப்போதே அந்த வீட்டைவிட்டுப் போய்விட வேண்டுமென்ற



எண்ணம் உதித்தது. ஆனால், தங்கை தாமரைக்கண்ணியின் நிலைமையைக் கருதி அவளுக்கு வைத்தியம் நடக்கிற வரைக்கும் பொறுத்திருக்கத் தீர்மானித்தான்.

இப்போது அவளுக்கு அறுவைச் சிகிச்சை வெற்றிகரமாக நடந்து குணமடைந்து வருகிறாள். இன்னும் சில நாள்களில் அவள் பூரண உடல் நலம் பெற்று ஆஸ்பத்திரியிலிருந்து வெளியேற வேண்டும். தாமரைக்கண்ணி ஆஸ்பத்திரியிலிருந்து 'டிஸ்சார்ஜ்' ஆனபின் என்ன செய்வது ? சுந்தரமூர்த்திக்கு மறுபடியும் அத்தை வீட்டில் சுந்தரியின் ஆதிக்கத்தின்கீழ் வசிக்கவோ வயல்களைக் கவனித்துக்கொள்ளும் வேலை பார்க்கவோ இஷ்டமில்லை. அவனைவிட அவனுடைய மனைவி சந்திராவுக்கு மீண்டும் சுந்தரிக்குச் சமையற்காரியாக அந்த வீட்டில் வசிக்கத் துளிகூடப் பிரியமிருக்காது என்பதை அவன் அறிவான்.

அப்படியானால் தாமரைக்கண்ணி 'டிஸ்சார்ஜ்' ஆனபின் அவளை மட்டும் அந்த வீட்டுக்குத் தனியாக அனுப்பி விட்டுத் தானும் தன் மனைவியும் மகனும் ஆஸ்பத்திரியிலிருந்தபடியே எங்காவது போய்விட முடியுமா? தாமரைக்கண்ணியைக் கொண்டு போய் வீட்டில் சேர்க்கவாவது அவளுடன் அங்குப் போக வேண்டியதுதான் முறை. அப்படிப் போனால் அவளை வீட்டில் சேர்த்தவுடனே அவளிடமும் அத்தையிடமுமாவது சொல்லாமல் தானும் மனைவியும் மகனும் எப்படி எங்கே போவது ?

அப்படியே தாமரையை வீட்டில் சேர்த்தவுடனே தானும் மனைவியும் மகனும்அந்த வீட்டைவிட்டுப் போய்விட ஒரு யுக்தி செய்தாலும் செய்யலாம். அப்படிச் செய்தால், அப்போதுதான் ஆஸ்பத்திரியிலிருந்து பலவீனத்தோடு வந்திருக்கும் தாமரையின் உடம்பு தேறும் வரையில் அவளைக் கவனித்துக்கொள்ளச் சந்திரா அங்கிருக்க மாட்டாளே! சந்திரா இல்லாவிட்டால் அந்த வீட்டில் சமையல் வேலையை அம்மணியம்மாள்தான் செய்ய நேரும். அப்படியானால், அம்மணியம்மாள் தாமரையையும் கவனித்துக்கொள்ள மிகவும் சிரமப்பட வேண்டியிருக்கும்.

ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெறும் காலத்தில் நோயாளியை எவ்வளவு கருத்தாகக் கவனித்துக்கொள்ள வேண்டுமோ அவ்வளவு கருத்தோடு சிகிச்சை பெற்ற நோயாளியின் உடலில் இரத்தம் ஊறி உறுப்புகள் பலம் பெறுகிற வரையில் கவனித்துக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் விபரீதங்கள் விளைந்துவிட நேரும். அப்படித் தாமரைக்கண்ணியைக் கண்ணுங்கருத்துமாகக் கவனித்துக்கொள்ளச் சந்திராவைத் தவிர வேறு யாராலும் முடியாது. அப்படியிருக்கத் தாமரைக் கண்ணியை இந்த நிலைமையில் விட்டுவிட்டு எப்படிப் போவது?

அதனால் தானும் மனைவியும் மகனும் எங்கே போவதாக இருந்தாலும் தாமரைக்கண்ணியையும் கூட்டிக்கொண்டுதான் போக வேண்டும் என்று சுந்தரமூர்த்தி தீர்மானித்தான். ஆனால் அந்தத் தீர்மானத்தை எப்படி நிறைவேற்றுவது?

முதலில் எங்கே போவது என்பது தீர்மானமாக வேண்டும். அங்கே போய்விட்டாலும் தாமரைக்கண்ணிக்குத் தேவையான வசதிகளைச் செய்யவும், மருந்து, டானிக் முதலியவற்றை வாங்கவும் மற்றச் செலவுகளுக்கும் கையில் பணம் வேண்டும். ஒருக்கால் அத்தையிடம் கேட்டு இப்போதைக்குத் தேவையான பணம் வாங்கிக்கொள்ள முடியுமானாலும் அந்தப் பணம் தீர்ந்தபின் சம்பாதித்துக்கொள்ள வழி வேண்டும்.

அன்றியும், தாமரைக்கண்ணியை ஆஸ்பத்திரியில் இருந்தபடியே வேறு எங்காவது கூட்டிக்கொண்டு போக முடியுமானாலும் அதை முருகேசனிடமும் சொல்லாவிட்டாலும் தன்னிடத்திலும் சந்திராவிடத்திலும் மட்டற்ற நம்பிக்கையும் மதிப்பும் வைத்திருக்கிற அத்தையிடம் சொல்லாமல் செய்வது நம்பிக்கைத் துரோகமாகுமே! சொன்னாலும் தாமரைக் கண்ணியின்மேல் அபாரமான பாசமுள்ளவராக அவளுடைய வைத்தியத்துக்காக ஏராளச் செலவுகள் செய்து வரும் அந்த அத்தை நோய் நீங்கிய மூத்த மருமகளை உடனே பிரிந்திருக்கச் சம்மதிப்பார்களா?



இப்படிப் பலவிதமான எண்ணங்களால் மனங்குழம்பிக் கவலைப்பட்டுக்கொண்டிருந்தான் சுந்தரமூர்த்தி.

சுந்தரமூர்த்தியின் மனம் சுந்தரியினால் புண்படுத்தப்பட்டதும் அவன் இப்படியெல்லாம் எண்ணிக்கொண்டிருப்பதும் அவனுடைய மனைவி சந்திராவுக்குத் தெரியாது. சுந்தரி, சுந்தரமூர்த்தியை இகழ்ந்து பேசினதைப்பற்றி அவன் மனைவியிடம் சொல்லவில்லை. ஏனென்றால் அவனுக்கு முன்னாலேயே அவள் சுந்தரியால் பல முறை அவமதிக்கப்பட்டு மனம் நொந்திருப்பவள். இதையும் அறிந்தால் மேலும் மனமுடைந்து உடனே அந்த வீட்டைவிட்டுப் போய்விடத் துடிப்பாள். அவள் வெகு ரோஷக்காரி என்பது அவனுக்குத் தெரியும்.

சுந்தரமூர்த்தி அவனுடைய மனதிலிருப்பதை வெளிப்படையாகச் சொல்லவில்லையென்றாலும், சந்திரா தன்னையும் மகனையும சுந்தரி இகழ்ந்து பேசினதை அவனிடம் சொல்லி அழுதுகொண்டே, 'அத்தான், எனக்கு இங்கே இருக்கவே பிடிக்கவில்லை' என்று சொன்னாள். அதைத் தொடர்ந்து பேசிய போது 'தாமரைக்கண்ணிக்கு வைத்தியம் நடக்கிறவரை பொறுத்துக்கொள். அதற்கப்புறம் நமக்கு வழி பிறக்கும்' என்று சூசகமாகச் சொன்னான் சுந்தரமூர்த்தி.

அதை மனதில் வைத்துக்கொண்டு சந்திரா ஒரு நாள் தன் கணவன் சுந்தரமூர்த்தியிடம், "அத்தான், தாமரைக்கண்ணிக்கு வைத்தியம் நடக்கிறவரை பொறுத்துக்கொள். அதற்கப்புறம் நமக்கு வழி பிறக்கும் என்று சொன்னீர்களே" என்றாள் இரகசியமாக.

"ஆமாம்; அதற்கென்ன?"

"தாமரைக்குத்தான் ஆபரேஷன் முடிந்து பகவான் அருளால் சுகமடைந்து வருகிறாள். இன்னும் சில நாளில் ஆஸ்பத்திரியிலிருந்து போய்விட முடியும். அதற்கப்புறம் மறுபடியும் நாம் அந்த வீட்டில் சுந்தரியுடன் இருக்கச் சரிப்படாது."

"அதற்கு என்ன செய்யச் சொல்லுகிறாய்?"

"நாம் இந்த ஊரைவிட்டே போய்விடுவது நல்லது."

"எங்கே போவது?"

"ஏன்? மதுரைக்கு எங்கம்மா வீட்டுக்கே போய்விடலாம்."

"தாமரைக்கண்ணி இவ்வளவு பலவீனமாக இருக்கும் போது அவளை விட்டுவிட்டுப் போக உனக்கு மனம் வந்து விட்டதா?"

"ஐயோ! அத்தான்! அவளை விட்டுவிட்டுப் போக வேணுமென்றா நான் சொன்னேன். அவளையும் கூட்டிக் கொண்டு போக எண்ணித்தான் நான் சொன்னது" என்றாள் சந்திரா.

"அவளையும் கூட்டிக்கொண்டு போனால் அவளுடைய உடம்பு தேறுவதற்கான மருந்துகள், டானிக் முதலியவற்றை வாங்கப் பணம் வேண்டுமே?"

"அதைத்தான் எங்கம்மாளிடம் வாங்கித் தருகிறேன் நீங்கள் கவலைப்பட வேண்டாம்" என்று குறுக்கிட்டாள் சந்திரா.

"சந்திரா! அவசரப்படாதே! மருந்து, டானிக் முதலானதும் வாங்க உங்களம்மா மனமாரப் பணம் தருவார்கள். ஆனால் அவர்கள் பணக்காரர்களல்ல. சிரமப்பட வேண்டியிருக்கும். அவர்கள்மீது நாம் பாரம் சுமத்தக் கூடாது. அதுமட்டும் அல்லாமல் நாமெல்லோரும் புறப்படுவதற்கே பிரயாணச் செலவுகளுக்குப் பணம் வேண்டும். நீயும் நானும் நெல்லையப்பனும் மட்டும் போய்விடுவதானாலும் உன்னிடத்திலும் என்னிடத்திலும் மிக்க நம்பிக்கையும் நன்மதிப்பும் கொண்டிருக்கிற அத்தை அம்மணியம்மாளிடம் சொல்லிக்கொள்ளாமல் போவது துரோகம். அப்படியிருக்கத் தாமரைக்கண்ணியையும் கூட்டிக்கொண்டு போவதானால் அந்த அம்மாளிடம் சொல்ல வேண்டாமா?"



"ஆமாம் அத்தான், அவர்களிடம் சொல்லத்தான் வேண்டும். நானும் அவர்களிடத்தில் சொல்லாமல் போய்விட வேண்டும் என்று சொல்லவில்லையே?" என்றாள் சந்திரா.

"எப்படிச் சொல்லுவது? அவர்களுக்கு எல்லாவிதத்திலும் வீட்டுக் காரியங்களைக் கவனித்துக்கொள்ள நீயும், வயல்களைக் கவனித்துக்கொள்ள நானுமாக—உதவி வருகிறோம். அப்படிப்பட்ட நீயும் நானும் அவர்களை விட்டுப் போய்விடப் போகிறோம் என்பதை எப்படிச் சொல்லுவது? அத்துடன் தாமரைக் கண்ணியையும் கூட்டிக்கொண்டு போகிறோம் என்றால் அவர்களுக்கு எப்படியிருக்கும்?"

"மெய்தான். அதற்காக என்ன செய்யப் போகிறீர்கள்? எப்படியாவது மறுபடியும் நான் அந்த வீட்டில் சுந்தரிக்குச் சமையற்காரி ஆகாதபடி வழி செய்யுங்கள்" என்றாள்.

"அலட்டிக்கொள்ளாதே, சந்திரா! நானும் அதைப்பற்றித் தான் எண்ணியெண்ணி வழி தேடிக்கொண்டிருக்கிறேன்" என்றான் சுந்தரமூர்த்தி.

இவர்கள், தாமரைக்கண்ணி படுத்திருக்கும் அறைக்கு வெளியிலுள்ள கூடத்தில் அமர்ந்து பேசிக்கொண்டிருந்த போது டாக்டர் தாமரைக்கண்ணியைப் பார்க்க வந்தார்.

பேச்சை நிறுத்திவிட்டுக் கணவனும் மனைவியும் டாக்டருக்கு வணக்கம் செலுத்தி அவருடன் அறைக்குள் போனார்கள். டாக்டர் தாமரைக்கண்ணியின் நாடியைப் பரிசோதித்துவிட்டு வயிற்றுக்கட்டை அவிழ்த்துத் தைக்கப்பட்ட இடங்களுக்குப் புதுமருந்து தடவிப் பிளாஸ்டர் போட்டுப் பஞ்சு வைத்து மீண்டும் கட்டுப் போட்டுவிட்டு, "எல்லாம் ரொம்பத் திருப்திகரமாக இருக்கிறது. தோல் கூடிப் புண்ணும் ஆறி வருகிறது. இன்னும் பத்து நாள்களில் வீட்டுக்குப் போகலாம்" என்றார்.

தாமரைக்கண்ணி புன்முறுவலோடு டாக்டரைக் கும்பிட்டாள்.

"பத்து நாள்களுக்கு மேலும் சில நாள்கள் இங்கே இருந்தால் தேவலை" என்றான் சுந்தரமூர்த்தி.

"ஓ! அதற்கென்ன? உங்கள் சௌகரியப்படி எத்தனை நாள் வேண்டுமானாலும் இருக்கலாம். அனாவசியமாக ஏன் நீங்கள் வாடகை கொடுத்துக்கொண்டிருக்க வேணும் என்பதற்காகச் சொன்னேன்" என்று டாக்டர் சிரித்துக்கொண்டே போய்விட்டார்.

பத்து நாள்களுக்கு மேலும் தாமரைக்கண்ணி ஆஸ்பத்திரியில் இருக்க வேண்டுமென்று சுந்தரமூர்த்தி விரும்பியதன் காரணம், ஆஸ்பத்திரியில் இருந்தபடியே தாமரைக்கண்ணியையும் கூட்டிக்கொண்டு போய்விட அத்தையிடம் ஏதாவது ஒரு சாக்கு சொல்லவும் போகும் இடத்தைத் தீர்மானித்துக் கொள்ளவும் அவகாசம் வேண்டுமென்பதுதான்.

இரண்டு நாள்கள் சென்ற பின் சுந்தரமூர்த்தியின் நண்பன் இராமநாதன் தாமரைக்கண்ணியின் நலத்தை விசாரிக்க ஆஸ்பத்திரிக்கு வந்தான். சுந்தரமூர்த்தி மிக்க மகிழ்ச்சியோடு அவனை வரவேற்றான். இருபது நாள்களுக்கு முன் முதன் முதல் ஆஸ்பத்திரிக்கு வந்து தாமரைக்கண்ணியைப் பார்த்து விட்டு மோட்டாரையும், சமையற்காரனையும் அனுப்பின இராமநாதன் அதற்குப்பின் இப்போதுதான் வந்தான். முதலில் தாமரைக்கண்ணியுடன் பேசி அவள் மிகவும் நலமடைந்திருப்பதில் மகிழ்ச்சி கூறிவிட்டு, "என்னுடைய வியாபார விஷயமாக ஓர் அவசரத் தந்தி வந்ததால் நான் மறுநாளே பம்பாய்க்குப் போக வேண்டியதாகிவிட்டது; அங்கே கவனிக்க வேண்டிய காரியங்களை முடித்துவிட்டு நேற்றுதான் இங்கு வந்தேன்; நான் உங்களைக் கவனிக்க மறந்துவிட்டதாக எண்ணிவிட வேண்டாம்" என்றான்.

"அப்படி உங்களைப்பற்றி எண்ணுவோமா?" என்று மெலிந்த குரலில் சொல்லிக் கைக்கூப்பினாள் தாமரைக் கண்ணி.

பிறகு நண்பர்கள் இருவரும் அறையைவிட்டு வெளியே போய் ஏகாந்தமாக அமர்ந்து பேசிக்கொண்டிருந்தார்கள்.

"காருக்குப் பெட்ரோல் எவ்வளவு வேண்டுமானாலும் என் கணக்கிலேயே போடும்படி டிரைவரிடம் சொல்லியிருந்தேன்.



அப்படிச் செய்தானா அல்லது உனக்குச் செலவு வைத்து விட்டானா?" என்று கேட்டான் இராமநாதன்.

"உன்னுடைய டிரைவர் உன் உத்தரவை மீறி நடந்து கொள்வானா? உன் கணக்கில்தான் பெட்ரோல் போடப்பட்டது. அப்படியில்லாமல் நானே பெட்ரோல் போட்டுக்கொள்ள வேண்டியிருந்திருந்தால் என்னால் சமாளித்திருக்க முடியாது. இந்த இருபது நாள்களாக உன் கார் ஒய்வில்லாமல் வீட்டுக்கும் ஆஸ்பத்திரிக்கும் மட்டுமல்லாமல் பத்து மைல் தூரத்திலுள்ள வயல்களுக்கும், ஆஸ்பத்திரிக்கும்கூட ஓடியிருக்கிறது. ஏராளமான பெட்ரோல் செலவாகியிருக்கிறது. அவ்வளவு செலவு செய்ய இப்போது எனக்கோ தாமரைக்கண்ணியின் மாமியாருக்கோ சக்தி கிடையாது" என்றான் சுந்தரமூர்த்தி.

"தாமரைக்கண்ணி வாழ்க்கைப்பட்டிருக்கிற இடம் அவ்வளவு ஏழ்மையுள்ளதா?" என்றான் இராமநாதன்.

"தாமரைக்கண்ணிக்குத் திருமணமானபோது அந்தக் குடும்பம் பணக்காரக் குடும்பந்தான். இப்போதும் அது ஏழைக் குடும்பம் அல்ல" என்று ஆரம்பித்து, தாமரைக்கண்ணிக்கு ஜானகி பிறந்ததிலிருந்து அவள் நோயாளியாக இருந்ததையும் தாமரைக்கண்ணியின் கணவன் இன்னொரு பெண்ணை மணந்துகொள்ள நேர்ந்ததையும் மற்றும் சொல்லத்தக்கன வற்றையும் மட்டும் சொல்லி இப்போதுள்ள நிலைமையையும் விளக்கினான்; சுந்தரியின் துடுக்குகளைப்பற்றியோ அவளுடன் தனக்கும் தன் மனைவிக்கும் உள்ள மனத்தாபத்தையோ சொல்லவில்லை.

முடிவாக, "என் தங்கை தாமரைக்கண்ணிக்குத் துணையாக அவளைப் புக்ககத்தில் கொண்டு வந்து விடுவதற்காக நானும் என் மனைவியும் எங்கள் குழந்தை நெல்லையப்பனுடன் இங்கு வந்தோம். என் மைத்துனன்—தாமரைக்கண்ணியின் கணவன்—முருகேசனுக்குச் சொந்தமான வயல்களின் விவசாயத்தை நான் மேற்கொண்டு நடத்தி வந்தேன். வீட்டு வேலைகளை என் மனைவி கவனித்து வந்தாள். தாமரைக்

கண்ணி பிரசவித்த நாள்முதல் நோயாளியாகப் படுத்திருந்த அவளை விட்டுப் போக நாங்கள் மனமில்லாமல் இங்கேயே இருக்க வேண்டியிருந்தது.

"இப்போது என் தங்கைக்கு ஆபரேஷன் நடந்து அவளும் நலமடைந்து வருவதால் இனிமேலும் சொந்தச் சம்பாதனை ஒன்றுமில்லாமல் அண்டிப் பிழைப்பவனாகவே இருந்து கொண்டிருக்கக் கூடாதென்று தீர்மானித்து ஒரு தொழில் நாடி வேறெங்காவது போக எண்ணியிருக்கிறேன்......"

உடனே இராமநாதன் குறுக்கிட்டு, "அப்படியா! தொழிலைத் தேடி எங்கும் போக வேண்டாம். என் தொழிலுக்கு உன்னைப் பேரன்ற உத்தம குணங்களுள்ள ஒரு துணைவன் வேண்டியிருக்கிறது. நான் செய்துவரும் வியாபாரம் மிக நல்ல இலாபம் தரக்கூடியது. அதை விரிவுபடுத்த எண்ணிப் பம்பாயிலும் கல்கத்தாவிலும் கிளைகள் ஆரம்பித்திருக்கிறேன்; திருச்சியிலும் கோயமுத்தூரிலும் கிளைகள் ஏற்படுத்த எண்ணியிருக்கிறேன்; ஆனால் நம்பத்தகுத்த பிரதிநிதிகள் கிடைக்காமல் தேடிக்கொண்டிருக்கிறேன். பம்பாயிலோ, கல்கத்தாவிலோ, திருச்சியிலோ அல்லது கோயமுத்தூரிலோ உனச்குப் பிரியமான ஊரில் நீ எனக்குப் பிரதிநிதியாக வேலை பார்க்கலாம். உனக்குத் தேவையான சம்பளம் எடுத்துக்கொள்ளலாம். அத்துடன் மற்ற ஊர்களிலுள்ள என் பிரதிநிதிகளுக்கு இல்லாத—உனககு மட்டும் பிரத்யேக சலுகையாக—வியாபாரத்தில் கிடைக்கும் நிகர லாபத்தில் ஒரு பங்கும் நீ எடுத்துக் கொள்ளலாம். அதற்கு மேலும் உனக்கு ஏதேனும் வேண்டியிருந்தால் கூசாமல் கொடுக்கிறேன். என்ன? சம்மதந்தானே?" என்று நிறுத்தினான்.

தேடாமல் நாடாமல் இருந்த இடத்திலேயே திடீரென்று வலிய வந்துவிட்ட இந்த மாபெரும் அதிருஷ்டத்தை எண்ணிக் கிளர்ந்த மகிழ்ச்சியின் மயக்கத்தால், சுந்தரமூர்த்தி உடனே பதில் சொல்ல முடியாமல் திணறிவிட்டான்.



உடனே சம்மதம் சொல்லாததைக் கண்ட இராமநாதன், "ஏன் தயங்குகிறாய்? உனக்கு வியாபாரத்தில் ஈடுபட விருப்பமில்லாவிட்டால் என் மாமனாரின் பூர்விக சொத்தாகி இப்போது எனக்குக்கிடைத்துள்ள நஞ்சை நிலம் சுமார் இருநூறு ஏக்கர்கள் விழுப்புரத்துக்கு அருகில் ஒரு கிராமத்தில் இருக்கின்றன. அவற்றை உன் பார்வையில் விட்டுவிடுகிறேன். அவற்றின் மாசூலில் உனக்குத் தேவையானதை நீ எடுத்துக்கொள்ளலாம்" என்றான்.

"இல்லையில்லை, இராமநாதா! எனக்குத் தயக்கமோ சந்தேகமோ ஒன்றுமில்லை. ஆஸ்பத்திரியை விட்டபின் எங்கே போவது, யாரிடத்தில் என்ன வேலை தேடுவது என்று எண்ணி யெண்ணி ஒரு வழியும் தென்படாமல் திண்டாடிக்கொண்டிருந்த எனக்குத் தெய்வமே தேடி வந்து வரம் கொடுத்ததுபோல் உன்னுடைய ஒப்பரிய அன்பையும் நீ சொன்ன திட்டத்தினால் எனக்கு உண்டாகக்கூடிய நன்மைகளையும் உணர்ந்ததனால் உண்டான களிப்பில் மெய்மறந்து, உனக்கு எந்த விதத்தில் நன்றி தெரிவிப்பது என்று தெரியாமல் திகைத்துப் போனேன். அவ்வளவுதான்; வேறொன்றுமில்லை. எனக்கு விவசாயத் தொழில்தான் வேண்டுமென்பதில்லை. நீ எந்த வேலையில் அமர்த்திக்கொண்டாலும் சரி, என்ன ஊதியம் கொடுத்தாலும் சரி, அதை நன்றியுடன் ஏற்றுக்கொள்ளுகிறேன்" என்றான் சுந்தரமூர்த்தி.

"அது போதும்; நீ எனக்கு நன்றி எதுவும் சொல்ல வேண்டாம். சரி, நீ எப்போது ஆஸ்பத்திரியை விட்டு உன் தங்கையை வீட்டுக்குக் கொண்டுபோய்விடப் போகிறாய்?" என்றான் இராமநாதன்.

"அது இன்னும் நிச்சயமாகவில்லை. இன்னும் பத்துப் பதினைந்து நாளாவது ஆகும். அத்துடன் என் தங்கையையும் என்னுடன், நீ எனக்கு வேலை கொடுக்கிற ஊருக்குக் கூட்டிக் கொண்டுபோகலாமென்று தீர்மானித்திருக்கிறேன். ஏனென்றால், அவளுடைய உடம்பு தேறுகிறவரைக்கும் என் மனைவிதான்

அவளைச் சரியாகக் கவனித்துக்கொள்ளக்கூடியவள். என் தங்கையையும் கூட்டிக்கொண்டு போக அத்தையிடம் சொல்லிச் சம்மதம் பெற வேண்டும். அந்தச் சம்மதம் எப்போது கிடைக்கும் என்று பார்க்க வேண்டும். அதுவரையிலும் ஆஸ்பத்திரியில்தான் இருக்க வேண்டும்'' என்றான் சுந்தர மூர்த்தி.

"சரி; அப்படியே செய். நான் இப்போதைக்கு வெளி யூருக்குப் போக வேண்டிய அவசியம் இல்லை. நான் அடிக்கடி வருகிறேன்'' என்று சொல்லிக்கொண்டே தன் சட்டைப் பையிலிருந்து மணிபர்சை எடுத்து, அதிலிருந்து ஐந்து நூறு ரூபாய் நோட்டுகளை எடுத்து, "இந்தா, இதைச் செலவுக்கு வைத்துக்கொள். மேலும் எவ்வளவு எப்போது வேண்டுமானா லும் கூசாமல் கேள்'' என்று நோட்டுகளை நீட்டினான்.

"இப்போதே எனக்குச் சம்பளமா?'' என்று சுந்தரமூர்த்தி அதை வாங்கிக்கொண்டான்.

"இது சம்பளமல்ல. உன்னுடைய சொந்த செலவுகளுக் கான வெறும் 'பாக்கெட் மனி' தான்'' என்று சிரித்துக்கொண்டே எழுந்து அறைக்குட்சென்று தாமரைக்கண்ணியிடம் சிறிது நேரம் பேசிவிட்டு விடைபெற்றுக்கொண்டான் இராமநாதன்.

இராமநாதன் பெரும் பணக்காரனாகியிருப்பதைச் சுந்தர மூர்த்தி அறிந்துகொண்டான் என்றாலும், அவனிடத்தில் வேலை கேட்க வேண்டுமென்றோ பணம் கேட்க வேண்டுமென்றோ சுந்தரமூர்த்தி எண்ணியிருக்கவில்லை. இராமநாதன் சமையற் காரனைச் சாமான்களுடன் அனுப்பியதும், ஒரு நல்ல மோட்டார் காரைச் சுந்தரமூர்த்தியின் உபயோகத்திற்கென்றே விட்டு வைத்ததும், எவ்வளவு பெட்ரோல் வேண்டுமானாலும் அவன் செலவிலேயே போட்டுக்கொள்ளச் சொன்னதுமே மிகப் பெரிய உதவிகளாக மதித்து நன்றி மிக்க மகிழ்ச்சி கொண்டிருந்தான் சுந்தரமூர்த்தி.

இப்போது, தான் ஒரு தொழிலைத் தேடி வேறு ஊருக்குப் போக நினைத்திருப்பதாகச் சொல்லி முடிக்குமுன் இராமநாதன்



மிக்க ஆதாயமுள்ள வேலை கொடுப்பதாகவும் வேறு எங்கும் வேலை தேடிப் போக வேண்டாம் என்றும், வற்புறுத்திக் கைச் செலவுக்கு என்று ஐந்நூறு ரூபாய் கொடுத்து மேலும் எவ்வளவு வேண்டுமானாலும் கூசாமல் கேட்கச் சொன்னதும் சுந்தர மூர்த்தியை மகிழ்ச்சிப் போதையில் மயங்கச் செய்துவிட்டதில் வியப்பில்லை. பாலியத்தில் எவ்வளவு நெருங்கிய நேசர்களாக இருந்திருந்தாலும் பிற்காலத்தில் செல்வச் சிறப்பில் உயர்ந்து விட்டால் அதே பாசமும் நேசமும் உள்ளவர்களாக இருப்பது மிகவும் அபூர்வம். அப்படிப்பட்ட அபூர்வ நண்பன் இராமநாதன்.

## அத்தியாயம் 17

மறுபடியும் சுந்தரியுடன் அதே வீட்டில் இருக்க மன மில்லாமல் வேறு ஊருக்குப் போய்விடத் தீர்மானித்தும் எங்கே போவதென்று தெரியாமல் திகைத்துக்கொண்டிருந்த சுந்தர மூர்த்திக்கு இடம் கிடைத்துவிட்டது. என்ன வேலை தேடுவது என்ற ஏக்கத்தை நீக்க வேலையும் கிடைத்துவிட்டது. தாமரைக் கண்ணிக்கு வேண்டிய வசதிகளைச் செய்து கொடுக்கப் பணம் வேண்டுமே என்ற பயமும் போய் விட்டது.

இனி, தானும் மனைவியும் மகனும் தங்கை தாமரைக் கண்ணியும் ஆஸ்பத்திரியில் இருந்தபடியே வேற்றூருக்குப் போய்விட அத்தை அம்மணியம்மாளுடைய அனுமதி பெற வேண்டியது ஒன்றுதான் பாக்கி.

முருகேசன் தன் மூத்த மனைவியாகிய தாமரைக்கண்ணி யிடத்தில் அன்பும் அவள் நோய் நீங்கிச் சுகமடைய வேண்டும் என்பதில் ஆர்வமுமுள்ளவன்தான் என்றாலும் தாமரைக்கண்ணி வீட்டில் இல்லையே என்று ஏக்கமடையக் காரணமில்லை. அவன் கவனம் முழுவதையும் கவரச் சுந்தரி இருக்கிறாள்.

சுந்தரியோ, சந்திராவையும் நெல்லையப்பனையும் வெறுப்பதுபோல் தாமரைக்கண்ணியை வெறுப்பவள் அல்ல

வென்றாலும் அவளுடைய நலத்தில் அக்கறை கொண்டவளல்ல. அவள் தாமரைக்கண்ணியின் நலத்தை நாடுவதுபோல் ஆஸ்பத்திரிக்கு வருவதும், 'அக்கா உடம்பு எப்படியிருக்கிறது?' என்று கேட்பதும் தன் கணவனையும் மாமியாரையும் திருப்தி செய்யத்தான். அதனால் அவளுக்குத் தாமரைக்கண்ணி எங்கே இருந்தாலும் கவலை இராது. அவள் வீட்டில் இல்லாதிருப்பதே சுந்தரிக்கு விரும்பத்தக்கதாக இருக்கும். ஏனென்றால், தன் கணவனுடைய அன்பைப் பகிர்ந்துகொள்ளச் சக்களத்தியில்லாமல் இருக்குமல்லவா? நோயாளியாகப் படுத்துக் கிடந்த மூத்தாளைப் பார்க்கவே அடிக்கடி தன் கணவன் அங்கே போய் விடுவார். இப்போது நோய் நீங்கி நலமடைந்துவிட்ட சக்களத்தி அவளாகவே கணவனிருக்குமிடத்துக்கு வந்துவிடுவாளல்லவா? அதனால் தாமரைக்கண்ணி அந்த வீட்டில்மட்டுமல்லாமல் அந்த ஊரிலும் இல்லாதிருப்பதில் மகிழ்ச்சியே அடைவாள் சுந்தரி.

எனவே, தாமரைக்கண்ணியின் மாமியார் முருகேசனின் தாயார் அம்மணியம்மாள் ஒருவர்தான் தாமரைக்கண்ணி ஆஸ்பத்திரியை விட்டபின் வீட்டுக்கு வராமல் வேற்றூருக்குப் போவதில் வருத்தமடையக்கூடியவர். அதனால் அவரிடம் மட்டும் அனுமதி பெற்றுவிட்டால் போதும்.

அதற்கு என்ன செய்வது என்று சுந்தரமூர்த்தி ஆலோசிக்கலானான்; இராமநாதன் பணம் கொடுத்து விட்டுப் போன பின் இதே சிந்தனையாக அன்று இரவு முழுவதும் தூக்கமில்லாமல் புரண்டுகொண்டிருந்தான்.

விடிவதற்குள் அவனுக்கு ஒரு யுக்தி தோன்றியது. அதன்படி பொய்யல்லாத, அதே சமயத்தில் மெய்யுமல்லாத, ஒரு காரணம் காட்டித் தாமரைக்கண்ணியை ஆஸ்பத்திரியிலிருந்தபடியே வேறு ஊருக்குக் கூட்டிக்கொண்டு போக அத்தையிடம் அனுமதி பெற்றுவிடலாம் என்று கண்டான்.

மறுநாள் காலையில் வழக்கம்போல் டாக்டர் நோயாளியைப் பார்க்க வருவதை எதிர்பார்த்துக் கொண்டிருந்தான்.



டாக்டர் வந்தார். தாமரைக்கண்ணியின் நிலைமையைப் பரிசோதித்துவிட்டு, "மிகவும் திருப்திகரமாக இருக்கிறது. டிஸ்சார்ஜ் செய்ய வேண்டிய தினம் நெருங்கிவிட்டது. ஆனால், நீங்கள் மேலும்சில நாள்கள் இங்கேயே இருக்க வேண்டும் என்று சொன்னீர்களே, எத்தனை நாள்கள் இருக்க விரும்புகிறீர்கள்?" என்று சுந்தரமூர்த்தியைக் கேட்டார்.

"ஆஸ்பத்திரியிலிருந்து 'டிஸ்சார்ஜ்' ஆனபின் உடனே நல்ல காற்றோட்டம் இல்லாத வீட்டுக்கே கொண்டு போகாமல் உடம்பு தேறுகிறவரைக்கும் ஓர் ஆரோக்கியத் தலத்துக்கு அழைத்துக் கொண்டு போகலாம் என்பது என் எண்ணம். அதற்கு......"

"ஓ! அது மிகவும் மெச்சத்தகுந்த எண்ணம். சிகிச்சைக் காலத்தைப் போலவே சிகிச்சைக்குப் பின் உடம்பு தேறிச் சகஜ நிலையை அடைகிறவரைக்கும் உள்ள காலத்தைக் கருத வேண்டும். ஆகாரத்தில் பத்தியம் கவனிக்க வேண்டியதைப் போலவே சுத்தமான காற்றோட்டமுள்ளதாக இடத்தையும் கவனிக்க வேண்டும். அதனால் சுத்தமான காற்றோட்டமில்லாத வீட்டுக்கே உடனே கொண்டு போவதைவிட நீங்கள் நினைத்திருக்கிறபடி ஓர் ஆரோக்கியத் தலத்தில் சில காலம் தங்குவதே மிகவும் நல்லது. அப்படியே செய்யுங்கள்" என்றார் டாக்டர்.

"எந்த ஆரோக்கியத் தலத்துக்குக் கொண்டு போகலாம் என்பது இன்னும் நிச்சயமாகவில்லை. அது நிச்சயமாகிற வரைக்கும் நீங்கள் டிஸ்சார்ஜ் செய்யத் தீர்மானிக்கிற நாளுக்கு மேல், சில தினங்கள் இங்கேயே இருக்க விரும்பினது...." என்றான் சுந்தரமூர்த்தி.

"ரொம்ப சரி. அப்படியே செய்யுங்கள்" என்று சொல்லி விட்டுப் போய்விட்டார் டாக்டர்.

அன்று மாலை ஐந்து மணிக்குச் சுந்தரமூர்த்தி மோட்டாரில் அத்தை வீட்டுக்குப் போனான். வீட்டில் அத்தை மட்டுந்தான் இருந்தாள். முருகேசனும் சுந்தரியும் சிறுமி ஜானகியையும் கூட்டிக்கொண்டு கடற்கரைக்குப் போய்விட்டு அப்படியே

சினிமாவுக்குப் போய் வருவதாகச் சொல்லிவிட்டுப் போனதாக அத்தையம்மாள் சொன்னாள். சுந்தரி மற்றவர்களிடம் எப்படி நடந்துகொண்டாலும் ஜானகியிடம் மிகவும் பிரியமாக இருப்பதிலும் எங்கே போனாலும் குழந்தையையும் கூட்டிக்கொண்டு போவதிலும் சுந்தரமூர்த்திக்கு மிக்க மகிழ்ச்சிதான். ஏனென்றால், தாமரைக்கண்ணியை வேறு ஊருக்குக் கூட்டிக் கொண்டு போய்விட்டபின் ஜானகி அதிகமாக ஏங்கிவிட மாட்டாள். தாமரைக்கண்ணியைத் தன்னுடன் கூட்டிக்கொண்டு போய்விடத் தீர்மானித்திருக்கிற சுந்தரமூர்த்தி அவளுடைய குழந்தை ஜானகியையும் கூட்டிக்கொண்டு போக வேண்டுமென்று எண்ணவில்லை. ஏனென்றால், முருகேசனுக்கும் அத்தைக்கும் ஏக்கமுண்டாக்கும். அத்துடன் நன்றாகப் படித்துக் கொண்டிருக்கிற ஜானகியின் படிப்புக் கெட்டுப் போகும். எல்லாவற்றிற்கும் மேலாகச் சுந்தரியிடத்திலும் முருகேசனிடத்திலும்கூடத் தாமரையை எங்கோ வேறு ஊருக்குக் கூட்டிக்கொண்டு போவதைத் தெரிவிக்க வேண்டிவரும். மேலும் குழந்தையை அவர்களுக்குத் தெரியாமல் கூட்டிக் கொண்டு போய்விட்டால் தன் அனுமதியின்றிக் கூட்டிக்கொண்டு போய்விட்டார்களே என்ற வருத்தம் முருகேசனுக்கு உண்டாகலாம். அந்த வருத்தத்துக்குச் சுந்தரி தூபம் போட்டுக் கோபமாக மாற்றிவிடலாம். அந்தக் கோபத்தில் சட்டப்படி குழந்தை தந்தையின் உரிமையே அன்றித்தாயின்உடைமையல்லவென்று குழந்தையைத் தன்னிடம் ஒப்படைக்க வேண்டுமென்று வழக்குப் போடவும் நேரலாம். அப்படியானால், 'வாரண்ட்' தன்னைத் தொடரும் என்பதையெல்லாம் எண்ணியே ஜானகியைத் தாமரைக்கண்ணியுடன் கூட்டிக்கொண்டு போகச் சுந்தரமூர்த்தி திட்டமிடவில்லை.

"அத்தை! சுந்தரி ஜானகியை விட்டுப் பிரிவதேயில்லை போலிருக்கிறதே?" என்றான் சுந்தரமூர்த்தி.

"ஆமாப்பா, சுந்தரி ஜானகியைத் தான் பெற்றக் குழந்தையாகவே கொஞ்சி வளர்க்கிறாள். ஜானகியும் அவளிடத்தில் ரொம்பவும் ஒட்டிக்கொண்டிருக்கிறாள். அதனால்தானே ஜானகியும் அவளுடைய அம்மாளைப்பற்றி ஏக்கமில்லாமல் இருக்கிறாள்" என்றாள் அம்மணியம்மாள்.



"ஜானகிக்குத் தாயாரின்மேல் ஏக்கம் இல்லாமலிருப்பது நல்லதுதான்" என்றான் சுந்தரமூர்த்தி.

"ஏக்கம் இல்லையென்பது உண்மைதான். ஆனால், அடிக்கடி அம்மாவைப்பற்றிய நினைப்பு வருகிறது. நேற்றுக்கூட, 'பாட்டி! அம்மா எப்போ வீட்டுக்கு வரும்?' என்று என்னைக் கேட்டாளே! எனக்குக்கூடத் தாமரை வீட்டில் இல்லாதிருப்பது எப்படியோ இருக்கிறது. முருகேசனும் சுந்தரியும் சாப்பாட்டு நேரம் தவிர மற்ற நேரங்களில் ஜானகியையும் கூட்டிக்கொண்டு கடற்கரைக்கு என்றும், சினிமாவுக்கென்றும், கண்காட்சிக் கென்றும், கனகவல்லி வீட்டுக்கென்றும் போய்விடுகிறார்கள். நான் தனியாகக் குந்தியிருக்க வேண்டியிருக்கிறது. அதனால் தாமரை சீக்கிரம் வீட்டுக்கு வந்துவிட்டால் தேவலை என்றிருக்கிறது. இன்னும் எத்தனை நாள் ஆஸ்பத்திரியில் இருக்க வேணுமாம்? டாக்டர் என்ன சொன்னார்? எப்போது அவள் வீட்டுக்கு வருவாள்?" என்றாள் அத்தை.

"அதைப்பற்றிச் சொல்லத்தான் உங்களிடம் இப்போது வந்தேன். இன்னும் ஒரு வாரம் அல்லது பத்து நாளில் தாமரைக்கண்ணி ஆஸ்பத்திரியில் இருக்க வேண்டிய சிகிச்சை முடிந்துவிடும். அதற்குப் பின் உடனே வீட்டுக்குக் கூட்டிக் கொண்டு போகாமல் ஓர் ஆரோக்கியமுள்ள ஊருக்குக் கொண்டு போய் அங்கே கொஞ்ச காலம் தங்கியிருந்து கவனித்துக் கொண்டால்தான் உடம்பு சீக்கிரம் தேறும் என்று டாக்டர் சொல்லுகிறார். நானும் அந்த யோசனையை ஒத்துக் கொண்டேன். அதற்கு உங்களுடைய அனுமதி வேண்டும். நீங்கள் அனுமதித்தால்தான் அதற்கான மற்ற முயற்சிகளை நான் செய்ய முடியும்" என்றான் சுந்தரமுர்த்தி.

"எந்த ஊருக்குப் போக வேண்டும்?"

"அது இன்னும் நிச்சயமாகவில்லை. உங்களுடைய அனுமதி கிடைத்த பிறகுதானே அதைப்பற்றி யோசிக்க வேண்டும்?" என்றான் சுந்தரமூர்த்தி.

"டாக்டர் சொன்னால் போக வேண்டியதுதான். ஆனால், இப்பவே முந்நூறு ரூபாய்க்குமேல் செலவாகிவிட்டது. இன்னும் அறைக்கு வாடகை, ஆபரேஷன், வைத்தியம் முதலானதுகளுக்கு எவ்வளவு தர வேணுமோ? அப்படியிருக்க, வெளியூருக்கு அவளைக் கொண்டு போனால் வசதியாகத் தங்கியிருக்க வீடு தேட வேண்டும். குடித்தனம் நடத்துவதற்குத் தேவையான தட்டுமுட்டு, பண்டம், பாத்திரங்கள் வேண்டும். மருந்து டானிக் வாங்க வேண்டும். அந்த ஊருக்குப் போகப் பிரயாணச் செலவு செய்ய வேண்டும். எல்லாம் சேர்ந்து ரொம்பச் செலவாகும்போல் இருக்கிறதே. எப்படியப்பா சமாளிப்பது?" என்று அச்சம் தெரிவித்தாள் அத்தையம்மாள்.

"ரொம்பச் செலவாகும் என்று பயப்பட வேண்டாம் அத்தை! பிராயாணத்துக்கு இராமநாதன் செலவிலேயே நாம் இப்போது உபயோகித்துக்கொண்டிருக்கிற கார் இருக்கிறது. எவ்வளவு தூரம் போவதானாலும் நமக்கு அந்தச் செலவு இல்லை. தங்கியிருக்க நல்ல வீடு பிடிப்பதற்கும் குடித்தனம் நடத்துவதற்கு வேண்டிய வசதிகளைச் செய்வதற்கும் ஆகக் கூடிய செலவுகளையும் செய்ய இராமநாதனே ஏற்றுக்கொண்டு விட்டான். அதனால்தான் நானும் டாக்டர் சொன்ன யோசனையை ஒத்துக்கொண்டேன். இந்தச்செலவுகளெல்லாம் நீங்கள் செய்ய வேண்டியதாகயிருந்தால் நான் இதை ஒத்துக் கொண்டிருக்க மாட்டேன். நீங்கள் இதற்குச் செய்ய வேண்டிய தெல்லாம் நானும் சந்திராவும் தாமரையைக் கூட்டிக்கொண்டு ஓர் ஆரோக்கியமான தலத்துக்குச் சென்று, தாமரையின் உடம்பு தேறுவதற்காக அங்கே தங்கியிருக்க உங்கள் ஆசீர்வாதத்துடன் அனுமதி கொடுக்க வேண்டியது ஒன்றுதான்" என்று முடித்தான் சுந்தரமூர்த்தி.



அங்காந்த வாயுடன் வெகு அனுதாபத்தோடு கேட்டுக் கொண்டிருந்த அம்மணியம்மாள், "அட என் சாமி! அந்த இராமநாதனுடைய தங்கமான குணத்துக்கு அவரைக் கை யெடுத்துக் கும்பிட வேணும். இப்படிப்பட்ட ஏற்பாட்டுக்கு என் அனுமதியைக் கேட்கவும் வேணுமா? மனமார ஆசீர்வதித்து அனுமதிக்கிறேன். என் ராசாத்தி தாமரைக்கண்ணி பூர்ண சௌக்கியத்துடன் உடம்பு தேறி வருவதாக டாக்டர் சொன்ன யோசனைக்கு நான் தடை சொல்லுவேனா? பண வசதி யில்லையே என்றுதான் முதலில் பயந்தேன். இப்போது அந்தப் பயம் போய்விட்டது. தாமரைக்கண்ணியைப் பாதுகாக்க உன்னை யும் உன் மனைவி சந்திராவையும்விட வேறு யாராலும் இப்படிப் பாடுபடமுடியாது. உன் இஷ்டப்படி நீயும் சந்திராவும் தாமரையை எந்த ஆரோக்கிய இடத்துக்காவது அல்லது கோயில்களுக் காவது கூட்டிக்கொண்டுபோய்த் தங்கியிருந்து பூரண ஆரோக் கியத்துடன் வந்து சேருங்கள். நீங்கள் வந்து சேருகிற வரை யிலும் என் மனம் உங்களைப்பற்றி ஏங்கிக்கொண்டுதா னிருக்கும். எப்போ புறப்படப் போகிறீர்கள்?"

"டாக்டர் டிஸ்சார்ஜ் செய்த பிறகுதான். அதற்கு இன்னும் பத்து நாளாகும்."

"சரி, இப்போது தாமரையைப் பார்க்க நானும் வருகிறேன். அவளைப் பார்த்து ரெண்டு நாளாச்சு. சுந்தரியும் முருகேசனும் ஜானகியைக் கூட்டிக்கொண்டு எங்காவது போய் விடுவதால், நான் வீட்டு வேலைகளையும் சமையலையும் கவனிக்க வேண்டியிருக்கிறது. இல்லாவிட்டால், நானும் உங்களோடு ஆஸ்பத்திரியில் தங்கித் தாமரையைப் பார்த்துக் கொண்டிருப்பேன்" என்று சொல்லிக்கொண்டே எழுந்து போய்ப் பூட்டை எடுத்துக்கொண்டுவந்து வீட்டைப் பூட்டிச் சாவியைப் பக்கத்து வீட்டில்—முருகேசனும் சுந்தரியும் சீக்கிரம் வந்துவிட்டால் வாங்கிக்கொள்ள—கொடுத்து விட்டுக் காரில் ஏறிக்கொண்டாள்.

காரில் போய்க்கொண்டே அம்மணியம்மாள், "ஏண்டா சாமி! ஆஸ்பத்திரிச் செலவு எவ்வளவு கொடுக்க வேண்டி யிருக்கும்?" என்று கேட்டாள்.

"ரூம் வாடகையே சுமார் நாற்பத்தைந்து நாட்களுக்குக் கொடுக்க நேரும். அதற்கே நானூற்று ஐம்பது ரூபாய் ஆகிறது. ஆபரேஷன் முதலான மற்ற வைத்தியச் செலவுகள் எவ்வளவு என்று ஆஸ்பத்திரியிலிருந்து டிஸ்சார்ஜ் செய்யும் போதுதான் சொல்லுவார்கள்" என்றான் மூர்த்தி.

"எவ்வளவு கேட்டாலும் நாம் சந்தோஷமாகக் கொடுத்து விடத்தான் வேணும். என் ராசாத்தி தாமரைக்கண்ணியின் துன்பமெல்லாம் போகச் செய்து அவளைப் பிழைக்க வைத்த டாக்டருக்கு எவ்வளவு தந்தாலும் தகும். ஆனால், நமக்கு இப்போதுள்ள பணக் கஷ்டம் உனக்குத்தான் நல்லாத் தெரியுமே. அடுத்த மாசூல் வரைக்கும் வீட்டுச் செலவைத் தாட்ட வேணும். எனக்குப் பத்து நாளாக இதே கவலைதான்."

"ஆமாம் அத்தை, உங்களுக்கிருக்கிற கஷ்டங்கள் எனக்குத் தெரியாதா?"

"அதுக்குத்தாண்டா சாமி, ஆஸ்பத்திரிக்கும் டாக்டருக்கும் தர வேண்டியதைக் கொஞ்சம் சல்லீசாகச் செய்யும்படி டாக்டரை நீ கேட்டுக்கொண்டால் என்ன?" என்றாள் அத்தை.

சுந்தரமூர்த்தி உடனே பதில் சொல்லவில்லை. அத்தையின் பொருளாதார நிலைமையை அவன் நன்றாக அறிவான். ஆனாலும் தாமரைக்கண்ணிக்கு வந்த பிராணாபாயத்தைப் போக்கி அவளுக்கு இவ்வளவு நலமுண்டாக்கிய டாக்டருக்குக் கொடுக்க வேண்டியதைக் குறைத்துக்கொள்ளும்படி அவரை எப்படிக் கேட்பது? ஆனாலும் சுந்தரியினால் ஏற்பட்ட தண்டச் செலவுகளாலும் ஆடம்பரச் செலவுகளாலும் கையிளைத்துப் போயிருக்கிற அத்தையின் வேண்டுகோளை எப்படி மறுப்பது? வெகு நேரம் தர்ம சங்கடத்துடன் சிந்தனை செய்துவிட்டு, "ஆகட்டும் அத்தை, டாக்டரைக் கேட்டுப் பார்க்கிறேன்" என்றான்.



மோட்டார் ஆஸ்பத்திரியில் வந்து நின்றது. அம்மணியம்மாள் தாமரைக்கண்ணியின் அறைக்குச் சென்று அவளுடைய முகத்தைத் தடவி நெட்டி முறித்துத் திருஷ்டிக் கழித்துவிட்டு நலத்தை விசாரித்தாள். தாமரைக்கண்ணி மலர்ந்த முகத்துடன் மாமியாரின் இரண்டு கைகளையும் பிடித்துத் தன் நெஞ்சின்மேல் வைத்துக்கொண்டு, "அத்தை, செந்திலாண்டவன் அருளாலும் உங்களுடைய ஆசீர்வாதத்தாலும் நான் நலமடைந்து வருகிறேன். பேசக்கூட முடியாத பலவீனத்தைத் தவிர எந்த விதமான வலியும் இல்லை. சீக்கிரம் பூரண சுகமும் பலமும் அடைந்து உங்களுக்கும் அத்தானுக்கும் பணிவிடை செய்ய ஆண்டவன் அருள்புரியப் பிரார்த்திக்கிறேன்" என்று சொல்லி மாமியாரின் கைகளைக் கண்களில் ஒற்றிக்கொண்டாள்.

அம்மணியம்மாள் ஆனந்தக் கண்ணீர் சிந்திவிட்டாள்.

இரவு பகலாகத் தாமரைக்கண்ணியின் அருகில் இருந்து கொண்டு கைதேர்ந்த நர்ஸைப்போல் அன்புப் பணி புரியும் சந்திராவைப் பலவாறாகப் புகழ்ந்து வாழ்த்திவிட்டு மறுபடியும் அடிக்கடி வருவதாகச் சொல்லிவிட்டு அம்மணியம்மாள் வீட்டுக்குப் புறப்பட்டாள்.

அந்த அம்மாளை வழியனுப்ப மோட்டார் வரையிலும் வந்த சுந்தரமூர்த்தி, "அத்தை! நாங்கள் தாமரையை வேறு ஊருக்குக் கூட்டிக்கொண்டு போவதைப்பற்றி முருகேசனுக்கும் சுந்தரிக்கும் இப்போது சொல்ல வேண்டாம். நாங்கள் போன பிறகு சொல்லுங்கள்" என்றான்.

"ஏன்? அவர்களுக்குத் தெரிந்தால் என்ன? கூட்டிக் கொண்டு போக வேண்டாமென்று சொல்லி விடுவார்களா?"

"அதற்காக அல்ல, அவர்களுக்குத் தெரிந்தால் முருகேசன் எங்களுடன் வர ஆசைப்படலாம். அவனை விட்டுப் பிரிந்திருக்க சுந்தரியால் முடியாது. சுந்தரியும் ஜானகியுடன் வரவேண்டியிருக்கும். அவர்கள் பயணப்பட்டுவிட்டால் தடை சொல்லிக் கொண்டிருப்பது முடியாது. அவர்களும் எங்களுடன் வந்து

விட்டால் நீங்கள் ஒண்டியாக இருக்க வேணும். அது மட்டு மல்லாமல் வயல்களில் பண்ணையாட்களுக்குத் தர வேண்டிய தவசமும் சாளையில் கிடக்கிறது. அவர்களுக்குக் கொடுக்க வேண்டிய பணத்தின் கணக்கு விவரம் சொல்லி உங்களிடத்தில் முட்டுவழி பாக்கியென்று தனியாகக் கொடுத்திருக்கிறேனே! அது உங்களுக்கு நினைவிருக்கிறதா?''

''ஆமாப்பா; நல்லா நினைவிருக்கிறது.''

''அதையெல்லாம் முருகேசன்தானே பண்ணைக்குப் போய்ப் பட்டுவாடா செய்ய வேணும்? நீங்களா பண்ணைக்கும் போக முடியும்? அதுமட்டுமல்ல; நிலக்கடலை இன்னும் வெட்டி யெடுக்கவில்லை. அதிலும் இந்த வருஷம் நல்ல விளைச்சல் இல்லையென்றாலும் ஒரு நூறு ரூபாயாவது கிடைக்கும். தென்னை மரங்களில் முற்றின காய்கள் நிறைந்திருக்கின்றன. நாற்பது ஐம்பது ரூபாய்க்கு விற்கலாம். இதையெல்லாம் முருகேசன் அத்தான்தானே கவனிக்க வேண்டும்? மொத்தத்தில் நான் இங்கே இல்லாதபோது அவர்தானே பண்ணையைப் பற்றிய எல்லா வேலைகளையும் பார்த்துக்கொள்ள வேண்டும்? அதனால் அவரும் எங்களோடு வர ஆசைப்பட வாய்ப்பு இல்லா மலிருக்கத்தான் நாங்கள் தாமரையுடன் ஓர் ஆரோக்கிய தலத்துக்குப் போவதை இப்போது சொல்லக்கூடாது என்றது'' என்றான் சுந்தரமூர்த்தி.

''ஆமாப்பா, நீ சொல்வது நிசந்தான். முருகேசன் உங் களுடன் வந்துவிட்டால் பண்ணை பாழாய்த்தான் போகும். பண்ணை வருமானம் ஒன்றுதானே நமக்கு உள்ளதெல்லாம். நீ வருகிற வரையில் முருகேசன்தானே பண்ணையைக் கவனிக்க வேணும். சரி; சரி; நீ சொன்னது ரொம்ப நல்ல யோசனை தான். நான் முருகேசனிடமோ சுந்தரியிடமோ இப்போ சொல்ல மாட்டேன். நீ கவலைப்படாதே'' என்றாள் அத்தை யம்மாள்.



அத்தையை மோட்டாரில் அனுப்பிவிட்டு வந்த சுந்தர மூர்த்தி தாமரைக்கண்ணியிடமும் சந்திராவிடமும் நெல்லை யப்பனிடமும் அதே எச்சரிக்கை செய்து கட்டுப்படுத்தினான். ஏனென்றால், அவர்கள் வெளியூருக்குப் புறப்படக் குறைந்தது பத்து நாளாவது ஆகும். அதற்குள் தாமரையைப் பார்க்க முருகேசனும் சுந்தரியும் ஜானகியுடன் பலமுறை ஆஸ் பத்திரிக்கு வருவார்கள். அப்போது, டாக்டரும் சுந்தர மூர்த்தியும் தாமரைக்கண்ணியை உடனே வீட்டுக்குக் கொண்டு போகாமல் ஓர் ஆரோக்கியமான இடத்துக்குக் கொண்டுபோக வேண்டுமென்று பேசிக்கொண்டதைக் கேட்டுக்கொண்டிருந்த தாமரையும் சந்திராவும் நெல்லையப்பனும் முருகேசனிடமோ சுந்தரியிடமோ சொல்லிவிடக் கூடும். சந்திராவுக்கு மட்டும் சுந்தர மூர்த்தியின் நோக்கம் தெரிந்திருக்கலாம் தாமரைக்குத் தெரி யாது. அவள் தன் அண்ணன் அவளுடைய ஆரோக்கியத்துக் காகத்தான் வெளியூருக்குக் கூட்டிக்கொண்டு போகப் போகி றார் என்று எண்ணியிருப்பவள். அதனால் கணவனிடம் பேசும்போது சாதாரண அறிவிப்புப் போலச் சொல்லி விடலாம். நெல்லையப்பனும் விளையாட்டாக ஜானகியிடம், 'அத்தையும் நாங்களும் வேறே ஓர் ஊருக்குப் போகப் போகி றோம். நீயும் வரிர்யா?' என்று கேட்டுவிடலாம். ஏனென்றால், ஜானகி ஆஸ்பத்திரிக்கு வரும்போதெல்லாம் அவளும் நெல்லையப்பனும் தனியே விளையாட்டும் கேலியுமாகப் பேசிக் கொண்டிருப்பார்கள். அப்போது அவன் சொல்லிவிடலாம் என்று அஞ்சியே அவனையும் கட்டுப்படுத்தினான்.

## அத்தியாயம் 18

சுந்தரமூர்த்தியின் யுக்தி பலித்துவிட்டது. ஆஸ்பத்திரி யில் இருந்தபடியே தாமரைக்கண்ணியை எங்கே வேண்டு மானாலும் கூட்டிக்கொண்டு போக அத்தையின் அனுமதியும் ஆசியும் கிடைத்துவிட்டது. அது முருகேசனுக்கும் சுந்தரிக்கும்

தெரியாதிருக்கும்படி அதை அவர்களுக்குத் தெரிவித்துவிடக் கூடியவர்கள் எல்லாரையும் கட்டுப்படுத்தியாகி விட்டது.

அதனால் டாக்டர் தாமரைக்கண்ணியை டிஸ்சார்ஜ் செய்யப்போகிற நாளுக்குமேல் ஆஸ்பத்திரியில் இருக்க அவசியம் இனியில்லை.

நான்கு நாள்கள் பொறுத்திருந்து ஐந்தாம் நாள் டாக்டர் வந்து தாமரைக்கண்ணியின் உடல் நலத்தைப் பரிசோதித்து வயிற்றுக் கட்டுகளை அவிழ்த்து மருந்துப் பவுடர் மட்டும் தூவிப் பஞ்சு வைத்துக் கட்டினார்; தாமரைக்கண்ணியிடம், "உங்களுக்கு ஏதாவது வலித் துன்பம் இருக்கிறதா?" என்று கேட்டார்.

"சும்மா படுத்திருக்கும்போது எந்த விதமான வலியும் இல்லை. ஆனால், படுக்கையில் புரளும்போதும் ஆகாரம் சாப்பிட உட்காரும் போதும் மட்டும் தையல் போட்ட வரிசையில் இலேசான வலி இருக்கிறது" என்றாள் தாமரைக்கண்ணி.

"அந்த வலி உடம்பில் பலம் வருகிற வரைக்கும் கொஞ்ச காலத்துக்கு இருக்கத்தான் செய்யும்; பிறகு போய்விடும். அதற்காகப் பயப்பட வேண்டாம்" என்று சொல்லிவிட்டு டாக்டர் சந்திராவையும் சுந்தரமூர்த்தியையும் பார்த்து, "இனிமேல் உடம்புக்குப் பலம் தரக்கூடிய சத்துள்ள ஆகாரம் கொடுக்க வேண்டும்" என்று அப்படிப்பட்ட ஆகாரத்தின் விவரங்களைச் சொல்லிவிட்டு அறையைவிட்டு வெளியேறினார்.

சுந்தரமூர்த்தி டாக்டர் பின்னாலேயே அவருடைய அறைக்குச் சென்றான்.

தமக்குப் பின்னால் அறைக்குள் வந்த சுந்தரமூர்த்தியைத் திரும்பிப் பார்த்த டாக்டர், "என்ன வேண்டும்?" என்றார்.

"எப்போது டிஸ்சார்ஜ் செய்யப் போகிறீர்கள்?" என்றான் மூர்த்தி.



"ஏன்? நீங்கள் போக வேண்டிய ஆரோக்கிய இடம் நிச்சயமாகிவிட்டதா?"

"அது இன்னும் இரண்டு நாளில் நிச்சயமாகிவிடும். தாங்கள் டிஸ்சார்ஜ் செய்யும் நாளுக்குமேல் ஆஸ்பத்திரியில் இருக்க வேண்டிய அவசியம் இருக்காது. அதனால் டிஸ்சார்ஜ் செய்யப் போகிற நாள் தெரிந்தால் அந்த நாள் வரைக்கும் செலுத்த வேண்டிய வாடகைக்கும் வைத்தியச் செலவுக்கும் பணம் தயார் செய்யச் சௌகரியமாக இருக்கும்" என்றான் சுந்தரமூர்த்தி.

"ஓ! அதற்காகவா! ஆபரேஷன் பொறுத்த மட்டும் இன்னும் இரண்டு மூன்று நாள்கள் கவனித்தால் போதும். ஆனால், உங்கள் தங்கை இப்போது மிகவும் பலவீனமாக இருப்பதால், நீங்கள் போகப் போகிற ஆரோக்கியத் தலத்துக்குப் பிரயாணம் செய்யத் தகுதியாக இல்லை. அதற்காக மேலும் சில நாள்கள் தங்கித்தான் ஆக வேண்டும்" என்றார் டாக்டர்.

"மேலும் எத்தனை நாள்களுக்குத் தங்க வேண்டும்?"

"அதை இப்போதே நிச்சயமாகச் சொல்ல முடியாதே."

"ஓர் உத்தேசமாகச் சொன்னாற்போதும். அதோடு வைத்தியத்துக்காகச் செலுத்த வேண்டிய தொகையையும் சேர்த்துச் சொன்னால் நல்லது" என்றான் சுந்தரமூர்த்தி.

"இன்னும் மூன்று நாள்கள் போனபின் அந்த அம்மாளின் உடல் நிலையை ஆராய்ந்து பார்த்து உத்தேசமாக டிஸ்சார்ஜ் செய்யத் தகுந்த நாள் குறிப்பிட்டு அது வரைக்கும் செலுத்த வேண்டிய வாடகையோடு ஆபரேஷன் முதலானவற்றிற்கான தொகையையும் சேர்த்து மானேஜரை பில் தரச் சொல்லுகிறேன்" என்றார் டாக்டர்.

சுந்தரமூர்த்தி அதை ஏற்றுக்கொண்டு டாக்டருக்கு வந்தனம் செலுத்திவிட்டுப் போய்விட்டான்.

சொன்னபடியே மூன்று நாள்கள் சென்றபின் டாக்டர் தாமரைக்கண்ணியின் உடல் நிலையைப் பரிசோதித்துவிட்டு மானேஜரிடம் டிஸ்சார்ஜ் செய்யத் தகுந்த ஒரு நாளைக் குறிப்பிட்டு, அதற்கிணங்கப் பில் எழுதிக்கொடுக்கும்படி உத்தரவிட்டார்.

அன்று மாலையில் மானேஜர் சுந்தரமூர்த்தியிடம் பில் கொடுத்தார். அந்த 'பில்'லில் ஆபரேஷன் நடந்த இருபத்தியேழாம் நாள் டிஸ்சார்ஜ் செய்யும் நாளாகக் குறிப்பிடப்பட்டிருந்தது. மொத்தம் ஐம்பத்தொரு நாள்களுக்கு வாடகை ரூபாய் ஐநூற்றுப்பத்தும், ஆபரேஷன் கட்டணம், உடம்புக்கு இரத்தம் செலுத்தியதற்கான கட்டணம், குளோரபாம் (மயக்க மருந்து), அபாயம் நேராதபடி கவனித்துக்கொள்ளும் உதவி, டாக்டருக்குக் கொடுக்க வேண்டிய கட்டணம் முதலியவற்றிற்காகச் செலுத்த வேண்டிய ரூபாய் தொளாயிரத்து ஐம்பதும் சேர்த்து ரூபாய் ஆயிரத்து நானூற்று அறுபது ரூபாய்க்குப் பில் கொடுக்கப்பட்டிருந்தது.

சுந்தரமூர்த்தியைப் பொறுத்த மட்டில் அவன் அந்தத் தொகையைப் பார்த்து மலைத்துவிடவில்லை. ஆனால், அத்தைக்கு அது பெரும் பாரமாகத் தோன்றுமே. சல்லீசாகப் பில் செய்யும்படி டாக்டரை அவன் கேட்டுக்கொள்ள வேண்டுமென்று அத்தை சொல்லியிருக்கிறார்களே. என்ன செய்வது என்று நெடுநேரம் ஆலோசித்தான்.

மறுநாள் காலையில் டாக்டர் நோயாளிகளைப் பார்த்துவிட்டு அவருடைய அறைக்குப் போனபின் சுந்தரமூர்த்தி தயங்கித் தயங்கி அவரிடம் சென்றான். அவனைக் கண்ட டாக்டர், "மானேஜரைப் பில் கொடுக்கச் சொல்லியிருந்தேனே?" என்றார்.

"மானேஜர் நேற்றே பில் கொடுத்துவிட்டார். பில் சரியானபடிதான் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால்......" என்று நிறுத்தித் தயங்கினான்.



"ஆனால் என்ன? கூசாமல் சொல்லுங்கள்" என்றார் டாக்டர்.

"சொல்லக் கூச்சமாகத்தான் இருக்கிறது, டாக்டர்."

"பரவாயில்லை; சொல்லுங்கள்."

"எங்கள் அத்தை வீட்டுக்கு வருமானமெல்லாம் அவர்களுடைய வயல்களில் விளைச்சலில் இருந்து வரக்கூடியது மட்டும் தான். இந்த வருஷம் விளைச்சல் மிகவும் குறைந்துவிட்டது மழையில்லாமல். அதனால் கொஞ்சம் சல்லீசாகப் பில் பண்ணும்படித் தங்களிடம் நான் கேட்டுக்கொள்ள வேணுமென்று சொல்லியிருந்தார்கள்" என்று கைக்கூப்பினான் சுந்தரமூர்த்தி.

"அப்படியா? இதைச் சொல்லக் கூச்சமென்ன? உங்கள் அத்தை எவ்வளவு குறைத்துக்கொள்ள விரும்புகிறார்களோ அவ்வளவு குறைத்துக்கொள்ளச் சொல்லுங்கள்" என்றார் டாக்டர்.

"எவ்வளவு குறைக்கலாம் என்று தாங்கள்தானே சொல்ல வேணும்?"

"இல்லையில்லை. அந்தம்மாளுடைய சக்திக்குத் தக்கபடி எவ்வளவு குறைத்துக் கொடுத்தாலும் சரி. அதை அவர்களே தீர்மானித்துக்கொள்ள விட்டுவிடுவோம்" என்றார் டாக்டர்.

அதற்கு மேலும் விவாதிக்கக்கூடாதென்று சுந்தரமூர்த்தி வணங்கி விடை பெற்றுக்கொண்டான்; உடனே போய் அத்தையிடம் டாக்டர் சொன்னதைத் தெரிவிக்க வீட்டுக்குப் போக விரும்பினான்; சிறிது நேரம் யோசனை செய்து அத்தையுடன் தனித்துப் பேச முருகேசனும் சுந்தரியும் வெளியே போகும் மாலை நேரத்தில் போவதுதான் சரியென்று தீர்மானித்தான்.

அதன்படியே மாலை ஐந்து மணிக்கு அங்கே போனான். அவன் விரும்பியபடியே முருகேசனும் சுந்தரியும் ஜானகியுடன் மாலைப் பொழுதுபோக்குக்காக வெளியே போயிருந்தார்கள்.

டாக்டருடன் பேசினதை விவரமாக அத்தையிடம் சொன்னான்.

"அதெப்படியப்பா அவர் கொடுத்த பில்லை நம்மிஷ்டப்படிக் குறைக்கிறது? எவ்வளவு குறைச்சாலும் நமக்குச் சந்தோஷமாகத்தானிருக்கும். பில் பணம் முழுக்கத் தள்ளுபடியானால்கூட நமக்குச் சந்தோஷமாகத்தான் இருக்கும். ஆசைக்கு அளவேது? என் ராசாத்திக்கு இவ்வளவு நல்ல வைத்தியம் செய்து அவள் உயிரைக் காப்பாற்றிய தெய்வம் போன்ற அவருக்குத் தர வேண்டியதை நம் இஷ்டப்படிக் குறைத்து அவருக்கு வருத்தம் உண்டாக்கிவிடக் கூடாதே. எவ்வளவு குறைத்துக் கொடுப்பது என்று என் புத்திக்குப் படவில்லை. நீ சொல்லு, எவ்வளவு குறைக்கலாம்?" என்றாள் அத்தையம்மாள்.

"அத்தை! தாமரை படுத்திருக்கிற மாடி அறை பெரியது. அதற்கு வாடகை நாள் ஒன்றுக்குப் பத்து ரூபாய். கீழே உள்ள அறைகளுக்கு வாடகை ஐந்து ரூபாய்தான். நாமாகக் குறைத்தால் வாடகையில் குறைக்க வேண்டும். வாடகையை ஐந்து ரூபாய் அல்லது ஆறு ரூபாய் வீதம் கணக்குப் போட்டு அதை மட்டும் குறைத்து மீதியைக் கொடுத்துவிடலாம்" என்றான் சுந்தரமூர்த்தி.

"வாடகையைக்கூட டாக்டரே குறைத்துச் சொன்னால்தான் நல்லது. அவரைக் கேட்டுக்கொண்டுதான் குறைக்க வேணும். நாமாகக் குறைப்பது மரியாதையல்ல" என்றாள் அத்தை.

"அதற்கு டாக்டரிடம்தான் கேட்க வேண்டும். நானே கேட்டு விடுவேன். ஆனால், டாக்டர் மறுபடியும், 'உங்கள் அத்தை வாடகையை எப்படிக் குறைத்துக்கொள்ள விரும்புகிறார்களோ அதன்படி குறைத்துக்கொள்ளச் சொல்லுங்கள்' என்று தான் என்னை உங்களிடம் போகச் சொல்லுவார்" என்றான் சுந்தரமூர்த்தி.

அம்மணியம்மாள் அதற்குப் பதில் சொல்லாமல் வெகு நேரம் தனக்குள்ளேயே யோசனை செய்துவிட்டு, "எனக்கு ஒரே குழப்பமாக இருக்கிறதப்பா. ஏன்டா குறைக்கச் சொல்லிக் கேட்கச் சொன்னோம் என்று இப்போ தோன்றுகிறது. அவர் என்னிடமே கேட்கச் சொல்லி உன்னை மறுபடியும் அனுப்ப வேண்டாம். நாளைக்கு டாக்டரை எப்போது பார்க்கச் சௌகரியமாக இருக்குமென்று தெரிந்து காரை அனுப்பு. நானே வந்து அவரைக் கண்டு கொள்கிறேன்; இன்றைக்கு ராத்திரியெல்லாம் யோசனை பண்ணி எவ்வளவு குறைக்கும்படி அவரிடம் கேட்டுக் கொள்ளலாம் என்பதைத் தீர்மானிக்கிறேன்" என்றாள்.



சுந்தரமூர்த்தி அதை மிக்க மகிழ்ச்சியுடன் வரவேற்று, "காலை நேரங்களில் டாக்டருக்கு அதிக ஒழிவு இருக்காது. புது ஆபரேஷன் யாருக்காவது செய்ய வேண்டியிருந்தால் அதைச் செய்வதும், படுத்திருக்கும் நோயாளிகளைப் பார்ப்பதும் காலையில்தான். மாலை நாலு மணிக்குமேல் ஏழு மணிக்குள்ளாகத்தான் யாரோடும் பேசவும் புதிதாக வரும் நோயாளிகளைப் பரிசோதிக்கவும் அவருக்கு அவகாசம். அதனால் நாளை இந்நேரத்துக்குக் கார் அனுப்புகிறேன்" என்று சுந்தரமூர்த்தி போய்விட்டான்.

மறுநாள் மாலை ஐந்து மணிக்குமேல் கார் வந்தது. அம்மணியம்மாள் முன்னாலேயே எண்ணியெடுத்துப் பையில் போட்டு இடுப்பில் செருகிக்கொண்டிருந்த பணத்துடன் ஒரு தாம்பாளத்தையும் எடுத்துக்கொண்டு காரில் புறப்பட்டாள்; வழியில் அங்கங்கே காரை நிறுத்தச் சொல்லிப் பழங்களும், புஷ்பங்களும், வெற்றிலைப் பாக்கும் நிறைய வாங்கிக்கொண்டாள்.

காத்துக்கொண்டிருந்த சுந்தரமூர்த்தி அத்தையை வரவேற்று அவள் கொண்டு வந்திருந்த தாம்பாளம் பழங்கள் புஷ்பம் வெற்றிலைப் பாக்கு முதலியவற்றை எடுத்துக் கொண்டு தாமரைக்கண்ணி இருக்கும் அறைக்குக் கொண்டு போனான். அம்மணியம்மாள் தாமரையின் நலத்தை விசாரித்தாள். மலர்ந்த முகத்துடன் தாமரைக்கண்ணி தான் நலமடைந்து வருவதாகச் சொன்னாள். சந்திராவுடன் சிறிது

பேசிவிட்டுத் தாம்பாளத்தில் பழங்களை வட்டமாக அடுக்கி மத்தியில் புஷ்பங்களை வைத்து அவற்றின்மீது வெற்றிலைப் பாக்கைப் பரப்பிவிட்டுச் சுந்தரமூர்த்தியிடம், "தம்பீ ! டாக்டரைப் பார்க்க அவர் அனுமதியைக் கேட்டு வா?" என்றாள்.

பணம் வைத்துக் கொடுக்கத்தான் அந்தப் பழத்தட்டும் தாம்பூலமும் என்பதில் ஐயமில்லை. ஆனால், பணம் ஒன்றும் அதில் வைக்கவில்லையே என்று சுந்தரமூர்த்தி யோசித்தான்; 'எவ்வளவு கொடுக்கப் போகிறீர்கள்' என்று கேட்க நினைத்தான். உடனே, 'எவ்வளவு குறைக்கலாம் என்று டாக்டர் தான் சொல்ல வேணும். வாடகையில் குறைப்பதாயிருந்தாலும் அவரைக் கேட்டுக்கொண்டுதான் குறைக்க வேணும். நாமாகக் குறைப்பது மரியாதையல்ல' என்று அத்தை சொன்னது அவன் நினைவுக்கு வந்தது. அதனால் டாக்டரைக் கேட்டு அவராகக் குறைப்பது எவ்வளவு என்று சொன்ன பிறகுதான் அத்தை அந்தத் தொகையைத் தட்டத்தில் வைப்பார் என்று நினைத்துக் கேட்க எண்ணியதை ரத்து செய்துவிட்டு டாக்டரைப் பார்க்கப் போனான். சிறிது நேரம் காத்திருந்த பின் டாக்டர் பேட்டி கிடைத்தது. அத்தையம்மாளை அழைத்துவர டாக்டர் அனுமதியளித்தார்.

பழத்தாம்பாளத்தைச் சுந்தரமூர்த்தி சுமந்துகொண்டு முன் செல்ல அம்மணியம்மாள் பின்னால் சென்று டாக்டர் அறைக்குள் புகுந்தார்கள். அறைக்குட்சென்று டாக்டருக்கு வணக்கம் செய்த பின் அம்மணியம்மாள் தாம்பூலத் தட்டைச் சுந்தரமூர்த்தியிடமிருந்து வாங்கி அதை அருகிலிருந்த மேஜையின்மீது வைத்துவிட்டு இடுப்பிலிருந்த பணப்பையை இழுத்தெடுத்து அதிலிருந்த நோட்டுக் கற்றையைத் தட்டிலிருந்த தாம்பூலத்தின்மீது வைத்து இரண்டு கைகளாலும் தாம்பாளத்தை எடுத்து டாக்டரிடம் நீட்டினாள்.

டாக்டர் புன்முறுவலோடு அதை வாங்கி மேஜையின் மேல் வைத்துவிட்டு, "எவ்வளவு குறைத்துக்கொண்டீர்கள்?" என்றார்.



அம்மணியம்மாள் இரு கரங்களையும் கூப்பிக்கொண்டு, "ஐயோ! சாமி! அந்தத் திருப்பதி வெங்கடாசலபதியே வந்து காப்பாற்றினதுபோல் அரும்பாடு பட்டு என் மருமகளுக்கு வைத்தியம் பார்த்து அவளைப் பிழைக்க வைத்த உங்களுக்குத் தர வேண்டியதைக் குறைத்துக் கொடுப்பது பாவமல்லங்களா? என்னால் முடிந்திருந்தால் நீங்கள் தந்த கணக்குக்குமேலேயே கொடுப்பேனே. என்னமோ யோசனையில்லாமல் கொஞ்சம் சல்லீசாகச் செய்யும்படி உங்களைக் கேட்டுக்கொள்ளச் சொல்லி விட்டேன். அப்புறம் யோசித்துப் பார்த்ததில் கொடுக்க வேண்டியதைக் குறைக்கச் சொல்லுவது பாவம் என்று தெரிஞ்சுது—உங்கள் மனம் திருப்தியடைஞ்சாத்தான் அந்தப் பொண்ணும் சுகமாக இருப்பாள், நாங்களும் சந்தோஷப் படுவோம்" என்றாள்.

இந்தப் பிரசங்கத்தை அந்த அம்மாளிடமிருந்து எதிர் பார்ககாத டாக்டர் வியப்புடன் மௌனமாக அந்த அம்மாளையே உற்றுப் பார்த்துக்கொண்டு நின்றார். சுந்தர மூர்த்திக்கும் வியப்பாகத்தானிருந்தது.

"இதில் எவ்வளவு பணம் இருக்கிறது?" என்று டாக்டர் மௌனத்தைக் கலைத்தார்.

"நீங்கள் கொடுத்த கணக்குப்படியே ஆயிரத்து நானூற்று அறுபது ரூபாய் இருக்கிறது" என்றாள் அம்மணியம்மாள்.

டாக்டர் சுந்தரமூர்த்தியைச் சுட்டிக்காட்டி, "இவர் உங்களுக்கு இப்போதுள்ள சிரமத்தைச் சொல்லி பில்லில் உள்ள தொகையைக் கொஞ்சம் குறைத்துக்கொள்ள வேண்டுமென்று நீங்கள் கேட்டுக்கொள்ளச் சொன்னதாகச் சொன்னபோது நான் மனப்பூர்வமான அனுதாபத்தோடு தான் உங்கள் இஷ்டப்படிக் குறைத்துக்கொள்ளும்படிச் சொன்னேன். உங்கள் மருமகளை இங்கே சேர்த்த நாள் முதல் இவருடைய குணத்தையும், உங்களுடைய குணத்தை

யும் உங்கள் மருமகளுடைய குணத்தையும், அருகிலிருந்து சேவை செய்யும் இவருடைய மனைவியின் குணத்தையும் நான் கவனித்துக்கொண்டுதான் வருகிறேன். நீங்கள் எல்லாரும் அனுதாபத்துக்கு உரியவர்கள். உங்களுக்குச் சகாயமாக இருப்பதில் எனக்கு ஒரு மகிழ்ச்சியுண்டு. அதனால் நீங்கள் உங்களிஷ்டப்படி குறைத்துக் கொடுத்தால் நான் அதிருப்தி யடைய மாட்டேன். நான் முழுமனதோடு ஒரு நல்ல காரியம் செய்வதாக மதித்துத் தொகையைக் குறைத்து வாங்கிக் கொள்ளத் தீர்மானித்ததைப் பொய்யாக்கும்படி இந்தத் தொகையை அப்படியே வாங்கிக்கொள்ள மாட்டேன். உங்கள் பிரியப்படி குறைத்துக் கொடுங்கள்'' என்றார் டாக்டர்.

''வேண்டாம் சாமி! சந்தோஷமாக எடுத்துக் கொள்ளுங்கள்'' என்றாள் அம்மணியம்மாள்.

''நீங்களாகக் குறைப்பது சரியல்லவென்று நீங்கள் நினைப்பதை ஒத்துக்கொள்ளுகிறேன். ஆனால், நானாகக் குறைத்துக்கொள்வதை நீங்கள் ஆட்சேபிக்க முடியாது'' என்று சொல்லிக்கொண்டே டாக்டர் அந்த நோட்டுகளை எடுத்து எண்ணி ஒரு பகுதியை எடுத்துக்கொண்டு, ''எனக்கு இது போதும்'' என்று கூறி மிகுதியை அம்மணியம்மாளிடம் நீட்டினார்.

அந்த அம்மாள் அதை வாங்கிக்கொள்ளத் தயங்கினாள்.

''என் மனம் திருப்தியடைந்தால்தான் உங்களுக்கு நல்லது என்று சற்று முன் சொன்னீர்களே! இதை நீங்கள் வாங்கிக்கொண்டால்தான் என் மனம் திருப்தியடையும்'' என்றார் டாக்டர்.

உடனே அம்மணியம்மாள் அதை வாங்கிக்கொண்டு கும்பிடு போட்டாள்.

''பில்லில் இருக்கிறபடி ஆபரேஷன் செய்த இருபத்தி யேழாம் நாள் டிஸ்சார்ஜ் செய்துவிடக் கூடும். அதற்கு



மேலும் இருக்க வேண்டுமென்று நான் தீர்மானிக்க நேர்ந் தாலும் நேரலாம். அதற்காக நீங்கள் ஒன்றும் வாடகை கொடுக்க வேண்டியதில்லை'' என்று டாக்டர் சொல்லிவிட்டுப் பியூனைக் கூப்பிட்டு, தட்டத்திலுள்ள பழங்கள் முதலிய வற்றை எடுத்துக்கொண்டு தட்டத்தைக் கொடுத்துவிட உத்தரவிட்டார்.

டாக்டரை வணங்கிச் சுந்தரமூர்த்தியும் அம்மணியம்மாளும் விடை பெற்றுக்கொண்டார்கள்.

தாமரை படுத்திருக்கும் அறைக்கு வந்த பின் அம்மணி யம்மாள் டாக்டர் திருப்பித் தந்த நோட்டுகளை எண்ணிப் பார்த்தாள். நானூற்று அறுபது ரூபாய் இருந்தது. டாக்டர் எடுத்துக்கொண்டது ஆயிரம்தான். டாக்டருடைய பெருங் குணத்தைப் புகழ்ந்து மகிழ்ச்சியடைந்ததில் தாமரைக் கண்ணியும் சந்திராவும் பங்கு கொண்டார்கள்.

அம்மணியம்மாள் சிறிது நேரம் மருமகளோடும் சந்திராவோடும் சந்தோஷமாகப் பேசிக்கொண்டிருந்துவிட்டு வீட்டுக்குப் புறப்பட்டாள். காருக்குப் போகு முன் சுந்தர மூர்த்தியிடம், ''தம்பீ! நீங்கள் போகும் ஆரோக்கிய இடத்தில் உங்களுக்கு வேண்டிய எல்லா வசதிகளையும் உன் பள்ளித் தோழர் இராமநாதன் செய்து கொடுப்பார் என்றாலும் நீ வெறுங் கையோடு போவது சரியல்ல. உங்களுக்கு நான் ஒன்றும் கொடுத்து அனுப்பி வைக்க முடியாமலிருக்கிறதே என்று கவலைப்பட்டேன். டாக்டருடைய பெருந்தன்மையால் நான் எதிர்பாராதபடி இந்தப் பணம் மிச்சமாகியிருக்கிறது. இந்தா, நீ இதை வைத்துக்கொள்'' என்று அந்த நோட்டுகளை அவனிடம் நீட்டினாள்.

''வேண்டாம் அத்தை! நெல்லை விற்ற பணத்திலிருந்து தான் நீங்கள் டாக்டருக்குக் கொடுக்க எடுத்துக்கொண்டு வந்திருக்கிறீர்கள். டாக்டர் எடுத்துக்கொண்ட ஆயிரம் போனால் இதையும் சேர்த்து உங்களிடம் எண்ணூற்று ஐம்பது ரூபாய்தானே இருக்கும். அடுத்த மாசூல் வரைக்கும் வீட்டுச்

செலவுகளுக்கு ரொம்பக் கஷ்டப்படுவீர்கள். வேண்டாம் ; இதை நீங்களே வைத்துக்கொள்ளுங்கள். இராமநாதன் எனக்குக் கைச்செலவுக்குத் தந்திருக்கிறான் ; எவ்வளவு வேண்டுமானாலும் கூசாமல் கேட்கச் சொல்லியிருக்கிறான். உங்களுக்கு அந்தக் கவலை வேண்டாம்'' என்றான் சுந்தர மூர்த்தி.

இதைக் கேட்ட அந்த அத்தை, சுந்தரமூர்த்தியின் நல்லெண்ணத்தையும், அவன் தன் குடும்பத்துக்கு எவ்வளவு பெரிய உபகாரியாக இருந்திருக்கிறான் என்பதையும் எண்ணிப் பரவசமடைந்துவிட்டாள். அந்த மகிழ்ச்சியைத் தொடர்ந்து அடுத்த கணமே, அப்படிப்பட்ட அவனும் அவனைப் போலவே தன் குடும்பத்துக்கு மிகப் பெரும் உதவியாக இருக்கும் அவன் மனைவி சந்திராவும் தாமரைக்கண்ணியின் நலத்தைக் கருதி அவளுடன் வெளியூருக்குப் போய் வருகிற வரையிலும் இவர்களுடைய உதவியில்லாமல் குடும்பக் காரியங்களை எப்படிச் சமாளிப்பது என்ற ஏக்கமும் உண்டாகிவிட்டது.

"ஏண்டா சாமி! டாக்டர் சொன்னபடி தாமரையைக் கூட்டிக்கொண்டு போகிற அந்த ஆரோக்கிய ஊரில் எத்தனை நாளைக்கு இருக்க வேணும்?'' என்றாள் அத்தை.

"தாமரைக்கு உடம்பு தேறிக் கொஞ்சம் பலம் வருகிற வரைக்கும்தான்.''

"ஆமாப்பா, அவளுக்குக் கொஞ்சம் உடம்பு தேறினவுடனே சீக்கிரமா வந்துவிடுங்கள். நீங்களெல்லாம் இல்லாமல் ஒரு நிமிஷங்கூட என்னால் நிம்மதியாக இருக்க முடியாது. நீங்கள் திரும்பி வருகிறவரையிலும் எனக்குத் தூக்கமே வராது. நினைப்பெல்லாம் உங்கள்மேல்தான் இருக்கும்'' என்று வெகு ஏக்கத்தோடு சொன்னாள் அத்தை.

அது சுந்தரமூர்த்தியின் உள்ளத்தை மிகவும் உறுத்தி விட்டது. 'சீக்கிரம் வந்துவிடுகிறோம்' என்று பதில் சொல்லி அந்த அம்மாளின் ஏக்கத்தை நீக்க முடியவில்லை. இது



வரைக்கும் அவன் அத்தையிடம் சொல் ஒன்று செயல் வேறாக நடந்துகொண்டதேயில்லை. இப்போது அவன் செய்யப் போவது அதற்கு முற்றிலும் மாறானது. மனச்சாட்சி உறுத்தத் தான் உறுத்திற்று. என்ன செய்வது?

சுந்தரியிருக்கும் அந்த வீட்டில் தானும் தன் மனைவியும் தன்மானத்தோடு வாழ முடியாது. என்ன இருந்தாலும் சுந்தரி அந்த வீட்டுக்கு உரிமைக்காரி. தானும் தன் மனைவியும் மகனும் அங்கே அண்டிப் பிழைப்பவர்களே. அத்தையும் முருகேசனும் அப்படித் தங்களை எண்ணவில்லை என்றாலும், உண்மை அதுதான். சுந்தரியை அடக்க வேண்டுமானால் அவள் செய்த குற்றங்களை அத்தையிடமும் முருகேசனிடமும் சொல்லி அந்தக் குடும்பத்தின் அமைதியைக் குலைக்க வேண்டும். முருகேசனுடைய உல்லாசத்தைக் கெடுத்து அவனுக்கும் சுந்தரிக்கும் இடையில் பிளவுண்டாக்க நேரிடும். மகனுக்குச் சுந்தரியை மணமுடித்து வைத்ததால் அவன் மிகவும் சந்தோஷமாக இருக்கிறான் என்று பூரித்திருக்கும் அத்தையின் நிம்மதியையும் அழிக்க வேண்டியிருக்கும். இத்தனை தீமைகளுக்கும் இடமில்லாதிருக்கத்தான் தனக்கு ஒரு வேலை தேடிக் கொண்டு மனைவி மகனோடு வேறு ஓர் ஊருக்குப் போய்விடத் தீர்மானித்தது. எங்கே எப்போது எப்படிப் போவது என்று வழி தெரியாமல் தவித்துக்கொண்டிருக்கும்போது தெய்வமே வழி காட்டினது போலப் பள்ளித் தோழன் இராமநாதனுடைய ஆதரவு கிடைத்து விட்டது. அந்த ஊரை விட்டு வெளியேற எல்லா ஏற்பாடுகளையும் மிக்க நல்ல முறையில் செய்தாகி விட்டது. அப்படியிருக்கையில், 'சீக்கிரம் வந்து விடுங்கள்' என்று சொன்ன அத்தைக்கு உடனே, 'ஆகட்டும்; சீக்கிரம் வந்து விடுகிறோம்' என்று எப்படிப் பதில் சொல்லுவான்? பல பெரிய குற்றங்களைத் தவிர்க்க ஒரு சிறு குற்றம் செய்வது தவறல்ல என்ற எண்ணத்தில்தான், தாமரைக்கண்ணியை ஓர் ஆரோக்கியத் தலத்துக்குக் கூட்டிக்கொண்டு போகும்படி டாக்டரே சொன்னதாகப் பொய் சொன்னது.

'சீக்கிரம் வந்துவிடுங்கள்; நீங்களெல்லாம் இல்லாமல் ஒரு நிமிஷங்கூட என்னால் நிம்மதியாக இருக்க முடியாது' என்ற தற்குப் பதில் சொல்ல முடியாமல், "அத்தை, நீங்கள் ஒன்றுக்கும் கவலைப்பட வேண்டாம். செந்திலாண்டவன் ஒரு குறையும் வராதபடி நம்மெல்லாரையும் காப்பாற்றுவான்" என்றான் சுந்தரமூர்த்தி.

"ஆமாப்பா! செந்திலாண்டவன் தான் தாமரையைக் காப்பாற்றினான். நான் அவனிடம் வேண்டுதல் செய்து கொண்டது பலித்துவிட்டது. எல்லாம் அவன் அருள்தான்" என்று சொல்லிக்கொண்டே அத்தை காரில் ஏறிச் சென்று விட்டாள்.

## அத்தியாயம் 19

ஒரு வாரத்துக்குப் பின் முருகேசனும் சுந்தரியும் சிறுமி ஜானகியுடன் வழக்கம்போல் மாலைப் பொழுதுபோக்குக்குப் புறப்பட்டார்கள்.

ஜானகிக்கு நல்ல பாவாடை சட்டை அணிவித்து முகத் துக்குப் பவுடர் தடவிக்கொண்டிருந்தாள் சுந்தரி. அருகில் நின்றுகொண்டிருந்த முருகேசன் சுந்தரியிடம், "இன்றைக்கு மூர்மார்க்கெட்டுக்குப் பின்னாலுள்ள ஸ்டேடியத்தில் கால் பந்து விளையாட்டுப் போட்டி. அதைப் பார்க்கப் போகலாம்" என்றான்.

"அது வேண்டாம். அண்ணாமலை மன்றத்தில் நடக்கிற நாடகத்துக்குப் போகலாம்" என்றாள் சுந்தரி.

"அப்பா! அம்மாளைப் பார்த்து ரெண்டு நாளாச்சு. முதலில் ஆஸ்பத்திரிக்குப் போய் அம்மாளைப் பார்த்துவிட்டு அப்புறமா சித்தி சொல்ற நாடகத்துக்குப் போகலாம்" என்றாள் மகள் ஜானகி.

"ஏன்? உனக்கு அந்த நெல்லையப்பனோடு விளையாடணு மாக்கும்?" என்றாள் சுந்தரி சிரித்துக்கொண்டே.



"இல்லையில்லை, குழந்தை அம்மாளைப் பார்க்கத்தான் ஆசைப்படுகிறாள். முதலில் ஆஸ்பத்திரிக்கே போவோம்" என்றான் முருகேசன்.

"அத்தான்! நான் வேண்டாமென்று சொல்லவில்லை. முதலில் ஆஸ்பத்திரிக்கே போய் அக்காளைப் பார்ப்போம். நான் சொன்னது என்னவென்றால். நாம் ஆஸ்பத்திரிக்குப் போகும்போதெல்லாம் இவள் போனவுடனே கொஞ்ச நேரம் அக்காளிடம் கொஞ்சிவிட்டு நெல்லையப்பனைத் தனியே கூட்டிக்கொண்டு விளையாடப் போய்விடுகிறாள். அதைத்தான் வேடிக்கையாகச் சொன்னேன்" என்றாள் சுந்தரி.

"அதனாலென்ன! குழந்தைகள் குழந்தைகளோடு விளை யாடத்தானே ஆசை கொள்ளும். தாயாரைப் பார்த்து ஆசை தீர்ந்ததும் அவனோடு விளையாடப் போகிறாள். இல்லா விட்டால் நம்மைப்போல் தாமரையோடு பேசிக்கொண்டிருக்கவோ அல்லது ஆபரேஷன் புண் ஆறிவருகிற விவரங்களைக் கேட்டுக் கொண்டிருக்கவோ குழந்தைக்கு என்ன இருக்கிறது?" என்றான் முருகேசன்.

அதன்பின் சுந்தரி ஒன்றும் பேசவில்லை. ஜானகி ஆஸ்பத்திரிக்குப் போகும்போதெல்லாம் நெல்லையப்பனோடு கொஞ்சுவதில் சுந்தரிக்கிருந்த அருவருப்பு இப்போது அவளை யும் அறியாமல் வேடிக்கைபோல் வெளிப்பட்டுவிட்டது. தனக்கு அருவருப்பு இருப்பதைக் கணவன் கண்டுகொள்ளக் கூடாதே என்ற நினைவு வந்து கணவன் சொன்னதை ஒத்துக் கொண்டது போல், "சரி; ஆஸ்பத்திரிக்குப் போவோம்" என்றாள்.

ஒரு டாக்ஸி மோட்டாரில் மூவரும் ஆஸ்பத்திரிக்குப் போ னார்கள். ஜானகி துள்ளிக் குதித்துக்கொண்டு எல்லாருக்கும் முன்னால் தாமரைக்கண்ணி படுத்திருந்த மாடி அறைக்கு ஓடினாள். முருகேசனும் சுந்தரியும் நிதானமாகப் படியேறிக் கொண்டிருந்தார்கள். அவர்கள் இருவரும் மேல்தளத்துக்கு போய்ச் சேருவதற்கு முன்னால் ஜானகி எதிரில் மேலே நின்று

கொண்டே, "அப்பா! சித்தி! அம்மாளைக் காணோமே! அம்மா படுத்திருந்த கட்டிலில் யாருமில்லை. மாமா, அத்தை, நெல்லையப்ப அத்தான் யாரையுங்காணோமே!" என்று கத்தினாள்.

அதைக் கேட்டுக்கொண்டே மேலே வந்த முருகேசனும் சுந்தரியும் அறைக்குள் வேகமாகச் சென்று பார்த்தார்கள். ஜானகி சொன்னபடியே கட்டில் காலியாக இருந்தது. சுந்தரமூர்த்தி, சந்திரா, நெல்லையப்பன் முதலானவர்கள் மட்டுமின்றி அவர்களுடைய பெட்டிகள், படுக்கைகள், அவர்கள் புழங்கிக்கொண்டிருந்த சாமானகளும் காணப்படவில்லை.

வியப்படைந்த முருகேசன் அறையைவிட்டு வெளியே சென்று அடுத்த அறைப் பக்கமாகப் போய்க்கொண்டிருந்த ஒரு நர்ஸை அழைத்து, "இந்த அறையில் படுத்திருந்த நோயாளி எங்கே?" என்றான்.

"அந்த அம்மாள் டிஸ்சார்ஜ் ஆகி, மோட்டாரில் நேற்றுக் காலையிலேயே அவரைக் கூட்டிக்கொண்டு போய் விட்டார்கள்" என்றாள் நர்ஸ்.

"எங்கே போனார்கள்?"

"அது எனக்குத் தெரியாது" என்று சொல்லிக்கொண்டே நர்ஸ் போய்விட்டாள்.

"நேற்றே இதைவிட்டுப் போனவர்கள் வீட்டுக்கு வராமல் எங்கே போயிருப்பார்கள்?" என்றாள் சுந்தரி.

"அதுதானே எனக்கும் புரியவில்லை. அவர்கள் அம்மாளிடம்கூடச் சொல்லாமல் போயிருக்கிறார்கள் போல் தெரிகிறது. போய் அம்மாளிடம் சொல்லுவோம் வா" என்று முருகேசன் முன்னாற்செல்ல, சுந்தரியும் ஜானகியும் பின்பற்ற மாடியைவிட்டு இறங்கி டாக்சிக்கு வந்தார்கள்.

"இப்போதே போய் அத்தையிடம் சொல்லி என்ன ஆகப் போகிறது? நாடகத்தைப் பார்த்துவிட்டுப் போய்ச் சொல்லலாமே" என்றாள் சுந்தரி.



"இல்லையில்லை; உடனே அம்மாளுக்குத் தெரிவிக்க வேண்டும்" என்று காரில் ஏறிக்கொண்டு காரை வீட்டுக்கு விடச் சொன்னான் முருகேசன்.

வீட்டில் அம்மணியம்மாள் சோர்ந்து போய் உட்கார்ந்திருந்தாள். தாமரைக்கண்ணியை ஆஸ்பத்திரியில் சேர்த்த நாளாகச் சந்திராவும் சுந்தரமூர்த்தியும் வீட்டில் இல்லாததால் சமையலையும் மற்றும் பல வேலைகளையும் அம்மணியம்மாள் தான் கவனிக்க வேண்டியிருந்தது. உல்லாசச்செலவுகளுக்காகப் பணம் வாங்குவதையும் வைரம் பதித்த கைக்கடிகாரத்தையும் கருதி, வீட்டு வேலைகளில் ஒத்தாசை செய்வதாகச் சுந்தரி மாமியாருடன் நடமாடிக்கொண்டிருப்பாள் என்றாலும் பெரும் பகுதி வேலைகளையும் அம்மணியம்மாள்தான் செய்ய வேண்டியிருக்கும்.

அதனால் அந்த அம்மாளுக்கு அலுப்பு அதிகம். அந்த அலுப்போடு தாமரைக்கண்ணியை ஆரோக்கிய தலத்துக்குக் கூட்டிக்கொண்டு போகிற சுந்தரமூர்த்தியும் சந்திராவும் தாமரைக் கண்ணியுடன் திரும்பிவர எத்தனை நாளாகுமோ! அதுவரையில் வீட்டு வேலைகளை எப்படிச் சமாளிப்பது என்ற ஏக்கமும் சேர்ந்து அதையே எண்ணிக்கொண்டு உட்கார்ந்திருந்தாள் அம்மணியம்மாள்.

டாக்சியிலிருந்த முருகேசன் தாயாரை நாடிச் சென்று, "அம்மா! தாமரையை நேற்றே 'டிஸ்சார்ஜ்' செய்து விட்டார்களாம். அவளும் அத்தானும் சந்திராவும் நெல்லையப்பனும் நேற்று காலையிலேயே மோட்டாரில் ஆஸ்பத்திரியை விட்டுப் போய்விட்டார்களாம். வீட்டுக்கு வராமல் எங்கே போயிருப்பார்கள்?" என்றான்.

"தாமரையை ஆஸ்பத்திரியிலிருந்து டிஸ்சார்ஜ் செய்ததும் உடனே வீட்டுக்குக் கூட்டிக்கொண்டு போகவேண்டாம். அவள் உடம்புக்குப் பலம் வருகிற வரைக்கும் இடம் மாறி ஓர் ஆரோக்கியமான ஊரில் கொஞ்ச நாள் தங்கியிருந்து பிறகு வீட்டுக்குக் கூட்டிக்கொண்டு போக வேண்டும் என்று டாக்டர்

சொன்னாராம். டாக்டரே அப்படிச் சொன்னபோது என்ன செய்வது? போய்த்தான் வரவேணும் என்று சுந்தரமூர்த்தி சொல்லிக்கொண்டிருந்தான். அதன்படி வெளியூருக்குப் போயிருப்பார்கள்" என்றாள் அம்மணியம்மாள்.

"எந்த ஊருக்கு?"

"தெரியாது."

சுந்தரிக்கு எரிச்சல் வந்துவிட்டது.

"அத்தை! டாக்டர் சொன்னபடி போக வேண்டியதுதான். ஆனால், எந்த ஊருக்குப் போகிறோம், எப்போது போகிறோம் என்று உங்களிடத்திற்கூடச் சொல்லாமற்போய்விட்டது சரிதானா? இந்த அக்ரமத்தைச் செய்ய, எவ்வளவு துணிச்சல் இருந்திருக்க வேணும்! ஒண்ட வந்த பிடாரி ஊர் பிடாரியை ஒட்டிற்றாம் என்கிற மாதிரியல்லவா இருக்கிறது? எல்லாம் நீங்கள்......" என்று சுந்தரி சொல்லி முடிக்குமுன் முருகேசன் குறுக்கிட்டு, "சுந்தரி ! என்ன நீ பாட்டுக்குப் பிடாரி கிடாரி என்று என்னென்னமோ சொல்லுகிறாய்?" என்றான்.

சுந்தரி அடங்கிவிட்டாள்.

அம்மணியம்மாள் பதில் சொல்லத் தொடங்கி சுந்தரியைப் பார்த்து, "எனக்குத் தெரியாமல் அவர்கள் போய்விடவில்லை. பத்துப் பன்னிரண்டு நாளுக்கு முன்னாலேயே சுந்தரமூர்த்தி டாக்டர் சொன்னதை என்னிடம்சொல்லி டிஸ்சார்ஜ் ஆனவுடனே ஓர் ஆரோக்கியமான ஊருக்குப் போக வேண்டுமென்று என் அனுமதி கேட்டான். நானும் ஒத்துக்கொண்டேன். அந்த அனுமதியே போதும் என்றுதான் நேற்றுப்போயிருக்கிறார்கள். அதில் ஒன்றும் குற்றமில்லை. என்னிடத்தில் அனுமதி கேட்ட போது எந்த ஊருக்குப் போவது என்பது நிச்சயமாகவில்லை யென்று சொன்னான். சுந்தரமூர்த்தியும் சந்திராவும் தாமரைக் கண்ணியின் சௌக்கியத்துக்காக எவ்வளவு பாடுபடுகிறார்கள் என்பது நமக்கெல்லாம் தெரிந்ததுதானே. அவர்கள்மீது குற்றம் சொல்லுவதோ சந்தேகப்படுவதோ பாவம்" என்றாள்.



சுந்தரி பதில் பேசவில்லை.

முருகேசன், "அம்மா, நீங்கள் சொன்னபடி சுந்தரமூர்த்தியும் சந்திராவும் தாமரைக்கண்ணியின் சௌக்கியத்துக்காகப் பாடுபட்டதுபோல் வேறு யாரும் பாடுபட முடியாது. அது மட்டுமல்ல; அவர்கள் இருவரும் நம் குடும்பத்திற்குச் செய்திருக்கிற சேவைகள் கொஞ்ச நஞ்சமல்ல. அவர்கள் இல்லாதிருந்தால் நானும் சுந்தரியும் இவ்வளவு உல்லாசமாக இருந்திருக்க முடியாது. அவர்கள்மீது குற்றம் சொல்லுவதோ சந்தேகப் படுவதோ பாவந்தான். அதையெல்லாம் நான் ஒத்துக்கொள்ளு கிறேன். ஆனால் என்னுடைய வருத்தமெல்லாம் என்ன வென்றால்; பல ஆண்டுகளாக நோயாளியாகவே படுத்துக் கிடந்து உயிருக்கு மன்றாடிக்கொண்டிருந்த அந்தக்குணவதியான தாமரை, நோய் நீங்கிச் சுகமடைந்து வரும் சமயத்தில் அவளுடன் இருந்து அவளுக்கு உற்சாகமூட்டி மகிழ்ச்சியடைய வேண்டுமென்ற ஆசை எனக்கிருக்கிறது இயல்புதானே? டாக்டர் சொன்னபடி தாமரையை வெளியூருக்கு அழைத்துக் கொண்டுபோவதைப்பற்றி எனக்குச் சொல்லியிருந்தால் நானும் ஆஸ்பத்திரிக்குப் போய் அங்கிருந்தே அவர்களுடன் போயிருக்கலாமல்லவா? அது முடியாதபடி நமக்குத் தெரிவிக்கா மல் போய்விட்டார்களே என்ற வருத்தம்தான். தெரிவிக்காமற் போய்விட்டதுகூடப் பரவாயில்லை. எந்த ஊருக்குப் போயிருக் கிறார்கள் என்பதையாவது தெரியப்படுத்தியிருந்தால் நானேயாவது அங்கே போகலாமல்லவா? அதற்குக்கூட வழியில்லாமல் அல்லவா போய்விட்டது அம்மா......"

"முருகேசா! பொறு, பொறு. நீ இப்போது சொன்னதைப் பார்த்தால், அவர்கள் சொல்லாமற்போனதும் அவர்கள் எந்த ஊருக்குப் போனார்களென்பது நமக்குத் தெரியாமலிருப்பதும் மிகவும் நல்லதுதான் என்பது நிச்சயமாகி விட்டது. அவர்கள் போவது தெரிந்திருந்தால் நீயும் அவர்களோடு போயிருப்பாய். எந்த ஊருக்குப் போயிருக்கிறார்கள் என்பது தெரிந்தால் இப்போதே நீ அங்கே போகப் புறப்பட்டு விடுவாய் அல்லவா?"

"ஆமாம்."

"அட என் கண்ணே! அப்படி நீ போய்விட்டால் வயல்களை யார் கவனிப்பது? வெள்ளாமை வந்தே கிடைத்த பணத்தில் பெரும்பகுதி ஆயிரம் ரூபாய் வைத்தியச் செலவாக டாக்டருக்குக் கொடுக்க வேண்டியிருந்தது. அந்த டாக்டர் புண்ணியவான் ரூம் வாடகையைத் தள்ளி வாங்கிக்கொண்டார். இல்லாவிட்டால் இன்னும் ஐநூறு கொடுத்திருக்க வேணும். அப்படியிருக்க, நீ வயலைக் கவனிக்காவிட்டால் நமக்கு வேறு வரும்படி ஏது? அது மட்டுமா? நீ போயிருந்தால் சுந்தரியும் உன்னுடன் வரப் பிரியப்படுவாள். உன்னைவிட்டு அவள் இருக்க மாட்டாள். உங்களோடேயே இருக்கிற குழந்தை ஜானகியும் உங்களோடு வர ஆசைப்படுவாள். நீங்கள் எல்லோரும் போய் விட்டால் நான் இஞ்சி தின்ற குரங்கு மாதிரிதான் ஒண்டியாக இந்த வீட்டில் முடங்கிக் கிடக்க வேணும். அது உனக்குப் பிரியந்தானா?" என்றாள் அன்னை.

இதைக் கேட்ட முருகேசன் அசந்து விட்டான். அவனுக்குத் தாயாரிடத்தில் அளவற்ற பாசம். தாயார் மனம் நோகப் பொறுக்க மாட்டான். அதனால் உடனே, "ஆமாம்மா, நீங்கள் சொன்னது நிசந்தான். நான் போனால் சுந்தரியும் கூட வர ஆசைப்படுவாள். குழந்தையும் எங்களை விட்டிருக்க மாட்டாள். நான் என்னமோ யோசிக்காமல் சொல்லிவிட்டேன். நீங்கள் வருத்தப்பட வேண்டாம்" என்றான்.

இதையெல்லாம் கூர்ந்து கேட்டுக்கொண்டிருந்த சிறுமி ஜானகி, "பாட்டி! அம்மா, மாமா, அத்தை, நெல்லையப்ப அத்தான் எல்லாரும் எப்ப வருவாங்க?" என்று பாட்டியின் தோளைப் பிடித்துக்கொண்டு கேட்டாள்.

"சீக்கிரம் வந்துவிடுவார்கள். உங்கம்மா இனிமேல் முன்போல் படுத்துக் கிடக்க மாட்டாள்; உன்னை மடியில் வைத்துக் கொஞ்சுவாள். நீ கவலையில்லாமல் படித்துப் பாஸ் பண்ணு" என்றாள் பாட்டி.



பேச்சு முடிந்தது. சுந்தரி முதலில் அவளுடைய அறைக்குப் போய்விட்டாள். முருகேசனும் அவளைப் பின் தொடர்ந்து அறைக்குள் போய்விட்டான். ஜானகியை அம்மணியம்மாள் தன் மடியில் உட்கார வைத்துச் சீராட்டிக் கொண்டிருந்தாள்.

அறைக்குள் சுந்தரி கணவனிடம், "அத்தான்! என்ன இருந்தாலும் உங்களையும் என்னையும் அந்தச் சுந்தரமூர்த்தி அண்ணன் கடுகளவாவது மதித்திருந்தால் அக்காளை இப்படி வெளியூருக்குக் கூட்டிக்கொண்டு போவதைப்பற்றிச் சொல்லாமல் இருந்திருப்பாரா? டாக்டர் வெளியூருக்குப் போக வேண்டுமென்று சொன்னதாக அத்தையிடம் சொல்லிப் பனிரண்டு நாள்களுக்கு முன்னாலேயே அத்தையிடம் அனுமதி பெற்றுப் பயணம் நிச்சயமாகிவிட்டதே. நாம் இரண்டு நாளுக்கு முன்னால்கூட ஆஸ்பத்திரிக்குப் போய் வெகுநேரம் பேசிக்கொண்டிருந்தோமே, அந்த சுந்தரமூர்த்தி அதைப்பற்றி ஒரு வார்த்தை சொன்னாரா? அவர் போகட்டும்; நீங்கள் 'வெகு நல்ல பெண்' என்று மெச்சுகின்ற அந்த சந்திராதான் இதைப்பற்றிச் சொன்னாளா? எல்லாம் மூடுமந்திரமாகத்தானே நடந்திருக்கிறது. இப்போதாவது அவர்களுடைய குணத்தைத் தெரிந்துகொள்ளுங்கள்" என்றாள்.

"நமக்குச் சொல்லாதிருப்பதுதான் நல்லதாச்சு என்று அம்மா அத்தனை நேரம் விவரமாகச் சொன்னார்களே. அத்துடன் அவர்கள்மீது குற்றம் சொல்வதோ சந்தேகப்படுவதோ பாவம் என்றும் அம்மா சொன்னதைக் கேட்டுக்கொண்டுதானே இருந்தாய்" என்றான் முருகேசன்.

மாமியார் சொன்னதை நினைப்பூட்டியவுடனே சுந்தரிக்கு வாயடைத்துவிட்டது. கணவன் சொன்னதை ஒத்துக் கொண்டதுபோல் சும்மாயிருந்து விட்டாள்.

அந்தச் சமயத்தில் ஜானகி அறைக்குள் ஓடி வந்து, "அப்பா! நாடகத்துக்குப் போகலாமா?" என்றாள்.

"ஆமாம் அத்தான்! அண்ணாமலை மன்றத்து நாடகத்துக்குப் போவோம், புறப்படுங்கள்" என்று முருகேசன் தோளைப் பிடித்தாள் சுந்தரி.

முருகேசன் கடிகாரத்தில் மணி பார்த்தான். மணி ஆறேமுக்கால்.

"ஏழரைக்குத்தான் ஆரம்பம்" என்றாள் சுந்தரி.

உடனே அறையைப் பூட்டிக்கொண்டு அம்மணியம்மாளிடம்கூடச் சொல்லாமல் நாடகம் பார்க்கப் போய் விட்டார்கள்.

மறுநாள் முதல் சுந்தரி மாமியாருக்கு ஒத்தாசையாகப் பல வேலைகளில் ஈடுபட்டாள். அதைக் கண்டு அம்மணியம்மாள் சந்திரா அங்கில்லாத குறை சுந்தரியினால் நீங்கி விட்டதுபோல் மகிழ்ச்சியடைந்தாள்; அந்த மகிழ்ச்சியில் சுந்தரியின் உல்லாசச் செலவுகளுக்கு அப்போதைக்கப்போது கொடுத்து வந்தாள். என்றாலும் பணக்கஷ்டம் அம்மணியம்மாளின் நிம்மதியைக் குலைத்துக்கொண்டுதான் இருந்தது.

ஒரு மாதம் சென்ற பின் ஒருநாள் மாமியாரும் மருமகளும் ஓய்வாக உட்கார்ந்து பேசிக்கொண்டிருக்கும் போது சுந்தரி, "அத்தை, கைக்கடிகாரம் வாங்கித் தருவதாகச் சொன்னீர்களே" என்றாள்.

"ஆமாண்டியம்மா, அதை வாங்கித் தர வேணும் என்று எனக்கும் கொள்ளை ஆசைதான். என்ன செய்வது? இந்த வருஷம் வீட்டுச் செலவுக்கே பற்றாத பணம் வந்தது. அதிலும் ஆயிரம் ரூபாய் தாமரையின் வைத்தியச் செலவுக்குப் போய் விட்டது. மீதி இருப்பதைக்கொண்டு இந்த வருஷம் முழுவதும் எப்படிக் காலந்தாட்டுவது என்ற கவலை வந்து விட்டது."

"என்ன அத்தை! பற்றாக்குறை இருந்தாலும் சுந்தரமூர்த்தி அண்ணனே அந்தக் கடிகாரத்தை வாங்கித் தரும்படி சிபாரிசு செய்திருக்கிறார்; எப்படியாவது வாங்கித்



தருகிறேன் என்று சொன்னீர்களே" என்று சிணுங்கினாள் சுந்தரி.

"சரி, பார்ப்போம். வருத்தப்படாதே. சீக்கிரம் வாங்கி விடலாம்" என்றாள் மாமியார்.

சுந்தரி சமாதானமடைந்து சிறிது நேரம் பேசிக் கொண்டிருந்துவிட்டுப் போய்விட்டாள்.

சுந்தரி போனபின் அம்மணியம்மாள் தன்னுடைய பொருளாதார நிலைமையைக் கணக்குப் பார்த்தாள். பாங்கில் இரண்டாயிரம் ரூபாய் இருக்கிறது. கையில் எண்ணூறு ரூபாய்தான் இருக்கிறது. கடலை வெட்டினால் நூறு இருநூறு கிடைக்கலாம். தேங்காய்களை விற்றால் ஐம்பது அறுபது கிடைக்கலாம்.

வீட்டில நெல் இருக்கிறது. மேல் செலவுகளுக்குக் குறைந்தது மாதம் நூற்றைம்பது முன்னே ஆகிக்கொண்டிருந்தது. சுந்தரமூர்த்தி முதலான நான்கு ஜீவன்கள் திரும்பி வருகிற வரைக்கும் வேணுமானால் அது குறைவாக இருக்கும். எப்படியிருந்தாலும் வீட்டுச் செலவுக்குப் பற்றாக் குறை இருக்கும். அதற்கே பாங்கிலிருந்து எடுக்க வேணும்.

கடனுக்கு வட்டி கட்டவில்லை. இந்த நிலைமையில் சுந்தரிக்கு உல்லாசச் செலவுக்கும் கைக் கடிகாரத்துக்கும் எங்கிருந்து பணம் கிடைக்கும்—என்று எண்ணியெண்ணிக் கவலைப்பட்டாள்; கடைசியாகத் தன் மனதைத் திடப்படுத்திக் கொண்டு வீட்டுச் செலவுகளைக் குறைப்பது என்றும், சுந்தரியின் உல்லாசச் செலவுகளை மட்டுப்படுத்த வேண்டுமென்றும் கைக்கடிகாரம் வாங்குவதை ஒத்திப் போடுவது என்றும் தீர்மானித்துக்கொண்டாள்.

## அத்தியாயம் 20

சில நாள்கள் சென்று சுந்தரி அவளுடைய பள்ளித் தோழி கனகவல்லியுடன் ஓர் உல்லாசப் பிரயாணம் போவதற்காக மாமியாரை அணுகி முப்பது ரூபாய் வேண்டுமென்று கேட்டாள்.

அம்மணியம்மாளுக்கு மனதுக்குள் வருத்தம்தான் உண்டாயிற்று. ஆனாலும் அதை வெளியிட மனம் வரவில்லை. தன் மகனுடைய வாழ்க்கைக்கு மறுமலர்ச்சியுண்டாக்கியவள் என்றும், தானே தேர்ந்தெடுத்து அதிகச் செலவில் கட்டி வைத்த மருமகளென்றும் இதுவரையிலும் அளவுக்கு மீறிய சலுகை கொடுத்துவிட்டு இப்போது திடீரென்று எப்படி மனசைக் கல்லாக்கிக்கொள்ள முடியும்?

இல்லையென்று சொல்ல மனம் இடங்கொடுக்கவில்லை. ஆனாலும் தன் எண்ணத்தைச் சுமுகமாகவே தெரியப்படுத்தி விட வேண்டுமென்று உறுதி கொண்டாள்.

உடனே எழுந்து போய்ப் பெட்டியைத் திறந்து சுந்தரி கேட்ட முப்பது ரூபாயை எடுத்துக்கொண்டு வந்து அவளிடம் கொடுத்துவிட்டு, "சுந்தரீ! நான் சொல்லுகிறேன் என்று வருத்தப்படாதேயம்மா. இந்த வீட்டுக்கு நீதான் உடைமைக்காரி. நீ நல்ல படித்த பெண். வீட்டினுடைய வரவு செலவு இன்பதுன்பம் எல்லாத்தையும் பொறுப்போடு சமாளிக்க வேண்டியவள் நீதான். கைக்கடிகாரம் வாங்குவது போன்ற உருப்படியான செலவுகள் செய்தாலும் இப்படி உல்லாசத்துக்கென்று வீண் செலவுகள் செய்தால் : பின்னால் உனக்குத்தான் துன்பம். இது வரையிலும் நமக்குப் பணக் கஷ்டம் அதிகமில்லை. இப்போதிருக்கிற பணமுடை உனக்கே தெரிந்ததுதான். இனிமேல் இந்த மாதிரிச் செலவுகளை மட்டுப்படுத்திக்கொள்ள வேணும்" என்று புன்முறுவலோடு சொன்னாள்.

சுந்தரிக்கு முகம் சுருங்கிவிட்டது. ஆனாலும் மாமியாரிடம் மறுப்புப் பேச முடியாமல், "ஆகட்டும் அத்தை. இனிமேல்



மட்டுப்படுத்திக்கொள்ளுகிறேன்" என்று சொல்லிக்கொண்டே போய்விட்டாள்.

உல்லாசச் செலவுகளைக் கண்டித்தாலும் கைக்கடிகாரம் வாங்குவதை உருப்படியான செலவு என்று மாமியார் சொன்னதில் சற்று ஆறுதல் இருப்பதை நினைத்துக் கொண்டே போனாள்.

சுந்தரி போன பிற்பாடு அம்மணியம்மாள் மருமகளைக் கண்டிக்க நேர்ந்துவிட்டதை எண்ணித் தனக்குள்ளேயே வருத்தப்பட்டுக்கொண்டாள் ; அந்த வருத்தத்தின் முடிவாக உதித்த இரக்கத்தினால் பாங்கில் இருக்கிற பணத்தையாவது ஐநூறு ரூபாய் எடுத்துச் சுந்தரி ஆசைப்பட்ட வைரம் பதித்த கைக்கடிகாரத்தை வாங்கித் தந்துவிடத் தீர்மானித்தாள்.

சில நாள்கள் சென்று ஒருநாள் மாலை முருகேசனும் சுந்தரியும் ஜானகியுடன் கடற்கரைக்குப் போன பின் அம்மணியம்மாள் தனியாக உட்கார்ந்திருந்தாள். அப்போது வீட்டின் மேல் எட்டாயிரம் ரூபாய் கடன் கொடுத்திருக்கிற அம்மாள் வெகு வேகமாக அங்கு வந்தாள். வந்தவளை மரியாதையோடு வரவேற்று அம்மணியம்மாள் ஒரு பாயை எடுத்து வந்து விரித்து அந்த அம்மாளை உட்காரச் சொன்னாள். அந்த அம்மாள், "எனக்கு உட்கார்ந்து பேச நேரமில்லை. என் தங்கை வந்திருக்கிறாள். அவள் அசலூரில் வாழ்க்கைப்பட்டவள். அவளுடைய புருஷன் வாங்கியிருந்த கடனுக்காக அவளுடைய வீடு ஏலத்துக்கு வந்துவிட்டதாம். பணம் கட்ட நாளைதான் கடைசி நாளாம். அழுதுகொண்டே வந்திருக்கிறாள். மூவாயிரம் ரூபாய் கட்ட வேண்டும். என்னிடம் இப்போது இரண்டாயிரம்தான் இருக்கிறது. இந்த வருஷத்துக்கு நீங்கள் தர வேண்டிய வட்டிப் பணத்தை உடனே தந்தால் ரொம்ப உபகாரமாயிருக்கும். எப்படியாவது பார்த்துக் கொடுங்கள். உங்கள் புண்ணியமாக அவளுடைய வீடு ஏலம் போகாமலிருக்கட்டும்" என்று கெஞ்சும் குரலில் கேட்டாள்.

அம்மணியம்மாள் திகைத்துவிட்டாள் ; மெல்லவும் முடியாமல விழுங்கவும் முடியாமல், "இப்ப எனக்கும் முடை யான சமயம். என்ன செய்வேன்?" என்றாள்.

"அப்படியெல்லாம் சொல்லக் கூடாது. உங்களைக் கையெடுத்துக் கும்பிடுகிறேன்" என்று கும்பிட்டாள் அந்த அம்மாள்.

அம்மணியம்மாளுக்குத் தர்ம சங்கடமாகி விட்டது. தனக்குள்ள கஷ்டங்களையும் மறந்து மனம் இளகிவிட்டது.

"அம்மா! உங்களுடைய அவசரத்துக்கு உதவ வேண்டியது என் கடமைதான். என்னிடத்தில் இப்போது எழுநூற்று ஐம்பதுதான் இருக்கிறது" என்றாள்.

"பரவாயில்லை. அதைக் கொடுங்கள். அதையே ஒரு வருஷத்துக்கு வட்டியாக வரவு வைத்துவிடுகிறேன். மீதி நீங்கள் தராவிட்டாலும் பாதகமில்லை" என்றாள் அந்த அம்மாள்.

உடனே போய் அம்மணியம்மாள் அந்தத் தொகையை எடுத்து வந்து கொடுத்தாள். மிக்க வந்தனத்துடன் அதை வாங்கிக்கொண்டு, "இன்று ராத்திரி வண்டியிலேயே தங்கையைப் பணத்துடன் அனுப்பியாக வேணும்" என்று சொல்லிக் கொண்டே அந்த அம்மாள் போய்விட்டாள்.

அந்த அம்மாள் மறைந்தவுடன் அம்மணியம்மாள் மனதில் கவலை நிறைந்துவிட்டது. நெல் விற்று வந்த பணம் ஆயிரத்து எண்ணூற்று ஐம்பது ரூபாய். அதில் டாக்டருக்குப் போக மீதி எண்ணூற்று ஐம்பது ரூபாய். அதில் சில்லறைச் செலவுகளும் சுந்தரி உல்லாசப் பயணத்துக்காக வாங்கிக்கொண்ட முப்பது ரூபாயும் சேர்த்து ஐம்பது ரூபாய். மீதி எண்ணூறு ரூபாயில் உடனடியாக வீட்டுச் செலவுக்கு வேண்டுமே என்று ஐம்பது ரூபாயைக் கழித்துத்தான் எழுநூற்று ஐம்பது இருப்பதாகச் சொல்லிக் கொடுத்தது.

இந்த ஐம்பது ரூபாய் எத்தனை நாளைக்கு வரும்? வருஷம் முழுதுக்கும் வீட்டுச் செலவுக்கு என்ன செய்வது? பாங்கில் இருக்கிற பணத்தைக் கரைக்க வேண்டியதுதான். கைக்கடிகாரம் எப்படி வாங்க முடியும்? சினிமா, டிராமா, உல்லாசப் பயணம் முதலிய டம்பச் செலவுகள் எதிலிருந்து செய்யமுடியும்?

மகனுடைய மகிழ்ச்சியைக் கருதி மருமகளின் உல்லாசச் செலவுகளை முற்றிலும் தடுத்துவிட மனம் வரவில்லைதான்.



மருமகளுக்கு அவள் நெடுநாளாகக் கேட்டுக்கொண்டிருக்கிற கைக்கடிகாரத்தை வாங்கித் தந்துவிட வேண்டுமென்பது மனப் பூர்வமாக விரும்பியதுதான். ஆனால் என்ன செய்வது?

அடுத்த ஒரு மாதம் முடிய சுந்தரி, தன் உல்லாசச் செலவுக் கென்று மாமியாரிடம் பணம் கேட்கவில்லை. அவளுக்குக் கடிகாரம் வந்தால் போதும் என்பது எண்ணம்.

வழக்கம் போலத் தினந்தினம் மாலை நேரத்தில் வெளியே போனாலும் சினிமா, நாடகம், சிற்றுண்டி, ஓட்டல் முதலிய இடங்களுக்குப் போகவில்லை. முன்பெல்லாம் சில நாள்களில் ஓட்டல்களிலேயே சாப்பிட்டுவிட்டு இரவு பத்துப் பதினோரு மணிக்கு வீட்டுக்கு வருவார்கள். இந்த ஒரு மாதமாக எட்டு மணிக்குள் வீட்டுக்கு வந்துவிடுகிறார்கள்.

அத்துடன் அம்மணியம்மாளின் வேண்டுகோளின்படி முருகேசன் அடிக்கடி வயல்களுக்குப் போய்க் கவனித்துக் கொள்ள வேண்டியிருந்ததால் பல நாள்கள் சுந்தரி கணவனுடன் வெளியே போக முடியாமலும் நேர்ந்துவிட்டது.

இந்த ஒரு மாதமும் சுந்தரி வீட்டு வேலைகளில் மாமியாருக்கு மிக்க ஒத்தாசையாகவே இருந்தாள்.

ஒரு நாள் மதிய உணவுக்குப் பின் மாமியாரும் மருமகளும் ஓய்வாக அமர்ந்து பேசிக்கொண்டிருக்கும்போது, சுந்தரி, "அத்தை, கடிகாரம் வாங்கவில்லையே" என்றாள்.

"ஆமாண்டியம்மா. அதைப்பற்றி உனக்குச் சொல்ல வேண்டுமென்று எண்ணிக்கொண்டிருந்து மறந்தே போனேன். உல்லாசச் செலவுகள் செய்ய வசதியில்லாவிட்டாலும் அந்தக் கடிகாரத்தையாவது வாங்கிவிடத்தான் ரொம்ப ஆசைப்பட்டேன். அந்த ஆசையில் மண்ணைப் போட அந்தக் கடன் கொடுத்த அம்மாள் வந்து சேர்ந்தாள். உன் கல்யாணத்துக்கு வாங்கின கடனுக்கு வருஷா வருஷம் தொளாயிரத்து அறுபது ரூபாய் வட்டி மட்டும் கட்ட வேணும். உனக்குக் கடிகாரம் வாங்கித் தந்துவிட்டு அடுத்த மாசூலில் வட்டி கட்டலாமென்று எண்ணியிருந்தேன். அந்த அம்மாள் என்னமோ ரொம்பத் தலைபோகிற அவசரம் என்று வந்து என் கையிலிருந்த பணத்தையெல்லாம்

வாங்கிக்கொண்டு போய்விட்டாள். பொறுத்துக்கொள். கடிகாரம் பின்னால் வாங்கிக்கொள்ளலாம். இந்த வருஷம் முடிய வீட்டுச் செலவுக்கே ரொம்பக் கஷ்டப்பட வேண்டியிருக்கும். நல்ல காலம் வருகிற வரைக்கும் ரொம்பச் சிக்கனமாக இருக்க வேண்டும்'' என்றாள் மாமியார்.

சுந்தரிக்கு எல்லையற்ற ஏமாற்றமும் எரிச்சலும் உண்டாகிவிட்டது. ஆத்திரம் பொங்கிவிட்டது. வெளிப்படையாகத் தன் கோபத்தைக் காட்டிவிட முடியவில்லை. கண் கலங்கத் தலையைக் கவிழ்த்துக்கொண்டாள்; சிறிது நேரம் அப்படியே இருந்துவிட்டு விலுக்கென்று எழுந்து கண்ணைக் கசக்கிக் கொண்டே தன் அறைக்குள் போய்க் கட்டிலில் படுத்துக் குமுறிக் குமுறி அழுதாள். திருமணமான பின் இப்போதுதான் முதன் முதல் மாமியாரின்மீது அவளுக்கு உண்டான மனத்தாபம்.

முருகேசன் அப்போது வயல்களுக்குப் போயிருந்தான். அவன் இருந்தால் சுந்தரி இப்படி அழ முடியாது. அழுகைக்குக் காரணம் கேட்பான். நடந்ததைச் சொல்ல முடியாது. ஏனென்றால், சுந்தரி கடிகாரம் வேண்டுமென்று அவனுடைய தாயாரிடம் கேட்டிருந்ததும் அதை வாங்கித் தருவதாகத் தாயார் சொல்லியிருந்ததும் அவனுக்குத் தெரியாது. தன் தாயார சுந்தரியின் மீது அளவற்ற அன்பு கொண்டிருக்கிறார் என்பதும், சுந்தரி கேட்டதையெல்லாம் கொடுக்கிறார் என்பதும் மட்டும்தான் அவனுக்குத் தெரியும். முருகேசன் உல்லாசச் செலவுக்கென்று தன் தாயாரிடம் ஒரு நாளும் பணம் கேட்டதில்லை. உல்லாசச் செலவுகளுக்கும் முன் சுந்தரி கல்லிழைத்த வளையல்கள் செய்துகொண்டதற்கும், அவளுடைய தங்கையின் திருமணத்தில் தங்க வளையல்கள் பரிசளித்ததற்கும் தன் தாயாரே சுந்தரியின்மீதுள்ள பாசத்தால் கொடுத்ததாகத்தான் முருகேசன் எண்ணிக்கொண்டிருக்கிறான். அப்படி அவன் எண்ணிக் கொள்ளும்படியே அவன் தாயாரும் சுந்தரியும் ஒற்றுமையாக நடந்துகொண்டிருக்கிறார்கள்.



முருகேசன் இதுவரைக்கும் தாயாரின் செல்லக் குழந்தையாக வீட்டின் வரவு செலவுகள் கூட என்னவென்று தெரியாமல் இருந்திருக்கிறான்.

அதனால் இப்போது சுந்தரிக்கு வந்த அழுகைக்குக் காரணம் சொல்லி மாமியாரின்மீது குற்றம் சொன்னால் இது வரைக்கும் கணவனுக்குத் தெரியாமல் இருந்த, சுந்தரி செய்த குற்றங்களெல்லாம் வெளியாகிக் கணவனுடைய அருவருப்புக்கு ஆளாகிவிட நேரும். இதை உணரக்கூடிய புத்திக் கூர்மையுள்ளவள் சுந்தரி.

அந்த உணர்ச்சி உண்டானவுடனே சுந்தரி படுக்கையை விட்டெழுந்து அழுகையை நிறுத்திக் கண்களைத் துடைத்துக் கொண்டு கண்ணாடியில் முகத்தை அழகு பார்த்து உடையை ஒழுங்கு படுத்திக்கொண்டு அறையைவிட்டு வெளியே வந்தாள்.

அதைக் கண்ட மாமியார், "ஏம்மா சுந்தரி! நான் சொன்னதிலே உனக்குக் கோபமா?'' என்றாள்.

"இல்லை அத்தை, ஆசைப்பட்டது கிடைக்கவில்லையே என்று அழுகை வந்தது. பின் யோசித்துப் பார்த்ததில் நீங்கள் சொன்னது சரிதான் என்று தெரிந்துகொண்டேன்'' என்றாள் சுந்தரி.

"ஆமாம்மா. அதுதான் புத்திசாலித்தனம். இந்தக் கஷ்ட காலம் போகட்டும். கடிகாரம் ஒன்றுதானா, வேறு எது வேணுமானாலும் வாங்கிக்கொள்ளலாம்'' என்றாள் மாமியார்.

மருமகள் குடும்பக் கஷ்டத்தை உணர்ந்துவிட்டதாக எண்ணித்தான் மாமியார் இப்படிச் சொன்னது. ஆனால் சுந்தரி, 'நீங்கள் சொன்னது சரிதான் என்று தெரிந்துகொண்டேன்' என்று சொன்னது வெறும் கண் துடைப்பு. நடந்த விஷயங்கள் கணவனுக்குத் தெரிந்துவிடக் கூடாதே என்பதற்காக மாமியார் மெச்சச் சொன்னதுதான்.

கடிகாரம் வாங்க முடியாது என்று மாமியார் சொன்னவுடனேயே சுந்தரிக்கு மாமியார் மீதிருந்த மதிப்பும் நம்பிக்கையும் போய்விட்டன.

அடுத்த நாளே வீட்டு வேலைகளில் மாமியாருக்குத் துணை புரியும் ஆர்வம் குறைந்துவிட்டது. அதைக் காட்டிக் கொள்ளாமல் சில நாள்கள் முன் போலவே ஒத்தாசை செய்து படிப்படியாக அந்த ஒத்தாசை குறைந்துவிட்டது. ஆனாலும் மாமியார் சந்தேகிக்காமல் இருக்கும்பொருட்டு ஏதாவது ஒரு காரணம் சொல்லிவிட்டு வெளியே போய் விடுவாள்; சில நாள் களில் கணவனோடு வயல்களுக்குப் போய் விடுவாள். வீட்டு வேலைகளையெல்லாம் வேலைக்காரப் பெண்ணுடைய ஒத்தாசையுடன் அம்மணியம்மாள்தான் செய்ய வேண்டியிருக் கும்.

சுந்தரி வீட்டு வேலைகளில் ஒத்தாசை செய்யவில்லையே என்று அம்மணியம்மாள் வருத்தப்படவில்லை; அதற்கு மாறாகத் தன் மருமகள் முன் போல உல்லாசச் செலவுகளுக்குப் பணம் கேட்காமல் பண்ணையைக் கவனிக்கும் பொறுப்புள்ள வளாகி விட்டாள் என்று மகிழ்ச்சியடைந்தாள்.

அந்த மகிழ்ச்சி நீடிக்கவில்லை. சுந்தரமூர்த்தி இல்லாத தால் வயல்களில் சாகுபடி வேலைகளை முருகேசன் பொறுப் போடுதான் கவனிக்கலானான். அதனால் நடவு நட்டு முடிகிறவரையிலும் அவன் அடிக்கடி வயல்களுக்குப் போக வேண்டியிருந்தது. அப்போது அவனை உல்லாசப் பொழுது போக்குக்கு இழுத்துக்கொண்டு சுந்தரி எங்கும் போக முடிய வில்லை. வயல்களில் நடவு நட்டபின் அடிக்கடி வயலுக்குப் போக வேண்டிய அவசியம் இல்லை. இடையிடையே போனாலும் அதிக நேரம் தங்க வேண்டிய அலுவலும் இருக்காது.

அதனால் நடவுக்குப் பின் இரண்டொரு நாள்கள் சென்றதும் பழையபடி உல்லாசப் பொழுது போக்கு ஆரம்ப மாயிற்று. உல்லாசச் செலவுக்கு மாமியாரிடம் சுந்தரி பணம் வாங்க முடியாமற்போனபின் சினிமா, நாடகம், கண்காட்சி, வெளியூர் பயணம் முதலிய எதற்கும் போக முடியாமல், வெறும் உலாவுதலுக்காக மட்டும் மாலை நேரங்களில் வெளியே



போய் எட்டு மணிக்கு முன் வீட்டுக்கு வந்துகொண்டிருந்த சுந்தரியும் முருகேசனும் இப்போது பத்து மணி பதினொரு மணிக்கு வீட்டுக்கு வருவது வழக்கமாகி விட்டது.

சில நாள்களில் ஓட்டலிலேயே சாப்பிட்டுவிட்டு வந்ததாக வந்தவுடன் தூங்கப் போய்விடுவார்கள்.

இப்படி இவர்கள் நேரங்கழித்து வரத் தொடங்கிய முதல் இரண்டு மூன்று நாள்களில் அம்மணியம்மாளுக்குச் சந்தேகம் ஒன்றும் உதிக்கவில்லை. சுந்தரி முன்னே வாங்கிய பணத்தில் ஏதாவது மிச்சம் பிடித்து வைத்திருந்து அதைக்கொண்டு சினிமாவுக்குப் போய் வருகிறார்களாக்கும் என்று எண்ணிக் கொண்டாள்.

தொடர்ந்து ஒரு மாதத்துக்குமேல் தினமும் இவர்கள் சினிமாவுக்கோ, நாடகத்துக்கோ, ஓட்டலுக்கோ போய் விட்டு வருவதைக் கண்ட பின் அந்த அம்மாளுக்கு அச்சம் உதித்து விட்டது. 'இந்த உல்லாசச் செலவுகள் செய்வது சுந்தரிதான். அவளுக்கு எங்கிருந்து பணம் கிடைத்திருக்கும்?' என்ற புதிருக்கு விடை காண முடியவில்லை. ஒரு வேளை தனக்குத் தெரியாமல் தன் பெட்டியைத் திறந்து முன்போல் ஏதாவது செய்துவிட்டாளோ என்ற பயம் அம்மணியம்மாளுக்கு வந்து விட்டது.

உடனே பெட்டியைத் திறந்து ஆராய்ந்தாள். பெட்டி யிலிருந்த பணமும் அப்படியே இருந்தன. அப்படியானால் அவளுக்குப் பணம் ஏது?

முருகேசன் கொடுத்திருக்க முடியாது. அவனிடத்தில் பணம் இருந்ததில்லை. முட்டுவழிச் செலவுக்கென்று சுந்தர மூர்த்தி ஒதுக்கி வைத்துவிட்டுப் போன பணத்தையும் அம்மணி யம்மாள்தான் வீட்டுக்கே வந்திருந்த பண்ணை பார்க்கும் குடியானவனிடம் கொடுத்தாள். பின் எங்கிருந்து சுந்தரிக்குப் பணம் கிடைத்திருக்கும்? அம்மணியம்மாள் திகைத்தாள்.

மகனைக் கேட்கலாமா என்று எண்ணினாள். முருகேசனோ சுந்தரி செலவு செய்கிற பணமெல்லாம் அவனுடைய தாயாரே

மருமகளுடைய உல்லாசச் செலவுக்கென்று கொடுப்பதுதான் என்று எண்ணிக்கொண்டிருப்பவன். அவனைக் கேட்டால் அவன் சுந்தரியைக் கேட்பான். அதிலிருந்து அவனிடம் இது வரையிலும் சொல்லாத பழைய சுந்தரியின் குற்றங்களையெல்லாம் கிளப்ப நேரும். அதன் பயனாக மகனுக்கும் மருமகளுக்கும் இருந்து வருகிற நல்லுறவைக் கெடுக்க நேரும்—என்றெல்லாம் எண்ணி மகனுடைய நிம்மதியைக் கெடுத்துவிடக் கூடாது என்று அந்த எண்ணத்தைத் தள்ளிவிட்டாள்.

மருமகள் முன்போல் அவ்வளவு சுமுகமாகத் தன்னிடத்தில் நடந்துகொள்வதில்லையென்றாலும் அவளையே கேட்டு விடுவதென்று தீர்மானித்தாள்.

சுந்தரி, மாமியாரைத் தேடி வந்து ஒய்வாக உட்கார்ந்து பேசும் வழக்கம் அற்றுப் போய்விட்டது. அதனால் அவளை ஏகாந்தமாகச் சந்திக்கச் சில நாள்கள் ஆயின. ஒரு நாள் முருகேசன் வெளியே போயிருந்த சமயத்தில் மாமியாரே அவளுடைய அறைக்குள் சென்றாள். மாமியாரைக் கண்டதும் திடுக்கிட்டவள் போல் எழுந்து வந்து, "என்ன அத்தை?" என்றாள்.

"சுந்தரி! நான் கேட்கிறேன் என்று கோபப்படாமல் பதில் சொல்லம்மா" என்றாள் மாமியார்.

"எனக்கென்ன அத்தை கோபம்? கேளுங்கள்."

"இரண்டு மாசமாகத் தினந்தினம் சினிமாவுக்கும் நாடகத்துக்கும் ஓட்டலுக்கும் பழையபடியே போய் வருகிறீர்களே, அதற்கெல்லாம் பணமேது?"

சுந்தரி பதில் சொல்லாமல் சிரித்தாள். மாமியாரிடத்தில் அவளுக்கு முன்போல் மதிப்போ விசுவாசமோ இப்போது இல்லையென்றாலும் மாமியாருக்குக் கோபம் வந்துவிடும்படி அலட்சியம் செய்துவிட அஞ்சினாள். ஏனெனில், தன்னுடைய துடுக்கான காரியங்களைக் கணவனிடம் சொல்லிவிட இடமுண்டாக்கிவிடக் கூடாது என்பதால்தான். அதனால்தான் மாமியாரின் அனுதாபத்தைக் கோருவதுபோல் சிரித்தாள்.



இந்த மாமியாருக்கும் மருமகளுக்கும் உள்ள உறவு வெகு விசித்திரமானது.

தன் குற்றங்களைத் தன் கணவனிடம் மாமியார் சொல்லி விடக்கூடாதே என்பதற்காக மருமகள் மாமியாரிடத்தில் ஒப்புக்காவது மரியாதை காட்டினாள்.

மாமியாரோ மருமகள் செய்யும் குற்றங்கள் மகனுக்குத் தெரிந்தால் அவனுடைய நிம்மதி குலைந்து அவனுடைய இன்ப வாழ்க்கை கெட்டுப் போய்விடுமே என்பதற்காக மருமகளிடத்தில் அனுதாபம் காட்டினாள்.

சிரித்துக்கொண்டிருந்த சுந்தரி சிரிப்பை நிறுத்திவிட்டு, "அத்தை! மன்னித்துவிடுங்கள். முன்னே உங்கள் பெட்டியிலிருந்து எடுத்துக் கல்லிழைத்த சடைபில்லையை அழித்து தங்கைக்கு வளையல்கள் செய்தேன் பாருங்கள். அதிலிருந்த வைரங்களையும் பச்சை நீலம் முதலிய கல்லுகளையும் எடுத்து வைத்திருந்தேன் பாருங்கள்; அவைகளை விற்றுவிட்டேன்" என்றாள்.

"எவ்வளவுக்கு?"

"ஆயிரத்து நூற்றைம்பது ரூபாய்க்கு."

"அடி பாவிப் பெண்ணே! அதெல்லாம் இன்னும் அதிக விலைக்குப் போகுமே! அவைகளை உனக்குப் பிரியமான நகைகள் செய்துகொள்ளவாவது பயன்படுத்திக்கொண்டிருக்கலாமே! அப்படித்தான் விற்றாயே, அந்தப் பணத்தில் என்னை நச்சரித்துக்கொண்டிருந்தாயே — அந்த வைரம் பதித்த கடிகாரத்தையாவது வாங்கிக்கொள்ளாமல் சினிமாவுக்கும் நாடகத்துக்கும் ஓட்டலுக்கும் செலவு செய்து பாழடிக்கிறாயே!" என்று முகம் சுளித்தாள் மாமியார்.

"இல்லை அத்தை, இன்னும் ஐநூறு ரூபாய்க்குமேல் பணம் இருக்கிறது. கைக்கடிகாரம் வாங்கிக்கொள்கிறேன்" என்று முறுவலித்தாள், சுந்தரி.

அம்மணியம்மாள் மனம் இளகிவிட்டது.

"அப்படியாவது உடனே அந்தக் கடிகாரத்தை வாங்கிக் கொள்ளு. பணத்தை வீணாக்காதே. அது சரி; நீ கல்லுகளை விற்றது உன் புருஷனுக்குத் தெரியுமா?" என்றாள் மாமியார்.

"இல்லை, தெரியாது. நான் கனகவல்லி மூலமாக விற்றேன்."

"ஆமாம்; அவனுக்குத் தெரிய வேண்டாம். தெரிந்தால் வருத்தபபடுவான்" என்றாள் மாமியார்.

"இல்லை அத்தை. நான் அத்தானிடம் சொல்ல மாட்டேன்."

மாமியார் எழுந்து போய்விட்டாள். சம்பாஷணை சுமுக மாகவே முடிந்தாலும் இரு தரப்பிலும் மன வேற்றுமை அதிகப் பட்டுவிட்டது.

## அத்தியாயம் 21

**சொ**ன்னபடி சுந்தரி கடிகாரம் வாங்கவில்லை. சில நாள்கள் சென்று மாமியார் 'கடிகாரம் வாங்கவில்லையா?' என்று கேட்டதற்கு, கனகவல்லி வைத்திருப்பது போல் வைரம் பதித்த கடிகாரம் ஒன்றே ஒன்றுதான் கடையில் இருந்த தாகவும், அது ஒரு மாதத்துக்குமுன் விற்பனையாகி விட்ட தாகவும், அதேபோல் தருவிக்கும்படிச் சொல்லியிருப்பதாகவும் சுந்தரி சொன்னாள்.

அது மெய்யோ பொய்யோ. ஆனால், மாமியார் அதை ஒத்துக்கொண்டது போல், "அதே மாதிரிக் கடிகாரம் வருவதற்குள் பணத்தைச் செலவழித்துவிடாதே" என்று சொல்லிவிட்டு அப்புறம் அதைப்பற்றிக் கவலைப்படவில்லை.

வீட்டு வேலைகளில் சுந்தரியின் ஒத்தாசை மிகவும் குறைந்துவிட்டது. ஒரு வாரம் அம்மணியம்மாளுக்கு உடல் நலம் கெட்டு வேலை செய்ய முடியவில்லை. அப்போதுங்கூட சுந்தரி வேலைக்காரப் பெண்ணை விரட்டிச் சமையல் செய்யச்



செய்தாளேயொழியத் தான் வளைந்து காரியங்களைச் செய்ய வில்லை.

அந்த நாள்களில் அம்மணியம்மாளுக்குச் சந்திரா, சுந்தர மூர்த்தி, தாமரைக்கண்ணி ஆகிய மூவரைப்பற்றிய ஏக்கம் அதிகரித்துவிட்டது. ஆரோக்கியத் தலத்துக்கென்று அவர்கள் போய் மூன்று மாதங்களுக்குமேல் ஆகியும் அவர்கள் திரும்பி வரவும் இல்லை. எங்கேயிருக்கிறார்கள், தாமரைக்கண்ணியின் உடல் நலம் எப்படியிருக்கிறது என்பதைப்பற்றிய தகவலும் வரவில்லை.

நான்கு மாதங்களுக்குப் பின் ஒரு நாள் சுந்தரியும் முருகேசனும் ஜானகியுடன் மாலை பொழுதுபோக்குக்குப் போய் விட்டார்கள். அம்மணியம்மாள் தனியே உட்கார்ந்துகொண்டு தாமரைக்கண்ணி, சந்திரா, சுந்தரமூர்த்தி ஆகியவர்களைப் பற்றியே நினைத்துக் கவலைப்பட்டுக்கொண்டிருந்தாள்.

அப்போது அந்த அம்மாளை நாடி நல்லதம்பி என்ற மருந்து கடைக்காரர் வந்தார். அவர் சுந்தரமூர்த்திக்கு நண்பர். அவருடைய கடையில்தான் வழக்கமாகச் சுந்தரமூர்த்தி தாமரைக்கண்ணிக்கு வேண்டிய மருந்துகளை வாங்குவது. அம்மணியம்மாளுக்கும் பழக்கமானவர். அவரை அன்புடன் வரவேற்று உபசரித்தாள், அம்மணியம்மாள்.

சிறிது நேரம் சேம சமாசாரங்களைப் பேசிவிட்டு அவர் சொன்னார்:

"சுந்தரமூர்த்தி உங்கள் மருமகளைக் கூட்டிக்கொண்டு ஆரோக்கியத்துக்காக வெளியூர் போகும்போது என்னிடம் அவருக்குள்ள நம்பிக்கையினால் ஓர் இரகசியம் சொல்லி விட்டுப் போனார்........"

"என்ன இரகசியம்?" என்று அவசரப்பட்டாள் அம்மணி யம்மாள்.

"ஒன்றும் பிரமாத இரகசியமல்ல. அவர்கள் போகும் இடங் களையும் உங்கள் மூத்த மருமகளுடைய உடல் நலத்தைப்

பற்றியும் அப்போதைக்கப்போது எனக்குக் கடிதம் எழுதுவதாகவும், அதை உங்களிடம் மட்டும் தனியாகச் சொல்ல வேண்டுமென்றும், அதேபோல் உங்களுடைய சேமத்தையும் முருகேசன், இளைய மருமகள் முதலானவர்களின் சேமத்தைப் பற்றி நான் அவருக்கு எழுத வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார்......" என்று அவர் சொல்லி முடிக்குமுன், "உங்களுக்குக் கடிதம் வந்திருக்கிறதா ?" என்று ஏக்கத்தோடு கேட்டாள் அம்மணியம்மாள்.

"ஆமாம். இன்று காலையில்தான் வந்தது."

"எங்கிருந்து எழுதியிருக்கிறான்? என்ன எழுதியிருக்கிறான்? விவரமா சொல்லுங்க சாமி."

"விவரமாகவே சொல்லுகிறேன். பொறுத்துக் கேளுங்கள்: ஆஸ்பத்திரியிலிருந்து நேராகக் கொடைக்கானலுக்குப் போனார்களாம்; அங்கே அவருடைய பள்ளித் தோழர் இராமநாதனுக்குச் சொந்தமான பங்களா இருக்கிறதாம். அதில் இரண்டு மாதம் தங்கினார்களாம்; தாமரைக்கண்ணியம்மாளுக்குப் பூரண சுகமுண்டாகி உடம்பு தேறி நன்றாக நடக்க முடிந்த பின் கொடைக்கானலை விட்டு வழியிலுள்ள பல க்ஷேத்திரங்களைத் தரிசித்துக்கொண்டே திருப்பதி திருமலைக்குப் போனார்களாம்; அங்கே பதினைந்து நாள்கள் தங்கிச் சேவை செய்துவிட்டு அலமேலுமங்காபுரத்தில் மூன்று நாள்களாகத் தங்கியிருக்கிறார்களாம். நாளை அல்லது மறுதினம் அதை விட்டுத் தெற்கே உள்ள திருத்தலங்களுக்குப் புறப்படப் போகிறார்களாம். விவரம் அடுத்த கடிதத்தில் அவர் தங்கும் விலாசத்தைத் தெரியப்படுத்துவதாகவும், அவருடைய விலாசத்துக்கு நான் இங்குள்ள நலத்தை எழுத எழுதியிருக்கிறார்" என்றார்.

"போகட்டும் போங்க. எனக்கு ராப்பகலாய் அவர்களைப் பற்றிய கவலையாகவே இருந்தது. இந்தமட்டில் தாமரை சுகமடைந்தும் புண்ணியச் சேத்திரங்களுக்கெல்லாம் போகும் படியான பாக்கியம் இடைச்சுதே, அதே போதும். என் மனம்



குளிர்ந்தது. ஆமாம், இங்கே திரும்பி வர இன்னும் எத்தனை நாள் ஆகுமாம்? அதை எழுதலையா?"

"இல்லை, அதைப்பற்றிஎழுதவில்லை. அடுத்த கடிதத்தில் ஒருகால் எழுதலாம். அவருடைய விலாசம் தெரிந்தவுடன் நான் பதில் எழுத வேண்டும். உங்களைப்பற்றி என்ன எழுதட்டும்?" என்றார் நல்லதம்பி.

"என்னைப்பற்றி எழுத என்ன இருக்கிறது? இங்கே எல்லாரும் சௌக்கியமாக இருக்கிறார்கள் என்று எழுதுங்கள். அதோடு எனக்கு அவர்களைப்பற்றிய ஏக்கமாகவே தூக்கங்கூட வருவதில்லை. போக வேண்டிய கோயில்களுக்கெல்லாம் சுருக்காகப் போய்விட்டுச் சீக்கிரம் இங்கே வந்துவிடும்படி நான் ரொம்பவும் கேட்டுக்கொண்டதாக எழுதுங்கள். அவர்களுடைய அடுத்த கடிதம் வந்ததும் எனக்கு வந்து விவரம் சொல்லுங்க, ஐயா. எனக்கு அதே நினைப்பாகவே இருக்கும்."

"ஆகட்டும், அவர் எனக்குக் கடிதம் எழுதுவதே உங்களுக்குச் சொல்லுவதற்காகத்தானே? வந்து சொல்லாமலிருப்பேனா?"

"ஆமாம், ஐயா" என்று அம்மணியம்மாள் அவரைக் கும்பிட்டாள்.

அவரும் கும்பிட்டுவிட்டு விடை பெற்றுக்கொண்டார்.

வீட்டுக்குக் கடிதம் எழுதாமல் சுந்தரமூர்த்தி ஏன் இவருக்கு எழுதியிருக்கிறான் என்ற காரணம் அம்மணியம்மாளுக்கு விளங்கிவிட்டது.

பதினைந்து நாள்கள் சென்று நல்லதம்பி வந்து சுந்தரமூர்த்தி முதலானவர்கள் திருப்பரங்குன்றத்தில் தங்கியிருப்பதாகவும், விலாசம் தந்திருப்பதாகவும் பதில் எழுதப்போவதாகவும் அம்மணியம்மாள் சீக்கிரம் அவர்கள் திரும்பி வந்துவிடக் கேட்டுக்கொண்டதாகப் பதில் எழுதப்போவதாகச் சொல்லிவிட்டுப் போனார்.

இப்படிப் பல முறை வந்து சுந்தரமூர்த்தி கடிதம் எழுதியிருப்பதை அம்மணியம்மாளிடம் சொல்லிவிட்டு, ஒவ்வொரு

தடவையும் பதில் எழுதும்போது அவர்களைச் சீக்கிரம் திரும்பி வந்துவிடும்படி அம்மணியம்மாள் கேட்டுக்கொண்டதையும் எழுதினதாக நல்லதம்பி சொல்லிப் போனார்.

ஆனால், சுந்தரமூர்த்தி எழுதிய கடிதங்கள் எல்லாவற்றிலும் அங்குள்ள சேமத்தை மட்டும் எழுதி, இங்குள்ள சேமத்தைக் கேட்டிருந்தானேயல்லாமல் திரும்பி வருவதைப் பற்றி எழுதவேயில்லையாம்.

அதைக் கண்டு அம்மணியம்மாள் வியப்பும் திகைப்பும் அடைந்து முன்னிலும் அதிகம் கவலைப்படத் தொடங்கி விட்டாள். சந்திராவும் சுந்தரமூர்த்தியும் இல்லாமல் அந்த அம்மாள் வீட்டு வேலைகள் செய்து மிகவும் நொந்துகிடப்பவள்; தாமரைக்கண்ணி ஆரோக்கியமாக இருப்பதைக் கண்டு மகிழ வேண்டுமென்று துடித்துக்கொண்டிருப்பவள். சில நாள்கள் ஆரோக்கியத்துக்காக வெளியூரில் தங்கிவிட்டு வந்துவிடுவார்கள் என்றே தினந்தினம் அவர்களை எதிர்பார்த்துக்கொண்டிருந்தவள்; இப்போது, அவர்கள் திரும்பி வரும் எண்ணமே இல்லாதவர்கள் போலத் தோன்றுவதைக் கண்டு துயரத்தில் ஆழ்ந்து விட்டாள்.

இந்தத் துயரம் சுந்தரியின் பொறுப்பில்லாத் தன்மையாலும் உதவியில்லாத நடத்தையாலும் மேலும் பல மடங்கு அதிகமாக வருத்தியது.

சுந்தரி கடிகாரம் வாங்கவில்லை. கையிலிருந்த பணத்தையெல்லாம் உல்லாசப் பொழுது போக்குக்கே செலவழித்துவிட்டாள். வருஷக் கடைசியில் உல்லாசச் செலவுக்குப் பணமில்லாமல் இரவில் வெகு சீக்கிரமாகவே வீட்டுக்கு வந்துவிட வேண்டியதாகிவிட்டது.

அதன் பிறகு சுந்தரி மாமியாரின் தயவைச் சம்பாதிக்க எண்ணி முன்போல் வீட்டு வேலைகளில் மாமியாருக்கு ஒத்தாசை செய்யத் தொடங்கினாள். அதிலிருந்து அம்மணியம்மாள் நிலையை அறிந்துகொண்டாள்; மருமகளை ஒன்றும்



கேட்க வேண்டாம் என்று முதலில் எண்ணினாள். ஆனால், மனம் அமைதியடையவில்லை. ஒரு நாள் முன்போல் இருவரும் ஒய்வாகப் பேசிக்கொண்டிருக்கையில், "சுந்தரி, கடிகாரம் வாங்கவில்லையா?" என்றாள் மாமியார்.

சுந்தரி புன்முறுவலுடன், "அத்தை! என்னை மன்னித்து விடுங்கள். கடிகாரம் வாங்கத்தான் நீங்கள் சொன்னபடி பணத்தைப் பத்திரமாக வைத்திருந்தேன்; அடிக்கடி கடிகாரக் கடைக்குப் போய்க் கேட்டேன். நான் விரும்பின மாதிரி கடிகாரம் வரவில்லை. மறுபடியும் அதே மாதிரியான கடிகாரத்துக்கு எழுதியிருப்பதாகச் சொன்னான். அதற்குள் சிறுகச் சிறுகப் பணமெல்லாம் செலவாகிவிட்டது; அத்தை. நான் செலவு செய்தது தப்புதான், அத்தை. அடுத்த மகசூலில் நீங்களே அதை வாங்கித் தந்துவிடுங்கள், அத்தை" என்று கெஞ்சினாள்.

அம்மணியம்மாளுக்கு எரிச்சல் பொங்கியது. ஆனாலும் காட்டிக்கொள்ளவில்லை. எப்படித் தன் எரிச்சலைக் காட்டிக் கொள்ள மனம் துணியும்? இரண்டாவது கல்யாணம் வேண்டாம் என்று மகன் சொன்னான். அவனைக் கட்டாயப்படுத்தி வெகு அருமையான பெண்ணென்று தான் கொண்டுவந்த மருமகளாயிற்றே! சுந்தரிக்கு உடனே பதில் சொல்லாமல் சிறிது நேரம் மனத்துக்குள்ளேயே குழம்பிக்கொண்டிருந்துவிட்டு, "வீட்டுச் செலவுகளுக்கும் கடனுக்கு வட்டி கட்ட வேண்டியதும் போக மிச்சமிருந்தால் பார்ப்போம்" என்றாள் மாமியார்.

"வட்டி அடுத்த வருஷம் கட்டிக்கொள்ளலாம், அத்தை" என்றாள் சுந்தரி.

அம்மணியம்மாள் பதில் சொல்லாமல் மௌனமாக இருந்தாள். அப்போது முருகேசன் அங்கு வந்து, "அம்மா! தாமரைக்கண்ணியைப்பற்றி ஒரு சேதியும் தெரியவில்லையே! சுந்தரமூர்த்தி ஒரு கடிதம்கூட எழுதவில்லையே! பத்து மாதமாகப் போகிறதே" என்றான்.

"ஆமாண்டா சாமி, அதைப்பற்றி உனக்குச் சொல்லவே மறந்து போனேன். தாமரைக்கண்ணி பூரண சுகமடைந்து உடம்பு தேறியிருக்கிறாளாம். சுந்தரமூர்த்தியின் பள்ளித் தோழன் இராமநாதன் தயவினால் அவர் கொடுத்திருந்த காரிலேயே திருப்பதிக்குப் போய்விட்டு அங்கிருந்து ஒவ்வொரு சேத்திரமாகப் போய்த் தரிசனம் செய்துகொண்டிருக்கிறார் களாம். செலவெல்லாம் இராமநாதன் செலவாம். போகட்டும், இப்படியாவது புண்ணியத் தலங்களையெல்லாம் தரிசிக்க அவர்களுக்குக் கிடைத்திருக்கிறதே, கொடுத்து வைத்தவர்கள். போக வேண்டிய கோயிலுக்கெல்லாம் போய்விட்டு மெதுவா வரட்டும்" என்றாள் அம்மணியம்மாள்.

"இதெல்லாம் யார் சொன்னது? கடிதம் வந்ததா?" என்றான் முருகேசன்.

"நமக்கு ஒன்றும் கடிதம் வரவில்லை. சுந்தரமூர்த்தியினுடைய சிநேகிதர் ஒருவருக்கு எழுதினானாம். அவர் வந்து சொன்னார்" என்றாள் அம்மணியம்மாள்.

"அத்தான்! பார்த்தீர்களா, உங்கள் சுந்தரமூர்த்தியின் யோக்யதையை? நமக்கு ஒரு கடிதம் எழுதாமல் யாரோ சிநேகிதருக்கு எழுதிச் சொல்லச் சொன்னாராம். அத்தைக்கும் உங்களுக்கும் அவர் காட்டுகின்ற மதிப்பின் லட்சணத்தைப் பாருங்கள்" என்று வெற்றி முழக்கம் போல் இரைந்தாள் சுந்தரி.

அம்மணியம்மாளுக்குக் கோபம் வந்துவிட்டது. அடக்கிக் கொண்டு, "சுந்தரமூர்த்தியின் யோக்யதையைப்பற்றி இப்படி அவமரியாதையாகப் பேசாதே சுந்தரி! அவன் நமக்கே கடிதம் எழுதி அவர்கள் இருக்கிற இடம் தெரிந்தால் நீயும் முருகேசனும் அங்கே போய்விட்டால் நான்தான் இங்கே திண்டாட வேணும். அதை எண்ணித்தான் அவன் அப்படிச் செய்திருக்கிறான். அவன் என்னுடைய நன்மையையும் நீயும் முருகேசனும் வயல் களைக் கவனித்துக்கொள்ள வேணும் என்பதையும் கருதித் தான் அப்படிச் செய்திருக்கிறான்" என்றாள்.



"ஆமாம்; அப்படித்தான் இருக்கும்" என்றான் முருகேசன்.

சுந்தரி அடங்கிவிட்டாள். அம்மணியம்மாள் காப்பி தயார் செய்ய எழுந்து போய்விட்டாள். சுந்தரியும் முருகேசனும் அறைக்குப் போய்விட்டார்கள்.

சுந்தரிக்கு உல்லாசச் செலவுகளுக்குப் பணமில்லாமல் மாலை நேரங்களில் கடற்கரைக்குப் போவதுகூடக் குறைந்து விட்டது.

கடனுக்கு வட்டி அடுத்த வருஷம் கட்டிக்கொள்ளலாம் என்று சுந்தரி சொன்னதற்கு மாமியார் பதில் சொல்லாமல் மௌனமாக இருந்துவிட்டதைக் கண்ட சுந்தரி, மௌனம் சம்மதத்துக்கு அடையாளம் என்று எண்ணிக்கொண்டு கடிகாரத்துக்கென்று அத்தையிடம் பணம் வாங்கிவிடலாம் என்ற நம்பினாள்; அதனால் முன்னிலும் அதிகமாக மாமியாருக்கு வீட்டு வேலைகளில் ஒத்தாசை செய்ய முற்பட்டாள்.

அம்மணியம்மாளுக்குப் புரிந்துவிட்டது. கையில் உல்லாசச் செலவுக்குப் பணம் இருக்கும்போதெல்லாம் வீட்டு வேலை களைச் சிறிதும் கவனிக்காமல் ஏதாவது சாக்குச் சொல்லித் தட்டிக் கழித்துவிடுகிறதும் பணம் இல்லாத காலத்தில் மட்டும் வலிய வந்து ஒத்தாசை செய்வதும் எதற்காக என்பதை நன்றாக அறிந்துவிட்ட அம்மணியம்மாள் உஷாராகிவிட்டாள். இப்போது வலிய வந்து ஒத்தாசை செய்வது, மகசூல் வருவாயில் கடனுக்கு வட்டி கட்டுவதை ஒத்தி போட்டாவது கடிகாரத்துக் கென்று பணம் வாங்கலாம் என்ற எண்ணத்தில்தான் என்பது அம்மணியம்மாளுக்கு விளங்கிவிட்டது.

முருகேசன், சுந்தரி செய்யும் உல்லாசச் செலவுகளெல்லாம் தானும் தன் மனைவியும் சந்தோஷமாக இருக்க வேண்டுமென்று தன் தாயாரே மருமகளுக்குத் தருகிற பணத்திலிருந்துதான் என்று எண்ணிக்கொண்டிருப்பவன். அவன் அவனுடைய தாயாரிடம் எவ்வளவு பணம் இருக்கிறதென்பதை அறியாத,

அறியவும் ஆசை கொள்ளாத செல்லப்பிள்ளை. அம்மணியம்மாளும் பணக்கணக்கை அவனிடம் சொன்னதில்லை.

இப்போது சுந்தரி சினிமா, நாடகம், சிற்றுண்டிச்சாலை முதலிய இடங்களுக்குத் தன்னைக் கூப்பிடாமல் இருப்பது தன் தாயார் சுந்தரிக்குப் பணம் கொடுக்க முடியாமலிருப்பதனால் தான் போலும் என்று எண்ணிக்கொண்டான்.

இப்படியிருக்கும்போது வயல்களில் அறுவடைக் காலம் வந்தது. முருகேசனும் சுந்தரியுமே போய் அறுவடையை முடித்தார்கள். முருகேசன் அறுவடையைக் கவனிக்கப் போனது, அது தன் பொறுப்பான கடமை என்ற உணர்ச்சியினால். ஆனால், சுந்தரி நித்தமும் அவனுடன் அறுவடைக்குப் போனது தனக்குக் கடிகாரத்துக்கென்று மாமியாரிடம் பணம் கேட்கப் போதுமான மகசூல் இருக்கிறதா என்று அறிந்து கொள்ளும ஆசையினால்தான்.

சென்ற வருஷத்தைப் போலல்லாமல் இந்த வருஷம் எல்லாக் கிணறுகளிலும் நீர் நிறைந்திருந்தும் விளைச்சல் அதிகமில்லை. அதற்குக் காரணம் சுந்தரமூர்த்திக்கு இருந்தது போல் முருகேசனுக்கு அனுபவம் இல்லாமைதான்.

அறுவடை முடிந்து நெல்லை அளக்கப்போகும்போது அம்மணியம்மாளும் பண்ணைக்குப் போனாள். சென்ற வருஷம் களத்துக்கே வந்து நெல்லை வாங்கிக்கொண்டு போன வியாபாரி இவர்களுக்கு முன் அங்கே வந்து காத்திருந்தார்.

அம்மணியம்மாளே விலை பேசி முடித்தாள். வியாபாரி மறுநாள் பணத்துடன் வண்டிகளையும் கொண்டுவந்து நெல்லை எடுத்துக்கொண்டு போவதாக முன்பணம் ஐநூறு ரூபாய் கொடுத்து ஒப்பந்தம் செய்துகொண்டார்.

மறுநாள் முருகேசனும் சுந்தரியும் மட்டும் போய் நெல்லை விற்றுப் பணத்தை வாங்கிக்கொண்டு வந்தார்கள்.



வீட்டுச் செலவுக்கான நெல்லும் மற்ற எல்லாச் செலவுகளும் நீங்க ஆயிரத்து எழுநூறு ரூபாய்தான் மிச்சமாயிற்று. அதை அப்படியே முருகேசன் தாயாரிடம் தந்தான்.

சுந்தரி, மாமியாரிடம் கடிகாரத்துக்கென்று பணம் கேட்கத் துடித்துக்கொண்டிருந்தாள். ஆனால், அதைக் கணவனறியக் கேட்கக்கூடாது; மறுநாள் வேலைகளுக்கு ஒத்தாசை செய்து சமையலை முடித்துச் சாப்பிட்டான பின் ஒய்வாக மாமியாருடன் பேசிக்கொண்டிருக்கும்போது கேட்கலாம் என்று சும்மா இருந்துவிட்டாள்.

மறுநாள் காலையில் ஆகாரத்துக்குப் பின் அம்மணியம்மாள் சமையலுக்குக் காய்கறி வாங்க அடுத்துள்ள மார்க்கெட்டுக்குப் புறப்பட்டாள். தினமும் அந்த அம்மாள்தான் மார்க்கெட்டுக்குப் போவது வழக்கம். முன்னே சுந்தரமூர்த்தி மார்க்கெட்டுக்குப் போவான். சந்திரா சமைப்பாள். இப்போது இரண்டு வேலைகளும் அம்மணியம்மாளுக்குத்தான்.

மார்க்கெட்டுக்குப் போகுமுன் அம்மணியம்மாள் கடன் கொடுத்த அம்மாள் வீட்டுக்குப் போய், அந்த வருஷத்து வட்டியைக் கொடுக்க வந்திருக்கிறதாகச் சொன்னாள். கடன் கொடுத்த அம்மாளுக்கு அடக்க முடியாத சந்தோஷம் வந்து விட்டது.

"கடன் கொடுத்தாலும் உங்களைப்போல் நாணயமுள்ளவர்களுக்குக் கொடுக்க வேணுமம்மா. வேறே ஒரு நாணயமற்றவருக்குப் பத்தாயிரம் ரூபாய் கொடுத்து வட்டியே சரியாக வருவதில்லை. முதலுக்கே மோசம் வந்துவிடும்போல் இருக்கிறது" என்றாள் அந்த அம்மாள்.

அம்மணியம்மாள் மடியிலிருந்து பையை இழுத்து, அதிலிருந்து பணக்கற்றையை எடுத்து அந்த அம்மாளிடம் நீட்டினாள்.

"எவ்வளவு இருக்கிறது?" என்றாள் அந்த அம்மாள்.

"எண்ணிப் பாருங்கள்" என்றாள் அம்மணியம்மாள்.

அந்த அம்மாள் எண்ணிப் பார்த்துவிட்டு, "இந்த வருஷத்து வட்டியுடன் போன வருஷம் நான் அவசரமாகக் கேட்டு வாங்கிக்கொண்ட எழுநூற்று ஐம்பதுக்குமேல் பாக்கி இருநூற்றுப் பத்தும் கொண்டுவந்திருக்கிறீர்கள் வேண்டாம், வேண்டாம். நான் அந்த எழுநூற்று ஐம்பதை வாங்கும்போதே என்ன சொன்னேன்? அதையே ஒரு வருஷத்துக்கு வட்டியாக வரவு வைத்துவிடுகிறேன் என்று சொன்னேன அல்லவா? அந்தச் சொல்லை அழிக்கமாட்டேன். "இருங்கள்" என்று சொல்லிவிட்டு உள்ளே போய்ப் பத்திரத்தை எடுத்து வந்து காட்டினாள். அதில் கையொப்பம் இல்லாமல் தொள்ளாயிரத்து அறுபது ரூபாய் வட்டிக்காக வரவு எழுதியிருந்தது.

அதன்படியே அதிலும் கையெழுத்திடப்பட்டது. இந்த வருஷத்துக்கும் அதே தொகையை வரவு வைத்துக்கொண்டு இருநூற்றுப்பத்து ரூபாயைத் தந்துவிட்டாள் அந்த அம்மாள்.

அம்மணியம்மாளுக்குவெகு சந்தோஷம். அந்தச் சந்தோஷத்தில், "உங்கள் மனசு தங்கமான மனசு. எனக்கும் வருமானம் குறைந்துவிட்டது. வட்டியைக் கொஞ்சம் குறைத்துக் கொண்டால் உங்கள் புண்ணியமாக இருக்கும்" என்றாள்.

"அப்படியே ஆகட்டும். வருஷம் நூறு ரூபாய் குறைத்தே கொடுங்கள்" என்றாள் அந்த அம்மாள்.

வந்தனம் சொல்லிவிட்டு விடை பெற்றுக்கொண்டாள் அம்மணியம்மாள்.

## அத்தியாயம் 22

மாமியார் வாங்கி வந்த காய்கறிகளைச் சுந்தரியே நறுக்கிக் கொடுத்துச் சமையலுக்கும் ஒத்தாசையாக வேலை செய்தாள்.

சாப்பாட்டுக்குப் பின் ஓய்வாக உட்கார்ந்திருந்த மாமியாரின் அருகில் அமர்ந்தாள். சுந்தரியின் நோக்கம் என்னவென்பது



அம்மணியம்மாளுக்குத் தெரியும். சுந்தரி கேட்பதற்கு முன் அம்மணியம்மாளே பேசத் தொடங்கி, "சுந்தரி! இந்த வருஷம் முருகேசனுடன் நீயும் போய் வயல்களின் நடவு வேலைகளையெல்லாம் கவனித்துக்கொண்டதில் எனக்கு ரொம்ப சந்தோஷம். இந்த வருஷம் கிணறுகளெல்லாம் நிறைந்திருந்தன. எல்லா வயல்களிலும் நடவு நட்டும் விளைச்சல் எதிர்பார்த்தபடி இல்லையே..."

"அதற்கென்ன செய்யலாம், அத்தை! அத்தானுக்கும் எனக்கும் பண்ணை வேலைகளில் இந்த வருஷந்தானே புது அனுபவம்! கூலியாள்கள் எங்களை ஏமாற்ற முடிந்தது. இனிமேல் சரியாகப் பார்த்துக்கொள்ள முடியும்" என்றாள் சுந்தரி.

"ஆமாம், நீ சொன்னது சரியான காரணந்தான். என் ஆசையெல்லாம் இந்த வருஷம் அதிகப் பணம் மிஞ்சும், அதில் உனக்கு அந்தக் கடிகாரத்தை வாங்கித் தந்துவிட வேணும் என்பதுதான். போன வருஷத்தைவிட இந்த வருஷம் மிச்சம் குறைந்து போச்சு. மிஞ்சின ஆயிரத்து எழுநூறு ரூபாயில் கடனுக்குக் கட்ட வேண்டிய வட்டி தொள்ளாயிரத்து அறுபது ரூபாய் கொடுத்தாச்சு. மீதி ..."

"வட்டி கொடுத்தாச்சா?" என்று ஏக்கத்தோடு கத்தினாள் சுந்தரி.

"பின்னே? அதை வருஷாவருஷம் கட்டிவிட்டால் நிம்மதியாக இருக்கலாம். இல்லாவிட்டால் வீடு போய்விடுமே! அதனால் முதல் காரியமாகக் காலையிலேயே அதைக் கொண்டுபோய்க் கொடுத்துவிட்டேன்."

இதற்குமேல் கேட்டுக்கொண்டிருக்கச் சுந்தரிக்குப் பிடிக்கவில்லை. மனத்துக்குள்ளேயே மாமியாரைச் சபித்துக் கொண்டு எழுந்து போய்விட்டாள்.

அதற்காக அம்மணியம்மாள் வருத்தப்படவில்லை; சிறுகச் சிறுகச் சுந்தரிக்குப் பொறுப்பு வந்துவிடும் என்று சும்மா இருந்துவிட்டாள்.

அதன் பிறகு வீட்டு வேலைகளில் சுந்தரி மாமியாருக்கு ஒத்தாசை செய்வது நின்றுவிட்டது. இது அம்மணியம்மாள் எதிர்பார்த்ததுதான்.

சுமார் இருபது நாள்கள் மாலைப்பொழுதுபோக்குக்குப் போக முடியாமல் வீட்டுக்குள்ளேயே அடியுண்ட பெண் புலி போல் தனக்குள்ளேயே குமுறிக்கொண்டிருந்தாள், சுந்தரி; சிறுவயது முதல் சிங்காரித்துக்கொண்டு உல்லாசமாக வெளியே போவதும் வேடிக்கை பார்ப்பதுமாகவே பழகினவள். கண்ணுக்கினிய காதல் மிகுந்த கணவனுடன் இதுவரையிலும் உல்லாசமாகவே காலங்கழித்துவிட்டு இப்போது அது தடைப்பட்டுப் போனதை அவளால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. தினந்தினம் குடித்துப் பழகிவிட்ட குடிகாரனுக்குக் கள் வாங்கக் காசில்லாமற்போனால் எப்படித் தவிப்பானோ அப்படித் தவித்துக்கொண்டிருந்தாள் சுந்தரி, மனத்துக்குள்ளேயே.

திடீரென்று ஒரு நாள் அவள் தன்னுடைய பெற்றோரையும் உடன்பிறப்புகளையும் பார்த்துவிட்டு வரத் திருவொற்றியூருக்குப் போக வேண்டுமென்று கணவனிடம் சொன்னாள்.

"என்ன விசேஷம் அங்கே?" என்றான் முருகேசன்.

"ஒன்றுமில்லை; இரண்டு மூன்று நாளாக அதே நினைப்பாக இருக்கிறது" என்றாள் சுந்தரி.

"இன்னும் ஒரு வாரத்துக்குக் கடலை வெட்டு வேலைகளைக் கவனித்தாக வேண்டும். நான் இப்போது வரமுடியாதே" என்றான் கணவன்.

"நீங்கள் வர வேண்டாம். நான் மட்டும் ஒரு டாக்சியில் போய்ப் பார்த்துவிட்டு வந்துவிடுகிறேன்" என்றாள்.

"போய் வாயேன். அம்மாவிடம் சொல்லிவிட்டு உடனே வந்துவிடு" என்று சொல்லிவிட்டு முருகேசன் தன் தாயாரிடம் கடலை வெட்டைக் கவனிக்கப் போவதாகச் சொல்லும்போது,



"அம்மா! நான் மட்டுந்தான் வயலுக்குப் போகிறேன். எனக்கு மட்டும் சாப்பாடு கொடுத்தால் போதும்" என்றான்.

"ஏன், சுந்தரி உன்னோடு வரவில்லையா?" என்றாள் தாயார்.

"அவள் அப்பா அம்மாவைப் பார்க்க வேணும் என்ற நினைப்பாகவே இருக்கிறதாம். திருவொற்றியூருக்கு உடனே போய் வர விரும்புகிறாள்" என்றான்.

"தங்கமாய்ப் போய் வரட்டும்" என்று சொல்லிக்கொண்டே போய்ப் பெட்டியைத் திறந்து, பத்து ரூபாய் எடுத்து வந்து, "இந்தா, இதைச் சுந்தரிக்குத் திருவொற்றியூருக்குப் போய் வர டாக்சி செலவுக்குக் கொடு" என்று தாயார் மகனிடம் கொடுத்தாள்.

சுந்தரி அப்போது அங்கில்லை; அறைக்குள் இருந்தாள். அவள் திருவொற்றியூருக்குப் போக வேண்டுமென்று கணவனிடம் சொன்னது அவனிடம் அனுமதி பெற்றுக் கொள்ளத்தான். மாமியாரிடம் சொல்லிக்கொள்ள வேண்டுமென்றோ அவரிடம் செலவுக்குப் பணம் கேட்க வேண்டுமென்றோ எண்ணியிருக்கவில்லை. திருவொற்றியூருக்குப் போகத் தன் தோழி கனகவல்லியிடம் கடன் வாங்கிக்கொண்டு போக எண்ணியிருந்தாள்.

அவளுடைய மாமியார் எண்ணியது என்னவென்றால், சுந்தரி சினிமா, நாடகம் முதலிய பொழுதுபோக்குக்குப் போகப் பணமில்லாமல் மகிழ்ச்சியில்லாமல் முகத்தைத் தொங்கப் போட்டுக்கொண்டேயிருக்கிறாள்; அந்தச் சோர்வு நீங்கத் தாய் தந்தை, உடன்பிறப்புகளைப் பார்த்து வர ஆசைப்படுகிறாள். அதற்குச் செலவுக்குக் கொடுக்க வேண்டியதுதான் என்ற எண்ணத்தில்தான் பத்து ரூபாய் கொடுத்தது.

சுந்தரிக்கு மாமியார்மீதுள்ள மனத்தாபத்தை ஒரு சிறிதும் அறியாத முருகேசன் அந்தப் பத்து ரூபாயைக் கொண்டுபோய் அறைக்குள்ளிருந்த சுந்தரியிடம், "இந்தா, நீ திருவொற்றியூருக்குப் போய்வரச் செலவுக்கு அம்மா தந்தார்கள்" என்று பணத்தை நீட்டினான்.

அதைச் சிறிதும் எதிர்பாராத சுந்தரி, அதை வாங்கிக் கொள்ளக் கூசினாள். அதை வாங்கிக்கொள்ள மறுத்து விடவும் எண்ணந்தான். ஆனால், மறுத்தால் அதற்குக் காரணம் சொல்ல வேண்டும். அதனால் பேசாமல் அதை வாங்கிக்கொண்டாள்.

முருகேசன் வயலுக்குப் போய்விட்டான். சுந்தரி திருவொற்றியூருக்குப் பயணமானாள்; போய்வரச் சொல்லிச் செலவுக்குப் பணம் கொடுத்த மாமியாரிடம் சொல்லிக் கொள்வதா வேண்டாவா என்று வெகு நேரம் எண்ணினாள். சொல்லாமல் போய்விட்டாளே என்று மாமியார் கணவனிடம் சொல்ல நேருமே என்ற எண்ணம் உதித்தது.

உடனே போய், "அத்தை, நான் போய் வருகிறேன்" என்றாள்.

"போய் வாம்மா. எல்லாரையும் நான் விசாரித்ததாகச் சொல்லு. உங்கப்பாவும் அம்மாவும் இங்கே வந்து போய் ரொம்ப நாளாச்சு. முடிந்தால் ஒரு முறை வந்து போகச் சொல்லு" என்றாள் மாமியார்.

"ஆகட்டும்" என்று முனகிக்கொண்டே போய் வேலைக்காரப் பெண்ணை அனுப்பி, டாக்சி கொண்டுவரச் செய்து சுந்தரி அதில் திருவொற்றியூருக்குப் போய்விட்டாள்.

தாய்தந்தை, உடன் பிறப்புகளைப் பார்த்துவிட்டு உடனே வந்துவிடுகிறேன் என்று போன சுந்தரி ஒரு வாரம் சென்றும் வரவில்லை.

வழக்கமாகச் சுந்தரிதான் சிறுமி ஜானகியைக் குளிக்கச் செய்து தலைவாரி சடை பின்னி அழகுபடுத்திப் பக்கத்து வீட்டுப் பாத்திமாவோடு பள்ளிக்கு அனுப்புவாள். ஒரு வாரமாகச் சுந்தரி இல்லாததால், அம்மணியம்மாள் தான் மற்றவேலைகளோடு அவற்றையும் செய்ய நேர்ந்தது. அம்மணியம்மாள் பழங்காலப் பழக்கமுடையவள்; முகத்துக்குப் பவுடர் பூசக் கூடப் பழக்கமில்லாதவள். அந்த அம்மாள் சடை பின்னுகிற



மாதிரியும் மற்றச் சிங்காரிப்புகளும் ஜானகிக்கு வழக்கமானதாக இருப்பதில்லை. "என்னா பாட்டி, இப்படிக் கோணா மாணான்னு வாக்கெடுத்துப் பின்னுறீங்க?" என்று பாட்டியைக் கேலி செய்வாள்.

"ஒங்கச் சித்தியாட்டம் இந்தக் காலத்து நாசூக்கெல்லாம் எனக்குத் தெரியாதடி என் கண்ணே, கோவிச்சுக்காதே" என்று பேத்தியின் கன்னத்தில் முத்தமிடுவாள் அம்மணியம்மாள்.

ஜானகி சிரித்துக்கொண்டே, "சித்தி எப்ப பாட்டி வரும்?" என்பாள்

"வந்திடுவாள் சீக்கிரம்."

"ஏம் பாட்டி, நம்ப அம்மா ஆஸ்பத்திரியிலிருந்து ஊருக்குப் போனவங்க ஏன் இன்னும் வரலை?" என்பாள்.

அம்மணியம்மாளுக்குத் தாமரைக்கண்ணியின் ஏக்கம் வந்தால் கண் கலங்கிவிடும். சமாளித்துக்கொண்டு, "உங்கம்மா சுகமா இருக்கிறாளாம். சேதி வந்தது. சீக்கிரம் வரச்சொல்லிக் கடுதாசி எழுதியிருக்கிறேன்; கவலைப்படாதே. வந்திடுவாள்" என்பாள்.

டாக்சியில் போய்ப் பெற்றோர்களையும் உடன்பிறப்புகளையும் பார்த்துவிட்டு வந்துவிடுகிறேன் என்று சொல்லிப் போன சுந்தரி ஏழு நாள்களாகியும் வரவில்லையே என்பதில் முருகேசனுக்கும் வியப்புதான். எந்நேரமும் அவனுடனேயே இருக்க விரும்பும் அவள் இந்த ஏழு நாள்களாக அவனைப் பிரிந்திருக்க நேர்ந்ததற்குக் காரணம் அவளுடைய பிறந்தகத்தில் யாருக்கேனும் அசௌக்கியமோ என்று சந்தேகித்து அவனும் போய்ப் பார்த்து வரலாமா என்று நினைத்தான்.

ஆனால், அந்த வருஷம் கடலை நல்ல விளைச்சல். வெட்டின கடலையை வீட்டுக்குக் கொண்டுவந்து சேர்த்து விட்டுப் போகலாமென்று தீர்மானித்துப் பயணத்தை ஒத்தி போட்டான்.

மறுநாளே சுந்தரி வந்துவிட்டாள். அவள் வந்தபோது முருகேசன் கடலையை அளந்து மூட்டைகளாக்கி வீட்டுக்குக் கொண்டுவரப் பண்ணைக்குப் போயிருந்தான்.

அன்று ஞாயிற்றுக்கிழமை. பள்ளிக்கூடம் இல்லாததால், ஜானகி வீட்டிலேயே பாட்டியுடன் உட்கார்ந்திருந்தாள். சுந்தரியைக் கண்டவுடன், "சித்தி! வந்துட்டியா!" என்று ஓடிச் சித்தியைத் தழுவிக்கொண்டாள். சுந்தரி ஜானகியை அணைத்துக் கொண்டு, தான் கொண்டுவந்த முறுக்கு, லட்டு இவைகளில் ஒவ்வொன்றை ஜானகியிடம் கொடுத்துவிட்டு மீதியை அவை அடங்கியிருந்த கித்தான் பையோடு மாமியாருக்கு எதிரில் வைத்து, "அம்மா செய்து அனுப்பிய பலகாரம்" என்று மட்டும் சொல்லிவிட்டு அறைக்குப் போகத் திரும்பினாள்.

"அங்கே எல்லாரும் சௌக்கியந்தானே?" என்றாள் மாமியார்.

"சௌக்கியந்தான்" என்றாள் சுந்தரி.

"இத்தனை நாள் என்ன பண்ணினே அங்கே?" என்றாள் மாமியார்.

சுந்தரி பதில் சொல்லாமல் தரையைப் பார்த்துக் கொண்டே நின்றாள்.

அங்கே சினிமாவுக்கும் நாடகத்துக்கும் போய்க்கொண்டிருந்திருப்பாள். அதைச் சொல்லத் தயங்குகிறாளாக்கும் என்று எண்ணிய மாமியார் மேலும் அதைக் கேட்காமல், "சரி, போ. உடை மாற்றி முகங்கழுவி நெற்றியில் பொட்டு வை. பொட்டு அழிந்திருக்கிறது" என்றாள் மாமியார்.

சுந்தரி தன் அறைக்குப் போனாள். ஜானகியும் அவளுடன் அறைக்குப் போய்விட்டாள்.

அம்மணியம்மாளுக்குச் சுந்தரியின் பொறுப்பற்ற தன்மையைப்பற்றியும் ஊதாரிச் செலவுகளைப்பற்றியும் அளவற்ற வருத்தம் இருந்தாலும், அவள் ஜானகியைத் தான் பெற்ற



குழந்தைபோல் சீராட்டிக் கவனித்துக்கொள்வதில் பெரு மகிழ்ச்சியுண்டு. பெற்ற தாயை ஜானகி அடிக்கடி நினைத்துக் கொள்கிறாள் என்றாலும் ஏக்கமில்லாமல் எப்போதும் அவள் மகிழ்ச்சியோடிருப்பது சுந்தரியினால்தான்.

அன்று மாலையில் வீட்டுக்கு வந்த முருகேசன் சுந்தரி வந்து விட்டதைக் கண்டு மகிழ்ச்சி பொங்க, "நீ ஏழு நாள்களாக வராதிருப்பதைக் கண்டு அங்கே யாருக்காவது அசௌக்கியமோ என்று பயந்துவிட்டேன். அப்படி ஒன்றுமில்லையே?" என்றான்.

"இல்லையில்லை; அப்படி ஒன்றுமில்லை. எல்லாரும் சுகந்தான். பிறந்த வீட்டுக்குப் போனால் உடனே திரும்பிவிட அவர்கள் விட்டால்தானே? தங்கைகளும் தம்பிகளும் விடமாட்டோம் என்று நிறுத்திவிட்டார்கள்" என்றாள் சுந்தரி.

அத்துடன் முருகேசன் திருப்தியடைந்துவிட்டான். திருவொற்றியூருக்குப் போய் வரச் சுந்தரி அவனிடம் விடை கேட்டபோது அவள் மிகவும் சோர்ந்து உற்சாகமில்லாமல் இருந்ததையும், போய் வந்தபின் அவளுடைய இயல்பான சிங்காரப் பேச்சுகளுடன் குதூகலமாக இருப்பதையும் கண்டு முருகேசன் களிப்படைந்தான்; புகுந்த வீடு பிறந்த வீட்டைவிட எவ்வளவு சிறப்புடையதாக இருந்தாலும் பெண்களுக்குத் தாய் வீடுதான் சொர்க்கம் போன்றது என்பது உண்மைதான் போலும் என்று எண்ணிக்கொண்டான்.

மறுநாள் காலையில் சுந்தரியின் ஆருயிர்த் தோழி கனகவல்லியின வீட்டில் ஏதோ விசேஷம் என்று சுந்தரியை அழைத்துக்கொண்டு போகக் கனகவல்லி கார் அனுப்பியிருந்தாள். சுந்தரி உடனே சிங்காரித்துக்கொண்டு கணவனையும் அழைத்தாள். முருகேசன் பண்ணையில் நிலக்கடலை பாதிக்கு மேல் மூட்டைகளாக்க வேண்டிய வேலையிருப்பதாகவும் அவன் உடனே பண்ணைக்குப் போக வேண்டியிருப்பதால் அவளை மட்டும் போய் வரச் சொல்லிவிட்டான். ஜானகி பள்ளிக்கூடம் போக வேண்டியவளானதால், அவளையும் கூட்டிக்கொண்டு

போக முடியவில்லை. தன் மகிழ்ச்சியில் பங்கு கொள்ளத் துணையில்லாத குறையுடன் சுந்தரி, கனகவல்லியின் வீட்டுக்குப் போய்விட்டாள்.

பண்ணைக்குப் புறப்பட்ட முருகேசன் தன் தாயாரை அணுகி, "அம்மா! இந்த வருஷம் நிலக்கடலை நல்ல மகசூல். நேற்றே பாதி மூட்டைகளாகக் கட்டப்பட்டது. மீதியை மூட்டைகளாக்கி இங்கே கொண்டுவந்து அடுக்கிவிடுகிறேன்" என்றான்.

"வீட்டை அடைக்க இங்கே கொண்டுவந்து அடுக்காட்டி என்னடா சாமி? அங்கேயே நல்ல விலை வந்தால் விற்றுவிடலாமே" என்றாள் அன்னை.

"நேற்றே வியாபாரிகள் அங்கே வந்து விலைக்குக் கேட்டார்கள். நான் ஒன்றும் சொல்லவில்லை. பின்னால் இன்னும் விலை ஏறும் என்றும் தெரிகிறது. அதனால் இங்கே கொண்டுவந்துவிட எண்ணுகிறேன்."

"பின்னால் விலை ஏறுமோ இறங்கிவிடுமோ யார் கண்டது? கூடுமானவரை நல்ல விலை வந்தால் இப்பவே விற்றுப் பணமாக்கிவிடுவது நல்லது" என்றாள் அன்னை.

"அப்படியானால் நீங்களும் வந்தால் விலை உங்களுக்குப் பிடித்தால் அங்கேயே விற்றுவிடுவோம்" என்றான் மகன்.

உடனே அம்மணியம்மாள் அவசரமாகச் சோற்றை வடித்து இருவருக்கும் போதுமான உணவை எடுத்துக்கொண்டு போனார்கள். வியாபாரிகளும் வந்திருந்தார்கள்; பகல் மூன்று மணிவரை பேரம் பேசிக்கொண்டிருந்தார்கள். கடைசியாகப் பேரம் படிந்து மூன்று வியாபாரிகளும் சேர்ந்து அங்கிருந்த எல்லாக் கடலையையும் எழுநூற்று ஐம்பது ரூபாய்க்கு வாங்கிக்கொண்டார்கள். அப்போதே பணமும் கைக்கு வந்துவிட்டது.

தாயும் மகனும் பணத்துடன் மாலை ஆறு மணிக்கு முன் வீட்டுக்கு வந்துவிட்டார்கள். சுந்தரி இன்னும் வீட்டுக்கு வரவில்லை. பள்ளிக்கூடத்திலிருந்து வந்த ஜானகி வேலைக்காரப் பெண்ணோடு விளையாடிக்கொண்டிருந்தாள்.

## அத்தியாயம் 23

கனகவல்லி வீட்டில் அன்று யாருக்கோ விருந்தாம். பகல் சாப்பாட்டுக்குப் பின் மூன்று மணியிலிருந்து நாலு மணிவரை விகடக் கச்சேரியாம். நாலு மணியிலிருந்து ஆறு மணிவரை பாட்டுக் கச்சேரியாம். ஆறு மணி முதல் எட்டு மணிவரை பரத நாட்டியக் காட்சியாம். அதன் பிறகு சாப்பாடாம். ஒன்பதரை மணிக்கு வீட்டுக்கு வந்த சுந்தரி கணவனிடத்தில் சொன்ன விவரம் அது.

மறுநாள் காலையில் சுந்தரி நேரத்தோடு குளித்துவிட்டு ஜானகியையும் குளிக்கச் செய்து, தன்னையும் அலங்கரித்துக் கொண்டு ஜானகியையும் அலங்கரித்து அவளைப் பள்ளிக்கு அனுப்பி வைத்தாள். மாமியாருக்கு உதவி செய்யாவிட்டாலும் தாய் வீட்டுக்குப் போவதற்கு முன்னால் இருந்தது போல் நெஞ்சுக்குள்ளேயே உறுமிக்கொண்டு முகத்தைத் தொங்கப் போட்டுக்கொண்டிருக்காமல் கலகலப்பாக ஓடியாடித் தனக்கும் தன் கணவனுக்கும் வேண்டிய காரியங்களை வெகு பரபரப்புடன் செய்துகொண்டிருந்தாள், சுந்தரி.

அதைக் கண்டு அவளுடைய மாமியார் தாய் வீட்டுக்குப் போய் வந்ததில் அந்த நல்ல மாறுதல் உண்டாகியிருப்பதாக மகிழ்ச்சியடைந்தாள். கடிகாரத்துக்குப் பணம் தரவில்லை என்ற கோபத்தால் மருமகள் தனக்கு உதவி செய்யாமலும் தன்னுடன் சுமுகமாகப் பழகாமலும் இருந்துவிட்டாலும் மகனும் மருமகளும் மகிழ்ச்சியோடு வாழ்ந்தால் போதும் என்று அம்மணியம்மாள் நிம்மதியுற்றாள்.

அன்று மாலையிலேயே பழைய வழக்கம்போல் பொழுது போக்காக வெளியே போய் வெகு நேரம் சென்று வருகிற உல்லாசம் ஆரம்பமாகியது.

அடுத்த நடவு காலம் வரையிலும் வயல்களுக்குப் போக வேண்டிய அகத்தியம் இல்லாததால், முருகேசனுக்கும் ஓய்வு

தான். ஜானகியையும் கூட்டிக்கொண்டு தினந்தினம் சினிமா, நாடகம், கண்காட்சி என்று போய்விட்டு இரவு பத்து மணி பதினொரு மணியென்று வீட்டுக்கு டாக்சியில் வந்தார்கள்.

முருகேசன் கடலை விற்ற பணத்திலிருந்து தன் தாயார் முன்போல் மருமகளுடைய உல்லாசச் செலவுக்குத் தாராள மாகக் கொடுப்பதாக நினைத்துக்கொண்டான்.

அம்மணியம்மாளோ முதல் ஒரு வாரம் வரையிலும் 'சுந்தரிக்கு அவளுடைய பெற்றோர்கள் ஏதாவது பணம், வரும் போது கொடுத்திருப்பார்கள், அதைக்கொண்டு அவள் சினிமா வுக்கும் டிராமாவுக்கும் புருஷனைக் கூட்டிக்கொண்டு போகிறா ளாக்கும்' என்று எண்ணிக்கொண்டாள்.

ஒரு வாரம் என்றது ஒரு மாதம் ஆகிவிட்டது. அம்மணி யம்மாளுக்குச் சந்தேகம் வந்துவிட்டது. தினம் குறைந்தது ஐந்து ரூபாயாவது வேண்டும். சில நாள்களில் அதிகமும் வேண்டியிருக்கும். சுந்தரியின் பெற்றோர்கள் அவளுக்கு இருநூறு முந்நூறா கொடுத்திருப்பார்கள்? அவர்களுடைய பொருளாதார நிலைமையும் பெரிய குடும்பத்துடன் அவர்களுக் குள்ள கஷ்டமும் அம்மணியம்மாளுக்குத் தெரியும். அப்படி யானால், சுந்தரிக்கு அவ்வளவு பணம் ஏது? அவள் அணிந் திருந்த நகைகளில் எதையாவது விற்றிருப்பாளோ என்ற ஐயம் உதித்து, அதை ஆராய வேண்டுமென்று சும்மா இருந்து விட்டாள்.

மறுநாளே அம்மணியம்மாள் மருமகளுடைய கழுத்தையும் கைகளையும் கூர்ந்து கவனித்தாள். சுந்தரியின் ஆபரணங்கள் எல்லாம் அவளுடைய உடம்பிலேயே இருந்தன. தினமும் அவள் எல்லா நகைகளையும் அணிந்துகொண்டுதான் வெளியே போவாள். அவள் உல்லாசச் செலவுகளைச் செய்கிற பணம் நகையை விற்று வந்தது அல்லவென்பது நிச்சயமாகத் தெரிகிறது. அப்படியானால் அவளுக்குப் பணம் ஏது?

அதைக் கேட்டுவிட வேண்டுமென்று சுந்தரியோடு தனியே பேசச் சமயம் பார்த்துக்கொண்டிருந்தாள் மாமியார்.



ஒரு நாள் மத்தியானச் சாப்பாட்டுக்குப் பின் அம்மணி யம்மாள் ஒய்வாக வழக்கமான இடத்தில் உட்கார்ந்திருந்தாள். அந்த இடம் முருகேசனுடைய அறைக்குச் சமீபமானது. முருகேசன் யாரோ ஒரு நண்பரைப் பார்த்து வரப்போவதற்காக அறையை விட்டு வெளியே வந்தான். அவனோடு சுந்தரியும் வெளியே வந்தாள். தாயாரைக் கண்ட முருகேசன் வெளியே போகிற விஷயத்தைத் தாயாரிடம் சொல்லிக்கொணடு புறப் பட்டான். வீதிவாசல் வரையிலும் அவனோடு போய்விட்டுத் திரும்பி வந்த சுந்தரி அறைக்குள் போகுமுன், "சுந்தரி! இங்கே வாம்மா" என்று மாமியார் கூப்பிட்டாள்.

மனத்துக்குள் சுந்தரி மாமியாரை எவ்வளவு அலட்சியமாக எண்ணினாலும் வெளிப்படையாக அலட்சியம் செய்துவிட முடியாது. அப்படிச் செய்து அது கணவனுக்குத் தெரிந்து விட்டால் விபரீதம் விளைந்துவிடலாம் என்பது சுந்தரிக்குத் தெரியும். மகனுடைய மகிழ்ச்சியைக் கெடுத்துவிடக்கூடாது என்ற ஒரே காரணத்துக்காகத்தானே சுந்தரி செய்த பல குற்றங்களையும் மகனுக்குத் தெரியக்கூடாதென்று தானும் சொல்லாமல் சுந்தரியையும் சொல்லக்கூடாதென்று அம்மணி யம்மாள் கட்டுப்படுத்தியது? அதெல்லாம் சுந்தரிக்குத் தெரியும்.

அதனால் மாமியார் கூப்பிட்டவுடனே, "என்ன அத்தை?" என்று கேட்டுக்கொண்டே அருகில் வந்து நின்றாள். அவளை உட்காரச் சொல்லி, "சுந்தரி, நீ படித்த பெண். குடும்பத்தின் கஷ்டங்கள் உனக்குத் தெரியாததல்ல. தினந் தினம் சினிமாவுக்கும் கூத்துக்கும் ஓட்டலுக்கும் போய்ப் பணத்தைப் பாழாக்கக்கூடாதென்று அந்தப் பழக்கத்தை விட்டுவிடச் சொன்னேன். கொஞ்ச நாள் அதை விட்டிருந்தாய். இப்போது ஒரு மாசமாக மறுபடியும் பழையபடியே எங்கெங்கோ போய்ப் பணத்தை வீணாக்கிவிட்டு நித்த நித்தம் ஜாமத்துக்கு வீட்டுக்கு வருகிறீர்கள். உடம்புக்குத்தான் நல்லதா?" என்றாள் மாமியார்.

சுந்தரி பதில் ஒன்றும் சொல்லவில்லை; தலையைக் கவிழ்த்துக்கொண்டிருந்தாள்.

"அது கிடக்கட்டும். நித்தம் டாக்சிக்கே மூன்று அல்லது நாலு ரூபாய் வேண்டும். அதோடு சினிமாச் செலவு அல்லது ஓட்டல் செலவும் சேர்ந்து தினம் ஐந்து ரூபாய்க்கு மேலும் ஆகுமே! இந்த ஒரு மாதத்தில் இருநூறு முந்நூறு ஆகியிருக்குமே! அதற்கெல்லாம் உனக்குப் பணம் ஏது?'' என்றாள் மாமியார்.

சட்டென்று தலையை நிமிர்த்தி மாமியாரைப் பார்த்து ஒரு புன்சிரிப்பை வருவித்துக்கொண்டு, "அத்தை! உங்கள் பெட்டியிலிருந்து நான் எதையும் எடுத்து விற்றுவிடவில்லை, அத்தை'' என்றாள் சுந்தரி.

"அது எனக்குத் தெரியும். என் பெட்டியிலிருந்து நீ எதையும் எடுத்துவிடவில்லை. அப்படியிருக்க, உனக்குப் பணம் ஏது என்றுதான் கேட்கிறேன்'' என்று மாமியாரும் சிரித்தாள்.

சுந்தரி பதில் சொல்லாமல் புன்சிரிப்போடு மாமியாரைப் பார்த்துக்கொண்டிருந்துவிட்டுத் தலையைக் கவிழ்த்துக் கொண்டாள்.

மீண்டும் மீண்டும் மாமியார், "பணம் ஏது?'' என்று கேட்டுக்கொண்டேயிருந்தாள்.

கடைசியாகச் சுந்தரி சிரித்துக்கொண்டே, "அது எங்கம்மா வீட்டுப் பணம்'' என்றாள்.

"உங்கம்மா தந்ததா? அவ்வளவு பணம் உங்கம்மா எப்படித் தந்தாள்? இங்கே என்னிடம் பணம் கேட்க முடியாதென்று உங்கம்மாளைக் கசக்கி வாங்கத்தான் அங்கே போனாயோ! அப்படித்தான் அது உங்கம்மா தந்ததாக இருந்தாலும் அதைக் கொண்டு, நீ என்னை நச்சரித்துக்கொண்டிருந்த அந்தக் கைக் கடிகாரத்தையாவது வாங்கிப் போட்டுக்காமல் இப்படி வீணாக்குகிறாயே!'' என்றாள் மாமியார்.



அந்த உபதேசத்தை ஏற்றுக்கொண்டவள் போலப் புன்முறுவலுடன் கேட்டுக்கொண்டிருந்தாள் சுந்தரி.

அதற்குமேல் மருமகளைக் கசக்க வேண்டாம் என்ற பச்சாத்தாபத்துடன், "சரி போ. இனிமேலாவது பணத்தை இப்படிப் பாழாக்காமல் இருந்தால் உனக்குத்தான் நல்லது'' என்று முடித்தாள் மாமியார்.

சுந்தரி எழுந்து போய்விட்டாள்.

சுந்தரி 'எங்கம்மா கொடுத்த பணம்' என்று சொல்லாமல் 'எங்கம்மா வீட்டுப் பணம்' என்றுதான் சொன்னாள். அப்படிச் சொன்னதில் ஒரு மர்மம் அடங்கியிருக்கிறது. அது என்னவென்பதைப் பின்னால் பார்ப்போம்.

மாமியார் சொன்ன புத்திமதியை ஏற்றுக்கொண்டது போல் அப்போது தோற்றமளித்த சுந்தரி அதற்கொப்ப நடந்து கொள்ளவில்லை. அன்று மாலையிலேயே வெளியே போனவர்கள் வழக்கம் போல் இரவு பதினொரு மணிக்கு வீட்டுக்கு வந்தார்கள்.

அம்மணியம்மாளுக்கு அடக்க முடியாத வருத்தம் வந்துவிட்டது. மகன் சந்தோஷமாக வாழ்க்கை நடத்த வேண்டும் என்றும், அவனுக்கு ஓர் ஆண் குழந்தை பிறக்க வேண்டும் என்றும் ஆசைப்பட்டு, இன்னொரு கல்யாணம் செய்து கொள்ளவே விருப்பமில்லாமல் பலமுறை அதை மறுத்து விட்ட மகனைக் கட்டாயப்படுத்தி, வீட்டின்மேல் கடன்பட்டுக் கட்டி வைத்த மருமகள் குடும்பத் தலைவியாகிய தன்னைத் துரும்பாக மதிக்கின்றாளே என்ற விசாரம் முதன்முதல் அன்றுதான் அம்மணியம்மாளுக்கு உண்டாயிற்று.

அந்த விசாரம் மாமியாரைத் தெய்வமாக மதிக்கும் தாமரைக்கண்ணியை நினைப்பூட்டியது. அந்த நினைப்பு, தாமரைக்கண்ணி, சுந்தரமூர்த்தி, சந்திரா, நெல்லையப்பன் முதலானவர்கள் திரும்பி வரவில்லையே என்ற ஏக்கத்தை அதிகப்படுத்திவிட்டது.

இந்தக் கவலைகளோடு வீட்டு வேலைகளையும் செய்ய வேண்டியிருந்ததால், அம்மணியம்மாளின் உடல் நலங்கெட்டுக் காய்ச்சல் வந்து படுத்துவிட்டாள்.

தாயார் படுத்துவிட்டதைக் கண்ட முருகேசன் பதறி விட்டான்; உடனே ஓடி டாக்டரைக் கூட்டிக் காண்பித்தான். டாக்டர் பரிசோதித்துவிட்டு, "ஜுரம் இலேசாகத்தான் இருக்கிறது. ஆனால், பலவீனம் பயப்படக்கூடியதாக இருக்கிறது. ஜாக்கிரதையாகக் கவனித்துக்கொண்டால் அபாய மிருக்காது" என்று உடனே ஓர் ஊசி மருந்தைச் செலுத்தி உள்ளுக்குச் சாப்பிட வேண்டிய மருந்துகளையும் எழுதிக் கொடுத்தார்.

முருகேசன் இரவு பகலாக அன்னையின் அருகிலேயே இருந்து கண்ணும் கருத்துமாகக் கவனித்துக்கொண்டான். சுந்தரி கணவனுடன் இருந்து அவன் ஏவலைச் செய்து கொண்டிருந்தாள். சுந்தரியை மணந்துகொள்ளுமுன் பல வருடங்கள் படுக்கையிற்கிடந்த நோயாளியான தாமரைக் கண்ணிக்கு அருகிலிருந்து 'நர்சிங்' செய்து பழகியவன் முருகேசன். அதனால் அன்னைக்கு மருந்து கொடுப்பதையும் ஆகாரம் கொடுப்பதையும் வேறு யாரும் செய்யவிடாமல் தானே செய்து வந்தான். சுந்தரியின் மனத்தில் மாமியாரின் அசௌக்கியத்தைப்பற்றி எவ்வளவு அனுதாபம் இருந்ததோ சொல்ல முடியாது. ஆனால், கணவனைக் கருதியாவது அவனுடன் இருந்து அவன் சொன்னபடி நடந்துகொண்டாள்.

அம்மணியம்மாள் எழுந்து நடமாடக்கூடிய அளவுக்கு நலமும் பலமும் உண்டாக ஒரு மாதத்துக்குமேல் ஆகிவிட்டது. ஆனாலும் வீட்டு வேலைகளைச் செய்ய முடியாது.

மார்க்கெட்டுக்குப் போய்வருவது முருகேசன்தான். வேறு வழியில்லாததால் சுந்தரிதான் சமையலைக் கவனிக்க வேண்டும். ஆனாலும் தன்னை அதிகம் அலட்டிக்கொள்ளாமல் வேலைக்காரப் பெண்ணே பெரும்பாலும் வேலைகளைச் செய்யும்படி பார்த்துக்கொள்ள அவளால் முடியும்.



தான் படுக்கையில் விழுந்தபோதே வீட்டுச் செலவு களுக்கும் டாக்டருக்கும் மருந்துகளுக்கும் கொடுக்கத் தேவையான பணத்தை எடுத்துக்கொள்ள மகனிடமே பெட்டிச் சாவியைக் கொடுத்துவிட்டாள், அம்மணியம்மாள். அன்னையை முன்னறி தெய்வமாக வணங்கும் முருகேசன் அன்னையின் பெட்டியிலுள்ள பணத்தில் அவசியமான வீட்டுச் செலவுக்கும் வைத்தியத்துக்கும் தேவைப்பட்டதைத் தவிரத் தனக் கென்று ஒரு தம்படிகூட எடுக்க மாட்டான்.

தன் தாயார் பூர்ண நலமடைகிறவரை தாயார் அருகிலேயே இருந்ததால், அவனை உல்லாசப் பொழுது போக்குக்குச் சுந்தரி கூட்டிக்கொண்டு போக முடியவில்லை அதனால் சுந்தரி, சூதாட்டப் பழக்கமுள்ளவன் சூதாடப் போக முடியாமல் தவிப்பது போல் தவித்துக்கொண்டிருந்தாள்.

அம்மணியம்மாள் சௌக்கியமடைந்த பின் சிறுகச் சிறுகப் பழைய வழக்கம் ஆரம்பமாயிற்று. அம்மணியம்மாளுக்கு வருத்தந்தான். ஆனால், என்ன செய்வது? சுந்தரியோ மாமியார் சொன்ன புத்திமதியைச் சட்டை செய்யவில்லை. 'எங்கம்மா வீட்டுப் பணத்தில் நான் செலவு செய் கிறேன். யார் என்னைத் தடுக்க முடியும்?' என்ற மனோபாவத் தில் செலவு செய்கிறாள். அதைக் கண்டிக்க வேண்டுமானால், அம்மணியம்மாள் மகனிடத்தில் சொல்லித்தான் அவளை அடக்க முடியும். மகனிடம் சொல்வதானால், இதுவரையிலும் மகனிடம் சொல்லக்கூடாதென்று மறைத்தும் மன்னித்தும் விட்ட சுந்தரி செய்த பல குற்றங்களையும், அவள் தன்னை ஒரு சிறிதும் மதிக்காமல் நடந்துகொள்வதையும் சொல்லியாக வேண்டும். அப்படிச் சொல்லிவிட்டால் தாயாரை அவமதித்ததை அவன் பொறுக்கவே மாட்டான்; சுந்தரியை வெறுத்தாலும் வெறுத்துவிடுவான். அதனால் மகனுடைய வாழ்வுதானே கெட்டுப்போகும்? அத்துடன் பேத்தி ஜானகியின் படிப்பும் வளர்ச்சியும் பாழாகிவிடலாம்-என்றெல்லாம் எண்ணிப் பார்த்து, மனைவியின்மீது மட்டற்ற காதலுடன், மகிழ்ச்சியாக இருந்து வரும் மகனுடைய இன்ப வாழ்க்கையைக் கெடுத்து

விடக்கூடாது என்ற ஒரே காரணத்துக்காகச் சுந்தரியின்மீது வந்த வருத்தத்தை அடக்கிக்கொண்டாள், அம்மணியம்மாள்.

இப்படியிருக்கையில் அம்மணியம்மாள் அசௌக்கியமாக இருப்பதாக யாரோ சொல்லக் கேள்விப்பட்டுச் சுந்தரியின் தாயார் யோகாம்பாள் சம்பந்தியம்மாளைப் பார்க்க வந்தாள். அப்போது சுந்தரியும் முருகேசனும் ஜானகியுடன் வெளியே போயிருந்தார்கள்.

யோகாம்பாளை அன்போடு வரவேற்றாள் அம்மணியம்மாள்.

"அண்ணி! நீங்கள் ரொம்பக் காய்ச்சலாகப் படுத்திருந்தீர்களாமே! எனக்குச் சொல்லியனுப்பக்கூடாதா?" என்றாள் யோகாம்பாள்.

"ஏதோ படுத்திருந்தேன், இப்ப சௌக்கியமாயிட்டுது. என்னத்துக்கு உங்களுக்கெல்லாம் தொந்தரவு கொடுக்க வேணும் என்றுதான் தெரியப்படுத்தவில்லை. ஆனால், உன்னையும் உன் வீட்டுக்காரரையும் பார்க்க வேணுமென்று ஆசைப்பட்டுத்தான் இரண்டு மாசத்துக்கு முன்னால் சுந்தரி உங்களையெல்லாம் பார்த்துவிட்டு வருவதாக அங்கே வந்தபோது சொல்லியனுப்பினேன்" என்றாள் அம்மணியம்மாள்.

"அப்படியா! சுந்தரி சொல்லவேயில்லையே! அவள் அங்கே வந்தது முதல் வீட்டில் தங்கவேயில்லை. உங்களுக்கு இந்த வருடம் வயல்களிலிருந்து வருமானம் ரொம்பக் குறைந்து போய்ச் செலவுக்குப் பற்றாக்குறை வந்துவிட்டதாம். அதற்காகப் பணம் வாங்க அலைந்துகொண்டிருந்தாள். அப்போது சுந்தரியின் அப்பா ஊரில் இல்லை. நான்தான் உங்களுடைய பணக்கஷ்டத்தைக கருதி அவளுடன் போய்ப் பணம் வாங்கிக் கொடுத்தேன்" என்றாள் யோகாம்பாள்.

இதைக் கேட்ட அம்மணியம்மாளுக்குப் பெரிய சந்தேகம் வந்துவிட்டது. வீட்டுச் செலவுக்கே பற்றாக்குறையிருக்கும்போது கைக்கடிகாரம் எப்படி வாங்குவது என்றுதான் சொன்ன



தைப் பயன்படுத்திக்கொண்டு ஏதோ அதிகப்பிரசங்கித்தனம் செய்திருக்கிறாள் என்பது விளங்கிவிட்டது. அம்மணியம்மாளுடைய பணக்கஷ்டத்தை நீக்க வேண்டுமென்று யோகாம்பாளே சுந்தரியுடன் போய்ப் பணம் வாங்கித் தந்ததாகச் சொல்லுவதால், தான் வாங்கி வரச் சொல்லவில்லையென்று சொன்னால், மகளுடைய குற்றத்தைக் கருதி யோகாம்பாள் முழு விவரத்தையும் சொல்லக் கூசுவாள் என்று எண்ணி மறுப்பு ஒன்றும் சொல்லாமல், "யாரிடத்தில் எப்படி வாங்கினாய்?" என்று மட்டும் கேட்டாள், அம்மணியம்மாள்.

"அண்ணி, நீங்கள் எங்களுடைய கடன்களைத் தீர்க்க ஐயாயிரம் ரூபாய் தந்தீர்கள் அல்லவா?"

"ஆமாம்."

"அதற்குப் பதிலாக எங்கள் நிலங்களில் ஐயாயிரம் பெறக்கூடிய அளவு உங்களுக்குக் கிரயம் செய்து கொடுப்பதாக நாங்கள் சொன்னபோது நீங்கள் அந்த நிலத்தைச் சுந்தரியின் பேருக்குச் சீதனமாக எழுதிவிடும்படி சொன்னீர்களல்லவா?"

"ஆமாம்."

"அந்தப் பத்திரம் ரிஜிஸ்டர் ஆகாமல் எங்களிடத்திலேயே இருந்தது. ரிஜிஸ்டர் செய்து உங்களிடம் தந்துவிடலாம் என்று எண்ணிக்கொண்டே இருந்துவிட்டோம். சுந்தரி அங்கே வந்தவுடன் அந்தப் பத்திரத்தை ரிஜிஸ்டர் செய்து கொடுக்கச் சொன்னாள். என்ன அவசரம் என்று அவளுடைய அப்பா கேட்டார். அப்போதுதான் உங்கள் செலவுக்குப் பற்றாக்குறை என்பதைச் சொல்லி அந்த நிலத்தின்மேல் கடன் வாங்க வேணும் என்றும், அதற்காக அந்தப் பத்திரத்தை உடனே ரிஜிஸ்டர் செய்து கொடுக்க வேணுமென்றும் சொன்னாள். மறுநாளே சுந்தரியின் அப்பா அதை ரிஜிஸ்டர் செய்து கொடுத்துவிட்டு, ஓர் அவசர காரியமாக வெளியூர் போய்விட்டார். அதன் பிறகு நான்தான் சுந்தரியைக் கண்ணப்பரிடம் கூட்டிக்கொண்டு போய் நிலத்தை ஈடு வைத்து இரண்டாயிரம் ரூபாய் வாங்கிக் கொடுத்தனுப்பினேன்" என்று முடித்தாள் யோகாம்பாள்.

அம்மணியம்மாள் தன் தலையில் இடி விழுந்துவிட்டது போல் கதி கலங்கிவிட்டாள். சுந்தரியை மருமகளாக்கிக்கொள்ள' வீட்டை அடகு வைத்து எண்ணாயிரம் வாங்கிச் சுந்தரியின் பெற்றோருடைய கடன்களைத் தீர்க்க அம்மணியம்மாள் கொடுத்த ஐயாயிரம் ரூபாய்க்கு ஈடாக அம்மணியம்மாள் பேருக்குக் கிரயம் செய்வதாகச் சொன்ன நிலம் அது. அருமையான மருமகள் வரப்போகிறாள் என்ற மகிழ்ச்சிப் போதையில் அதைச் சுந்தரியின் பேருக்குச் சீதனமாக எழுதச் சொன்னாள் அம்மணியம்மாள். பத்திரம் எழுதப்பட்டுவிட்டது அம்மணியம்மாளுக்குத் தெரியும். அது ரிஜிஸ்டராகித் தனக்கு வருமென்றும், தன்னிடம் வராவிட்டாலும் அது எங்கிருந்தால் என்னவென்றும் எண்ணி, அதைப்பற்றி மறந்தே போயிருந்தாள் அம்மணியம்மாள். அவசியமானால் அந்த நிலத்தை விற்று வீட்டின் மேல் வாங்கியிருக்கிற கடன்அசலைக் கழித்து விடலாமென்றும் சில சமயங்களில் அம்மணியம்மாள் எணணியதுண்டு.

'அந்த நிலத்தை என் செலவுக்குப் பற்றாக்குறையை நீக்குவதற்கு என்பதுபோல் நடித்து அதன்மேல் கடன் வாங்கி வந்திருக்கிறாளே! சினிமா, நாடகம், ஓட்டலுக்கெல்லாம் போய் வர உனக்கு ஏது பணம் என்று நான் கேட்டபோது 'எங்கம்மா வீட்டுப் பணம்' என்றாளே! இவளை என்னா செய்தாலும் தீராது' என்று மனத்துக்குள்ளேயே நொந்துகொண்டு வெகு நேரம் மௌனமாக இருந்துவிட்டு, "யோகாம்பா! வீட்டுச் செலவுக்குப் பற்றாக்குறை என்பது உண்மைதான். அதைச் சொல்லிக்கொண்டிருந்ததைக் கேட்டுச் சுந்தரி அவசரப்பட்டு அங்கே வந்து அந்த நிலத்தின்மேல் கடன் வாங்கிவிட்டாள். இது உன் மருமகன் முருகேசனுக்குத் தெரிந்தால் வருத்தப்படுவான். அவனிடம் நீயோ உன் வீட்டுக்காரரோ சொல்லிவிட வேண்டாம்" என்றாள் அம்மணியம்மாள்.

யோகாம்பாளுக்குப் புரிந்துவிட்டது. "இல்லை அண்ணி! நானும் சொல்ல மாட்டேன்; அவரிடம் சொல்லவேண்டாம் என்று சொல்லுகிறேன்" என்றாள்.



இரண்டு நாள்கள் இருந்துவிட்டு யோகாம்பாள் போய்விட்டாள். அம்மணியம்மாளுடன் பேசினதைப்பற்றிச் சுந்தரியிடம் சொல்லவில்லை.

அம்மணியம்மாளுக்குச் சுந்தரியைப்பற்றி மனம் மிகவும் கசந்துவிட்டது. அவள் செய்த பல குற்றங்களிலும் இது மிகப் பெரிய குற்றம். அவளைத் திருத்த முடியவில்லை; கண்டிக்கவும் முடியவில்லை; தண்டிக்கவும் முடியவில்லை. கண்டிப்பதானாலும் தண்டிப்பதானாலும் மகனிடம் சொல்லித்தான் செய்ய வேண்டும். அப்படிச் செய்தால், அது மகனுடைய இன்ப வாழ்க்கையைத்தான் கெடுக்கும். அதைக் கருதித்தான் இந்தப் பெரிய குற்றத்தைக்கூட முருகேசனுக்குச் சொல்லிவிடக் கூடாதென்று யோகாம்பாளிடம் கேட்டுக்கொண்டது.

ஆனாலும் சுந்தரியின் அகம்பாவத்தையும் அதிகப் பிரசங்கித்தனத்தையும் அடக்க ஒரு வழி கண்டுபிடிக்க வேண்டும். இப்படியே விட்டுவிட்டால் குடும்பம் குட்டிச் சுவராகிவிடும் என்றெல்லாம் எண்ணிப் பல நாள்கள் தனக்குள்ளேயே குழம்பிக்கொண்டிருந்து கடைசியாக ஒரு தீர்மானம் செய்தாள். அது என்னவென்றால், இனிமேல் குடும்பப் பொறுப்பு எதையும் தான் நிர்வகிப்பதை விட்டுவிட்டு எல்லாப் பொறுப்புகளையும் மகனிடமே ஒப்படைத்துவிட்டுத் தான் ஒதுங்கி நிற்க வேண்டுமென்பதே.

மகன் வரவு செலவுகளைக் கவனித்துக் கடனுக்கு வட்டி கட்டுவதோ அசலைக் குறைப்பதோ முதலிய எல்லாப் பொறுப்புகளையும் நிர்வகிக்க ஆரம்பித்தால் அவனிடம் சுந்தரி உல்லாசச் செலவுக்குப் பணம் கேட்க முடியாது.

தாயாரிடம் எவ்வளவு பணம் இருக்கிறது என்பது மகனுக்குத் தெரியாது. அதனால் சுந்தரி செய்கிற உல்லாசச் செலவுகளுக்கெல்லாம் மாமியார் மருமகளுக்குக் கொடுக்கிற பணந்தான் என்று எண்ணிக்கொண்டிருக்கிறான்.

அதனால் பணப்பொறுப்பு முழுவதையும் மகனிடம் ஒப்படைத்துவிட்டால் சுந்தரிக்கும் பொறுப்புணர்ச்சி வந்துவிடும் என்றே அந்தத் தீர்மானம் செய்தாள், அம்மணியம்மாள்.

இந்தத் தீர்மானத்தைக் கொண்டு செலுத்தக் தருணம் பார்த்துக்கொண்டிருந்தாள். யாரையும் கேட்காமல் சுந்தரி நிலத்தின்மேல் கடன் வாங்கியது தனக்குத் தெரியும் என்பதையும் காட்டிக்கொள்ளவில்லை. அந்தப் பணத்தை அநாவசியச் செலவுகளில் வீணாக்குவதைப்பற்றியும் ஏனென்று கேட்கவில்லை.

தன்னுடைய தீர்மானத்தை எப்படிச் செயற்படுத்துவது என்று வழிவகைகளை எண்ணுவதிலேயே சில மாதங்கள் கழிந்தன.

ஒரு நாள் அம்மணியம்மாளுக்கு நெருங்கிய நட்பான சீதாலட்சுமி அம்மாள் அம்மணியம்மாளைப் பார்க்க வந்தாள். அந்த அம்மாள் முருகேசன் பிறப்பதற்கு முன்னால் அடிக்கடி வந்து போய்க்கொண்டிருந்தவள்; பெரும் பணக்காரர் ஒருவருக்கு வாழ்க்கைப்பட்டவள். அவளுடைய சொந்த வீடு வண்ணாரப்பேட்டையில். சில வருஷங்களுக்கு முன் கணவன் இறந்தபின் பம்பாயில் பெரிய உத்தியோகத்திலிருந்த மகனிடம் போய் அங்கேயே தங்கியிருந்தாள் ; எப்போதாவது சென்னைக்கு வந்தால் அம்மணியம்மாளைப் பார்க்காமல் போக மாட்டாள்.

இப்போது மகனைச் சென்னைக்கே மாற்றிவிட்டதால், சென்னைக்கு வந்து ஒரு வாரம் ஆயிற்று. அம்மணியம்மாளைப் பார்க்க அவளுடைய சொந்தக் காரிலேயே வந்திருந்தாள்.

நெருங்கிய நண்பர்கள் இருவர் நெடுநாள் சந்திக்காமலிருந்து மீண்டும் சந்திக்கிறபோது உண்டாகும் மகிழ்ச்சி ஆரவாரமும் குசலப் பேச்சுகளும் முடிந்த பின்பு சீதாலட்சுமி அம்மாள், "அம்மணீ! வடநாட்டில் நம் தமிழ்நாட்டில் உள்ளதுபோல் கோவில்கள் மனசைக் கவரக்கூடியவைகளாக இல்லை.



காசி, காசி என்று சொல்லுகிறோமே, அந்தக் காசிக் கோவில் கூடச் சிறப்புடையதாக இல்லை. உனக்குத்தான் தெரியுமே, நான் தினமும் ஏதாவது கோவிலுக்குப் போய் வரும் பழக்கம். அப்படி அந்த வடநாட்டுக் கோவில்களுக்குப் போனால் உடனே எனக்கு நம்ம நாட்டுக் கோயில்களின் நினைப்புத்தான் வரும். எப்படாப்பா தமிழ்நாட்டுக்குப் போவோம் என்ற ஏக்கம் உண்டாகும். இப்போ என் மகனை இந்த ஊருக்கு மாற்றி நாங்கள் வந்து ஒரு வாரம் ஆச்சு. இன்னும் பத்துப் பதினைந்து நாள் சென்று என்னுடைய பெரிய மோட்டார் காரிலேயே ஒரு வேலைக்காரி, ஒரு பியூன், என் சம்பந்தியம்மாள் எல்லோரும் வேண்டிய சௌகர்யங்களுடன் புறப்பட்டுச் சிதம்பரம், சீர்காழி, வைத்தீஸ்வரன் கோவில், ஸ்ரீரங்கம், திருவானைக்காவல் முதலிய இன்னும் பல க்ஷேத்திரங்களையும் தரிசித்துவிட்டு வரலாமென்றிருக்கிறேன். முடிந்தால் நீயும் என்னோடு வாயேன்; பத்துப் பதினைந்து நாள்களில் திரும்பிவிடலாம்" என்றாள்.

அந்த அழைப்பு அம்மணியம்மாளுக்குக் காதில் தேன் பாய்ந்ததுபோல் இனித்தது. வீட்டுப் பொறுப்பை மகனிடத்தில் ஒப்படைத்துவிட்டுக் கொஞ்ச நாளைக்காவது ஒதுங்கியிருக்க இதைவிட நல்ல வாய்ப்பு எப்போது கிடைக்கப் போகிறது? பத்துப் பதினைந்து நாள்கள் மட்டுமல்ல, பத்துப் பதினைந்து மாதங்கள் ஆனாலும் வீட்டைவிட்டு வெளியூர்களில் இருந்துவிட்டு வரச் சம்மதந்தான்.

"எல்லாக் கோவில்களையும் பத்துப் பதினைந்து நாள்களில் தரிசித்துவிட முடியுமா?" என்றாள் அம்மணியம்மாள்.

"பதினைந்து நாளில் முடியாவிட்டால் ஒரு மாதந்தான் ஆகட்டுமே, முழுகிப் போவது என்ன? நாம் இங்கே இல்லையென்று எந்தக் காரியத்துக்கும் குந்தகம் வந்துவிடாது" என்றான் சீதாலட்சுமி அம்மாள்.

"சரி; ரொம்ப சந்தோஷம். நானும் வருகிறேன். உன் அழைப்புக்கு வந்தனம்."

"போதும், போதும். எனக்கு நீ வந்தனம் சொல்ல வேண்டாம். நீயும் வர ஒத்துக்கொண்டதற்கு நான்தான் உனக்கு வந்தனம் சொல்ல வேணும்" என்றாள் சீதாலட்சுமி அம்மாள்.

"அது சரி, இன்னும் பதினைந்து நாளுக்குள் தயாராகிவிட வேணுமா ?"

"பதினைந்து நாள் என்ற கண்டிப்பு ஒன்றும் இல்லை. இருபது நாள் அல்லது மேலுங்கூட ஆகலாம். உத்தேசமாகப் பதினைந்து நாள் என்று சொன்னேன். எங்கள் சாமான்கள் எல்லாம் கூட்சு வண்டியில் வருகின்றன. அவை வந்து வீட்டை ஒழுங்கு பண்ணி, மகனும் மருமகளும் குழந்தைகளும் சௌகரியமாக இருக்கச் செய்துவிட்டுப் போகத்தான் அப்படிச் சொன்னது. இல்லாவிட்டால் நாளைக்கேகூடப் புறப்பட்டு விடலாம்" என்றாள் சீதாலட்சுமி அம்மாள்.

மேலும் சிறிது நேரம் பேசிக்கொண்டிருந்துவிட்டு அந்த அம்மாள் புறப்படும்போது அம்மணியம்மாள், "சீதா ! யாத்திரைக்குப் புறப்படும் நாள் நிச்சயித்து எனக்கு முன் கூட்டியே வந்து சொல்லு. நான் இன்னும் பதினைந்து நாளில் தயாராகிவிடுகிறேன்" என்றாள்.

"ஆகட்டும்" என்று சொல்லிவிட்டு அந்த அம்மாள் போய் விட்டாள்.

அன்று இரவு முழுவதும் அம்மணியம்மாள் யாத்திரைக்குப் புறப்படுமுன் குடும்பப் பொறுப்புகளை மகனிடம் ஒப்படைத்து விடும் திட்டத்தைப்பற்றிச் சிந்தித்து முடித்துக்கொண்டாள்.

ஒரு நாள் சுந்தரி, தானும் குளித்து ஜானகியையும் குளிக்கச் செய்யக் குளியல் அறைக்குப் போனாள். அவர்கள் இருவரும் குளித்து வரக் குறைந்தது அரை மணி நேரம் ஆகும். அந்தச் சமயத்தில் அம்மணியம்மாள் மகனைக் கூப்பிட்டுத் தன்னருகில் அமரச்செய்து, "அட சாமி! வர வர என்னால் ஒரு காரியமும் செய்ய முடியவில்லை........"



தாயார் சொல்லி முடிக்குமுன், "அம்மா! நீங்கள் ஏதுக்கு இனிமேல் காரியம் செய்ய வேண்டும் ? எல்லாக் காரியமும் சுந்தரியே செய்யட்டும். போதாவிட்டால் நான் செய்கிறேன்" என்றான் முருகேசன.

"அதல்லடா சாமி! வீட்டு வேலைகளைச் சுந்தரியும் செய்வாள்; நீயும் செய்வாய். நான் சொல்ல வந்தது அதல்ல. பண்ணைச் செலவுக்குப் பணம் கொடுக்கிறதோ, வீட்டுச் செலவுக்குப் பணம் கொடுக்கிறதோ, பண்ணையில் விளைகிற மகசூலை விற்கிறதோ, விற்ற பணத்தைப் பாதுகாப்பதோ, கடனுக்கு வட்டி கட்டுவதோ ஆகிய பொறுப்பை எல்லாம் இது வரைக்கும் நான்தானே செய்து வந்தேன். இனிமேலும் எனக்கு இந்தப் பாரம் வேண்டாம். தலைக்குமேல் வளர்ந்து விட்ட தங்கமான குணமுள்ள என் கண்மணி நீ இருக்க நான் ஏன் இந்தச் சுமையைத் தோளில் போட்டுக்கொண்டு துன்பப் பட வேணும்? சொல்லு" என்றாள் அன்னை.

"அதற்கென்ன அம்மா, நீங்கள் எப்படிச் சொல்லுகிறீர்களோ அப்படிச் செய்கிறேன்" என்றான் மகன்.

"ஆமாண்டா சாமி, அதுதான் எனக்கு வேண்டியதெல்லாம். எனக்கு வயசு அறுபதுக்குமேல் ஆயிட்டுது. இனிமேல் நான் பகவானை நினைத்துக்கொண்டு நிம்மதியாகக் காலந்தள்ள வேணும்."

"அப்படியே செய்யுங்கள். மற்றதெல்லாம் நான் கவனித்துக்கொள்ளுகிறேன்."

"இன்னொரு சேதி. அதையும் உன்னிடம் சொல்லி உன் சம்மதத்தைப் பெற வேண்டும்."

"என்ன சேதி ?"

"நீ பிறக்கிறதுக்கு முன்னாலிருந்து எனக்கு உயிருக்குயிரான சிநேகிதி சீதாலட்சுமி அம்மாள். இங்கே அடிக்கடி வந்து போயிருக்கிறாள். நீகூட அந்த அம்மாளைப் பார்த்திருக்கிறாய்."

"ஆமாம்; பார்த்திருக்கிறேன். சுந்தரியின் கல்யாணத்திற்கு முன் ஒருநாள் வந்து வெகு நேரம் பேசிக்கொண்டிருந்து காப்பி சாப்பிட்டுவிட்டுப் போனார்களே அந்த அம்மாள் தானே?" என்றான் முருகேசன்.

"ஆமாம்; ஆமாம். அவளேதான். அந்த அம்மாள் இத்தனை வருஷமாகப் பம்பாயில் இருந்த மகனோடு இருந்தாள். இப்போது மகனும் இந்த ஊருக்கே மாற்றலாகி விட்டதால், குடும்பத்தோடு வந்துவிட்டார்கள். அந்த அம்மாள் அவளுடைய மோட்டார் காரில் இன்னும் பத்து நாளில் சிதம்பரம், சீரங்கம் முதலிய கோவில்களுக்கெல்லாம் போய்விட்டு வரலாம் என்று என்னையும் கூப்பிடுகிறாள். இதை விட்டால் இவ்வளவு சௌகரியமாக என்னால் அங்கெல்லாம் போய் வர முடியாது. அதனால் நானும் அந்த அழைப்பை ஏற்றுக்கொண்டேன். போய் வர உன் சம்மதம் வேணும்."

"அம்மா! இதற்கு என் சம்மதம் எதற்கு? இப்படிப்பட்ட வாய்ப்புக் கிடைப்பது கஷ்டம். சந்தோஷமாகப் போய் சாமி கும்பிட்டு வாருங்கள். நான் தடை சொல்வேனா என்ன?" என்றான் மகன்.

மகன் பொறுப்புகளை ஏற்றுக்கொண்டதில் அம்மணியம்மாளுக்கு அடக்க முடியாத மகிழ்ச்சி. பூட்டவிழ்த்துவிட்ட பாரவண்டி மாடுபோல் பூரித்துப் போனாள்; உடனே பணத்துடன் இரும்புப்பெட்டியின் சாவிகளையும் மகனிடம் ஒப்படைத்துவிட எண்ணினாள்.

அந்த எண்ணம் வந்தவுடனே அந்தப் பெட்டியிலிருக்கிற தன்னுடைய பழைய நகைகளின் நினைவு வந்தது. அந்த நகைகளை அதிலேயே விட்டுப் போனால் கட்டாயம் சுந்தரி அவைகளைக் கையாடிவிடுவாள் என்ற எண்ணம் எச்சரித்தது.

அடுத்த சில நாள்கள் அதே வேலையாக விலை போகக்கூடிய எல்லா நகைகளையும் விற்றுப் பணமாக்கினாள். ஐயாயிரம் ரூபாய் கிடைத்தது. அதில் மகனிடம் பொறுப்பை ஒப்படைக்கும்போது கொடுக்க இரண்டாயிரமும், தன் கையில் ஐநூறும் போக மீதி இரண்டாயிரத்து ஐநூறு ரூபாயைப் பாங்கில் போட்டுவிட்டாள்.



சீதாலட்சுமி அம்மாள் மறுபடியும் ஒரு நாள் வந்து யாத்திரைக்குப் புறப்படும் நாளைக் குறிப்பிட்டு அம்மணியம்மாளைத் தயாராக இருக்கும்படி சொல்லிவிட்டுப் போனாள்.

புறப்படுவதற்கு இரண்டு நாள்களுக்கு முன்னால் அம்மணியம்மாள் வழக்கமான இடத்தில், முருகேசனுடைய அறைக்குப் பக்கமாக உட்கார்ந்துகொண்டு மகனைக் கூப்பிட்டாள். மகனோடு மருமகளும் வந்தாள்.

வீட்டுச் செலவுக்கும் தனக்கு வைத்தியச் செலவுக்கும் போனது போக மிச்சமிருந்த அறுநூறு ரூபாயும் கடலை விற்ற பணம் எழுநூற்று ஐம்பதும் நகைகளை விற்ற பணத்தில் இரண்டாயிரமும் ஆக மூவாயிரத்து முந்நூற்று ஐம்பது ரூபாயையும் மகனிடம் கொடுத்துப் பெட்டிச்சாவியையும் கொடுத்துவிட்டு மருமகளைப் பார்த்து, "சுந்தரி! நான் நாளை நின்று சீதாலட்சுமியம்மாளுடன் கொஞ்ச நாள் கோயில் குளங்களுக்கு யாத்திரை போய்விட்டு வருகிறேன். இனிமேல் பண்ணை வேலைகளையும் வீட்டுக் காரியங்களையும் நீயும் முருகேசனுந்தான் கவனித்துக்கொள்ள வேணும்" என்றாள் அம்மணியம்மாள்.

"நாங்கள் கவனித்துக்கொள்ளுகிறோம், நீங்கள் யாத்திரை போய்விட்டு வாருங்கள் அத்தை" என்று மகிழ்ச்சியோடு சொன்னாள் சுந்தரி.

குறிப்பிட்ட நாளில் அதிகாலையில் சீதாலட்சுமியுடன் அம்மணியம்மாள் யாத்திரைக்குப் போய்விட்டாள்.

# அத்தியாயம் 24

தாயார் சொன்னபடி முருகேசன் பொறுப்போடு காரியங்களைக் கவனிக்கலானான்; தினசரி வீட்டுச் செலவுகளைச் சிக்கனமாகச் செய்தான். காதல் மனைவியின் பிரியத்துக்காக வழக்கம்போல் அடிக்கடி உல்லாசப் பொழுது போக்குக்குப் போய் வந்தான். அதற்காகும் செலவுகளையெல்லாம் சுந்தரி நிலத்தை அடகு வைத்து வாங்கின பணத்திலிருந்துதான் அவளே செய்து வந்தாள்.

யாத்திரைக்குப் போன அம்மணியம்மாள் இரண்டு மாதங்கள் சென்றும் திரும்பி வரவில்லை. அதுவரையிலும் தாயாரைப்பற்றிய கவலையில்லாதிருந்த முருகேசன் அதன் மேல் கவலைப்படத் தொடங்கிவிட்டான்; கவலைப்பட்டுக் கொண்டே மேலும் நான்கு மாதங்களைக் கடத்தினான். அப்போது வயல்களில் நடவு காலமானதால், அந்த வேலைகளிலேயே கவனம் செலுத்தியதால் கவலைத்துன்பம் அதிகமிருக்கவில்லை.

அதன் பிறகு தாயாரின் ஏக்கம் அதிகமாகிவிட்டது. சீதாலட்சுமியம்மாள் திரும்பி வந்துவிட்டாளா என்பதை அறிந்தால் தாயாரைப்பற்றித் தெரிந்துகொள்ளலாம் என்ற எண்ணம் உதித்தது. ஆனால், சீதாலட்சுமியம்மாள் வசிக்கும் இடம் தெரியாதே. சீதாலட்சுமியம்மாளைப் பார்த்திருக்கிறான்; அவளைப்பற்றித் தாயார் சொன்ன சிறப்புகளையும் கேட்டிருக்கிறான். ஆனால், அந்த அம்மாள் எங்கே வசிக்கிறாள் என்பதையோ அல்லது அவளுடைய மகனுக்குச் சென்னையில் எங்கே என்ன உத்தியோகம் என்பதையோ தெரிந்து வைத்துக்கொள்ள அவசியமோ வாய்ப்போ இல்லாமற்போய் விட்டது.

எண்ணியெண்ணிப் பார்த்தான்; ஒரு வேளை சீதாலட்சுமியம்மாளும் தன் தாயாரைப்போல் விதவையாக இருப்பதாலும் குடும்பப் பொறுப்பு எதுவும் இல்லாமல்



இருப்பதாலும் இருவரும் சேர்ந்து நீண்ட காலம் கோயில்களைத் தரிசித்துக்கொண்டிருக்கத் திட்டமிட்டிருக்கிறார்களோ என்று எண்ணினான்.

ஒன்பது மாதங்கள் சென்று முருகேசனுக்கு ஒரு கடிதம் வந்தது. அதில், "உன்னுடைய தாயார் அம்மணியம்மாள் மிகவும் சௌக்கியமாக இருக்கிறார்கள். அவர் திரும்பி வர நீண்ட காலம் ஆகலாம். அதற்காகக் கவலைப்பட வேண்டாம். அவர்கள் நலத்தைப்பற்றி அப்போதைக்கப்போது தெரியப்படுத்துகிறேன்" என்று மட்டும் இருந்தது. எந்த ஊரிலிருந்து எழுதப்பட்டது என்றறிய ஊரின் பெயரில்லை. யார் எழுதினது என்றறியக் கையொப்பமும் இல்லை. தபால் முத்திரையில் மட்டும் 'திருவல்லிக்கேணி' என்ற பெயர் இருந்தது.

இப்படிக் கடிதம் எழுதத் திருவல்லிக்கேணியில் நமக்குத் தெரிந்தவர்கள் யாரும் இல்லையே என்று திகைத்தான். சுந்தரியும் அந்தக் கடிதத்தைப் படித்து எழுதியது யாரென்று அறிய முடியாமல் விழித்தாள். தாயார் சௌக்கியமாக இருக்கிறார் என்பதில் மகிழ்ச்சியடைந்தாலும் தன்னைவிட்டு ஒரு நாள்கூடப் பிரிந்திருக்கச் சகிக்காத தன்னுடைய தாயார் திரும்பி வர நீண்ட காலம் ஆகலாம் என்று எழுதப்பட்டிருப்பதைப் பார்த்து முருகேசன் வியப்பும் கலக்கமும் அடைந்து முகவாட்டத்துடன் சிந்தனையில் ஆழ்ந்துவிட்டான்.

அதைக் கண்ட சுந்தரி, "அத்தான்! அத்தை மிகவும் சௌக்கியமாக இருப்பது தெரிந்துவிட்டது. அவர்களுடைய பிரியம்போல் கோயில் குளங்களுக்குப் போய்விட்டு மெதுவாக வரட்டுமே. இதற்காக வருத்தப்படுவானேன்?' என்றாள்.

முருகேசனும் சுந்தரி சொன்னபடியே மனத்தை ஒருவாறு தேற்றிக்கொண்டான்; பண்ணையைக் கவனிப்பதிலேயே கருத்தைச் செலுத்தினான். அந்த வருஷம் முந்தின வருஷத்தை விட விளைச்சல் அதிகமாயிற்று. கண்டு முதலை விற்றதில் செலவுகளெல்லாம் போக இரண்டாயிரத்து எண்ணூறு ரூபாய் மிச்சமாயிற்று. தாயார் சொல்லியிருந்தபடி முதலில் வீட்டு

மேல் வாங்கியிருந்த கடனுக்கு வட்டியைக் கொண்டுபோய்க் கட்டிவிட்டான். சுந்தரி, தன் மாமியார், கடனுக்கு வட்டி கட்ட வேணும் என்று சொன்னபோது 'வட்டி அடுத்த வருஷம் கட்டிக் கொள்ளலாம் அத்தை' என்று சொன்னதுபோல் கணவனிடம் சொல்லவில்லை. அவளும் கணவனுடன் போய்த்தான் வட்டி கட்டப்பட்டது. சுந்தரிக்கும் பொறுப்புணர்ச்சி வந்துவிட்டதோ, அல்லது கணவன் விருப்பத்தைத் தடுக்க முடியாது என்பதனாலோ சொல்ல முடியாது. எப்படியிருந்தாலும் அவளுடைய ஒத்துழைப்பு மெச்சத் தக்கதே.

மேலும் பல மாதங்கள் சென்று முருகேசனுக்கு முன் போலவே ஊர் இல்லாத ஒரு கடிதம் வந்தது. அதில் "உன் தாயார் மிகவும் சௌகரியமாக இருக்கிறார்கள். உன் நலத்தைப் பற்றியும் உன் மனைவி மகள் இருவருடைய நலத்தைப்பற்றியும் கேட்டிருந்தார்கள். நீங்கள் மூவரும் சுகமாக இருப்பதாகத் தெரியப்படுத்திவிட்டேன். உன் தாயார் தென்னாட்டுச் சேத்திரங்களையெல்லாம் தரிசித்துவிட்டுக் காசி முதலான வடநாட்டுச் சேத்திரங்களையும் தரிசித்து வரத் திட்டமிட்டிருக்கிறார்கள். நீங்கள் அவரைப்பற்றிக் கவலைப்படாமல் இருக்கலாம்'' என்று எழுதப்பட்டிருந்தது.

தன் தாயார் மிகவும் சௌக்கியமாக இருக்கிற சேதியும், அவர் காசி முதலான சேத்திரங்களுக்குப் போய் வரத் திட்டமிட்டிருக்கிற சேதியும் மிக்க மகிழ்ச்சியும் ஆறுதலும் அளிப்பனவாக இருந்தாலும் இப்படி யாரோ ஓர் அநாமதேய மனிதரைக் கொண்டு கடிதம் எழுதச் செய்கிற மர்மம் முருகேசனுக்கு வியப்பாக இருந்தது.

'எனக்கு வயசு அறுபதுக்கு மேல் ஆகிவிட்டது. இனிமேல் நான் பகவானை நினைத்துக்கொண்டு நிம்மதியாகக் காலந்தள்ள வேணும்' என்று தன் தாயார் சீதாலட்சுமி அம்மாளுடன் யாத்திரைக்குப் புறப்படுமுன் சொன்னது முருகேசனுடைய நினைவுக்கு வந்தது. அப்படி அன்னை சொன்னது அப்போதே துறவு மனப்பான்மையுடன் பகவானை நினைத்துக்கொண்டு



நெடுங்காலம் யாத்திரை செய்யத் திட்டமிட்டுக்கொண்டு சொன்னதாகத் தெரிகிறது. அதற்காகத்தான் பெட்டிச்சாவியோடு எல்லாப் பொறுப்புகளையும் தன்னிடம் ஒப்படைத்தாரோ என்று ஊகித்தான். மிக்க பணக்காரியான சிநேகிதி சீதாலட்சுமியம்மாளுடைய அழைப்பின்மேல் அவளுடன் போயிருப்பதால் நல்ல வசதிகளுடன் பிரயாணம் செய்ய முடியும். அந்த வாய்ப்பை நழுவவிடக்கூடாதென்று வடநாட்டுக் கோயில்களையும் தரிசித்து வர அம்மா ஆசைப்பட்டிருக்கிறாள். அதில் குற்றமில்லை, போய் வரட்டும் என்று முருகேசன் நிம்மதியடைந்தான்.

முருகேசனும் சுந்தரியும் மகிழ்ச்சி பொங்கக் குடித்தனம் நடத்தினார்கள். மாலை வேளைகளில் வழக்கம்போல் உலாவிப் பொழுதுபோக்கப் போனாலும் முன்போல் சினிமாவுக்கும் நாடகத்துக்கும் ஓட்டலுக்கும் என்ற டம்பச் செலவுகள் குறைந்துவிட்டன. மனைவியின் கட்டாயத்துக்காக மாதத்தில் இரண்டு அல்லது மூன்று நாள்களில்தான் முருகேசன் சினிமாவுக்குப போகச் சம்மதிப்பான். அதற்கு முக்கியக் காரணம் அந்த வருஷம் விளைச்சல் குறைந்து கடனுக்கு வட்டி கட்ட முடியாமற்போய்விட்டதே.

மகள் ஜானகிதான், 'பாட்டி எங்கே?' 'பாட்டி எங்கே?' என்று பல நாள்கள் கேட்டுக்கொண்டேயிருந்து சித்தி சொன்ன சமாதானங்களைக் கேட்டுச் சிறுகச் சிறுகப் பாட்டியைப் பற்றிய ஏக்கத்தை மறந்துவிட்டாள்.

மாதங்களும் வருடங்களும் உருண்டோடிக்கொண்டிருந்தன. ஜானகி வருடாவருடம் படிப்பில் சிறப்புறத் தேறிப் பல பரிசுகளும் பெற்றாள்; உயர்நிலைப் பள்ளிப் படிப்பில் மாகாணத்திலேயே முதல்வியாகத் தேறித் தங்கப்பதக்கமும் பரிசுகளும் பெற்றாள். அவளுடன் படித்த பக்கத்து வீட்டு பாத்திமா என்ற மகமதியப் பெண்ணும் சில பரிசுகள் பெற்று ஒவ்வொரு வருடமும் தேறி ஜானகியுடன் கூடவே மேல் வகுப்புக்கும் போய் உயர்நிலைப் படிப்பிலும் முதல் வகுப்பில் தேறினாள்.

கல்லூரிக்குப் போகுமுன் பாத்திமா பருவமடைந்துவிட்டாள். அதன் பிறகு அவள் குலவழக்கப்படி கோஷாப் பெண்ணாகி விட்டாள். அவளுடைய தாயார் படிப்பை நிறுத்திவிட விரும்பினாள். ஆனால், பாத்திமா பிடிவாதமாக பி. ஏ. வரையிலும் படிக்க ஆசைப்பட்டாள். தந்தை அதற்கு இணங்கினதால் அவள் பெண் கல்லூரியில் சேர்ந்து ஹாஸ்டலில் தங்கிப் படிக்கலானாள்.

ஜானகியும் அதே வயதும் பருவமும் அடைந்த பெண் என்றாலும் கோஷா அல்ல. வீட்டிலிருந்தே காலேஜுக்குப் போகலாம். ஆனால் அரி வரி வகுப்பிலிருந்து இதுவரையிலும் பள்ளியிலும் வீட்டிலும் இணைபிரியாதிருந்த பாத்திமாவைப் பிரிந்திருக்க பிரியமில்லாத ஜானகி, தானும் ஹாஸ்டலில் சேரப் பிரியப்பட்டுச் சித்தியிடமும் தந்தையிடமும் தன் விருப்பத்தைத் தெரிவித்தாள்.

முருகேசனும் சுந்தரியும் அடிக்கடி சேர்ந்தே வயல்களுக்குப் போவதால் பாட்டியும் வீட்டிலில்லாமல் ஜானகி மட்டும் தனித்திருக்க வேண்டியிருக்கிறது. அதையெண்ணி ஜானகியை ஹாஸ்டலில் சேர்ப்பதே நல்லதென்று, கண்டு அவளையும் ஹாஸ்டலில் சேர்த்துவிட்டார்கள். ஜானகியும் பாத்திமாவும் அடைந்த மகிழ்ச்சியை அளவிடவும் முடியுமா?

மாதங்களும் வருடங்களும் ஓடிக்கொண்டிருந்தன. இடையிடையே அம்மணியம்மாள் சௌக்கியமாக இருப்பதாக அநாமதேயக் கடிதங்கள் வந்துகொண்டேயிருந்தன. கடைசியாக வந்த ஒரு கடிதத்தில் திருச்சியில் இருப்பதாகவும் சீக்கிரத்தில் சென்னைக்கு வரலாம் என்றும் எழுதப்பட்டிருந்தது. அந்தக் கடிதத்தை ஜானகி படித்துப் பார்த்து மகிழ்ச்சியடைந்தாள்.

குறிப்பாக, அந்த அம்மாள் ஏன் திருச்சியில் தங்கியிருக்கிறார், எப்போது வருவார் என்பதைப்பற்றிய விவரம் ஒன்றும் இல்லாததால் முருகேசனுக்கு அந்தக் கடிதங்களைப்பற்றி ஆர்வம் சப்பிட்டுப் போய்விட்டது. வந்தபோது வரட்டுமென்று விட்டுவிட்டான்



ஜானகியும் பாத்திமாவும் பி. ஏ. பரீட்சையில் சிறப்புறத் தேறிவிட்டார்கள். ஹாஸ்டலை விட்டு வீட்டுக்கு வந்த பின்னும் இரவில் தூங்கும்போது தவிர மற்ற நேரங்களில் இடைவிடாது சேர்ந்தே இருப்பார்கள்.

ஜானகி இயல்பாகவே அதிசயிக்கத்தக்க அழகி. ஹாஸ்டல் வாழ்க்கையின் அமைதியான சூழ்நிலையில் படிப்பு, உணவு, தூக்கம் முதலியனவற்றில் காலந்தவறாத ஒழுங்குக் கட்டுப்பாட்டினால் ஜானகியின் அழகு வீட்டில் வசித்தபோது இருந்ததைவிட, பல மடங்கு அதிகப்பட்டுக் கண்டவர்களின் கண்ணையும் கருத்தையும் பறிக்கும் கட்டழகியாக விளங்கினாள்; அழகில் மட்டுமன்றி அறிவிலும் ஆற்றலிலும் அச்சமற்ற தன்மையிலும் சிறந்தவளாகவே திகழ்ந்தாள். சித்தி சுந்தரிக்கு அதில் அளவற்ற பெருமை. ஜானகியின் இயற்கை அழகோடு சுந்தரிக்குப் பிரியமானபடி செயற்கை அழகும் செய்து முன்போல் மாலை வேளைகளில் பொழுதுபோக்கத் தன்னுடன் கூட்டிக்கொண்டு போவதில் சுந்தரிக்குப் பெரு மகிழ்ச்சி. சில நாள்கள் அப்படி நடந்தது. ஆனால், ஜானகிக்கு அது பிடிக்கவில்லை. வெளியே போவதற்கென்று சிங்காரித்துக் கொள்ளாமல் சாதாரண உடையுடன் தன்னுடன் படித்த சில பெண்களுடன் மாலை நேரங்களில் கடற்கரைப் பக்கம் உலாவப் போவதைத்தான் ஜானகி விரும்பினாள். முருகேசனும் அதைத்தான் ஆமோதித்தான்.

சம வயதுள்ள நாலைந்து தோழிகளுடன்தான் ஜானகி மாலை நேரங்களில் கடற்கரைக்குப் போவாள்; தனியே போவதில்லை. பாத்திமா கோஷாப் பெண்; மற்ற நேரங்களில் ஜானகியை விட்டுப் பிரிய மாட்டாள். ஆனால், மாலையில் அவளுடன் கடற்கரைக்கோ அல்லது வேறு எங்குமோ போக முடியாது. அவள் விரும்பினாலும் அவளுடைய பெற்றோர்கள் அது விஷயத்தில் மிகவும் கண்டிப்புள்ளவர்கள்.

ஜானகியின் அழகு துறவிகள் மனத்தையும் சலனப்படுத்தி விடக்கூடியது என்றால், மற்ற ஆண் பிள்ளைகளை என்ன

செய்யும் என்பதைச் சொல்ல வேண்டியதில்லை. அதிலும் வாலிபர்கள் அந்த அழகைக் கண்டு ஆசைப்படாமல் இருக்க முடியாது. மிக்க அழகு வாய்ந்த ஒரு பருவப் பெண்ணைக் கண்டவுடன் எந்த ஆடவனுக்கும் அவனுடைய அறிவுக்கு முன்னால் ஆசைதான் அந்தப் பெண்ணின்மீது பாயும். அது இந்த உடலின் சுபாவம். ஒழுக்கமுள்ள ஆடவர்கள் அப்படித் தம்மையும் மீறிப் பாய்ந்த அந்த ஆசையைத் தம்முடைய அறிவைச் செலுத்தி இழுத்து வரச் செய்து புத்தி சொல்லி அடக்கிவிடுவார்கள். இன்னொரு பகுதியினர் தம்முடைய அறிவைக்கொண்டு அந்த ஆசையை அடக்காமல் அரசாங்கத் தண்டனை வரும் என்ற அச்சத்தினால் அந்த ஆசையை அடக்கிக்கொள்வார்கள். மிச்சமுள்ள சிறு பகுதியினருள் ஒரு பகுதியினர் அறிவையும் இழந்து அச்சத்தையும் மறந்து அவசரப்பட்டு அவமதிப்புக்கு ஆளாவார்கள். வெகு சிலர் காம வெறியர்களானாலும் அவசரப்படாமல் அச்சத்தை விட்டு அறிவைக்கொண்டு சூழ்ச்சிகள் செய்து தம்முடைய ஆசையை நிறைவேற்றிக்கொள்ள முயல்வார்கள்.

கடைசியாகச் சொல்லப்பட்ட இனத்தைச் சேர்ந்த வாலிபன் முத்துவீரப்பன் என்பவன். அவன் ஜானகி வசிக்கும் தெருவுக்கு அடுத்த தெருவில் ஒரு பெரிய மாளிகையில் வசிப்பவன். பரம்பரையாகப் பெரும் பணக்காரக் குடும்பத்திற்கு ஒரே வாரிசானவன். தந்தை இறந்துவிட்டதால் பெருஞ் செல்வத்திற்குச் சர்வாதிகாரி. வீட்டில் தாயாரும் தானும் வேலைக்காரர்களுமே தவிர வேறு யாருமில்லை.

அவனுக்கு இப்போது வயது இருபத்தேழு. இருபது பிராயத்திலிருந்தே அவனுக்குத் திருமணம்நடத்திவிடத் தாயார் செய்துவரும் எல்லா முயற்சிகளையும் மறுத்துவிட்டு விபசார வாழ்க்கை நடத்திக்கொண்டிருப்பவன் ; விலை மிகுந்த உடைகளில் தன்னை அலங்கரித்துக்கொண்டு வாட்டசாட்டமாக இருப்பான் ; நாகரிகமான குடிப்பழக்கமும் உள்ளவன் ; பணத்தைக் காட்டிச் சில ஏழைப் பெண்களை மணந்துகொள்வ



தாக ஆசை காட்டிக் கெடுத்துவிட்டவன் ; அதனால் அவன்மீது எழுந்த புகார்களைப் பணத்தைக் கொடுத்தே அமுக்கி விட்டவன்; சூழ்ச்சிகள் செய்வதில் வல்லவன்.

அப்படிப்பட்ட முத்துவீரப்பன் ஜானகி ஹாஸ்டலை விட்டு வீட்டுக்கு வந்த சில தினங்களுக்குப் பின் தன் தோழிகள் சிலருடன் கடற்கரைக்குப் போனபோது அவளைப் பார்த்து விட்டான். அழகான பருவப் பெண்களையே தேடியலையும் அவனுடைய காமக் கண்கள் ஜானகியைப் போன்ற அழகியைக் கண்டதேயில்லை.

கண் கொட்டாமல் ஜானகியையே பார்த்துக்கொண்டு நின்றவன், ஜானகியோடு வந்த பெண்களில் தனக்கு அறிமுகமான கோமளம் என்ற பெண்ணும் இருப்பதைக் கண்டு, "கோமளம்! சௌக்கியமா?" என்று புன்முறுவலோடு கேட்டான்.

கோமளம் அதைக் கேட்டும் கேட்காதவள்போல் பதில் சொல்லாமல் நடந்தாள். ஜானகியும் மற்றப் பெண்களும் முத்துவீரப்பன் கேட்டதையும் கோமளம் அதைச் சட்டை செய்யாமல் நடப்பதையும் கவனித்து முத்துவீரப்பனைத் திரும்பித் திரும்பிப் பார்த்துக்கொண்டே போனார்கள்.

முத்துவீரப்பன், தான் கேட்டது கோமளத்தின் காதில் விழவில்லையென்று எண்ணிக்கொண்டு ஜானகியின் அழகை மாந்திய மயக்கத்துடன் வெகுநேரம் கற்சிலை போல் அங்கேயே நின்று அவள் கண்ணுக்கு மறையும்வரை பார்த்துக் கொண்டிருந்தான்.

ஜானகியும் அவளுடைய தோழிகளும் முத்துவீரப்பனைக் கடந்து வெகு தூரம் வந்த பின் ஜானகி கோமளத்தைப் பார்த்து, "ஏண்டி கோமளம்! அது யார்? நல்ல குடும்பத்தைச் சேர்ந்த நாகரிக மனிதராகத் தெரிகிற அவர் உன்னைச் 'சௌக்கியமா' என்று கேட்டாரே! நீ அவருக்குப் பதில்கூடச் சொல்லாமல் வந்துவிட்டாயே!" என்றாள்.

"அவர் நல்ல குடும்பத்தில் பிறந்த நாகரீக மனிதர்தான்; படித்தவர்தான்; இனிமையாகப் பேசுவார்; பெரும் பணக்காரர். அலங்காரத்திலும் ஆடம்பரத்திலும் குறைச்சலில்லை. ஆனால், தூ! அந்த அயோக்கிய மனிதருடன் முகங்கொடுத்துப் பேச எந்த மானமுள்ள பெண்ணும் விரும்ப மாட்டாள்" என்றாள் கோமளம்.

"ஏன்? என்னடி அவரை வர்ணிக்க ஆரம்பித்துக் கடைசியில் அவர் முகத்தில் கரியைப் பூசிவிட்டாயே" என்றாள் ஜானகி.

"ஏனா! இளம்பெண்களை வஞ்சித்து அவர்களைக் கெடுப்பதே வேலையாக அலையும் காம வெறியர் அவர்; நயமாகப் பேசிச் சரசமாடத் தொடங்குவார். மெள்ளக் கையைப் பிடிப்பார்; காதல் கூறுவார். இசையாவிட்டால் பலாத்காரம் பண்ணுவார்."

"அது உனக்கெப்படித் தெரியும்? உன்னிடமும் அப்படிச் செய்தாரா?" என்றாள் சிரித்துக்கொண்டே அவர்களில் ஒருத்தி.

"சீ! நான் அவருடன் பேச்சுக் கொடுக்க அவ்வளவு முட்டாள் அல்ல. எங்கள் வீட்டில் என் தந்தையும் தாயாரும் அடிக்கடி அவரைப்பற்றிப் பேசுவார்கள். பல பெண்களிடத்தில் அப்படி அவர் செய்ததாக. அதிலிருந்து அவரைக் கண்டால் எனக்குப் பிடிப்பதில்லை. அவர் எங்கள் வீட்டுக்கும் அடிக்கடி வந்து என் தந்தை வக்கீலானதால்; அவர் சம்பந்தப்பட்ட கேசுகள் விஷயமாகப் பேசிக்கொண்டிருப்பதுண்டு. அவர் வந்தால் நான் அவருடைய கண்ணிற்படாதபடி இருந்து விடுவேன். சில சமயங்களில் நேருக்கு நேர் கண்டுவிட்டால் 'என்ன கோமளம், ஏன் பேச மாட்டேன் என்கிறாய்' என்பார். நான் பதில் சொல்லாமல் உள்ளே ஓடிவிடுவேன். அவருக்கும் எனக்கும் நேரடியான மனத்தாபம் ஒன்றுமில்லை. நான் அவரை அருவருக்கிறேன் என்பதும் அவருக்குத் தெரியாது.



நம்மை நிறுத்தி அவருடைய அழகைக் காட்டிக்கொள்ள வேணுமென்றுதான் என்னுடன் பேச முயன்றார். நான் காதில் விழாததுபோல் வந்துவிட்டேன்" என்றாள் கோமளம்.

பேசிக்கொண்டே போய்க் கடற்கரை மணலில் உட்கார்ந்து வெவ்வேறு விஷயங்களைப்பற்றிப் பேசிக்கொண்டிருக்கையில் அவர்களுள் சாரதாம்பாள் என்ற யுவதியின் திருமணப் பேச்சு எழுந்தது. சாரதாம்பாள் ஜானகிக்குப் பாத்திமாவுக்கு அடுத்தபடி மிகவும் நெருங்கிய தோழி. அவள் விரும்பாத ஒரு வரனுக்கு அவளை மணமுடிக்க அவளுடைய பெற்றோர்கள் பேச்சு நடத்திக்கொண்டிருக்கிறார்கள். அதனால் மிகவும் கவலையடைந்துள்ள சாரதா அந்த ஏற்பாட்டை விட்டுவிடும்படி தன் பெற்றோர்களுக்கு ஜானகி சொல்ல வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருந்தாள். அது அங்குக் கூடியிருந்த ஏழு பெண்களுக்கும் தெரியும். அதைப்பற்றியே இருட்டுகிறவரை ஆளுக்கொரு யோசனை சொல்லிப் பேசிக்கொண்டிருந்து விட்டுத் திரும்பி அவரவர் வீட்டுக்குப் போய்விட்டார்கள்.

* * *

தாரகைகளின் நடுவில் சந்திரனைக் கண்டதுபோல் அப்பெண்களின் மத்தியில் ஜானகியைக் கண்டுவிட்ட முத்துவீரப்பன் மற்றெல்லாவற்றையும் மறந்துவிட்டு ஜானகியின் மோகன வடிவத்தையே நினைத்து நினைத்துப் பெருமூச்சு விட்டுக்கொண்டே வீடு போய்ச் சேர்ந்தான்.

அன்றிரவு அவனுக்கு ஆகாரம் ருசிக்கவில்லை. வெகு நேரம் சென்று படுத்தும் தூக்கம் வரவில்லை. இப்படிப்பட்ட அழகி இந்த ஊரில் இருப்பதை இத்தனை நாளும் பார்க்காமற் போனோமே என்று ஏங்கினான்.

அடுத்த தெருவிலிருக்கும் ஜானகியை அவன் இதுவரைக்கும் பார்க்க நேராதிருந்ததற்குக் காரணம் என்னவெனில்: பள்ளியிறுதிப் படிப்பு முடிகிற வரையிலும் ஜானகி பாத்திமாவோடு அவளுடைய தந்தையின் மோட்டார் காரில்தான் பள்ளிக்குப் போய் வந்துகொண்டிருந்தாள். காருக்குள்ளிருக்கும்

பெண்ணின் முழு உருவத்தையும் கார் ஓடிக்கொண்டிருக்கும் போது வழியில் போகும் யாரும் பார்த்துவிட முடியாது. அத்துடன் அந்தக் காலம் பெண்மை பூரண திரட்சியடையாத பருவம். பள்ளியிறுதிப் படிப்புக்குப் பின் அவள் பெண்களின் ஹாஸ்டலிலேயே தங்கிப் படித்தாள். அங்கே ஆடவர்கள் எட்டிக் கூடப் பார்க்க முடியாது.

இப்போதுதான் யாரும் காணக்கூடியபடி வெளியே உலாவப் போகிறாள். அதனால்தான் பருவப் பெண்களைத் தேடும் முத்துவீரப்பனுடைய கண்களுக்கு இப்போதுதான் ஜானகி இலக்கானாள்.

ஜானகியின் உருவம் முத்துவீரப்பனுடைய மனத்தில் 'புகைப்படம்' எடுத்தது போல் பதிந்திருந்தது. இரவு முழுதும் அந்த உருவெளித் தோற்றத்தோடு சரசமாடிக்கொண்டிருந்தான். எப்படியாவது அந்த அபூர்வ அழகியை வசப்படுத்த வேண்டுமென்று அதற்கான சூழ்ச்சிகளின் வழி வகைகளைப்பற்றி ஆலோசனை செய்தான்.

விடிந்தவுடன், ஜானகியைப்பற்றியும், அவளுடைய பெற்றோர்களைப்பற்றியும், அவர்களுடைய பொருளாதார நிலைமைகளைப்பற்றியும், ஜானகி, அவளுடைய தோழிகளுள் யாரிடத்தில் அதிக நம்பிக்கை வைத்திருக்கிறாள் என்பதைப் பற்றியும் எல்லா விவரங்களையும் அறிந்துகொள்ளத் தீர்மானித்தான். அவனுக்கு யாரைப்பற்றி என்ன தெரிந்து கொள்ள வேண்டுமானாலும் அதைத் துப்பறிந்து வந்து சொல்லக்கூடிய கூலிப்பட்டாளம் ஒன்று உண்டு. பணம் அவனுக்கு லட்சியமில்லை. பணத்தைக்கொண்டு எதையும் சாதித்துக்கொள்ளலாம் என்ற துணிச்சல் உள்ளவன்.

இருபது நாள்கள் அதே வேலையாக ஆண்களும் பெண்களுமாகப் பலபேரை ஏவிவிட்டுத் தனக்கு வேண்டிய தகவல்களைச் சேகரித்தான். குறிப்பாக ஜானகியைப்பற்றியும் அவளுடைய நெருங்கிய சினேகிதியாகிய சாரதாம்பாளைப்பற்றியும் அவர்



களுக்கிடையில் நடக்கக்கூடிய சல்லாபப் பேச்சுகளையும் அறிந்து வர வயதான ஒரு அம்மாளை நிறையப் பணம் கொடுத்து அமர்த்தினான். அந்த அம்மாள் நடுத்தரக் குடும்பத்தைச் சேர்ந்த ஓர் ஏழை; சாரதாம்பாள் வீட்டாருக்கும் ஜானகியின் வீட்டுக்கும் பழக்கமானவள்.

அந்த அம்மாள் முத்துவீரப்பன் கல்யாணம் பண்ணிக் கொள்ளத்தான் பெண் தேடுகிறானாக்கும் என்று எண்ணிக் கொண்டு அந்தப் பெண்கள் சந்தித்துப் பேசும்போது ஒன்றுமறியாதவள்போல் கேட்டுக்கொண்டு வந்து முத்துவீரப்பனிடம் சொல்லுவாள். அப்படி ஒருநாள் சாரதாம்பாள் வீட்டில் ஜானகி வந்து பேசிக்கொண்டிருக்கும்போது சாரதாம்பாளுக்குப் பிரியமில்லாத ஒரு மாப்பிள்ளைக்கு அவளை மணமுடிக்க அவளுடைய பெற்றோர்கள் பேச்சு நடத்திக்கொண்டிருப்பதைப் பற்றி வருத்தத்துடன் சாரதா ஜானகியிடம் சொல்லிக்கொண்டிருந்ததை அந்த அம்மாள் கேட்டுக்கொண்டிருந்தாள்.

உடனே அந்த அம்மாள் முத்துவீரப்பனிடம் வந்து, அந்தப் பெண்கள் பேசிக்கொண்டதையெல்லாம் சொல்லிவிட்டு, "தம்பீ! அந்தப் பொண்ணு சாரதாம்பாள் நல்ல பொண்ணு, படிச்சவள்; நீ கேட்டால் உடனே உன்னைக் கட்டிக்கொள்ளச் சம்மதிப்பாள். எத்தனை நாளைக்கு நீயும் கல்யாணம் இல்லாமல் இருப்பது? உடனே அந்தப் பொண்ணுடைய அப்பா அம்மாவைப் பார்த்துக் கேளு" என்றாள்.

முத்துவீரப்பன் கலகலவென்று சிரித்துவிட்டு, "ஆகட்டும் பாட்டி, அப்படியே செய்கிறேன்" என்று சொல்லி உடனே அந்த அம்மாளுக்கு ஐம்பது ரூபாய் பரிசளித்தான்.

அதை வாங்கிக்கொண்டு அந்த அம்மாள், "தம்பீ! உன் கல்யாணத்தில் எனக்கு ஒரு நல்ல புடைவை எடுத்துத் தர வேணும்" என்றாள்.

"ஆகட்டும்" என்று மகிழ்ச்சியுடன் சொல்லிவிட்டு, "இப்போது சொன்ன தகவல்களே எனக்குப் போதும். இனி

மேல் நீங்கள் சிரமப்பட வேண்டாம்'' என்று அந்த அம்மாளை அனுப்பிவிட்டான்.

## அத்தியாயம் 25

ஜானகி அடிக்கடி சாரதாம்பாள் வீட்டுக்குப் போகக் கூடியவள். சாரதாம்பாளுடைய பெற்றோர்கள் ஜானகியிடத்தில் மிக்க பிரியமும் நன்மதிப்பும் உள்ளவர்கள். அதனால் தனக்குப் பிரியமில்லாத ஒருவரை மணந்துகொள்ளக் கட்டாயப்படுத்த வேண்டாம் என்பதை ஜானகி சாரதாம்பாளின் பெற்றோரிடம் வலியுறுத்த வேண்டும் என்று சாரதா ஜானகியைக் கேட்டுக்கொண்டிருந்தாள்.

அதைப்பற்றிச் சாரதாவின் பெற்றோர்களிடம் பேசுவதற்கென்றே ஜானகி மூன்று தடவை அங்கே போனாள்; அந்த மூன்று தடவையும் அந்த மாப்பிள்ளை வீட்டார் அங்கே இருந்ததனால் பேசாமல் திரும்பி வந்துவிட்டாள். கடைசியாக சாரதா ஜானகியின் வீட்டுக்கு வந்து பேசிக்கொண்டிருந்தபோது, "ஜானகி! என்னை அந்த மாப்பிள்ளையையே மணந்து கொள்ள வேண்டுமென்று கட்டாயப்படுத்தினால் நான் உயிரோடிருக்க மாட்டேன்'' என்று கண்கலங்கிச் சொன்னாள் சாரதா.

அதைக் கேட்ட ஜானகி திடுக்கிட்டு, "சாரதா! என்ன இப்படிக் கோழைத்தனமாகப் பேசுகிறாய்? உனக்குப் பிடிக்காத ஒருவரை மணந்துகொள்ளும்படி கட்டாயப்படுத்த யாருக்கும் உரிமையில்லை. அதை எதிர்த்துப் போராடி வெற்றி பெற வேணும். இதற்குப் பயந்து உயிரை விடுவதா? அப்படியெல்லாம் எண்ணாதே. நான் உன் தாய் தந்தையிடம் பேசிக் கண்டிப்பாகச் சொல்லிவிடுகிறேன்'' என்று தேற்றினாள்.



சாரதா ஒருவாறு சமாதானமடைந்து, "சீக்கிரம் என் அப்பா அம்மாவிடம் கண்டிப்பாகச் சொல்லிவிடு'' என்று கேட்டுக்கொண்டு போய்விட்டாள்.

அன்று மாலை, ஏழு மணியிருக்கும். அப்போது ஜானகி, தன் வீட்டில் தனியே உட்கார்ந்துகொண்டு சாரதாவுக்கு நேர்ந்த சங்கடத்தைப்பற்றியே எண்ணிக்கொண்டிருந்தாள். சாரதா தன் உயிரையே விட்டுவிட எண்ணும்படியான நிலைமை வந்துவிட்டதால் உடனே அவளுடைய பெற்றோரைச் சந்தித்து என்னென்ன எப்படிப் பேச வேண்டுமென்பதை மனத்துக்குள்ளேயே ஒத்திகை செய்துகொண்டிருந்தாள். அப்போது ஜானகியின் தந்தை முருகேசனும் சித்தி சுந்தரியும் வெளியே போயிருந்தார்கள்.

அந்தச் சமயத்தில் ஒரு சிறுவன் வெகு அவசரமாக ஓடி வந்து, ஜானகியிடம் ஒரு துண்டுக் கடிதத்தைக் கொடுத்து, "உங்களைச் சாரதா அம்மாள் உடனே கூட்டியாரச் சொன்னாங்க'' என்றான்.

சாரதாவைப்பற்றியே எண்ணிக்கொண்டிருந்த ஜானகி, என்னவோ ஏதோ என்று திடுக்கிட்டவளாக அந்தத் துண்டுக் கடிதத்தைப் படித்தாள். அதில், "ஆருயிர்த் தோழி ஜானகிக்கு! அவசரத்தில் இந்தத் துண்டுக் காகிதந்தான் எழுதக் கிடைத்தது. என் திருமண விஷயத்தில் அபாய நெருக்கடி ஏற்பட்டுவிட்டது. அதைப்பற்றி உன்னிடம் உடனே பேச வேண்டும். இங்கே உன்னைப்போல் எனக்கு உதவி செய்யக் கூடிய வயதான ஒரு அம்மாளிடம் அதைப்பற்றிப் பேசிக் கொண்டிருக்கிறேன். அவர்கள் ஒரு யோசனை சொல்லுகிறார்கள். உன்னைக் கேட்டுத்தான் அதைப்பற்றித் தீர்மானிக்க வேண்டும். உடனே நீ இந்தச் சிறுவனுடன் வர வேண்டும்'' என்று எழுதப்பட்டிருந்தது.

'என் திருமண விஷயத்தில் அபாய நெருக்கடி ஏற்பட்டு விட்டது' என்று எழுதியிருக்கிறாளே! மறுபடியும் உயிரை

வெறுக்க நினைத்துவிட்டாளோ என்ற அச்சம் உதித்து விட்டது, ஜானகிக்கு.

உடனே எழுந்து அந்தச் சிறுவனுடன் போகப் புறப் பட்டாள், ஜானகி; இருட்டியபின் தன்னைச் சேர்ந்த ஒரு துணையில்லாமல் வீட்டைவிட்டுப் போவதில்லை; அதனால் தன் வீட்டு வேலைக்காரப் பெண்ணையும் கூட்டிக்கொண்டு அந்தச் சிறுவனைப் பின்தொடர்ந்தாள்.

இரண்டு பர்லாங்கு தூரம் நடந்து பக்கத்துத் தெருவில் தபாலாபீசுக்கு எதிரிலுள்ள ஒரு பெரிய மூன்றடுக்கு மாடி வீட்டுக்குள் நுழைந்தார்கள். முன் கட்டில் வெகு அலங்காரமான கூடம் இருந்தது. அங்கே யாருமில்லை. சிறுவன் மாடிக்கு வழி காட்டிப் படிகளில் ஏறினான். ஜானகி, தன்னுடன் வந்த வேலைக்காரப் பெண்ணைக் கூடத்தில் இருக்கச் சொல்லி விட்டுப் பையனைப் பின்பற்றி மாடிக்குப் போனாள். அந்தப் பையன் ஓர் அறையைச் சுட்டிக்காட்டி 'சாரதா அம்மா அதில் இருக்கிறாங்க' என்று சொல்லிவிட்டுத் திரும்பிப் போய் விட்டான்.

ஜானகி அந்த அறைக்குள் சென்றாள். அது ஒரு வெகு அலங்காரமான பெரிய அறை. பணத்தால் அடையக்கூடிய எல்லா விதமான நவீன வசதிகளும் உள்ளன. டெலிபோன், ரேடியோ, மாடியில் இருந்தபடியே கீழே உள்ளவர்களிடம் பேசும் 'டெலின்' கருவி, விலை மிகுந்த நாற்காலிகள், மேஜைகள், இரும்புப் பீரோக்கள், குளிர் சாதனப் பெட்டி, தண்ணீர்க்குழாய், மின்சார விளக்குகளும் விசிறிகளும், அழகான சித்திர வேலைகளுள்ள கட்டில் மெத்தை முதலிய பல சிறப்புகள் உள்ளன.

அறையில் சாரதாவும் இல்லை, வேறு யாருமே இல்லை. ஜானகி திடுக்கிட்டுச் சிறிது நேரம் திகைத்து நின்று, உடனே தனக்குத் தீங்கிழைக்க யாரோ மோசடி செய்திருக்கிறார்கள் என்பதை உணர்ந்துவிட்டாள். ஆனால், இது யார் செய்த சூது என்று ஊகிக்க முடியவில்லை. அந்த வீடு யாருடையது



என்பதும் அவளுக்குத் தெரியாது. அவ்விடத்தைவிட்டு வெளியேறிவிடத் திரும்பினாள்.

எதிரே சர்வாலங்காரப் பூஷிதனாக முத்துவீரப்பன் அறைக்குள் புகுந்தான்.

அவனைக் கண்டவுடன் சில நாள்களுக்கு முன் அவனைக் கடற்கரையில் பார்த்ததும், அவனைப்பற்றிக் கோமளம் சொன்ன விஷயங்களும் ஜானகிக்குப் பளிச்சென்று நினை வுக்கு வந்துவிட்டன. அவன் செய்த மோசடியின் நோக்கம் புரிந்துவிட்டது.

ஒரு கண நேரத்தில் இத்தனை எண்ணங்களும் மனத்தில் தோன்றி ஜானகியின் நிறை காக்கும் பெண்மை கிளர்ச்சி கொண்டுவிட்டது. அச்சமோ, கோபமோ, பதற்றமோ இல்லாமல் சாந்தமாக முத்துவீரப்பனைப் பார்த்தாள்.

முத்துவீரப்பன் புன்முறுவலோடு ஜானகியை நெருங்கி, "ஜானகி! உன்னோடு ஏகாந்தமாகப் பேச வேண்டுமென்று எனக்குக் கொள்ளை ஆசை" என்றான்.

அந்தப் பேச்சோடு சீமைச் சாராய நெடியும் கலந்திருந்தது.

"ஆஹா, தாராளமாக எவ்வளவு வேணுமானாலும் பேசுங்கள். ஆனால், நாம் பேசுவது யாருக்கும் தெரியப்படாது. எனக்குத் துணையாக வந்த வேலைக்காரப் பெண் கீழே இருக்கிறாள். அவள் படுசுட்டி. அவள் என்னைத் தேடிக் கொண்டு மேலே வந்து ஜன்னல் வழியாகப் பார்த்து நாம் பேசு வதைக் கேட்டுக்கொண்டிருந்து எங்கள் வீட்டில் சொன்னாலும் சொல்லிவிடுவாள். அதனால் தாங்கள் போய் அந்தப் பெண்ணை எங்கள் வீட்டில் கொண்டுபோய் விட்டுவர ஏற்பாடு செய்துவிட்டு வாருங்கள்" என்று புன்முறுவலோடு சொன் னாள், ஜானகி.

"இதோ போய் அந்தப் பெண்ணைக் கொண்டுபோய் வீட்டில் விட்டுவர ஏற்பாடு செய்கிறேன்" என்று வேகமாக வெளியேறினான் அந்தக் காமுகன்.

அவனுடைய காலடி ஓசை மறைந்தவுடன் ஜானகி பாய்ந்து சென்று, அந்த அறையின் கதவுகளை மூடி, உட்புறம் இருந்த எல்லாத் தாழ்ப்பாள்களையும் கடாவிவிட்டாள்.

உடனே டெலிபோனண்டை சென்று, டைரக்டரியை விரித்துப் போலீஸ் நிலையத்தின் டெலிபோன் நம்பரைத் தேடிப் பிடித்தாள்; ரிசீவரை எடுத்துக்கொண்டு போலீசைக் கூப்பிட்டாள்.

"ஹல்லோ! யார் கூப்பிடுவது?" என்றது போலீஸ்.

"பேசுவது யார்? சப்-இன்ஸ்பெக்டரா, ஹெட் கான்ஸ்டபிளா?" என்றாள் ஜானகி.

"சர்க்கிள் இன்ஸ்பெக்டர்" என்று பதில் வந்தது.

"சர்க்கிள் இன்ஸ்பெக்டர் அவர்களே! மிகவும் அவசரமான சேதி. உடனே கவனிக்க வேண்டும்...." என்று சொல்லிக் கொண்டிருக்கும்போது கீழே போன முத்துவீரப்பன் திரும்பி வந்து கதவு தாழிடப்பட்டிருப்பதைக் கண்டு ஜன்னல் வழியாகப் பார்த்து, ஜானகி டெலிபோனில் பேசுவதைக் கேட்கிறான். ஜானகி பேசுகிறாள் :

"....சர்க்கிள் இன்ஸ்பெக்டர் அவர்களே! மிகவும் அவசரம். உடனே வர வேண்டும். மேலைத் தெருவில் 36674 என்ற நம்பர் டெலிபோன் உள்ள வீட்டிற்குச் சொந்தக்காரரான வாலிபர் ஓர் இளம்பெண்ணை வஞ்சகமாக அவருடைய வீட்டுக்கு வரச்செய்து ஓர் அறையில் வைத்துக்கொண்டு அந்தப் பெண்ணைக் கெடுக்க முயன்றுகொண்டிருக்கிறார்...."

இதைக் கேட்ட முத்துவீரப்பன், "ஐயோ! ஐயோ! ஜானகி! உன்னோடு பேசத்தானே ஆசைப்பட்டேன்? உன்னைப் பலாத்காரமா செய்தேன்? பேசக்கூட வேண்டாம். நீ உன் வீட்டுக்குப் போய்விடம்மா" என்று அலறுகிறான்.

அதைப் பொருட்படுத்தாமல் ஜானகி டெலிபோனில் பேசிக் கொண்டிருக்கிறாள். "இன்ஸ்பெக்டர் அவர்களே! தாமதிக்



காமல் உடனே வந்து அந்தப் பெண்ணை விடுவித்து நடவடிக்கை எடுத்துக்கொள்ளுங்கள்."

"உடனே வருகிறோம்" என்றது போலீஸ்.

"வருகிறீர்களா? வந்தனம், சீக்கிரம் வாருங்கள்" என்று ஜானகி ரிசீவரைக் கீழே வைக்கிறாள்.

போலீசார் வருகிறார்கள் என்பது தெரிந்தவுடன் முத்து வீரப்பனுக்கு நடுக்கமெடுத்துவிட்டது.

"ஜானகி! உன்னை மிகவும் கெஞ்சிக் கேட்டுக்கொள்ளு கிறேன், என்னை மன்னித்து நீ கதவைத் திறந்து உன் வீட்டுக்குப் போய்விடு. போலீசார் வருவதற்குள் தயவு செய்யம்மா" என்று கெஞ்சினான்.

"சரி, அப்படியானால் நான் போய்விடுகிறேன். நீங்கள் உடனே கீழே போய்விட வேணும். இங்கே இருக்கக்கூடாது" என்றாள் ஜானகி.

"இதோ போய்விடுகிறேன். ஆனால், அம்மா தாயே! உன்னைக் கும்பிட்டுக் கேட்டுக்கொள்ளுகிறேன். இதை மறுபடியும் போலீசுக்கோ மற்ற யாருக்குமோ சொல்லிவிட வேண்டாம்" என்றான்.

"சத்தியமாகச் சொல்ல மாட்டேன். நீர் உடனே கீழே போய்விடும்."

முத்துவீரப்பன் போய்விட்டான்.

ஜானகியும் கதவைத் திறந்துகொண்டு வெகுவேகமாகக் கீழே இறங்கிப் பேராபத்திலிருந்து தப்பித்துக்கொண்ட உணர்ச்சியோடு வீட்டுக்குப் போய்விட்டாள்; போலீசார் வந்து தன்னை முத்துவீரப்பனுடைய வீட்டில் கண்டால் அவன்மீது வழக்குத் தொடரத் தன்னையுந்தான் கச்சேரிக்கு இழுப்பார்கள் என்பதை அறிந்தே அதை யாருக்கும் சொல்லுவதில்லையென்று சத்தியம் செய்துவிட்டு வந்தாள். மேலும், சாரதாம்பாளின் கையெழுத்தும் கையொப்பமும் எப்படியிருக்கும்

என்பதைப் பல முறை பார்த்து நன்றாக அறிந்திருந்தும் அந்தப் பையன் கொடுத்த துண்டுக் கடிதத்திலிருந்த எழுத்தும் கையொப்பமும் முற்றிலும் வேறாக இருந்ததைக் கவனிக்காமல் அங்கே போய்ச் சிக்கிக்கொண்டதைச் சொன்னால் ஊர் சிரிக்குமே என்றும் உணர்ந்துதான் போலீசார் வருவதற்குள் வீட்டுக்கு வந்ததும் அதைப்பற்றி யாருக்கும் சொல்லுவதில்லை என்று சத்தியம் செய்ததும்.

முத்துவீரப்பனைக் கடற்கரையில் கண்டதனாலும் அவன் கோமளத்தைச் 'சௌக்கியமா?' என்று கேட்டதனாலும் அவனைப்பற்றிக் கோமளம் விரிவாகச் சொன்னதனாலும் அவனை ஜானகியும் பல முறை திரும்பித் திரும்பிப் பார்த்திருந்ததாலும் அவனுடைய உருவம் ஜானகியின் மனத்தில்பதிந்திருந்தது. அதனால் ஜானகி அவனை எங்கே கண்டாலும் அடையாளம் கண்டுகொள்ள முடியும். ஆனால், அவனுடைய பெயர் என்னவென்று கோமளம் சொல்லவில்லை. அதனால் ஜானகி, போலீசுக்கு முத்துவீரப்பன் வீட்டு 'டெலிபோன்' நம்பரைச் சொல்லி விலாசம் கொடுத்தாள். பெயரைச் சொல்ல முடியாமல் போனது வீரப்பனுக்குப் பெரிய உதவியாகிவிட்டது.

ஜானகி முத்துவீரப்பன் வீட்டைவிட்டுப் போன பத்து நிமிஷத்துக்குள் சர்க்கிள் இன்ஸ்பெக்டரும் இரண்டு ஜவான்களும் டெலிபோன் நம்பர் குறித்த முத்துவீரப்பன் வீட்டுக்கு வந்தார்கள்.

அவர்களை எதிர்பார்த்தே முத்துவீரப்பன் முன் கட்டில் கூடத்தில் உட்கார்ந்திருந்தான். போலீசாரைக் கண்டதும் திடுக்கிட்டவன்போல் எழுந்து வெகு மரியாதையுடன் வரவேற்று, "என்ன விசேஷம்?" என்றான்.

"என்ன விசேஷமா! ஒன்றும் அறியாதவர்போல் கேட்கிறீரே! அந்தப் பெண்ணை எந்த அறையில் பூட்டி வைத்திருக்கிறீர்?" என்றார் இன்ஸ்பெக்டர்.



"ஐயோ! இதென்ன அபாண்டம்? நானா! ஒரு பெண்ணையா! பூட்டியா வைத்திருக்கிறேன்! இதென்ன சார் அநியாயம்?" என்றான் முத்துவீரப்பன்.

"36674 தானே உம்முடைய போன் நம்பர்?"

"ஆமாம்."

"இந்த வீட்டில் யாரோ ஒரு பெண்ணை வஞ்சித்து அழைத்து வந்து பலாத்காரமாகக் கெடுக்க முயல்வதாக எனக்குப் 'போன் கால்' வந்தது. உம்மைவிட இந்த வீட்டில் வேறு யாராவது ஆண்பிள்ளை வாலிபர் இருக்கிறாரா?"

"யாரும் இல்லையே. நானும் என் தாயாரும் வேலைக்காரர்களும் மட்டுந்தான் இங்கே இருக்கிறோம். இங்கே யாரும் எந்தப் பெண்ணையும் அழைத்து வரவுமில்லை; பலாத்காரம் செய்ய முயலவுமில்லை. உங்களுக்கு யாரோ ராங் நம்பரைப் போன் செய்திருக்க வேணும். வேண்டுமானால் இங்குள்ள ரூம்களையெல்லாம் சோதனை செய்துகொள்ளுங்கள்" என்றான் முத்துவீரப்பன்.

கீழேயும் மாடியிலும் உள்ள எல்லா அறைகளும் சோதிக்கப்பட்டன. ஒரு பெண்ணோ அல்லது பெண் வந்திருந்த அறிகுறியோ காணப்படவில்லை. போனில் புகார் சொன்னவர் ராங் நம்பரைச் சொல்லிவிட்டாரோ அல்லது அவர் சொன்ன நம்பரை அவர்தான் தவறாகக் குறித்துக்கொண்டாரோ என்று எண்ணிக்கொண்டு இன்ஸ்பெக்டர் முத்துவீரப்பனிடம் வருத்தம் தெரிவித்துக்கொண்டு போய்விட்டார்.

பெரிய குற்றச்சாட்டிலிருந்து தப்பித்துக்கொண்டாலும் முத்துவீரப்பனுக்கு ஏமாற்றமும் தோல்வியும் அடைந்துவிட்ட வருத்தம் மிகுந்துவிட்டது. சூழ்ச்சி செய்வதில் மிக்க வல்லவன் என்று இறுமாந்திருந்தவன் அவன். இருபது நாள்களுக்கும் அதிகமாக ஏராளமான பணச்செலவில் யாரார்ரையோ அமர்த்திக்கொண்டு அவன் சேகரித்த தகவல்களைக் கொண்டு வெகு திறமையுடன் செய்த சூழ்ச்சியை ஜானகியின்

சாமர்த்தியம் தோற்கடித்துவிட்ட அவமானத்தை அவனால் பொறுக்க முடியவில்லை.

அந்த அவமானத்தைப் பொறுத்துக்கொண்டாலும் ஜானகியின்மீது அவனுள் வளர்ந்துவிட்ட காம நோயைப் பொறுக்க முடியவில்லை. ஜானகியின் அழகு அவனைப் பித்தனாக்கிவிட்டது. அவளைக் கண்டது முதல் எப்படியாவது அவளை வசப்படுத்த வேண்டுமென்ற ஒரே குறியுடன் சூழ்ச்சிகளில் மனம் செலுத்தத் தொடங்கித் தான் தொடர்பு கொண்டிருந்த வேசியரையும் மறந்துவிட்டான்.

தன் சூழ்ச்சி தோற்றுப்போன பின்னும் ஜானகியை மறந்துவிட முடியவில்லை. எப்படியாவது அவளை அடைந்தே தீர வேண்டுமென்று மாற்றுத் திட்டமிடத் தொடங்கினான்.

பணத்துக்காகவும் பகட்டுக்காகவும் தன்னிடம் ஏமாந்து போன பெண்களைப்போல் ஜானகி ஏமாற மாட்டாள். அதனால் அவளைப் பெண் கேட்டுத் திருமணம் செய்துகொள்ளும் ஒரே வழிதான் இருக்கிறது. அதற்கு அவளுடைய பெற்றோர்களை வசப்படுத்த வேண்டும் என்று தீர்மானித்தான். ஆனால், அவளுடைய பெற்றோர்கள் அவளைத் தனக்கு மணமுடிக்கச் சம்மதித்தாலும் ஜானகி தன்னை மணந்துகொள்ள மறுப்பாள். அவளுடைய மறுப்பைப் பொருட்படுத்தாமலோ அல்லது அவளுக்குச் சமாதானம் சொல்லி அவளைச் சம்மதிக்கச் செய்தோ அவளைத் தனக்கே தரவேண்டும் என்ற உறுதியை அந்தப் பெற்றோர்கள் மேற்கொள்ளும்படியான ஒரு நிலைமையை உண்டாக்க வேண்டும் என்று தீர்மானித்தான்.

முத்துவீரப்பன் சூழ்ச்சிகள் செய்வதில் வல்லவன்; ஜானகியின் பெற்றோரை வசப்படுத்த வழி வகைகளை ஆராய்ந்தான்; முன்னாலேயே அவன் ஜானகியின் பெற்றோர்களைப்பற்றியும் அவர்களுடைய பொருளாதார நிலைமையைப் பற்றியும் வேண்டிய தகவல்களைச் சேகரித்திருந்தான். அந்தத் தகவல்களில் ஜானகியின் தந்தைக்கு விளைநிலங்களும்



அவர்கள் வசிக்கிற வீடும் சொந்தம் என்பதும், வீட்டின்மேல் எட்டாயிரம் ரூபாய் கடன் இருப்பதும், அந்த வீட்டின்மேல் கடன் கொடுத்திருப்பது தன் வீட்டுக்குச் சில வீடுகளுக்கப்பால் வசிக்கும் விதவை அம்மாள் என்பதும் அவனுக்குத் தெரியும்.

வீட்டின்மேல் எட்டாயிரம் ரூபாய் கடன் இருப்பது மட்டுந்தான் இப்போது தெரியும். கடனுக்கு வட்டி எப்படி, கடன் வாங்கி எவ்வளவு காலமாயிற்று, வட்டிக்காகவும் அசலுக்காகவும் எவ்வளவு செலுத்தப்பட்டிருக்கிறது என்பனவற்றை அறிந்து கொள்ள வேண்டும்.

அதற்காகத் தானே போகாமல் தனக்கு நெருங்கிய நண்பனும் தன் கையாளாகவும் தன்னுடைய சூழ்ச்சிகளுக்கெல்லாம் ஒத்தாசையாகவும் இருக்கிற நஞ்சப்பன் என்பவனை அந்த விதவை அம்மாளிடம் அனுப்பினான். நஞ்சப்பன் அந்த அம்மாளுக்குப் பழக்கமானவன்.

அவன் அந்த அம்மாளிடம் போய், "ஏம்மா! அடுத்த தெரு அம்மணியம்மாள் வீட்டின்மேல் எட்டாயிரம் கடன் கொடுத்திருக்கிறீர்களே! அந்தக் கடன் எவ்வளவு வசூலாகியிருக்கிறது?" என்று கேட்டான்.

"எங்கே தம்பி! வட்டியே வரவில்லை. அசல் எப்படி வசூல் ஆவது என்று தவித்துக்கொண்டிருக்கிறேன்" என்று வருத்தப்பட்டாள், அந்த அம்மாள்.

"வட்டி எப்படி? எவ்வளவு வட்டி வந்திருக்கிறது? பாக்கி வட்டியும் அசலும் வரவேண்டியது எவ்வளவு?" என்றான் நஞ்சப்பன்.

"வட்டி நூற்றுக்கு வருஷத்துக்குப் பன்னிரண்டு ரூபாய். அம்மணியம்மாள் ஊரில் இருந்தபோதே வட்டி சரியாக வரவில்லை. அந்த அம்மாள் யாத்திரைக்குப் போனவள் வரவேயில்லை. அவளுடைய மகன் அந்த அம்மாள் போன பின் இரண்டு வருஷ வட்டிதான் கொடுத்தார். அதன் பிறகு

வட்டியே தரவில்லை. விளைச்சலில் சாப்பாட்டுக்கே போத வில்லையென்று சொல்லிவிட்டார்கள். அசலுக்கே மோசம் வந்துவிடுமோ என்று பயந்துகொண்டிருக்கிறேன்'' என்றாள்.

''எத்தனை வருஷ வட்டி பாக்கி?''

''ஆறு வருஷ வட்டி பாக்கி.''

மனத்துக்குள் கணக்குப் போட்டு, ''அப்படியானால், அசலும் வட்டியும் உங்களுக்குப் பதின்மூன்றாயிரத்து எழுநூற்று அறுபது ரூபாய் வர வேண்டுமே'' என்றான் நஞ்சப்பன்.

''ஆமாப்பா, என்ன செய்வது என்று எனக்குத் தெரியவில்லை. பிராது போட்டால் கச்சேரிக்குப் போய் நிற்க வேணுமே என்று கவலையாக இருக்கிறது.''

''கவலைப்பட வேண்டாம். நான் போய் ஓர் ஏற்பாடு செய்துகொண்டு வந்து சொல்லுகிறேன்'' என்றான் நஞ்சப்பன்.

''அப்படி ஏதாவது செய்யப்பா. உனக்குப் புண்ணியம் உண்டு'' என்று கும்பிட்டாள் அந்த அம்மாள்.

நஞ்சப்பன் நேராக முத்துவீரப்பனிடம் போய் நடந்ததைச் சொன்னான். அதைக் கேட்டுத் தன் திட்டம் வெற்றி பெற்றுவிடும் என்ற மகிழ்ச்சி பொங்க நண்பனைத் தழுவிக் கொண்டான், முத்துவீரப்பன்.

''சரி; அந்த அம்மாளுக்கு அசலும் வட்டியுமாக வர வேண்டிய பூராத் தொகையும் உன்னிடம் தருகிறேன். நீ அந்த அம்மாளிடம் கொடுத்து அந்த அடைமானப் பத்திரத்தை உன் பேருக்கு 'மேடோவர்' வாங்கிக்கொண்டு வந்துவிடு. போகும்போது நம்முடைய வக்கீலையும் கூட்டிக்கொண்டு போய்ச் சட்டப்படி மேடோவர் வாங்கிக்கொண்டு வந்துவிடு'' என்று உடனே தேவையான அந்தத் தொகைக்கும் பத்திரச் செலவுக்கும் வேண்டிய பணத்துக்கு நஞ்சப்பன் பேருக்கு ஒரு செக் எழுதிக் கொடுத்து அனுப்பிவிட்டான், முத்துவீரப்பன்.

## அத்தியாயம் 26

முருகேசன் பொறுப்போடுதான் பாடுபட்டான்; வீட்டுச் செலவுகளையும் சிக்கனமாகத்தான் செய்தான். சுந்தரியும் அவளுடைய ஆடம்பரச் செலவுகளுக்கு வசதியில்லாமற்போனதால் கணவனோடு ஒத்துழைத்தாள்.

மழையில்லாத காரணத்தால் மகசூல் குறைந்துவிட்டதோடு ஜானகியை ஹாஸ்டலில் சேர்த்ததால் உண்டான தனிச் செலவும் சேர்ந்து கடனுக்கு வட்டி கட்ட முடியாமற்போய் விட்டது. வட்டி கட்டவில்லையே என்று முருகேசன் கவலைப்பட்டுக்கொண்டிருந்தான். கணவனுடைய கவலையைத் தீர்க்கச் சுந்தரியும், தான் முன்னே ஈடுவைத்து இரண்டாயிரம் வாங்கியிருந்த தன் சீதனமான வயலை விற்றுவிட முயன்றாள். அவளும் அந்தக் கடனுக்கு வட்டி கட்டாமலேயே இருந்து விட்டதால் அதை விற்றாலும் அதிக மிச்சமிராது. முன்னே அதற்கு ஐயாயிரம் ரூபாய் மதிப்பிருந்தது. இப்போது அதை மூவாயிரத்துக்கும் கேட்பாரில்லை. எவ்வளவோ முயற்சி செய்தும் அதை விற்க முடியவில்லை.

கடைசியாகப் பத்து ஏக்கர் நஞ்சை நிலத்தில் ஒரு பகுதியை விற்றாவது கடனைக் கட்டிவிட வேண்டும், இல்லாவிட்டால் நிம்மதியாக வாழ முடியாது என்று தீர்மானித்து அதற்கான முயற்சிகளைச் செய்துகொண்டிருந்தான். பத்து ஏக்கரும் குறைந்த பட்சம் ஐம்பதினாயிரம் பெறும்.

இந்த நிலைமையில் முருகேசனுக்கு ஒரு ரிஜிஸ்டர் நோட்டீஸ் வந்தது. அது நஞ்சப்பனுடைய வக்கீல் அனுப்பியது. அதில், ''வீட்டின்மேல் உள்ள கடன் பத்திரத்தை நஞ்சப்பன் 'மேடோவர்' வாங்கிக்கொண்டிருப்பதால் அந்தக் கடன் தொகையும் வட்டியுமாக வரவேண்டிய பதின்மூன்றாயிரத்து எழுநூற்று அறுபது ரூபாயும் இந்த நோட்டீஸ் கிடைத்த பதினைந்து நாள்களுக்குள் செலுத்தப்படாவிட்டால் தாவா செய்யப்படும் என்பதைக் கண்டிப்பாக அறிய வேண்டும்'' என்று இருந்தது.

முருகேசன் இடி விழுந்ததுபோல் கலங்கிவிட்டான். கடன் கொடுத்த அம்மாளே நோட்டீசு அனுப்பியிருந்தாலும் அந்த அம்மாளிடம் கெஞ்சி வாய்தா வாங்கிக்கொள்ளலாம். இந்த நஞ்சப்பன் என்பவர் யாரோ?

யாராக இருந்தால் என்ன? கடனைத் தீர்த்துவிடத்தான் முயல வேண்டும் என்று முருகேசன் எங்கெங்கோ அலைந்து வயல்களில் ஒரு பகுதியை விற்றுவிட முயன்றான். ஒருவர் மூன்று ஏக்கர்களை வாங்கிக்கொள்ள விலை பேச வந்தார். அதைத் துப்பறிந்து முத்துவீரப்பன், அவரைப் பணம் கொடுத்து வசப்படுத்திக்கொண்டான். அவர் விலகிக்கொண்டார்.

சுந்தரி, தன் பெற்றோர்களிடம் முறையிட்டு, அவர்களும் தங்களுடைய நிலங்களின்மேல் கடன் வாங்கி உதவி செய்ய முயன்றார்கள். ஆனால், உடனே பணம் கிடைக்கவில்லை.

கடைசி முறையாகச் சுந்தரி அவளுடைய ஆருயிர்த் தோழியான கனகவல்லி பெரும்பணக்காரக் குடும்பத்தில் வாழ்க்கைப்பட்டிருப்பதால் அவள் மூலமாவது தங்கள் நிலத்தில் ஒரு பகுதியை விலைக்கு வாங்கிக்கொள்ளக் கேட்டுக் கொள்ளலாம் என்று அங்கே போனாள்.

பொல்லாத வேளையின் பயனே போல் கனகவல்லியும் அவளுடைய கணவரும் உல்லாசப் பயணமாக எங்கோ வெளியூர்களுக்குப் போயிருந்தார்கள். எப்போது திரும்பி வருவார்கள் என்பது தெரியாதாம்.

நோட்டீசில் கண்ட பதினைந்து நாள்கள் கழிந்த மறுதினமே நஞ்சப்பன் 'கோர்ட்டில்' தாவா செய்து, பல பொய்க் காரணங்களைக் காட்டி, முருகேசன் தன் சொத்துகளைப் பராதீனப்படுத்த முடியாதபடி வீட்டையும் நிலங்களையும் உடன் ஜப்திக்குஉள்ளாக்கி உத்தரவு வாங்கிவிட்டான்.

அதையறிந்த முருகேசன் இடிந்து போய்விட்டான். அவன் அடைந்த மனவேதனையை அளவிட முடியாது. அவன் வெகுகாலம் கவலை என்பதே இன்னதென்று அறியாமல்



சுந்தரியோடு உல்லாச வாழ்க்கை நடத்தியவன். அந்த உல்லாச வாழ்க்கைக்குப் பேருதவியாக இருந்த மைத்துனன் சுந்தரமூர்த்தியும் சந்திராவும் தாமரைக்கண்ணியைக் கூட்டிக்கொண்டு எங்கே போனார்களோ என்னவானார்களோ தெரியவில்லை. அந்தக் குறையை மறந்துவிடும்படி சகல பொறுப்புகளையும் மேற்கொண்டு தானும் சுந்தரியும் மகிழ்ச்சியோடிருப்பதையே தன் மகிழ்ச்சியாக உதவி வந்த அன்புருவாகிய தாயாரும் யாத்திரைக்கென்று போய்ப் பல வருடங்களாகியும் இன்னும் திரும்பி வரவில்லை. எங்கே இருக்கிறார்கள் என்பதும் தெரியவில்லை. அவர் சுகமாக இருப்பதாக வந்த கடிதங்கள் மெய்யோ பொய்யோ! அவர் சௌக்கியமாக இருந்தால் இத்தனை காலம் மகனைப் பிரிந்திருக்க மனம் வராதே— என்றெல்லாம் எண்ணி முருகேசன் ஊணுறக்கமில்லாமல் தவித்துக்கொண்டிருந்தான். அத்துடன் வீட்டின்மேலிருந்த கடனுக்காகப் பிராது போட்டு வீடு நிலங்களும் ஜப்திக்கு உள்ளாகியிருப்பது அவனை நிலை குலையச் செய்துவிட்டது.

இது இப்படியிருக்க, முத்துவீரப்பன் வெகு திறமையோடு திட்டமிட்டிருந்த சூழ்ச்சியைத் தொடர்வோம்:

முத்துவீரப்பனுக்குப் பருவம் வந்த நாளிலிருந்து அவனுடைய தாயார் அவனுக்குத் திருமணம் செய்து கண் குளிரப் பார்க்கவேண்டுமென்று ஆசைப்பட்டுப் பல இடங்களில் பெண் பார்த்து மகனுடைய சம்மதத்தைக் கேட்டிருக்கிறாள். அவன் அதற்குச் சம்மதிக்காமல் விபசார வாழ்க்கையே நடத்தி வருகிறான். அதில் அவன் தாயாருக்கு அளவற்ற வருத்தம். எனினும், அவன் அந்த அம்மாளுக்கு ஒரே குழந்தை. அந்த அம்மாளும் விதவை. மகனைக் கட்டாயப்படுத்த முடியாமல் மனத்துக்குள்ளேயே புழுங்கிக்கொண்டிருந்தாள்.

முருகேசன் தாயார் பட்ட கடனுக்காகத் தாவா செய்து அவனுடைய சொத்துகளை உடன் ஜப்திக்கு உள்ளாக்கி விட்ட மறுநாளே முத்துவீரப்பன், தன் தாயாரை அணுகி, 'அம்மா! இத்தனை நாளும் நான் திருமணம் செய்துகொள்

ளாமல் இருந்ததற்குக் காரணம் என் கண்ணுக்கும் மனத்துக்கும் பிடித்தமான பெண் தென்படாமல் இருந்ததுதான். நீங்கள் பார்த்த பெண்களெல்லாம் பணக்காரர் வீட்டுப் பெண்களானாலும் என் கண்ணுக்குப் பிடிக்கவில்லை. அவர்களுக்குப் படிப்பும் போதாது. இப்போது என் கண்ணுக்கும் கருத்துக்கும் மிகவும் பிடித்தமான ஒரு பெண், பீ. ஏ. தேறியவள்; இரதி போன்ற அழகியைக் கண்டேன். கன்னிப் பெண்தான். இனமும் நம்முடைய இனந்தான். அவளை நீங்கள் பெண் கேட்டுத் திருமண நடத்தி உங்கள் மனக்குறையைத் தீர்த்துக் கொள்ளுங்கள்'' என்றான்.

அதைக் கேட்ட அவன் தாயார் ஆனந்தக்கடலில் முழுகினவளாக, "எந்த ஊரில்? யாருடைய பெண்?'' என்றாள்.

"இதே ஊர்தானம்மா, அதிலும் அடுத்த தெருவேதான். முருகேசன் என்பவருடைய பெண்.''

"எந்த முருகேசன்? அம்மணியம்மாள் மகனா?''

"ஆமாம், ஆமாம். அதே முருகேசன்தான். உங்களுக்குத் தெரியுமா அவரை?'' என்றான் முத்துவீரப்பன்.

"முருகேசனை எனக்குத் தெரியாது. அம்மணியம்மாளை ரொம்பத் தெரியும். அந்த அம்மாள் அடிக்கடி நம் வீட்டுக்கு வந்திருக்கிறாள். அவளுடைய புருஷன் செத்த பிறகு எங்கும் வருவதில்லை. ஆனாலும் அவளுடைய மகனுக்குத் திருநெல்வேலியில் திருமணம் ஆனதும், அந்தப் பெண்ணுக்கு ஒரு பெண் குழந்தை பிறந்ததும், அதைப் பெற்றபின் அதன் தாய் நோயாளியாகிவிட்டதால் அந்த முருகேசன் இரண்டாங் கல்யாணம் செய்துகொண்டதும் எனக்குத் தெரியும்'' என்றாள் அன்னை.

"முருகேசருடைய முதல் சம்சாரத்தின் மகள்தான் அம்மா அந்தப் பெண்; பெயர் ஜானகி; அழகிலும் குணத்திலும் படிப்பிலும் ஈடு இணையற்றவள்.''



"சரி, சரி, அம்மணியம்மாள் நம் இனந்தான். நாளைக்கே போய்ப் பெண் கேட்டுக் கல்யாணத்தை உடனே நடத்தி விடுவோம்.''

"அம்மா, நாளைக்கு நல்ல நேரம் பார்த்து நான் சொல்லுகிறபோது நீங்கள் மட்டும் நம்முடைய காரில் தேங்காய், பழம், புஷ்பம், மஞ்சள் முதலிய மங்கலப் பொருள்களோடு பெண்ணுக்குப் பரிசமாகப் பட்டுப்புடவையும் வைர நகைகளும் கொண்டுபோய் முருகேசனையும் அவருடைய இரண்டாவது மனைவியையும் கண்டு....''

"ஏன்? அம்மணியம்மாளையும் அந்தப் பெண்ணின் தாயாரையுங்கூடக் கண்டு பேசுகிறேன்'' என்று குறுக்கிட்டாள் அன்னை.

"அம்மணியம்மாளும் அந்தப் பெண்ணின் தாயும் இங்கில்லை. அவர்கள் யாத்திரை போயிருக்கிறார்களாம்.''

"அப்படியா? சரி, சொல்லு.''

"முருகேசரையும் இரண்டாம் மனைவியையும் கண்டு பெண் கேளுங்கள். அவர்களுக்குப் பணக்கஷ்டம் ஏதாவது இருந்தால் அது எவ்வளவானாலும் தீர்த்து வைக்கிறோம் என்று சொல்லி அவர்கள் இருவரையும் நாளைக்கு இங்கே விருந்துக்கு அழையுங்கள். மற்றதெல்லாம் நான் அவர்களோடு பேசிக்கொள்ளுகிறேன்'' என்றான் முத்துவீரப்பன்.

அவன் திட்டப்படியே மறுநாள் மாலை ஜானகி தன் தோழிகளுடன் வெளியே போகிற சமயம் பார்த்துக்கொண்டிருந்து அவள் போன பிற்பாடு தாயாரையும் துணைக்கு ஒரு வேலைக்காரப் பெண்ணையும் பரிசப் பொருள்களுடன் முருகேசன் வீட்டுக்கு அனுப்பி வைத்தான், முத்துவீரப்பன்.

முருகேசனும் சுந்தரியும் கணிக்க முடியாத கவலையில் ஆழ்ந்திருந்தார்கள் என்றாலும், தங்கள் வீட்டைத் தேடி யாரோ ஒரு பெரியம்மாள் காரில் வந்து இறங்கிப் பெரிய பெரிய தட்டங்

களில் தேங்காய், பழம், புஷ்பம் முதலிய என்னென்னவோ சுமந்துகொண்டு வீட்டுக்குள் நுழைந்தபோது அவர்களை வரவேற்காமல் இருக்க முடியுமா ?

மனம் கலங்காத முகமலர்ச்சியுடன் வரவேற்று ஆசனம் அளித்தார்கள்.

அந்த அம்மாள் பரிசப் பொருள்களுள்ள தட்டங்களை முன்னால் பரப்பி வைத்துவிட்டுத் தான் யார் என்பதைச் சொல்லி முடித்தாள்.

முருகேசன் அந்த அம்மாளைப் பார்த்ததில்லை. அந்த அம்மாள் சொன்ன வீட்டின் அடையாளத்தால் அந்த வீடு மிகப் பெரிய பணக்காரர் வீடு என்பதை மட்டும் பலர் சொல்லக் கேட்டிருக்கிறான். அவ்வளவு பெரிய பணக்காரி தன்னை நாடித் தட்டுத் தட்டாக மங்கலப் பொருள்களோடு வந்திருக்கும் காரணம் என்னவோ என்ற திகைப்புடன் அந்த அம்மாள் முகத்தையே பார்த்துக்கொண்டிருந்தான்.

அந்த அம்மாள் வந்த காரியத்தைச் சொல்லத் தொடங்கி, "தம்பீ! உங்கள் தாயார் அம்மணியம்மாள் எனக்கு மிகவும் பழக்கமானவர்; நீ பிறப்பதற்கு முன்னால் அடிக்கடி எங்கள் வீட்டுக்கு வந்துகொண்டிருந்தவர். உங்கள் தகப்பனார் இறந்த பின் உன் தாயார் வெளியே வருவதில்லை. உனக்குத் திருநெல்வேலியில் முதல் கல்யாணம் நடந்ததும், அந்த மனைவி ஜானகியைப் பெற்றபின் நோயாளியாகிவிட்டதும், அதனால் நீ இரண்டாம் கல்யாணம் செய்துகொண்டதும் எனக்குத் தெரியும். இப்போது உன் தாயாரும் உன் மூத்த மனைவியும் யாத்திரை போயிருக்கிறார்கள் என்பதையும் அறிவேன். என் ஒரே குழந்தையான என் மகன் முத்துவீரப்பன் நல்ல அழகன்; படித்தவன்; ஏராளமான செல்வத்துக்கு ஒரே வாரிசு. அவன் இத்தனை நாளும் தனக்குப் பிடித்த பெண் கிடைக்கவில்லையென்று திருமணம் செய்துகொள்ளவில்லை.

இப்போது உங்கள் பெண் ஜானகியைக் கண்டு ஆசைப்பட்டு அவளை மணந்துகொள்ள விரும்புகிறான். பரிசம்



கொடுத்துப் பெண் கேட்கத்தான் வந்திருக்கிறேன். அட்டி சொல்லாமல் உங்கள் பெண்ணை என் மகனுக்குக் கொடுத்து என் வீட்டுக்கு விளக்கேற்றி வைக்க வேண்டும். நீங்களும் நானும் ஒரே இனந்தான். சந்தேகம் வேண்டாம்'' என்று சொல்லி, பட்டுப் புடைவையும் வைர நகைகளும் இருந்த வெள்ளித் தட்டத்தை முருகேசனிடம் நீட்டினாள்.

பெரும் பணக்கார மாப்பிள்ளை என்றதை அறிந்தவுடனே சுந்தரிக்கு அப்போதே சம்மதம் சொல்லிவிட வேண்டும்போல் மனம் துடித்தது. நகைத் தட்டத்தை வாங்கிக்கொள்ளப் பதறினாள்.

முருகேசன் பதற்றமடையவில்லை. சிறிது நேரம் யோசனை செய்துவிட்டு அந்த அம்மாளைப் பார்த்து, "நீங்கள் சொன்னதெல்லாம் சரியே. நகைகளும் புடைவையும் உங்களிடமே இருக்கட்டும், நிச்சயமாகும்போது பரிசம் வாங்கிக்கொள்ளலாம். எங்கள் பெண் நல்ல இடத்தில் வாழ்க்கைப்பட வேண்டும் என்பதில் எங்களுக்கும் ஆசைதான். ஆனாலும், இப்போது நாங்கள் மிகப்பெரிய சங்கடத்தில் மாட்டிக்கொண்டிருக்கிறோம். இப்போது என் மனம் கல்யாணப் பேச்சுகள் பேசத்தக்க நிலையில் இல்லையே'' என்றான்.

"ஏன்? என்ன சங்கடம்? எதுவானாலும் கூசாமல் சொல்லுங்கள்'' என்றாள் அந்த அம்மாள்.

முருகேசன் தயங்கித்தயங்கித் தன்னுடைய நிலைமையைச் சொன்னான்.

அதைக் கேட்டு அந்த அம்மாள், "பூ! இந்த அற்பச் கடனுக்காகவா இவ்வளவு சங்கடப்படுகிறீர்கள்? கவலைப்பட வேண்டாம். நாளை மத்தியானம் உங்களுக்குக் கார் அனுப்புகிறேன். நீங்கள் இருவரும் தயவு செய்து என் வீட்டுக்கு வாருங்கள். என் மகனிடம் சொல்லி இந்தக் கடனை உடனே தீர்த்துவிடச் செய்கிறேன். அப்படியே என் மகனையும் நீங்கள் பார்த்து உங்கள் பெண்ணுக்குத் தகுந்த மாப்பிள்ளையா

அல்லவா என்பதையும் அறிந்துகொள்ளலாம். இந்தக் கடனைத் தீர்ப்பது மட்டுமல்ல. உங்களுக்கு வேறு என்ன வேண்டுமானாலும் செய்கிறோம். எங்களுக்கு வருஷத்தில் ஐம்பதினாயிரம் ரூபாய் வருமானமுள்ள நிலபுலன்களும் வீடுகளும் பங்களாக்களும் இருக்கின்றன. பாங்கில் ரொக்கப் பணமும் லட்சக்கணக்கில் இருக்கிறது. உங்கள் கடன் எங்களுக்கு ஒரு தூசுக்குச் சமானம். தவறாமல் நாளைக்கு நீங்கள் என் வீட்டுக்கு வந்து விருந்துண்டு இந்தக் கடனை உடனே தீர்த்துவிட வேணும்'' என்றாள்.

அதைக் கேட்கக் கேட்கச் சுந்தரிக்குச் சந்தோஷம் நிலைகொள்ளவில்லை. உடனே கடன்கள் தீர்ந்து உல்லாச வாழ்க்கை நடத்த வசதிகள் வந்துவிட்டதுபோல் பூரித்துப் போனாள். முருகேசன் பதில் சொல்லுவதற்கு முன்னால் சுந்தரியே, "அம்மா, உங்களுக்கு நாங்கள் எவ்வளவு நன்றி செலுத்தினாலும் போதாது. நாளைக்கு உங்கள் பிரியப்படியே உங்கள் வீட்டுக்கு வருகிறோம். இந்தக் கடன் தொல்லையைத் தீர்த்துவிடுங்கள்'' என்றாள்.

"அதற்கு நானாச்சு. துளிகூடச் சந்தேகப்பட வேண்டாம். நாளைக்கு வீட்டுக்கு வாருங்கள். உங்கள் கடனைத் தீர்ப்பதற்கும் வேறு உங்களுக்குத் தேவையான எதையும் செய்ய என் மகன் தயங்க மாட்டான்'' என்றாள் அந்த அம்மாள்.

"சரி; வருகிறோம்'' என்று முருகேசனும் சம்மதித்துவிட்டான்.

முத்துவீரப்பனுடைய தாயார் மிக்க மகிழ்ச்சியடைந்து வணக்கத்துடன் வந்தனம் சொல்லிவிட்டுப் புறப்பட எழுந்தாள்.

முருகேசனும் வணங்கி விடை கொடுக்க எழுந்து நின்று அந்த அம்மாளிடம், "அம்மா, தயவு செய்து தவறாக நினைத்துவிட வேண்டாம். நீங்களும் இதற்குமுன் எங்களைப் பார்த்ததில்லை. நாங்களும் உங்களைப் பார்த்ததில்லை. அதனால்



அவசரப்பட்டு பரிசம் வாங்கிக்கொள்வது சரியல்ல. நகைகளுடன் மற்ற எல்லாத் தட்டங்களையும் இப்போது நீங்கள் எடுத்துக்கொண்டு போங்கள். நாளைக்கு நாங்கள் வந்து உங்கள் பிள்ளையையும் பார்த்து எல்லாம் திருப்தியாக முடிந்தால் அங்கேயே நிச்சயம் பேசிப் பரிசப் பொருள்களையும் ஏற்றுக்கொள்ளுகிறோம்'' என்றான்.

"சரி, அப்படியே செய்யுங்கள். ஆனால், சுப காரியம் என்பதற்காகச் சிறிதேனும் தாம்பூலம் எடுத்துக்கொள்ளுங்கள்'' என்றாள் அந்த அம்மாள்.

உடனே முருகேசன் சில வெற்றிலைகளையும் கொஞ்சம் பாக்கையும் புஷ்பத்தையும் சில பழங்களையும் எடுத்துச் சுந்தரியிடம் கொடுத்தான்.

கொண்டுவந்த எல்லாத் தட்டுகளையும் எடுத்துக்கொண்டு அந்த அம்மாள் போய்விட்டாள்.

"புஷ்பத்தை ஜானகிக்குச் சூட்டலாம்'' என்றாள் சுந்தரி.

உடனே முருகேசன், "இப்போது இதைப்பற்றி ஜானகியிடம் ஒன்றும் சொல்லிவிடாதே. அந்த மாப்பிள்ளை எப்படிப்பட்டவன், நம்முடைய துன்பங்களை நீக்க என்ன செய்யப் போகிறான் என்பது தெரிந்து நமக்குத் திருப்தியாக இருந்தால் நிச்சயம் செய்துவிட்டு அதன் பிறகு அவளுக்குத் தெரியப்படுத்தலாம்'' என்றான்.

சுந்தரி ஒத்துக்கொண்டாள்.

முத்துவீரப்பனுடைய தாயார் சொல்லியிருந்தபடியே மறுநாள் காலை பத்து மணிக்கே முருகேசனையும் சுந்தரியையும் அழைத்துப் போகக் கார் வந்தது. அப்போது ஜானகி தன் மாடி அறையில் காந்திமகான் சரித்திரத்தைப் படித்துக்கொண்டிருந்தாள்.

முருகேசனும் சுந்தரியும் முத்துவீரப்பனுடைய மாளிகைக்குப் போனார்கள். இவர்களை எதிர்பார்த்துக் காத்துக்கொண்

டிருந்த முத்துவீரப்பன் ஓடி வந்து காரின் கதவைத் திறந்து விட்டு வணக்கத்துடன் வரவேற்றான்.

அப்போதே சுந்தரிக்கு அவனைப் பிடித்துவிட்டது. கூடத்தில் காத்திருந்த முத்துவீரப்பனுடைய தாயார் கைகூப்பி வரவேற்றாள். எல்லாரும் பட்டு மெத்தையுள்ள நாற்காலிகளில் அமர்ந்து சிறிது நேரம் சேம லாபங்களைப்பற்றிப் பேசிக் கொண்டிருந்தார்கள். உருவத்தைப் பொறுத்தமட்டில் முருகேசனுக்கும் முத்துவீரப்பனைப் பிடித்துவிட்டது. பொன்னிறமான மேனி, வசீகரமான முகம், கெம்பீரமான தோற்றம், கூரிய பார்வை, திரட்சியான கன்னங்கள், புன்சிரிப்பு தவழும் உதடுகள், பால் போன்ற பல் வரிசை, அகன்ற மார்பு, திரண்ட கைகள், வைர மோதிரங்கள் மின்னும் கைவிரல்கள், செல்வச் செழிப்பைக் காட்டும் விலை மிகுந்த ஜரிகைப் பட்டாடை முதலிய பல வனப்புகளும் வாய்ந்த வடிவம் முத்துவீரப்பனுடையது.

அவனைப் பார்த்தவர்கள் யாரும் கவர்ச்சியடைவார்கள். ஆனால், 'ஒய்யாரக் கொண்டையில் தாழம்பூ, அதன் உள்ளே இருப்பது ஈரும் பேனும்' என்றபடி அவனுடைய உள்ளத்திலுள்ள கெட்ட எண்ணங்கள் யாருக்குத் தெரியும்?

சிறிதுநேரச் சல்லாபத்துக்குப் பின் விருந்து நடந்தது. மிகச் சிறந்த உண்டிகள் வெகு ருசிகரமாகச் சமைக்கப்பட்டிருந்தன. அப்படிப்பட்ட உணவு வகைகளை மிகப் பணக்காரியான தோழி கனகவல்லி வீட்டில்கூடச் சுந்தரி உண்டதில்லை. அதனால் இவ்வளவு நல்ல இடத்தில், இவ்வளவு அழகான மாப்பிள்ளைக்கு வாழ்க்கைப்பட ஜானகி கொடுத்து வைத்தவள் என்று பரவசமடைந்துவிட்டாள் சுந்தரி.

முருகேசனும் அது விரும்பத்தக்க இடந்தான் என்று எண்ணினான்; ஆனாலும், தன் கடன் தொல்லையைத் தீர்க்க என்ன செய்யப் போகிறார்கள் என்பதைப்பற்றியே நாட்டமாக இருந்தான்.



விருந்து முடிந்ததும் தாம்பூலம் போட்டுக்கொள்ள எல்லாரும் ஒரு மேஜையைச் சுற்றிலும் உட்கார்ந்தார்கள். முத்துவீரப்பன் தான் திட்டமிட்டிருந்தபடி முருகேசன் தனக்கு மாமனாராகிவிட்டதாகவே பேச்சை ஆரம்பித்து முருகேசனைப் பார்த்து, "மாமா! தங்களுக்குள்ள கடன் தொல்லையைப் பற்றியும், யாரோ நஞ்சப்பன் என்பவர் தாவா செய்து உங்கள் சொத்துகளை ஜப்திக்கு உட்படுத்தியிருப்பதாகவும் அம்மா சொன்னார்கள். இந்த அற்பக் கடனுக்காகத் தாங்கள் துளிகூடக் கவலைப்பட வேண்டாம். இந்தக் கடனைத் தீர்ப்பதும் மேலும் உங்கள் குடும்பத்திற்குத் தேவையான சகல சௌகரியங்களையும் செய்து கொடுப்பதும் என் பொறுப்பு. என் ஆசையெல்லாம் நான் தங்களுடைய மருமகன் ஆகவேண்டும் என்ற ஒன்றுதான். நான் இதுவரையிலும் திருமணம் செய்துகொள்ளாமல் இருந்ததன் காரணம் என்னவென்பதை என் தாயார் தங்களிடம் சொல்லியிருக்கிறார்கள்."

"ஆமாம், சொன்னார்கள்" என்றாள் சுந்தரி.

முத்துவீரப்பன் தொடர்ந்து, "தங்கள் பெண்ணை எனக்கு மணமுடித்து ஆசீர்வதிக்க வேண்டும். அந்தப் பாக்கியம் எனக்குக் கிட்டாவிட்டால் நான் ஆயுள் முழுவதும் பிரம்மச்சாரியாகவே இருந்துவிடுவேன்........"

"நீங்கள் பிரம்மச்சாரியாகவே இருந்துவிட நேராதபடி கடவுள் கருணை புரிவார், கவலைப்பட வேண்டாம்" என்றாள் சுந்தரி.

"ஆம்! அப்படிச் சொல்லுங்கள், மாமி! சுவாமிக்கு முன்னால் அம்மன் வரங்கொடுத்த மாதிரி சொல்லிவிட்டீர்கள். உங்களுக்கு என் நன்றி கலந்த வணக்கம்" என்று கும்பிட்டான் முத்துவீரப்பன்.

முருகேசன் ஒருவித அறிகுறியும் காட்டாமல் மௌனமாகக் கேட்டுக்கொண்டிருந்தான்.

அதைக் கவனித்த முத்துவீரப்பன், "மாமா, முதலில் உங்கள் கடனைத் தீர்க்க வகை செய்துவிடுகிறேன். நான் தீர்க்கிறேன் என்பதைவிடத் தாங்களே அதைத் தீர்ப்பதற்கு வேண்டிய சக்தியைத் தங்களுக்கு உண்டாக்கிவிடுகிறேன். என்னுடைய பெருந்தொகைகளான பணம் பாங்கில் 'பிக்செட் டிபாசிட்'களாக இருக்கிறது. இன்னும் இருபது நாளில் ஒரு லட்ச ரூபாய் 'கர்ரெண்ட்' கணக்குக்கு வருகிறது. அதில் ஐம்பதினாயிரம் ரூபாய்க்குச் 'செக்' உங்கள் பேருக்கு இப்போதே தந்துவிடுகிறேன். அதை வாங்கித் தாங்களே கடனைத் தீர்த்துவிட்டு மீதியைத் தங்கள் குடும்பத்துக்குச் சேமிப்பாக வைத்துக்கொள்ளுங்கள். திருமணத்தை வெகு விமரிசையாக நடத்த எல்லாச் செலவுகளும், இருவீட்டுச் செலவுகளும் என்னைச் சேர்ந்தவை. பாங்கிலிருந்து தாங்கள் பணம் வாங்க இருபது நாள்களாகும். அதனால் உடனடியாகத் தங்கள் கைச்செலவுக்கு இப்போதே ரொக்கம் ஐயாயிரம் தங்களிடம் தந்துவிடுகிறேன்" என்று சொல்லிக்கொண்டே எழுந்து தன்னுடைய அறைக்குச் சென்றான்.

சிறிது நேரத்தில் திரும்பி வந்து முதலில் ரொக்கம் ஐயாயிரம் ரூபாய் நோட்டுகளை முருகேசனிடம் தந்து எண்ணிப் பார்க்கச் சொன்னான். முருகேசன் எண்ணிப் பார்த்து விட்டுப் புன்சிரிப்புடன், "சரியாக ஐயாயிரம் இருக்கிறது" என்றான். அதன் பிறகு இருபது நாள்கள் பின் தேதியிட்ட 'செக்' ஒன்றை ஐம்பதினாயிரத்துக்கு முருகேசன் பேருக்குக் கொடுத்தான். முருகேசன் முகம் மலர்ந்துவிட்டது. சுந்தரிக்குப் பூரிப்பு நிலைகொள்ள முடியவில்லை.

முருகேசன் எதையும் சொல்லுவதற்கு முன்னால் முத்துவீரப்பனே, "மாமா! மாமி! இன்னும் பத்து நாளில் மிக நல்ல முகூர்த்தம் இருக்கிறது. அதை விட்டால் நல்ல முகூர்த்தம் சில மாதங்களுக்கு இல்லை. அதனால் தயவு செய்து இந்த முகூர்த்தத்திலேயே திருமணம் நடத்திவிட இப்போதே நிச்சயம் செய்துவிடுங்கள்" என்றான்.



"ஏன் தள்ளிப்போட வேணும்? இதே முகூர்த்தத்தை நிச்சயித்துவிடுவோம்" என்றாள் சுந்தரி.

முருகேசனும் ஒத்துக்கொண்டான்.

முத்துவீரப்பன் ஒரு வேலைக்காரனைக் கூப்பிட்டு புரோகிதரை அழைத்து வரக் கட்டளையிட்டான். அவனுடைய திட்டப்படி ஏற்கெனவே ஒரு புரோகிதர் தயாராக அம்மாளிகையின் வேறொரு பகுதியில் காத்திருந்தார்.

புரோகிதர் வந்தார். பதினைந்து நிமிடங்களுக்குள் முறைப்படி மந்திரங்களுடன்—ஆனால், பெண்ணை உட்கார வைக்காமல்—நிச்சயதார்த்தம் செய்யப்பட்டது. பட்டுப் புடைவையையும் வயிர நகைகளையும் மற்றப் பரிசங்களையும் முருகேசன் ஏற்றுக்கொண்டான். அத்துடன் முருகேசனுக்கும் சுந்தரிக்கும் மிக்க விலையுயர்த்த பட்டாடைகள் வழங்கப் பட்டன.

அப்போதே திருமண அழைப்பு அச்சடிக்க வேண்டியபடி இருவீட்டார் அழைப்பாகத் தயார் செய்யப்பட்டது. மேலும் பேச வேண்டியதெல்லாம் பேசியான பின் முருகேசனும் சுந்தரியும் வீட்டுக்குப் போகக் கார் தயாராயிற்று. அப்போது முத்துவீரப்பனுடைய தாயார் முன்தினம் பெண் கேட்கக் கொண்டு போய்த் திருப்பிக் கொண்டுவரப்பட்ட தேங்காய், பழம், புஷ்பம் முதலிய எல்லாவற்றையும் மோட்டாரில் கொண்டுபோய் வைக்கும்படி வேலைக்காரர்களுக்கு உத்தரவிட்டாள்.

பரிசப் பொருள்களுடன் முருகேசனும் சுந்தரியும் பொங்கி வழியும் பூரிப்போடு வீட்டுக்கு வந்து சேர்ந்தார்கள்.

பதின்மூன்றாயிரம் கடனைத் தீர்க்க ஐம்பதினாயிரம் ரூபாய் 'செக்' கையிலிருக்கிறது. கைச்செலவுக்கு ரொக்கம் ஐயாயிரம் இருக்கிறது. எப்படிப் பாடுபட்டுத் தேடினாலும் முத்துவீரப்பனைப் போன்ற பேரழகும் பெருஞ்செல்வமும் ஒருங்கேயுள்ள மாப்பிள்ளை தங்கள் பெண்ணுக்குக் கிடைப்பது

அரிதிலும் அரிது என்ற எண்ணமும் மனத்தில் நிறைந்துவிட்ட பின் மகிழ்ச்சிக்கு என்ன குறைவு?

மறுநாளே முருகேசன் வீட்டைச் சேர்ந்த காலி நிலத்தில் முத்துவீரப்பனுடைய செலவில் மிகப்பெரிய திருமணக் கொட்டகை உருவாக்கத்தக்க வேலைகள் ஆரம்பமாயின.

## அத்தியாயம் 27

முருகேசனும் சுந்தரியும் வீட்டுக்கு வந்தபோது ஜானகி வீட்டிலில்லை. அவள் தன்னுடன் படித்து பி. ஏ. தேறியுள்ள கோமளம் என்ற தோழியின் வீட்டுக்குப் போயிருந்தாள். கோமளத்தின் விருப்பத்திற்கிணங்கி அவளுடைய பெற்றோர்கள் அவளை டாக்டர் தொழிலுக்கான எம். பி. பி. எஸ். பட்டப் படிப்புக்காக வைத்தியக் கல்லூரியில் சேர்க்க ஏற்பாடாகியிருந்தது. அதற்கான விண்ணப்பங்களை அவள் தயார் செய்து கொண்டிருந்தாள்.

அதைக் கண்ட ஜானகி, தானும் அந்தப் படிப்புக்குப் போக ஆசை கொண்டு அதற்கான விண்ணப்பங்களை அனுப்ப வேண்டிய முறையைத் தெரிந்துகொண்டு வீட்டுக்கு வந்தாள்.

பெருஞ்செல்வமும் பேரழகும் உள்ள மாப்பிள்ளை ஜானகியை மணந்துகொள்ள ஆசைப்பட்டு நிச்சயம் ஆகிவிட்டதை அவளிடம் சொல்லி மகிழ்ச்சியூட்டித் தானும் மகிழ வேண்டும் என்று சுந்தரி ஜானகியின் வருகைக்குக் காத்திருந்தாள்.

வீட்டில் நுழைந்த ஜானகி சுந்தரியைத் தேடிச் சென்று, "சித்தி! என் தோழி கோமளம் டாக்டர் தொழிலுக்கான எம்.பி.பி.எஸ். பட்டப் படிப்புக்குச் சேரப் போகிறாள். எனக்கும் அந்தப் படிப்புக்குச் சேர மிக்க ஆசையாக இருக்கிறது, சித்தி. நான் பி. ஏ.வில் மாகாணத்தில் முதலாக



மார்க் வாங்கியிருப்பதால் எனக்கு உடனே இடம் கிடைத்து விடும். அப்பாவிடம் நீங்களும் சொல்லி என்னை மெடிகல் காலேஜில் சேர்த்துவிடுங்கள், சித்தி" என்று கொஞ்சும் மொழிகளிற் கெஞ்சினாள்.

ஜானகியை வாரி மார்போடு அணைத்துக்கொண்டு, "அடி என் கண்ணே! நீ எம். பி. பி. எஸ். பட்டத்துக்கும் படிக்கலாம்; இன்னும் அதற்கு மேலான எம். டி. பட்டம் பெறச் சீமைக்கும் போகலாம். அப்படிப்பட்ட மிகப்பெரிய அதிருஷ்டம் உன்னைத் தேடி வந்திருக்கிறது!" என்றாள். சுந்தரி.

ஜானகி வியப்புடன், "என்ன சித்தி?" என்றாள்.

"உனக்குத் திருமணம் நடத்த நிச்சயம் செய்திருக்கிறோம். இன்னும் பத்து நாளில் முகூர்த்தம். அதற்குப் பின் நீ எந்தப் படிப்புக்கு வேணுமானாலும் போகலாம்."

"திருமணமா! எனக்கா! இவ்வளவு சீக்கிரம் எனக்குத் திருமணம் எதற்கு? திருமணம் செய்துகொண்டால் அதற்கப்புறம் எந்தப் படிப்பும் படிக்க முடியாது. அத்துடன் எனக்குத் திருமணம் செய்துகொள்ளத் துளிகூடப் பிரியமில்லை. அம்மா, மாமா, அத்தை எல்லாரும் எங்கே இருக்கிறார்கள், என்னவானார்கள் என்பதே தெரியவில்லை. அது மட்டுமா? அருமைப் பாட்டி யாத்திரை போனவர் எங்கே இருக்கிறார் என்பதும் தெரியவில்லை. அவர்களெல்லாம் இல்லாமலா எனக்குக் கல்யாணம்? வேண்டாம் சித்தி! எனக்கு இப்போது திருமணம் வேண்டவே வேண்டாம். அவர்களெல்லாரும் வந்த பின் அதைப் பற்றியோசிக்கலாம். அதற்குள் நான் எம். பி. பி. எஸ். படிப்பை முடித்துவிட ஏற்பாடு செய்யுங்கள்" என்றாள் ஜானகி.

"அடி என் செல்வமே! நான் சொல்வதைக் கேள். பாட்டி திருச்சிராப்பள்ளியில் சுகமாக இருப்பதாகவும் சீக்கிரம் இங்கே வருவார் என்றும் கடிதம் வந்திருந்ததை நீயே படித்தாயே! கல்யாணத்துக்குள் பாட்டி வந்தாலும் வந்துவிடுவார். மற்றவர்கள் எங்கே இருக்கிறார்களோ தெரியவில்லை. அவர்களெல்லாம்

வரும்வரை காத்திருந்தால் இப்படிப்பட்ட அருமையான மாப்பிள்ளை கிடைக்காமல் போய்விடும். உன் அழகுக்கேற்ற வெகு அழகான மாப்பிள்ளை உன்னையே மணந்துகொள்ள வேணுமென்று வெகு ஆசையாக இருக்கிறார். அழகு மட்டுமா, மிகப்பெரிய லட்சாதிபதியான பணக்காரக் குடும்பத்துக்கு அவர் ஒரே வாரிசு'' என்று சொல்லிக்கொண்டே போய்ப் பெண்ணுக்குப் பரிசமாகக் கொடுக்கப்பட்ட வைர நகைகளையும் பட்டுப் புடைவையையும் எடுத்து வந்து, "இதைப் பாரடி என் கணணே!'' என்றாள், சுந்தரி.

"இதெல்லாம் எதற்குச் சித்தி?''

"இதெல்லாம் உனக்குப் பரிசமாகக் கொடுத்திருக்கிறார்கள். இவ்வளவு விலையுயர்ந்த ஆபரணங்களைத் தரக்கூடிய செல்வமும் கண்ணைக் கவரும் கட்டழகும் உள்ளவரான ஒருவரை மணந்துகொள்ள நீ தவம் பண்ணியிருக்க வேண்டும். அவர் யார் தெரியுமா? அடுத்த தெருவில் தபாலாபீசுக்கு எதிரில் மூன்றடுக்கு மாளிகை இருக்கிறதே தெரியுமா?''

"தபால் ஆபீசுக்கு எதிரில் இருக்கிறதே, அந்த மாடி வீடா!'' என்று திடுக்கிட்டுக் கேட்டாள் ஜானகி.

"ஆமாம், ஆமாம், அதே மாடிவீடுதான். அந்த மாளிகைக்கும் பெரும் செல்வத்துக்கும் சொந்தக்காரரான வெகு அழகான வாலிபர்தான் உன்னை மணந்துகொள்ள ஆசைப்பட்டு இந்தப் பரிசங்களைத் தந்து திருமணம் நிச்சயமாகியிருக்கிறது. இந்த வாய்ப்பை விட்டுவிட்டால் இப்படிப்பட்ட மாப்பிள்ளை கிடைக்கவே கிடைக்காது'' என்றாள் சுந்தரி.

இதைக் கேட்ட ஜானகிக்கு, நெருப்பை வாரி அவள்மீது கொட்டிவிட்டதுபோல் உடம்பிலும் உள்ளத்திலும் எரிச்சல் கண்டுவிட்டது.

இதுவரையிலும் அவள் உண்மையாகவே தன் தாயாரும் பாட்டியும் சுந்தரமூர்த்தியும் சந்திராவும் இல்லாமல் திருமணத்தைப்பற்றிச் சிந்திக்கக்கூடாதென்றும், அவர்கள் வரவை



எதிர்பார்த்து வைத்தியக் கல்லூரியில் நான்கு ஆண்டுகளைக் கடத்தலாம் என்றும் எண்ணித்தான் இப்போது திருமணம் வேண்டாம் என்று சொன்னாள்.

இப்போது தன்னைத் திருமணம் செய்துகொள்ள விரும்பிப் பரிசங்களைத் தந்திருப்பது யாரென்று அறிந்தவுடன் அவளுடைய மனம் மேலும் இறுகிவிட்டது. அந்த மூன்றடுக்கு மாடி வீட்டு வாலிபரின் குணக்கேட்டையும் குடிக்கிற பழக்கத்தையும் கெட்ட எண்ணத்துடன் அவன் தன்னை வஞ்சித்து அந்த வீட்டுக்கு வரச் செய்ததையும் சித்தியிடம் சொல்லிவிடலாமா என்று சிறிது நேரம் யோசித்தாள்; ஆனால், அவன் செய்த வஞ்சத்தை யாரிடத்திலும் சொல்லுவதில்லையென்று சத்தியம் செய்து கொடுத்திருப்பது நினைவுக்கு வந்து அந்தச் சத்தியத்தை அழிக்கக்கூடாது என்பதோடு அதைச் சொன்னால் தனக்குத்தான் மானக்கேடு என்பதை உணர்ந்தாள். அதைச் சொல்லாமல் எப்படி இந்தத் திருமணப் பேச்சை முறிப்பது என்ற யோசனையில் ஜானகி சிறிது நேரம் மௌனமாக இருந்தாள்.

அதைக் கண்ட சுந்தரி, "இதற்கென்ன இவ்வளவு யோசனை? வலிய வருகிற சீதேவியை வேணடாமென்று சொல்லாதேடி என் கண்ணே! இவ்வளவு அழகும் செல்வமும் உள்ள மாப்பிள்ளையை விட்டுவிடக்கூடாது . என்று தெரிந்துதான் உங்கப்பாவும் நானும் ஒத்துக்கொண்டுவிட்டோம்'' என்றாள்.

யோசனையில் ஆழ்ந்திருந்த ஜானகி தலை நிமிர்ந்து சுந்தரியைப் பார்த்து, "சித்தி! நான் உங்களைக் கும்பிட்டுக் கேட்டுக்கொள்கிறேன். என்னைக் கசக்க வேண்டாம். மாப்பிள்ளை செல்வத்தில் குபேரனாக இருந்தாலும் சரி, அழகில் மன்மதனாக இருந்தாலும் சரி; பாட்டியும் அம்மாவும் மற்றவர்களும் இல்லாமல் நான் யாரையும் மணந்துகொள்ள மாட்டேன்'' என்றாள்.

எதிர்பாராத இந்த எதிர்ப்பினால் சுந்தரிக்கு வருத்தமும் எரிச்சலும் வந்துவிட்டன. எரிச்சலை அடக்கிக்கொண்டு, "ஜானகி! ஏது! ரொம்பவும் புது மாதிரியாக இருக்கிறதே உன் போக்கு! பசுப்போல் இருந்தவள் புலியாகிவிட்டாயே! எங்கள் பேச்சைத் தட்டமாட்டாய் என்று நம்பித்தான் உன்னுடைய நன்மையைக் கருதி உங்கப்பாவும் நானும் இந்தச் சம்பந்தத்துக்குச் சம்மதித்து நிச்சயதார்த்தம் செய்து திருமண அழைப்புகளையும் அச்சுக்குக் கொடுத்தாகிவிட்டது. எங்கள் மூக்கை அறுத்துவிடத் துணிச்சல் வந்துவிட்டதே உனக்கு! இதற்குத்தான் உன்னை இவ்வளவு செல்லமாக வளர்த்தோமா? எங்கள் ஏற்பாட்டுக்கு நீ இணங்காவிட்டால் உனக்கும் எங்களுக்கும் உன் அம்மாவுக்கும் உன் பாட்டிக்கும் நிற்க நிழல்கூட இல்லாமல் போகும்படியான சங்கடங்கள் நிச்சயமாக வந்துவிடும். அதனால் சிறுபிள்ளைத்தனமாக மறுப்புப் பேசுவதை விட்டுவிட்டுப் புத்திசாலியாக நடந்துகொள். இந்தத் திருமணம் நடந்தேயாக வேண்டும். நீ கற்ற வித்தைகளை உன்னை வளர்த்த எங்களிடமே காட்டாதே, தெரியுமா?" என்றாள், சுந்தரி.

ஜானகிக்கு அழுகை வந்துவிட்டது. அழுதுகொண்டே, "சித்தி! இதுவரையிலும் நான் உங்கள் பேச்சைத் தட்டினதுண்டா? நீங்கள்தான் இதுவரையிலும் என் விருப்பத்தை மறுத்ததுண்டா? எனக்குத் துளிகூட விருப்பமில்லாத காரியத்தைச் செய்யச் சொல்லுகிறீர்களே, இது தர்மமா? நான் என்ன பால் குடிக்கிற குழந்தையா? என்னிடம் ஒரு வார்த்தை சொல்லி என் விருப்பத்தை அறிந்துகொள்ளாமல் நீங்கள் நிச்சயம் செய்தது நியாயமா? இப்போது திருமணம் செய்துகொள்ளும் எண்ணமே எனக்கில்லை. பாட்டி, அம்மா எல்லாரும் வரட்டும் என்று நான் சொன்னால் அதைக் கற்ற வித்தையைக் காட்டுவதாகச் சொல்லுகிறீர்களே" என்றாள்.

"ஜானகி! அழாதேம்மா. நான் சொல்வதைக் கேள். நீ மறுக்க மாட்டாய் என்ற நிச்சயமான நம்பிக்கையினால்தான்



உன்னிடம் சொல்லாமல் நிச்சயம் செய்துவிட்டோம். அது மட்டுமல்ல, இந்த ஏற்பாட்டுக்குச் சம்மதிக்காவிட்டால் நாம் வீடு வாசலை இழந்து நமக்குச் சொல்ல முடியாத துன்பங்கள் வந்துவிடும். அந்தக் காரணத்தைச் சொல்லி உன் நிம்மதியைக் கெடுக்க வேண்டாமென்று எண்ணித்தான் அதைப்பற்றி உன்னிடம் இதுவரையிலும் சொல்லவில்லை. அதைச் சொன்னால் நீ உடனே ஒத்துக்கொள்வாய். அதை விவரமாகச் சொல்லுகிறேன், கேள்........"

"சித்தி! நீங்கள் எதைச் சொன்னாலும் நான் இப்போது கல்யாணம் செய்துகொள்ளச் சம்மதிக்கவே மாட்டேன். அம்மா, பாட்டி எல்லாரும் வரட்டும்" என்று சொல்லிக் கொண்டே மாடியிலுள்ள தன் அறைக்குப் போகத் திரும்பினாள்.

சுந்தரிக்குக் கடுங்கோபம் வந்துவிட்டது.

"அடியம்மா! அவ்வளவு பெரிய மனுஷியாகிவிட்டாயா! வளர்த்த கடா மார்பில் பாய்ந்த மாதிரி எடுத்தெறிந்து பேசிவிட்டுப் போகிறாயே. நீ சம்மதித்தாலும் சரி, சம்மதிக்காவிட்டாலும் சரி, இந்தக் கல்யாணம் நடந்தே தீரும்" என்று இரைந்தாள்.

அதைக் கேட்டுக்கொண்டே போன ஜானகி மாடி அறைக்குச் சென்று படுக்கையில் விழுந்து குமுறிக் குமுறி அழுதுகொண்டிருந்தாள்.

இதுநாள் வரையிலும் சுந்தரிக்கும் ஜானகிக்கும் இடையில் எந்த விதமான பிணக்கும் நேர்ந்ததில்லை. ஜானகியைத் தன் குழந்தை போலத்தான் சுந்தரி வளர்த்தாள். ஜானகியும் சுந்தரியைத் தன்னைப் பெற்ற தாய் போலத்தான் பாவித்து வந்தாள். இப்போது ஜானகி காட்டிய எதிர்ப்பில் சுந்தரிக்கு உண்டான ஏமாற்றம் மிகுந்த வருத்தத்தை உண்டுபண்ணிவிட்டது. இந்தக் கல்யாணம் நடக்காவிட்டால் அதனால் விளையக்கூடிய மகத்தான தீமைகளை எண்ணியெண்ணிப் பெருமூச்சு விட்டுக்

கொண்டு தலையைத் தொங்கப் போட்டுக்கொண்டு உட்கார்ந்து கொண்டிருந்தாள்.

சுந்தரிக்கும் ஜானகிக்கும் இந்த வாக்குவாதம் நடந்தபோது முருகேசன் வீட்டில் இல்லை. சிறிது நேரம் சென்றபின் வெளியே போயிருந்த முருகேசன் வீட்டுக்கு வந்து தம் அறைக்குள் புகுந்தார்; முத்துவீரப்பன் வீட்டிலிருந்து பரிசப் பொருள்களோடு வந்தபோது ஆனந்தத் தாண்டவமாடிக்கொண்டிருந்த சுந்தரி அங்கே தலையைக் கவிழ்த்துக்கொண்டு சோகமே வடிவாக இருப்பதைக் கண்டார்.

அவர் அறைக்குள் வந்ததைக்கூட அறியாதவளாக விசனத்தில் ஆழ்ந்திருந்த சுந்தரியை அணுகி அவளுடைய தோளைத் தொட்டு, "ஏன் இப்படி உட்கார்ந்திருக்கிறாய்?" என்றார் முருகேசன்.

திடுக்கிட்டுத் திரும்பிய சுந்தரி, "அத்தான், நான் என்னத்தைச் சொல்லுவேன்? ஜானகி இப்படி நம்மை மூக்கறுப்பாள் என்று கனவிலும் கருதினதில்லையே!" என்றாள்.

"ஏன்? என்ன நடந்தது?"

சுந்தரி, தனக்கும் ஜானகிக்கும் நடந்த பேச்சுகளை ஆதியோடந்தமாகச் சொல்லிவிட்டுக் கடைசியாக, "நேரம் காலமில்லாமல் சிநேகிதிகள் வீட்டுக்கும் கடற்கரைக்கும் போய் வருவதால் எவனோடாவது காதல் கீதல் பேசியிருக்கிறாளோ என்னவோ?" என்றாள்.

"சேச்சே! அப்படியிருக்காது. அப்படியிருந்தால் அம்மாவும் பாட்டியும் சுந்தரமூர்த்தியும் சந்திராவும் வந்த பிறகுதான் கல்யாணத்தைப்பற்றி யோசிக்க வேண்டும் என்று சொல்லுவாளா? காதல் உண்டாகியிருந்தால் அவ்வளவு காலம் கடக்கப் பொறுக்காது. விரைவில் திருமணம் செய்துவைக்கும்படி அவளே அவசரப்படுவாளே! நமக்குத் தெரியாமல் காதல் நடத்தக்கூடிய சுபாவம் உள்ளவளல்ல ஜானகி" என்றார் முருகேசன்.



"பின் ஏன் இப்படி என்றுமில்லாதபடி எடுத்தெறிந்து பேசுகிறாள்."

"அதுதான் எனக்கும் தெரியவில்லை. அவள் இந்த ஏற்பாட்டுக்கு இணங்காவிட்டால் என்ன செய்வது? படித்த பெண். பி. ஏ. சிறப்புத் தேறியவள்; சுதந்தர மனப்போக்குள்ள பருவப் பெண். எப்படிக் கட்டாயப்படுத்துவது? என் மனம் குழம்புகிறது" என்றார் முருகேசன்.

"ஐயோ, அத்தான்! இதென்ன நீங்களும் இப்படிப் பேசுகிறீர்கள்? அவள்தான் சிறுபெண்; நிலைமை தெரியாமல் பேசுகிறாள். நீங்களும் இப்படிக் குழம்பினால் நம்முடைய குடும்பத்தின் கதி என்னாவது? வீடு பறி போகாமல் இருக்க வேறு வழி உண்டா? அல்லது ஜானகி விவாகம் செய்துகொள்ள விரும்புகிற காலத்தில் இப்படிப் பெருஞ்செல்வமும் அமைந்த மாப்பிள்ளை கிடைக்குமா? புரோகிதச் சடங்குகளுடன் தெய்வங்கள் சாட்சியாக நிச்சயதார்த்தம் நடத்திச் சத்திய பூர்வமாக ஒப்புக்கொண்டு பரிசங்களையும் வாங்கிக்கொண்ட உங்கள் மனுஷத்தனமும் பொறுப்பும் என்னவாகும்? அவளுக்குச் சொல்ல வேண்டியதைச் சொல்லி எப்படியாவது திருமணத்தை நடத்திவிட வழி தேடாமல் இப்படிக் குழம்பிக்கொண்டிருக்கலாமா?" என்றாள் சுந்தரி.

இந்த நியாயங்களெல்லாம் முருகேசனுக்கும் தெரிந்தவை தாம். ஆனால், வயது வந்த படித்த பெண்ணை எப்படிக் கட்டாயப்படுத்துவது என்று தயங்கினார்.

சுந்தரியும் ஜானகியிடத்தில் மிக்க அன்போடுதான் நடந்துகொண்டவள். ஆனாலும் சுந்தரியின் அன்பு சூழ்நிலையைப் பற்றிய செயற்கை அன்பு. ஆனால், முருகேசன் அன்பு இயற்கை அன்பு. அதனால் சுந்தரி ஜானகியிடம் சொன்னது போல், 'நீ சம்மதித்தாலும் சரி சம்மதிக்காவிட்டாலும் சரி, இந்தக் கல்யாணம் நடந்தே தீரும்" என்று சொல்ல முருகேசனுக்கு மனம் வராது.

என்றாலும் மகளை எப்படியாவது சமாதானப்படுத்தித் திருமணத்தை நடத்திவிடக் கடமைப்பட்டுள்ள தன்னுடைய பொறுப்பை முருகேசன் உணராமலில்லை. ஜானகியிடம் பேசி அவளைச் சரிப்படுத்த எண்ணினார். ஆனால், சுந்தரியின் சுடுசொற்களால் வருத்தத்தோடு போயிருக்கும் மகளை உடனே பார்த்து அதே விஷயத்தைப்பற்றிப் பேசுவது நல்ல தல்லவென்றும் விடிந்து பேசிக்கொள்ளலாம் என்றும் தீர்மானித்தார்.

மணி பத்தாகியும் ஜானகி சாப்பிட வரவில்லை. அவளைச் சாப்பாட்டுக்கு அழைக்கும்படி சுந்தரி முருகேசனிடம் சொன்னாள். முருகேசன் மாடிக்குப் போனார். ஜானகி அழுகை ஓய்ந்து, 'நீ சம்மதித்தாலும் சரி சம்மதிக்காவிட்டாலும் சரி, இந்தக் கல்யாணம் நடந்தே தீரும்' என்று சித்தி சொன்னதையே திருப்பித் திருப்பி எண்ணிக்கொண்டு, 'இந்தக் கட்டாயத்தி லிருந்து எப்படித் தப்புவது' என்ற ஆலோசனையில் கண்களை மூடிக்கொண்டே படுத்திருந்தாள்; தந்தை அறைக்குள் வந்ததை அறியவில்லை.

"ஏம்மா ஜானகி! மணி பத்தாகிவிட்டதே. சாப்பிடலாம் வா" என்ற தந்தையின் குரலைக் கேட்டுத் திடுக்கிட்டு எழுந்த ஜானகி, "அப்பா! எனக்கு இப்போது கல்யாணம் வேண்டாம் அப்பா. அம்மா, பாட்டி, மாமா, அத்தை எல்லாரும் வந்த பிறகு அதைப்பற்றி யோசித்துக்கொள்ளலாம் அப்பா" என்றாள்.

"முதலில் நீ சாப்பிட வாம்மா. கல்யாணத்தைப்பற்றி அப்புறம் பேசிக்கொள்ளலாம்" என்றார் தந்தை.

உடனே எழுந்து தந்தையுடன் போய்ச் சாப்பிட்டுவிட்டுத் திரும்பி வந்து படுத்துக்கொண்டாள். தூக்கம் வரவில்லை. தந்தை கல்யாணத்தைப்பற்றி என்ன சொல்லப்போகிறாரோ என்ற கவலையில் படுக்கையில் புரண்டுகொண்டே இரவைக் கழித்தாள்.



மறுநாள் காலையிலும் தந்தையின் அழைப்பின்மேல் கீழே போய்க் காலைக் கடன்களை முடித்து நீராடித் தந்தையுடன் காலை ஆகாரம் உண்டபின் மாடிக்குப் போய்விட்டாள்.

சிறிது நேரம் சென்றபின் முருகேசன் மாடிக்குச் சென்று மகளுடன் பேச்சை ஆரம்பித்து, "ஏனம்மா திருமணம் வேண்டா மென்கிறாய்?" என்றார்.

"அப்பா! எனக்கு இப்போது கல்யாணம் செய்துகொள்ளத் துளிகூட ஆசையில்லை. என்னைக் கட்டாயப்படுத்த வேண்டாம் அப்பா. பாட்டி முதலானவர்கள் வந்த பிறகு அதைப் பற்றி யோசிக்கலாம் அப்பா. அவர்களெல்லாம் இல்லாமலா எனக்குக் கல்யாணம்?"

"ஆமாம்மா. அவர்களெல்லாம் இல்லாமல் உனக்குத் திருமணம் நடப்பது எனக்குக்கூடப் பிரியமில்லைதான். ஆனால், நான் என்ன செய்வேன்? அவர்களெல்லாம் வருகிற வரைக்கும் காத்திருந்தால் நம் வாழ்வே நாசமடைந்துவிடும். அத்துடன் எவ்வளவுதான் பாடுபட்டாலும் பின்னால் இப்படிப் பட்ட அழகும் செல்வமும் சேர்ந்த இடம் கிடைக்காது" என்று சொல்லிவிட்டு வீட்டின்மேல் இருக்கிற கடனுக்காக வீடும் நிலங்களும் ஜப்திக்கு உள்ளாகியிருப்பதையும், அந்தக் கடனைத் தீர்க்கவும் மீதி சேமிப்பாக இருக்கவும் முத்துவீரப்பன் ஐம்பதினாயிரம் ரூபாய்க்குச் செக் தந்திருப்பதையும், உடனடியாகக் கைச்செலவுக்கு ரொக்கம் ஐயாயிரம் தந்திருப்பதையும் மற்றும் பரிசங்களைப்பற்றியும் விரிவாகச் சொல்லிவிட்டு, "குழந்தாய்! உன் பாட்டி, தாயார், மாமா, அத்தை, சித்தி, நான், நீ ஆகிய எல்லாரும் உண்ண உணவும் நிற்க நிழலும் இல்லாமல் தவிக்கும்படி செய்துவிடக்கூடிய அபாயம் வந்து விட்டது. அதை விலக்க வேறு வழியே இல்லையென்று கண்டுதான் இந்தத் திருமணத்துக்கு இசைந்து நிச்சயம் செய்து விட்டேன்; நீ என் சொல்லைத் தட்டமாட்டாய் என்ற திடமான நம்பிக்கையில்தான் உன்னிடம் சொல்லாமல் நிச்சயதார்த்தம் நடத்திவிட்டேன். உன்னிடம் சொல்லாமற் செய்துவிட்டது

தப்புதான். என்றாலும் என்னை மன்னித்து என் மானத்தைக் காப்பாற்றம்மா" என்று கண்கலங்கிச் சொன்னார் தந்தை.

தன் தந்தையிடத்தில் அளவற்ற பாசமும் மதிப்பும் உள்ளவள் ஜானகி. அவர் சொன்ன நியாயங்கள் அவருடைய நிலைமைக்குச் சரியானவைதாம் என்பதனாலும் அவர் கண் கலங்கியதைக் கண்டு ஜானகிக்கும் கண் கலங்கிவிட்டது. அந்தக் கல்யாணப் பேச்சில் தனக்கிருந்த வெறுப்பைச் சித்தி சுந்தரியிடம் காட்டியதுபோல் தந்தையிடம் காட்டிவிட மனம் இடங் கொடுக்கவில்லை.

பதில் ஒன்றும் சொல்ல முடியாமல் தலை குனிந்தபடியே அழுதுகொண்டிருந்தாள். அதைக் கண்ட முருகேசன், தான் சொன்ன காரணங்களால் மகளுடைய மனம் இளகியிருப்பதனால்தான் மகள் மறுப்புச் சொல்லவில்லையென்று எண்ணிக் கொண்டு, உடனே சம்மதிக்கும்படி கசக்காமல் அவகாசம் கொடுத்து விட்டுப்பிடிக்க வேணும் என்ற தீர்மானத்துடன், "ஜானகி, நீ படித்த பெண்; மிக நல்ல புத்திசாலி. உனக்குத் தெரியாத நியாயம் ஒன்றுமில்லை. இந்த ஒப்பந்தத்தை நிறைவேற்றாவிட்டால், நம்மெல்லாருக்கும் வரக்கூடிய அபாயத்தை நினைத்துப் பாரம்மா" என்று சொல்லிவிட்டுப் போய்விட்டார்.

தந்தையின் நிலைமைக்காக மனம் எவ்வளவோ இரக்கப் பட்டாலும் ஜானகிக்கு முத்துவீரப்பனை மணந்துகொள்ளக் கூடாது என்ற மன உறுதி சிறிதும் தளரவில்லை. இந்த மாப்பிள்ளையை மணந்துகொள்ளப் பிரியமில்லையென்பதற்கான காரணங்களைச் சொல்லக்கூடாதபடி சத்தியம் செய்திருப்பதையும் மீறி, அவன் ஒழுக்கங்கெட்ட குடிகேடன் என்பதையும் பல பெண்களை வஞ்சித்துக் கெடுத்தவன் என்பதையும் மது பானப்பழக்கமுள்ளவன் என்பதையும் தன்னை ஒருநாள் வஞ்சகமாக அவனுடைய வீட்டுக்கு வரச்செய்து கெடுக்க முயன்றதையும் சொன்னாலும்கூடத் தன் தந்தைக்குள்ள பொருளாதாரச் சங்கடங்களால் இந்த ஒப்பந்தத்தைக் கைவிட முடியாத



நிலைமையில் தன் தந்தை சிக்கிக்கொண்டிருப்பதை ஜானகி உணர்ந்தாள்; தந்தை போன பின்னும் நெடுநேரம் அழுது கொண்டிருந்தாள்.

ஜானகியுடன் பேசிவிட்டுக் கீழே போன முருகேசனிடம் சுந்தரி, "ஜானகி சம்மதித்தாளா?" என்று கேட்டாள்.

"சொல்ல வேண்டியதெல்லாம் சொன்னேன். அநுதாபத்தோடு கேட்டாள். மறுப்பு ஒன்றும் சொல்லவில்லை. உடனே கசக்க வேண்டாம் என்று எண்ணி 'குடும்பத்துக்கு வந்திருக்கிற அபாயத்தை எண்ணிப் பார்த்து என் மானத்தைக் காப்பாற்றம்மா' என்று சொல்லிவிட்டு வந்திருக்கிறேன். அநேகமாக ஒத்துக்கொள்வாள் என்றுதான் நினைக்கிறேன்" என்றார் முருகேசன்.

கணவர் சொன்னது நம்பிக்கையூட்டுவதாக இருந்தாலும் சுந்தரிக்குத் திருப்தியளிக்கவில்லை.

முருகேசன் ஏதோ காரியமாக வெளியே போய்விட்டார். சிறிது நேரம் சென்று ஜானகியைப் பார்க்க அவளுடைய பள்ளித் தோழி கோமளம் வந்தாள். அவள் வந்த காரியம் ஜானகி வைத்தியக் கல்லூரியில் சேர அவளுடைய தந்தை சம்மதித்துவிட்டாரா என்பதை அறியத்தான். கோமளம் அடிக்கடி வரக்கூடியவள்; தான் வந்த காரியத்தைச் சுந்தரியிடம் சொல்லிவிட்டு ஜானகியைப் பார்க்க மாடிக்குப் போனாள்.

சுந்தரிக்குச் சிந்தனை உதித்தது. "கோமளம் வைத்தியக் கல்லூரி விஷயத்தைக் கேட்பாள். ஜானகி தன் கல்யாணத்தைப் பற்றிய பேச்சைப்பற்றிக் கோமளத்திடம் சொல்லாமல் இருக்க முடியாது. தன்னுடைய நிலைமையை மனமொத்த தோழிக்கு ஓரளவு உள்ளபடி சொல்லுவாள். அப்படி என்ன சொல்லுகிறாள் என்பதை அறிந்துகொள்வது நல்லது' என்ற ஆசை மேலிட்டுக் கோமளம் மேலே போன பின் ஓசைப்படாமல் சுந்தரியும் மாடிக்குச் சென்று எட்டிப் பார்த்தாள். ஜானகியின் அறைக்

கதவு தாழிடப்பட்டது போல் இறுக மூடப்பட்டிருந்தது. மெதுவாகச் சென்று கதவண்டை நின்று காது கொடுத்தாள்.

கோமளமும் ஜானகியும் பேசிக்கொண்டது முழுவதும் சுந்தரியின் காதுக்கு எட்டவில்லை. இடையிடையே வார்த்தைகள் விட்டுப் போனாலும் பேச்சின் சாராம்சம் விளங்கப் போதுமான வார்த்தைகள் காதில் விழுந்தன.

ஜானகி, தனக்குத் தெரியாமல் திருமணம் நிச்சயித்து விட்டார்கள் என்றும், இப்போது திருமணம் செய்துகொள்ளத் தனக்குத் துளிகூடப் பிரியமில்லை என்றும் தான் இதற்குச் சம்மதிக்கப் போவதில்லையென்றும் சொன்னாள்.

"பரிசம் கொடுத்து, நிச்சயதார்த்தச் சடங்குகள் நடத்தி, நீ சம்மதிக்காவிட்டால் விட்டுவிடுவார்களா? கட்டாயக் கல்யாணந்தான் நடக்கும்" என்றாள் கோமளம்.

இதைக் கேட்டதும் அதுவரையில் தாழ்ந்த குரலில் பேசிய ஜானகி வெகு ஆத்திரத்தோடு, "என்னைக் கட்டாயப்படுத்தினால் நான் இங்கே இருக்கவே மாட்டேன் ; எங்கேயாவது ஓடிப் போவேன்" என்று இரைந்துவிட்டாள்.

இதைக் கேட்ட சுந்தரி, தனக்குள்ளேயே 'ஓடுவேயம்மா ஓடுவே' என்று சொல்லிக்கொண்டாள்.

அதன் பிறகு அறைக்குள் பேச்சு நின்றுவிட்டது. கோமளம் நாற்காலியைத் தள்ளிக்கொண்டு எழுந்தாள். நாற்காலி நகர்ந்த ஓசையைக் கேட்டு, சுந்தரி உடனே அவ்விடத்தைவிட்டுக் கீழே போய்விட்டாள். அவள் எதை அறிய வேண்டுமென்று ஒட்டுக் கேட்டாளோ அதை அறிந்து கொண்டாள். கணவர் தன்னிடத்தில், 'ஜானகி அநேகமாகச் சம்மதிப்பாள் என்றுதான் நினைக்கிறேன்' என்று சொன்ன போதே அதைச் சந்தேகித்தவள் சுந்தரி. தந்தையிடம் மறுப்புக் காட்டாததால் அவள் சம்மதிப்பாளென்று அவர் தப்புக் கணக்குப் போடுகிறார் என்று நினைத்துத்தான் சுந்தரி ஒட்டுக் கேட்டது.



இப்போது ஜானகி சம்மதிக்க மாட்டாள் என்பதுமட்டு மன்றிக் கட்டாயப்படுத்தினால் வீட்டைவிட்டு ஓடிப் போகவும் துணிந்திருக்கிறாள் என்பது தெரிந்துவிட்டது. இனி உஷாராக இருந்து ஜானகி ஓடிவிட முடியாதபடி காவல் போடத் தீர்மானித்துவிட்டாள், சுந்தரி. அது மட்டுமன்றித் தான் ஒட்டுக் கேட்ட உண்மைகளைக் கணவரிடத்தில் சொன்னால் அவர் மகளை எப்படிக் கட்டாயப்படுத்துவது என்று குழப்பமடைந்து காரியங்களைச் செய்யத் தயங்குவார் என்று நினைத்து அவரிடம் சொல்லாமலேயே ஜானகிக்குக் காவல் போட்டுத் திருமணத்தை நடத்திவிட வேணடுமென்றும் தீர்மானித்துக் கொண்டாள் ; அதற்காக இரவில் வீட்டின் தலைவாசற் கதவைப் பூட்டி வைக்கவும் திட்டமிட்டாள்.

சிறிது நேரத்தில் வெளியே சென்றிருந்த முருகேசன் வீட்டுக்கு வந்து சுந்தரியை அணுகி ரகசியம்போல, "ஜானகி கீழே வந்தாளா? ஏதாவது சொன்னாளா?" என்று கேட்டார்.

"இதென்ன இப்படிக் கேட்கிறீர்கள்? நீங்கள்தான் அவளுக்குச் சொல்ல வேண்டியதையெல்லாம் சொல்லி, அவளும் அனுதாபத்தோடு கேட்டு உங்களுக்கு மறுப்புச் சொல்லாமல் இருக்கிறாளே. அதுவே சம்மதத்துக்கு அடையாளந்தான். வயது வந்த பெண், அவளாகவே ஓடிவந்து, எனக்குச் சம்மதம், சம்மதம்' என்று தமுக்கடிப்பாளா என்ன? நீங்கள் மறுபடியும் போய் அவளை எதுவும் கேட்டுக் குழப்பிவிட வேண்டாம். பேசாமல் முகூர்த்தத்துக்கான காரியங்களைக் கவனியுங்கள். எல்லாம் தானாகச் சரியாகிவிடும்" என்றாள் சுந்தரி.

முருகேசன், தான் எதிர்பார்த்தபடியே மகள் சம்மதித்து விட்டது போலவே மயங்கி மகிழ்ச்சியடைந்தார், சுந்தரியின் இந்தச் சாமர்த்தியமான பேச்சினால். அதனால் அவர் மறுபடியும் போய் மகளுடைய சம்மதத்தைக் கேட்க வேண்டுமென்ற நினைப்பேயில்லாமல் காரியங்களைக் கவனிக்கலானார். அதன் பின் அவர் வீட்டில் தங்கக்கூட நேரமில்லாமல் முத்து வீரப்பனுடனேயே இருந்துகொண்டு திருமணக் கொட்டகை

நிர்மாணிப்பதிலும் விருந்துக்காகப் பொருள்களைச் சேகரிப்பதிலுமே கவனமாக இருக்க நேர்ந்துவிட்டது.

தகப்பனார் மறுபடியும் தன்னைக் கேட்க வருவார்; வந்தால் திருமணம் செய்துகொள்ளப் பிரியமில்லை என்பதைச் சொல்லிவிட வேண்டுமென்று காத்திருந்த ஜானகியால் அவரைக் காண முடியவில்லை.

இதன் மத்தியில் சுந்தரி, தானாகவே முத்துவீரப்பன் வீட்டு வேலைக்காரிகளில் திடமான இரண்டு பெண்களைக் கல்யாண காரியங்களில் தனக்கு உதவியாக இருக்கவென்று வரவழைத்து, அவர்களுக்குப் பணம் கொடுத்து இனிமையாகப் பேசி நல்ல சாப்பாடு போட்டு, "கல்யாணப்பெண் தாலி கட்டுகிறவரைக்கும் வீட்டைவிட்டு வெளியே போகக்கூடாது என்பது உங்களுக்கும் தெரியுமல்லவா? எங்கள் ஜானகி படித்த பெண்; அடிக்கடி வெளியே போய்வரப் பழகியவள். அதனால் கல்யாணப்பெண் வெளியே போகக்கூடாது என்பதை மறந்து வெளியே போக ஆசைப்படுவாள். நீங்கள் இரண்டு பேரும் வேறு எந்த வேலையும் செய்ய வேண்டாம். எங்கள் ஜானகி தாலி கட்டுகிற வரைக்கும் இந்த வீட்டு வாசற்படியைத் தாண்டி எங்கும் போகாதபடி வெகு ஜாக்கிரதையாகப் பார்த்துக்கொள்ள வேண்டும், தெரியுமா? கல்யாணம் ஆனதும் உங்களுக்கு நிறைய பணமும் புடைவைகளும் தருகிறேன். இதை யாரிடமும் சொல்லிவிடகூடாது" என்று சொல்லி உடனே அவர்களுக்குத் தலா பத்து ரூபாய் பரிசளித்தாள். அந்த ஏழைப் பெண்கள் வெகு சந்தோஷத்துடன் அந்த வேலையை ஒப்புக்கொண்டார்கள்.

இரண்டு நாளாக விசனப்பட்டுக்கொண்டே வீட்டில் இருந்துவிட்டதனால் ஜானகி தன் ஆருயிர்த் தோழியாகிய பக்கத்து வீட்டுப் பாத்திமாவைப் பார்க்கவில்லை. மூன்றாவது நாள் காலை ஆகாரத்துக்குப் பின் பாத்திமா வீட்டுக்குப் போய் வர ஆசைப்பட்டாள். பாத்திமா வந்தால் இரவில்தான் ஜானகியைப் பார்க்க வருவது வழக்கம். ஏனென்றால், அவள் கோஷாப் பெண். பகலில் ஜானகிதான் பாத்திமா வீட்டுக்குப்



போவது வழக்கம். அந்த வழக்கத்தின்படி ஜானகி பாத்திமா வீட்டுக்குப் போக வீதி வாசற்படியைக் கடந்து நாலெட்டுப் போகும் முன் அந்தக் காவற்காரக் கூலிகளில் ஒருத்தி ஜானகிக்கு முன்னால் வந்து, "எங்கேம்மா போறிங்க?" என்றாள்.

"ஏன்? நான் எங்கே போனால் உனக்கென்ன?" என்றாள் ஜானகி.

"இல்லேம்மா, கோவிச்சுக்காதிங்க. கண்ணாலப் பொண்ணு நீங்க. தாலி கட்றவரைக்கும் வெளியே எங்கேயும் போகக் கூடாதம்மா. ஊட்டுக்குள்ள போங்க" என்றாள் காவற்காரி.

"அட, சீ! ரொம்பக் கல்யாணப் பொண்ணைக் கண்டவள். நீ யார் எனக்குப் புத்தி சொல்ல? போ வழியை விட்டு" என்று வெகு கோபத்துடன் சீறினாள், ஜானகி.

உடனே மற்றொரு காவல் கூலியும் ஜானகிக்கு முன்னால் வந்து வழி மறிப்பது போல் நின்றுகொண்டு, "அம்மா, நீங்க படிச்ச பொண்ணு. தாலி கட்றவரைக்கும் கண்ணாலப் பொண்ணு வெளியே போகப்படாதுங்கற வளக்கத்தை மதிக்க மாட்டீங்கண்ணுதான் எங்களைக் காவல் போட்டிருக்குறாங்க. நாங்க என்னம்மா பண்ணுவோம்? நீங்க வெளியே போகக் கூடாது" என்றாள்.

"அது யார் அது, என்மேல் உங்களைக் காவல் போட்டது!" என்று வியப்புடன் கேட்டாள் ஜானகி.

"அதெல்லாம் நாங்க சொல்லக்கூடாதம்மா. நீங்க வெளியே போகாமே பாத்துக்க வேண்டியது எங்க சோலி" என்றாள் காவற்காரி.

புத்திக்கூர்மையுள்ள ஜானகிக்குப் புரிந்துவிட்டது. 'தனக்குக் கட்டாயக் கல்யாணம் செய்யப் போகிறார்கள் என்பதும், தான் எங்கும் ஓடிப் போகாதபடி காவல் போட்டிருக்கிறார்கள் என்பதும் விளங்கிவிட்டது. இது சித்தி செய்த ஏற்பாடா அல்லது தந்தையும்சேர்ந்து செய்ததா என்று தெரிய

வில்லை. யார் செய்ததாக இருந்தாலும் இப்போது இந்தக் காவற்காரிகளை மீறிக்கொண்டு போனால் பலாத்காரமாகத் தடுத்தாலும் தடுப்பார்கள். இவர்கள் கிராமப் பெண்கள். கூலிக்காகத் தாங்கள் ஒப்புக்கொண்டிருக்கும் வேலையைச் செய்யத் தயங்க மாட்டார்கள்' என்றெல்லாம் உய்த்துணர்ந்து புன்சிரிப்போடு அவர்களைப் பார்த்து, "ஆமாம், நீங்கள் சொல் வதும் நியாயந்தான். கல்யாணம் செய்துகொள்வதாக இருந் தால் அந்தப் பெண் வெளியே போகக்கூடாதுதான். நான் எங்கும் வெகுதூரம் போக மாட்டேன். நீங்களும் என்னோடு அடுத்த வீட்டு வரையிலும் எனக்குக் காவலாகவே வாருங்கள். அந்த வீட்டுப்பெண்ணிடம் என் புத்தகம் இருக்கிறது. அதை வாங்கிக்கொண்டு உங்களோடேயே வந்துவிடுகிறேன். இந்தச் சிறு உதவிகூட நீங்கள் செய்யக்கூடாதா? புத்தகத்தை வாங்கிக் கொண்டு வந்தவுடன் உங்களிருவருக்கும் பத்து ரூபாய் பரிசு கொடுக்கிறேன்" என்றாள்.

பக்கத்து வீட்டுக்குத்தான் என்றதோடு பத்து ரூபாய் பரிசும் வருகிறது என்றதால் கூலிப் பெண்கள் சம்மதித்துவிட்டார்கள்.

## அத்தியாயம் 28

காவற்பெண்களை வெளியே இருக்கச் சொல்லிவிட்டு ஜானகி பாத்திமா வீட்டுக்குள் போனாள். பாத்திமாவும் அவளுடைய அன்னையும் கூடத்தில் இருந்தார்கள். வழக்கத் துக்கும் அதிகமான குதூகலத்துடன் பாத்திமா தாவி வந்து ஜானகியைக் கட்டித் தழுவி வரவேற்றாள். அவளுடைய தாயாரும் அப்படியே அசாதாரண மகிழ்ச்சியுடன் வரவேற்று, 'ஜானகி! உனக்குக் கல்யாணம் என்று கேள்விப்பட்டோம். எங்களுக்கு ரொம்ப சந்தோஷம்" என்றாள்.

ஜானகிக்கு முகம் சுருங்கிவிட்டது. ஆனாலும் தன் கவலையைக் காட்டிக்கொள்ளாமல், "எனக்குக் கல்யாணம் நடக்கிற



காலத்தில் நீங்கள் ரொம்பச் சந்தோஷப்படுவீர்கள் என்பது எனக்குத் தெரியாதா? இந்தக் கலியாணப் பேச்சினால் இரண்டு நாளாக இங்கே வர முடியவில்லை. அந்த ஏக்கம் தீரப் பாத்திமாவோடும் உங்களோடும் சல்லாபிக்கத்தான் இன்று இவ்வளவு சீக்கிரம் வந்தேன்" என்று சொல்லிவிட்டுப் பாத்திமாவின் கையைப் பிடித்துக்கொண்டு, "வா பாத்திமா, நாம் உன் அறைக்குச் சென்று கொஞ்ச நேரம் பேசிக்கொண்டிருக்கலாம்" என்று அவளைக் கூட்டிக்கொண்டு இருவரும் மாடியிலுள்ள பாத்திமாவின் அறைக்குப் போனார்கள்.

அறைக்குள் போய் அமர்ந்தபின் ஜானகி, தாழ்ந்த குரலில், "பாத்திமா! இங்கே யாரும் இப்போது வரமாட்டார்களே?" என்று கேட்டாள்.

"ஏன்?" என்றாள் பாத்திமா.

"உன்னோடு மிகவும் இரகசியமாகப் பேச வேணும்."

"அப்படியா? மாடிக்கு வரும் படிக்கட்டுகளின் கதவையே தாழிட்டுவிட்டு வந்து இந்த அறைக்கதவையும் தாழிட்டுக் கொள்ளலாம்" என்று பாத்திமா எழுந்து போய் மாடிக்கு வரும் வழிக்கதவைத் தாழிட்டு வந்து, அறைக்கதவையும் மூடித் தாழிட்டுவிட்டு ஜானகியின் அருகில் அமர்ந்து, "சொல்லு, என்ன இரகசியம்?" என்றாள்.

பேச வாயெடுத்த ஜானகிக்குத் துக்கம் தொண்டையை அடைத்துக்கொண்டது. கண்களில் நீர் சுரந்துவிட்டது. வார்த்தை வராமல் உதடுகள் படபடத்தன. அதைக் கண்ட பாத்திமா திடுக்கிட்டு, "ஐயோ! என்ன ஜானகி! ஏன் அழுகிறாய்?" என்று ஜானகியின் கைகளைப் பிடித்துக்கொண்டு தன்னுடைய மேலாக்கினால் அவள் கண்ணீரைத் துடைத்தாள்.

சிறிது நேரத்தில் சுதாரித்துக்கொண்டே ஜானகி, "பாத்திமா, எனக்கு வந்திருக்கிற அபாயத்தை என்னவென்று சொல்லுவேன்? அதை உன்னிடத்தில் மட்டும் சொல்லிப்

பரிகாரம் உண்டா என்று கலந்து ஆலோசிக்கத்தான் வந்திருக்கிறேன்......." என்றாள்.

"அபாயமா! உனக்கா! என்ன அபாயம்? சொல்லு; அதை விலக்க என்னாலான எதையும் செய்கிறேன்; சொல்லு" என்று பதறினாள் பாத்திமா.

"என்னிடம் ஒரு வார்த்தைகூடச் சொல்லாமல், எனக்குத் தெரியாமல் என் தந்தையும் சித்தியும் எனக்குத் திருமணம் நிச்சயித்து முகூர்த்தமும் வைத்துவிட்டார்கள். இப்போது கல்யாணம் பண்ணிக்கொள்ள எனக்குத் துளிகூடப் பிரியமில்லை. அதுதான் போகட்டுமென்றால் அவர்கள் நிச்சயித்திருக்கிற மாப்பிள்ளை விரும்பததகாத பேர்வழி,"

"ஏன் ?"

"அந்த ஆசாமி மிகவும் ஒழுக்கம் கெட்ட குடிகேடன்; பல பெண்களை வஞ்சித்துக் கெடுத்தவன்; மறுபானப் பழக்கமுள்ளவன்."

"அப்படியா ? யார் அந்த ஆசாமி ? எந்த ஊர் ?" என்றாள் பாத்திமா.

"எந்த ஊருமல்ல, இதே ஊர்தான். அடுத்த தெருதான், தபாலாபீசுக்கு எதிரிலுள்ள மாடி வீடுதான்."

"இந்த ஊரா! அடுத்த தெருவில் தபாலாபீசுக்கு எதிரிலுள்ள மாடி வீட்டுக்காரரா! பேர் என்ன ?"

"பெயரா ? முத்துவீரப்பன்."

"முத்துவீரப்பனா! அடடா! போயும் போயும் அவனையா தேடிப் பிடித்தார்கள் உன் அப்பாவும் சித்தியும்? அவன் விரும்பத்தகாதவன் மட்டுமல்ல, வெறுக்கத் தக்கவன்" என்றாள் பாத்திமா.

"பாத்திமா! உனக்கு முத்துவீரப்பனைத் தெரியுமா?" என்று வியப்புடன் கேட்டாள், ஜானகி.



"எனக்கு அவனை நேரில் தெரியாது. அவன் எங்களுடைய குமாஸ்தா ராமையாவின் மகளைக் கையைப் பிடித்து இழுத்தான் என்று அவன்மேல் கேஸ் நடத்த ஏற்பாடு நடந்தது. அப்போது அவனுக்காக யாரோ சிபார்சு பேசி என் தந்தை மத்யஸ்தம் செய்து எங்கள் குமாஸ்தாவுக்கு அந்த முத்துவீரப்பன் ஐயாயிரம் ரூபாய் கொடுக்கச் செய்து வழக்கைத் தீர்த்து வைத்தார். இல்லாவிட்டால் அவன் ஜெயிலுக்குப் போயிருக்க வேணும். இந்தப் பேச்சு, பத்து நாள் எங்கள் வீட்டில் நடந்தது. அதனால் அடுத்த தெருவில் தபாலாபீசுக்கு எதிரிலிருக்கும் மாடி வீட்டைப்பற்றியும், அதன் சொந்தக்காரன் முத்துவீரப்பன் என்பதைப்பற்றியும் இங்கே அடிபட்ட பேச்சுகளிலிருந்து நான் அறிந்துகொண்டதுதான்" என்றாள் பாத்திமா.

"பாத்திமா! உனக்கு முத்துவீரப்பனைப்பற்றித் தெரிந்திருக்குமென்று நான் கனவிலும் கருதவில்லை. நீயும் அறிந்திருப்பது நல்லதாய்ப் போச்சு. மேலே சொல்லுகிறேன் கேள். என் தாயார், பாட்டி, மாமா, அத்தை முதலானவர்கள் இல்லாத சமயத்தில் நான் யாரையும் கல்யாணம் பண்ணிக்கொள்ள மாட்டேன். அவர்கள் வருகிறவரைக்கும் நான் டாக்டர் வேலைக்கு எம். பி. பி. எஸ். பட்டப் படிப்புக்கு மெடிகல் காலேஜில் சேர ஆசைப்படுகிறேன் என்று என் சித்தியிடம் சொன்னேன். என் சித்தி, 'நீ சம்மதித்தாலும் சரி, சம்மதிக்காவிட்டாலும் சரி, இந்தக் கல்யாணம் நடந்தே தீரும்' என்று சொன்னாள். கட்டாயப்படுத்தினால் வீட்டைவிட்டு எங்கே யாவது ஓடிப் போகலாமென்று தீர்மானித்திருந்தேன். அதை எதிர்பார்த்தோ என்னவோ இப்போது நான் வீட்டைவிட்டு வெளியே போகாதபடி என்மீது காவல் போட்டிருக்கிறார்கள். இப்போதுகூட எனக்குக் காவலாக இரண்டு கூலிப்பெண்கள் இந்த வீட்டின் வாசலணடை காத்துக்கொண்டிருக்கிறார்கள். எப்படியாவது நான் இந்தக் காவலையும் கடந்து எங்காவது போய்விட ஒரு வழி சொல்லு" என்றாள் ஜானகி.

ஜானகிக்கு வரும் இன்பதுன்பங்களைத் தனக்கு வந்த தாகவே பாவிக்கும் மெய்யன்புடைய பாத்திமா, ஜானகி இந்த இக்கட்டிலிருந்து தப்ப என்ன வழியென்று ஆலோசிக்கத் தொடங்கினாள். அந்தச் சமயத்தில் மாடிக்கு வரும் படிக்கட்டுக் கதவைப் பலமாகத் தட்டுகிற ஓசை கேட்டது. பாத்திமா அறைக் கதவைத் திறந்துகொண்டு போய் அந்தக் கதவைத் திறந்தாள். அங்கே பாத்திமாவின் தாயாரும் ஜானகியின் சித்தியும் நின்று கொண்டிருந்தார்கள்.

ஜானகி வீட்டைவிட்டு வந்தபோது சுந்தரி சமையலறையில் இருந்தாள். சற்று நேரம் சென்று வீதி வாசற்பக்கம் வந்த போது காவற்காரிகள் அங்கில்லை. உடனே மாடிக்கு ஓடி னாள். அங்கே ஜானகியும் இல்லை. ஜானகி ஓடிவிட்டாளோ என்ற அச்சம் வந்துவிட்டது. அங்குமிங்கும் தேடிவிட்டுப் பாத்திமா வீட்டு நினைப்பு வந்து அங்கே வந்தாள். காவற்காரப் பெண்கள் இரண்டு பேரும் பாத்திமா வீட்டு வெளி வாசலுக் கருகில் உட்கார்ந்திருப்பதைக் கண்டு அவர்களை விசாரித்தாள். அவர்கள், ஜானகி ஏதோ புத்தகம் வாங்கிக்கொண்டு வர உள்ளே போயிருப்பதாகவும் அவளைக் கூட்டிக்கொண்டு வரத் தாம் காத்திருப்பதாகவும் சொன்னார்கள்.

"கல்யாணப்பெண் வீட்டு வாசலைத் தாண்டி எங்கும் போகாமல் பார்த்துக்கொள்ளும்படி உங்களுக்குச் சொல்லியிருந் தும் இங்கே வர விட்டுவிட்டீர்களே, உங்களை நம்பினது தண்டந்தான்" என்று அவர்களைக் கடிந்துவிட்டு வீட்டுக்குள் வந்து பாத்திமாவின் தாயாரிடம், மணப்பெண்ணுக்கு ஏதோ சடங்கு செய்ய அவளைக் கூட்டிக்கொண்டுபோக வந்ததாகச் சொன்னாள். அதனால்தான் பாத்திமாவின் தாயாரும் சுந்தரி யும் வந்து கதவை அப்படித் தட்டினது.

பாத்திமா கதவைத் திறந்ததும் சுந்தரி, "ஜானகி இங்கே என்ன செய்கிறாள்?" என்றாள்.

"ஒன்றுமில்லை. வழக்கம் போல் பேசிக்கொண்டிருந் தோம்" என்றாள் பாத்திமா.



உடனே சுந்தரி பாத்திமாவைக் கையைப் பிடித்துக் கீழே கூட்டிக்கொண்டு போய் இரகசியமாக, "ஜானகி அவளுடைய கல்யாணத்தைப்பற்றி உன்னிடம் சொல்லியிருப்பாளே; என்ன சொன்னாள்?" என்றாள்.

"ஜானகி வெகுநேரம் வரையிலும் வைத்தியக் கல்லூரி யில் சேர்ந்து எம். பி. பி. எஸ். படிக்க வேண்டுமென்ற ஆசையைப்பற்றிச் சொல்லிக்கொண்டிருந்தாள். அந்த ஆசையை அழிக்கும்படி அவளுக்கு உடனே கல்யாணம் செய்துவிட நீங்கள் நிச்சயம் செய்திருப்பதாகச் சொல்லிக் கல்யாணப் பேச்சை ஆரம்பித்தாள். அதற்குள் நீங்கள் தடதட வென்று கதவைத் தட்டினீர்கள்" என்று வெகு சாதுரியமாகச் சொன்னாள், பாத்திமா.

"பாத்திமா! நீதான் அவளுக்குப் புத்தி சொல்ல வேணும். நீ சொன்னால்தான் அவள் கேட்பாள். இப்போது கல்யாணம் செய்துகொள்ள மாட்டேன் என்று பிடிவாதம் செய்துகொண் டிருக்கிறாள். இந்தக் கல்யாணம் நடக்காமற்போனால் எங்கள் மானமே போய்விடும். அது மட்டுமல்ல, எங்கள் குடும்ப வாழ்வே நாசமாகிவிடும். மேலும், அவள் கல்யாணம் செய்துகொள்ள விரும்புகிற காலத்தில் இப்படிச் செல்வமும் அழகும் சேர்ந்த மாப்பிள்ளை கிடைக்காது. பாத்திமா! இந்தச் சமயத்தில் நீதான் எங்களுக்கு உதவி செய்ய வேணும். உன்னை ரொம்பக் கெஞ்சிக் கேட்டுக்கொள்ளுகிறேன். நீ சொல்லியும் அவள் கேட்கா விட்டால் பிறகு கட்டாயத் தாலிதான் கட்ட நேரிடும். அப்படி நேராதபடி நீதான் அவளுக்குச் சொல்லவேண்டியதைச் சொல்லிச் சம்மதிக்கச் செய்ய வேணும்" என்றாள் சுந்தரி.

"ஆகட்டும். நான் ஜானகிக்குச் சொல்ல வேண்டியதைச் சொல்லிச் சம்மதிக்கச் செய்கிறேன். ஆனால், இப்போது வேண்டாம். சாயந்திரம் இருட்டியபின் உங்கள் வீட்டுக்கு வரு கிறேன். அதற்குள் அவளுக்கு என்ன சொல்வது, எப்படிச் சொன்னால் நல்லது என்பதையெல்லாம் ஆலோசித்துத் தயார் செய்துகொள்ளுகிறேன்" என்றாள் பாத்திமா.

சுந்தரிக்குச் சந்தோஷம் பொங்கிவிட்டது. பாத்திமாவைக் கட்டித் தழுவி, "நீதான் சமய சஞ்சீவி" என்று புகழ்ந்துவிட்டு ஜானகியைக் கூப்பிடச் சொன்னாள். பாத்திமா மாடிப் படிகளில் பாதித் தூரம் ஏறி அங்கே நின்றபடியே ஜானகியைக் கூவி அழைத்தாள். அதுவரையிலும் அறைக்குள்ளேயே இருந்த ஜானகி இறங்கி வந்தாள். கீழே வந்தபின் பாத்திமா, "ஜானகி! நான் சாயந்திரம் உங்கள் வீட்டுக்கு வருகிறேன். அப்போது பேசிக்கொள்ளலாம் உன் கல்யாணத்தைப்பற்றி" என்றாள்.

ஜானகி பதில் சொல்லவில்லை; பேசாமல் தன் வீட்டுக்குப் போக வெளியே போனாள். சுந்தரி பின்தொடர்ந்தாள். காவற் பெண்களும் கூடவே போனார்கள்.

சொல்லியிருந்தபடியே அன்று இரவு எட்டு மணிக்குப் பாத்திமா ஜானகியின் வீட்டுக்கு வந்தாள். அவளுடைய வரவை வெகு ஆவலோடு எதிர்பார்த்துக்கொண்டிருந்த சுந்தரி அவளைத் தழுவி வரவேற்று, மீண்டும் ஒருமுறை இந்தக் கல்யாணம் நடக்காவிட்டால் குடும்பத்துக்கு வரக்கூடிய மகத்தான துன்பங்களைப்பற்றி விரிவாகச் சொல்லி, எப்படியாவது ஜானகியைச் சம்மதிக்கும்படி செய்ய வேண்டுமென்று கெஞ்சிக் கேட்டுக்கொண்டாள்.

பாத்திமா ஜானகியைப் பார்க்க மாடியறைக்குப் போகப் படியேறினாள். அவள் படிகளின் உச்சிக்குப் போனபின் முன் போல் ஒட்டுக்கேட்க எண்ணிச் சுந்தரியும் படியேறினாள்.

பாத்திமா அசாதாரணமான புத்திக்கூர்மையுள்ளவள். தான் ஜானகிக்குச் சொல்லப்போகிற யோசனையை வாயால் சொல்லிக்கொண்டிருக்கும்போது யாரேனும் ஒட்டுக் கேட்டுவிட நேரலாம் என்று அஞ்சியே, தான் ஜானகிக்குச் சொல்ல வேண்டியதை ஒரு காகிதத்தில் எழுதிக் கொண்டுவந்திருந்தாள். அதனால் ஜானகியின் சித்தி ஒட்டுக்கேட்கப் பின்னால் வருகிறாளா என்பதைக் கவனித்துக்கொண்டே படியேறிய பாத்திமா, சுந்தரி படியேறியதை அறிந்துகொண்டாள். ஆனா



லும் அதை அறியாதவள் போலவே போய் ஜானகியின் அறைக்குள் புகுந்து கதவை மூடித் தாழிட்டாள்.

பாத்திமாவின் வரவை ஆவலோடு எதிர்பார்த்துக்கொண்டிருந்த ஜானகி அவளைக் கண்டு மகிழ்ச்சியுடன் வரவேற்றாள்.

"என்ன ஜானகி! கல்யாணப்பெண் சந்தோஷமாக இருப்பதைவிட்டு இப்படி விசனம் பிடித்த மாதிரி உட்கார்ந்திருக்கிறாயே?" என்று உரக்கச் சொல்லிக்கொண்டே கண்ணாலும் கையாலும் ஜாடை காட்டிக் கதவுக்கு வெளியில் சுந்தரி ஒட்டுக்கேட்க வந்திருப்பதை அறியச் செய்துவிட்டுத் தான் எழுதிக் கொண்டுவந்திருந்த ஒரு கடிதத்தை ஜானகியிடம் கொடுத்தாள், பாத்திமா.

ஜானகி கடிதத்தைப் படித்துக்கொண்டிருக்க, பாத்திமா, "ஜானகி! நீ இந்தக் கல்யாணத்துக்குச் சம்மதிக்கத்தான் வேண்டும்" என்று ஆரம்பித்து அதற்கான காரணங்களைச் சுந்தரி சொல்லியிருந்தபடி பலத்த குரலில் வெகு அழுத்தம் திருத்தமாகச் சொல்லிக்கொண்டேயிருந்தாள்.

கடிதத்தைப் படித்துவிட்டு ஜானகி மகிழ்ச்சியால் மலர்ந்த முகத்துடன் புன்சிரிப்போடு பாத்திமாவைப் பார்த்துக் கை கூப்பினாள்.

அந்தக் கடிதத்தில், "நீ கல்யாணத்துக்கு மறுப்புச் சொல்லிக்கொண்டிருக்கிற வரையிலும் நீ காவலை மீறி ஓடிவிட முடியாது. காவல் மேலும் பலப்படும். உன்னை அமுக்கிப் பிடித்துக்கொண்டு கட்டாயத் தாலி கட்டிவிடுவார்கள். அதனால் நான் சொல்லி நீ ஒப்புக்கொண்டதுபோல் கல்யாணத்துக்குச் சம்மதம் சொல்லிவிடு. உடனே காவல் நீங்கிவிடும். இன்னும் முகூர்த்தத்துக்கு ஏழு நாள்களிருக்கின்றன. இந்த ஏழு நாள்களுக்குள் எல்லாருக்கும் உன்மேலிருந்த சந்தேகம் போய்விடும். முகூர்த்தத்துக்கு முன் நீ யாருக்கும் தெரியாதபடி வீட்டைவிட்டு மறைந்துவிட ஒரு மிக நல்ல வழி கண்டுபிடித்திருக்கிறேன். அதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்து

கொண்டு அந்த வழியை நாளை அல்லது மறுநாள் சொல்லு கிறேன். சந்தேகமே வேண்டாம். அந்த வழி நிச்சயம் வெற்றி பெறும்'' என்று எழுதப்பட்டிருந்தது.

அந்தக் கடிதத்தை ஜானகி படித்துவிட்டுப் புன்சிரிப்பு காட்டுகிறவரைக்கும் பாத்திமா, ஜானகி கல்யாணத்துக்குச் சம்மதிக்கத்தான் வேண்டும் என்பதற்கான நியாயங்களைச் சுந்தரியின் காதில் விழும்படி ஓயாமல் சொல்லிக்கொண்டே யிருந்தாள்.

கடிதத்தைத் திருப்பி வாங்கிச் சட்டைக்குள் மறைத்துக் கொண்டு, பாத்திமா, "ஜானகி! என்ன, நான் பாட்டுக்குச் சொல்லிக்கொண்டேயிருக்கிறேன், நீ பதிலே பேசாமல் இருக் கிறாயே! நீ சம்மதித்துத்தான் ஆக வேண்டும் .இல்லாவிட்டால், உங்கள் குடும்பத்துக்கும் உனக்கும் பல சங்கடங்கள் வருவது நிச்சயம். என் பேச்சை நீ தட்டமாட்டாய் என்றுதான் நம்பி யிருக்கிறேன்'' என்றாள்.

ஜானகி தனக்குள் சிரித்துக்கொண்டே மௌனமாகப் பாத்திமாவின் சாமர்த்தியத்தை வியந்துகொண்டிருந்தாள்.

"என்ன ஜானகி! நான் சொன்னபடி நீ சம்மதிக்கிறாயா மாட்டாயா, இரண்டில் ஒன்று சொல்லிவிடு'' என்று இரைந் தாள் பாத்திமா.

ஜானகி, "சரி'' என்று முணகினாள்.

"அப்படி முணகினால் போதாது. 'சம்மதிக்கிறேன்' என்று வாய்விட்டுச் சொல்ல வேண்டும்'' என்றாள் பாத்திமா.

"சம்மதிக்கிறேன்'' என்று உரக்கச் சொன்னாள் ஜானகி.

"ரொம்பச் சந்தோஷம். நீ சம்மதித்துவிட்டாய் என்பதை உன் சித்தியிடம் சொல்லிவிடலாமல்லவா?''

"சொல்லிவிடு.''

"சரி; சலாம். நான் போய் வருகிறேன்'' என்று பாத்திமா உரக்கச் சொல்லிக்கொண்டு எழுந்தாள்.



எல்லாவற்றையும் ஒட்டுக் கேட்டுக்கொண்டிருந்த சுந்த ரிக்குப் பூரிப்பு நிலைகொள்ள முடியவில்லை. அறைக்கதவைத் திறக்குமுன் வேகமாய்க் கீழே போய்விட்டாள்.

பாத்திமாவின் வரவை எதிர்பார்த்துப் படிக்கட்டின் பக்கத்திலேயே நின்றுகொண்டிருந்த சுந்தரி, பாத்திமா இறங்கி வந்தவுடன் ஒன்றும் அறியாதவள்போல், "ஜானகி என்ன சொன்னாள்?'' என்று கேட்டாள்.

"நான் சொல்லி ஜானகி சம்மதிக்காமற்போவாளா? அவள் சம்மதித்துவிட்டாள். கவலையில்லாமல் கல்யாண காரியங்களைக் கவனியுங்கள்'' என்றாள் பாத்திமா.

சுந்தரி மீண்டும் அவளைக் கட்டித் தழுவி, "பாத்திமா! எங்கள் வயிற்றில் பால் வார்த்தாய். உனக்கு நாங்கள் எவ்வளவு நன்றி செலுத்தினாலும் போதாது. உன்னைக் கையெடுத்துக் கும்பிட வேணும்'' என்றாள்.

"அப்படியெல்லாம் சொல்லாதீர்கள். நான் அப்படிப் பிரமாதமாக என்ன செய்துவிட்டேன்? என் ஆருயிர்த் தோழி ஜானகி நல்ல இடத்தில் வாழ்க்கைப்பட வேணும் என்பதற் காகத்தானே அவளுக்குச் சொல்ல வேண்டியதைச் சொன் னேன்'' என்று சொல்லிவிட்டுப் போய்விட்டாள் பாத்திமா.

சுந்தரி மாடிக்குப் போய் ஜானகியைச் சாப்பாட்டுக்கு அழைத்தாள். ஜானகி உடனே எழுந்து சென்று சித்தியுடன் சுமுகமாகப் பேசிகொண்டே சாப்பிட்டுவிட்டு மாடிக்குப் போய்ப் படுத்துக்கொண்டாள்.

மறுநாள் அதிகாலையில் சுந்தரியே மாடிக்குச் சென்று ஜானகியை அழைத்து வந்து நீராடச் செய்து சடை பின்னிப் பூச்சூட்டி, முத்துவீரப்பன் கொடுத்த பரிசப் புடைவையை உடுத்திக்கொள்ளச் செய்து பரிசமாகத் தந்த வைர ஆபரணங் களை அணிவித்து அலங்கரித்து, "அடி என் கண்ணே! உன் அழகைப் பார்க்க ஆயிரம் கண்கள் இருந்தாலும் போதாது'' என்று கொஞ்சிக்கொண்டிருந்தாள்.

முன்தினம் மாலையிலேயே முத்துவீரப்பன் வீட்டுக்குப் போய்த் திருமணத் திட்டங்களைப் பேசிக்கொண்டிருந்து இரவும் அங்கேயே தங்கிவிட்டு விடிந்ததும் அங்கேயே காலை ஆகாரம் சாப்பிட்டுவிட்டுப் பத்து மணிக்குமேல் வீட்டுக்கு வந்த முருகேசன், மகள் மணப்பெண்ணாகவே அலங்கரிக்கப்பட்டு அழகு சொட்ட நிற்பதைக் கண்டு ஆனந்தப் பரவசமடைந்தார்.

அடுத்த காரியமாகச் சுந்தரி, அவள் நியமித்திருந்த காவற் பெண்களைக் கூப்பிட்டு, அவர்களுக்குச் சன்மானம் கொடுத்து இனிமேல் காவல் வேண்டியதில்லை என்று சொல்லி அவர்களை அனுப்பிவிட்டாள்.

அடுத்த ஆறு நாள்களும் எல்லாரும் வெகு குதூகலத்துடன் கல்யாண வேலைகளில் ஈடுபட்டிருந்தார்கள். இடையிடையே இரண்டு முறை பாத்திமா இரவில் வந்து ஜானகியைப் பார்த்து விட்டுப் போனாள்.

திருமண முகூர்த்தத்துக்கு முந்தின இரவில் ஜானகியைப் பார்க்கப் பாத்திமா வந்தாள். அப்போது சுந்தரி ஜானகியைச் சீராட்டிக்கொண்டிருந்தாள். பாத்திமாவைக் கண்ட ஜானகி துள்ளிச் சென்று அவளைத் தழுவிக்கொண்டாள். புருதாவி லிருந்த பாத்திமாவை ஜானகியின் தந்தை முருகேசனும் மகிழ்ச்சியுடன் வரவேற்றுப் பாத்திமாவை விருந்துண்ண அழைத்தார். பாத்திமா சாப்பிட்டாகிவிட்டது என்று சொன்னாள். 'மாடிக்குப் போங்கள்; சிற்றுண்டியும் பாலும் அனுப்புகிறேன்' என்றார். ஜானகி பாத்திமாவை அழைத்துக்கொண்டு மாடி அறைக்குப் போனாள். அங்கே முருகேசன் அனுப்பிய சிற்றுண்டியைச் சுவைத்துக்கொண்டு பாத்திமா ஜானகியுடன் பேசிக்கொண்டிருந்தாள். வெகு நேரம் பேசிக்கொண்டிருந்துவிட்டுப் பாத்திமா கீழே வந்து சுந்தரியிடம் சொல்லிக்கொண்டு போய்விட்டாள்.

விடியற்காலையில் மணப்பெண் ஜானகியை மங்கல நீராட்ட அழைத்துப் போகச் சில சுமங்கலிப் பெண்கள் ஜானகியின் மாடி அறைக்குப் போனார்கள். அங்கே ஜானகி



யைக் காணவில்லை. மேஜையின்மேல் ஜானகி உடுத்தியிருந்த பரிசப் புடைவை மடித்து வைக்கப்பட்டிருந்தது. அதன்மேல் அவள் அணிந்திருந்த பரிச ஆபரணங்கள் அனைத்தும் வைக்கப் பட்டிருந்தன. ஜானகி, அவளாகவே மங்களஸ்நானத்துக்குப் போயிருப்பதாக எண்ணிக்கொண்டு பெண்களெல்லாம் கீழே வந்து குளியல் அறைக்குள் பார்த்தார்கள். அங்கேயும் ஜானகி இல்லை. வீடு முழுவதும் தேடினார்கள். கல்யாணப் பெண்ணைக் காணவில்லை. கல்யாண வீடு அல்லோலகல்லோலமடைந்துவிட்டது. விடிந்து முகூர்த்த நேரமும் தாண்டி விட்டது. புரோகிதர்களும் போய்விட்டார்கள் என்பதை முதல் அத்தியாயத்திலேயே படித்தோம்.

## அத்தியாயம் 29

**யா**ரும் கண்டுகொள்ள முடியாதபடி வீட்டைவிட்டு வெளியேறிவிட்ட ஜானகி அதன் பிறகுதான் எங்கே போவது என்று எண்ணத் தொடங்கினாள்.

உள்ளூரில் எங்கும் தங்கக்கூடாது என்பதை முன்பே தீர்மானித்திருந்தாள். ஏனென்றால், உள்ளூரில் அவள் போகக் கூடிய இடங்களும் தோழிகளின் வீடுகளும் சித்தி சுந்தரிக்குத் தெரியும்; அந்த இடங்களில் தேடிக் கண்டுபிடித்துவிட்டால் வேறு முகூர்த்தம் வைத்துக் கட்டாயத் தாலி கட்டவும் கூச மாட்டார்கள் என்று பயந்தே ஊரைவிட்டே ஓடிவிடுவது என்று தீர்மானித்து அதற்கு வேண்டிய பணத்துடன் வெளியேறினாள். அந்தப் பணம், தான் சிறுகச் சிறுகச் சேர்த்து வைத்திருந்த நூற்று இருபது ரூபாயும் பாத்திமா கொடுத்த இருநூறு ரூபாயும் கூடியது.

எந்த ஊருக்குப் போவது என்று எண்ணிக்கொண்டே நடந்துகொண்டிருந்தபோது பளிச்சென்று பாட்டி அம்மணியம்மாள் திருச்சியில் இருப்பதாகக் கடைசியாக வந்த கடிதத்தைப்

படித்தது நினைவுக்கு வந்தது. ஆனால், அவ்வளவு பெரிய திருச்சியில் பாட்டியை எங்கென்று தேடுவது என்ற விசாரமும் கூடவே உதித்தது. அந்த விசாரத்தோடு திருச்சி என்ற பெயருடன் ஒட்டிய இன்னொரு நினைவும் வந்தது.

தன்னுடன் படித்த பத்மாவதி என்ற மிகவும் நெருங்கிப் பழகிய அன்புமிக்க தோழி திருச்சியில் வாழ்க்கைப்பட்டிருப்பதும் அவளைப் புக்ககத்துக்கு வழியனுப்ப ரெயிலடிக்குப் போயிருந்தபோது அவளுடைய கணவர் ராஜாராம் திருச்சி கோட்டை, ஆண்டார் தெருவில் சொந்த வீட்டில் வசிப்பவர் என்று பத்மாவதி விலாசம் தந்ததும், அந்த விலாசத்துக்குப் பத்மாவதிக்குத் தான் கடிதம் எழுதியதும் நினைவுக்கு வந்தது. அந்த விலாசம் நினைவிலிருப்பதால் பத்மாவதியைக் கண்டு பிடிப்பது சுலபந்தான். பத்மாவதியுடன் தங்கிப் பாட்டியைத் தேடலாம் என்றும், பாட்டியைக் கண்டுபிடிக்க முடியாவிட்டால் பத்மாவதியுடனேயே இருந்துகொண்டு அவள் கணவர் மூலமாக ஒரு வேலை தேடிக்கொள்ளலாம் என்றும் தீர்மானித்துக் கொண்டாள்.

ஒரு டாக்சியை அமர்த்திக்கொண்டு எழும்பூர் ரெயிலடிக்குச் சென்றாள். அவள் அங்கே போன நேரத்தில் திருச்சிக்குப் போக வண்டியில்லை. இனி விடியற்காலையில் தான் ஒரு பாஸஞ்சர் ரயில் புறப்படும். அதுவரையிலும் 'வெயிட்டிங் ரூமில்' தங்கினால் தன்னைத் தேடிக்கொண்டு வந்து பிடித்துக்கொள்ள நேரிடும் என்று அஞ்சிச் சற்று தூரமாகவேயிருந்த ஓர் ஓட்டலுக்குப் போய் அதன் மாடியிலுள்ள ஓர் அறைக்கு வாடகை கொடுத்து அதில் படுத்துக்கொண்டாள்.

அது அப்படியிருக்க, ஜானகியின் பாட்டி அம்மணியம்மாள் திருச்சியில் இருக்க நேர்ந்தது எப்படி, பல வருஷங்களாகச் சென்னைக்குத் திரும்பி வராமல் இருந்துவிட்டது எதனால் என்பதை அறிந்துகொள்வோம்.

முருகேசனுக்கு இரண்டாம் மனைவியாகச் சுந்தரி வந்ததிலிருந்து நெடு நாளாக அந்த வீட்டில் மிக்க உரிமை



யோடு உதவி செய்துகொண்டிருக்கும் சந்திராவையும் அவளுடைய மகன் நெல்லையப்பனையும் வெறுத்து அவமதிக்கலானாள். அதனால் சந்திரா அந்த வீட்டில் இருக்கப் பிரியமில்லாமலேயே தன்னுடைய கணவன் விருப்பத்தையும் நோயாளியாகப் படுத்துக்கிடந்த தாமரைக்கண்ணியின் நிலைமையையும் கருதிப் பொறுத்துக்கொண்டிருந்தாள்.

அப்படியிருக்க, அவளுடைய கணவன் சுந்தரமூர்த்தியையும் வயல்களில் வரும் மகசூலில் திருடுகிறவன் என்று சொல்லி விட்டாள் சுந்தரி. அதைக் கேட்டுவிட்ட சுந்தரமூர்த்தியும் அந்த வீட்டில் இருக்கப் பிரியப்படாமல் அந்த ஊரைவிட்டே போய்விட எண்ணினான். ஆனால், தங்கை தாமரைக் கண்ணிக்கு வைத்தியம் நடக்க இருப்பதைக் கருதிப் பொறுத்திருந்தான்.

தாமரைக்கண்ணிக்கு ஆபரேஷன் நடந்து அவள் நலமடைந்ததும் ஆஸ்பத்திரியில் இருந்தபடியே சுகாதாரமுள்ள இடத்துக்கு அவளைக் கூட்டிக்கொண்டு போவதாகச் சொல்லி ஊரைவிட்டே நிரந்தரமாகப் போய்விடத் திட்டமிட்டான். அந்தச் சமயத்தில் சமய சஞ்சீவியாக நேர்ப்பட்ட அவனுடைய பாலிய நண்பன் இராமநாதனுடைய அன்பால் அவனுக்கு வேண்டிய எல்லா வசதிகளும் கிடைத்தன. இராமநாதன் உதவிய மோட்டாரிலேயே தானும் தங்கையும் மனைவியும் மகனும் பல தலங்களுக்கு யாத்திரை போய்விட்டுத் திருச்சிக்கு வந்தார்கள்.

இராமநாதன் முன் சொல்லியிருந்தபடியே அவனுடைய வியாபாரத்துக்குச் சுந்தரமூர்த்தியைத் திருச்சிக் கிளைக்குப் பிரதிநிதியாக நியமித்து நல்ல சம்பளமும், லாபத்தில் கால் பங்கும் கொடுத்துத் திருச்சியிலேயே இருக்கச் செய்து விட்டான். ஒரு விஸ்தாரமான பங்களாவில் சுந்தரமூர்த்தியும் சந்திராவும் நெல்லையப்பனும் தாமரைக்கண்ணியும் சகல சௌகரியங்களுடன் வாழ்க்கை நடத்திக்கொண்டிருந்தார்கள்.

அவர்கள் சுகமாக இருப்பதைப்பற்றி அடிக்கடி சென்னை மருந்துக்கடை நண்பர் நல்லதம்பிக்கு எழுதி அம்மணியம்மாளுக்கு மட்டும் அறியப்படுத்திச் சென்னையில் அம்மணியம்மாள், முருகேசன், சுந்தரி, ஜானகி ஆகியவர்களின் சேமத்தையும் நல்லதம்பி மூலமாகவே அறிந்துகொண்டார்கள்.

சுந்தரமூர்த்தி, சந்திரா, நெல்லையப்பன், தாமரைக்கண்ணி எல்லாரும் சென்னையைவிட்டுப் போனபின் சுந்தரி, தன் மாமியார் அம்மணியம்மாளையும் மனம் கசந்து போகும்படி செய்துவிட்டாள்.

சுந்தரி புக்ககம் வந்தது முதல் தன் கணவனை மகிழ்விப்பதிலும் அவனுடன் உல்லாசப் பொழுது போக்குவதிலுமே கருத்தாக இருந்ததன்றி மற்றெவரையும் மதிக்கவில்லை; குடும்பக் காரியங்களையும் கவனிக்கவில்லை; உல்லாசப் பயணங்களுக்கும் டம்பச் செலவுகளுக்கும் பணம் வேண்டியிருந்ததால் மாமியாருடைய பணப்பெட்டியைத் திறக்கும் உரிமையைக் கருதி மாமியாரிடத்தில் மட்டும் மரியாதை காட்டி நடித்து வந்தாள். அந்த மாமியாரும் மகனை மகிழ்விக்கத் தானே தேடிக்கொண்டு வந்த மருமகள் என்று சுந்தரி செய்த பல குற்றங்களையும் பொறுத்துக்கொண்டு அன்பு குறையாமல் இருந்து வந்தாள்.

சுந்தரி ஒரு முறை மாமியாருக்குச் சொல்லாமல் ஆயிரம் ரூபாய் எடுத்துக் கல் வளையல்கள் செய்துகொண்டாள்; இன்னொரு தடவை மாமியாருக்குச் சொல்லாமல் கல் விழைத்த ஜடைபில்லையை எடுத்து அழித்துத் தங்கைக்குத் தங்க வளையல்கள் செய்து பரிசளித்தாள்; மற்றொரு முறை மாமியாருக்குத் தெரியாமல் தன்மீது சீதனமாக எழுதிவைத்த நிலத்தை அடகு வைத்து இரண்டாயிரம் ரூபாய் வாங்கி டம்பச் செலவுகள் செய்துவிட்டாள்.

இவற்றையெல்லாம் அம்மணியம்மாள் தன் மகனுடைய மகிழ்ச்சியைக் கெடுக்கக்கூடாதென்றே பொறுத்துக்



கொண்டாள். ஆனாலும், மருமகள்மீதிருந்த நன்மதிப்பு சிறுகச் சிறுகக் குறைந்துவிட்டது.

வைரம் பதித்த 'ரிஸ்ட் வாட்ச்' வாங்கித் தரும்படி மாமியாரைக் கேட்டாள்; அதை வாங்கித் தருவதாக மாமியார் சொன்னதனால் கொஞ்ச காலம் மாமியாருக்கு ஒத்தாசையாக வீட்டு வேலைகளைச் செய்தாள். அந்தக் கைக்கடிகாரத்தை வாங்கித் தர முடியாமற்போய்விட்டது அதிலிருந்து சுந்தரி மாமியாரை மதிப்பதில்லை; வீட்டு வேலைகளில் ஒத்தாசை செய்வதுமில்லை. தள்ளாத வயதில் வீட்டு வேலைகளைச் செய்யும் அலுப்பு மேலிட்டு மருமகள்மீது வெறுப்பு வந்துவிட்டது. அதனால் தன்னை அவ்வளவு அலட்சியப்படுத்தி அவமதிக்கும் மருமகளுடன் அந்த வீட்டில் இருக்கப் பிடிக்காமல் எங்கேயாவது போய்விடலாமா என்று எண்ணிக்கொண்டிருந்தாள், அம்மணியம்மாள்.

அந்த விருப்பத்துக்கு அனுகூலமாக அம்மணியம்மாளின் நெருங்கிய நட்பான சீதாலக்ஷ்மி அம்மாள் அகஸ்மாத்தாக வந்து தலயாத்திரைக்கு அழைத்தாள். அம்மணியம்மாள உடனே ஒத்துக்கொண்டு எல்லாப் பொறுப்புகளையும் மகன் முருகேசனிடமே ஒப்படைத்துவிட்டு யாத்திரைக்குப் புறப்பட்டாள். தென்னாட்டிலும் வடநாட்டிலுமுள்ள பல தலங்களைத் தரிசித்துவிட்டுக் காசியில் கங்கைத் தீர்த்தத்தை எடுத்துக்கொண்டு அதை இராமேசுவரத்தில் இராமலிங்கத்துக்கு அபிஷேகம் செய்ய அங்கே போனார்கள்; அங்கிருந்து சென்னைக்குத் திரும்பும் வழியில் திருச்சிராப்பள்ளியில் தங்கினார்கள். அப்போது எதிர்பாராத அதிர்ஷ்டம் போல் சுந்தரமூர்த்தியைக் கடைத்தெருவில் சந்திக்க நேர்ந்தது.

அந்தச் சந்திப்பில் அவர்களுக்குண்டான ஆனந்தத்தை அளவிடவும் முடியுமா! திடீர்ச் சந்திப்பில் உண்டான திகைப்பும் வியப்பும் அவற்றையொட்டிய பேச்சுகளும் முடிந்த பின் சுந்தரமூர்த்தி அம்மணியம்மாளையும் அவளுடன் இருந்த மற்ற இருவரையும் தன்வீட்டுக்கு அழைத்தான். அவன் அழைப்பதற்கு

முன்னாலேயே அவனைக் கண்டவுடன், அவனுடன் சென்னையை விட்டு வந்த தாமரைக்கண்ணி, சந்திரா, நெல்லையப்பன் ஆகியவர்களைப் பார்க்கக் கிடைத்துவிட்டது என்று மகிழ்ச்சிப் பெருக்கெடுத்துவிட்ட அம்மணியம்மாள் அந்த அழைப்பை உடனே ஏற்றுக்கொண்டாள் என்பதைச் சொல்லவும் வேண்டுமா?

காரில் சுந்தரமூர்த்தியும் ஏறிக்கொள்ளக் கார் சுந்தரமூர்த்தியின் பங்களாவுக்கு ஓட்டப்பட்டது. சுற்றிலும் புஷ்பச் செடிகளும் பழ மரங்களும் உள்ள அந்தப் பங்களாவே சுந்தரமூர்த்தி எவ்வளவு நல்ல நிலையில் இருக்கிறான் என்பதை அம்மணியம்மாளுக்கு அறிவித்தது.

பங்களாவின் முன்கட்டில் உள்ள வெகு அலங்காரமான கூடத்தில் தாமரைக்கண்ணி, ஒரு பட்டு மெத்தையுள்ள சோபாவில் சாய்ந்தவண்ணம் ஏதோ புத்தகத்தைப் படித்துக்கொண்டிருந்தாள். பங்களாவுக்குள் முதலில் நுழைந்த சுந்தரமூர்த்தி தாமரைக்கண்ணியைப் பார்த்ததும், "தாமரை! அத்தை வந்திருக்கிறார்கள்" என்று மகிழ்ச்சியோடு கூவினான்.

"அத்தையா! எந்த அத்தை?" என்றாள் தாமரை.

"பட்டண அத்தைதான். வேறு அத்தை ஏது நமக்கு?"

அதைக் கேட்டுத் துள்ளி எழுந்து அத்தையை எதிர்கொள்ள ஓடினாள் தாமரை.

தாமரைக்கண்ணியைப் பார்த்த அம்மணியம்மாள், தன் கண்களையே நம்ப முடியாமல் பிரமித்துவிட்டாள். 'ஏறத்தாழ ஐந்து ஆண்டுகளுக்கு முன்னால் சென்னையில் டாக்டர் மோகன்ராவ் ஆஸ்பத்திரியில் பார்த்த தாமரைக்கண்ணியா இவள்! ஆபரேஷன் நடந்து நலமடைந்த பின்னும் எலும்பும் தோலுமாக மங்கிய நிறத்துடன் குழி விழுந்த கண்களும் ஒட்டிப் போன கன்னங்களுமாகப் பார்த்த மூத்த மருமகளா இவள்!' என்று ஆச்சரியப்படும்படி திரண்ட கன்னங்களும், ஒளி வீசும் கண்களும், சிவந்த மேனியும், சிரித்த முகமுமாக அழகு சொட்டத் திகழ்ந்தாள் தாமரைக்கண்ணி.



மாமியாரின் பாதங்களைத் தொட்டு வணங்கிய மருமகளைத் தாங்கி அணைத்துக்கொண்டு ஆனந்தக் கண்ணீர் வடித்தாள் அம்மணியம்மாள்.

சுந்தரமூர்த்தி, அம்மணியம்மாளுடன் வந்த சீதாலக்ஷ்மி அம்மாளுக்கும் அவளுடைய சம்பந்தியம்மாளுக்கும் ஆசனம் அளித்து அமரும்படி கேட்டுக்கொண்டான். எல்லாரும் உட்கார்ந்து அம்மணியம்மாள் தன்னுடன் வந்த இருவரையும் அறிமுகப்படுத்தி, யாத்திரையாக வந்ததைச் சொன்னாள். பிறகு வழக்கமான குசலப் பேச்சுகள் நடந்தன.

முன்கட்டுக் கூடத்தில் நடந்த கலகலப்பான பேச்சுகளின் ஓசையைக் கேட்டுப் பின்கட்டிலிருந்து வந்த சந்திரா, அம்மணியம்மாளைக் கண்டு, "பெரியம்மா!" எனக் கூவித் தாவிச் சென்று அம்மணியம்மாளின் பாதங்களில் விழுந்து வணங்கினாள். அவளை வாரி அணைத்துக்கொண்டாள், அம்மணியம்மாள். அதே சமயத்தில் வெளியே போயிருந்து திரும்பி வந்த நெல்லையப்பன், தன் தாயாரை அணைத்துக்கொண்டிருப்பது யாரென்று உற்றுப் பார்த்தான்.

"ஏண்டா, அடையாளம் தெரியவில்லையா? பட்டணத்து பாட்டிதான். விழுந்து நமஸ்காரம் பண்ணு" என்றாள் சந்திரா.

அதன் பிறகுதான் அவனுக்குத் திகைப்பு நீங்கித் தாயார் சொன்னபடியே விழுந்து வணங்கினான். அவனையும் அணைத்துக்கொண்டாள், பட்டணத்துப் பாட்டி. அதன் பிறகு வெகு நேரம் ஐந்து ஆண்டுகள் ஒருவரையொருவர் காணாதிருந்த ஏக்கம் தீரப் பேசிக்கொண்டிருந்தார்கள்.

இதன் மத்தியில் சந்திரா பின்கட்டுக்குப் போய்ச் சமையற்காரியிடம் நல்ல விருந்து சமைக்கும்படி ஏற்பாடு செய்து விட்டாள்.

சுந்தரமூர்த்தி, மிகுந்த விநய வணக்கத்துடன் வேண்டிக் கொண்ட பரிவை மறுக்க மனம் வராமல் சீதாலக்ஷ்மி அம்மாளும் மற்றவரும் ஐந்து நாள்கள் அங்கே விருந்தினராகத்

தங்கினார்கள். மீண்டும் ஒருமுறை உச்சிப் பிள்ளையாரையும் தாயுமான சுவாமியையும், ஜம்புலிங்கத்தையும், திருவரங்கனையும், சமயபுரம் மாரியம்மனையும் தரிசிக்க அந்த ஐந்து நாள்களையும் பயன்படுத்திக்கொண்டார்கள்.

இராமேஸ்வரத்தை விட்டுச் சென்னைக்குத் திரும்பிய போது திருச்சிக்கு வருகிற வரையிலும் அம்மணியம்மாள் மறுபடியும் சென்னைக்குப் போய்த் தன்னை ஒரு சிறிதும் மதிக்காத சுந்தரியுடன் காலந்தள்ள வேண்டியிருக்கிறதே என்ற கவலையோடுதான் வந்தாள்.

திருச்சியில் தன் அருமை மருமகள் தாமரைக்கண்ணியையும் தன்னிடத்தில் பரம விசுவாசமுள்ள சுந்தரமூர்த்தியையும் அவர்கள் சகல சௌகரியங்களுடன் இருப்பதையும் கண்ட அந்தக் கணமே அவர்களுடன் தங்கிவிடுவது என்று தீர்மானித்துவிட்டாள்.

ஐந்து நாள்கள் சென்று, சீதாலக்ஷ்மியம்மாள் ஊருக்குப் புறப்படலாமா என்று அம்மணியம்மாளைக் கேட்டாள். அருகிலிருந்த சுந்தரமூர்த்தி, சீதாலக்ஷ்மி அம்மாளிடம், "அத்தையைப் பிரிந்து வந்து ஐந்து வருஷமாச்சு. இங்கே நான் ஒரு பெரிய வியாபாரப் பொறுப்பை ஏற்றுக்கொண்டுவிட்ட பின் அத்தையைப் பார்க்கச் சென்னைக்கு வர ஒழியவில்லை. அதனால் கொஞ்ச காலத்துக்கு அத்தையை எங்களுடன் இருக்க விடுங்கள், அம்மா" என்று கேட்டுக்கொண்டார்.

இப்படிச் சுந்தரமூர்த்தியே கேட்டுக்கொண்டது, 'நான் இங்கே தங்கிவிடுகிறேன். நீங்கள் புறப்படுங்கள்' என்று சீதாலக்ஷ்மியம்மாளிடம் எப்படிச் சொல்வது என்று தவித்துக் கொண்டிருந்த அம்மணியம்மாளுக்குக் காதில் அமிர்தத்தை வார்த்தது போல் இருந்தது.

சுந்தரமூர்த்தி கேட்டுக்கொண்டதற்கு விடையாகச் சீதாலக்ஷ்மியம்மாள், "தங்கமா இருந்து வரட்டும். நான் தடை சொல்வேனா என்ன? ஐந்து வருஷம் காணாதிருந்தவர்கள் கண்டுகொண்ட பின் உடனே பிரிய மனம் வருமா?" என்று சொல்லிவிட்டு அம்மணியம்மாளைப் பார்த்து, "நீங்கள் தங்கியிருந்து வாருங்கள். நான் புறப்படுகிறேன்" என்றாள்.



அம்மணியம்மாள், மனத்துக்குள் மகிழ்ச்சி பொங்கினாலும் அதைக் காட்டிக்கொள்ளாமல் எல்லாவற்றையும் கேட்டுக் கொண்டு மௌனமாகவே இருந்தாள். அதைக் கண்ட தாமரைக்கண்ணி, அத்தை தங்கிவிடத் தயங்குவதாக எண்ணிக் கொண்டு, "அத்தை! என்ன யோசிக்கிறீர்கள்? நீங்கள் தங்கி விடத்தான் வேண்டும். நாங்கள் உங்களைப் போக விடமாட்டோம்" என்றாள்.

"சரியடியம்மா. நான் தங்கிவிடுகிறேன். கூட்டிக்கொண்டு வந்த அம்மாளைப் பிரிந்து எப்படி அவர்களை மட்டும் போகச் சொல்வது என்றுதான் யோசித்தேன். அந்த அம்மாளும் என்னைத் தங்கிவிடச் சொல்லுகிறார். நீங்களும் விட மாட்டீர்கள். நான் தங்கிவிடுகிறேன், சரிதானே?" என்றாள் அம்மணியம்மாள்.

"அப்படிச் சொல்லுங்கள், பெரியம்மா. உங்களைக் காணாமல் ஏங்கிக்கிடந்த நாங்கள் கண்டுவிட்டு உடனே அனுப்பிவிட மனம் வருமா?" என்றாள் சந்திரா.

சீதாலக்ஷ்மியம்மாளும் அவருடைய சம்பந்தியம்மாளும் விடைபெற்றுக்கொண்டார்கள்.

அன்று மத்தியானம் சாப்பாட்டுக்குப் பின் எல்லாரும் கூடத்தில் அமர்ந்து வெகுநேரம் பழைய நிகழ்ச்சிகளைப் பற்றிக் குதூகலமாகப் பேசிக்கொண்டிருந்தார்கள். கடந்த ஐந்து நாள்களும் அம்மணியம்மாள் சீதாலக்ஷ்மியுடன் கோயில் களுக்குப் போவதும் வருவதுமாக இருந்ததால், தன் மனக்குறைகளைச் சொல்லிக்கொள்ள முடியவில்லை. இப்போது அவகாசம் கிடைத்தது.

அம்மணியம்மாள் சுந்தரமூர்த்தியைப் பார்த்து, "ஏண்டா சாமி! தாமரையை ஆரோக்கியமான ஊருக்குக் கொண்டு போய் அவள் உடம்பு தேறினபின் நீங்கள் எல்லாரும் பட்டணத்துக்குத் திரும்பி வந்துவிடுவீர்கள் என்றுதானே நான் வெகு ஆசையோடு காத்திருந்தேன்? என்னைத் தனிக்க விட்டுவிட்டு இந்த அஞ்சு வருஷமாக வராமலே இருந்துவிட்டீர்களே, ஏன்?" என்றாள்.

அதற்குச் சுந்தரமூர்த்தியும் சந்திராவும் சேர்ந்தே பதில் சொன்னார்கள். சுந்தரி அந்த வீட்டுக்கு வந்ததிலிருந்து சந்திராவையும் நெல்லையப்பனையும் கரித்துக்கொண்டிருந்ததையும் கடைசியாகச் சுந்தரமூர்த்தியை வயல்களின் வருமானத்தில் திருடுகிறவன் என்றும், நெல்லையப்பனை அவள் வீட்டுச் சமையற்காரியின் மகன் என்று சொன்னதையும் ஆதியோடந்தமாகச் சொல்லிச் சுந்தரியுடன் சகவாசம் செய்யக்கூடாது என்றே வந்துவிட்டதாகச் சொன்னார்கள்.

இந்த விவரங்கள் அம்மணியம்மாளுக்குத் தெரியாது. இவற்றையெல்லாம் கேட்ட அவள், "அதுதானே கேட்டேன். அப்படியா சமாச்சாரம்? என்னிடத்தில் நீங்கள் சொல்லவேயில்லையே!" என்றாள்.

"எப்படி அத்தை சொல்லுவது? மகனை மகிழ்விக்க வந்த மருமகள் என்று நீங்கள் சுந்தரியை வெகு செல்லமாகப் பாராட்டிக்கொண்டிருந்தீர்கள். அப்போது உங்களிடம் சொன்னால் உங்கள் நிம்மதி கெட்டுப்போகும். முருகேசனுக்குத் தெரிந்தால் அவருடைய இன்ப வாழ்க்கைக்கு இடையூறு ஏற்படும். எங்கள்மீது முருகேசனுக்குள்ள நன்மதிப்பால் அவர் சுந்தரியைக் கண்டிக்க நேர்ந்து குடும்பத்தில் கலவரமுண்டாகும். அதுமட்டுமல்ல, நாங்கள் அப்போதே கோபித்துக்கொண்டு வந்துவிட்டிருந்தால் சாகக் கிடந்த தாமரைக்கண்ணிக்கு வைத்தியம் பார்க்கவோ ஆஸ்பத்திரியில் துணையிருக்கவோ உங்களால் முடியாமல் நீங்கள் துன்பப்பட நேரும். அதனால்தான் சுந்தரியின் அவமதிப்பையெல்லாம்



பொறுத்துக்கொண்டு தாமரைக்குச் சிகிச்சை நடக்கும்வரை அங்கிருந்து அவளையும் கூட்டிக்கொண்டு வந்துவிட்டது. கடவுளின் கிருபையால் என் திட்டம் நிறைவேற என் நண்பன் இராமநாதனுடைய ஆதரவு கிடைத்தது" என்றான் சுந்தரமூர்த்தி.

அங்கிருந்து கேட்டுக்கொண்டிருந்த அம்மணியம்மாள், "அட என் சாமி! நீயும் சந்திராவும் காட்டியிருக்கிற பொறுமைக்கு உங்களைக் கையெடுத்துத்தான் கும்பிட வேணும். அந்தச் சுந்தரி இப்படிப்பட்டவள் என்று தெரியாமல்தான் அவளை நம்பியிருந்தேன். நானும் உங்களைப்போல் முருகேசனைக் கருதிப் பொறுத்துப் பொறுத்துப் பார்த்துவிட்டுத் அவளை வெறுத்துவிட்டு வந்துவிட்டேன்" என்றாள்.

இதைக் கேட்டுத் திடுக்கிட்ட சுந்தரமூர்த்தி, தாமரைக் கண்ணி, சந்திரா ஆகிய மூவரும் ஏக காலத்தில், "என்ன, நீங்களும் வெறுக்கும்படியா செய்துவிட்டாள்?" என்று வியப்போடு கேட்டார்கள்.

அம்மணியம்மாள் நிதானமாகத் தன் கதையைச் சொல்லத் தொடங்கி, சுந்தரி செய்த குற்றங்களையெல்லாம் வரிசைக் கிரமத்தில் சொல்லிவிட்டு, "அவளுடன் இருக்கப் பிடிக்காமல்தான் சீதாலக்ஷ்மி அம்மாள் கூப்பிட்டவுடனே யாத்திரைக்குப் புறப்பட்டேன். நாலு மாசமாக நம் நாட்டிலும் வடநாட்டிலுமுள்ள முக்கியமான தலங்களையெல்லாம் தரிசித்துவிட்டுக் கடைசியாக இராமேசுவரத்திலிருந்து சென்னைக்குப் போகத் திரும்பினோம். மறுபடியும் அங்கே போய்ச் சுந்தரியோடு காலந்தள்ள வேண்டியிருக்கிறதே என்று கவலைப்பட்டுக்கொண்டே வந்தபோது தெய்வச் செயலாய்க் கடைத்தெருவில் சுந்தரமூர்த்தியைக் கண்டேன். அவனைக் கண்டவுடனே உங்களையெல்லாம் காணப்போகிறோம் என்று மனம் துடித்தது. இங்கு வந்து உங்களைப் பார்த்த அந்தக் கணமே உங்களுடன் தங்கிவிடுவது, சென்னைக்குப் போவதில்லையென்று தீர்மானித்துவிட்டேன். அதை எப்படிச் சீதாலக்ஷ்மி அம்மாளிடம் சொல்லி

அவளைப் போகச் சொல்வது என்று தயங்கிக்கொண்டிருந்த சமயத்தில் சுந்தரமூர்த்தியே என்னை இங்கே விட்டுவிட்டுப் போகும்படி அந்த அம்மாளைக் கேட்டுக்கொண்டது எனக்குப் பெரிய ஒத்தாசையாக இருந்தது'' என்று முடித்தாள்.

இப்படித் திருச்சியில் தங்கிவிட்ட அம்மணியம்மாள், மகன் முருகேசனுக்குத் தன்னுடைய சேமத்தை அறிவிக்கச் சுந்தரமூர்த்தியைக் கொண்டு திருவல்லிக்கேணியிலிருந்த ஒரு நண்பர் மூலமாக அநாமதேயக் கடிதங்கள் அடிக்கடி எழுதச் செய்தாள்; அந்த நண்பர் மூலமாகவே மகனுடைய நலத்தையும் அறிந்துகொண்டாள்.

மூன்று ஆண்டுகள் சென்னையைப்பற்றிய ஏக்கம் இல்லாமலிருந்த அம்மணியம்மாளுக்கு அதன் பிறகு வைராக்கியம் தளரத் தொடங்கிவிட்டது. அடிக்கடி மகனைப்பற்றியும் பேத்தி ஜானகியைப்பற்றியும் எண்ணி ஏக்கமுற்றாள். ஆனால், அதை வெளியிற சொல்ல வெட்கப்பட்டு மனத்துக்குள்ளேயே குழம்பிக்கொண்டு சில மாதங்களைத் தாட்டினாள். அதற்குமேல் அடக்கி வைக்க முடியவில்லை. மகனையும் பேத்தியையும் பார்க்க வேணுமென்ற ஏக்கம் இருப்பதாகச் சுந்தரமூர்த்தியிடம் சொல்லிவிட்டாள்.

அதைக் கேட்ட சுந்தரமூர்த்தி, "அத்தை! கொஞ்ச நாளாக உங்கள் முகம் கவலை தோய்ந்து இருப்பதை நான் கவனித்தேன். வயதான உங்களுக்கு மகனைப் பார்க்க வேணுமென்ற ஏக்கம் வந்துவிட்டது சகஜந்தான். அந்த ஏக்கம் நீங்க உடனே சென்னைக்குப் போகத்தான் வேண்டும். எனக்கும் முருகேசனையும் ஜானகியையும் பார்க்க ஆவல். உங்களைச் சென்னைக்குக் கூட்டிக்கொண்டு போக இன்றைக்கேகூடப் பயணபபட்டுவிட எனக்கு ஆசைதான். ஆனால், நான் வியாபாரத்தைப்பற்றிய வெகு அவசர காரியமாக உடனே மதுரைக்குப் போகவேண்டிய கட்டாயம் ஏற்பட்டிருக்கிறது. நாலைந்து நாளில் திரும்பி வந்து விடுவேன்.



வந்தவுடன் நாம் சென்னைக்குப் புறப்படலாம். உங்களுக்கு அதுவரை பொறுக்க முடியாவிட்டால் வேறு யாருடனாவது உங்களை இன்றே அனுப்பி வைக்கிறேன்....''

"வேண்டாமப்பா; அப்படி ஒன்றும் பொறுக்க முடியாத அவசரம் இல்லையடா, சாமி. நீ மதுரைக்குப் போய் வந்த பிறகே போகலாம். என்னோடு நீ வந்தால்தான் ஜானகியை நெல்லையப்பனுக்கு மணமுடிப்பதைப்பற்றி முருகேசனுடன் பேசலாம்'' என்றாள் அம்மணியம்மாள்.

சுந்தரமூர்த்தி மதுரைக்குப் போய்விட்டார். மறுநாளே அம்மணியம்மாள் தாமரைக்கண்ணியிடம் சொல்லித் திருவல்லிக்கேணி நண்பருக்குக் கடிதம் எழுதச் செய்தாள். அதில், 'அம்மணியம்மாள் சுகமாகத் திருச்சியில் இருக்கிறார்கள். சீக்கிரம் சென்னைக்கு வருவார்கள்' என்று முருகேசனுக்கு எழுதிவிடும்படி திருவல்லிக்கேணி நண்பரைக் கேட்டுக்கொள்ளப்பட்டது. இந்தக் கடிதத்தைப் படித்த நினைப்பில்தான் ஜானகி திருச்சிக்கு வரத் தீர்மானித்தது.

சுந்தரமூர்த்தி மதுரைக்குப் போன மூன்றாம் நாள் அம்மணியம்மாளுக்கு இலேசான ஜுரம் கண்டது. உடனே சந்திரா நெல்லையப்பனை அனுப்பி டாக்டரை வரவழைத்து மருந்து கொடுக்கப்பட்டது. காய்ச்சல் நிற்கவில்லை. மறுநாள் அதிகமாகிவிட்டது. சுந்தரமூர்த்தி அம்மணியம்மாளைச் சென்னைக்குக் கூட்டிப் போவதற்கென்றே மதுரைக் காரியங்களை வேகமாக முடித்துக்கொண்டு வந்துவிட்டார். அவர் வந்தபோது அம்மணியம்மாளுக்குத் தன்னினைவும் இல்லை. டாக்டர் அது 'டைபாய்டு காய்ச்சல்' என்று அதற்கான சிகிச்சை செய்தார். இடையிடையே எல்லோரும் கண் கலங்கும்படியான அபாய நிலை தோன்றி மூன்று வாரங்களுக்குப் பின் காய்ச்சல் நின்றது. அம்மணியம்மாள் எமன் வாயிலிருந்து மீண்டாள். எழுந்து உட்கார இரண்டு மாதங்களாயின. உடம்பு தேற நாளாகும். சென்னைக்குப் போவது பற்றிய பேச்சுக்கிடமில்லை.

பரிசுத்தமான பக்தி விசுவாசத்துடன் சுந்தரமூர்த்தியும் சந்திராவும் தாமரைக்கண்ணியும் செய்து வரும் பணிவிடைகளாலும் பாட்டியின் நலத்துக்காக நெல்லையப்பன் உடனுக்குடன் ஓடிப் போய் வாங்கிவரும் மருந்து டானிக்குகளாலும் அம்மணியம்மாள் உடம்பு தேறி வந்தது. நெல்லையப்பனுடைய பணிவிடைகளால் பூரிப்படையும்போதெல்லாம் அவனுக்கும் ஜானகிக்கும் திருமணம் நடத்திக் கண் குளிரப் பார்க்க வேண்டுமென்ற ஆசையை வெளிப்படுத்துவாள், அம்மணியம்மாள்.

## அத்தியாயம் 30

எழும்பூர் ரயில் ஸ்டேஷனிலிருந்து முன் நேரத்தில் திருச்சிக்குப் புறப்படும் மெயில் வண்டியும் எக்ஸ்பிரஸ் வண்டிகளும் போய்விட்டபடியால் விடியற்காலை வண்டியில் போவதற்காக ஓர் ஓட்டலில் தங்கி இரவைக் கழித்த ஜானகி குறித்த நேரத்தில் வந்து அந்த வண்டியில் ஏறிக்கொண்டாள். அந்த வண்டி எல்லா ஸ்டேஷன்களிலும் நின்று நின்று மெதுவாகப் போகும் வண்டியானதால் சுலபமாக முதல் வகுப்பு டிக்கெட் கிடைத்தது.

அந்த வண்டி மெதுவாகப் போகும் என்பதோடு இடையில் பல ஸ்டேஷன்களில் எதிரே வரும் வேகமான வண்டிகளுக்கு வழிவிட வெகு நேரம் நிற்கவேண்டியிருந்தது. விழுப்புரம் சந்திப்பில் இந்த வண்டிக்குத் தொடர்புடைய சேலம் வண்டி வெகு தாமதமாக வந்ததால் வெகு நேரம் காத்திருக்க நேர்ந்தது.

அதனால் இந்த வண்டி திருச்சி சந்திப்புக்கு வந்து சேரும்போது இரவு எட்டரை மணிக்கு மேல் ஆகிவிட்டது. ஜானகி திருச்சிக்கு வந்ததேயில்லை. என்றாலும் தன் சிநேகிதி பத்மாவதியின் புக்ககம் திருச்சிக் கோட்டையிலுள்ள ஆண்டார் தெருவில் என்பது தெரியுமானதால் திருச்சிக் கோட்டைக்குத்



தான் டிக்கெட் வாங்கியிருந்தாள். ஜங்ஷனில் கோட்டைக்கு வண்டி மாறவேண்டும் என்பதையும் அறிந்திருந்தாள். கோட்டைக்குப் போகும் வண்டி எதுவென்று கேட்டறிந்து அதில் ஏறிக்கொண்டு ஒரு போர்ட்டரிடம், "கோட்டை ஸ்டேஷனிலிருந்து ஆண்டார் தெரு எவ்வளவு தூரம் இருக்கும்?" என்று கேட்டாள். அவன், "கிட்டத்தானம்மா, மூன்று பர்லாங்கு" என்றான். 'அப்படியானால் நடந்தே போய்விடலாம்' என்று எண்ணிக்கொண்டாள்; வாழைப்பழங்களையும் காப்பியையும் வாங்கிச் சாப்பிட்டுப் பசியாற்றிக்கொண்டாள்.

எழும்பூரிலிருந்து திருச்சி சந்திப்புக்கு வருகிறவரையிலும் தன்னை யாரும் அடையாளம் கண்டுகொள்ளக்கூடாதே என்று முகத்தை மறைத்துக்கொண்டே வந்தவள் தன் பள்ளித் தோழி பத்மாவதியைப் பார்க்கப் போகிற மகிழ்ச்சியால் பகல் முழுதும் பிரயாணத்தில் முகத்தில் படிந்திருந்த அழுக்குப் போக, முதல் வகுப்புப் பெட்டியிலுள்ள தண்ணீர்க் குழாயில் முகத்தைக் கழுவி முன்றானையால் துடைத்துக்கொண்டாள். அதைவிட அழகுபடுத்திக்கொள்ள வழியில்லை. ஏனென்றால், பணத்தை மட்டும் இடுப்பில் பத்திரப்படுத்திக்கொண்டு அணிந்திருந்த உடையோடு வீட்டைவிட்டு வெளியேறியவள். முகப்பவுடர் முதலிய அழகுச் சாதனங்களை அவள் உபயோகிப்பது உண்டுதான். என்றாலும், அந்தப் பூச்சுகள் இல்லாமலேயே அவள் கண்ணைப் பறிக்கும் கட்டழகிதானே.

கோட்டை ஸ்டேஷனுக்கு வந்து இறங்கியபோது இரவு ஒன்பது மணிக்குமேல் ஆகிவிட்டது. ஸ்டேஷனை விட்டு வெளியில் வந்தாள். அங்கே வெளிச்சம் மிகவும் குறைவு. ஆண்டார் தெருவுக்கு வழி கேட்க நினைக்கும்போது எதிரே ஒரு கம்பீரமான கனவான் வந்துகொண்டிருந்தார். அவர் ஆங்கிலேய உடை அணிந்திருந்தார்; தலையில் மட்டும் தலைப்பாகை தரித்திருந்தார். அவர் அப்போதுதான் தம்முடைய மோட்டார் காரிலிருந்து இறங்கி வருவதை ஜானகி பார்த்துக்கொண்டிருந்தாள். கண்ணியமான அவருடைய தோற்றத்தைக் கண்டு வழி

கேட்கத் தகுந்தவரென்று, "ஐயா! ஆண்டார் தெருவுக்கு எந்தப் பக்கம் போக வேண்டும்?" என்றாள்.

இனிமையான குரலைக் கேட்ட அந்தக் கனவான் ஜானகியின் முகத்தைப் பார்க்க அங்கே வெளிச்சம் இல்லாததால் தன் கையிலிருந்த மின்சார 'டார்ச்' விளக்கைப் போட்டு ஜானகியின் முகத்தைப் பார்த்தார்: ஜானகியின் அழகைக் கண்டு பரவசமடைந்தவர் போல் வெகுநேரம் விளக்கை அணைக்காமல் பார்த்துக்கொண்டேயிருந்தார்.

வெளிச்சத்தால் கண் கூசிய ஜானகி, வெட்கமும் நாணமும் சேரக் கைகளால் முகத்தை மூடிக்கொண்டாள்.

விளக்கை அணைத்துவிட்டு அந்தக் கனவான், "நீ யாரம்மா? எங்கிருந்து வருகிறாய்?" என்றார்.

"நான் யாராயிருந்தால் என்ன? ஆண்டார் தெருவுக்கு வழி சொல்லுங்கள்" என்று முனகிக்கொண்டே இரண்டெட்டுப் பின்னால் போனாள் ஜானகி.

"அம்மா! கோபித்துக்கொள்ளாதே அம்மா. நீ சிறு பெண், துணையில்லாமல் தனியே வந்திருக்கிறாயே என்று உனக்குத் துணை புரிந்து உன்னை நீ போக வேண்டிய இடத்துக்கு என்னுடைய காரிலேயே கொண்போய் விட்டுவிட வேண்டும் என்று;—எனக்குத் தெரிந்தவர்கள் வீட்டுக்குப் போக வேண்டிய பெண்ணாக இருக்கலாம் என்றுதான் யாரென்று கேட்டேன்; நீ இந்த ஊருக்குப் புதிது என்பதை நீ தெருவுக்கு வழி கேட்டதிலேயே தெரிந்துகொண்டேன் இந்நேரத்தில் இருட்டில் நீ தனியே போவது நல்லதல்ல. கோபித்துக்கொள்ளாதேயம்மா. என்னை நம்பு" என்றார் கனவான்.

அவர் சொன்ன நியாயம் ஜானகிக்குச் சரியென்று பட்டது. தனக்கு உதவி செய்ய விரும்பும் ஒரு நல்ல மனிதர் என்றே நம்பினாள். ஆனாலும் தன்னை யாரென்று சொல்லிவிட மனம் துணியவில்லை. என்ன சொல்வது என்று தயங்கினாள்.

மறுபடியும் அந்தக் கனவானே பேசத் தொடங்கி, "அம்மா! நீ எங்கிருந்து வருகிறாய், உன் பெயர் என்ன, ஆண்டார் தெருவில் யார் வீட்டுக்குப் போக வேண்டும் என்பதைச் சொன்னால் அல்லவா..." என்று அவர் சொல்லி முடிக்கு முன், "ஆண்டார் தெருவில் ராஜாராம் என்பவர் வீட்டுக்குப் போக வேண்டும். அங்கே கொண்டுபோய் விடுங்கள்" என்றாள்.



"வக்கீல் ராஜாராமா?" என்றார் கனவான்.

"ஆமாம்; அவரே தான்."

"ரொம்ப சந்தோஷம். அவர்தான் என் கேசுகளுக்கு வக்கீல். பார்த்தாயாம்மா, நான் சொன்னபடியே நீ எனக்குத் தெரிந்தவர் வீட்டுக்குப் போக வேண்டிய பெண்ணாகவே இருக்கிறாய்? ராஜாராம் உனக்குச் சொந்தக்காரரா?"

"இல்லை. அவருடைய மனைவி பத்மாவதி என் பள்ளித் தோழி."

"ரொம்ப சந்தோஷம். அங்கேயே கொண்டுபோய் விடுகிறேன், வா" என்று ஜானகியைக் காருக்கு அழைத்தார். ஜானகி அவரைப் பின்தொடர்ந்தாள். போய்க்கொண்டே அந்தக் கனவான், "அம்மா, நீ யார், எந்த ஊர் என்பதைத்தான் சொல்ல மாட்டேன் என்கிறாய், உன் பெயரையாவது சொல்லக்கூடாதா? உன் பெயரென்ன?" என்றார்.

"அதுவுந்தான் உங்களுக்குத் தெரியாவிட்டால் என்ன?" என்றாள் ஜானகி.

"தெரியாவிட்டால் பாதகமில்லை. இருந்தாலும் நாளைக்கு நான் ஒரு கேஸ் விஷயமாக ராஜாராம் வீட்டுக்கு வருவேன். அப்போது அவரிடம் உன் நலத்தைப்பற்றி விசாரிக்கப் பெயர் சொல்லிக் கேட்க உதவுமல்லவா? அதற்காகத்தான். உன் பேரென்ன?"

ஜானகி பதில் சொல்லவில்லை. காரின் பின்புறக் கதவைத் திறந்து ஜானகியை ஏறிக்கொள்ளச் சொன்னார். ஜானகி ஏறி ஒரு மூலையில் உட்கார்ந்துகொண்டாள். மறு மூலையில் அந்தக் கனவான் அமர்ந்தார். டிரைவர் காரை ஓட்டினான்.

மறுபடியும் அந்தக் கனவான், "உன் பெயரைச் சொல்லம்மா" என்றார். சிறிது நேரம் யோசித்துவிட்டு ஜானகி, "என் பெயரா ?....என் பெ-ய-ர்... என் பெ-ய-ர்....கமலம்" என்று முனகினாள்.

"என்னம்மா, சொந்தப் பெயரைச் சொல்லுவதற்கு இவ்வளவு யோசனையும் தடுமாற்றமுமா ? நீ சொன்ன மாதிரியைப் பார்த்தால் உன்னுடைய உண்மையான பெயரை மறைத்து வேறு பெயர் சொல்லுவதாகத் தெரிகிறது" என்று சிரித்தார் அந்தக் கனவான்.

அவளையும் மீறி ஜானகிக்கும் சிரிப்பு வந்துவிட்டது. வெகு கஷ்டப்பட்டுச் சிரிப்பை அடக்கிக்கொண்டு, "தயவு செய்து என்னைப் பரிகாசம் பண்ணாமல் ஆண்டார் தெருவில் ராஜாராம் வீட்டுக்குக் கொண்டுபோய் விடுங்கள். பத்மாவதியைப் பார்த்த பின் நான் யார், என் பெயர் என்ன என்பவற்றையெல்லாம் சொல்லுகிறேன்" என்றாள்.

"சரியம்மா; அப்படியே ஆகட்டும்" என்றார் கனவான். அதன் பிறகு பேச்சில்லை. கார் ஓடிக்கொண்டிருந்தது. ஊருக்குள் உள்ள மூலை முடுக்குகளைக் கடந்து வீடுகளே இல்லாத சாலையில் கார் போய்க்கொண்டிருந்தது. ஊரைக் கடந்து வீடுகளே இல்லாத சாலையில் இரண்டு மைலுக்குமேல் வந்துவிட்டதைக் கண்ட ஜானகிக்குச் சந்தேகம் வந்துவிட்டது. 'கோட்டை ஸ்டேஷனிலிருந்து ஆண்டார் தெரு மூன்று பர்லாங் என்று போர்ட்டர் சொன்னானே! இப்போது ஊரைக் கடந்து கிட்டத்தட்ட மூன்று மைல் வந்திருக்கிறோமே! உதவி செய்ய வந்த கண்ணியவான் என்று நம்பிவிட்ட இந்த மனிதரும் முத்து வீரப்பனைப் போன்ற மோசக்காரனோ! நயவஞ்சகமாகப் பேசி எங்கோ கொண்டுபோகிறான்' என்ற அச்சம் வந்துவிட்டது. மனத்தைத் திடப்படுத்திக்கொண்டு, "கார் எங்கே போகிறது?" என்றாள்.

"ஏன் ? நீ எங்கே போக வேண்டுமோ அங்கேதான் போகிறது."



"பத்மாவதி-ராஜாராம் வீட்டுக்கா ?"

"ஆமாம்."

"அவர்கள் வீடு ஆண்டார் தெருவில் அல்லவா ? ஆண்டார் தெரு ஸ்டேஷனிலிருந்து மூன்று பர்லாங் தூரந்தானே ? ஊரையெல்லாம் தாண்டி மூன்று மைல் வந்துவிட்டதே. இது என்ன மோசம்! உங்களை ஒரு தகப்பனைப்போல் எண்ணி நம்பிவிட்டேன். தயவு செய்து காரை நிறுத்துங்கள். நான் இறங்கிக்கொள்ளுகிறேன். ஆண்டார் தெருவுக்குக் கொண்டு போய் விடுகிறேன் என்று பொய் சொல்லி என்னை ஏமாற்றி விட்டீர்களே" என்று இரைந்தாள் ஜானகி.

அதைக் கேட்ட அந்தக் கனவான் கலகலவென்று சிரித்துவிட்டு, "நானா பொய் சொல்லி ஏமாற்றிவிட்டேன் ? நீ வீட்டை விட்டுத் தனியே போகக்கூடாத பருவப்பெண். நீ துணையில்லாமல் தனியே வந்திருப்பதையும், நீ யார், எந்த ஊர் என்பதைச் சொல்ல மறுப்பதையும், சொந்தப் பெயரை மாற்றிப் பொய் சொன்னதையும் பார்த்தால், நீதான் என்னை ஏமாற்றப் பார்க்கிறாய். அது மட்டுமல்ல; நீ உன் சொந்த ஊரில் உன் வீட்டிலுள்ளவர்களையும் ஏமாற்றிவிட்டு யாருக்கும் தெரியாமல் வந்திருக்கிறாய்" என்று சொல்லிவிட்டு மறுபடியும் சிரித்தார்.

ஜானகிக்கு ஐயமும் அச்சமும் அதிகமாகிவிட்டன. 'இந்த மனிதன் முத்துவீரப்பனுக்கு நண்பனாக இருப்பானோ! முத்துவீரப்பன் என்னைத் தேடியபோது யாராவது நான் ரயிலேறியதைப் பார்த்திருந்து உளவு சொல்லிவிட்டார்களோ! அதனால் நான் எந்த ஊருக்கு டிக்கட் வாங்கினேன் என்பதை விசாரித்தறிந்து முத்துவீரப்பன் இந்த மனிதனுக்குத் தந்தி கொடுத்திருப்பான்போல் இருக்கிறது' என்றெல்லாம் எண்ணி நடுங்கிவிட்டாள்; என்ன செய்வதென்று தெரியாமல் மௌனமாகச் சிந்தித்து இந்த மனிதருடன் சுமுகமாகப் பேசித் தந்திரமாகத் தான் தப்பித்துக்கொள்ள வேண்டும் என்று தீர்மானித்தாள்.

இப்படி ஜானகி எண்ணிக்கொண்டிருக்கும்போதே அந்தக் கனவான், "அம்மா, கோபித்துக்கொள்ளாதே. நான் விளை

யாட்டாக நீ பொய் சொல்லி ஏமாற்றியதாகச் சொல்லி விட்டேன். அதற்காக மன்னித்துவிடு. உண்மையில் நீ ஓர் ஆபத்திலிருந்து தப்பி உன்னை யாரும் கண்டுகொள்ளக்கூடா தென்றுதான் உன் ஊரையும் பேரையும் மறைக்கிறாய் என்று தெரிந்துகொண்டேன். அதனால் ஊருக்குள் ஆண்டார் தெருவில் நீ தங்கினால் உன்னை யாராவது கண்டுகொண்டு நீ எந்த ஆபத்திலிருந்து தப்பி வந்தாயோ அந்த ஆபத்திலேயே மீண்டும் உன்னைச் சிக்கவைத்துவிட நேரும் என்றுதான் உன்னைப் பாதுகாப்பான வேறு இடத்துக்குக் கொண்டுபோகிறேன். வக்கீல் ராஜாராமும் பத்மாவதியும் உன்னைப் பார்க்க அங்கே வரும்படி நான் ஏற்பாடு செய்கிறேன்'' என்றார்.

இதைக் கேட்ட ஜானகி தன் காதுகளையே நம்ப முடியாத வியப்பில் திகைத்துவிட்டாள். தன்னைப்பற்றியும், தான் ஓர் ஆபத்திலிருந்து தப்பி வந்திருப்பதையும் அறிந்தவர்போல் பேசு கிறாரே! இவரை நம்புவதா வேண்டாவா என்று சிறிது நேரம் குழம்பிவிட்டு, ''ஐயா! தங்களை என் தந்தைபோல் எண்ணித் தான் வந்துவிட்டேன்....''

''அம்மா, அந்த நம்பிக்கைக்கு ஒரு குறையும் வராது. இது சத்தியம். உச்சிப்பிள்ளையார்மீது ஆணை'' என்றார் கனவான்.

அவர் தெய்வத்தின்மேல் ஆணையிட்டதைக் கேட்டு உடலும் உள்ளமும் சிலிர்த்துவிட்ட ஜானகி, ''ஐயா! மனம் நிறைந்த நன்றியுடன் வணங்குகிறேன்'' என்று கும்பிட்டாள்.

சிறிது நேரத்தில் கார் ஒரு தோட்ட வீட்டுக்கு முன்னால் நின்றது. அந்த வீடு சுந்தரமூர்த்தியும் சந்திராவும் நெல்லை யப்பனும் தாமரைக்கண்ணியும் அம்மணியம்மாளும் வசிக்கிற பங்களாதான்.

காரைவிட்டு முதலில் இறங்கிய கனவான் காரின் கதவைத் திறந்தபடியே பிடித்துக்கொண்டு, ''இறங்கி வா அம்மா, இந்த வீட்டில் நீ பயமின்றித் தங்கலாம். நீ எந்த அபாயத்திலிருந்து தப்பி வந்தாயோ அந்த அபாயத்தை உண்டாக்கினவர்கள்



யாரும் இங்கே வரமுடியாது. இந்த வீட்டிலுள்ள பெண்கள் உன்னைத் தங்களுடைய குழந்தையாகப் பாதுகாப்பார்கள். நானும் நீ நினைத்தபடியே உன் தந்தைபோல் உதவுவேன். விடிந்தவுடன் ராஜாராமையும் பத்மாவதியையும் இங்கு வரச் செய்கிறேன்'' என்றார்.

அவர் உச்சிப்பிள்ளையார்மீது ஆணையிட்டபோதே அவரை நம்பிவிட்ட ஜானகி அவர் மீண்டும் தான் ஓர் அபாயத் திலிருந்து தப்பி வந்ததாகச் சொல்லுவதைக் கேட்டுப் பரிபூரண நம்பிக்கையுடன் காரிலிருந்து இறங்கி அவரைப் பின்தொடர்ந்து பங்களாவுக்குள் சென்றாள்.

அங்கே நவநாகரிகமான எல்லா வசதிகளும் அமைந்துள்ள பெரிய கூடம் இருந்தது. அந்தக் கனவான் ஒரு சோபாவைக் காட்டி, ''அம்மா உட்கார். உன்னைக் கண்டு ஆச்சரியத்துடன் ஆனந்தப் பரவசமடையக்கூடிய பெண்கள் பின்கட்டில் இருக் கிறார்கள். அவர்களிடம் சொல்லி உனக்கு வேண்டிய சௌகரி யங்களைச் செய்யச் சொல்லுகிறேன். பகல் வண்டியில் வெகு தூரமிருந்து பிரயாணம் செய்து களைத்திருக்கிறாய். முதலில் தாகத்துக்குக் காப்பி, டீ அல்லது பால் ஏதாவது கொண்டுவரச் சொல்லட்டுமா?'' என்றார்.

''வேண்டாம். நான் ஜங்ஷனிலேயே காப்பி சாப்பிட்டு விட்டேன். இப்போது பசியில்லை; பிறகு பார்த்துக்கொள் வோம். பின்கட்டுக்குப் போய்ப் பெண்களைப் பார்ப்போம்'' என்றாள் ஜானகி.

''அப்படியே ஆகட்டும்; பின்கட்டுக்குப் போவோம். கொஞ்சம் பொறு; என் உத்தியோக உடைகளைக் களைந்து விட்டு மாற்றுடை கட்டிக்கொண்டு வந்துவிடுகிறேன்'' என்று ஓர் அறைக்குள் போனார் கனவான்.

* * *

இதே சமயத்தில் பின்கட்டில் ஒரு ருசிகரமான நிகழ்ச்சி நடந்துகொண்டிருந்தது. என்னவென்றால் ஜானகியின்

பாட்டியாகிய அம்மணியம்மாள் புலம்பிக்கொண்டிருந்தாள். அந்த அம்மாள் அன்று பகல் பன்னிரண்டு மணியிலிருந்தே விட்டுவிட்டுப் புலம்பிக்கொண்டும் கண்ணீர் வடித்துக் கொண்டும் இருந்தாள். அதற்குக் காரணம், அன்று காலை பத்து மணிக்கு ஜானகியின் தாய்மாமனாகிய சுந்தர மூர்த்தி வியாபார முறையில் பழக்கமான ஒருவருடன் பேசிக்கொண்டிருந்தார். அந்த வியாபாரி முன் சென்னையி லேயே பழக்கமானவர். அப்போது அந்த நண்பர் வெகு ஆடம்பர மான அலங்காரங்களுடன் மிகவும் புது மாதிரியாக அச்சடிக்கப் பட்ட ஒரு திருமண அழைப்பைச் சுந்தரமூர்த்தியிடம் நீட்டி, "இந்தப் பெண் உங்கள் தங்கையின் பெண் ஆயிற்றே, நீங்கள் இந்தக் கல்யாணத்துக்குப் போகவில்லையா?" என்று கேட்டார்.

சுந்தரமூர்த்தி அந்தப் பத்திரிகையைப் படித்துப் பார்த்தார். அது அன்று காலையில் நடக்கவிருந்த முத்துவீரப்பன் - ஜானகி திருமணப் பத்திரிகைதான். அதைப் படித்த சுந்தர மூர்த்தி தலையில் இடி விழுந்துவிட்டது போன்று கலங்கி விட்டான்; தன் கண்களை நம்பாதவன் போல் திருப்பித் திருப்பிப் பார்த்தான்; ஆம், முருகேசனுடைய மகள் ஜானகிக்குத் தான் திருமணம்.

உள்ளமும் உடலும் கொதிப்படைந்து கண்களில் நீர் சுரந்து விட்டது. தன்னுடைய தங்கை மகள் ஜானகி, தன்னுடைய மகன் நெல்லையப்பனைத் தவிர வேறு யாரையும் மணந்து கொள்ளச் சம்மதிக்க மாட்டாள் என்பதுடன், முருகேசன் அவருடைய தாயாராகிய அம்மணியம்மாளும் ஜானகியைப் பெற்ற தாமரைக்கண்ணியுங்கூட இல்லாத சமயத்தில் இவ்வளவு அவசரப்பட்டு மகளை யாரோ ஒருவனுக்கு மண முடிக்க மாட்டான் என்றே திடமாகச் சுந்தரமூர்த்தி நம்பியிருந் தான்.

மூன்று மாதங்களுக்கு முன்னால் அம்மணியம்மாள் சென்னைக்குப் போக வேண்டுமென்று சொன்னபோது சுந்தர மூர்த்தியே அந்த அத்தையைச் சென்னைக்குக் கூட்டிக்கொண்டு



போகத் தீர்மானித்தது, ஜானகியைப் பார்க்கவும் அவளை நெல்லையப்பனுக்கு மணமுடிப்பதைப்பற்றி முருகேசனுடன் பேசவுந்தான்.

சுந்தரியின்மேலுள்ள வெறுப்பால் எல்லாரும் பட்டணத் துக்குப் போய் அவளுடன் வசிக்க விருப்பமில்லாமல் இருந் தார்கள் என்றாலும் தக்க சமயத்தில் முருகேசனுடன் பேசி ஜானகியை நெல்லையப்பனுக்கு மணஞ்செய்துவிட வேண்டும் என்ற ஆவல் சுந்தரமூர்த்தி, அவருடைய மனைவி சந்திரா, ஜானகியைப் பெற்ற தாமரைக்கண்ணி, பாட்டி அம்மணி யம்மாள் ஆகிய எல்லாருக்கும் உண்டு. அதை எண்ணியே அம்மணியம்மாள் சென்னைக்குப் போக விரும்பியபோது சுந்தரமூர்த்தியே தன்னுடன் சென்னைக்கு வர வேண்டும் என்று சொன்னது. அம்மணியம்மாளுக்கு டைபாயிட் காய்ச்சல் வந்ததால் அந்தப் பயணம் நின்றுவிட்டது.

நண்பர் தந்த திருமணப் பத்திரிகையைப் படித்து நெடு நேரம் மனம் கொதித்துக்கொண்டிருந்த சுந்தரமூர்த்தி, 'திருமணம் காலையிலேயே முடிந்திருக்கும்; இனிமேல் எவ்வளவுதான் வருத்தப்பட்டு என்ன பயன்?' என்று மனத்தைத் தேற்றிக்கொண்டு, நண்பர், 'இந்தக் கல்யாணத்துக்குப் போக வில்லையா?' என்று கேட்டதற்கு விடையாக, "என் மைத்துனர் இந்தப் பெண்ணை என் மகனுக்குக் கொடுக்காமல் வேறு இடத்தில் கொடுப்பதால் எனக்கு அழைப்பு வரவில்லை" என்று மட்டும் சொல்லிவிட்டு, சுந்தரமூர்த்தி அதைப்பற்றித் தொடர்ந்து பேச விருப்பமில்லாமல் வியாபாரப் பேச்சில் இறங்கிவிட்டான். வியாபாரப் பேச்சு முடிந்ததும் சுந்தரமூர்த்தி நேரே பங்களாவுக்கு வந்து ஜானகியின் திருமணப் பத்திரிகை யைப் பார்த்த விவரத்தைச் சொன்னான். அதைக் கேட்ட எல்லாரும் அலறித் துடித்துவிட்டார்கள். எல்லாருடைய துக்கத் தையும்விட அம்மணியம்மாளுடைய 'ஓலந்தான் பெரிதாக இருந்தது. சந்திரா படபடத்துப் பேசிச் சுந்தரியை நிந்தித்துக் கொண்டு புலம்பினாள். தாமரைக்கண்ணி வாய் பேசாமல்

மனத்துக்குள்ளேயே குமுறிக் கண்ணீர் வடித்துக்கொண்டிருந்தாள். ஆனால், அம்மணியம்மாள்தான் வாய் ஓயாமல் பெருங் குரலில் ஓலமிட்டுக்கொண்டிருந்தாள். இந்தத் திருமணச் சேதியைச் சுந்தரமூர்த்தி வந்து சொன்னபோது பகல் பன்னிரண்டு மணி.

அதுமுதல் ஜானகியைக் கோட்டை ஸ்டேஷனிலிருந்து அழைத்து வந்த கனவான் அவளைக் கூடத்தில் உட்கார வைத்துவிட்டுத் தன் உத்தியோக உடையை மாற்றிக்கொள்ளப் போன நேரமான இரவு பத்து மணி வரைக்கும் அம்மணியம்மாள் விட்டுவிட்டு ஓலமிட்டுக்கொண்டேயிருந்தாள்.

உடையை மாற்றிக்கொண்ட கனவான் பின்கட்டில் உள்ளவர்களுக்குத் தான் ரயில்வே ஸ்டேஷனிலிருந்து வந்திருக்கிற பெண்ணைப்பற்றிச் சொல்ல அங்கே போனார்.

## அத்தியாயம் 31

அங்கே, இரவு ஆகாரத்தையும் சாப்பிட மறுத்துவிட்டுக் கட்டிலில் படுக்கையில் உட்கார்ந்தபடியே அம்மணியம்மாள், "ஐயோ! ஜானகி நெல்லையப்பனுக்காகத்தான் பிறந்திருக்கிறாள் என்று எண்ணிக்கொண்டிருந்தேனே! குழந்தைப் பருவத்திலேயே அவர்கள் இரண்டு பேரும் ஒருவரை விட்டு ஒருவர் பிரியாமல் எவ்வளவு ஆசை பாசமாக இருந்தார்கள்! முருகேசன் இப்படி என் ஆசையில் மண்ணைப்போடுவான் என்று தெரியாமற்போச்சே! அவனைச் சொல்லக் குற்றமில்லை. அந்தப் பழிகாரி, மூதேவி, சண்டாளி சுந்தரியின் வேலையாகத் தான் இருக்கும். இதுக்குத்தானே நான் மூன்று மாதத்துக்கு முன்னாலேயே பட்டணத்துக்குச் சுந்தரமூர்த்தியையும் கூட்டிக் கொண்டு போக ஆசைப்பட்டேன். பாழாய்ப்போன காய்ச்சல் வந்து கெடுத்துவிட்டதே! இனிமேல் அந்தப் பட்டணத்துக்குப் போகாவிட்டால்தான் என்ன? இங்கேயே இருந்து மூச்சைவிட



வேண்டியதுதான்" என்று கதறிக் கண்ணீர் விட்டுக்கொண்டிருந்தாள். அங்கே தாமரைக்கண்ணியும் சந்திராவும் சற்றுத் தூரத்தில் தரையில் உட்கார்ந்து கொண்டு அந்தப் புலம்பலை ஆமோதிக்கிற மாதிரி துயரத்தில் ஆழ்ந்து விம்மிக்கொண்டிருந்தார்கள்.

அம்மணியம்மாளின் புலம்பலைக் கேட்டுக்கொண்டே அங்கு வந்த கனவான் மற்றவர்களையும் பார்த்து, "அழ வேண்டாம். உங்களுக்கு ஒரு மங்களகரமான வெகு நல்ல சேதி கொண்டு வந்திருக்கிறேன்" என்றார்.

வியப்போடு விரித்த விழிகளுடன் எல்லாரும், "என்ன?" என்றார்கள்.

"ஜானகியின் திருமணம் நடைபெறவில்லை" என்றார்.

"அப்படியா! நிசந்தானா?" என்றாள் அம்மணியம்மாள்.

"நிசந்தான். அந்தத் திருமணத்துக்கு உடன்படாமல் ஜானகி வீட்டைவிட்டே ஓடிவிட்டாளாம்."

"யார் சொன்னது?", "எப்படித் தெரியும்?"," "நம்பத் தகுந்த சேதியா?" என்று ஏக காலத்தில் ஆளுக்கொரு கேள்வி போட்டார்கள்.

"நேரில் பார்த்ததுபோல் மிகவும் நம்பத் தகுந்தசேதிதான். துளிகூடச் சந்தேகம் வேண்டாம்" என்றார் கனவான்.

"நம்பத் தகுந்த யாராவது தந்தி கொடுத்தார்களா?" என்றாள் சந்திரா.

"தந்தி, கிந்தி ஒன்றும் வரவில்லை. சென்னையில் இருந்து வந்த ஒரு பெண்மணியால் நான் அறிந்துகொண்ட உண்மையான சேதி இது."

"யார் அந்தப் பெண்மணி?" என்றாள் அம்மணியம்மாள்.

"எல்லாரும் இங்கேயே இருங்கள். நான் போய் அந்தப் பெண்ணை இங்கே அழைத்து வருகிறேன். யாரும் பின்னால் வர வேண்டாம்" என்று சொல்லிவிட்டு அந்தக் கனவான் முன்

கட்டுக்குப் போய், "பின்கட்டிலுள்ள பெண்களைப் பார்க்க வேண்டுமென்று சொன்னாயே, வாம்மா போகலாம்" என்றார்.

ஜானகி உடனே எழுந்து அவரைப் பின்பற்றினாள். இவ்வளவு நல்ல சேதியைக் கொண்டுவந்த அந்தப் பெண்மணியைப் பார்க்கும் ஆவலால் சந்திராவும் தாமரைக்கண்ணியும் வழிமேல் விழிவைத்து முன்னால் வந்து நின்றுகொண்டிருந்தார்கள். அம்மணியம்மாள் தள்ளாமையினால் கட்டிலில் உட்கார்ந்தபடியே எதிர்பார்த்துக்கொணடிருந்தாள்.

கனவான் முன்னும் ஜானகி பின்னுமாகப் பின்கட்டில் புகுந்தார்கள். பின்கட்டுக்குப் புகும் இடத்தில் தலைக்கு மேல் இருந்த மின்சார விளக்கு குறைந்த சக்தியுள்ள பதினைந்து வோல்ட் விளக்கானதால் அங்கே வெளிச்சம் மட்டு. அந்த வெளிச்சத்தில் கனவானுக்குப் பினனால் வந்த ஜானகியின முக வெட்டு முன்னால் நின்றுகொண்டு உற்று உற்றுப் பார்த்த சந்திராவுக்கும் தாமரைக்கண்ணிக்கும் தெளிவாகத் தெரியவில்லை.

மேலும், தாமரைக்கண்ணியும் சந்திராவும் ஒன்பது வருடங்களுக்கு முன்னால், ஜானகி பன்னிரண்டு வயதுச் சிறுமியாக இருந்தபோது அவளை விட்டுப் பிரிந்தவர்கள். அதனால உயரத்திலும் கனத்திலும் உருவம் மாறிவிட்ட ஜானகியை உடனே அடையாளம் கண்டுகொள்வது சுலபமல்ல. அதேபோல் ஜானகியும் சந்திராவையோ தன் தாயார் தாமரைக்கண்ணியையோ அடையாளம் கண்டுகொள்ள முடியவில்லை. முன்னால் நின்ற அவர்களைக் கடந்து அந்தக் கனவானும் ஜானகியும் அம்மணியம்மாளிருந்த கூடத்துக்குப் போனார்கள். சந்திராவும் தாமரைக்கண்ணியும் பின் தொடர்ந்தார்கள். அம்மணியம்மாள் இருந்த இடத்தில் மிகப் பிரகாசமான வெளிச்சம் இருந்தது. அம்மணியம்மாளை அணுகிய ஜானகி, அந்த அம்மாளை உற்றுப் பார்த்துவிட்டு, "பாட்டி" என்று முன்னால் தாவினாள். அந்தக் குரலைக் கேட்ட பாட்டி அடையாளம் கண்டு கொண்டு, "ஜானகியா! அடி என் கண்ணே! எப்படியம்மா தப்பி



வந்தாய்?" என்று சொல்லிக்கொண்டே ஜானகியை இழுத்து மார்புற அணைத்துக்கொண்டு பரவசத்தில் ஆழ்ந்துவிட்டாள். உடனே தாமரைக்கண்ணியும் சந்திராவும் ஜானகிதான் என்று அறிந்து தனித்தனியே அவளைத் தழுவி உச்சி மோந்து உள்ளங் கனிந்து மெய் மறந்துவிட்டார்கள். அப்போது அங்கிருந்த ஆனந்தத்தை அளவிடவும் முடியுமா?

மகிழ்ச்சியின் மயக்கம் நீங்கிய பின் அம்மணி ஜானகியைப் பார்த்து, "உன்னை அடையாளம் தெரிந்துகொள்ளாமல்தான் உன் மாமன் யாரோ ஒரு பெண் வந்திருக்கிறாள் என்று சொன்னானா?" என்றாள்.

பக்கத்தில் நின்றுகொண்டிருந்த கனவான், "இல்லையில்லை. அடையாளம் கண்டுகொண்டதனால்தான் ஆண்டார் தெருவில் வக்கீல் வீட்டுக்குப் போகவேண்டும் என்ற ஜானகியை இங்கே அழைத்து வந்தேன்" என்றார்.

அதைக் கேட்ட ஜானகி, தன்னை அழைத்து வந்தது மாமா சுந்தரமூர்த்தியா என்று வியப்படைந்து, அழைத்து வந்த கனவானை உற்றுப் பார்த்து ஆராய்ந்துவிட்டு அடையாளம் கண்டுகொண்டு, "மாமா! துரை மாதிரி வேசம் போட்டுக்கொண்டு யாரென்று காட்டிக்கொள்ளாமலே ஏமாற்றிவிட்டீர்களே! பட்டணத்தில் குடுமி வைத்திருந்தீர்கள். இப்போது கிராப் செய்துகொண்டிருக்கிறீர்கள். அங்கே மீசை வைத்திருந்தீர்கள்; இப்போது மீசையில்லை. உங்கள் குரலும் மாறியிருக்கிறது. அதனால் நான் ஏமாந்தே போனேன்" என்று சிரித்தாள். எல்லாரும் சிரித்தார்கள்.

"அதெல்லாம் இருக்கட்டும்; நாங்களெல்லாம் இல்லாத சமயத்தில் உன்னுடைய சம்மதமும் இல்லாமல் எப்படி உங்கப்பனும் அந்த மாய்மாலக்காரி உன் சித்தியும் இந்தக் கல்யாணத்துக்கு ஏற்பாடு செய்தார்கள்?" என்றாள் பாட்டி.

"பாட்டி! அப்பாவையும் சித்தியையும் குறை கூறிப் பயனில்லை. நீங்கள் சித்தியின் கல்யாணத்துக்கு வாங்கிய

கடனுக்கு வட்டி கட்ட முடியாமற்போய்விட்டது. அந்தக் கடன் பத்திரத்தை யாரோ மேடோவர் வாங்கிப் பிராது போட்டு நம் வீட்டையும் வயல்களையும் உடன் ஜப்தி செய்து விட்டார்கள். அந்தக் கடன் வட்டியுடன் கிட்டத்தட்டப் பதினாலாயிரம் ரூபாயாம். அதைக் கட்ட வழியில்லாமல் அப்பா தவித்துக்கொண்டிருந்தபோது இந்த முத்துவீரப்பன் என்ற கல்யாண மாப்பிள்ளை அப்பாவையும் சித்தியையும் தன் வீட்டுக்கு அழைத்து விருந்து செய்து கடனைத் தான் அடைத்துவிடுவதாகச் சொல்லி அங்கேயே பரிசம் போட்டுச் செலவுக்கு ரூபாய் ஐயாயிரம் ரொக்கமும் கடனுக்கு வேண்டிய தற்கு மேல் மிச்சத்தை வைத்துக்கொள்ளச் சொல்லி ஐம்பதினாயிரத்துக்குச் செக்கும் கொடுத்தும் வசப்படுத்திவிட்டான். அப்பா என்ன செய்வார்? கடனைக் கட்ட வேறு வழியில்லாமல் என்னைப் பலியிடச் சம்மதித்துவிட்டார்'' என்று அதன் பிறகு நடந்ததையெல்லாம் சொல்லி, தான் பக்கத்து வீட்டுப் பாத்திமாவின் யோசனைப்படி கல்யாணத்துக்குச் சம்மதிப்பதுபோல் பாசாங்கு செய்து தப்பி வந்ததையும், பாட்டி திருச்சியில் இருப்பதாக வந்த கடிதத்தைப் படித்திருந்த நினைப்பில் திருச்சி பத்மாவதி வீட்டுக்கு வந்து அங்கிருந்து கொண்டு பாட்டி இருக்குமிடத்தைத் தேடலாம் என்ற ஆசையுடன் வந்ததாகவும் சொன்னாள்.

“ஜானகி! நீ பத்மாவதியைப் பார்க்க வேண்டாமா? ஆண்டார் தெருவுக்குப் போகலாமா?'' என்றார் சுந்தரமூர்த்தி.

“போங்க மாமா, கேலி செய்யாதீங்க'' என்றாள் ஜானகி.

விடிகிற வரையிலும் தூங்க மனம் வராமல் பழைய நினைவுகளையெல்லாம்பற்றிப் பேசிக்கொண்டு ஆழம் காண முடியாத சந்தோஷ சாகரத்தில் அழுந்திக் கிடந்தார்கள் எல்லாரும்.

சுந்தரமூர்த்தி, கனவான் உடையில் ஜானகியைப் பங்களாவுக்கு அழைத்து வந்தபோது அவருடைய மகன்



நெல்லையப்பன் பங்களாவின் மாடியிலுள்ள அறையில் படுத்துக்கொண்டிருந்தான்.

சென்னையில் ஜானகியைவிட்டுப் பிரிந்தபோது அவனுக்குப் பதினாறு வயது. ஜானகியுடன் கொஞ்சி விளையாடிக்கொண்டிருந்ததையும் அவள் அவனிடத்தில் கொண்டிருந்த பாசத்தையும் அவளைப் பிரிந்தபின் அடிக்கடி எண்ணி ஏங்கியவன். அம்மணியம்மாள் திருச்சிக்கு வந்து இவர்களுடன் தங்கிவிட்ட பின் அந்த அம்மாளும் தன் தாயார் சந்திராவும் அத்தை தாமரைக்கண்ணியும் அடிக்கடி அவனுக்கும் ஜானகிக்கும் திருமணம் செய்துவிட வேண்டும் என்று அவனுக்கு முன்னாலேயே பேசுவதைக் கேட்டு மனத்துக்குள்ளேயே மகிழ்ந்துகொண்டிருந்தவன். இப்போது அவனுக்கு வயது இருபத்தைந்து. திருமணத்தைப்பற்றிப் பருவ உணர்ச்சிகள் ஊறிவிட்டவன். அம்மணியம்மாள் காய்ச்சலாகப் படுப்பதற்கு முன்னால் சென்னைக்குப் போக விரும்பிய சமயத்தில் அவனுக்கும் ஜானகிக்கும் மணமுடிப்பதைப்பற்றி முருகேசனிடம் பேசுவதற்காகத் தான் சென்னைக்குப் போக விரும்புவதாகவும் அவனிடமே சொல்லியிருக்கிறாள்.

அப்போதே நெல்லையப்பன் ஜானகியோடு இல்வாழ்க்கை நடத்தப்போகிற இன்பத்தை எண்ணியெண்ணித் தேன் நிலவுக்குத் திட்டம் போடத் தொடங்கிவிட்டான்.

அப்படியிருக்க, அன்று மத்தியான்னம் தன் தந்தை சுந்தரமூர்த்தி, ஜானகிக்கும் யாரோ ஒரு முத்துவீரப்பனுக்கும் அன்று காலையிலேயே திருமணம் முடிந்துவிட்டது என்ற சேதியைச் சொன்னபோது நெல்லையப்பனுக்கு உண்டான ஏமாற்றம் அவனுடைய இதயத்தைப் பிளந்துவிட்டது போன்ற துன்பத்தை உண்டாக்கிவிட்டது. மற்றவர்களெல்லாம் அலறித் துடித்து அழுதார்கள். ஆனால், நெல்லையப்பன் அந்த மகத்தான அதிர்ச்சியினால் மாரடைப்பு வந்தவன் போல் பேச்சற்று உட்கார்ந்துவிட்டான். சிறிது நேரம் பித்தம் பிடித்தவன்போல்

இருந்துவிட்டுச் சாப்பிடாமல் எழுந்து போய் மாடியிலுள்ள தன் அறையில் படுத்துக் குமுறிக்கொண்டிருந்தான்.

ஜானகிக்குத் திருமணம் நடந்துவிட்டது என்ற சேதியைக் கொண்டுவந்த சுந்தரமூர்த்தி .சிறிது நேரம் பெண்களோடு சேர்ந்து தானும் துயரப்பட்டுவிட்டு, மீறிப்போன காரியத்துக்கு இனிமேல் வருந்திப் பயனில்லையென்று வியாபார விஷயமாக உடனே கவனிக்க வேண்டிய காரியமாகக் காரியாலயத்துக்குப் போய்விட்டான்.

பெண்கள் வெகுநேரம் அழுதுகொண்டிருந்துவிட்டு ஒருவாறு ஓய்ந்தபின் நெல்லையப்பன் சாப்பிடாமல் போய்விட்டது நினைவுக்கு வந்து சந்திரா மாடிக்குப் போய் அவனைச் சாப்பிட அழைத்தாள். அவன் மறுத்துவிட்டான். பகலுணவு சாப்பிடவில்லை.

இரவு எட்டு மணிக்குச் சந்திராவும் தாமரைக்கண்ணியும் நெல்லையப்பனுடைய மாடி அறைக்கே சாப்பாடு கொண்டு போய் அவனை வற்புறுத்திச் சாப்பிடச் செய்தார்கள். ஓரளவு அவர்களுடைய கட்டாயத்துக்காகச் சாப்பிட்டுவிட்டுப் படுத்துக்கொண்டான். ஆனால், தூக்கம் வரவில்லை. நிச்சயம் தன்னுடைய மனைவிதான் என்று கனவு கண்டுகொண்டிருந்த தன் அத்தை மகள் யாரோ ஒருவனுக்கு மாலையிட்டுவிட்ட சேதியைக் கேட்ட அவனுக்குத் தூக்கம் எப்படி வரும்?

கடைச்சாமம் வரையிலும், 'காலையிலேயே கல்யாணம் நடந்துவிட்டது. இந்நேரம் சாந்தி முகூர்த்தம் நடந்துகொண்டிருக்கும்' என்று புதுமணத் தம்பதிகளின் பள்ளியறையைப் பற்றியும் அவர்களுடைய லீலைகளையும் கற்பனை செய்துகொண்டே படுக்கையில் புரண்டுகொண்டிருந்துவிட்டுப் பின் அயர்ந்து தூங்கிவிட்டான். விடிந்து வெகு நேரம்வரை விழிக்கவில்லை. அதனால் ஜானகி அந்தப் பங்களாவுக்கு வந்துவிட்டது அவனுக்குத் தெரியாது.

அப்படியிருக்க, ஜானகி வந்துவிட்ட மாபெரும் மகிழ்ச்சியால் விடியவிடிய அவளுடன் பேசிக்கொண்டிருந்த சந்திராவும் தாமரைக்கண்ணியும் விடியுமுன் வெந்நீர் காய வைத்து ஜானகியை நீராடச் செய்து அவர்களும் நீராடினார்கள். சந்திரா காலைச் சிற்றுண்டியும் காப்பியும் தயார் செய்யும் வேலையில் ஈடுபட்டாள். தாமரைக்கண்ணி மகளுக்குச் சடை பின்னிவிட்டாள். ஜானகி முகத்துக்குப் பொடி பூசி ஒப்பனை செய்து நெற்றிக்குத் திலகமிட்டுக் கண்ணாடியைப் பார்த்துக்கொண்டே, "ஏம்மா! அத்தான் ஊரில் இல்லையா?" என்றாள்.



அதைக் கேட்டுக்கொண்டே அங்கு வந்த சந்திராவுக்கும் தாமரைக்கண்ணிக்கும் அப்போதுதான் நெல்லையப்பன் நினைவு வந்தது. அதன் பிறகுதான் நேற்றுப் பகல் ஜானகிக்குக் கல்யாணம் நடந்துவிட்டது என்ற சேதியைக் கேட்டவுடன் அவன் அடைந்த துயரத்தையும், சாப்பிடாமல் மாடிக்குப் போய் அழுதுகொண்டிருந்ததையும், இரவு எட்டு மணிக்குமேல் கட்டாயத்துக்காகக் கொஞ்சம் சாப்பிட்டதையும் சந்திராவே ஜானகிக்குச் சொன்னாள்.

சொல்லிவிட்டு, "இன்னும் அழுதுகொண்டுதான் கீழே வர மனமில்லாமல் இருக்கிறான்போல் இருக்கிறது. மணி எட்டரைக்குமேல் ஆகிவிட்டதே!" என்று சொல்லிக்கொண்டே மாடிக்கு ஓடினாள்.

நெல்லையப்பன் விழித்துக்கொண்டே ஜானகியை நினைத்துப் பெருமூச்சு விட்டவண்ணம் படுத்திருந்தான்; தாயார் அறைக்குள் வந்ததையும் அறியாமல் முகட்டைப் பார்த்துக்கொண்டிருந்தான்.

அவன் கட்டிலுக்கு அருகில் வந்து சந்திரா, "ஜானகி வந்திருக்கிறாளே, நீ பார்க்க வேண்டாமா? எழுந்து வா" என்றாள்.

"போம்மா, கேலி பண்ணாதே. எனக்குக் காப்பி கீப்பி ஒன்றும் வேண்டாம்" என்று திரும்பிப் படுத்துக்கொண்டான்.

"கேலியல்லடா குழந்தே! நானா உன்னைக் கேலி செய்வேன்? ஜானகி அந்தக் கல்யாணத்துக்குச் சம்மதிக்காமல் முகூர்த்தத்துக்கு முந்தின நாள் ராத்திரியே யாருக்கும் தெரியாமல் வீட்டைவிட்டு ஓடிப்போய் எழும்பூரில் ரயிலேறி நேற்று ராத்திரி கோட்டை ஸ்டேஷனில் வந்து இறங்கினாளாம். உங்கப்பா அவளைக் கண்டு பத்து மணிக்கு இங்கே அழைத்துக் கொண்டு வந்தார்" என்றாள் அன்னை.

விலுக்கென்று எழுந்து உட்கார்ந்த நெல்லையப்பன், "அம்மா! அம்மா! நிசந்தானா?" என்றான்.

"கடவுள் சாட்சியாக"

கட்டிலிலிருந்து எகிறிக் குதித்து, "போகலாம் அம்மா ஜானகியைப் பார்க்க" என்று அறையின் வாசலுக்குப் போனான். சந்திரா அவனை நிறுத்தி, "பொறு பொறு. நான் சொல்வதைக் கேள். ஜானகியும் உன்னைப் பார்க்கத்தான் ஆவலாகக் காத்திருக்கிறாள். அவள் குளித்துவிட்டு ஒப்பனை செய்துகொண்டு தேவதை போல் உன்னை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறாள். நீ நேற்றெல்லாம் அழுது கண் சிவந்து முகம் வீங்கிக் களையிழந்திருக்கிறாய். இப்படியே போய் அவளைப் பார்க்க வேண்டாம். கொல்லைக்கு நேராகப் போய் குளித்துவிட்டு வந்து, கலைந்து கிடக்கிற கிராப்பை ஒழுங்கு படுத்தி ஒப்பனை செய்துகொண்டு அப்புறம் அவளைச் சந்திக்கலாம்" என்றாள் தாய்.

மகன் ஒத்துக்கொண்டான்.

என்றுமில்லாத சுறுசுறுப்புடன் கொல்லைப்புறம் சென்று குளித்துவிட்டுத் தன் அறைக்கு வந்து வழக்கத்துக்கு அதிகமாகத் தன்னை அலங்கரித்துக்கொண்டு ஜானகியை நாடி வந்தான். அவளும் அவனை எதிர்பார்த்துக்கொண்டுதான் இருந்தாள்.

இருவரும் சந்தித்தார்கள். சந்திக்கப்போவது யாரை என்று இருவரும் அறிந்திருந்ததால், எளிதில் ஒருவரையொருவர் அடையாளம் கண்டுகொண்டார்கள். எனினும், ஒன்பது ஆண்டுகளுக்கு முன் விளையாட்டுப் பருவத்தில் பார்த்து மனத்தில் பதிந்திருந்த உருவத்துக்கும் இப்போதுள்ள உருவத்துக்கும் உள்ள வித்தியாசம் இருவரையும் வியக்கச் செய்துவிட்டது. அத்துடன் காதல், காமம் என்ற சொற்களுக்குரிய எண்ணமேயில்லாமல் தூய அன்புடன் ஒருவரோடொருவர் உறவாடிய அந்தக் காலத்துப் பார்வை வேறு, இப்போது பார்க்கும் பார்வை வேறு. சிறிது நேரம் ஒருவரை ஒருவர் நேராக உற்றுப் பார்த்த பின் ஜானகி பருவத்துக்குரிய நாணத்தால் புன்னகையோடு தலைகுனிந்துகொண்டாள்.



நெல்லையப்பனும் அவன் பருவத்துக்குரிய ஆண் பதற்றத்துடன், "ஜானகி! என்னை மறந்துவிட்டாயா?" என்றான்.

ஜானகி தலைகுனிந்தபடியே, "நான் யாரையும் மறக்கவில்லை. நீங்கள் எல்லாருந்தான் இத்தனை வருஷங்களாக எங்களை அடியோடு மறந்துவிட்டதுமல்லாமல், இருக்கிற விலாசம் தெரிந்தால் எங்கே வந்து ஒட்டிக்கொள்வார்களோ என்று இருக்கிற இடத்தைக்கூடத் தெரிவிக்கவில்லை. போதாக் குறைக்கு யாத்திரைக்கு வந்த பாட்டியையும் இங்கேயே நிறுத்திக்கொண்டு அவர் உங்களுடன் இருப்பதைக்கூட அறிவிக்கவில்லை" என்று பொரிந்துவிட்டாள்.

இதைக் கேட்ட பாட்டி அம்மணியம்மாள் எழுந்து வந்து ஜானகியை அணைத்துக்கொண்டு, "அடி என் ராசாத்தி! என்ன, இப்பவே அவனை இந்தப் போடு போடுகிறாய்?" என்று சொல்லிப் பூரிப்படைந்தாள்.

பக்கத்தில் நின்றுகொண்டிருந்த சுந்தரமூர்த்தி, "அத்தை! ஜானகி போடுகிற போடு நெல்லையப்பனுக்கல்ல. அதெல்லாம் எனக்குத்தான்" என்றார்.

சந்திராவும், தாமரைக்கண்ணியும் "ஆமாம், ஆமாம். உங்களுக்குத்தான்" என்று சொல்ல எல்லாரும் கொல்லென்று சிரித்துவிட்டார்கள்.

சிரிப்பு அடங்கியபின் ஜானகியின் அழகையே பார்த்துக் கொண்டு, வளர்ச்சியால் ஏற்பட்ட மிகவும் கவர்ச்சியுள்ள பல மாறுதல்களையும் எண்ணிக்கொண்டு நின்ற நெல்லையப்பன் தன் தகப்பனைப் பார்த்து, ''அப்பா! நான் சற்றுமுன் ஜானகியைப் பார்த்தவுடன் யாரோ ஓர் அழகான பெண் என்று திகைத்துவிட்டேன். அவ்வளவு மாறுதல்கள்! நீங்கள் எப்படி நேற்று இரவு நேரத்தில் ஜானகியை அடையாளம் கண்டு கொண்டீர்கள்?'' என்றான்.

''ஓ அதுவா? நேற்று கோட்டை ஸ்டேஷன் மாஸ்டரைப் பார்த்துப் பம்பாய்க்குச் சரக்கு அனுப்ப ஒரு 'வாகன்' வேண்டுமென்று கேட்கப் போனேன். நான் ஸ்டேஷனுக்குள் நுழையுமுன் வெளியே வந்த ஓர் இளம்பெண் என்னைப் பார்த்து ஆண்டார் தெருவுக்கு வழி எது என்று கேட்டது. யாரோ ஓர் இளம் பெண் ஊருக்குப் புதிது தனியாக வந்திருக்கிறதே என்று டார்ச்சு விளக்கைப் பிடித்து முகத்தைப் பார்த்தேன்; முகம், பார்த்த முகம் போல் இருக்கிறதே என்று கொஞ்ச நேரம் உற்றுக் கவனித்தேன். முகத்தில் நேராக வீசிய வெளிச்சத்தால் கண் கூசிய ஜானகி இரண்டு கைகளாலும் கண்களை மூடிக் கொண்டது. அப்போது ஜானகியின் இடக்கையில் உள்ள வட்ட வடிவமுள்ள அழகான மச்சம் எனக்கு அடையாளம் காட்டிக்கொடுத்துவிட்டது. அந்த மச்சத்தை நாமெல்லாரும் பார்த்து அதைப்பற்றிப் பேசியும் இருக்கிறோம். வேணுமானால், இப்போது ஜானகியின் இடக்கையின் பின்புறத்தைக் காட்டச் சொல்லிப் பாருங்கள்'' என்றார் சுந்தரமூர்த்தி.

''ஆமாம்; ஆமாம். அப்படி மச்சம் வேறு யாருக்கும் இல்லை'' என்றார்கள் மற்ற பெண்கள்.

ஜானகி வெட்கப்பட்டுக்கொண்டு அறைக்குள் ஓடிவிட்டாள்.

## அத்தியாயம் 32

கல்யாணப்பெண் காணாமல் போய்விட்டாள் என்ற நிமிஷம் முதல் ஏழு நாள்கள் இரவு பகலாக ஓய்வு ஒழிச்சலில்லாமல் தேடாத இடமெல்லாம் தேடி மனம் உடைந்து போன முத்துவீரப்பனுக்கு அந்த ஏமாற்றம் கோபாவேசமாகக் குமுறிவிட்டது. அந்தக் கோபத்தைச் செலுத்த வேறு வழியில்லாமல், தான் திருமண ஏற்பாடுகளுக்காகச் செய்துவிட்ட செலவு தொகை முழுவதையும் கொடுத்தாக வேண்டுமென்று முருகேசனையும் சுந்தரியையும் பயமுறுத்தினான்.

கல்யாணப்பெண் காணாமற்போனதில் முத்துவீரப்பனைப் போலவே ஏமாற்றமும் கவலையும் அடைந்துவிட்ட முருகேசனும் சுந்தரியும் தங்களையும் ஏமாற்றிவிட்டு அந்தப் பெண் ஓடி விட்டதனால் தாங்கள் செய்த குற்றம் ஒன்றுமில்லை என்பதை விளக்கிப் பலபடியாகச் சமாதானம் சொன்னார்கள். அக்கம்பக்கத்திலுள்ளவர்களும் அந்த உண்மையை விளக்கி முத்துவீரப்பனைச் சமாதானப்படுத்தினார்கள்.

முத்துவீரப்பன் பரிசமாகக் கொடுத்திருந்த வைரநகைகளையும் பட்டுப் புடைவையையும் கடனைக் கட்டிவிட்டு மிச்சத்தைச் சன்மானமாக வைத்துக்கொள்ளும்படி பின்தேதியிட்டுக் கொடுத்திருந்த செக்கையும் முருகேசன் தானாகவே திருப்பிக் கொடுத்துவிட்டான். கைச்செலவுக்கென்று கொடுத்திருந்த ஐயாயிரம் ரூபாயில் சுமார் ஐநூறுரூபாய் பெண் வீட்டில் நடத்த வேண்டிய வைபவங்களுக்காக ஏற்கெனவே செலவாகிவிட்டது. அதைச் சரிக்கட்ட சுந்தரியின் கையிலிருந்த கல்லிழைத்த வளையல்களை அடகு வைத்து அந்த ஐயாயிரம் ரூபாயையும் செலுத்திவிட்டான் முருகேசன்.

தன்னுடைய கையாளான நஞ்சப்பன் பேரால் தாவா செய்து முருகேசனுடைய வீட்டையும் வயல்களையும் முத்துவீரப்பன் ஜப்தி செய்திருந்தான் அல்லவா? முருகேசன் எதிர் வியாஜ்யம் செய்ய முடியாது தீர்ப்புக் கூறி சொத்துகள்

ஏலத்துக்கு வந்துவிடும். அவற்றைத் தானே ஏலத்தில் எடுத்துக் கல்யாண ஏற்பாடுகளுக்குச் செய்துவிட்ட செலவுகளில் கணிச மான அளவு மீட்டுக்கொள்ளலாம் என்ற எண்ணத்தில் முத்து வீரப்பன் ஒருவாறு அடங்கிவிட்டான். அத்துடன் ஜானகியின் மீது அவன் மனத்தில் வளர்ந்துவிட்ட மையல் குறையவில்லை. ஜானகியைக் கண்டுபிடித்துவிட்டால் அவளுக்குப் புத்தி சொல்லித் தன்னை மணந்துகொள்ளும்படி முருகேசனும் சுந்தரி யும் முயற்சி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டான். அவர்களும் முயல்வதாக வாக்களித்தார்கள்.

முருகேசனுடைய நிலைமை மிகவும் பரிதபிக்கத்தக்கதாகி விட்டது. கடன் தீர்ந்துவிட்டது என்றும் வயல்களில் விளைச்சல் தவறிவிட்டாலும் முத்துவீரப்பன் கொடுத்திருந்த ஐம்பதி னாயிரம் ரூபாய் செக்கை மாற்றிக் கடனுக்குப் பதினாலாயிரம் போக மீதி இருபத்தாறாயிரம் இருக்கிறதனால் கவலையின்றி இருக்கலாமென்றும் பெருமகிழ்ச்சியடைந்திருந்தான். அந்த மகிழ்ச்சியில் மண் விழுந்துவிட்டது. கையிலிருந்த பணமெல்லாம் வயல்களின் முட்டுவளிச் செலவிட்டு இப்போதுதான் நடவு நட்டிருக்கிறது. விளைச்சல் எப்படியிருக்குமோ? அதையும் அறுவடை செய்து விற்றபின்தான் இன்னும் நான்கு மாதங்கள் சென்று கைக்குப் பணம் வரும். அதுவரையிலும் வீட்டுச் செலவுக்குப் பணம் வேண்டும்.

எல்லாவற்றிற்கும் மேலாக வீடும் வயல்களும் ஜப்திக்கு உள்ளாகியிருக்கிற வியாஜ்ஜியம் பயமுறுத்திக்கொண்டு இருக் கிறது. எதிர்வழக்காட வழியில்லாவிட்டாலும் கடனைக் கட்ட வாய்தா கேட்டுக்கொள்ளவேனும், ஒரு வக்கீல் வைக்க வேண்டும். அதற்கும் பணம் வேண்டும்.

வாய்தா வாங்கினாலும் கடனைக் கட்டுவது எப்படி? எப்படி யும் தீர்ப்பு வாதிக்கு அனுகூலமாகத்தான் இருக்கும். கடன் வீட்டின்மேல் இருப்பதால், வீடுதான் ஏலத்துக்கு வரும். வீடு போய்விடும். வீடு போனால் வாழ்ந்த வாழ்வு எல்லாம் போன மாதிரிதான்.



இந்தச் சமயத்தில் தன் தாயார் இருந்தாலும் எங்கேயாவது பணம் தேட ஒத்தாசையாக இருக்கும். அந்த அம்மாளும் யாத்திரைக்குப் போனவர் திரும்பி வரவில்லை. குடும்பத்துக்கு மிகவும் ஒத்தாசையாக இருந்த மைத்துனர் சுந்தரமூர்த்தியும் அவருடைய குடும்பத்தோடு தாமரைக்கண்ணியையும் கூட்டிக் கொண்டு எங்கே போனார்களோ தெரியவில்லை.

இதுவரையிலும் எதைச் சொன்னாலும் தட்டாமல் நடந்து கொண்ட வெகு புத்திசாலியான அருமை மகள் ஜானகி சம்மதித்தவள் போல் நடித்துக் குடும்பம் கவிழ்ந்துபோகும்படி காலை வாரிவிட்டாளே! தன் ஒரே குழந்தை பருவப்பெண், தனியே ஓடியிருக்கிறாள். எங்கே போய் என்ன கதியடைவாளோ, அது வேறு கவலை—என்றெல்லாம் எண்ணியெண்ணி முருகேசன் ஆறாத் துயரத்தில் ஆழ்ந்துவிட்டான்.

சுந்தரியோ, அவனைவிட அதிகம் துயரம் அடைந்தாள். அவள் சிறு பிராயத்திலிருந்து ஆடம்பரமாக உடை அணிந்து கொண்டு உல்லாசமாக ஊர் சுற்றுவதில் ஆசை மிகுந்தவள். முருகேசனை மணந்துகொண்டபின் அவன் அவள்மீது கொண் டிருந்த மோகத்தாலும் மாமியார் அம்மணியம்மாள் மகனை மகிழ்விக்க வந்த இளைய மருமகள் என்று அசாதாரண சலுகை காட்டியதாலும் அந்த ஆடம்பர உல்லாச வாழ்க்கைக்குப் போதிய வசதிகள் கிடைத்தன. பல வருடங்கள் அந்த உல்லாச வாழ்க்கையை அனுபவித்தாள். சிறுகச் சிறுக அந்த உல்லாச வாழ்க்கை ஒடுங்க வேண்டியதாகிவிட்டது.

வயல்களிலிருந்து வருமானம் குறைந்ததாலும், ஜானகி ஹாஸ்டலில் தங்கிப் படிப்பதற்கான செலவுகளாலும், வீட்டின் மேலிருக்கும் கடனைப்பற்றிய கவலையினாலும் உல்லாச வாழ்க்கைக்கு இடமில்லாமற்போய்விட்டது.

அந்த நிலைமையில் ஜானகியை முத்துவீரப்பனுக்கு மண முடிக்க நிச்சயம் செய்ததில் தான் வளர்த்த மகளுக்குச் செல் வச் சிறப்பும் அழகும் அமைந்த மணமகன் கிடைத்துவிட்ட

மகிழ்ச்சியோடு மணமகன் கொடுத்த விலையுயர்ந்த பரிசங்களும், ரொக்கம் ஐயாயிரம் ரூபாயும், ஐம்பதினாயிரம் ரூபாய்க்குச் செக்கும் சுந்தரியைச் சொக்கவைத்துவிட்டன. வசதியற்றுப்போனதால் வாடிக்கிடந்த உல்லாச வாழ்க்கை மீண்டும் வளம் பெற்றுவிட்டது என்ற பூரிப்பில் புளகாங்கிதம் அடைந்திருந்தாள்.

அந்தப் பூரிப்பில் நெருப்பைக் கொட்டிவிட்டு ஜானகி எங்கேயோ ஓடிப் போய்விட்டாள். அதனால் சுந்தரியின் மனம் எரிந்துகொண்டிருக்கிறது.

உடனடியாக முருகேசனை நடுங்கச் செய்துகொண்டிருப்பது வீடு ஏலத்தில் போய்விடுமே என்ற விசாரந்தான். நஞ்சப்பன் பேரால் முத்துவீரப்பன் வீட்டின்மேல் இருந்த கடனுக்காகத் தாவா செய்திருந்த வழக்கு விசாரணைக்கு வரும் நாள் நெருங்கிவிட்டது.

எப்படியாவது ஒரு வக்கீல் வைத்து வாய்தா வாங்கிக்கொண்டு பணம் தேட முயற்சி செய்ய வேண்டுமென்று தீர்மானித்தான்; வாய்தா முடிவதற்குள் தன் தாயார் வந்தாலும் வந்துவிடலாம் என்ற ஆவலினால் சுந்தரியின் நகையின்மேல் இன்னும் கடன் வாங்க வாய்தா கேட்பதற்கு ஒரு வக்கீலை அமரத்தினான்.

விசாரணைக்குக் குறிப்பிட்டிருந்த நாளில் வக்கீலுடன் முருகேசனும் சுந்தரியும் கோர்ட்டுக்குப் போனார்கள். வெகு நேரம் காத்திருந்தும் இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவில்லை. வேறு வேறு வழக்குகள் விசாரிக்கப் பட்டுக்கொண்டிருந்தன.

வெகு நேரம் சென்று வக்கீல் வெளியே இருந்த முருகேசனிடம் வந்து, "உங்கள் வீட்டின்மேல் இருந்த வழக்குத் தீர்ந்து போய்விட்டதாம். தாவா தொகை பூராவும் கோர்ட் செலவுடன் யாரோ நாகராஜன் என்பவர் அம்மணியம்மாளுக்



காகப் பத்துப் பதினைந்து நாள்களுக்கு முன்னாலேயே கட்டிவிட்டார்களாம்" என்றார்.

இதைக் கேட்ட முருகேசனும் சுந்தரியும் நரகத்திலிருந்த அவர்களைச் சொர்க்கத்தில் வைத்துவிட்டது போன்ற இன்பத்தை அடைந்துவிட்டார்கள் என்றால் மிகையன்று. ஆனாலும், 'இந்த நாகராஜன் என்பவர் யார்? அம்மணியம்மாளுக்காக இவ்வளவு பெருந்தொகையைக் கட்ட அவருக்கு என்ன அக்கறை? அம்மணியம்மாளே பணம் அனுப்பிக் கட்டச் செய்திருந்தாலும் அந்த அம்மாளுக்கு இவ்வளவு பணம் எங்கிருந்து கிடைத்திருக்கும்? ஒரு வேளை, யாத்திரைக்குக் கூட்டிக்கொண்டு போன பணக்காரச் சீதாலக்ஷ்மியம்மாள் தந்திருப்பாளோ?' என்றெல்லாம் எண்ணி வியப்படையச் செய்துவிட்டது.

கடனைப்பற்றிய கவலை விட்டொழிந்தது. ஆனால், மகளைப்பற்றிய கவலை மருட்டத் தொடங்கிவிட்டது, முருகேசனுக்கு. 'அழகில் சிறந்த பருவப்பெண்; தனியே போயிருக்கிறாள். வழியில் யாரால் அவளுக்கு என்ன துன்பம் நேருமோ? எங்கே போயிருப்பாள்? உள்ளூரில் அவள் போகக்கூடிய எல்லா இடங்களிலும் தேடியாகிவிட்டது. வெளியூர்களுக்கு அவள் போனதேயில்லை. அப்படியிருக்க, எந்த ஊருக்குப் போயிருக்க முடியும்?' என்றெல்லாம் முருகேசன் கவலைப்பட்டுக்கொண்டிருந்தான்.

சுந்தரியின் கவலை இதற்கு முற்றிலும் வேறாக இருந்தது. ஜானகியை மணந்துகொள்ளும் ஆசையினால் முத்துவீரப்பன் ஐம்பதினாயிரம் ரூபாய்க்குச் செக்கும் ரொக்கம் ஐயாயிரம் ரூபாயும் உடனடியாகத் தந்தான்; மேலும் எது வேண்டுமானாலும் தரக்கூடியவன். அதனால் சுந்தரி வெகு நாளாக விட்டுப் போயிருந்த தன்னுடைய ஆடம்பர உல்லாச வாழ்க்கைக்குப் போதிய வசதிகள் கிடைத்துவிட்ட மகிழ்ச்சியில் இறுமாந்திருந்தாள். அந்த மகிழ்ச்சியில் மண்ணைப் போட்டுவிட்டு ஜானகி ஓடிப் போய்விட்டாள். முத்துவீரப்பன் கொடுத்

திருந்ததையெல்லாம் திருப்பித் தந்துவிட நேர்ந்தது. அது மட்டுமா? செலவாகிவிட்ட ஐநூறு ரூபாய்க்காகத்தான் நகைகளை அடகு வைத்தாகிவிட்டது. அத்துடன் வீட்டின் மேல் இருந்த ஜப்திக்கு வாய்தா வாங்க வக்கீல் வைக்கப் பணத்துக்காக மேலும் நகைகளின்மேல் கடன் வாங்க நேர்ந்தது. அதனால் சுந்தரி, ஜானகி எங்குப் போனாளோ, என்னவானாளோ என்று கவலைப்படவில்லை. அதற்கு மாறாக அவளை நிந்தித்துக்கொண்டிருந்தாள்.

எல்லாவற்றிற்கும் மேலாகச் சுந்தரியின் மனத்தைக் குழப்பிக்கொண்டிருந்தது என்னவென்றால், எப்படி யாருக்கும் தெரியாதபடி ஜானகி வீட்டைவிட்டுப் போக முடிந்தது என்று விளங்காத புதிர்தான். அப்படி ஜானகி போய்விட்டது தனக்குப் பெருந்தோல்வி என்றே சுந்தரி எண்ணினாள்.

ஆரம்பத்தில் தனக்குத் திருமணம் செய்துகொள்ள விருப்பமே இல்லையென்றாள், ஜானகி. இந்தத் திருமணம் நடந்தே தீரும் என்று சுந்தரி சொன்னாள். கட்டாயப்படுத்தினால் எங்கேயாவது ஓடிப் போவேன் என்று ஜானகி தன் தோழியிடம் சொல்லிக்கொண்டிருந்ததை ஒட்டுக் கேட்டுக்கொண்டிருந்த சுந்தரி, ஜானகியின்மீது காவல் போட்டாள். பிறகு பாத்திமா சொன்னதற்காகத் திருமணத்துக்குச் சம்மதித்து முத்துவீரப்பன் தந்த ஆடை ஆபரணங்களையும் அணிந்துகொண்டு மகிழ்ச்சியோடு காணப்பட்டாள். காவல் நீக்கப்பட்டது. சம்மதித்ததுபோல் சாகசம் செய்து ஏமாறச் செய்துவிட்டாள். தன்னை ஜானகி முரியடித்துவிட்டாளே என்ற சங்கடந்தான் சுந்தரியின் மனத்தில் தலைதூக்கி நின்றது.

வீட்டின்மேலிருந்த கடன் தீர்ந்துவிட்ட மகிழ்ச்சி ஒரு புறமிருந்தாலும், தினசரிச் செலவுக்குப் பணமில்லாத துன்பம் வந்துவிட்டது. உல்லாச வாழ்க்கை துன்பத்தில் கொண்டு போய்ச் சேர்க்கும் என்பதையும் உழைப்பும் பொறுப்பும் உள்ள வாழ்க்கையே இன்பம் பயக்கும் என்பதையும் முருகேசனை விடச் சுந்தரியே அதிகமாக உணரலானான். ஏனென்றால்,



உல்லாசமே வாழ்க்கையின் நோக்கமாக அலைந்தவள் அவள் தான். அந்த உல்லாசத்துக்கு இப்போது இடமில்லாமற் போனது அவளைத்தான் அதிகம் உறுத்தியது.

இப்படியிருக்கையில் சுமார் ஒரு மாதம் சென்று திருச்சிராப்பள்ளியில் உள்ள 'பாங்க்' ஒன்றிலிருந்து சென்னையிலுள்ள 'பாங்க்' ஒன்றில் பணம் பெற்றுக்கொள்ளும்படி முருகேசன் பெயருக்கு ஒரு 'டிராப்ட்' ரிஜிஸ்டர் தபாலில் வந்தது. அதில் கண்டிருந்த தொகை ஆயிரம் ரூபாய். அதைக் கண்டு முருகேசனும் சுந்தரியும் புதையல் கிடைத்துவிட்டது போல் பூரிப்படைந்தார்கள்.

ஆனால், அந்த 'டிராப்டி'ல் திருச்சியிலுள்ள 'பாங்கி'ன் பெயர்தான் இருந்தது. பணம் அனுப்பியது யார் என்று தெரியவில்லை. எனினும், அம்மணியம்மாள் திருச்சியில் இருப்பதாக முன் கடிதம் வந்ததனால் இந்தப் பணம் அம்மணியம்மாள்தான் அனுப்பியிருக்கிறாள் என்று அனுமானித்தார்கள். வீட்டுச்செலவுக்குப் பணம் இல்லையே என்று தவித்துக்கொண்டிருக்கும் சமயத்தில் மாமியார் அவராகவே பணம் அனுப்பியிருக்கிறாரே என்ற எண்ணம் உதித்தவுடனே சுந்தரிக்கு அவள் மாமியாரை அலட்சியம் செய்து நடந்துகொண்டதெல்லாம் நினைவுக்கு வந்து மனச்சாட்சி இடித்தது.

அதை ஒரு புறம் ஒதுக்கிவிட்டு அந்தப் பணத்தில் அடகு வைத்துள்ள தன் நகைகளை முதலில் மீட்க வேண்டுமென்று கணவனைக் கேட்டுக்கொண்டாள். ஆனால், முருகேசன், "அடுத்த மகசூல் எப்படியிருக்குமோ, அதைப் பார்த்துக்கொண்டுதான் நகைகளை மீட்பதை யோசிக்க வேணும்" என்று சொல்லிவிட்டான்.

திருச்சியிலிருந்து தன் தாயார்தான் பணம் அனுப்பியிருக்கின்றார்கள் என்ற மகிழ்ச்சி ஒருபுறம் இருந்தாலும், இத்தனை காலமாகத் தன்னைப் பார்க்க அவள் வராமல் இருந்ததோடு, தான் போய்ப் பார்ப்பதற்கும் அவளிருக்கும்

விலாசத்தையும் அறிவிக்காமல் இருப்பது முருகேசனுக்கு அளவற்ற வருத்தத்தை உண்டாக்கிவிட்டது. அந்த வருத்தம் பணம் வந்த மகிழ்ச்சியையும் பறித்துவிட்டது. உடனே தாயாரைப் பார்க்க ஆவல். ஆனால், எங்கே போய்ப் பார்ப்பது? இதே விசாரமாக ஒரு வாரம் குழம்பிக்கொண்டிருந்தான்.

அடுத்த வாரம் மீண்டும் இன்னொரு ரிஜிஸ்டர் தபால் அவருக்கு வந்தது. அதில் அனுப்பியவருடைய விலாசம் சுந்தர மூர்த்தி என்றிருந்தது. அந்தப் பெயரைப் பார்த்ததும் காணாமற்போன அரும்பொருளைக் கண்டுவிட்டது போல் வெகு ஆவலோடு தபாலைப் பிரித்தான். முதலில் சுந்தர மூர்த்தியின் கைப்பட எழுதிய கடிதம் இருந்தது. சுந்தர மூர்த்தியின் எழுத்து முருகேசனுக்குப் பார்த்துப் பழக்கமானது. பரபரப்போடு அதைப் படித்தான். அதில்:

> "அன்புமிக்க மைத்துனர் முருகேசனுக்கு ஆசீர்வாதம். நான் அனுப்பச் செய்த 'டிராப்ட்' உங்களுக்கு வந்திருக்கும். இத்துடன் திருமணப் பத்திரிகை அனுப்பியிருக்கிறேன். முகூர்த்தத்துக்கு இன்னும் பதினைந்து நாள் இருக்கிறதே என்று எண்ணிவிடாமல் உடனே நீங்களும் சௌபாக்கியவதி சுந்தரியும் புறப்பட்டு வந்து சேர வேண்டும் என்று உங்களுடைய தாயாரும் தாமரைக்கண்ணியும் விரும்புகிறார்கள். என்னுடைய வேண்டுகோளும் அதுவே. இத்துடன் இருக்கும் அழைப்புகளை அந்தந்த விலாசக்காரர் களுக்குக் கொடுக்கவும்"

என்றிருந்தது. கடிதத்தைப் படித்துவிட்டுத் திருமணப் பத்திரிகையை விரித்தான். ஆம்; திருமணம் திருநிறைசெல்வன் நெல்லையப்பனுக்கும் திருநிறைசெல்வி ஜானகிக்குந்தான் என்பதைப் அறிந்தவுடன் ஆனந்தப் பரவசமடைந்துவிட்டான். தன் மகள் நெல்லையப்பனை மணந்துகொள்ளுகிறாள் என்ற மகிழ்ச்சியோடு, தன் தாயார் திருச்சியில் எங்கே இருக்கிறாள் என்று தெரியாதிருந்த கவலையும், தனியே வீட்டைவிட்டு இரவில் ஓடிப்



போன மகள் ஜானகி எங்கே போனாளோ, அவளுக்கு என்ன நேர்ந்ததோ என்ற கவலையும் நீங்கியதே அவன் கழிபேருவகையடைந்து பரவசப்பட்டதற்குக் காரணம், கடிதத்திலும் திருமண அழைப்பிலும் சுந்தரமூர்த்தியின் விலாசம் தெளிவாக அச்சிடப் பட்டிருந்தது.

வீட்டின்மேல் இருந்த கடனைத் தீர்க்க நீதிமன்றத்தில் பணம் செலுத்தியது யார் என்பதும், ஆயிரம் ரூபாய்க்கு 'டிராப்ட் வந்தது எதற்காக என்பதும் இப்போது அவனுக்கு விளங்கிவிட்டன.

ஆனால், முருகேசனுக்கு இன்னும் விளங்காமல் இருந்தது எதுவென்றால், இத்தனை காலமாகச் சுந்தரமூர்த்தியும் மனைவியும் மகனும் தாமரைக்கண்ணியும் இருக்குமிடத்தைத் தெரிவிக்காமல் இருந்ததும், யாத்திரைக்கென்று போன தன் தாயார் திரும்பி வராமல் சுந்தரமூர்த்தியுடன் தங்கிவிட்டதும் ஏன் என்பதுமே.

முருகேசன் தபாலை வாங்கிப் படித்தபோது சுந்தரி சமையலறையில் இருந்தாள். அங்கே போன முருகேசன், "சுந்தரி! நாம் இன்று மாலை ரெயிலில் திருச்சிக்குப் போக வேண்டும்" என்றான்.

"ஏன், என்ன விசேஷம்?"

"இந்தா, நீயே பார்" என்று கடிதத்தையும் திருமணப் பத்திரிகையையும் கொடுத்தார்.

இரண்டையும் வாங்கிய சுந்தரி முதலில் திருமண இதழைப் படித்தாள். உடனே, "சரி, சரி. இப்பத்தான் தெரியுது. ஜானகி நெல்லையப்பன்மேல் நினைப்பெடுத்துக்கொண்டுதான் ஓடியிருக்கிறாள். ஆனால், கல்யாணக் காரியமாக வீட்டுக்கு உள்ளேயும் வெளியேயும் அத்தனை பேர் வேலை செய்து கொண்டிருந்தபோது யாருடைய கண்ணிலும் படாமல் அவள் எப்படிப் போக முடிந்தது என்பதுதான் ஆச்சரியமாக இருக்கிறது" என்றாள்.

"எப்படியோ, அவள் அப்படிப் போனதும் நன்மைக்குத் தான். கடனைத் தீர்க்க வழியில்லாமல்தானே அவளை முத்து வீரப்பனுக்குக் கொடுக்கச் சம்மதிக்க வேண்டியிருந்தது? இல்லாவிட்டால் நாமே நெல்லையப்பனுக்குத்தானே கொடுப் போம்'' என்றான் முருகேசன்.

அதை ஆமோதித்து மகிழ முடியவில்லை, சுந்தரிக்கு. நெல்லையப்பன் தாயார் சந்திராவைச் சுந்தரி தன் வீட்டில் அண்டிப் பிழைக்கும் சமையற்காரியாக அருவருத்தவள்; அந்த அருவருப்பினால் சந்திராவின் மகன் நெல்லையப்பனையும் அருவருத்தவள். இப்போது அதே சந்திராவின் மகன் நெல்லையப்பன், தான் வளர்த்த ஜானகியை மணந்து மருமகனாகப்போகிறான். எப்படி அவள் உடனே மகிழ்ச்சி காட்ட முடியும்? ஆனாலும் தன் பழைய அருவருப்புகளையும் காட்டிக் கொள்ள முடியாது. தான் பெற்ற மகளல்ல ஜானகி என்றாலும், ஜானகியை அன்போடு வளர்த்தவள் சுந்தரி அந்தப் பாசம் விட்டுப் போய்விடவில்லை. ஜானகியும் சுந்தரியைத் தன் தாய்போல் மதித்து வந்தவள்.

அதனால் திருமணத்துக்குப் போகாமல் இருக்க முடியாது. ஆனால், மனம் கூசுகின்றது. ஏன்?

தாமரைக்கண்ணியை ஆரோக்கியத்தலத்துக்குக் கொண்டு போவதாகச் சொன்ன சுந்தரமூர்த்தியும், யாத்திரைக்கென்று போன அம்மணியம்மாளும் திரும்பிச் சென்னைக்கு வராமல் திருச்சியிலேயே தங்கிவிட்டது ஏன் என்பதை முருகேசனால் ஊகிக்க முடியவில்லை. என்றாலும், சுந்தரியினால் ஊகிக்க முடிந்தது. அந்தக் காரணம் தன்னைப்பற்றியதாகத்தான் இருக்குமென்று ஊகித்தாள்.

அதனால் இப்போது கல்யாணத்துக்குப் போனால் அவர்கள் முகத்தில் எப்படி விழிப்பது என்று அவள் மனம் மருளத் தொடங்கிவிட்டது.

திருமணக் கடிதத்தைப் படித்த பின் முருகேசனுக்கிருந்த விசாரமெல்லாம் விலகிவிட்டது. இனிப் பணக்கஷ்டமும் இராது. 'டிராப்ட்டி'ல் கிடைத்த ஆயிரம் ரூபாயும் திருமணத் திற்குப் போவதற்குப் பணமுடை இருக்கக்கூடாது என்று எண்ணி அனுப்பப்பட்டதுதான். அதனால் மாலையில் திருச் சிக்குப் புறப்பட முதற்காரியமாக அவனே போய் அடகு வைத் திருந்த சுந்தரியின் நகைகளை மீட்டு வந்தான்.



மறு நாள் காலையில் சுந்தரியும் முருகேசனும் திருச்சிக்கு வந்து சேர்ந்தார்கள். சுந்தரமூர்த்தியின் பங்களாவின் முன்னால் மிகப்பெரிய திருமணக் கொட்டகை உருவாகிக்கொண் டிருந்தது. அதைக் கடந்து தலைவாசலை அணுகும்போது அவர்களுக்கு முதலில் எதிர்ப்பட்டவள் சந்திராதான்.

சுந்தரியைக் கண்ட சந்திரா தாவிச் சென்று, "வாம்மா சுந்தரி, சௌக்கியமா?" என்று சுந்தரியின் கையைப் பிடித்து மலர்ந்த முகத்துடன் வரவேற்றாள்; பிறகு, முருகேசனையும் மரியாதையுடன் வணங்கி வரவேற்றாள்.

பரவசப்பட்டுவிட்ட சுந்தரி முற்றிலும் தன்னை மறந்த வளாக, "அண்ணி! என்னை மன்னித்துவிடுங்கள்'' என்றாள்.

"அப்படி ஒன்றும் சொல்லாதேம்மா. அதையெல்லாம் அடியோடு மறந்துவிடு. நாம் இனிப் புது வாழ்வு தொடங்கப் போகிறோம்'' என்று பிடித்த கையை விடாமல் சுந்தரியை அழைத்துக்கொண்டு உள்ளே போனாள் சந்திரா. முருகேசனும் பின்தொடர்ந்தான்.

அலங்காரமான கூடத்தில் ஒரு சாய்வு நாற்காலியில் அம்மணியம்மாள் ஒய்வாகச் சாய்ந்துகொண்டிருந்தாள். மாமியாரைக் கண்டதும் விரைந்து சென்று பாதங்களைத் தொட்டு வணங்கினாள். நிமிர்ந்து உட்கார்ந்த அம்மணியம்மாள், வணங்கியவளை உற்றுப் பார்த்து, "சுந்தரியா! வாடியம்மா, என்ன அடையாளமே தெரியாமல் இப்படி இளைத்து நிறங்கூட மங்கிப் போயிருக்கிறாய்?'' என்றாள்

சுந்தரி பதில் ஒன்றும் சொல்லாமல் முன்றானையால் முகத்தை மூடிக்கொண்டு கண்ணைக் கசக்கிக்கொண்டு தேம்பினாள்.

"சுந்தரி! அழாதேம்மா. யாருக்கும் பொல்லாத காலமும் உண்டு, நல்ல காலமும் உண்டு. நம்முடைய பொல்லாத காலம் போய்விட்டது. இனி நல்ல காலந்தான், கவலைப்படாதே" என்றாள் மாமியார்.

சுந்தரி ஆறுதல் அடைந்தவள் போல் கண்ணையும் முகத்தையும் துடைத்துக்கொண்டாள்.

அதுவரையிலும் நாற்காலிக்குப் பின்னால் நின்றுகொண்டிருந்த முருகேசன், தாயாருக்கு முன்னால் வந்து, "அம்மா!" என்றான். அம்மணியம்மாள் துள்ளி எழுந்து, "வாடா என் சாமி" என்று அவனைப் பிடித்து அருகில் அமர்த்தி, "நீயும் ரொம்ப இளைத்துப் போய்விட்டாயே! ஏன்?" என்றாள்.

"எல்லாம் பெற்ற தாய் பக்கத்தில் இல்லாததால்தான். ஏனம்மா, என்னைத் தவிக்கவிட்டு இங்கேயே தங்கிவிட்டீர்கள்?" என்றான்.

"அங்கே வரத்தான் பயணப்பட்டேன். திடீரென்று காய்ச்சல் வந்து படுத்துவிட்டேன். கோவிச்சுக்காதேடா, சாமி" என்றாள் அன்னை.

அத்துடன் மகன் திருப்தியடைந்துவிட்டான்.

அப்போதுதான் உள் கட்டிலிருந்து அங்கு வந்த தாமரைக்கண்ணியும் ஜானகியும் முருகேசனை வணங்கி வரவேற்றார்கள். தாமரைக்கண்ணியைப் பார்த்து முருகேசன் தன் கண்களையே நம்ப முடியாதபடி மலைத்துவிட்டான். ஆஸ்பத்திரியில் வற்றி வதங்கிக் கிடந்த தன் மூத்த மனைவியா இவள்? முப்பது வயதுக்கு மேல் ஆகியும் திருமணத்தின்போது கண்ட இளம் பெண் போலத் திகழ்ந்த அவள் அழகைக் கண்டு சொக்கிப் போனான் முருகேசன். சுந்தரி, தாமரைக்கண்ணியிடம் நலம்



விசாரித்துவிட்டு, ஜானகியைத் தன் மார்போடு அணைத்துக் கொஞ்சினாள்.

வெளியே போயிருந்த சுந்தரமூர்த்தியும் நெல்லையப்பனும் வந்தார்கள்; முருகேசனையும் சுந்தரியையும் வெகு அன்போடு வரவேற்றார்கள்.

எல்லோரும் அங்கேயே உட்கார்ந்து நெடுநாள்களாக ஒருவரையொருவர் பார்க்காத ஏக்கம் தீரப் பற்பல விஷயங்களைப் பேசிப் பரிமாறிக்கொண்டார்கள்.

அம்மணியம்மாள் வீட்டிற்கு ராணியென்று இறுமாந்திருந்த சுந்தரியின் உயர்வு மனப்பான்மை முற்றிலும் மறைந்து மிக்க பணிவு மனப்பான்மையுடன் எல்லோரோடும் பரிவோடு பழகலானாள்.

குறித்த முகூர்த்தத்தில் திருமணம் வெகு சிறப்பாக நடந்தேறியது. ஏராளமான நண்பர்களும் உறவினர்களும் வந்திருந்தார்கள். பரிசுகளும் ஏராளம்.

குறிப்பிடத்தக்கதாகச் சுந்தரமூர்த்தி இவ்வளவு பெரிய செல்வச் சீமான் ஆவதற்குக் காரணமான நண்பன் இராமநாதனும், ஜானகி முத்துவீரப்பன் விரித்திருந்த வலையில் சிக்கிக்கொள்ளாதபடி தப்பித்துக்கொள்ள வழிவகை செய்து கொடுத்த பாத்திமாவின் தந்தை அப்துல் சுபானும் வந்திருந்து பரிசுகளும் வழங்கினார்கள். முகூர்த்தம் முடிந்து விருந்துக்கு முன் ஜானகி பாத்திமாவின் தந்தை தங்கியிருந்த அறைக்கு வந்து அவருடன் பேசும் வழக்கப்படி, "அப்பா! ஏன் பாத்திமாவையும் அழைத்து வரவில்லை? உங்களுக்கு நான் தனிக் கடிதம் எழுதி அவளும் வரவேண்டுமென்று வற்புறுத்திக் கேட்டுக்கொண்டேனே?" என்றாள்.

அதற்கு அவர், "ஆமாம் அம்மா, எனக்கும் அவளைக் கூட்டிக்கொண்டு வர வேணுமென்றுதான் ஆசை. அவளும் வரத் துடித்துக்கொண்டிருந்தாள். ஆனால், அவளை ஒரு பெரிய இடத்துக்காரர் பெண் கேட்டுப் போயிருக்கிறார்கள். இந்தச் சமயத்தில் அவளை வெளியூருக்குக் கூட்டிப் போனதை

மாப்பிள்ளை வீட்டார் அறிந்தால் கல்யாணத்துக்குத் தடங்கல் வருமென்று அவளுடைய தாயார் தடுத்துவிட்டாள்'' என்றார்.

கல்யாணச் சந்தடியெல்லாம் அடங்கிய பின் ஒரு நாள் பகல் உணவுக்குப் பின் அம்மணியம்மாள், சுந்தரமூர்த்தி, சந்திரா, நெல்லையப்பன், முருகேசன், தாமரைக்கண்ணி, சுந்தரி எல்லாருமாகக் கூடத்தில் உட்கார்ந்து தமாஷாகப் பேசிக் கொண்டிருந்தார்கள்.

அப்போது சுந்தரி தன்னருகில் அமர்ந்திருந்த ஜானகியைப் பார்த்து, ''ஜானகி ! நான் ஒன்று கேட்கிறேன்; கோபித்துக் கொள்ளமாட்டாயே?'' என்றாள்.

''அதென்ன சித்தி, அப்படிச் சொல்கிறீர்கள் ? நான் உங்கள் மகள். நான் கோபிக்கும்படி நீங்கள் என்ன கேட்டு விடப் போகிறீர்கள். கேளுங்கள்; என்ன கேட்டாலும் கோபித்துக்கொள்ளமாட்டேன்'' என்றாள் ஜானகி.

''நீ அந்த முத்துவீரப்பனை மணந்துகொள்ளப் பிரியப் படாமல் ஓடி வந்துவிட்டதைப்பற்றி எல்லாருக்கும் சந்தோஷந் தான். ஆனால், கல்யாண காரியமாக நூறு பேருக்குமேல் விடிய விடியத் தூங்காமல் அங்கே வேலை செய்துகொண்டிருந்த போது எப்படி நீ, யார் கண்ணிலும் படாமல் வீட்டை விட்டு வெளியே போக முடிந்தது? அந்தச் சமத்தை அறிந்து சந்தோஷப்படத்தான் கேட்கிறேன், சொல்லு'' என்று சுந்தரி ஜானகியை அணைத்துக்கொண்டாள்.

ஜானகி கலகலவென்று சிரித்துவிட்டு, ''சித்தீ ! அது ஒரு பரம இரகசியம்'' என்றாள்.

''நீ வீட்டைவிட்டு வெளியேறுகிற வரையிலுந்தானே அது இரகசியம் ? இனிமேல் அதற்கென்ன இரகசியம் வேண்டி யிருக்கிறது ? சும்மா சொல்லு ; எல்லாருக்கும் உன் சாமர்த்தியம் தெரியட்டும்'' என்றாள் சுந்தரி.

அதை ஆமோதித்து அங்கிருந்த எல்லாரும் அந்த இரகசி யத்தை அறிய ஆவல் காட்டினார்கள்.



ஜானகி சிறிது நேரம் மீண்டும் சிரித்துவிட்டுச் சுந்தரியைப் பார்த்து, ''சித்தி ! நீங்கள் நினைப்பது போல் அந்தச் சாமர்த்தியம் என்னுடையதல்ல; அது பாத்திமாவுடையது. நீங்கள் நான் தப்பி ஓடிவிடாதபடி என்மீது காவல் போட்டதை நீக்கக் கல்யாணத்துக்குச் சம்மதிக்கும்படி புத்தி சொன்னது பாத்திமாதான். காவல் நீங்கிய ஐந்தாம் நாள் முகூர்த்தத்திற்கு முந்தின இரவு பத்து மணிக்குப் பாத்திமா என்னைப் பார்க்க வந்தாளல்லவா ?''

''ஆமாம்.''

''அப்போது அவள் தலையோடு பாதம்வரை உடம்பை மறைத்துக் கண்களுக்கு மட்டும் இரண்டு துவாரங்களுள்ள புருதா அணிந்து வந்தாளல்லவா ?''

''ஆமாம்.''

''அவளை நீங்களும் அப்பாவும், அவளால்தான் நான் கல்யாணத்துக்குச் சம்மதித்தேன் என்பதற்காக மிகவும் புகழ்ந்து பேசினீர்கள்.''

''ஆமாம்.''

''நானும் அவளும் என் அறைக்குப் போய் வெகு நேரம் பேசிக்கொண்டிருந்தோம். எங்களை மறந்து நீங்கள் எல்லாரும் கல்யாண காரியங்களைக் கவனித்துக்கொண்டிருந்தீர்கள். அப்போது பாத்திமா, முன்னேற்பாட்டின்படி அவள் எனக் கென்று தனியாக ஒரு புருதா தயார் செய்து, அதைத் தன் புருதாவுக்குள் மறைத்துக் கொண்டுவந்து எனக்குக் கொடுத் தாள். அது அவள் அணிந்திருந்ததைப் போல அதே நிறமும் அளவும் உள்ளது. நானும் அவளும் ஒரே உயரமும் கனமுமாக இருந்ததால் அது எனக்குச் சரியாகப் பொருந்தியது. நான் அணிந்திருந்த பரிசப்புடைவையையும் நகைகளையும் களைந்து விட்டு ஒரு மெலலிசான வாயில் புடைவையை உடம்போடு இறுகக் கட்டிக்கொண்டு அவள் கொடுத்த புருதாவை அணிந்து கொண்டேன். என் வழிச்செலவுக்கும் பாத்திமா இருநூறு

ரூபாயும் தந்தாள். உடனே விளக்கை அணைத்துவிட்டுப் பாத்திமா அறையிலேயே இருக்க, நான் மட்டும் கீழே இறங்கித் தயக்கமில்லாமல் வீதிக்கு நடந்தேன். என்னைப் பார்த்தவர்களெல்லாம் பாத்திமாதான் வீட்டுக்குப் போகிறாள் என்று விலகி வழிவிட்டார்கள். பாத்திமா வீட்டுக்குப் போவது போல் நடந்து அந்த வீட்டுக்கு அடுத்துள்ள இருண்ட சந்து வழியாக அடுத்த தெருவுக்குப் போய் அங்கிருந்த ஒரு டாக்சியை அமர்த்திக்கொண்டு எழும்பூர் ரெயில் நிலையத்துக்குப் போனேன். அப்போது திருச்சிக்கு வண்டியில்லை. ஸ்டேஷனில் தங்கினால் யாராவது தேடி வந்து பிடித்துக்கொள்வார்கள் என்று சிறிது தூரத்திலுள்ள ஒட்டலில் ஒரு வாடகை அறையில் இரவைத் தூங்காமல் கழித்து விடியற்காலை வண்டியில் திருச்சிக்குப் புறப்பட்டேன்; பாட்டி திருச்சியில் இருப்பதாக முன் கடிதம் வந்ததால் திருச்சிக் கோட்டையிலுள்ள என் பள்ளித்தோழி பத்மாவதியுடன் தங்கிப் பாட்டி இருக்கும் இடத்தைத் தேடலாம் என்ற குருட்டு ஆசையில்தான் திருச்சிக் கோட்டை ஸ்டேஷனில் இறங்கினேன்; அப்போதுதான் தெய்வாதீனமாய் எதிர்ப்பட்ட மாமாவை யாரோ ஒரு கனவான் என்று எண்ணி ஆண்டார் தெருவுக்கு வழி கேட்டேன். மாமா என்னை அடையாளம் கண்டு ஆண்டார் தெருவுக்குக் கொண்டு போய் விடுகிறேன் என்று இங்கே கொண்டுவந்து சேர்த்தார்."

"நீதான் புருதாவில் மறைந்து வந்தாயே. மாமா எப்படி அடையாளம் கண்டுகொண்டார்?" என்றாள் சுந்தரி.

"நான் வந்த ரயில் பகல் வண்டியானதால் திருச்சி ஜங்ஷனுக்கு வரும் வரையில்தான் புருதா அணிந்திருந்தேன். திருச்சி ஜங்ஷனுக்கு வந்த போது இரவு ஒன்பது மணி. இனிமேல் புருதா தேவையில்லை. அத்துடன் தோழி பத்மாவதியைச் சந்திக்கப் போகும்போது புருதா எதற்கு என்று முதல் வகுப்புப் பெட்டியின் குளியல் அறைக்குள் சென்று புருதாவைக் களைந்துவிட்டு உள்ளே கட்டியிருந்த என் வாயில் புடைவையைக் கொசுவி வழக்கம்போல் உடுத்திக்கொண்டுதான் கோட்டைக்கு வரும் வண்டியில் ஏறினேன்" என்றாள்.



உடனே மாமா சுந்தரமூர்த்தி, "ஜானகி! நான் உன்னைக் கோட்டை ஸ்டேஷனில் பார்த்தபோது உன் கையில் மூட்டை முடிச்சு ஒன்றுமில்லையே! அந்தப் புருதாவை என்ன செய்தாய்?" என்றான்.

"அதை அந்த முதல் வகுப்புக் குளியலறையிலேயே சுருட்டிப் போட்டுவிட்டு வந்துவிட்டேன்" என்றாள் ஜானகி.

இதுவரையிலும் வெளியாகாத இந்த இரகசியத்தை அங்காந்த வாயுடன் கேட்டு வியந்த மற்றவர்கள் பாத்திமாவையும் ஜானகியையும் பாராட்டினார்கள்.

ஜானகியின் அளவற்ற காதலில் மயக்கம் கொண்ட புது மாப்பிள்ளை நெல்லையப்பன், "ஜானகி தப்பி வந்தது முழுதும் பாத்திமாவின் அபூர்வமான புத்திசாலித்தனத்தால்தான். அவளைத்தான் நாம் நன்றியுடன் பாராட்ட வேண்டும்" என்றான், தன் புது மனைவி ஜானகியை ஆவலுடன் பார்த்துக் கொண்டே.

"ஆமாண்டா சாமி, அந்தப் பாத்திமாவைக் கையெடுத்துத்தான் கும்பிட வேணும்" என்றாள் பாட்டி அம்மணியம்மாள்.

---